" **தந்தைப் பெரியாரும், தமிழ்த்தென்றல்**
**திரு.வி.க.வும்** இந்த நாட்டின் நோய்
நீக்க வந்த இருபெரும் மருத்துவர்கள்.
இவர்கள் தந்த மருந்துகளில் உணவுக்
கட்டுப்பாடு, மருந்துண்ணும் முறை
வேறுபடலாம். ஆனால், தமிழனுக்கு,
தமிழுக்கு இவை இரண்டும் தேவை.
காட்டிய வழி முரண்பட்டதன்று.
வேறுபட்டது. ஒரே குறிக்கோளை நோக்கி
நம்மைச் செலுத்துவன. தமிழ்த்தென்றல்
சமரச ஞானி - தமிழுக்கு உரைநடை முதல்
உணர்வுநிலை வரை புதுமைச்
சேர்த்த எளிமைத் திருவுருவம்."

- தமிழண்ணல்

தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017
தொ.பேசி: 24339030

15

திரு.வி.க. தமிழ்க்கொடை

# திரு.வி.க.
# தமிழ்க்கொடை

15



தமிழ்மண்

---

- தேசபக்தாமிர்தம்
- என் கடன் பணி செய்து கிடப்பதே
- தமிழ்நாட்டுச் செல்வம்
- சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
- தமிழ்க்கலை

# திரு.வி.க. தமிழ்க்கொடை

# 15

*ஆசிரியர்*

**திருவாரூர்-வி. கலியாணசுந்தரனார்**

*தொகுப்பாசிரியர்*

**இரா. இளங்குமரனார்**

*பதிப்பாளர்*

**கோ. இளவழகன்**

தமிழ்மண் பதிப்பகம்

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **திரு.வி.க. தமிழ்க்கொடை - 15** |
| ஆசிரியர் | : | **திருவாரூர்-வி. கலியாணசுந்தரனார்** |
| தொகுப்பாசிரியர் | : | **இரா. இளங்குமரனார்** |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : | 2006 |
| தாள் | : | 18.6 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 32+400=432 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. 405/- |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | இ. இனியன் |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| வெளியீடு | : | தமிழ்மண் பதிப்பகம்<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர்,<br>சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030 |

# நுழைவுரை

*தமிழக வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு பல்வேறு நிலைகளில் சிறப்பிடம் பெறத்தக்க குறிப்புகளை உடையது. பன்னூறு ஆண்டுகளுக்குப் பின் மொழியுணர்ச்சியும், கலை யுணர்ச்சியும் வீறுகொண்டெழுந்த நூற்றாண்டு. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டின் வரலாற்றை - பண்பாட்டை வளப்படுத்திய பெருமக்களுள்* ***தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனாரும்*** *ஒருவர். இவர் உரைநடையை வாளாக ஏந்தித் தமிழ்மண்ணில் இந்தியப் பெருநிலத்தின் விடுதலைக்கு உன்னதமான பங்களிப்பைச் செய்தவர்; வணங்கத் தக்கவர்.*

*நினைவு தெரிந்த நாள்முதல் பொதுவாழ்வில் ஈடுபாடுடை யவன் நான். உலகை இனம் காணத் தொடங்கிய இளமை தொட்டு இன்றுவரை தொடரும் என் தமிழ் மீட்புப் பணியும், தமிழர் நலம் நாடும் பணியும் என் குருதியில் இரண்டறக் கலந்தவை. நாட்டின் மொழி, இன மேன்மைக்கு விதைவிதைத்த தமிழ்ச் சான்றோர்களின் அருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழருக்குக் கொண்டுசேர்க்க வேண்டும் எனும் தளராத் தமிழ் உணர்வோடு* ***தமிழ்மண் பதிப்பகத்தைத்*** *தொடங்கினேன்.*

***தமிழ்த்தென்றல் திரு.வி.க.*** *தமிழ் வாழ்வு வாழ்ந்தவர்.* ***54 நூல்களைப்*** *பன்முகப்பார்வையுடன் எழுதித் தமிழர்களுக்கு அருந்தமிழ்க் கருவூலமாக வைத்துச்சென்றவர். இவற்றைக் காலவரிசைப்படுத்தி, பொருள்வழியாகப் பிரித்து வெளியிட் டுள்ளோம். தமிழறிஞர் ஒருவர், தம் அரும்பெரும் முயற்சியால் பல்வேறு துறைகளில் எப்படிக் கால்பதித்து அருஞ்செயல் ஆற்ற முடிந்தது என்பதை உலகெங்கும் வாழும் தமிழர்கள் அறிந்து கொள்ள வேண்டும் எனும் பெருவிருப்பத்தால் இத்தொகுப்பு களை வெளியிட்டுள்ளோம்.*

*திரு.வி.க. வின் வாழ்க்கைச் சுவடுகளும், அறவாழ்க்கை நெறியும், குமுகாய நெறியும், இலக்கிய நெறியும் , சமய நெறியும், அரசியல் நெறியும், இதழியல் நெறியும், தொழிலாளர் நலனும், மகளிர் மேன்மையும் பொன்மணிகளாக இத் தொகுப்பு*

களுக்குப் பெருமை சேர்க்கின்றன. இவர்தம் உணர்வின் வலிமையும், பொருளாதார விடுதலையும், தமிழ் மொழியின் வளமையும் இந் நூல்களில் மேலோங்கி நிற்கின்றன. இந்நூல்களைத் தமிழ் கற்கப் புகுவார்க்கும், தமிழ் உரைநடையைப் பயில விரும்புவார்க்கும் ஊட்டம் நிறைந்த தமிழ் உணவாகத் தந்துள்ளோம்.

திரு.வி.கலியாணசுந்தரனார் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் மூலவர்; தமிழ் உரைநடையின் தந்தை; தமிழ் நிலத்தில் தொழிற்சங்க இயக்கத்துக்கு முதன்முதலில் வித்தூன்றிய வித்தகர்; தமிழர்கள் விரும்பியதைக் கூறாது, வேண்டியதைக் கூறிய பேராசான்; தந்தை பெரியார்க்கு **வைக்கம் வீரர்** என்று பெயர் சூட்டி மகிழ்ந்த பெருமையர்; தமிழ்ச் சிந்தனை மரபிற்கு அவர் விட்டுச்சென்ற சிந்தனைகள் எண்ணி எண்ணிப் போற்றத் தக்கவை. இன்றும், என்றும் உயிர்ப்பும் உணர்வும் தரத்தக்கவை.

சமயத்தமிழை வளர்த்தவர்; தூய்மைக்கும், எளிமைக்கும், பொதுமைக்கும் உயிர் ஓவியமாக வாழ்ந்தவர்; அன்பையும், பண்பையும், ஒழுங்கையும் அணிகலனாய்க் கொண்டவர்; தன்மதிப்பு இயக்கத்துக்குத் தாயாக விளங்கியவர்; பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருந்தவர்; எல்லாரையும் கவர்ந்து இழுத்த காந்தமலையாகவும்; படிப்பால் உயர்ந்த இமயமலையாகவும்; பண்பால் குளிர் தென்றலாகவும், தமிழகம் கண்ணாரக் கண்ட காந்தியாகவும், அவர் காலத்தில் வாழ்ந்த சான்றோர்களால் மதிக்கப்பெற்றவர். .

சாதிப்பித்தும், கட்சிப்பித்தும், மதப்பித்தும், தலைக்கு ஏறி, தமிழர்கள் தட்டுத் தடுமாறி நிற்கும் இக்காலத்தில் வாழ்நாள் முழுதும் தமிழர் உய்ய உழைத்த ஒரு தமிழ்ப் பெருமகனின் அறிவுச் செல்வங்களை வெளியிடுகிறோம். தமிழர்கள் எண்ணிப் பார்ப்பார்களாக. தமிழரின் வாழ்வை மேம்படுத்தும் அனைத்துத் துறைகளிலும் தமிழ் இடம்பெற வேண்டும் எனும் தொலை நோக்குப் பார்வையோடு எம் பதிப்புச் சுவடுகளை ஆழமாகப் பதித்து வருகிறோம். தமிழர்கள் அறியாமையிலும், அடிமைத் தனத்திலும் கிடந்து உழல்வதிலிருந்து கிளர்ந்தெழுவதற்கும், தீயவற்றை வேரோடு சாய்ப்பதற்கும், நல்லவற்றைத் தூக்கி நிறுத்துவதற்கும் **திரு.வி.க.வின் தமிழ்க்கொடை** எனும் செந்தமிழ்க் களஞ்சியங்களைத் தமிழர்களின் கைகளில் தவழ விடுகிறோம். கூனிக்குறுகிக் கிடக்கும் தமிழர்களை நிமிர்த்த முனையும் நெம்புகோலாகவும், தமிழர்தம் வறண்ட நாவில் இனிமை தர வரும் செந்தமிழ்த்தேன் அருவியாகவும் இத்

தமிழ்க் கொடை திகழும் என்று நம்புகிறோம். இதோ! பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும், தமிழ்ப் பதிப்புலக மேதையும் செந்தமிழைச் செழுமைப்படுத்திய செம்மலைப் பற்றிக் கூறிய வரிகளைப் பார்ப்போம்.

> "தனக்கென வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் கலியாண சுந்தரனார் அவர்களைப் படிப்பினையாகக் கொள்வார்களாக"
>
> - **தந்தை பெரியார்.**

> "திரு.வி.க. தோன்றியதால் புலவர் நடை மறைந்தது; எளிய நடை பிறந்தது. தொய்வு நடை அகன்றது; துள்ளு தமிழ் நடை தோன்றியது. கதைகள் மறைந்தன; கருத்துக்கள் தோன்றின. சாதிகள் கருகின; சமரசம் தோன்றியது."
>
> - **ச. மெய்யப்பன்**.

தமிழர் அனைவரும் உளம்கொள்ளத்தக்கவை இவை.

தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளப்பரிய காதல் கொண்டவர் திரு.வி.க. இவர் பேச்சும் எழுத்தும் தமிழ் மூச்சாக இருந்தன. தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில் ஆங்கிலமே பேச்சுமொழியாக மதிக்கப்பட்ட காலத்தில் தமிழுக்குத் தென்றலாக வந்து மகுடம் சூட்டிய பெருமையாளர். தமிழின் - தமிழனின் எழுச்சியை அழகுதமிழில் எழுதி உரைநடைக்குப் புதுப்பொலிவும், மேடைத் தமிழுக்கு மேன்மையும் தந்த புரட்சியாளர்.

கலப்பு மணத்துக்கும், கைம்மை மணத்துக்கும் ஊக்கம் தந்தவர்; வழுக்கி விழுந்த மகளிர் நலனுக்காக உழைத்தவர்; பெண்களின் சொத்துரிமைக்காகப் பேசியவர்; ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமஉரிமை என்று வாதிட்டவர்; பெண்ணின எழுச்சிக்குத் திறவு கோலாய் இருந்தவர்; 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டுமன்று ஆண்களுக்கும் உண்டு என்று வலியுறுத்தியவர்; மாந்த வாழ்வியலுக்கு ஓர் இலக்கியமாக வாழ்ந்து காட்டியவர்; இளமை மணத்தை எதிர்த்தவர்; அரசியல் வானில் துருவ மீனாகத் திகழ்ந்தவர்; தமிழர்களுக்கு அரசியலில் விழிப்புணர்வை ஊட்டியவர்; சமுதாயச் சிந்தனையை விதைத்தவர்; ஒழுக்க நெறிகளைக் காட்டியவர்.

சங்கநூல் புலமையும், தமிழ் இலக்கண இலக்கிய மரபும் நன்குணர்ந்த நல்லறிஞர், ஓய்வறியாப் படிப்பாளி, சோர்வறியா உழைப்பாளி, நம்மிடையே வாழ்ந்துவரும் செந்தமிழ் அந்தணர் இரா. இளங்குமரனார் அவர்கள், **'தீந்தமிழ் அந்தணர்'** திரு.வி.க.வின் நூல் தொகுப்புகளில் அடங்கியுள்ள பன்முக மாட்சிகளை - நுண்ணாய்வு நெறிகளை ஆய்வு செய்து, அவர்தம் பெருமையினை மதிப்பீடு செய்து நகருக்குத் தோரணவாயில்

போன்று இத்தொகுப்புகளுக்கு ஒரு **கொடையுரையை** அளித்துள்ளார். அவர்க்கு எம் நெஞ்சார்ந்த நன்றி.

தமிழர் பின்பற்றத்தக்க உயரிய வாழ்க்கை நெறிகளைத் தாம் படைத்தளித்த நூல்களின்வழிக் கூறியது மட்டுமின்றி, அவ்வரிய நெறிகளைத் தம் சொந்த வாழ்வில் கடைப்பிடித்துத் தமிழர்க்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார் திரு.வி.க. என்பதை வாழும் தலைமுறையும், வருங்காலத் தலைமுறையும் அறிந்துகொள்ள வேண்டும் - பயன்கொள்ள வேண்டும் எனும் விருப்பத்தோடு இந்நூல்களை வெளியிட்டுள்ளோம்.

**தமிழ்த்தென்றல் திரு.வி.க.** நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து , உவந்து உவந்து எழுதிய படைப்புகளைத் தொகுத்து ஒருசேர வெளியிட்டுத், தமிழ்நூல் பதிப்பில் மணிமகுடம் சூட்டி உள்ளோம். விரவியிருக்கும் தமிழ் நூல்களுக்கிடையில் இத் தொகுப்புகள் தமிழ் மணம் கமழும் ஒரு பூந்தோட்டம்; ஒரு பழத்தோட்டம். பூக்களை நுகர்வோம்; பழங்களின் பயனைத் துய்ப்போம். தமிழ்மண்ணில் புதிய வரலாறு படைப்போம். வாரீர்!

***திரு.வி.க. வெனும் பெயரில் திருவிருக்கும்;***
***தமிழிருக்கும்! இனமிருக்கும்!***
***திரு.வி.க. வெனும் பெயரில் திருவாரூர்ப்***
***பெயரிருக்கும்! இந்தநாட்டில்!***
***திரு.வி.க. வெனும் பெயரால் தொழிலாளர்***
***இயக்கங்கள் செறிவுற்றோங்கும்!***
***திரு.வி.க. வெனும் பெயரால் பொதுச்சமயம்***
***சீர்திருத்தம் திகழுமிங்கே!***

- பாவலரேறு **பெருஞ்சித்திரனார்**

இந்நூல் உருவாக்கத்திற்கு துணை நின்றோர் அனை வருக்கும் எம் நன்றியும் பாராட்டும்.

**– கோ. இளவழகன்**
*பதிப்பாளர்*

# கொடையுரை

**தேசபக்தாமிர்தம்**

*தேசபக்தன் அரசியல் நாளிதழ். அது தோன்றிய நாள் 07.12.1917. இதழ் ஆசிரியர் திரு.வி.கலியாணசுந்தரனார். இதழ் நோக்கம் தெய்வப்பற்று, அரசுப்பற்று, நாட்டுப்பற்று என்னும் மூன்றனையும் வளர்க்க வேண்டும் என்பது. அவ்விதழில் எழுதிய கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்து 1919இல் தேசபக்தாமிர்தம் என்னும் பெயரால் வெளியிட்டார் திரு.வி.க.*

*நூல் முன்னுரையில் பழந்தமிழ் உரைநடையில் தமக்குள்ள பற்றுமையையும், பிறமொழிக் கலப்பு இல்லாமல் பேசவும் எழுதவும் வேண்டும் என்னும் ஆர்வத்தையும் சுட்டுகிறார். எனினும், "செவ்விய தமிழ்நடை தமிழ்நாட்டிலுள்ள பல்லோர்க்கு இதுபோழ்து பயன்படாது என்று கருதித் தேசபக்தனுக்கெனச் சிறப்பாக ஒருவகை உரைநடையைக் கொண்டுள்ளேன்" என்று தம் உரைநடை நிலையை வரைகிறார். மேலும், " தேசபக்தாமிர்தம் பெரிதும் மாணாக்கர் பொருட்டாகவே வெளியிடப்படுகிறது" என்னும் குறிப்பையும் பதிவு செய்கிறார்.*

*சமயப்பெருமை, தமிழ்மொழி மாண்பு, ஒழுக்கம், பரோபகாரம், தாழ்ந்த வகுப்பார் முன்னேற்றம், பெண்மக்கள் உரிமை, தொழிலாளர் இயக்கம் முதலிய பொருள்களைக் கொண்டிருக்கிறது என்றும் உள்ளுறை மொழிகிறார். கட்டுரை அளவால் 59 இடம் பெற்றுள்ளன.*

*இறைவன் ஒருவனே; அவனை அன்பு வழியால் அடையலாம் என்பதன் விளக்கமே 'தெய்வபக்தி' என்னும் முதற்கட்டுரை.*

*அரசர் நெடுநாள் வாழவேண்டும் என்பதற்காகக் காளிக்குத் தம் தலையைத் தாமே கொய்து தரும் வீரவழக்கு உண்டு என்பதை இராசபக்தியில் குறிப்பிடும் திரு.வி.க. ஆங்கிலர் ஆட்சிச் சிறப்பை உரைப்பதுடன் ஆங்கில ஆட்சி நீடூழி வாழ்க என்றும் வாழ்த்துகிறார்.*

*தேசபக்தன் என்னும் இதழின் பெயராலே இடம் பெற்ற கட்டுரையில், "தேசபக்தி என்பது தேசத்திலுள்ள உயிர்களிடத்து*

அன்பு செலுத்துவது. உயிர்களிடத்து அன்பு செலுத்துவது கடவுளிடம் அன்பு செலுத்துவதாகும்" என்கிறார். தேசபக்தன் என்பது இதழ்ப்பெயர். எனினும் 'ஆண்பால் படுத்தியே' வழங்கு கிறார். அவ்வாறே நவசக்தி என்பதைப் பெண்பாலாக்கிக் கூறினார். பழமரபு கொண்ட புதிய ஆட்சியாம் இவை. அன்னிபெசண்ட் அம்மையாரை 'அன்னை பெசண்ட்' என்று வழங்கியவர் திரு.வி.க. தெய்வபக்தியை வளர்க்கும் வகைபோலத் தேசபக்தியை வளர்த்தல் வேண்டும் என வழிகாட்டுகிறார். 'தேசபக்த சமாஜம்' என ஓர் அமைப்பை ஏற்படுத்தி வளர்க்க வேண்டும் வகையையும் விளக்குகிறார். 'வந்தே மாதரம்' எனக் கட்டுரையை நிறைக்கிறார்.

உலகுக்குச் சமய அறிவை வழங்கியது இந்தியாவே என்று குறிப்பிடும் திரு.வி.க. இறைவனை அன்பு வடிவாக வழிபட்டால் வழிபடுபவன் அன்பு வடிவாகத் திகழ்வான் என்கிறார். சமய ஒழுக்கத்திற்கு மாறான ஐந்து பாவங்கள் இப்பொழுது தருமங் களாகக் கொள்ளப்படுகின்றன என இரங்குகிறார். மாணவர் களுக்குச் சமய ஒழுக்கம் போதிக்கப்படவேண்டும் என வலியுறுத்து கிறார். இந்தியர் சமயம் என்னும் கட்டுரையில், இந்தியர் சமயக் கொள்கையை ஆராய்ந்தால் அவரவர் சமயங்களுக்கு ஏற்றதாகவே அமையும் என்கிறார். பொதுமையாம் சமயக் கொள்கை உரைகாரர், தருக்கர் முதலியவர் கண்ட விளக்கமுறை வேற்றுமையால் பிணக்கு, பிளவு, போர் முதலியவற்றுக்கு இடமாயிற்று. போலிப் பாதிரிமார் இந்தியர் மதம் அஞ்ஞான மதம் என்றனர்; நாத்திகமும் உண்டாகின்றது. ஆங்கில மொழியை வேதமொழி யாகக் கொண்ட நம்மவர்களே இந்தியாவைக் கெடுத்தார்கள் என்று வருந்தும் திருவி.க. சமரசக் கொள்கை பரப்பப் படவேண்டும் என்கிறார். அன்னை பெசண்ட், அருண்டேல் இயக்க நலத்தைப் பாராட்டுகிறார்.

"உலகத்திலே இன்பவாழ்க்கையில் திளைத்து நில்லாதவர் பேரின்ப வாழ்க்கையில் திளைத்து நில்லார் என்பது" எமது கொள்கை என்று மோட்சானந்தமும் சுய ஆட்சியும் என்னும் கட்டுரையில் கூறுகிறார். "நம்நாட்டில் சுதந்திரம் என்பது சிறிதும் இல்லை; தேசபக்தன் சுயஆட்சி கேட்கிறான்" என அக்கட்டுரையில் வலியுறுத்துகிறார். உலகப்போர் மனித முயற்சி யன்று; தெய்வமுயற்சியால் ஆயது; வேற்றுமை ஒழிந்து உலகம் ஒன்றுபடுமாறே பண்டு தொட்டுப் போர்கள் நிகழ்ந் துள்ளன. போரால் பெற்ற அமைதிப் பாடங்கள் பல என விரித்துக் கூறும் திரு.வி.க. மன்னர் மன்னருக்கு வெற்றி வரவேண்டும் என்கிறார். இவை, மனித முயற்சியோ தெய்வ முயற்சியோ என்னும் கட்டுரைக் குறிப்பு.

உலகப் போரழிவும், இன்புளூயன்சா காய்ச்சல் அழிவும் நிலையாமையை மக்கள் நன்கு உணர்ந்து நன்னெறி போற்றுமாறு இறைவனால் அருளப்பட்டவை என்பது உலகநிலைக் கட்டுரைச் சாரமாம். வேண்டுவது எது? ஆத்மசக்தியா? தேக சக்தியா? என்னும் கட்டுரையில், தேகசக்தி அழிவுக்கே ஆட் படுத்தும்; ஆத்ம சக்தியே ஆக்கம் பெருக்கும்; அவ்வாத்ம சக்தியாகத் திகழ்பவர் காந்தியார் என்கிறார்.

நாகரிகம் என்னும் கட்டுரையில் " தன்னைப் போலப் பிறரை நேசித்து வாழும் சகோதரத் தன்மையை நாகரிகம் என்று கூறலாம்" என்கிறார். இந்நாகரிகத்தை உலகப்போர் மேலை நாட்டுக்கு உண்டாக்கும் என்னும் திரு.வி.க. "சண்டை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு எந்நாட்டாரும் எக்கருவி களையும் செய்யலாகாது. சண்டைக்குரிய கருவிகள் எவரிடத்தும் மிகுதிப்பட்டிருத்தலாகாது என்றும் பெரியோர் இன்று கூறும் உரையை அன்றே கூறுகிறார். (13.12.1918)

தந்நலம் கருதாது பிறர்நலம் கருதி உலகத்தில் வாழ்வோர் அந்தணர் என்று கூறும் திருவி.க. ஜீவகாருண்யப் பெருக்குள்ளோர் அனைவரும் அந்தணரே ஆவர் என்கிறார். பண்டைநாளில் வேள்வியால் அரக்கர்களை அழித்த அந்தணர்போல், வீடு தோறும் பெருகிவரும் அரக்கர்களை அழிக்கும் வேள்வி அந்தணர்களை எதிர்நோக்குகிறார். திரு.வி.க.வின் பின்னை வளர்நிலையில் இவ்வேள்வியையும் சாதிமை அந்தணத் தன்மையையும் கண்டித்தமை முரணன்று. வரலாறும் வாழ்வும் வாய்மையும் வழங்கும் பாடங்களாம்.

"சமயம் கடவுளை அடைதற்குரிய தூயவழி; மனிதனைத் தூய்மைப் படுத்துவது சமயமே" என்னும் திரு.வி.க. அந்நாளே சமய வேற்றுமை காணாமை அறிய வாய்க்கின்றது. கிறித்துவம், மகமதியம், பௌத்தம், இந்து என்னும் நான்கு சமயங்களையும் ஆயும் கட்டுரை சமயச் சபைகள். சைவ, வைணவ சபைகள் நிறுவிய கல்லூரிகள், மருத்துவ நிலையங்கள் எத்தனை? என வினா எழுப்பி அவற்றின் சண்டையைச் சுட்டுகிறார். சமயசபைச் சீர்திருத்தம் கருதும் கட்டுரை அது.

ஹிந்து தேவாலயங்கள் என மூன்று கட்டுரைகள் வரைந் துள்ளார். ஆலயங்கள் பழைய நாளில் ஐம்புல இன்ப நிலையங் களாக விளங்கியதையும், இடைக்காலத்தில் ஆலயங்கள் அடைந் துள்ள சீர்கேடுகளையும், எதிர்காலத்தில் ஆலயத்தில் செய்ய வேண்டும் சீர்திருத்தங்களையும் பற்றிக் கூறுவன அவை.

அந்நாளிலும் இந்நாளுக்குத் தேவையான கட்டுரைகள் அவை என்பதைப் பயில்வார் உணர்வர்.

மடாதிபதிகள் என்னும் கட்டுரையில் மடங்களை நிறுவியவர் நோக்கும் அறச்செயல்களும் பாழ்பட்டுக் கிடத்தலைப் பகரும் திரு.வி.க. "பண்டாரச் சந்நிதிகள் சிற்றின்பத் துறையில் எளியராயினுமாக... ஜனங்களுக்காக உழைக்க அவர்கள் வெளி வரவேண்டும் என்பது எமது வேண்டுகோள்" என்கிறார்.

இந்திய உரிமையை வேரோடு களையும் ரௌலட் சட்டத்தீமையை உணர்ந்து வேதாந்தி, சித்தாந்தி சந்நியாசி என்பார் ஏன் சிறைபுகல் ஆகாது எனத் தட்டி எழுப்ப எழுதப் பட்டது, வேதாந்திகள் என்செய்கிறார்கள்? என்னும் கட்டுரை.

இந்தியக் கிறித்துவர் இந்தியர் என்பதை மறத்தல் ஆகாது என்பது இந்தியக் கிறிஸ்தவர் என்னும் கட்டுரை. இந்தியர் என்பதை மறவாது வாழ்வாரைப் பாராட்டுவதும் இக்கட்டுரை. இந்தியாவில் கல்வி முறைக் கட்டுரையில், " இந்தியக் கல்வி உத்தியோகக் கல்வியாக மாறியதற்குக் காரணர் அரசாங்கத்தாரே"; "இந்தியா அரசாங்க உத்தியோகம் என்னும் அரவால் தீண்டப் பட்டிருக்கிறது;"என்கிறார்.

நாட்டு உரிமையினும் சீரியது நாட்டுக்கல்விப் பேறு என்பதை வலியுறுத்தும் கட்டுரை நாட்டுக் கல்வியும் நமது கடமையும் என்பது.

"இயற்கை வடிவாக இருந்த கல்வி அறிவு உத்தியோக வடிவாக, அடிமை வடிவாக மாறிவிட்டது அதனை உயிர்ப்பித்தல் வேண்டும்" என்பது பாரத தேவி! உன் கல்வி எங்கே? என்பது. பாஷை வளர்ச்சியே தேசவளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் மூலமாயிருப்பது என்பதை விளக்குவது 'பாஷை வளர்வ தெப்படி?' என்பது. "அரசகாரியம் முழுவதும் தமிழிலேயே நடைபெறல் வேண்டும். மொழிவாரி மாநிலம் உருவாக வேண்டும் என்பது எமது கொள்கை." என்பவற்றையும் இக் கட்டுரையில் சுட்டுகிறார். (1918)

நாட்டுக் கல்வி நிதி கொண்டு, " தாழ்ந்த வகுப்பாருக்கென நாட்டுப் பாடசாலைகள் பல ஸ்தாபிக்கப் பயன்படல் வேண்டும்; பெண்கல்விக்கும் அது பயன்படல் வேண்டும் என்பது எம் கொள்கை" என்று நாட்டுக் கல்விநிதி யாருக்குப் பயன்படல் வேண்டும்? என்னும் கட்டுரையில் சுட்டுகிறார்.

(எம்.ஏ., வரை) கட்டாய பாடமாக இருந்த தமிழ் இஷ்ட பாடமாக மாற்றப்பட்டது. இஷ்ட பாடமாக மாற்றப்பட்ட நாள்

தொட்டுத் தமிழ் மணங்குன்றத் தலைப்பட்டது. சில கல்லூரித் தலைவர்கள் தமிழ் வகுப்பையே ஒழித்திருக்கிறார்கள். இக் குறைகளை ஒழிப்பதற்கு வழிதேட வேண்டுவது நமது கடமை என்பது தாய்மொழி என்னும் கட்டுரை. திராவிட மொழிகள் என்னும் கட்டுரையில் தமிழ் தனிமொழி என்பதை வலியுறுத்து கிறார். வித்துவான் தேர்வுக்கு வடமொழிக் கல்வி தேவையில்லை என்பதையும் குறிப்பிடுகிறார். தமிழ்ப்புலவர்கள் என்னும் கட்டுரையில் பண்டைப் புலவர் சிறப்புகளைப் புகல்கின்றார். தமிழ்நிலை தாழ்வாய பின் தமிழ்ப் புலவர் நிலையும் தாழ்ந்தது. இதுகாலை தமிழ்நாட்டில் ஆங்கிலத் தமிழ் உலவி வருவதைக் காண எமது மனம் புண்படுகிறது என்னும் திரு.வி.க. தமிழ் மக்களும், தமிழ்ப் புலவர்களும் ஈடுபடவேண்டிய எழுச்சியைக் கூறி, “ மடாதிபதிகளே! தமிழ் வளர்ச்சிக்காயினும் நீங்கள் முயற்சி செய்யலாகாதா?” என்கிறார்.

தமிழ்ப்பண்டிதர் நிலை, அவர்களிடமுள்ள குறைபாடுகள் ஆகியவற்றை விரித்துரைத்து தமிழ்ப்பண்டிதர் மாநாடு ஒன்று கூட்ட வலியுறுத்துகிறார். தென்னிந்தியாவின் ஒற்றுமை இன்மையையும் அதன் கேடுகளையும் விரித்துரைத்து ஒன்றுபட ஏவுகிறார். மாணாக்கர்களில் தீயவர் நல்லவர் என்ற பாகுபாடு இல்லை. அவற்றை அறியுமாறே பயிலவந்தனர். ஆசிரியர் குணநலமே மாணவர் குணநலனாம். ‘தேர்வு அச்சம் மாணவர் களைப் பாழ்படுத்துகிறது. சுய ஆட்சியே மாணவர் படும் நோய்க்கு மருந்து என்று கல்வியும் மாணாக்கரும் என்னும் கட்டுரையில் கூறுகிறார்.

சர்வகலாசாலை அரசாங்கத் தொடர்பைப் பெரிதும் கொண்டிருத்தல் ஆகாது. படித்து ஒப்பித்து மறத்தல் என்பதே கல்வியாக உள்ளது. சுதேசக் கல்வி முறைச் சர்வகலாசாலை நிறுவ வேண்டும் எனச் சர்வகலாசாலைக் கட்டுரையில் கூறுகிறார்.

நாடகம் மக்களைப் பண்படுத்த ஏற்பட்டது. அது கேடுகளுக்கு இடமாகிவிட்டது. பள்ளிகள் நாடகசாலையாக மாறிவருகின்றன. நாடகத்தால் விளைந்த தீமை போதும். நாட்டுப் பற்று ஊட்டும் நாடகம் நாட்டுக்குத் தேவை என நாடகக் கட்டுரையில் நவில்கிறார்.

தாழ்ந்தவர்கள் முன்னேற்றத்திற்குக் கைம்மாறு கருதாது சேவை செய்வது கடவுட் சேவை. கிறித்தவராகவும் முகமதிய ராகவும் ஆகிய தாழ்த்தப்பட்டவரை மதிக்கும் உயர்ந்த சாதியார் தம் தெய்வத்தை வணங்கும் தாழ்த்தப்பட்டவரை இழிவாக

எண்ணுவது ஏன் என இடிக்கிறார். பஞ்சமர் என்பார் இந்தியப் பழங்குடியினர். அவர்கள் உழைத்த உழைப்பே மேல்சாதியரை உயர்த்தி இருக்கிறது. அதற்குக்கழுவாயாக அவர்களுக்கு உதவுதல் கடமை என்றும் தெளிவிக்கிறார்.

யாருக்காக வாழ வேண்டும் என்னும் கட்டுரையில் பிறருக்காக வாழ்வதே வாழ்வு என்கிறார். பூரண சுய ஆட்சிக்கு உழைப்பதே நம் வேலை என 'நமது வேலை' என்னும் கட்டுரையில் வலியுறுத்து கிறார்.

செல்வத்தைச் செலவளிக்கும் வழி என்னும் கட்டுரையில் காங்கரசுப் பணிக்குப் பயன்படுத்துவதே செல்வத்தைச் செலவழிக்கும் வழி என்கிறார். தொடர்வண்டி மூன்றாம் வகுப்புப் பயணமே 'பூலோக நரகம்' என அப்பெயர்க் கட்டுரையில் வரைகிறார். ஆசார முறையைச் சீர்திருத்த வேண்டுமானால் சமயச் சார்பாக நின்றே செய்ய வேண்டும் என்பதொரு கட்டுரை. ஆசார சீர்திருத்தம் நம் சமய நூல்களின் வழிப்பட்டதாகவே இருக்க வேண்டும் என்பதும் அடுத்த கட்டுரை.

பெண்மக்கள் நிலையும் தொழிலாளர் நிலையும் பலப்பல கட்டுரைகளாக வெளிப்பட்டுள. "ஆண்மக்களைப் போலப் பெண்மக்களும் முன்னேற்றம் அடைந்தாலன்றி நமதுநாடு நலமடையாது"

"பெண்டிர் மேலைநாட்டு நாகரிகத்திற்கு அடிமையாதல் ஆகாது"

"ஆடவருடன் பெண்டிரும் சுய ஆட்சிக் கிளர்ச்சியில் தலைப்பட்டு உழைக்க வேண்டும்"

"நம் பெண்மணிகளுக்கு அறிவு, வீரம், கற்பு முதலிய நற்குணங்கள் அமையுமாறு போதிக்கக் கூடிய பாடசாலைகள் பல நிறுவப்பட வேண்டும்"

"இந்தியாவில் ஆண்உலகம் கெட்டு வருவதுபோல் பெண் உலகமும் கெட்டு வரத் தொடங்கியிருக்கிறது"

"பெண்மக்கள் முன்னேற்றத்தை நாடும் ஆடவர்கள் முதலாவது விதவைகளுக்குத் தேசாபிமானம் உண்டாக்க முயல்வார்களாக"

"ஆடவர்களே நீங்கள் பெண்களைப் பெருமைப் படுத்துங்கள்; நீங்கள் பெருமை பெறுவீர்கள் நீங்கள் அவர் களுக்குச் சுதந்திரம் கொடுங்கள்; சுதந்திரம் பெறுவீர்கள்" இன்னன அக்கட்டுரை யில் பொதிந்துள்ளன.

"தொழிலாளர் வறுமை என்பது நாட்டின் வறுமை"

"தொழிலாளர்க்கு உழைக்க முன்வராதவர் தேச ஊழியர் ஆகார்"

"தொழிற் சங்கங்கட்கெனத் தனியாகப் பாடசாலைகள், வாசகசாலைகள், வைத்தியசாலைகள் முதலிய அறச்சாலைகள் ஏற்படுத்தல் வேண்டும்"

"தொழிலாளர்கள் முயற்சி செய்து காங்கிரசைத் தாங்கள் வசப்படுத்திக் கொள்ள வேண்டும்"

"செலவிற்கேற்ற வருவாய் இன்றியே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்கின்றனர்"

"தொழிலாளர்கள் தங்கள் கடமையை அன்பு வழி நின்று, ஊக்கம் குன்றாமல், உணர்ச்சி சலியாமல், ஒற்றுமை குலையாமல், உறுதி நெகிழாமல், உண்மை பிறழாமல், நியாயப் போர் முனையில் நின்று முதலாளிகளை எதிர்ப்பார்களாயின் வெற்றி தொழிலாளர்கள் உடையதே"

"தேசத் தொண்டு செய்யப்பலர் கிளம்பியிருப்பது போலச் சுதேசக் கைத்தொழிற்சாலை அமைக்கப்பலர் கிளம்பவேண்டும்"

"அச்சுத் தொழிலாளருக்காக ஒரு தரும பாடசாலை அமைத்தல் வேண்டும்" இன்னன தொழிலாளர் கட்டுரைகளில் உள்ள சில குறிப்புகள். நூல்நிறைவில் அரசியற்பாக்கள் சில இணைக்கப்பட்டுள.

திரு.வி.க.வின் 'உரைநடை வளர்நிலை' குறித்து ஆய்வு செய்வார்க்கு அளவுகோல் நூலாகத் தேசபக்தாமிர்தம் விளங்குதல் ஒருதலை.

சன்மார்க்கத் திரு.வி.க.வின் தோற்றம் இக்கட்டுரை களிலேயே இடம் பெற்றிருத்தல் ஒருதனிச் சிறப்பு நிலையாம்.

### என் கடன் பணி செய்து கிடப்பதே

'நினைப்பவர் மனம்' என்னும் அப்பரடிகள் தொடர் கொண்டு விரிவாக்கம் செய்தது போன்றதொரு நூல் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் இந்நூலாம்.

'தொண்டால் பழுத்த தூயபழம்', 'தொண்டலால் துணையு மில்லை ஐயன் ஐயாற னார்க்கே' என்னும் தொண்டின் வடிவர், தண்டு ஏந்தும் முதுமையிலும் அதனை ஏந்தாது தொண்டேந்திய தோன்றல் அப்பரடிகள் திருவாய் மலர்ந்தருளிய தேன்மொழி, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பது.

என் கடன் பணி செய்தலால், என்னைப் பேணுதல் என் பணி இல்லை! அப்பணி இறைபணி; என முழுதுறும் ஒப்படைப்புச் செய்துவிட்ட இறைவாழ்வர்- இறையொடும் ஒன்றி உடனாய வாழ்வர் அப்பரடிகள். அவர்தம் வாழ்வுச் சுரப்பாம் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதை முழுதுறக் கொண்டு வாழ்ந்த மூதடியார் திரு.வி.க. "மீண்டும் மீண்டும் பிறவி வேண்டும் தொண்டுக்காக! வீடும் வேண்டா" என்று வாழ்ந்த விழுமிய வாழ்வு திரு.வி.க. வாழ்வு. இப்பொருளாய்வு அப்பரடிகளொடு, திரு.வி.க.வும் ஒன்றி உடனாகிய ஆய்வு என்னலாம். இருமை ஒருமையாய்த் திகழும் பெருமையது இஃது என்க.

அப்பரடிகளின் ஓரடியை 'என் - கடன் - பணி - செய்து கிடப்பதே' என நான்கு பகுப்பாக்கி நூலை நூற்கிறார். இந்நான்கு தலைப்புகளுள் எதன்பால் அப்பரடிகளும் திரு.வி.க.வும் குவிந்து குமிழ்விட்டனர் எனினும் இருவர் வாழ்வையும் தோய்ந் துணர்ந்தார் எளிதில் அறிவர். அது 'பணி' என்பதாம். ஆதலால் 'பணி' விரிவே நூல் விரிவெனல் சாலும்.

அப்பரடிகளுக்கு எவரும் எண்ணிப் பாராத விருதை - முடிசூட்டை - பரிசளிப்பை வழங்குகிறார். திரு.வி.க. அது " தமிழ் நாட்டுச் சத்தியாக்கிரகி (அறப்போராளி) ஆகிய அப்பர் சுவாமிகள்.

1919இல் தேசபக்தனில் இடம் பெற்ற கட்டுரை, 1921இல் நூல் வடிவுற்றது. அதுகால், பல பொருளைக் கூட்டியும் புதுக்கியும் மாற்றியும் ஒழுங்கு செய்துள்ளார். "ஏறக்குறைய ஒருபாதி புதிய பொருள் சேர்க்கப்பட்டது" என்கிறார்.

தமிழ்ப்பணி செய்வார் இந்நாளில் மேற்கொள்ள வேண்டும் இன்றியமையாப் பணி ஒன்றனைத் திரு.வி.க. சுட்டுகிறார். தமிழைப் புறக்கணித்துக் கொண்டு தமிழால் வாழும் திருக் கூட்டத்தார் செவிக்கண் இச் செவ்வுரை ஏறின் நன்றாம். அவர் பிறவி நன்றிப் பிறவியாக வாய்ப்புமாம்!

"பத்திரிகை ஆசிரியனாகி, அரசியல் துறையில் இறங்கிய நாள் தொட்டுத் தமிழ்ப்புலவர் உலகில் யான் வாழ்ந்ததாகக் கருதுவதில்லை; ஆனால் தமிழுலகில் வாழ்வதாகக் கருதுகிறேன். போதகாசிரியனாய் இருந்த போது தமிழ்த் தாயின் கேசமும் மேகலையும் சிலம்பும் என் கண்களுக்குப் புலனாயின. இப்பொழுது தமிழ்த்தாயின் அலமரலும் விம்மலும் அழுகையும் புலனாகின்றன. தமிழ்ப் புலவர்களுக்கு இவை புலப்படு கின்றனவோ என்னவோ தெரியவில்லை. ஆனால் தமிழகத்துக்கு இவை புலப்படா தொழியவில்லை".

"என்னைத் தொண்டிற்குப் பண்படுத்திவிடுத்த எனது தமிழ் அன்னை - என்னை ஈன்ற அன்னையினும் சிறந்த அம்மை - அலமந்து விம்மி விம்மி அழுது அழுது ஆவிசோரும் வேளையில் அவள் துயர் தீர்க்க முயலாது, அவளைச் செயற்கை அணிகளால் அழகு செய்ய எனக்கு மனம் எழவில்லை.. என் தாய் நாடு உரிமை பெற்றாலன்றி என் தமிழ்த்தாய் அரசு போற்றும் கழகமேறி அரியாசனம் வீற்றிருக்க மாட்டாள். ஆதலால் சிறப்பாக அரசியல் துறை நண்ணிப் பணி செய்தால் தமிழ்த் தாய்க்கு நலம் விளையும் என்றெண்ணி அத்துறையில் இறங்கித் தொண்டு செய்யலானேன்" என்கிறார். (முன்னுரை) 'என் தாய்நாடு உரிமை' என்று அவர் சுட்டியது இந்திய விடுதலையை. இந்திய விடுதலை எய்தி அறுபான் ஆண்டு ஓடிய பின்னும் தமிழ்த் தாயின் அவலம் - அழுகை - ஓய்ந்தனவா? அவள் அரசு போற்றும் கழகமேறி வீற்றிருக்கின்றனளா? மனச்சான்றொடும் எண்ணித் தெளிவு கொள்வாராக.

"மேல் நாட்டுப் புறப்பொருள் ஆய்வாளர், சடப் பொருளுக்கு வேறாக ஒருசித்துப் பொருள் உண்டு" என்னும் முடிவுக்கு வந்திருப்பது. கீழ்நாட்டு ஆத்திக நூல்களுக்கு ஆக்கந் தேடுவது" என்கிறார்.

"உள்ளதனின்றும் ஒன்று தோன்றுமேயன்றி, இல்லத னின்றும் ஒன்று தோன்றுவதில்லை" என்பதை விளக்குகிறார்.

கடமை என்பது, உயிர் உடலோடு தொடர்பு கொண்டுள்ள நிலையில் ஏற்படுவது என்றும், என்று கடமை ஏற்பட்டதோ அன்றே பணியும் ஏற்பட்டது. எனவே, மனிதரது கடமை பணியைப் பற்றியே கிடக்கிறது என்று கடன் பகுதியில் உரைக்கிறார்.

பிரமசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பவற்றை, கல்வி பயில்வது, அன்பை உணர்வது, கட்டுப்பட்ட அன்பில் நின்று தொண்டு புரிவது, கட்டற்ற அன்பில் நின்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவது என்று பொருள் பொதியக் கூறுகிறார். பணியை விளக்கும் திரு.வி.க. பணியால் கடவுள் நிலை எய்துவாரும், அஃறிணைப் பொருள் நிலையை அடைவாரும் உளர் என இருவிதப் பணிகளை (நற்பணி, தீப்பணி களைக்) குறிக்கிறார். கடவுட்பணி என்பது கைம்மாறு கருதாதது எனவரம்பிடுகிறார்.

"கடவுளை வழிபடுவதற்கு ஓரிடம் வகுக்கப்படுவது, தன்னமில்லாப் பணியைச் பதியச் செய்ய வேண்டும் என்பதற்கேயாம்" என்கிறார்.

வழிபாட்டு முதிர்வால் ‘எல்லா உயிரும் தம்முயிர் போலத் தோன்றும்’ அருணிலை அடைதலையும், “யாம் எமது என்னும் பற்றுகளின்றி உயிர்களின் நலத்துக்காக வாழ வேண்டும் என்னும் உறுதியை எய்துதலையும் விளக்குகிறார்.

“கட்டுப்பட்ட அன்பு கடவுள் அன்பு ஆகாது; அது விலங்கு அன்பு” என்றும், “ கடவுள் ஒரே இடத்தில் இருக்கிறார் என்னும் கொள்கையுடையாரும் எல்லா உயிர்க்கும் அன்பு செலுத்தும் உயரிய நிலையை அடையமாட்டார்” என்றும் தெளிவிக்கிறார்.

ஆலயங்களின் தற்கால நிலை என்னும் தலைப்பில் திரு.வி.க. கொதிப்புறுகிறார்.

“பணிக்கு நிலைக்களமான ஆலயங்கள், கள்ளர், சோம்பர், வேசையர், சோற்றாட்கள் முதலிய தீயர் உலவும் குகைகளாக மாறியிருக்கின்றன. ஆலயங்களில் பணி செய்வோர் கூலிக்கார ராகவும் வயிற்றுச் சாமிகளாகவும் மாறியிருக்கின்றனர். ஆலய அர்ச்சகர் உள்ளத்தைப் பணமும், பிரசாதமும் பிறபேய்களும் கோயில் கொண்டிருக்கின்றன. ஆலய அர்ச்சகர்க்கும் கல்விக்கும் இடையில் பொருள் மலையும் சோற்றுக் கடலும் நிற்கின்றன. அவர்தாம் பூசை செய்வன ‘கல் செம்புதானே’ என்று எண்ணிப் பலதிறப் பாவங்களையும் செய்கின்றனர். ஆலய அர்ச்சகரின் நிலை இவ்வாறாயின், ஏனையோர் நிலையைக் கூற வேண்டுமோ?” என்பது அது.

அறிஞர் பலர் உருவ வழிபாட்டை விலக்கி வருவது ஏன்? என வினாவி, “மன அடக்கத்துக்கென ஏற்பட்ட கோயில்கள் மனவிகாரத்துக்கும் விரிவுக்கும் களியாட்டத்துக்கும் உரிய கள்ளர்குகைகளாய மாறினமையே யாகும்” என மறுமொழி தருகிறார்.

தேசப்பணி தெய்வப்பணி என்பவற்றை ஆராயும் திரு.வி.க. “தேசப்பணி என்பது தெய்வப் பணியே” என அறுதியிடுகிறார்.

தேசத்தில் உலவும் (நடமாடும்) கோயில்களுக்குப் பணி செய்யாது, ஒரே இடத்திலுள்ள விக்கிரகங்களுக்குப் பணி செய்வது அறியாமையே யாகும். அண்டை வீட்டு எழை பசியால் வருந்துவதைக் கண்டும் கேட்டும் அவனை நோக்காது, பாலும் பழமும் தேனும் கொண்டுபோய் விக்கிரகத்தின் தலையில் பொழிந்து இன்புறுவோன் பூசையைக் கடவுள் ஏற்றுக் கொள்வரோ? ஒரு போதும் ஏற்றுக் கொள்ளார் என மேலும் விளக்குகிறார்.

தாம் இவ்வாறு சொல்வது சிலரைப் புண்படுத்தும் என்பதை உணரும் திரு.வி.க. "இக்கால அறத்தை வலியுறுத்த வேண்டுமென்று என் உள்ளத் தெய்வ ஆணை (மனச்சான்று) என்னைப் பிடர்பிடித்து உந்துகிறது..அத்தெய்வ ஆணைக்கு மாறுபட்டு நடப்பேனாயின் யான் மனிதப் பிறவி எடுத்தவ னாகேன்" என வஞ்சினம் கூறுகிறார்.

செய்து கிடப்பதே என்பதன் நிறைவில் இறைவனிடம் ஒரு வேண்டுதல் வைக்கிறார். அது திரு.வி.க. தம்பிறவியில் வேண்டும் 'வேட்டல்' தொகுப்பாகும். வேட்டல் நூல்பல எழுதினவர் அவரல்லரோ!

"ஐந்தொழில் புரியும் ஆண்டவனே,

வீட்டின்பம் வேண்டாம்; ஓய்வில் விருப்பமில்லை; மனிதப் பிறவி வேண்டும்; அப்பிறவியை என தருமைத் தமிழ்நாட்டில் தாங்குதல் வேண்டும; நின் திருவடியை என்றும் மறவா மனம் வேண்டும்; செல்வ வாழ்வு வேண்டாம்; எளிய வாழ்வு வேண்டும்; பயன் கருதாப் பணியில் நெஞ்சம் பதிதல் வேண்டும்; எனது தமிழ்மொழிக்கும், எனது அன்புச் சமயத்துக்கும், எனது அருமைத் தாய்நாட்டுக்கும் இடையறாத பயன்கருதாப் பணி செய்த வண்ணம் இருத்தல் வேண்டும்; இறக்கும்போதும் நின்திருவடி நினைவும் எனது மொழி சமயம் நாடு இவைகளின் நினைவும் அகலாமல் நிற்றல் வேண்டும்.இவ்வேண்டுதல்களைத் திருவருள் செய்க" என்று வேண்டுகிறார்.

நூல் முடிவில், "இதை வாசிக்கும் நண்பர்கள் பணியில் காதல் பூண்டு, வீட்டையும் விரும்பாது, எத்தகைக் கைம்மாறும் கருதாது, ஆண்டவர் அருட்குணம் பெற்றுப் பணி செய்து கிடப்பார்களாக" என வாழ்த்துகிறார். இவ் வேண்டுகையும் வாழ்த்தும் தத்தமக்கென உரிமை பூண்டார் திரு.வி.க. வினால் தத்து எடுத்துக் கொள்ளப்பட்ட பேற்றினர் என்பது உறுதியாம்.

## தமிழ்நாட்டுச் செல்வம்

தமிழ்நாட்டுச் செல்வம் என்னும் பெயரில் வெளிவந்த சுவடி, காரைக்குடி, இந்து மதாபிமான சங்க வெளியீடு ஆகும். அச்சங்க ஆறாம் ஆண்டு விழாவில் திரு.வி.க. வழங்கிய தலைமையுரையே இதுவாம். (1924)

தமிழ்நாட்டின் பழமையையும் குமரிக் கண்டக் கடல் கோளையும் தக்க சான்றுகளுடன் உரைத்துத் தமிழ்மொழியின் தொன்மை மென்மை ஆயவற்றை எடுத்துரைக்கிறார்.

மாந்தர் குழந்தை நிலையில் இருந்து தோற்றுவித்த மொழி தமிழ் ஆதலால், அதில் வல்லொலி இல்லை; சில எழுத்துகள் மொழி முதலாக வருதல் இல்லை என்பவற்றை நன்கு விளக்கிக் கூறுகிறார்.

தமிழர் வாழ்வு, அக வாழ்வு என்றும், புறவாழ்வு என்றும் பகுப்பட்ட முறைமையை விளக்கி, அகம் நுண்மை, புறம் பருமை; அகவளர்வே புறம்; ஒன்றை இன்றி ஒன்று இல்லாதவை என்று கூறித் தமிழர் அரசியல் சிறப்பை உரைக்கிறார்.

சோறாக்கும் தீயின் வெம்மை, ஞாயிற்றின் வெம்மை என்பவை அன்றி வேறு வெம்மை அறியார். திருவில் அல்லது கொலைவில் அறியார் என மக்கள் வாழ்ந்த அமைவும், வன்மையும் அறமும் பேணிய அரசியல் சீர்மையையும் போரிலும் அறம் காத்த சிறப்பையும் உரைக்கிறார்.

பூத பௌதீக ஆய்வு, கலைத்திறத் தேர்ச்சி, வாணிகவளம், மருத்துவ மாண்பு, அறிவியல் நோக்கு, நாட்டுவளம் என்பவற்றை எல்லாம் விரிவாக ஆய்ந்துரைக்கிறார்.

தமிழர் பாட்டின் பெருமையை எழுச்சிமிக உரைத்து, சமய மாண்பை உரைக்கிறார். இறைவன் அன்பின் வடிவன் அறிவின் வடிவன் என்று கூறிச் சமய அறிவின் இன்றியமையாமையையும், சமய அறிவு இல்லாமைக்கேட்டையும் நெகிழ்வுறக் கூறுகிறார்.

தேவாரம் திருவாசகம் நாலாயிரம் தமிழ் வேதங்கள் என்பதை உரைக்கும் திரு.வி.க. பல பேரூர்களில் கூட, திருவாசக நூல் கிடைக்கப் பெறாமையை வருந்தியுரைக்கிறார்.

நம் சமயத்தின் மேல் பற்றுமையோ, நூல் ஆய்வோ, மக்கள் தொண்டோ புரியாமல் வாளா புறக்கணிப்பதை எடுத்துரைக்கும் திரு.வி.க. எங்கிருந்தோ வந்த பாதிரிமார்கள் செய்யும் அரிய தொண்டுகளைக் கண்கொண்டு காண ஏவுகிறார்.

சமய நூல்களைப் படியாமலும் பிறர் படிக்கவிடாமலும் தொண்டு எதுவும் புரியாமலும் இருக்கும் சமயவாணர், சமயம் மாறுவார் மேலும், அச்சமயப் பரப்பாளர் மேலும் வன்மங் கொள்வது பழிச் செயலாம் என உணர்த்துகிறார். வன்மங் கொண்டு பழிகூறுவார், பாதிரிமார் செய்யும் தொண்டு போல் தொண்டு செய்யத் தடை என்ன? என்கிறார்.

நம்மவர்க்குப் படமாடும் கோயில் மேல் உள்ள பற்று, நடமாடும் கோயில் மேல் ஏற்படுவது இல்லை. சமயச் சங்கங் களும் அக்கறை காட்டுவது இல்லை. சங்கங்கள் இணைவதோ, இணைந்து தொடர்ந்து அறிவுத் தொண்டும் ஆக்கத் தொண்டும்

செய்வதோ இல்லை. அத்தொண்டுகள் எல்லாம் துலங்குவதற்கு இந்து மதாபிமான சங்கம் திட்டமிட்டுக் கடனாற்றுமாக எனப் பொழிவை நிறைவு செய்கிறார்.

சமயச் சால்புடைய தொண்டர் ஒருவர்,

சமயச் சால்புடைய தொண்டர்கள் பெருகி எழுந்து

தொண்டாற்றுமாறு அழைத்த அறைகூவல் இப்பொழிவு

எனச் சுருங்க உரைக்கலாம்.

**சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து**

"மூன்று மாநாடுகளின் தலைமையுரைகளைக் கொண்டதே இந்நூல். அம்மூன்றும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொழுதில் கூடப்பெற்றன. இளமையுலகம் மூன்றற்கும் பொதுப் பட நிற்கிறது" என்று திரு.வி.க. இந் நூலமைதி பற்றி உரைக்கிறார்.

பிறப்புவழி உயர்வு தாழ்வு கருதல், மக்களுள் தீண்டாமை கொண்டொழுகல், பெண்ணை அடிமைப்படுத்தல், கண்மூடி வழக்க ஒழுக்கங்களை உடும்பெனப் பற்றிக் கிடத்தல் முதலியவை நாட்டைக் குலைத்து வருதலைக் கடிந்து சீர்திருத்த வேட்கையை இளையர்க்கு ஊட்டுதற்குப் பொழிந்த பொழிவுகள் ஆதலால், அப்பொருளமைதிக்கு ஏற்பச் சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து என்னும் பெயர் பெற்றது.

வாலிப நாடார் மாநாடு, யாழ்ப்பாண மாணாக்கர் மாநாடு, திருச்சி தஞ்சை சில்லாத் தமிழர் மாணாக்கர் மாநாடு என மும் மாநாட்டுத் தலைமையுரையாகிய 'எழுத்துப் பேச்சே' இந்நூலடைவாம். இந்நூலின் முதற்பதிப்பு 1937இல் வெளிவந்தது.

இளமையின் சிறப்பு பாண்டி நாட்டின் சிறப்பு என்பவற்றை விரித்துரைக்கும் திரு.வி.க. சமணரைக் கழுவேற்றியதற்குப் போதிய அகச்சான்றோ, புறச்சான்றோ இல்லை என்கிறார். ஞானசூரியன் என்னும் நூலில் (பக்.96) அருகர் திறங்களை என்னும் ஞானசம்பந்தர் உரை, அருகர் சிரங்களை என மாறி இருத்தலைச் சுட்டும் திரு.வி.க.

'அறிந்தோ அறியாமலோ உறும் மாற்றங்கள் பின்னே சரித்திர உலகிற்குப் பெருந் தொல்லை விளைக்கின்றன" என் கிறார்.

உடலோம்பலை வலியுறுத்தும் திரு.வி.க. மலச்சிக்கல் இன்றிக் காத்தல், வைகறைத் துயிலெழுதல், உடற்பயிற்சி, உணவுமுறை, கெடுக்கும் குடிவகை, நல்லொழுக்கம் என்பவற்றை விரித்துரைக்கிறார்.

"பிறர் வெகுண்டெழுந்து துன்புறுத்தும் போது பொறுத்தலே வீரம்" என்றும் "அன்பினின்றும் வீரம் பிறத்தல் வேண்டும்" என்றும் வீரவிளக்கம் புரிகிறார்.

கல்விக்கும் வாழ்வுக்கும் தொடர்பு இல்லாக் கால நிலையைச் சுட்டிக் காட்டும் திரு.வி.க., தொழிற் கல்வியும் கல்வியே என வலியுறுத்துகிறார்.

கல்வி பெறும் மொழி குறித்து, " நாம் தமிழ் மக்கள். நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஓய்வும் நேரமும், வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம்" என்கிறார்.

"அறிஞர்கள் காணும் உண்மைகளை அவரவர் தந்தம் (தாய்) மொழியில் பெயர்த்து அறிவு பெறல் வேண்டும். அவ் வழியிலேயே உலகம் இயங்கி வருகிறது" என்கிறார்.

"இளைஞர்களாகிய நீங்கள் 'தாய்மொழியிலேயே கலைகளைப் பயிறல் வேண்டும்' என்னும் உறுதி கொள்வீர் களானால் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தமிழ்நாடு நாளையே பெற்றுவிடும் " என்கிறார். (5.7.19258)

"நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டது. நாட்டு மொழியை வஞ்சிப்பது பிறந்த நாட்டை வஞ்சிப்பதாகும்" என்றும் வலியுறுத்துகிறார்.

மக்களை விலங்கினின்றும் பிரித்துப் பண்படுத்துவது சமயம் என்று கூறும் திரு.வி.க. போலித் துறவு, வாய்வேதாந்தம், பொய்மைச் சடங்கு, சாதிப்பிரிவு, பெண்ணடிமை, கோவில் நிலை என்பவற்றை விரிவாக எடுத்துரைக்கிறார்.

"இளைஞர் சமரசச் சமயநெறி பற்றி நடப்பாராயின் உலகில் சமயப் போர் தொலையும்; ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் புகுதலும் ஒழியும்"

இந்நாளில் நமது நாட்டில் நடைபெற்று வரூஉம் சடங்குகளில் சில குருட்டு நம்பிக்கைகள் நுழைந்திருக்கின்றன. அவற்றில் மூன்றைச் சிறப்பாகக் குறிக்கிறேன். ஒன்று, சடங்குகளைச் சமயத்துடன் தொடர்பு படுத்துவது; மற்றொன்று பிறப்பில் குறிக்கொண்டு "நல்வினை தீவினைகட்குப் பண்டாரத் தையோ தேசிகனையோ பார்ப்பானையோ பிறனையோ அழைப்பது; இன்னொன்று குறிப்பிட்ட ஒருமொழியிலேயே மந்திரம் சொல்லவேண்டும் என்பது"

“நமது நாட்டின் விடுதலை சாதி வேற்றுமை அழிவில் இருப்பதை இளைஞர் அறிந்து மனங்கொண்டால் சாதி வேற்றுமையைத் தகர்க்கலாம்”

“சாதி இயக்கங்களால் சாதிகள் வலுப்படலாகாது”

“கலப்பு மணம் நாட்டில் பெருகப் பெருகச் சாதி வேற்றுமை தானே சாய்ந்து படும்” என்கிறார். பெண்மக்கட்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை அடுக்கும் திரு.வி.க. “இவற்றை விதித்தவரின் நெஞ்சைக் கல்லெனக் கழறுவதா? இரும்பென இயம்புவதா?” என வினாவுகிறார்.

நம்கோயில் நிலையைக் குறிப்பிடும் திரு.வி.க. கிறித்து பெருமான் கோயிலைக் ‘கள்ளர் குகை’ என்றதையும், காந்தி யடிகள் ‘வேசையர் விடுதி’ என்று சுட்டியதையும் கூறி, “நாம் இப்பொழுது வதிவது பேய்நாடு, நோய்நாடு, நரகக் குழியில் நாம் வதிகிறோம்” என இரங்குகிறார்.

யாழ்ப்பாண மாணாக்கர் மாநாடு 1929 ஏப்ரல் திங்களில் (10,11,12) நிகழ்ந்தது. தமிழகத்தின் ஒரு பகுதி யாழ்ப்பாணம் எனத் தொடங்கிக் குமரிக் கண்ட எச்சமே ஈழம் என்பதை வலியுறுத்து கிறார்.

யாழ்ப்பாண மாணவர் மாநாட்டு நோக்காக எவை இருக்க வேண்டும் என்பதை,

1) மானம் பாராட்டும் உயர்ந்த நாடாய் நம் ஈழம் நிலைக்க வேண்டுமாயின் எமக்கு நமது தாய்நாட்டுக் கல்வித் தேர்ச்சி (ஓவியம், சிற்பம், மொழி, இசை, ஞானம்) இன்றியமையாத தென்பதும்;

2) நமது நாட்டுக்குத் தன் அரசை மீண்டும் நிறுவுதல் எமக்குப் பெரியதொரு கடனாம் என்பதும்;

3) நமது நாட்டிலுள்ள பல்வேறு சாதியாருக்கும் அரசியல் நிலையினும், மக்கள் கூட்ட வாழ்வினும் ஒரு வேறுபாடும் இல்லை என்பதும்;

4) சாதி பேதம் பாராட்டுதல் நமது நாட்டாரின் மக்கட்டன்மைக்குப் பெரியதோர் இழிவாம் என்பதும்;

5) பிறநாட்டுப் பொருட்களை வரவழைத்துப் பயன்படுத்துதல் பிறர் பொருட்களுக்கு அடிமைத் தன்மையை நாட்டில் நின்று நிலவச் செய்து வருகின்ற தென்பதும் உமது நோக்கங்களாக் கொண்டு பணியாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். ஆண்டுகள் எண்பது கடந்தாலும் இன்றை

நோக்கும் அவையாகவே உள அல்லவோ! இன்னும் மேலும் சிக்கல்தானே பெருக்கெடுக்கலாயிற்று. அதனைத் தீர்க்க, எத்தகு கொடை கொடுத்தாக வேண்டிய நிலையுள்ளது! அன்றே விழிப்புற்றிருந்தால்.. என்று எண்ணச் செய்கிறது திரு.வி.க. கூறிய நோக்கங்கள்.

மாணாக்கர் கொள்ள வேண்டியவெல்லாம் திரட்டி யுரைத்த திரு.வி.க. "யாழ்ப்பாண இளைஞர்களே, வருங்கால உலகம் உங்களை நோக்கி நிற்கிறது; உங்கள் தாய்நாடு உங்களை நோக்கி நிற்கிறது; உங்கள் தமிழ்த்தாய் உங்களை நோக்கி நிற்கிறாள். உலகில் சகோதர நேயம் பெருகல் வேண்டும்; நாடு தன்னரசின்பம் நுகரல் வேண்டும். தமிழ்த்தாய் அரியாசனம் ஏறல் வேண்டும். இத்துணைக் கடன்கள் உங்களைச் சூழ்ந்து நிற்கின்றன; அக்கடன்களாற்ற எழுங்கள்; எழுங்கள்" என முடிக்கிறார்.

மூன்றாம் மாநாடு தமிழ் மாணவர்மாநாடு. துறையூரில் கூடியது. நாள். 6.8. 1932 சோழநாட்டின் பெருமை மாணவர் உடல்நலம் கல்வி தாய்மொழிப் பயிற்சி கலைகள் சீர்திருத்தம் என்பவை பற்றி நிரலே விரித்துரைக்கிறார்.

கண்ட இடங்களில் எச்சில் துப்புதலும் வாழ்வில் ஒழுங்கீனமும் குறித்த திரு.வி.க. ஒழுங்கு ஊராளும் என்கிறார். மாணவர் ஒழுங்குமுறையைத் தெளிவுறுத்துகிறார்.

தீட்டிய அரிசியைத் தள்க; கொழியல் குத்தரிசியைக் கொள்க.

கீரை காய் கனிகளை உண்க; காப்பி, டீ கோக்கோ முதலிய பானங்கட்குப் பதிலாக நீர், மோர், இளநீர் முதலியவற்றை அருந்துக. சுருட்டு, பீடி, சிகரெட்டு முதலியவற்றைக் கனவிலும் கருதாதேயுங்கள் எனப் பலப்பல நலக்கருத்துகளை நவில்கிறார்.

மனிதன் எண்ணத்தால் ஆக்கப்பட்டவன் என்பதை நயமுற விளக்குகிறார். சமயப் போரிடுவோரினும் நாத்திகர் நல்லவர் என்கிறார்.

தாய்மொழியின் வழியே கல்வி பெறுதலை வலியுறுத்தும் திரு.வி.க. கிரிபத், தாகூர், திலகர், காந்தி ஆயோர் தம் தாய் மொழிப் பற்றைச் சுட்டிக் காட்டுகிறார்.

தமிழ்நாட்டை ஒருமையில் நிறுத்துதற்கு மொழியன்றி வேறொன்று இல்லை என்கிறார். மாணவர் மொழிப்பற்றும் தொண்டுமே மீண்டும் தமிழை அரியணையில் அமர்த்தும் என வலியுறுத்திப் பொழிவை நிறைவு செய்கிறார்.

*மூன்றும் இளமையர் முன்னர் பொழிந்தவை.*

*மூன்றும் சீர்திருத்தம் பற்றித் தெளிவித்தவை.*

*மூன்றும் விருந்தாய் அமைந்தவை. ஆதலால் மூன்றும் பழநாள் கலித்தாழிசை போல்- ஒரு பொருள் பற்றிய மூன்றாய் - எடுத்த கருத்தை வலியுறுத்துவனவாக விளங்குகின்றன.*

**தமிழ்க்கலை**

*'தமிழ்க்கலைகள் என்னைப் போன்றவர்க் கென்றே தோன்றினவோ' என இறும்பூது எய்தியவர் திரு.வி.க. இயற்கை நாட்டம், இசை வாழ்வு, கலைத்துய்ப்பு, இறைமை நாட்டம் என்பவற்றின் வழிப்பட்ட தொண்டர் பிறவி, திரு.வி.க. பிறவி.*

*திரு.வி.க. வாழ்நாளெல்லாம் என்ன முழங்கினாரோ அவற்றின் 'சாரம்' இத் தமிழ்க்கலை.*

*திரு.வி.க. பொழிந்த பொழிவுகள் ஆறு. அவற்றின் எழுத்தாக்கம் பேரன்பர் அன்புப் பழம்நீ. நூலாக்கம் முதுபெரும் புலவர் மே.வி. வேணுகோபாலர்; நூல் ஒப்புகை வழங்கியவர் திரு.வி.க. முன்னுரை பேராசிரியர் க.அன்பழகனார். முதற்பதிப்பு 1953.*

*தமிழ்க்கலை முதற்கட்டுரை, சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்ற விழாப்பொழிவு இரண்டாம் பொழிவு பச்சையப்பன் கல்லூரி மாணவர் மன்றப் பொழிவு. மூன்றும் நான்கும் வள்ளலார் பற்றியவை. இராமலிங்க சுவாமிகள், சமரச சுத்த சன்மார்க்க சங்கப் பொழிவுகள். ஐந்தாம் கட்டுரை தொண்டை மண்டல துளுவ வேளாளர் பள்ளிப் பொழிவு. நிறைவு வ.உ.சி. படத்திறப்பு. சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாட்டில் நிகழ்த்தியது. திரு.வி.க. மாநாட்டுப் பொழிவுகள் அவரால் வரையப்பட்ட எழுத்துப் பொழிவுகள், அவை விளக்கம் - பொழிவுத் தொண்டு - நன்றி பாராட்டல் என்பனவற்றைத் தவறாமல் வழங்கும். இக்கட்டுரை கள் செய்தித் தொகுப்பு அளவில் அமைகின்றன. அவை விளிப்புக் கொண்டும்கொள்ளாதும் உள்ளன.*

*திரு.வி.க. எழுத்துப் பொழிவுக்கும் பேச்சுப்பொழிவுக்கும் வேறுபாடு இரா. இப் பொழிவுக் கட்டுரைகள் திரு.வி.க.வின் உணர்வு மேம்பாட்டையும் உரையடுக்கையும் ஓரளவாலேயே காட்ட வல்லனவாய் அமைகின்றன.*

*தம் சொந்தக் கலை, 'பட்டினிப் பட்டாளத்தை ஒழிக்கும் கலை' என்று கூறுவது வறுமையிலா வாழ்வின் தேவையைக்*

காட்டும் கண்ணாடியாம். கலையை வளர்ப்பதே உண்மையான சமயம் என்கிறார். குழந்தைகளின் முகமே ஒரு கலை என்பவர் குழந்தையுள்ளத்தவராகத் தானே இருப்பார்!

பச்சையப்பன் மன்றத்தில் , 'மன்று, மரத்தடி' என்பதை விளக்கிச் செயற்கை மாடி மன்றுகளைச் சுட்டுகிறார். எந்த நாட்டில் சட்டங்கள் மிகுதியாகின்றனவோ அந்த நாட்டிலே, மக்கள் மனம் பண்படவில்லை என்பது புலனாகும் என்கிறார். "மிகு பொருள் வேட்கை அமைதியை ஆக்காது. மக்களுக்குப் பயன்படாத அறிவியல் அறிவியல் அன்று; என்பவற்றைச் சான்றுகளுடன் விளக்குகிறார்.

"தமிழராகிய நாம் இராமலிங்க அடிகளை அணித்தே உள்ள ஆந்திரத்திற்கும் அனுப்பினோம் இல்லை" என்பதில் திரு.வி.க. கொண்ட வள்ளலார் உள்ளம் புலப்படுகிறது. உலகப் பெருமக்கள் வரிசையில் வைத்து வள்ளலாரைக் காணும் உள்ளம் திரு.வி.க. உள்ளம்.

"மார்க்சீயம் இராமலிங்கீயத்துள் அடங்கும்: இராம லிங்கீயம் மார்க்சீயத்தைக் கடந்து விஞ்சி நிற்கும்' என்கிறார். காலமெல்லாம் தொழிலாளர் தொண்டிலே ஊன்றி நின்ற திரு.வி.க. 'வள்ளலார் புத்துலகச் சிற்பி' என்பதை ஆணையிட்டு மொழிகிறார் திரு.வி.க. 'நாஸ்திகத்தைப் பரப்பும் ஆசிரியர்களை நீக்கவேண்டும்' என்று புதுச்சட்டம் ஒன்று பிறந்திருக்கிறது. சட்டத்தால் தடுப்பது அறியாமை - அநாகரிகம் - என்பேன். சட்டம் ஒன்றாலே எதையும் வெல்ல முடியாது. இன்று ஆஸ்திக ஆட்சி சட்டத்தால் தடுக்கிறது. நாளை நாஸ்திக ஆட்சி வந்தால் ' ஆஸ்திகம் கூடாது' என்று சட்டம் போடுகிறது. இது தவறு. கடவுள் இல்லை என்றால் காட்ட வேண்டும். சயன்ஸ் மூலமாகக் காட்டலாமே என்கிறார். 'நல்ல சமயம் நாத்திகம் வெறாது என்னும் கொள்கையர் அன்றிப், போலிச் சமயத்தார் - சடங்குச் சமயத்தார் ஒப்புவாரோ இதனை?

"இருபிடி யூண் வழங்கினால் உழவுக்கு முதல் குறையு மென்று வளர்த்த பொருளைக் கள்ள மார்க்கட்டுக் காசை - பேயின் விழாவுக்கு வீணாக்குகின்றனர். தங்க மயில் வாகனம், வெள்ளி ரிஷபம், புஷ்ப விமானம், பொய்க்கால் குதிரை, மேளக்கச்சேரி, வாண வேடிக்கை முதலான வற்றிற்குப் பணத்தைப் பாழாக்குகின்றனர். இவையெல்லாம் பேயின் விழா அல்லாமல் வேறென்ன? உயிர்க்கிரங்கும் கடவுள் உண்மையாக இவற்றை யெல்லாம் கண்டு உளம்பூரிப்பாரா?" என வினாவி, 'மழவுக்கும் ஒருபிடி சோறு' என்னும் வள்ளலார் பாடலை எடுத்துக் காட்டு கிறார்.

துளுவ வேளாளர் பாடசாலையில் உயிர்த்தொண்டு என்னும் தலைப்பில் பொழிகிறார் திரு.வி.க.

சிற்றூர் மாணவர், நகர மாணவர் உடல்நலங்களைப் பற்றி ஆய்கிறார். சூரிய வெளிச்சம் பட்டால் அழகொழுகும் என்றும், தலையில் பச்சை வண்ணத் துணி கட்டிக் கொண்டால் கதிரொளியை வாங்கித் தந்து நலம் செய்யும் என்றும் வலியுறுத்துகிறார். நரையை மாற்றிக் கறுப்பாக்கும் முயற்சியைக் கூறி நகையாடுகிறார். தீட்டிய நல்ல வெள்ளைப் பச்சரிசி உணவைப் பூனையும் நாயும் கூடத் தொடா என்று கூறும் திரு.வி.க. நன்கு தீட்டாத அரிசியை ஆக்கி உண்ண ஏவுகிறார். தயிர் உண்ணும் நலத்தை எடுத்துரைக்கிறார். பதவிப்பித்து அற்ற தொண்டுள்ளத்தை அவாவ உரைக்கிறார். நீண்ட நாள் வாழ்ந்து உயிர்த் தொண்டாற்ற வாழ்த்திப் பொழிவை நிறைக்கிறார்.

நிறைவுக் கட்டுரை வ.உ.சி படத்திறப்புப் பொழிவு. அதில், தாம் எக்கட்சிச் சார்பிலும் இல்லாதவன் எனத் தம்மைச் சுட்டுகிறார். அதனால் ஏற்படும் பழிப்பையும் பண்பாடாக்கி மொழிகிறார்.

“சிலர் நினைக்கிறார்கள், ‘திரு.வி.க.வுக்கு ஒரு கட்சி கிடையாது. ஒரு கொள்கை கிடையாது. எங்கும் போவார்; எவர் படத்தையும் திறப்பார்’ என்று. எனக்குக் கொள்கையுண்டு. என் கொள்கை என் கையில் இருக்கிறது. ஏழை மக்கள் கையில் இருக்கிறது. பாட்டாளி மக்கள் கையில் இருக்கிறது. நான் சாதி, மத, நிற, மொழி, நாடு முதலிய எல்லாப் பேதங்களையும் கடந்தவன். பொதுமக்களின் சுகவாழ்வுதான் எனது குறிக்கோள். ஒவ்வொரு மனிதனையும் சுயேச்சையுடன் வாழ, உயர்த்த, எக்கட்சி பாடுபட்டாலும், அங்கெல்லாம் நான்போவேன், வருவேன், பாடுபடுவேன்” என்கிறார். வ.உ.சி. அறவாள் வைத்திருப்பார். அதுதான் திருக்குறள் வாள். திருக்குறளின் உண்மைகளை அறியாத கேட்டால்தான், நாடு தன் சிறப்பை இழந்தது என்கிறார். “வடநாட்டாரால் திணிக்கப்பட்ட போலித் தியாகம், தமிழர்களின் நாகரிகத்தையும் கலைப்பண்பையும் பாழ்படுத்தி விட்டது என்று கூறும் திரு.வி.க. நமது பொக்கிச மான திருக்குறளிலிருந்து காதல் மணவாழ்க்கை ஆகியவற்றை அகற்றிவிட வேண்டும் என்று கூடச் சொல்லும் அளவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. தமிழர்களின் பண்பு நம் மந்திரியாருக்குத் தெரியாது என்றுதான் நினைக்கிறேன் என்கிறார். வ.உ.சி. தன்னம்பிக்கைத் தோன்றல்; நமக்கு வடவர் கண்காணிப்புத் தேவையில்லை என்கிறார்.

வெள்ளையனுக்குத் துணையாய் இருந்துகொண்டு வடநாட்டுப் பாசிசம் நம்மை ஆட்டிப் படைக்கின்றது. அதற்கு இடம் தாராதே! தாராதே! தாராதே! வடநாட்டுப் பாசிசத்தை ஒழிப்பதுதான் எந்தக் கழகமாயிருந்தாலும் அக்கழக்கத்தின் முதல் வேலையாக இருக்க வேண்டும் என்கிறார். மேலும் பாசிசப் படேலிசத்தை முறியடிப்பதே நம்மை முன்னோக்கி யுள்ள மாபெரும் பணியாகும் என முழங்குகிறார்.

பழுத்த தொண்டின் பட்டறிவு விளக்கம் என்னத் தக்க வீறுமிக்க உரையாற்றும் திரு.வி.க, 'தமிழ்நாடு தமிழருக்கே' 'திராவிடநாடு திராவிடருக்கே' என்பதுதான் முடிவு என்கிறார்.

திரு.வி.க. கருத்துகள், 'இளமை விருந்தா?', 'முதுமை உளறலா?' என அவர் நூற்பெயராலேயே சிந்திக்க வேண்டிய சீரிய கொள்கைகளாம்!

திரு.வி.க. நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் பயன் பாட்டால் அவர்தம் நூல்கள், கட்டுரை கள் ஆகிய அனைத்துப் படைப்புகளும் 'திரு.வி.க. தமிழ்க் கொடை' என்னும் வரிசையில் வெளிப்படுகின்றன.

திரு.வி.க. நூல்களையும் கட்டுரைகளையும் ஒருமொத்த மாகப் பெறும்பேறு இதுகாறும் தமிழ்மண்ணுக்கு வாய்க்க வில்லை. அவர்வாழ்ந்த நாளிலேயே சிலநூல்கள் கிட்டும்; சிலநூல்கள் கிட்டா! 'தேசபக்தன்' 'நவசக்தி' யில் வந்த கட்டுரை களுள் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலவற்றையன்றி முற்றாகப் பெறும் பேறோ அறவே வாய்த்திலது. திரு.வி.க. வழங்கிய வாழ்த்து, அணிந்துரை முதலியனவும் தொகுத்தளிக்கப் பெற வில்லை. இவற்றையெல்லாம் தனிப்பெருஞ் சீரிய பதிப்பில் ஒருமொத்தமாக வழங்கும் பெருமையைக் கொள்பவர் **தமிழ்மண் பதிப்பக நிறுவனர் கோ.இளவழகனார் ஆவர்**.

பாவாணர் நூல்கள், ந.சி.க.நூல்கள், அப்பாத்துரையார் நூல்கள், இராகவனார் நூல்கள், அகராதிப் பதிப்புகள் எனத் தொகுதி தொகுதிகளாக வெளியிட்டு, அவ்வெளியீட்டுத் துறையின் வழியே தமிழ்மொழி, தமிழின மீட்சிப் பணிக்குத் தம்மை முழுவதாக ஒப்படைத்துப் பணியாற்றும் இளவழகனார் திரு.வி.க. தமிழ்க் கொடைத் தொகுதிகளை வெளியிடுதல் தமிழகம் பெற்ற பெரும் பேறேயாம். வாழிய அவர்தம் தொண்டு! வாழியர் அவர்தம் தொண்டுக்குத் துணையாவார்!

இன்ப அன்புடன்,
**இரா. இளங்குமரன்.**

# பொருளடக்கம்


நுழைவுரை v

கொடையுரை ix

**நூல்**

**தேசபக்தாமிர்தம்**

முன்னுரை 2

தெய்வபக்தி 5

இராஜ பக்தி 8

தேசபக்தன் 10

'தேசபக்த சமாஜம்' 12

இந்தியாவும் சமயமும் 16

இந்தியர் சமயம் 19

மோட்சானந்தமும் சுயஆட்சியும் 24

மனித முயற்சியோ? தெய்வ முயற்சியோ? 27

உலகநிலை 31

வேண்டுவது எது?

ஆத்மசக்தியா? தேகசக்தியா? 36

நாகரிகம் 39

அந்தணர் இல்லையோ? 43

சமயச் சபைகள் 46

ஹிந்து தேவாலயங்கள் (அ) 50

ஹிந்து தேவாலயங்கள் (ஆ) 53

ஹிந்து தேவாலயங்கள் (இ) 57

மடாதிபதிகள் 61

வேதாந்திகள் என் செய்கிறார்கள்? 64

இந்தியக் கிறிஸ்தவர்கள் 70

இந்தியாவில் கல்விமுறை 72

நாட்டுக் கல்வியும் நமது கடமையும் 75
பாரததேவி! உன் கல்வியெங்கே? 78
பாஷை வளர்வதெப்படி? 82
நாட்டுக்கல்வி நிதி யாருக்குப் பயன்பட வேண்டும்?85
தாய்மொழி 88
திராவிட மொழிகள் 91
தமிழ்ப்புலவர்கள் 95
தமிழுஞ் சுய ஆட்சியும் 99
தமிழ்ப்பண்டிதர் மகாநாடு 102
தென்னிந்தியாவும் தற்கால எழுச்சியும் 104
கல்வியும் மாணாக்கரும் 107
சர்வகலாசாலை 109
நாடகம் 112
தாழ்ந்த வகுப்பார் 115
தாழ்ந்த வகுப்பாருந் திலகரும் 118
பிராமணரும் பஞ்சமரும் 121
யாருக்காக வாழவேண்டும்? 123
நமது வேலை 126
செல்வத்தைச் செலவழிக்கும்
வழியும் காங்கரஸ் வேலையும் 129
பூலோக நரகம் 132
இந்தியாவில் சுகாதாரம் 135
ஆசார சீர்திருத்தம் 139
மிஸ்டர் பேடலும் விவாகமும் 142
இந்தியாவில் பெண்மக்கள் நிலை 146
இந்தியாவும் பெண்பாலரும் 149
தமிழ் நாட்டுப் பெண்மக்கள் 152
பெண்மக்கள் சுதந்திரம் 155
இந்தியாவும் பெண்மக்களும் 159
பெண்மக்கள் நிலை 162
பெண்மக்களும் தேசபக்தியும் 166
தொழிலாளர் சங்கத்தின் அவசியம் 171

சென்னையும் தொழிலாளரும் 173
தொழிலாளர் கூட்ட அமைப்பு 176
தொழிலாளரும் ஜனத்தலைவரும் 178
தொழிலாளர் இயக்கம் 183
முதலாளிகளும் தொழிலாளிகளும் 185
தொழிற்சாலைகள் அமைப்பு 190
அச்சுவேலை 193
அரசியற் பாக்கள் 196

**என் கடன் பணி செய்து கிடப்பதே**

முன்னுரை 203
1. தோற்றுவாய் 207
2. என் - (நான்-யான்) 210
3. கடன் 219
4. பணி 221
5. செய்து கிடப்பதே 245
6. முடிவுரை 248

**தமிழ்நாட்டுச் செல்வம்**

தமிழ்நாட்டுச் செல்வம் 253

**சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து**

முன்னுரை 268
வாலிப நாடார் இரண்டாவது மகாநாடு; ..
(அருப்புக்கோட்டையில் கூடியது)
- 1928 வருடம் ஜூலை மாதம் 5ஆம் நாள் 271
யாழ்பாண மாணாக்கர் மகாநாடு
(காங்கேயன் துறையில் கூடியது)
-1929ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 10, 11, 12ஆம் ..
நாட்கள்- 303
தமிழ் மாணாக்கர் மகாநாடு
(துறையூரில் கூடியது)
- 1932 ஆகஸ்டு 6ஆம் நாள் - 328

**தமிழ்க் கலை**

*1. தமிழ்க் கலை 355*
*2. மாணவரும் தமிழும் 360*
*3. வள்ளலாரும் சீர்திருத்தமும் 364*
*4. வள்ளலார் திருவுள்ளம் 372*
*5. உயிர்த்தொண்டு 375*
*6. வ.உ. சிதம்பரனார் 380*
*7. திறப்பு மொழி 384*

# தேசபக்தாமிர்தம்

(1919)

# முன்னுரை

***"அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும்***
***குன்றே யனையா-! என்னையாட் கொண்டபோதே***
***கொண்டிலையோ***
***இன்றோ ரிடையூறு எனக்குண்டோ எண்டோள்***
***முக்கண்எம்மானே!***
***நன்றே செ-வா- பிழைசெ-வா- நானோ இதற்கு நாயகமே."***
-திருவாசகம்.

*தெ-வபக்தி, இராஜபக்தி, தேசபக்தி என்னும் மூன்றனை யும் வளர்க்கப் பிங்கள கார்த்திகைமீ 22உ (7-12-1917) தோன்றிய 'தேசபக்தன்' ஆசிரிய பீடத்திருந்து யான் இதுகாறும் எழுதி யுள்ள கட்டுரைகளிற் சிலவற்றைத் திரட்டிப் புத்தகவடிவ மாக்கி, அதைத் தமிழ்நாட்டில் உலவச் செ-யவேண்டுமென்று சில நண்பர்கள் என்னை நேரிற் கேட்டுக் கொண்டார்கள்; சிலர் எனக்குக் கடிதம் விடுத்தனர். நண்பர்கள் விரும்பிய வாறே 'தேசபக்த'னில் யான் எழுதிவரூஉம் கட்டுரைகளிற் சில வற்றைத் திரட்டிப் பகுதி பகுதியாக வெளியிடவேண்டு மென்ற எண்ணம் எனக்கும் உதயமாயிற்று.*

*'தேசபக்த'னில் யான் எழுதிவரூஉங் கட்டுரைகள் அடங்கும் புத்தகத்துக்கு எப்பெயர் கொடுக்கலாம் என்று சிறிதுநேரம் சிந்தித்தேன். அச்சிறிது நேரத்திற்குள் '**தேசபக்தாமிர்தம்**' என்னும் பெயர் என்னுள்ளத்தில் பரிணமித்தது. அப்பெயரே இந்நூலுக்கு மகுடமாகச் சூடப்பட்டது.*

*'தேசபக்தன்' அரசியல் தினப்பதிப்புப் பத்திரிகையாக லான், அதில் எழுதப்படும் விடயங்கள் பல்வேறு எழுவாயைக் கொண்டிருப்பினும், அவையாவும் அரசியற் பொருளென்னும் ஓர் இறுவாயைக் குறிக்கொண்டு நிற்றல் கவனிக்கற்பாலது. அரசியல் தினப்பதிப்புப் பத்திரிகையில் எழுதப்படுந் தலையங் கங்களும், பிற ஆசிரியக் குறிப்புக்களும் ஒன்றோடொன்று இயைபு பெறா. அரசியல் தினப்பதிப்புப் பத்திரிகைகளில் இன்றொரு விடயம் எழுதப்படும்; நாளை மற்றொரு விடயம்*

எழுதப்படும்; நாளை அன்றைக்கு வேறொரு விடயம் எழுதப் படும். ஒன்றே பன்முறையும் எழுதப்படுவதுண்டு. வேளைக் கேற்ற பொருள்கள் எழுதப்படுதலால், அவை யொன்றோ டொன்று தொடர்புடையன வாதல் அருமை. இதைக் குறிப் பிடவே ஒவ்வொரு கட்டுரை இறுதியிலும் அது வெளிவந்த தேதி பொறிக்கப்பட்டிருக்கிறது. கட்டுரைகள் ஒன்றோடொன்று முறைப்பாட்டிற்கு இயைபு பெறாவிடினும், ஒல்லும்வகை சிற்சில கருத்துக்களையொட்டி அவைகளை ஒருவாறு முறைப் படுத்திக் கோவை செ-திருக்கிறேன். அம்முறைப்பாடு ஒழுங்கு பட்ட இயைபுடையதன்று என்பதை ஈண்டுக் குறிப்பிடு கிறேன்.

பண்டைத் தமிழ் மக்கள் உரைநடையில் எனக்குப் பெரும் பற்றுண்டு. பிற மொழிக் கலப்பின்றித் தமிழ் பேசல்வேண்டும், எழுதல்வேண்டுமென்னும் ஆர்வமும் எனக்குண்டு. அப்பற்றும் அவ்வார்வமும் என்னளவில் கட்டுப்பட்டுக் கிடப்பதை நோக்குழி வீட்டின்பத்தில் வெறுப்பும், தமிழ் நாட்டில் பல முறை பிறவி தாங்கித் தொண்டு புரிவதில் விருப்பும் எனக்கு நிகழ்கின்றன. யான் தமிழ்மொழிமீது கொண்டுள்ள எண்ணம் முற்றுநாள் எந்நாளோ தெரியவில்லை. அதற்கு ஆண்டவன் அருளும், தமிழ் மக்கள் ஒற்றுமையும் வேண்டும்.

செவ்விய தமிழ் நடை, தமிழ் நாட்டிலுள்ள பல்லோர்க்கு இதுபோழ்து பயன்படாதென்று கருதித் 'தேசபக்த'னுக்கெனச் சிறப்பாக ஒருவகை உரை நடையைக் கொண்டுள்ளேன். இதுகாலைத் தமிழ்நாட்டு வழக்கிலுள்ள பிறமொழிக் குறியீடு களையும், இக்கால வழக்குச் சொற்களையும், ஆன்றோராட்சி பெறாத சில முறைகளையும் பண்டைத் தமிழ்மக்கள் கோலிய வரம்பிற்குப் பெரிதும் முரணாதவாறு ஆண்டு வருகின்றேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கென ஒரு மாதப் பத்திரிகை யும், சமயத்துக்கென ஒரு மாதப் பத்திரிகையும் நடாத்தவேண்டு மென்னும் பேரவா நாடோறும் என் பிடரைப் பிடித்து உந்திக் கொண்டேயிருக்கிறது. பொருட் செல்வப் பேறு பெறாத யான் என்செ-யவல்லேன்!

'தேசபக்தாமிர்த'த்தை வாசிக்கும் அன்பர்களுக்கு, 'நான்' 'யான்' என்னுந் தன்மை ஒருமைச் சொற்களுக்குப் பதிலாக நாம்' 'யாம்' என்னும் தன்மைப் பன்மைச் சொற்களைப் பத்திரிகாசிரியர்கள் ஆளும் வழக்குடைமையை நினைவூட்டு கிறேன்.

தினப்பதிப்புப் பத்திரிகையில் விடயங்கள் எழுதப்படும் வேகத்தையும், பிழை திருத்தப்படும் வேகத்தையும் உணர்ந் தோர் என்மீது எவ்வகைக் குற்றத்தையுஞ் சுமத்த ஒருப்படார்.

'தேசபக்தாமிர்தம்' ஒவ்வொரு தெ-வபக்தர்களிடத் தும், இராஜ பக்தர்களிடத்தும், தேச பக்தர்களிடத்தும் பொலிய வேண்டுமென்பது எனது கோரிக்கை. கட்டுரை (Composition)ப் பரீட்சைக்குச் செல்லும் மாணாக்கர்களுக்குத் 'தேசபக்தாமிர்தம்' பெருந்துணைக் கருவியாயிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. 'தேசபக்தாமிர்தம்' பெரிதும் மாணாக்கர் பொருட்டாகவே வெளியிடப்பட்டது.

இப்பகுதி, சமயப்பெருமை, தமிழ்மொழி மாண்பு, ஒழுக்கம், பரோபகாரம், தாழ்ந்தவகுப்பார் முன்னேற்றம், பெண்மக்கள் உரிமை, தொழிலாளர் இயக்கம் முதலிய விடயங்கள் கொண்டிருக்கிறது.

*இராயப்பேட்டை,*
*1-5-1919.* **திரு.வி.க.**

# தெய்வபக்தி

தெ-வமென்பது ஒருவரால் சிருஷ்டிக்கப்படாதது; என்றும் உள்ளது; என்றும் மாறாதது; உலகுயிர்களிற் கலந்துங் கலவாமலிருப்பது. அதனைச் சிலர் சிவமென்றும், சிலர் விஷ்ணுவென்றும், சிலர் புத்தரென்றும், சிலர் ஜிஹோவா என்றும், சிலர் அல்லா என்றுங் கூறுவர். அப்பொருளை வேறு பல நாமங்களால் வழிபடுவோரும் உளர். இங்ஙனம் உலகத்து மக்கள் கடவுளுக்குப் பலவேறு நாமங்களும் பலவேறு வடிவங் களுங் கற்பித்து அவரை வழிபடினும், அவரொருவரே உயிர் களின் அறிவாற்றலுக்குத் தக்கவாறு அவரவர் கருதும் நாம ரூபியாகி வழிபாட்டை யேற்றருள்கின்றனரென்பது அறிவு நூற் கொள்கை.

***"வாது செ-து மயங்கு மனத்தரா-***
***யாது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்!***
***யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்***
***மாதேவ னலால் தேவர்மற் றில்லையே."*** -தேவாரம்.

***"அப்பனை நந்தியை ஆரா அமுதினை***
***ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை***
***எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்***
***அப்பரி சீசன் அருள்பெற லாமே."*** -திருமந்திரம்.

இத்திருவாக்குகளால் எல்லாச் சமயத்தவர்களும் வழிபடுங் கடவுள் ஒருவரே யென்பது நன்கு புலனாகிறது. இவ்வொரு கடவுளை அடைந்தின்புற, ஆன்மாக்கள் கடைப் பிடித்தொழுகும் மார்க்கங்கள் பல. அம்மார்க்கங்களே உலகத் தில் பலவகைச் சமயங்களாக நிலைத்து வழங்கி வருகின்றன. அவ்வொரு கடவுள் அன்பாக விளங்குகின்றனர் என்பதை யெல்லாச் சமயத்தவருங் கொள்வர். அன்பே கடவுள் என்னுங் கொள்கையை மறுப்பாரில்லை. அன்பே இறைவன் என்பதை,

***"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின்***
***வழியடைத் தமுதே***
***ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி யுள்ளவா***
***காணவந் தருளா-***

***தேறலின் தெளிவே சிவபரத் தரசே திருப்பெருந்***
***துறையுறை சிவனே***
***ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே***
***யென்னுடை யன்பே"***

என வரூஉம் மாணிக்கவாசகர் திருவாக்கானும்,

***"அன்புஞ்சிவமும் இரண்டென்ப ரறிவிலார்***
***அன்பே சிவமாவ தாரு மறிகிலார்***
***அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்***
***அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே"***

என வரூஉந் திருமூலர் திருவாக்கானும் உணர்க.

இனி அன்பு மயமாக உள்ள கடவுளை அடைவதற்குப் பல நெறிகளிருப்பினும், அவைகளுள் அன்பு நெறியே சிறந்த தென்பது அறிவுடையோர் கொள்கை. இது,

***"பத்திவலையிற் படுவோன் காண்க"***

எனவும்,

***"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்***
***பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறுவண்ணஞ்***
***சித்தமலங் கழிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட***
***அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"***

எனவும்,

***"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்***
***பொன்போல் மேனி பொரிய வறுப்பினும்***
***அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி***
***என்பொன் மணியை யெ-த வொண்ணாதே"***

எனவும் வரூஉம் ஆன்றோர் அருள்வாக்குகளால் வலியுறுத்தப் படுதல் காண்க.

தெ-வம் ஒன்று உண்டு என்னுங் கொள்கையையும், அஃதன்புமயமாக இருப்பதென்னும் உணர்ச்சியையும், அதனை அடைவதற்குரிய நெறி அன்புநெறி என்பதையும் உலகத்தார்க்கு முதல்முதல் அறிவுறுத்தியது நமது இந்திய நாடேயாகும். இந்த நாட்டில் தெ-வபக்தியிற் சிறந்து இன்பவாழ்வில் திளைத்திருப்போர் தொகை அளவிறந்து நிற்கும். ஒவ்வோ ரில்லமும் கைலாயமாகவும், வைகுந்தமாகவும், பரலோக மாகவும் விளங்கியிருந்த்தென்பது உயர்வு நவிற்சி யாகாது. சமீப காலத்திலும் வடக்கே ஸ்ரீமத் - இராம கிருஷ்ணாவும், தெற்கே ஸ்ரீமத் - இராமலிங்க சுவாமிகளும் அன்புவழி நின்று

இன்பவாழ்வு பெற்றிருக்கின்றார்கள். பக்தி வடிவமே பரத கண்டமெனலாகும்.

இத்தகைய பரத கண்டத்தினும் பக்தி நெறி அருகுங் காலந் தோன்றியிருக்கின்றது. இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு உயிராயிருப்பது தெ-வ பக்தி. தெ-வ பக்தியை அருகவிடாது காத்துக் கொள்வது நம் பெருங்கடமையாம்.

*(7-12-1917)*

# இராஜ பக்தி

இந்திய தேசம் தெ-வ பக்தியில் தலைசிறந்து விளங்குவது போல இராஜ பக்தியிலுந் தலை சிறந்து விளங்குவது. அரசனைக் காணுந் தெ-வமாகக் கருதுவது இந்தியர் வழக்கம். மன்னன் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் அம்சம் என்று இந் நாட்டு நூல்கள் கூறாநிற்கின்றன.

“திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்” என வைணவ வேதமும், “வாழ்க அந்தணர் வானவர் ஆன் இனம் - வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக” எனச் சைவவேதமும் முழங்குவதைக் காண்க.

பண்டைக் காலத்தில் ஒரு கூட்டத்தார் அரசன் நீண்ட காலம் உலகத்தில் வாழும் பொருட்டுத் தங்கள் தலைகளைத் தாங்களே வெட்டிக் கொள்ளும் வழக்கத்தை யுடையராயிருந்தனர். அவர்கள் ஆண்டிற் கொருமுறை காளி கோயிலை யடைந்து அரசன் நலத்தைக் கோரிப் பலவகைப் பூசை புரிவார்கள். அதுகாலை, அவருள் ஒரு சிலர் தங்கரத்தில் அரிவாள் தாங்கிக் காளியின் திரு முன்னின்று “எமது வேந்தன் நீண்டகாலம் உலகத்தில் வாழ்ந்து குடிகளுக்கு நன்மை செ-ய எமது வாழ்நாளைக் குறைத்துக் கொள்கிறோம்” என்று கூறித் தங்கள் கழுத்தைத் தாங்களே அறுத்துக் காளிக்குப் பலி யாவர். இவர், தம்வாழ்நாளைக் குறைத்துக் கொள்வதனால், அவ்வாழ்நாள் அரசன் வாழ்நாளோடு கலந்து அவனை நீண்ட நாள் வாழச்செ-யும் என்னுங் கருத்துக் கொண்டிருந்தனர் போலும். இவர் செயல் சிலருக்கு அநாகரிகம் போலத் தோன்றும். ஈண்டு நாம் அவர் தம் உட்கருத்தையே கவனித்தல் வேண்டும். அரசனுக்காகத் தம்முயிரையும் போக்கிக் கொள்ளும் இராஜ பக்தர்கள் வாழ்ந்த திருநாடு நம் இந்திய நாடு. அப்பெரியோர் பரம்பரையில் வந்தவர்கள் இந்தியர்கள் என்பது கவனிக்கத் தக்கது.

இப்பொழுது நமது இந்திய நாட்டை ஆள்கின்றவர் ஆங்கிலேயர். அவர் மற்றவர்கட்கு நன்மை செ-வதிலும், தேசத்தில் சமாதானத்தை நிலைநிறுத்துவதிலுந் திறமை வா-ந்தவர். அவர் தம் ஆட்சி எவ்வெவ்விடங்களில் நிலவுகின்றதோ

அவ்வவ்விடங்களில் ஒற்றுமை, சகோதரத்வம், சுதந்தரம், சத்தியம் ஆகிய இவைகள் நிலைபெற்று விளங்கும். பிரிட்டி கூட்டத்தார் நாட்டுக்கு நன்மை செ-பவராகலான், கடவுள் திருவருள் அவரைவிடுத்து நீங்குவதில்லை. கடவுளின் திரு வுள்ளம், பிரிட்டிஷார் மூலமாகத் தேசங்களுக்கு நலஞ்செ-ய வேண்டுமென்பது போலும். நமது பிரிட்டிஷார் உலகத்தில் பல பாகங்களை ஆண்டு வருகின்றனர். இதனைப் 'பரிட்டி ராஜ்ஜியத்தில் சூரியவொளி குன்றுவதில்லை' என்னும் முது மொழி வலியுறுத்தும்.

கருணையும் நீதியுங் கலந்தோங்குமாறு பிரிட்டிஷ் ஆட்சியைச் செங்கோல் தாங்கிப் புரிந்துவருபவர் மன்னர் மன்னராகிய ஐந்தாம் ஜார்ஜ் என்பவர். அப்பெருமான் இந்தியாவிற்கு இருமுறை விஜயஞ்செ-து அன்பினாலும் அருளினாலும் நம்மை யாட்கொண்டனர். அவரது திருவுருவம் ஒவ்வோர் இந்தியருள்ளத்திலுங் கோயில் கொண்டிருக்கிறது. இந்தியர் லௌகிக காரியங்களிலும் வைதிக காரியங்களிலும் சக்கரவர்த்தியைப் பூசித்து வருகின்றனர். இராஜ பக்தி சிறக்கச் சிறக்க நாட்டிற்கு நன்மையும், நாகரிகமும் பெருகும். முன்னர்ச் சமயசம்பந்தமான பிரசங்கஞ் செ-வோர் கடவுள் வாழ்த்துக் கூறிப் பிரசங்கத்தைத் தொடங்குவது வழக்கம். இப்பொழுது சில உபந்நியாசகர்கள் கடவுள் வாழ்த்துக்குப்பின் அரச வாழ்த்துக் கூறித் தம் உபந்நியாசத்தைத் தொடங்குகின்றனர். எல்லா வழியிலும் நாளுக்குநாள் இந்தியாவில் இராஜ பக்தி பெருகாநிற்கின்றது. இராஜபக்தி யில்லாதவர்கள் தேசபக்தி யில்லாதவர்களென்பது எமது கொள்கை.

ஆங்கில ஆட்சி நீடூழி வாழ்க.

*(7-12-1918)*

# தேசபக்தன்

தெ-வ பக்திக்கும் இராஜ பக்திக்கும் அடிப்படையா யிருப்பது தேசபக்தி. தேசபக்தியாவது, தேசத்திலுள்ள உயிர்க ளிடத்து அன்பு செலுத்துவது. உயிர்களிடத்து அன்பு செலுத்து வது கடவுளிடத்து அன்பு செலுத்துவதாகும். அங்கிங்கெனாத படி யெங்கும் பிரகாசமாயுள்ள ஆண்டவன் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இடம் இரண்டு. ஒன்று படமாடுங் கோயில்; மற்றொன்று நடமாடுங்கோயில். படமாடுங் கோயி லாவது ஒரேயிடத்திலிருந்து கொண்டு நிழலைப் பரப்புவது (தாவரம்); நடமாடுங் கோயிலாவது அங்குமிங்கும் நடமாடும் உயிர்க்கூட்டம். இவ்விரு கோயில்களுள் நடமாடுங் கோயிலே மேன்மையுடையது. இவ்வுண்மை,

> ***“படமாடக் கோயில் பகவற் கொன்றீயின்***
> ***நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா***
> ***நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயின்***
> ***படமாடக் கோயில் பகவற் கங்காமே”***

என வருஉந் திருமூலர் திருவாக்கால் வலியுறுத்தப்படுதல் காண்க.

நடமாடுங் கோயில்களாகிய உயிர்களிடத்து அன்புரு வாகிய கடவுள் என்றும் நீங்கா துறைகின்றமையான், நூல்கள் இறைவனுக்குரிய எட்டு மூர்த்தங்களுள் சிறந்தது ஆத்ம மூர்த்தமெனக் கோஷிக்கின்றன. ஆகலான் ஆன்மாக்களுக்குச் செ-யப்படும் வழிபாடுக ளெல்லாம் இறைவனையே சேர்வன வாம். உயிர்களை வழிபடலுங் கடவுளை வழி படலு மொன்றே. இதுபற்றியே,

> ***“எவ்வுயிரு நீங்கா துறையும் இறைசிவன் என்று***
> ***எவ்வுயிர்க்கும் அன்பா யிரு.”***

என்று ஆன்றோருங் கூறிப்போந்தனர்.

இனி எல்லாம் வல்ல இறைவனருளால் தேசத்தை ஆள் கின்றவர் மன்னர் பெருமானார். அவர் காணுந் தெ-வ மென்பதை இராஜபக்தியிற் குறித்துக் காட்டியுள்ளோம். கடவுள் ஆணை உயிர்கள் தோறும் பொலிகின்றவாறு

மன்னர் ஆணையும் அவரால் ஆளப்படும் உயிர்கள்தோறும் பொலிந்து விளங்குகிறது. அரசர் பெருமான் ஓரிடத்திலிருப் பினும் அவர்தஞ் சக்தி உலகெங்கும் பரவி நிற்கிறது. அரச சக்தியில்லா நாடு பாழ்நாடாகும். அங்கே கொள்ளையும் கொலையும் ஆட்சிபுரியும். மன்னனொருவனைக் கொண்ட நாடு சஞ்சலமின்றிச் சமாதானத்தில் நிலைத்து இன்பநுகரும். தேச வாழ்வு அரச பக்தியிற் கலந்து நிற்பதொன்றாம். சுருங்கச் சொல்லின் அரசாட்சியின்றி உலகம் நன்கு நடைபெறாது. இதனால் தேசத்தினிடஞ் செலுத்தும் பக்தி மன்னரிடத்துஞ் செலுத்தும் பக்தியாகும்.

தேசபக்தி, கடவுள் பக்தியினின்றதல் இராஜபக்தியி னின்றாதல் வேறு பிரிந்து நிற்ப தொன்றன்று. இக்காரணம் பற்றியே இப்பத்திரிகைக்குத் ‘தேசபக்தன்’ என்னும் பெயரைச் சூட்டியிருக்கின்றோம். இத் ‘தேசபக்தன்’ ஈசுர பக்தியையும் இராஜபக்தியையும் பெரிதும் உடையவன்; அவையிரண்டை யும் உலகத்தாருக்கு நன்கு அறிவுறுத்துபவன்; உடல் வாழ்க்கைக்கு வேண்டப்படும் லௌகிக விடயங்களையும், உயிர் வாழ்க்கைக்கு வேண்டப்படும் வைதிக விடயங்களையும் அணிகலனாகத் தரிப்பவன்; சாதிபேதம் சமயச் சண்டை முதலியவற்றைச் சாந்த முறையால் கண்டித்துச் சகோதரத் தன்மையை வளர்ப்பவன்.

இந்திய தேசத்திலுள்ள பல ராஜதானிகளும் பொது நலத்திற் பெரும்பாலும் ஒற்றுமையாக உழைத்துவருகின்றன. நமது சென்னை ராஜதானியில் அத்தகைய ஒற்றுமையில்லை. இதற்குக் காரணம் என்ன? பெரும்பாலோர் சுய நலத்தைக் கருதி வாழ்வதும், உயர்ந்த வகுப்பார் தாழ்ந்த வகுப்பாரை யிழிவு படுத்துவதும், அதனால் தாழ்ந்த வகுப்பார் உயர்ந்த வகுப்பார்மீது சீற்றங்கொண்டு அவர்தஞ் செல்வாக்கை யறவே யொழிக்க வேண்டுமென முயல்வதும் பிறவுமாம். பிறப்பால் உயர்வு தாழ்வு ஏற்படல் வேண்டும், பரோபகாரத் தால் உயர்வு தாழ்வு என்பவை அறவே யொழிதல் வேண்டும். கல்வியால் உயர்வு தாழ்வு பரவல் வேண்டும். “இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்” என்னுங் கொள்கை செ-கையில் வரல்வேண்டும். இன்னோரன்ன கொள்கை களைத் தமிழ் மக்களிடையில் பரப்பி, இறைவன் படைப்புக் குட்பட்ட மனிதர்களெல்லாருஞ்சகோதரர்கள் என்னும் உணர்ச்சியை யெழுப்பி ஒற்றுமையை வளர்ப்பதே ‘தேசபக்த’ னின் முக்கிய நோக்கமாகும். சகோதரத்தன்மையை விரும்பும் எல்லோரும் ‘தேசபக்த’னை ஆதரிப்பாராக.

*(7-12-1917.)*

## ‘தேசபக்த சமாஜம்’

உலகத்திலேயுள்ள எல்லாச் சமயங்களும் பக்தியைப் பற்றியே பேசுகின்றன. பக்தியை வெறுக்குஞ் சமயம் உலகத்தில் இல்லை என்றே கூறலாம். எல்லாவித சித்திகளையும் பக்தியினால் அடையலாம். ஒருவன் தான் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டுமாயின், அவனிடத்தில் பக்தி நிரம்பியிருத்தல்வேண்டும். பக்தியில்லாத பிராணிகள் உலகத்தில் இல்லை. மரம், செடி, கொடி முதலிய ஓரறிவுயிர்களுக்கும் பக்தியுண்டு. பக்தி என்பது ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு வகையாக விளங்கிக் கொண்டிருக்கும். பக்தி யென்பது பொருளில் ஒன்றாயிருப்பினும் மனிதர்கள் அனுபவநிலையில் பல வேறு பொருள்போல் தோன்றும். உணர்வு என்பது எங்கெங்கே உண்டோ அங்கங்கெல்லாம் பக்தி நிகழ்ச்சி யுண்டு.

பக்தியை உலகத்தவர் பல திறமாகக் கொண்டிருக்கின்றனர். நாம் அதை மூன்றுவிதமாகப் பிரித்துப் ‘பக்தன்’ முதலிதழில் எழுதியிருக்கின்றோம். அவை தெ-வபக்தி, இராஜபக்தி, தேச பக்தி என்பன. முன்னிரண்டிற்கும் அடிப்படையாக இருப்பது பின்னதேயாகும். தேசபக்தி யில்லாதவனிடத்தில் தெ-வபக்தி யாதல், இராஜபக்தியாதல் இராது. மனிதர்கள் தெ-வபக்தி இராஜபக்தி உடையவர்களாக வேண்டுமாயின், முதலில் அவர்கள் தேசபக்தி யுடையவர்களாதல்வேண்டும். தேசபக்தியை வெறுத்துத் தெ-வபக்தியை மாத்திரம் கைக்கொள்கிறவன் போலித் தெ-வபக்தனேயாவன். தேகாத்ம வாதிகளே தேச பக்தியைக் குறை கூறுவார்கள். தேசபக்தியுள்ளவனே ஆத்ம ஞானியாவன். ஆனது பற்றித் தேசபக்தியை வளர்க்க வேண்டுவதே மக்கள் கடமையாகும்.

நமது பாரததேவியின்மாட்டுப் பக்தி செ-யப் பல சங்கங்கள் தோன்றியிருக்கின்றன அவைகளிற் சில ஊக்கமாக வேலை செ-கின்றன; பல உறங்கிக் கொண்டு கிடக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் காங்கரஸ் சார்பாக ஒவ்வொரு சங்கமிருக்கிறது. நமது சென்னை மாகாணத்திலும் காங்கரஸ் சார்பாக மாகாணக் காங்கரஸ் கூட்டம், மஹாஜனசபை

முதலிய சங்கங்களிருக்கின்றன. அவைகளிற் பெரும்பாலும் வக்கீல்களே சேர்ந்து ஒருவகைத் தேசபக்தியை வளர்த்து வருகின்றார்கள். **இவர்கள் செயல் பாரதமாதாவின் பந்தத்தை ஒழிப்பதாகாது.** இச்சங்கங்களில் சேர்ந்தவருள் பெரும்பாலோர் தேசபக்தி யின்னதென்றே அறியாதவர். இவர்கள் உண்மைத் தேசபக்தர்களைக் குறை கூறிக்கொண்டே யிருப்பார்கள். இவர்களால் தேசத்துக்குப் பெருநலம் விளையாதென்பது திண்ணம்.

சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அன்னை பெசண்ட் அம்மையார் தேசபக்தியை வளர்க்கும் பொருட்டுப் பெருங்கிளர்ச்சி செ-ததன் பயனாகப் பல விடங்களில் சுய ஆட்சிச் சங்கங்கள் ஏற்பட்டன. அவைகளிற் பெரும்பாலன தொடக்கத்தில் மன எழுச்சி கொண்டு உண்மைத் தேச பக்தியை வளர்த்துவந்தன. பாரதநாடு முழுவதும் தேசபக்தியே நிரம்பி யிருந்தது. சென்ற ஆண்டு தொட்டுச் சுய ஆட்சிச் சங்கங்களிற் பல உறங்கிவிட்டன. சுயஆட்சிச் சங்கங்களின் உறக்கத்தைப் பற்றிப் பல நண்பர்கள் பலமுறை 'பக்த்'னில் எழுதியதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இப்பொழுதுள்ள சுய ஆட்சிச் சங்கங்களாலும் தேசபக்தி வளர்வது அருமையென்றே கூறலாம். நமது நாட்டில் ஊர்கள்தோறும், தெருக்கள்தோறும், வீடுகள் தோறும் தேசபக்தி வளர்க்கவேண்டிய வழிகளைத் தேடவேண்டும்.

பாரதநாட்டில் பிறக்கும் மக்களுக்குப் பக்தியின் வாயிலாகவே உணர்ச்சி பிறப்பது வழக்கம். இவ்வுண்மை உணர்ந்த நம் முன்னோர்கள் ஈசுர பக்தியை வளர்க்கப் பல வழிகளைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவை ஆலயசேவை, திருவிழாக்கள், வேதபாராயணம், பஜனை, பலவகை வேடங்கள், மடங்கள் அமைப்பு முதலியனவாகும். பாரதநாட்டிற் பிறந்த மக்களைத் தேசபக்தர்களாகச் செ-விக்க வேண்டுமாயின், நம் முன்னோர் தெ-வபக்தி வளர்ச்சிக்குக் கைக்கொண்ட முறைகள் போன்றனவற்றையே நாமும் (தேசபக்தி வளர்ச்சிக்குக்) கைக் கொள்ளவேண்டும். இந்த யோசனையை, வாசா கைங்கர்யத் தால் போலித் தேசபக்தியை வளர்த்து வரும் சில பெரியோர் மறுப்பர் என்பது நிச்சயம். அவரை, இந்திய தேசமக்களின் தன்மையை யுணராதவரென நாம் ஒதுக்குவோம். தற்கால நாகரிக வழியாகத் தேசபக்தியை வளர்க்கவேண்டுமெனக் கூறுவோர் முயற்சியால் கிராமவாசிகளுக்கு எவ்வகைப் பயனும் விளையாதென்பது திண்ணம். இவர்கள் பேச்சு, பட்டணங் களிலுள்ள சில உத்தியோகஸ்தர்களுக்கும், மாணாக்கர்

களுக்குமே பயன்படுவதாகும். ஒரு கோயிலில் ஓர் உற்சவம் நடைபெற்றால் அதைக் காண எவ்வளவு ஜனங்கள் திரள் திரளாகச் செல்கின்றார்கள். திருவண்ணாமலையில் கார்த்திகை உற்சவத்திற்கும், சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவத்திற்கும், ஸ்ரீரங்கத்தில் ஏகாதசி உற்சவத்திற்கும் கூடும் கூட்டத்துக்கு அளவு உண்டோ? கோடிக்கணக்கான ஜனங்களன்றோ கூடுகி றார்கள். இதற்குக் காரணம் யாது? நம் முன்னோர்களின் அறிவு நுட்பமேயாகும். பல கோடி ஜனங்கள் ஒரே காலத்தில் ஓரிடத்தில் சேர்வதற்கு நம் முன்னோர்கள் குறிப்பிட்ட வழி களும் ஏற்பாடுகளும் போற்றத் தக்கனவே. நம் முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ச் செ-த ஏற்பாடுகள் இன்னும் நின்று பயன் தந்து கொண்டே யிருக்கின்றன. அவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதே நமது கடமை.

இப்பொழுது தமிழ் நாட்டளவில் தேசபக்தியை வளர்க்கு முறைகளை எல்லைப் படுத்துவோம். பண்டைக் காலத்தில் தெ-வபக்தியை வளர்த்தவர் பெரும்பாலும் முனிவரரே யாவர். அவர்கள் லௌகிக காரியங்களில் பெரிதும் தலை யிடுவதேயில்லை; வைதிக காரியங்களிலேயே தங்கள் காலத்தைக் கழித்து வந்தார்கள். அவர்களை இல்லறத்தார்கள் போஷித்து வந்தார்கள். அதுபோல இப்பொழுது தேசபக்தியை வளர்க்க ஒரு கூட்டத்தார் புறப்பட வேண்டும். அக்கூட்டத்தாருக்கு எவ்வகைப் பற்றும் இருத்தல் கூடாது. அவர்கள் தேசபக்தியை வளர்க்கும் ஒரு பற்றிலேயே பற்றுடையவர்களா யிருத்தல் வேண்டும். அவர்கள் ஒன்று கூடித் தேசபக்தியை வளர்க்க வேண்டிய முறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும். அவர்களை ஊரவரே போஷிக்கவேண்டும்.

முதல் முதல் இக்கூட்டம் தலைநகராகிய சென்னையில் சேர வேண்டும். அக்கூட்டம் 'தேசபக்த சமாஜம்' என்னும் பெயரால் அழைக்கப்பட வேண்டும். அச்சமாஜம் ஜன நெருக்க மில்லாத ஓரிடத்தில் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். ஆங்கே பாரததேவி திருவுருவம் பிரதிஷ்டை செ-யப்படவேண்டும்; தேசபக்தி யூட்டக்கூடிய உற்சவங்கள், பிரசங்கங்கள், பஜனைகள் முதலியன நடை பெறல்வேண்டும். ஜனங்களுக்குத் தேசபக்தி யில் ஆவேசம் உண்டாக்கக் கூடிய மற்றும் பல செயல்களையுஞ் செ-தல்வேண்டும். அச்சமாஜத்தில் சேர்வோர் கூட்டங் கூட்ட மாகக் கிராமங்கட்குச் சென்று வந்தேமாதர முழக்கத்தோடு தேசபக்தி ஊட்டக்கூடிய பாடல்களை இன்னிசைக் கருவி களுடன் பாடிக்கொண்டு உபந்நியாசங்கள் செ-யவேண்டும்.

இவ்வழி யொன்றே தமிழ் நாட்டில் தேச பக்தியை வளர்க்கத் தக்கதாகும். 'தேசபக்த சமாஜம்' ஏற்படின் அதிற் சேர்ந்து வேலை செ-ய எண்ணிறந்தோர் சித்தமாக இருக்கின்றனர். அவரைப் போஷிக்க முன்வருவோர் யாவர்? போஷிப்போர் ஏற்படின் தேச ஊழியஞ்செ-ய எண்ணிறந்தோர் ஏற்படுவர். நமது தமிழ் நாட்டில் செல்வர்களில்லையோ? மிராசுதாரர் களில்லையோ? ஜமீன்தாரர்களில்லையோ? பலரிருக்கின் றனர். அவரது செல்வம் கூத்துக்கும், குடிக்கும், பிற களியாடல் களுக்கும் செலவாகிறது. சென்னையில் ஜனத் தலைவர்க ளென்று பெயர் வைத்துக்கொண்டு மேடார் வண்டி யில் ஏறித் திரிவோர் பலர் இருக்கின்றனர். அவர்களிடத்தில் ஏராள மான பொருட் செல்வமிருக்கிறது. அவர்களாயினும் முன்வந்து நாம் குறிப்பிடும் வழி நின்று தேசபக்தியை வளர்க்க முன் வருதலாகாதோ? அவர்கள் ஒரு நாளும் வாரார் என்பது நிச்சயம்.

தமிழ்நாட்டிலுள்ள டாக்டர் வரதராஜலு நாயுடு போன்ற உண்மைத் தேசபக்தர்கள் ஏழைகள் உதவியைக் கொண்டே 'தேசபக்த சமாஜ' த்தை ஏற்படுத்த முயலல் வேண்டும்.

இன்று இத்தலையங்கத்தை வாசிப்போர் 'தேசபக்த சமாஜ'த்தின் அவசியத்தை நோக்கி ஒல்லும் வகை முயற்சி செ-வாரென நம்புகிறோம்.

ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார் மனம் வைத்தால் நாளைக்கே 'தேசபக்த சமாஜம்' தோன்றிவிடும் என்பதிற் சந்தேகமில்லை.

இன்று காலை பாரத தேவியின் திருவடியைச் சிந்தித்துக் கொண்டே எழுதிய இத்தலையங்கத்தால் தமிழ் நாட்டில் ஒருவகை உணர்ச்சி பிறக்குமென நம்புகிறோம்.

'தேசபக்தனை' வளர்க்க முன்வந்த யாம் 'தேசபக்த சமாஜ' த்துக்கும் கடமைப்பட்டு அடித்தொண்டு செ-ய முன்னிற்கின்றோம்.

வந்தே மாதரம்.

(11-10-1918)

# இந்தியாவும் சமயமும்

உலகத்திலே உள்ள தேசங்கள் பலவற்றுள்ளும் இந்தியா சமய உணர்ச்சியில் பேர் பெற்றது. சமய ஞானத்தை உலகத்துக்கு வழங்கியது இந்தியாவே. இந்தியர்கள் காலைமுதல் மாலைவரை செ-யும் கிரியைகள் யாவும் கடவுள் நினைவை ஊட்டுவனவாகவே யிருக்கின்றன. ஒவ்வோரிந்தியனும் படுக்கை யினின்றும் எழுந்தவுடனே கடவுளத் தியானஞ் செ-ய வேண்டுமென்னும் நியதியிருக்கிறது. நீராடும் போதும், உண்ணும் போதும், உறங்கும் போதும் இறைவன் நினைவே உண்டாகுமாறு மகாமந்திரங்களை உச்சரிக்க வேண்டுமென நூல்கள் கூறுகின்றன. அன்பு மயமாகவுள்ள ஓர் அரும் பொருளை இடையீடின்றி ஒருவன் நினைத்து வருவானாயின், அவன் உள்ளமும் அன்பு மயமாகும் என்பதிற் சந்தேகமில்லை. எவன் உள்ளத்தில் (மனத்தமுதாகிய) அன்பு உதயமாகிறதோ, அவன் மற்றவரை அன்பாகக் காண்கின்றான்; அவரிடத்தில் அன்பாகப் பேசுகின்றான். அவனிடத்தில் பொறாமை, கோபம், கடுஞ்சொல் முதலிய தீக்குணங்கள் தலைகாட்டா. மனிதனிடத்துள்ள பொறாமை முதலிய துர்க்குணங்கள் கெட்ட விடமே மோட்சலோகமாகும். அது சாயுச்சியமென வும், கைலாயமெனவும், வைகுந்த மெனவும், பரலோகமென வும், நிருவாண நிலையெனவும் வழங்கப்பெறும். இவை யாவும் ஒரே பொருளைக் குறிப்பனவே. இவை மனிதனுக்கு வேறாக உள்ளன என்று நினைப்பது அறியாமை. மனிதனது பூரண அன்பு நிலையே பேரின்பமென்பது அனுபவ ஞானி களின் கொள்கை.

இத்தகைய அன்புநிலைக்கு வழியாகவுள்ள கிரியைகள் இந்தியாவில் அருகிவிட்டன. கிரியைகளின் உண்மைப்பொருள் இறந்துபட்டமையான், இக்காலத்துச் சில அறிவாளிகளுக்கு அவை அறிவுடைச் செயல்களாகத் தோன்றுவதில்லை. சமய ஒழுக்கம், என்று இந்தியாவில் குன்றத் தொடங்கியதோ, அன்று தொட்டு இந்தியா வறுமைக்கும் பிணிக்கும் இரை யாகிக் கொண்டிருக்கிறது. வெளிவேஷமே சமய ஒழுக்கம் என்று நினைப்பது அறியாமை. கொலை, கள், களவு, காமம்,

பொ- என்னும் ஐந்து பாவங்களைச் செ-யாதிருத்தல் சமய ஒழுக்கத்துக்கு அடிகோலுவதாகும்.

சமய ஒழுக்கத்துக்கு அடிப்படையாவுள்ள ஐந்து பாவகங்கள் இப்பொழுது பொது தருமங்களாக அனுஷ்டிக்கப் படுகின்றன. அசோகர் ஆட்சியில் மிருகவேட்டையாடுதல் கூடாதென்ற ஒரு சட்டமிருந்ததாகத் தெரியவருகிறது. ஒவ்வொரு ஜீவப்பிராணியும் தானாகவே சாகுமட்டும் ஒருவரும் அதற்குத் தீங்கிழைக்கமாட்டார். இப்பொழுது மனிதர்கள் நிமித்தம் கொல்லப்படும் ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் அளவு முண்டோ? புத்தர் பிறந்த பாரதநாடு கொலைக்கு நிலைக் களமாயிருக் கின்றதே! என்ன கொடுமை!! பண்டைக்காலத்தில் சில தொழி லாளிகளே கள்ளருந்திக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது கற்றறிவாளரென்போரும் கள்ளினுங் கொடிய பானங்களை அருந்தி அறிவிழந்து வருவதை விரித்துரைக்க வேண்டுமோ? மிதமாகக் குடித்தல் உடலுக்குச் சுகமென்னுந் தீக்கோள் யாண்டும் பரவி வருகின்றது. குடி யில்லா விருந்துக் கச்சேரிக்கு இப்பொழுது பெருமையில்லை. வங்காளம் முதலிய தேசங் களில் வறுமையாலோ வேறு எக் காரணத்தாலோ ஜனங்கள் அடிக்கடி பிறருடைமையைக் கவர்கின்றார்கள். அரசாங்கத் தண்டனைக்குப் பயந்து பலர் களவாடாமல் இருக்கின்றனர். பிறர் உடைமையைக் களவாடல் பாவம் என்னுங் கொள்கை மாண்டுவிட்டது. காமக் கொடுமையை விரித்துரைக்க வேண்டு வது அநாவசியம். போலீஸ், கோர்ட்டு வழக்குகள் இதற்குச் சான்று கூறும். "பொ-யாமை பொ-யாமை ஆற்றின் அறம் பிற-செ-யாமை செ-யாமை நன்று" என்று திருவள்ளுவர் பொ-யாமையின் பெருமையை ஓதியிருக்கின்றார். பொ- பேசாதிருத்தல் என்னும் ஒரு தருமத்தை ஒருவன் கடைப்பிடித் தொழுகுவானாயின், அவனை எப்பாவங்களும் அணுகா. பொ-யே பாவங்களுக்குத் தா- தந்தை போன்றது. இப்பொழுது பொ- பேசப் பட்டம் பெற்று உலவுவோர் எத்தனையோ பேரிருக்கின்றனர். திருவள்ளுவர் குறளைச் சட்டமாகவும், எல்லாம் வல்ல இறைவனை நீதிபதியாகவும் கொண்டு வழி பட்டுவந்த காலம் மீண்டும் வருமோ?

நூலறிவால் மனிதன் பாவங்களைச் செ-யாமலிருக்க மாட்டான். இப்பொழுது புலாலுண்போர் கொல்லாமையைப் பற்றிப் பேசுகின்றார்; எழுதுகின்றார்; எத்தனையோ குடியர்கள் கள்ளுண்ணாமையைப் பற்றிப் பிரசங்கஞ் செ-கின்றார்கள். கள்ளன், களண் பெரும் பாவம் என்று பிறருக்குப் போதிக் கின்றன். விபசாரி கற்பைப்பற்றி மேடையிலேறி உபந்நியாசஞ்

செ-கின்றாள். பொ-பேசிப் பணம் பறிக்கும் பட்டதாரிகள் பொ-யாமை பற்றி விரிவுரை கூறுகின்றார்கள். இதனால் நூலறிவு மனிதன் ஒழுக்கத்திற்குத் துணை செ-யா தென்பது நிச்சயம். செ-கையுங் கூட்டுறவுமே ஒழுக்கத்துக்கு உயிர் போன்றவை.

இப்பொழுதுள்ள பாடசாலைகளால் மாணக்கர்களுக்குச் சமய ஒழுக்க உணர்ச்சிண்யுண்டாகாதென்பது திண்ணம். நாட்டுக் கல்லூரிகள் ஏற்படுத்தி, அவைகளில் மாணாக்கர் களுக்குச் சமய ஒழுக்கத்தைப் போதித்தல் வேண்டும். அப் பொழுது இந்தியாவில் பழைய சமய ஒழுக்கம் மீண்டும் உயிர் பெறும். இப்பொழுது சமய ஒழுக்கத்தை ஆபாசக்குப்பைகள் மூடிக்கொண்டிருக்கின்றன. இந்தியாவின் உயிர் சமயத்தில் அடங்கி யிருக்கிறது. சமய ஒழுக்க வளர்ச்சிக்காக முயலவேண்டு வது ஒவ்வோர் இந்தியர் கடமை. இதைப் பற்றி மற்றுமொரு முறை எழுதுவோம்.

*(5-3-1918.)*

# இந்தியர் சமயம்

உலகத்திலுள்ள தேசங்கள் பலவற்றுள்ளும் சமய ஞானத்தில் சிறந்து விளங்குவது இந்தியாவே. முதல் முதல் சமய ஞானத்தைப் பெற்றதும், அதை உலகத்துக்கு வழங்கியதும் இத்தேசமே. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உலகமெல்லாம் அறியாமையில் அமிழ்ந்து கிடந்தபோது, இந்தியா அறிவுப் பொருளை ஆரா-ந்து, அதன் உண்மை கண்டிருக்கிறது. ஒரு பேர் அறிவே யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கிறது என்னும் உண்மையை விளக்குவது வேதாந்தம். உபநிடதம் என்பதும் அதுவே. எல்லாச் சமயங்களுக்குந் தாயகமாக இருப்பது வேதாந்தம் ஒன்றே. உலகத்தில் எம்மூலையில் ஒரு கொள்கை புதிதாகத் தோன்றினாலும், அஃது உபநிடதத்தில் சொல்லப் பட்ட தாகவேயிருக்கும். உபநிடத உண்மையே இந்தியர் சமயம் என்பது.

இச்சமயம், இந்நாளில் இன்னவரால் உண்டாக்கப் பட்டது என்று கூறப் போதிய கருவியில்லை. சரித்திர காலத்துக்கு முன்னரே இக்கொள்கை இந்தியாவில் நிலவிய தாகத் தெரியவருகிறது. எல்லாச் சமயங்களிலும் இந்தியர் சமயம் மிகத் தொன்மையது.

இந்தியர் கொள்கையைப் பற்றிப் பலர் பலவாறு கூறுப. உண்மை விளங்கப் பெற்றவர்க்கு இந்தியர் சமயம் தஞ்சமய மாகத் தோன்றும். கொரானையும் உபநிடதத்தையும் வாசித்த ஒரு மகமதியனுக்கு வேற்றுமை யுணர்ச்சி தோன்றாது. விவலிய வேதத்தையும், உபநிடதத்தையும் ஆரா-ந்த கிறிஸ்தவ னொருவனுக்கு ஒற்றுமை உணர்ச்சியே புலனாகும். உபநிடதம் என்பது ஒரு சமயக் கொள்கையைத் தழுவுவதன்று. ஆன்மா அறியவேண்டிய உண்மை எதுவோ, அதையே உபநிடதங் கூறுகிறது. அவ்வுண்மையையே புத்தர் ஒரு காலத்தில் விளங்கச் செ-தனர். அவரைப் பின்பற்றினோர் பௌத்தரெனவும், அவரது சமயத்தைப் பௌத்த சமய மெனவும் பின்வந்தோர் வழங்கலாயினர். கிறிஸ்து நாதரும் தாங்கண்ட ஓர் உண்மையை உலகத்துக்கு அறிவுறுத்தினார். அவ்வுண்மை கிறிஸ்து சமயம்

எனப் பின்னர்ப் பெயர்பெற்றது. மகம்மது கண்ட உண்மை மகம்மது சமயம் என அழைக்கப்பட்டது.

உண்மை என்றும், யாண்டும் ஒன்றே. அதை எவரெவர் கண்டனரோ அவரவர் பெயரால் அது பெயர் பெற்று விட்டது. அக் குருமார்கள் கண்ட உண்மையையே ஒவ்வொரு வருங் காணவேண்டியவர். இவ்வுண்மை வடிவாக உள்ளதே உபநிடதம். இத்தகைய உபநிடதக் கொள்கையை எவர் சமயக் கொள்கையாகக் கூறுவது? அஃது ஒவ்வோர் ஆன்மாவின் முடிந்த கொள்கையாக விருக்கிறது. ஆத்ம விளக்கம் பெற்ற ஒவ்வொருவர் கொள்கையும் உபநிடதக் கொள்கையேயாம். இக்கொள்கை முதல் முதல் இந்தியாவில் பிறந்தமையால், இதனை இந்தியர் கொள்கை யெனண்ம், இந்தியர் சமயம் எனவும் அறிஞர் வழங்கி வருகின்றனர்.

இச் சமரசக் கொள்கை வசிட்டர், வியாசர், கண்ண பிரான், புத்தர் முதலியோரால் இந்நாட்டிலேயே விளக்கமாக விரித்தோதப்பட்டது. இவர் தங் கூற்றுக்களும் உபநிடதப் பொருளாகவே கொள்ளப்பட்டு வந்தன. உபநிடத உண்மை விளங்கப்பெறப் பல கிரியா முறைகள் ஏற்பட்டன. அவை நித்யானுஷ்டானம், ஆலய சேவை முதலியன. இவையாவும் மன ஒற்றுமைக்கும், இடையறாது இறைவனைத் தியானிப்ப தற்குஞ் சோபானமா யிருப்பவை. இவ் வனுஷ்டான முறைகளை விரித்தோதப் பன்னூல்கள் எழுந்தன. உபநிடத உண்மையைக் கைப்பற்றிப் பேரின்ப நெறியடைந்த பலர் சரித்திரங்களும் எழுதப்பட்டன. சங்கரர் முதலியோர் வியாச சூத்திரம், பகவத்கீதை முதலிய நன்னூல்களுக்குப் பேருரை கண்டனர். இவர் பாஷியக்காரர் எனப்படுவர். இவர் காலத்துக் கேற்ற வாறு முதனூலைத் தழுவித் தங்கருத்துக்களை வெளியிட் டனர். மூலநூல் ஒன்றாயிருப்பினும் இவர் தங்கருத்து மாறு பட்டிருப்பதற்குக் காரணமுண்டு. அது சரித்திர கால ஆரா-ச்சி யுடையோருக்கு நன்கு புலனாகும். ஜனங்களில் பெரும் பாலோர் முதனூல்மீது கருத்தைச் செலுத்தாது, உரைகள்மீது கருத்தைப் பதியவைத்து மாறுபடலாயினர். சமரசக் கொள்கை யொன்றே, பல கொள்கைபோலத் தோன்ற லாயிற்று. தத்தங் கொள்கையை நிறுத்த அவரவர் பலநூல்களை வெளியிட் டனர். அவையாவும் ஜீவபோதத்தால் எழுதப்பட்டவை. அவைகளை வாசிப்போரும் உபநிடதக் கொள்கையாகிய சமரசக் கொள்கையைத் தழுவாது ஜீவபோதக் கொள்கையைத் தழுவுவாராயினர். சமயாபிமானம் பலரையும் பற்றிக்

கொண்டது. சொற்சண்டை, பொருட் சண்டை, இலக்கிய இலக்கணச் சண்டை நாடு முழுவதும் பரவலாயின.

சைவ வைஷ்ணவச் சண்டை தோன்றலாயிற்று. சைவத்தில் பல பேதங்களும், வைஷ்ணவத்தில் பல பேதங்களும் உண்டாயின. இம்மதவாதிகள் ஒருவரோடொருவர் மல்யுத்தஞ் செ-வதை, காட்டில் மிருகத்தோடு மிருகம் முட்டிச் சண்டை செ-வதோடு ஒப்பிடலாம். அன்பு வடிவாகவுள்ள ஆண்டவனை அறிய மிருக உணர்ச்சி கொண்டு ஒருவரோடொருவர் மோதிக்கொள்வதோ? உயிர்களிடத்திலுள்ள கடவுளை யறிய உயிர்களைப் புண்படப் பேசுவது பொருத்தமோ? இச்சண்டைகளால் சமய உண்மைகள் உண்மைக்குள் மறைந்த மணிபோலாயின. புதிதாக இந்நாட்டில் போந்தவர்க்கு இந்நாட்டுச் சமயம் அநாகரிகச் சமயம்போல் தோன்றிற்று. ஒவ்வொருகால் ஞானிகள் இறைவனருளால் பல இடங்களில் அவதரித்து உபநிடதக் கொள்கையைப் பரப்பி வந்தார்கள். வந்தும் மதவாதிகள் சண்டை ஒழிந்தபாடில்லை. நமது தமிழ்நாட்டில் நால்வரும் பன்னிருவரும் தோன்றி உபநிடத உண்மைகள் மலியுமாறு தமிழ் வேதத்தை அருளிச் செ-திருக்கின்றனர். தமிழ்வேதப் பாசுரங்களைப் பொருள் தெரியாமல் ஓதினாலும் உள்ளங் குழைந்து குழைந்து உருகுமே. அத்தகைய என்புருக்கும் பாசுரங்களாலும் மதவாதிகளுக்கு நல்லறிவு உண்டாகவில்லை. அன்பு நெறிக்கும் ஞானோதயத்திற்கும் சோபானமாக உள்ள ஆலயங்கள் கள்ளர் குகைகளாக மாறின. மடங்கள் விலைமாதர்கள் உறைவிடமாயின. ஞானக் குறிகளாகிய சமயச் சின்னங்கள் குடியர்கள் ஆபரணங்களாயின.

இப்பொழுதுள்ள பாடசாலைகளில் சமய உண்மைகள் போதிக்கப் படுவதில்லை. உபநிடதக் கொள்கையின்னதென்றறியா மாணாக்கர்கள் சமய நூல்களையும், சமய பக்தர்களையும், ஆலயங்களையும், சின்னங்களையும் பழித்துக் கூறுகின்றார்கள். நித்தியா நுஷ்டானம் செத்தே போ-விட்டது. நித்தியானுஷ்டானத்தை உபதேசிக்குங் குருவிற்கே அதன் உண்மை தெரியாதெனில், அதனைக் கேட்கும் சீடனுக்கு அதன் உண்மை விளங்குமோ? அவன் அதை அனுஷ்டிக்க ஒருப்படுவனோ?

சில அறிவாளிகள் மூலையிலிருந்து கொண்டு “மேல் நாட்டுத் தத்துவ சாஸ்திரிகளாகிய கான்ட், ஸ்பைனோஜா, ஸ்பென்சர், ஷில்லர் முதலியோர் கொள்கைகள் நம் வேதாந்தத்தில் இருக்கின்றன. பல்லாயிரம் வருஷங்களுக்கு

முன்னர் நம்மவர் கண்ட உண்மை இப்பொழுது தான் மேல் நாட்டாருக்குப் புலனாகிறது" என்று புகழ்ந்து புகழ்ந்து கூறித் தங்களுக்குள்ளே மகிழ்ச்சி யடைகின்றார்கள். இதனால் என்ன பயன்?

போலிப் பாதிரிகள் ஹிந்துமத உண்மைகளை நன்கு ஆராயாது கோயில்களையும், போலி வேடதாரிகளையும் கண்டு "ஹிந்து மதம் அஞ்ஞான மதம்" என்று பிரசங்கஞ் செ-கிறார்கள்; புத்தகம் எழுதுகிறார்கள். அப்புத்தகங்கள் உலகமெங்கும் பரவுகின்றன. இந்தியாவின் உண்மை நிலையை உலகம் பெரும்பாலும் அறியாமற் போகிறது. இவ்விடத்தில் சுவாமி விவேகாநந்தரை நினையாமற் செல்ல மனமெழ வில்லை. இந்த மகான் துறவொழுக்கம் பூண்டு நமது உபநிடதக் கொள்கையை உலக முழுவதும் பரப்பினர். இந்தியாவில் நாத்திகம் பழுக்கின்ற காலத்தில் இப்பெரியார் உதயமாயினர்; இந்தியாவின் ஞானவொளியை மேல்நாட்டில் வீசச் செ-த னர். சுவாமிகள் மேல்நாடு சென்று ஆங்கிலத்தில் நாவலரா யினமை கண்ட நம்மவர் அவரைப் போற்றினார்; புகழ்ந்தார்; கொண்டாடினார். அவர் ஆங்கிலம் பயிலாமலும், மேல்நாடு செல்லாமலும் வடமொழி யொன்றே பயின்றிருப்பாராயின், நம்மவர் அவரைப் போற்றியிருப்பரோ? ஒருநாளும் போற்றி யிரார். ஆங்கில மொழியை வேதமொழியாகக் கொண்ட நம்மவர்களே இந்தியாவைக் கெடுத்தார்கள். நம்மவர்கள் இப்பொழுது அன்னைபெசண்ட், அருண்டேல் முதலியோர் களால் நல்லறிவு பெற்று வருகிறார்கள். "நாட்டுக்கல்வி நமக்கு வேண்டும், நாட்டுக்கல்வி நமக்கு வேண்டும்" என்று எத்தனையோ பண்டிதர்கள் தொண்டை நோகக் கூச்சலிட் டார்கள். நம்மவர்கள் அதைக் கவனித்தார்களா? ஆங்கிலங் கற்று அனுஷ்டானத்தை விடுத்து, அருளை மறந்து, அன்னையை வயிறெரியச் செ-தவர்கள் யார்? மேல்நாட்டார் வழக்க ஒழுக்கங்களை அனுஷ்டிக்குமாறு தூண்டினவர் யார்? குற்றம் நம்முடையதே.

இந்தியாவில் சிறப்பாகச் சென்னை மாகாணத்தில் ஆங்கிலங் கற்றவருள் பெரும்பாலோர் வாயால் ஆத்திக ராகவும் செ-கையால் நாத்திகராகவு மிருக்கின்றனர். தேகாத்ம வாத புத்தி இந்தியாவிலுந் தலை காட்டியது கலியுகக் கொடுமைபோலும்.

முற்றத்துறந்த முனிவர் பெருமானாகிய கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் மூவாசையில் அழுந்திக் கிடக்கின்றனர்;

'பூரண இரக்கமே மோட்சானந்தம்' என்று போதித்த பௌத்தர் பிரானை வழிபடுவோர் நாடோறும் ஆட்டையும் மாட்டையுங் கொலை செ-கின்றனர். இங்ஙனஞ் சமய உண்மைகளெல்லாம் அழிந்தன. சமய உண்மைகளுக்கு உறை விடமாக உள்ள இந்தியாவில் பிறந்த நாம் செ-யவேண்டியது என்னை? நாம் இந்தியர்; சமரச உணர்ச்சியுடையவர் என்னும் உபநிடதக் கொள்கையைப் பரப்ப முயலல் வேண்டும். இக் கொள்கையை நிறுத்தப் பல சமய சமாஜங்கள் நடைபெறு கின்றன. அவைகளில் அறிவாளிகள் சேர்ந்து உழைத்தல் வேண்டும். அவைகளில் ஆங்கில மயமாகவுள்ள நாத்திகர் களையும், தமிழே பயின்று பொறாமையே வடிவாகவுள்ள நிரீச்சுரவாதிகளையும் சேர்த்தல் ஆகாது. இந்தியர் மதமே உலக மதம் என்பதை நம்மவர் மறத்தலாகாது. இன்று விரிவஞ்சி விடுக்கின்றோம்.

*(13-3-1918)*

# மோட்சானந்தமும் சுயஆட்சியும்

உலகத்திலே வாழும் உயிர்கள் யாவும் இன்பத்தையே நாடுகின்றன. இன்பத்தை வெறுக்கின்றவன் பித்தனேயாவன். அவ்வின்பம் அறிவிற்கும் அநுபவத்திற்குந் தக்கவாறு பலதிற மாகத் தோன்றும். ஓரின்பமே அவரவர் உழைப்பிற்குத் தக்க வாறு பயனளித்து வருகிறது. காம குரோத லோப முதலிய தீக்குணங்கள் கெட்ட விடத்தில் ஒருவகை இன்பந்தோன்றும். அவ்வின்பமே பேரின்பம். அவ்வின்ப நுகர்வோர்க்கு உலகத் திலே உள்ள எல்லாப் பொருளும் இன்ப வடிவாகவே புல னாகும். அவருக்குப் பகைவரில்லை. அவரைப் புலி, கரடி, சிங்கம் முதலிய விலங்குகளும் நேசிக்கும். அவர் கடவுளா கின்றார். கடவுள் என்பது பூரண இன்பமே. "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே" என்று மாணிக்கவாசகர் அருளிச் செ-திருக்கின்றனர். மனிதப்பிறவி தாங்கிய ஒவ்வோருயிரும் அப்பேரின்பத்தை நுகரவே முயலல் வேண்டும். அம்முயற்சி செ-யாது பாழுக் குழைப்பது அறிவீனமாகும்.

இந்தியருள் பெரும்பாலோர் மோட்ச இன்பத்தையே விரும்புகின்றவர்; உலக வின்பத்தைப் பொருட்படுத்தாதவர். பண்டைக்காலத்தில் அன்னார் உலக இன்பத்தை எவ்வகை முட்டுமின்றி நுகர்ந்து வந்ததாகத் தெரியவருகிறது. அதனால் அவர் வீட்டின்பத்தை நுகரவே முயன்று வந்தனர். இது காலை உலக இன்பத்தையே பூரணமாக நுகருநிலையில் இந்திய ரில்லை என்பதை அறியாதாருளரோ? உலகத்திலே இன்ப வாழ்க்கையில் திளைத்து நில்லாதவர் பேரின்ப வாழ்க்கையில் திளைத்து நில்லார் என்பது எமது கொள்கை.

மனித வாழ்வு என்பது உடலும் உயிரும் ஒன்று கூடி நடைபெறுவதொன்றாம். உயிரின்பத்துக்குக் கருவி உடலின்பமே யாகும். உடலின்பங் குறையின், உயிரின்பமுஞ் சோர்வடையும் என்பது அனுபவ ஞானம். உயிரின்பமாகிய பேரின்பத்தை

நுகர விரும்புவோர், உடலின்பத்துக்கு எவ்வகை இடையூறும் நேராவண்ணம் காத்துக் கொள்ள வேண்டும்.

**"உடம்பா ரழியி லுயிரா ரழிவர்**
**திடம்பட மெ-ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே."**

என்றார் திருமூலரும்

உடலிற்கு இன்பந் தேடவேண்டுவது நம்பெருங் கடமை. உடலின்பத்துக்கே இதுகாலை நாம் வருந்துகிறோம். நாம் உயிரின்ப விசாரணை எங்ஙனஞ் செ-வோம்? இந்தியாவில் இதுகாலை உயிரின்ப ஆரா-ச்சி அருகி நிற்றலை உணராதா ரில்லை. காலை முதல் மாலை வரை வயிற்றுக்குழைக்கின் றோம். அப்படி உழைத்தும் வயிறார உணவு கிடைப்பதில்லை. நமது நாட்டில் வயிறார உணவு கொள்வோர் ஒருசிலரே. உடலின்பத்துக்குத் தடையாகவுள்ள கட்டுகளினின்றும் வெளிவர முயற்சி செ-யவேண்டுவது நம்பெருங் கடமை யன்றோ? இக் காரணம் பற்றியே நாம் சுதந்தரத்தை விரும்பு கின்றோம்; சுய ஆட்சி கேட்கின்றோம்.

உயிரின்பமாகிய மோட்சானந்தம் உடலின்பமாகிய சுதந்தரத்தில் நிலைத்து நிற்கிறது. சுதந்தர இன்பம் பெண் ணின்பத்தினுஞ் சிறந்தது என்று அப்பர் கூறியிருக்கின்றார். நமது நாட்டில் சுதந்தரமென்பது சிறிதுமில்லை. நினைத் ததைப் பேசுதலாகாது; எழுதுதலாகாது. நியாயமாக எழுது வதும் அநியாயமாகத் தோன்றுகிறது; நமது கருத்து வெவ் வேறாகத் திரிக்கப்படுகிறது. அச்சுச் சட்டம் நம் சுதந்தரத்தைக் கட்டிக் கொண்டு நிற்கிறது. செந்தமிழில் எழுதுவோரை அது பெரிதும் வருத்துகிறது. சுதந்தரமே வடிவாகவுள்ள இங்கி லாந்தால் நாம் ஆளப்பட்டும் சுதந்தரத்தை நாம் அனுப விக்கின்றோமில்லை.

மோட்சானந்தத்தைக் குறித்து ஞானாரா-ச்சி செ-யும் வேதாந்திகளும் சுய ஆட்சி முயற்சியில் தலைப்பட்டுழைத்தல் வேண்டும். இப்பொழுதுள்ள ஆட்சி முறையில் நம்மவர் சுதந்தர இன்பத்தை நுகர்தல் இயலாது. அச்சமும் நடுக்க முமே நம்மைச் சூழ்ந்து நிற்கின்றன. நாம் நமது விருப்பப்படி நம்நாட்டுக் கல்வியைப் பயிறல் வேண்டும். வேதவேதாந்த உண்மைகளை நம் மாணவர்கள் ஆரா-ந்து இந்தியாவிற்குரிய சகோதரத்துவத்தை உணரல்வேண்டும். அவர்களுக்குப் பிற நாட்டு அநாகரிகங்களில் வெறுப்பு உண்டாதல் வேண்டும்.

'தேசபக்தன்' சுதந்தரத்தை விரும்புகின்றான்; சுய ஆட்சி கேட்கின்றான்; இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்குஞ் சகோதரத் துவத்தை உண்டு பண்ணுகின்றான். சிறுகுழந்தையாகிய 'தேச பக்தன்' நாடோறும் சகோதரிகளுக்குஞ் சகோதரர்களுக்கும் தன் பொலிந்த முகத்தைக் காட்டிக்கொண்டு வாரகிறான். 'பக்தன்' பாரதமாதாவின் அடித்தொண்டன். அவன் பாரத நாட்டிற்றோன்றிய ஒவ்வொருவருக்கும் உரியவன். பாரத புதல்வர்களே! 'தேசபக்தன்' மீது கண்ணோட்டஞ் செலுத் துங்கள்.

*7-3-1918*

# மனித முயற்சியோ?
# தெய்வ முயற்சியோ?

"உலகம் பலவிதம்" என்பது பழமொழி, உலகத்தை முன்னிலைப்படுத்தியே எவ்வகை ஆரா-ச்சியுஞ் செ-யல்வேண்டும். ஆரா-ச்சிக்குக் கருவியாக நிற்பது உலகமே. உலகத்தைக் கொண்டே கடவுள் உண்மையையும் நிறுவல்வேண்டும். அத்தகை உலகத்திலே மனிதர்கள் அறிவிலும் ஆரா-ச்சிலும் பல திறப்பட்டு வாழ்கின்றார்கள். ஒருவர் கூறுவதை மற்றொருவர் கூறுவதில்லை. ஒருவர் வழியே மற்றவர் செல்ல அஞ்சுகின்றனர். எல்லோரும் ஒருமுறை பற்றி ஒழுகுவாராயின் உலகத்தில் பாவமென்பதே இல்லாமற் போ-விடும்.

உலக அமைப்பையும், விசித்திரத்தையும் கூற எவராலும் இயலாது. உலகத்திலே தோன்றுவனவற்றுள் மிகச் சிறியதாகக் கருதப்படுவது புல். அப்புல்லை இயற்கையின் நுண்மை உணர்ந்த ஒருவன் உற்றுநோக்கி ஆரா-வானாயின், அவன் உள்ளத்தில் ஒருவகை இன்பந்தோன்றும். பிற படைப்புக்களின் பெருமையைப் பேசவேண்டுவதில்லை. மலை நிற்பதும், ஆறு பா-வதும், மழை பொழிவதும், மனிதர் வாழ்வதும் என்ன விசித்திரம்! மனிதன் இயற்கைக்குத் துணையாக நிற்கின்றான். இயற்கை மனிதனுக்குத் துணையாக நிற்கின்றது.

இத்தகைய உலகம் எவர் முயற்சியால் நடைபெறுகின்றது? சிலர் மனித முயற்சியால் என்பர்; சிலர் தெ-வ முயற்சியால் என்பர். இவ்விருவகைப் போர் நீண்டகாலமாக நடைபெற்று வருகிறது. மனித முயற்சியால் உலகம் நடைபெறுகிறது என்று கூறுவோர் சுய நல முடையரா- உலகத்தில் வாழ்வர். மனிதன் பிறர்க்குரியன் என்ற உணர்ச்சியே அவருக்கு நிகழ்வதில்லை. அன்னார் என்றும் பிறரை வதைத்துத் துன்புறுத்தி வாழ்தலையே விரும்புவர். தெ-வ முயற்சியால் உலகம் நடைபெறுகிறது என்று கூறுவோர் பரநலத்தையே நாடிக்கொண்டிருப்பர்; மற்றவர்க்காகவே 'நாம் படைக்கப் பட்டோம்' என்ற உணர்ச்சி அவர் உள்ளத்தை விடுத்து அகல்வதேயில்லை. அன்னார் என்றும் பிறரை வருத்தாது

பிறர்பொருட்டுத் தம்மை வருத்தி உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பர்.

உலகத்தின் எப்பாகத்திலும் மனித முயற்சியால் எல்லாம் நடைபெறுகின்றன என்று கூறுவோரும், தெ-வ முயற்சியே எல்லாவற்றிற்குங் காரணம் என்று கூறுவோரும் இருக்கின்றனர். முன்னவரை நாத்திகரெனவும், பின்னவரை ஆத்திகரெனவும் கூறுவது வழக்கம். உலகம் நாத்திகமயமா-மாறுங்காலத்து எல்லாம் வல்ல இறைவன் அருளால் அவதார மூர்த்திகள் தோன்றுவார்கள். சில இடங்களில் அவர்கள் தங்கள் ஞானோபதேசத்தால் நாத்திக உணர்ச்சியை அகற்றுவார்கள்; சிலவிடங்களில் யுத்த வாயிலாகவும் அவ்வுணர்ச்சியைப் போக்குவார்கள். சுப்பிரமணியர், நரசிங்கர், ஸ்ரீராமர், கிருஷ்ணர், புத்தர், கிறிஸ்து, மகமது, சங்கரர் முதலிய அவதார மூர்த்தி களைப் பற்றி நேயர்கள் அறிவார்கள். இவர்களைப் பற்றி விரித்துரைக்க வேண்டுவது அநாவசியம்.

இறுதியாக நமது நாட்டில் நடந்த மகாயுத்தம் குரு க்ஷேத்திர யுத்தம். அதில் கிருஷ்ணமூர்த்தி யுத்தத்தோடு ஞானோபதேசமுஞ் செ-திருக்கின்றார். யுத்தத்தால் நாத்திக உணர்ச்சி மாண்டது. ஞானோபதேசத்தால் ஆத்திக உணர்ச்சி செழித்தது. அவருக்குப் பின்னர்த் தோன்றிய புத்தர் உபதேசத் தால் சகோதரத்வம் நிலைத்து விட்டது. அன்று தொட்டு இந்தியாவில் “எவ்வுயிரும் பராபரன் சந்நிதிய தாகும் இலங்கு முயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்” என்ற ஜீவகாருண்ய ஒழுக்கமே வேரூன்றிவிட்டது. உயிர்களுக்குத் தீங்கு செ-யா ஒரு பேர் அறத்தையே கடைப்பிடித்தொழுகினர் இந்தியர் என்பது மிகையாகாது. இது நிற்க

இம்மண்ணுலகு இருகூறாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று மேல்நாடு என்பது; மற்றொன்று கீழ் நாடு என்பது. நாம் அனைவரும் கீழ்நாட்டவரேயாவோம். உயிர் வதைக்கு நிலைக் களமாக உள்ள ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து முதலிய நாடுகளில் வாழ்வோர் மேல் நாட்டவர் எனப்படுவர். (மேல் நாடு மேற்கேயுள்ள நாடு; கீழ் நாடு கிழக்கே உள்ள நாடு)

கீழ் நாட்டு வாசிகளாகிய நம்மவர் மேல் நாட்டவர் கூட்டுறவு பெற்றமையால் தம் அறவொழுக்கத்தை விடுக்க லாயினர். மேல் நாட்டுக் கல்வியால் நாத்திக உணர்ச்சி நம்மவ ருள்ளத்தில் பதிந்து விட்டது. இந்தியருள் பலர் இந்தியாவை மேல் நாடாக்கவும் முயற்சி செ-கின்றனர்; மேல் நாட்டு வழக்க ஒழுக்கங்களைப் பரப்பப் பல சங்கங்களையும்

ஏற்படுத்தியிருக்கின்றனர். கிருஷ்ணன் பிறந்த இந்தியா கெட்டு விட்டது; புத்தர் பிறந்த இந்தியா போ-விட்டது. இந்தியருள் இதுகாலைக் கற்றவரென வெளிவருவோர் "எல்லாவற்றிற்குங் காரணம் மனித முயற்சியே" என்ற நாத்திகக் கொள்கையுடை யரா- வாழ்கின்றனர்; தெ-வ முயற்சி என்பதை அறவே மறந்தனர். மேல் நாட்டுக் கல்வித் தீட்டுப் படாத விடங்களில் இன்னும் கிருஷ்ணன் இந்தியாவும் புத்தர் இந்தியாஷும் ஜீவிக்கின்றன.

நாத்திகம் தலையெடுக்குங் காலத்தில் கடவுள் அருளால் அவதார மூர்த்திகள் தோன்றுவது சம்பிரதாய வழக்கம். இப்பொழுது கல்கி அவதார மூர்த்தி தோன்றியிருக்கிறார் என்று ஹிந்துக்கள் கூறுகின்றார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்து வரப்போகின்றார் என்று கூறுகின்றார்கள். ஒவ்வொரு சமயத்தவரும் அவதார மூர்த்தி தோன்றுவதில் நம்பிக்கை உடையரா யிருக்கின்றனர். அவ்வவதார மூர்த்தியின் தோற்றத் துக்கு அறிகுறியாகவே மேல்நாட்டில் மகாயுத்தம் நடைபெறு கிறதென்பது ஆத்திகர் நம்பிக்கை. தெ-வ நிச்சயமில்லா தாரே மேல்நாட்டு யுத்தம் மனித முயற்சியால் தோன்றிற்று என்று கூறுவர். மக்கள் பிறவிக்குரிய சுதந்தரத்தை நிலை நிறுத்தவும், சகோதரத் தன்மையை வளர்க்கவுமேண் மேல்நாட் டில் யுத்தம் நடைபெறுகிறது. அவ்யுத்தம் வளரவளர மனிதர் களுக்கு நல்லறிவு பிறக்கும். ஒருவரை ஒருவர் துன்புறுத்த லாகாது என்ற உணர்ச்சியுண்டாகும். இவ்ஷணர்ச்சியால் எல்லா நாடுஞ் சுதந்தரம் பெற்றுவிடும் என்பது நிச்சயம். நமது அரசர் பெருமான் தம் பொருட்டாகப் போரில் தலையிடாது பொதுவாக உலக சுதந்தரத்திற்கும் சிறப்பாக இந்தியாவின் சுதந்தரத்திற்குமே தலையிட்டனரென்பது ஆத்திகர் கொள்கை. நாத்திகர் எங்ஙனம் நினைப்பினும் நினைக்க.

இந்தியாவின் சுதந்தரத்திற்கெனத் தோன்றிய மகா யுத்தத்திற்கு இந்தியரனைவரும் பலவகை உதவிகள் செ-யல் வேண்டும். தெ-வ முயற்சியால் இம்மகா யுத்தம் தோன்றிற்று என்ற எண்ணம் ஒவ்வோர் இந்தியருள்ளத்திலும் பசுமரத் தாணிபோல் பதிந்து நிற்க வேண்டும்.

சுதந்தர வடிவாகவுள்ள தெ-வமே! எல்லாம் உன்முயற்சி என்பதே எமது கொள்கை. உன் முயற்சியால் மேல்நாட்டில் யுத்தம் நடைபெறுகிறது என்றே நாங்கள் நம்புகிறோம். உன் அருளால் தோன்றப்போகும் அவதார மூர்த்தியை நாங்கள் எதிர்கொள்ளும்போது உலகத்தில் சமாதானம், சகோதரத்

துவம் சுதந்தரம் என்பன நிலைத்து நிற்க அருள் செ-வாயாக. உன்னை மறந்ததால் நாங்கள் அடைந்த கண்டம் போதும். எங்கள் மன்னர் மன்னராகிய ஐந்தாம் ஜார்ஜூக்கு வெற்றி ஓங்கச் செ-து எங்கள் பந்தத்தை அவர் வாயிலாக ஒழிக்கக் கருணை புரிவாயாக. நாங்கள் விரும்புவது சுதந்தரம்; வெறுப்பது அடிமைத்தனம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!! "அவனன்றி ஓரணுவு மசையாது"

(16-8-1918)

# உலகநிலை

"உலகம் பலவிதம்" என்பது பழமொழி. ஓரிடத்தில் இன்ப நிகழ்ச்சியும் மற்றோரிடத்தில் துன்பநிகழ்ச்சியும் நேர்வ துண்டு. உலகம் இன்ப துன்பத்துக்கு நிலைக்களமாகவிருப்பது. சிலர் உலகத்தை இன்பமயமாகக் கருதி அதிலேயே நிலைத்து வாழ விரும்புகின்றனர். சிலர் உலகத்தைத் துன்பவடிவாகக் கருதி உலகவாழ்வை வெறுத்துக் கொண்டே யிருக்கின்றனர்.

உலகம் எல்லா வழியிலும் மாறுபட்டுக்கொண்டேயிருக் கிறது. அஃது என்றும் ஒருதன்மையாக நிலைத்திருப்பதில்லை. அது கண்ட நம் பெரியோர்கள் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை என்ற நிலையாமை களைப் பற்றிப் பல நூல்கள் எழுதியிருக்கின்றார்கள். நிலையா மையை என்றும் நினைத்துக்கொண்டிருப்பவனுக்கு விரைவில் ஞானம் பிறந்துவிடும். உலகம் நிலைபேறாயிருப்பதென் றெண்ணுவோர்க்கு ஞான உணர்ச்சி தோன்றுவது அருமை. இக்கூட்டத்தவர் பிறரை வருத்தத் துணிவுகொள்வர்; பிறர் துன்பத்தைக் கவனிக்கவே மாட்டார்; பிறரை வருத்தித் தாம் வாழவே முயல்வர். இத்தகையாளரை நம் முன்னோர்கள் இராட்சதர்கள் என்று அழைத்தார்கள். இந்த இராட்சதக் கூட்டம் எங்கு பரவுகிறதோ அங்கே எல்லாப் பாவங்களும் நிரம்பியிருக்கும். பாவத்தை வளர்க்கும் இராட்சதக் கூட்டத்தைத் தொலைத்து உலகத்தில் தருமத்தை நிறுத்தச் சில அவதார மூர்த்திகள் தோன்றுவது வழக்கம்.

சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் இம்மூவர்களும் உலக வாழ்வை நிலையாகக் கொண்டு உயிர்களை வருத்தினார்கள். இவர்களை யொழித்து அறநெறியை வளர்க்க ஆறுமுகக் கடவுள் தோன்றினார். இரணியன் செல்வச் செருக்கையும் இறுமாப்பையும் வருணிக்கவும் வேண்டுமோ? அவை நரசிங்கத்தின் முன் எவ்வாறாயின? இராவணன் அடாத செயலை அடக்கி முனிவர்களை ஆட்கொள்ள ஸ்ரீராம பிரான் தோன்றினார். திரியோதனாதியர் தீச்செயல்களை அழிக்கக் கண்ணபிரான் அவதரித்தார். மற்றும் பல இடங் களில் உண்டான இராட்சத குணங்களை ஒழிக்கப் புத்தர்,

கிறிஸ்து, மகமது முதலியோர்கள் தோன்றினார்கள். இவர்கள் உபதேசத்தால் உலகத்தில் அறநெறி தலைப்பட்டதென்று கூறலாம். இப்பெரியோர்கள் அனைவரும் அவதரித்த இடம் கீழ்நாடேயாகும். இதுகாறும் மேல்நாட்டில் ஒரு பெரியோ ராவது (அவதார மூர்த்தி) தோன்றி யிருக்கின்றனரோ? இல்லை; இல்லை; இல்லை. கிறிஸ்து பெருமான் உபதேசமாத்திரம் மேல் நாட்டுக்குச் சென்றது. அவ்வுபதேச மொழிகளின் வழி யாக மேல் நாட்டவர் ஒழுகியிருப்பாராயின் அவரிடத்தில் தெ-வ குணங்கள் நிலைத்து விளங்கும். மேல் நாட்டவர் கிறிஸ்துநாதர் மொழிகளைத் தங்கள் ஒழுக்க வழக்கங் கட்கேற்றவாறு திருத்திக் கொண்டமையால், அவைகளால் அவர்கள் பயன் பெறவில்லை. உண்மைக் கிறிஸ்து சமயம் மேல் நாட்டில் பரவியிருக்குமாயின், இந்த மகாயுத்தம் தோன்றி யிராது. இச்சண்டைக்குக் காரணமா யிருப்பவை அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீக்குணங்களாகும். இக்குணங்களை யுடையோர் எவராயினும் அவர் இராட்சதரேயாவர். இந்த மகாயுத்தம் உலகத்துள்ள கொடுமைகளைப் போக்கத் தோன் றியது என்று நமது பிரிட்டிஷார் கூறுவது பொருத்தமே.

இப்பொழுது இராட்சத குணங்களுக்குப் பல தேசங்கள் ஊற்றாயிருக்கின்றன. அவைகளுள் தலையாயது ஜெர்மனி. அவ்விடத்தினின்றுந் தீமைகள் பரவுகின்றன. நமது பிரிட்டி ஷாரும் ஜெர்மனியின் கொடுமையைப் போக்கி உலகத்தில் தருமத்தை நிறுத்தப் போர் புரிகின்றனர்.

இந்த மகாயுத்தத்தால் உலகம் எந்நிலையை யடைந்திருக் கிற தென்பதைக் கூறவேண்டுவதில்லை. உலகம் வறுமைக்கும், கொள்ளைக்கும், பிணிக்கும் இரையாகிக் கொண்டு வருகிறது. உலகமெங்கணும் துக்கமே நிரம்பியிருக்கிறது. துக்கமில்லாத வீடில்லை என்று கூறலாம். அன்பே வடிவாக உள்ள எம்பெரு மான் யுத்தவாயிலாக உலகத்துக்கு நிலையாமையைக் காட்டி வரும் அளவோடு நில்லாமல் 'இன்புளுயன்சா' என்னுங் கொடிய சுரத்தால் உலகத்தை நல்வழிப் படுத்தத் திருவுள்ளங் கொண்டுள்ளார். 'இன்புளுயன்சா' என்னுஞ் சுரம் ஓரிடத்தில் இல்லை; ஈரிடத்திலில்லை. அஃது உலக முழுவதும் பரவி யிருக்கிறது. இன்புளுயன்சாவால் பீடிக்கப்படாத தேச மில்லை. ஒரே காலத்தில் உலக முழுவதும் பரவி நிற்கும் ஒரு நோயும் உண்டோ? அஃது இறைவனால் அனுப்பப்பட்ட நோயாகவேயிருத்தல் வேண்டும். அந்நோயால் நேரிடும் மரணத்தொகை அளவிடற் பாலதன்று. காலை தந்தை இறக் கின்றான்; பிற்பகல் தா- இறக்கின்றாள். மாலை பிள்ளை

சாகிறது. இன்று நாயகி மரிக்கின்றாள்; நாளை நாயகன் மரிக்கின்றான்; செல்வனும் போகின்றான்; வறியனும் போகின்றான். இன்புளுயன்சாவால் மரணமடைவோர் பெரிதும் இளைஞராகவேயிருத்தல் குறிப்பிடத்தக்கது.

அருள் மூர்த்தியாக இருக்கின்ற கடவுள் இத்தகைய கொடிய யுத்தத்தை ஏன் தோன்றச் செ-தார்? இத்தகைய நோயை ஏன் உலகத்திற்கு அனுப்பினார்? என்று சிலர் வினவக் கூடும். கடவுள் செயலை ஆரா-வோர் பெருகப் பெருக யுத்த வேகமும், நோயின் கொடுமையும் பெருகும் என்பதிற் சந்தேக மில்லை. எமது உள்ளங் கோயில்கொண்ட எம் ஆண்டவன் யுத்த வாயிலாகவும், நோயின் வாயிலாகவும் உலகத்துக்கு நிலையாமையை அறிவுறுத்தி இராட்சத குணங்களைப் போக்கித் தெ-வ குணங்களைப் பெருக்கத் திருவுளம் பற்றி யிருக்கின்றான். இந்த யுத்தத்தையும் இன்புளுயன்சாவையும் எம்மையாட்கொள்ளும் தெ-வத்தின் பெருங்கருணைப் பெருக்கென்றே கொள்வோம்.

எல்லாம் வல்ல இறைவன் தேசத்திற் கேற்றவாறு வேதங்களை அருளிச் செ-திருக்கின்றான். அவ்வேத நெறி பற்றிவந்த பல அடியார்கள் பல ஞான நூல்களை அருளிச் செ-திருக்கின்றார்கள். உலகத்தில் இராட்சத குணம் பெருகப்பெருக ஞானநூல் ஆரா-ச்சி குன்றிவிட்டது. "இன்றுளேன் நாளை யில்லேன்" என்ற உரையை வழுத்துவோருண்டோ? "வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்"-இம்மொழியைப் போற்றுவோர் யார்? "இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" என்ற திருவாக்கை நோக்குவோர் எவர்? "நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடைத் திவ்வுலகு" (நெருநல்-நேற்று)-இவ்வள்ளுவர் வாக்கைக் கொள்ளுவோருளரோ? ஆ! உலகம் நாஸ்திகமயமாயிருக்கிறது! ஞான நூல்களை ஆரா-வோர் குன்றுதலை நோக்கி ஆண்டவன் யுத்தத்தையும் இன்புளுயன் சாவையும் உலகத்துக்கு அனுப்பியிருக்கின்றான். இவைகளைக் கண்டாவது உலகம் நல்வழிப் படுகின்றதோ? இல்லையே!

அருளாட்சி புரியும் ஆண்டவன் இப்பொழுது செ-து வரும் செயல்கள் யாவும் உலகத்தை நல்வழிப் படுத்துவனவாம். யுத்தக் கொடுமையையும் நோயின் பரவலையும் நோக்கி மனிதர்கள் உலக நிலையை யுணர்ந்து நல்வழிப்பட முயற்சி செ-வார்கள். மனிதர்கள் பாவத்திற்குப் பயந்து நல்வழிப்பட முயற்சி செ-யுங் காலத்தில் ஒரு பெரிய மகான் தோன்றப்போகின்றார். இந் நம்பிக்கை உலகத்துள்ள பழைய

சமயவாதிகட்கெல்லாம் உண்டு. ஹிந்துக்கள் கல்கி அவதாரத்தை எதிர் நோக்குகிறார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரண் டாவது வருகையைக் குறிக்கொண்டு நிற்கின்றார்கள். மகம தியர் ஹஜரத் மஹதி, ஈசாநபி என்ற இருவர் தோன்றப் போகின்றனர் என்ற நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இச் சமயத்தவர் கூற்று ஒன்றோடொன்று பொருந்தி நிற்றலால் ஒரு பெரிய மகான் தோன்றப் போவது உண்மை. அவர் தோற்றத்தின் அறிகுறிகள் யுத்தம், நோ- முதலியன என்ன லாம். அவர் வருகையில் உறுதி கொண்டு பாவத்துக்கஞ்சி என்றும் இறைவனைப் போற்றிய வண்ணமாயிருக்கவேண்டும். தெ-வ வழிபாடு எல்லாச் சமயங்களிலும் அருகிவிட்டதென்று கூறுவது மிகையாகாது. இப்பொழுது எல்லாரும் தெ-வ வழிபாட்டிலேயே சிந்தையைப் பதியவைக்க வேண்டும். தெ-வவழிபாட்டால் எல்லா நலனையும் பெறலாம். தெ-வம் திருவுளம் பற்றுமேல் கொடுமை நிறைந்த தேசங்களும் சமுத் திரத்தில் முழுகிப் போ-விடும். கடல் நாடான கதையையும், நாடு கடலான கதையையும் நாம் கேட்டிருக்கின்றோம். சில நாடுகளைக் கடல் கொள்ளப்போவது நிச்சயம். சில கடல்கள் நாடுகளாகப் போவதும் நிச்சயம். தெ-வ வழிபாட்டால் எல்லாச் சித்திகளையும் பெறலாம். நவநாதசித்தர்கள் எங்கும் போகவில்லை. அவர்கள் அடிக்கடி உலகத்தை விஜயஞ் செ-து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தீமை செ-வோரையும் அவரது தேசத்தையும் கணித்துக்கொண்டு போகிறார்கள். அவர்களை நம்புங்கள்.

அன்புவடிவாக உள்ள கடவுளை, அருள்நிறைந்த ஆண்டவனை, அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளிர்கின்ற எம் பெருமானை, நீதி பிறழாத நித்தியனை இது காலை வழிபட வேண்டியவர் யாவர்? இப்பொழுது கற்றவர் கல்வியால் பிணமாகின்றனர். செல்வர் செல்வத்தால் பிணமாகின்றனர். உயர்தொழில் புரிவோர் அச்செருக்கால் பிணமாகின்றனர். இந்நாத்திகப் பிணங்கள் அதருமத்தையே பெருக்கும். இவை தெ-வ வழிபாடு செ-யா. இப்பொழுது தெ-வ வழிபாடு செ-ய வேண்டியவர் யாவர்? ஏழைத் தொழிலாளரேயாவர். (தொழிலாளர் இன்னார் என்பதைப்பற்றி (15-10-18) 'பக்த'னில் எழுதியிருக்கின்றோம்.) பொதுவாக உலக முழுவதுஞ் சிறப்பாக இந்தியாவிலுந் தொழிலாளரே அடிக்கடி வருத்தத்துக்குள்ளா கின்றனர். இவ்வாண்டில் தொழிலாளர்களுக்கு நேர்ந்துள்ள கஷ்டங்களைக் குறிக்கவும் வேண்டுமோ? தொழிலாளர் தம் அறியாமையாலோ அல்லது அதிகாரிகள் செயலாலோ

கண்ட நிலையை அடைகின்றார்கள். ஆமதாபாத்தில் தொழிலாளர்க்கு வருத்தம் நேர்ந்தது. மதுரையிலுந் தொழிலாளர் துன்புற நேர்ந்தது. இப்பொழுது சென்னையில் நேர்ந்திருக்கிறது. தொழிலாளர் பால் குற்றமோ, அதிகாரிகள் பால் குற்றமோ என்ற ஆரா-ச்சி வேண்டுவதில்லை. எவர் பிழைபடினும் படுக. தொழிலாளர் கண்டப்படுவது உண்மை. சென்னையில் நேற்று இரண்டு மில்கள் மூடப்பட்டன.

உலகத்துக்குக் கஷ்டம் நேரிடும்போது அக்கஷ்டம் தொழிலாளரையே பெரிதும் பாதிக்கிறது. ஆனது பற்றித் தொழிலாளரே தெ-வ வழிபாட்டில் தலைசிறந்து விளங்க வேண்டியவராயிருக்கின்றனர்!

தொழிலாளர்களே! உங்கள் நிலையை நினைக்க நினைக்க மனம் உருகுகிறது. கஷ்டத்தை யேற்றுக் கொள்ளச் சித்தமாயிருங்கள்; அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்தே நடங்கள்; ஒற்றுமையைக் கைவிடாதேயுங்கள்; கடவுளை மறவாதே யுங்கள்; பிரகலாதன் கஷ்டத்தை நினைத்துக் கொள்ளுங்கள்; “சுதையின் வருத்த்தைக் கருதுங்கள்; பாண்டவர் வன வாசத்தை மறவாதேயுங்கள்; தெ-வ வழிபாட்டைச் செ-து கொண்டேயிருங்கள்; உங்கள் எண்ணம் நிறைவேறும்.

(29-10-18.)

# வேண்டுவது எது?
# ஆத்மசக்தியா? தேகசக்தியா?

மனிதனிடத்துள்ள சக்தியை இரு கூறாகப் பிரிக்கலாம். ஒன்று தேக சக்தி; மற்றொன்று ஆத்ம சக்தி. உலகத்திலுள்ள பெரும்பாலோர் தேகசக்தியைக் கொண்டு வாழ்கின்றனர். ஆத்ம சக்தியைக்கொண்டு வாழ்வோர் ஒரு சிலரே.

நமது இந்தியாவிலும் ஒருகாலத்தில் தேக சக்தியைக் கொண்டு பல காரியங்கள் செ-யப்பட்டன. அதனால் நாட்டில் அமைதியின்மை அடிக்கடி நேர்ந்தது. பொறாமை என்னும் இராட்சதப்பே- எங்குந் திரியலாயிற்று. வலியார் எளியாரை அடக்கி ஆளத்தொடங்கினர். மனிதர்கள் அனைவரும் இருகால் விலங்குகளாக மாறிவிட்டனர். சகோதரத்தன்மை அறவே அழிந்துபோ- விட்டது. மாயவித்தைகள் விசித்திர விசித்திரமாகத் தோன்றின. ஆகாய விமானங்களும், ஆகாயத் தேர்களுங் கண்டுபிடிக்கப்பட்டன. சமுத்திரத்தில் ஒளித்துக் கொண்டு யுத்தம் புரிதல், ஆகாயத்தில் மறைந்துகொண்டு போர்புரிதல் முதலிய அநாகரிகச் செயல்கள் தலைவிரித் தாடின. ஒரு பாணத்தால் கோடிக்கணக்கான பேர்களை அழிக்கும் இராட்சதர்கள் பலர் இருந்தனர். பலவகை முயற்சி யால் தேகத்தை வச்சிரமய மாக்கிக்கொண்டு பிறர்க்குத் தீங்கிழைத்த இராட்சதர் எண்ணிறந்தவர் இருந்தனர். பார்வையளவில் பிறருடைய வாயையுங் கையையுங் கட்டும் வல்லமை சாலிகள் எத்தனையோ பேர் இருந்தனர். இவரனை வரும் தேகாத்ம வாத புத்திகொண்டு செ-த கொடுஞ்செயல் களால் நற்பயன் விளையவில்லை. அடிக்கடி கலகங்களும், குழப்பங்களும், யுத்தங்களுமே நடந்துகொண்டு வந்தன. தீயொழுக்கமே எங்கணும் பரவலாயிற்று.

இங்ஙனம் எங்கணுந் தேக சக்தியின் துணை கொண்டு சகோதரத்துவத்துக்கு இடர் விளைத்துவருங் காடியவர்களை அடக்கவும் அழிக்கவும் இறைவன் திருவருளால் பல அவதார மூர்த்திகள் தோன்றினார்கள். அவர்கள் தோன்றியபின்னர், பாரத நாடெங்கும் தேகாத்ம வாதபுத்தி ஒழிந்து, ஆத்மசக்தி

எங்கணுஞ் செழித்தோங்கியது. பெரும்பாலோர் ஆன்ம விசாரணை செ-து வந்தனர். மாயவித்தைகளெல்லாம் பறந்தன. சண்டைகள் ஒழிந்தன. சகோதரத்தன்மை வளர்ந்து வந்தது. பாரத நாட்டினர் பிறரை வஞ்சித்துத் தேசங்களைப் பிடித்தல் என்ற அதருமத்தை அறவே மறந்தனர்; உலகக் கட்டுக்காகத் தமக்குள்ளாகவே அரசாட்சி ஏற்படுத்திக் கொண்டு குடி மக்களைப் பாதுகாத்து வந்தனர்; இயற்கைவழி ஒழுகுதலையே தம் வாழ்க்கையாகக் கொண்டிருந்தனர். செயற்கை அவரால் வெறுக்கப்பட்டே வந்தது. பாரத நாட்டில் ஆத்மசக்தியுடை யோர் பலராயினர்.

இத்தகைய நாகரிகம் நிரம்பியிருந்த இந்திய நாடு இப்பொழுது அநாகரிகத்துக்கு இரையாகிறது. என்று மேல் நாட்டார் தீட்டு நமது தேசத்தில் பட்டதோ அன்றுதொட்டு நமது தேசம் பாழ்பட்டு வருகிறது. மேல்நாட்டு மனிதர்களை யாம் வெறுக்கவில்லை. மேல் நாட்டு நாகரிகத்தையே நாம் வெறுக்கின்றோம். மேல் நாட்டாருந் தற்கால நாகரிகத்தை வெறுத்துவிடுவாராயின், அவரிடத்தும் சகோதரத்தன்மை முதலிய தரும குணங்கள் உதயமாகிவிடும்.

நமது நாட்டில் பழைய காலத்திலிருந்த இராட்சத குணங்களெல்லாம் இப்பொழுது மேல் நாட்டில் திருவிளை யாடல் புரிந்து கொண்டிருக்கின்றன. ஜெர்மானியர்கள் யுத்தத்தில் செ-த கொடுமைகள் நம் கூற்றுக்குச் சான்று புகலும். மனிதர்களை அழிக்க ஆயுதங்கள் செ-யும் அநாகரிகச் செயலைப் பார்க்கிலுங் கொடிய செயல் வேறொன்றுண்டோ? மனிதர் களைக் கொல்ல விஷப்புகையும் இந்த யுத்தத்தில் விடப்பட்ட தல்லவா? இச் செயல் செ-வோரை மனிதரென்று எங்ஙனங் கூறுவது?

மனிதர்களைக் கொன்று ஊர்களைப் பிடித்து ஆங்குள்ள குடிகளை வருத்தித் தாம் சுகமே வாழ எண்ணும் மிலேச்சர்களால் எழுதப் பெற்ற நூல்களை வாசித்தன்றோ நம்மவர்களும் தேகாத்மவாத புத்தியுடையவர்களாகி ஆத்ம சக்தியை யிழந்து வருந்துகிறார்கள். "இப்பொழுது நம்மை யாள்வது தற்கால நாகரிகம்; அதை ஒழிக்க முயலல் வேண்டும்" என்று மகாத்மா காந்தி கூறுகிறார். தற்கால நாகரிகம் பேயாக நமது தேசத்தைப் பிடித்தாட்டுகிறது; விஷமாக நமது தேசத்தை எரிக்கிறது; பூதமாக நமது தேசத்தை விழுங்குகிறது. தற்கால நாகரிகத்தை வெட்டிச் சா-க்கவேண்டுவது நமது கடமை.

அதற்கு வழியாது? அதற்கு எந்தச் சக்தியைக் கையாள வேண்டும்? என்பதைத் தீர்மானஞ் செ-து கொள்ளவேண்டும். சிலர் தேசசக்தியைக் கையாள வேண்டுமென்றும், சிலர் ஆத்ம சக்தியைக் கையாள வேண்டுமென்றும் சொல்கின்றனர். தேச சக்தியைக் கையாள்வோருக்குப் பணம் வேண்டும்; ஆயுதம் வேண்டும்; சேனைவேண்டும். இவைகளால் உலகத்துக்குத் தீமையே விளையும்; சகோதரத்தன்மை பரவாது. தேசசக்தி பாவச்செயல்களைச் செ-யவுந் தூண்டும். தேசசக்தியால் செ-யுஞ் செயல்களுக்கு ஈசுரனுந் துணைசெ-ய மாட்டான். ஆனதுபற்றி அச்சக்தியை வளர்ப்பது இடரை விளைப்ப தாகும்.

ஆத்ம சக்தியால் பொருளின்றி, ஆயுதமின்றி, சேனை யின்றி உலகத்தை நல்வழிப் படுத்தலாம். ஆத்மசக்தியை வளர்ப்பதற்கு வழி, ஒழுக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வ தாகும். 'அஹிம்சா' (கொல்லாமை) என்னும் ஒரறத்தை அனுஷ்டிப்போருக்கு ஆத்மசக்தி விரைவில் விளங்கப்பெறும். தேச நலத்தை நாடி யுழைப்போரனைவரும் ஆங்காங்கே ஆத்மசக்தியை வளர்க்கக்கூடிய சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டும். ஆத்மசக்தி கைவரப்பெற்ற மகாத்மா காந்தி நமக்குக் குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றார். அவரால் 'சத்யாக் கிரகா' என்னும் ஓர் ஆச்சிரமம் காணப்பட்டிருக்கிறது. அதில் பொறுமையைப் பெறவேண்டிய முறைகள் போதிக்கப்படு கின்றன. அதை முன் மாதிரியாகக் கொண்ட பல உண்மை நிலையங்கள் காணப்படல் வேண்டும்.

தேசபக்தியுடைய பிரமசாரிகள் மகாத்மா காந்தியவர் களைக் குருமூர்த்தியாக மனதில் பாவித்துக்கொண்டு அவரது உபதேச வழிநின்று, ஆத்ம சக்தியை வளர்க்க முற்படுவார் களாக.

தற்கால நாகரிகத்தால் விளைந்துள்ள தீமையை ஒழிக்க வல்லது ஆத்மசக்தியொன்றே.

(7-1-1919)

# நாகரிகம்

நாகரிகத்தைப்பற்றிப் பேசாத நாடில்லை. உலகத்தி லுள்ள எல்லா மனிதர்களும் நாகரிகத்தில் முதிர்ச்சி பெறவே முயற்சி செ-கின்றார்கள். நாகரிகம் என்ற சொல்லுக்குப் பலர் பலவாறு பொருள் கூறுகின்றனர். ஒரு நாட்டவர் நாக ரிகத்தை, மற்றொரு நாட்டவர் பழித்துக் கூறுகின்றனர். கீழ் நாட்டு நாகரிகத்தை மேல் நாடு வெறுக்கின்றது. மேல் நாட்டு நாகரிகத்தைக் கீழ் நாடு வெறுக்கின்றது. எந்நாட்டு நாக ரிகத்தைக் கொள்வது, எந்நாட்டு நாகரிகத்தைத் தள்ளுவது, என்று அறிஞர் பலர் யோசனை செ-கின்றனர். நாகரிகத்தின் செம்பொருள் யாண்டும் ஒரு வகையாகக் கூறப்படவில்லை. இயற்கையின் செயல்கள் பலபடக் கிடத்தல்போல நாகரிகத் தின் செயல்களும் பலபடக் கிடக்கின்றன.

மனிதன் முதல் முதல் மிருக குணத்தையும் செயலையும் உடையவனாக விருந்தான்; தன் கண்முன்னே தோன்றுவன வற்றையே பொருளாகக் கொண்டான். தொடக்கத்தில் மனிதன் தன்னைப்போலப் பிறரை நேசித்ததில்லை. ஒருவனை யொருவன் அடக்கியாள முயன்றனன். காடுகளில் மிருகங்கள் வாழ்வதுபோல், நாடுகளில் மனிதர்கள் வாழ்ந்துகொண்டி ருந்தார்கள். பின்னர் நாளேற நாளேற மனிதன் தன் னெதிரில் சில பொருள்கள் தோன்றுவதையும், அவைகள் அழிவதையுங் கண்டான். அக்காட்சியால் அவனுக்கு ஆரா-ச்சி பிறந்தது. அவ்வாரா-ச்சியால் அறிவு விளங்கிற்று. அறிவு விளக்கத் தால் ஆன்ம உணர்ச்சி தோன்றிற்று. ஆன்ம உணர்ச்சியால் அன்பு நிகழ்ச்சியுவுடாயிற்று. அன்பு நிகழ்ச்சியால் அருள் உதயமாயிற்று. அருள் என்பது பிறரிடத்துக் காட்டும் இரக்கமே யாகும். இறுதியில், மனிதன் பிற வுயிர்களிடத்து அன்பு செலுத்தலே தன்கடமை என்பதை நன்கு உணர்ந்துகொண் டான். மனிதன் அறிவாரா-ச்சியால் பெற்ற உண்மையாவது "தன் உயிர்போல் மன்னுயிரை நேசிக்கவேண்டும்" என்பதே. தன்னைப்போலப் பிறரை நேசித்து வாழுஞ் சகோதரத் தன்மையை நாகரிகம் என்று கூறலாம். அச்செயலுடையாரே

நாகரிகமுடையார். அத்தகையோர் வாழும் நாடே நாகரிக நாடு.

இத்தகைய நாகரிக உணர்ச்சியை ஆண்டவன் தன் அடியவர்கள் வாயிலாகவும், வேத உரைகளாலும் உலகத்தில் நிலவச்செ-தறோடு, மகாயுத்தங்கள் வாயிலாகவும் நிலவச் செ-து வந்திருக்கின்றனன். மகா யுத்தங்களால் நாகரிக எழுச்சியும் அநாகரிக வீழ்ச்சியும் உண்டாதல் இயல்பு. மனிதர் களிடத்துள்ள மிருக சுபாவத்தை அழிக்கவே இறைவன் அடிக்கடி மகா யுத்தங்களைத் தோற்றுவிக்கின்றனன்.

நமது பாரத நாட்டில் பயங்கரமான சண்டைகள் பல நடந்திருக்கின்றன. சூர பன்மன் யுத்தம், இராவணன் யுத்தம், குருக்ஷேத்திர யுத்தம்-இவைகளின் கொடுமையைக் கூறவும் வேண்டுமோ? பாரத நாட்டில் குருக்ஷேத்திர யுத்தத்திற்குப் பின்னர்ப் பெரும்போர்கள் நடக்கவில்லை. பாரத யுத்தத் திற்குப் பின்னர் மனிதர்களுக்கு வேண்டிய அறிவு எதுவோ, அவ்வறிவு விளக்கமுற்று விட்டது. பாரத நாட்டு வாசிகள் மண்ணிற்காகவும் பொன்னிற்காகவும் சண்டை செ-தல் அநாகரிகம் என்ற நாகரிக உணர்ச்சி பெற்றார்கள். சகோதரத் தன்மை யாண்டும் பரவலாயிற்று. பாரத காலந்தொட்டு நம்மவர்கள் பூத பௌதிக ஆரா-சியை விடுத்து, ஆத்ம விசாரணை செ-தே காலங்கழித்து வருகின்றார்கள். இராட்ச தர்கள் ஆன்ம போதங்கொண்டு பூத பௌதிகங்களின் துணையால் கண்ட இயந்திரங்கள் ஆகாய விமானங்கள், மாயக்கருவிகள் முதலியவைகள் எல்லாம் மீண்டுந் தலை காட்ட வொண்ணாதவாறு நம் பெரியோர்கள் அவைகளை அழித்துவிட்டார்கள். அவைகள் அழிக்கப்படாமல் விடப்பட் டிருக்குமாயின், நமது நாட்டில் சகோதரத் தன்மையைப் போதிக்கும் நீதி நூல்களும் ஞான நூல்களும் தோன்றியிரா. "அகழ் வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை", "இன்னா செ-தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செ-துவிடல்" என்ற திருவாக்குகளை நேயர்கள் உற்று நோக்குவார்களாக. பொறுமையும், பிறர்க்கு இன்னா செ-யாமையுமே நாகரிகத்தை வளர்க்கும் நறுங் குணங்களாகும். பாரத நாட்டிலுள்ளவர்கள் பெரும்போர் புரிந்து, இறுதியில் தம்மைப்போல் பிறரை நேசிப்பதே மனித தருமம் என்ற உண்மை கண்டு அதனையே நாகரிகமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

ஐரோப்பாக் கண்டத்தை எடுத்துக்கொள்வோம். அக் கண்டத்தில் சகோதரத் தன்மையை வளர்க்கக்கூடிய நாகரிகம்

இன்னும் தோன்றவில்லை. அந்நாட்டு நாகரிகம் லௌகிக வாழ்க்கைக்குரியது; ஆன்மஞானத்தை பழிப்பது. மேல்நாட்ட வர்கள் செல்வப் பொருளையே பொருளாகக் கொண்டு அதைப் பெறவேண்டிய வழிகளைத் தேடிக்கொண்டிருப்பவர்கள். அதனால் அவர்களிடத்தில் சகோதர தருமம் பரவுவது அருமையாக விருக்கிறது. ஒரு சாதியாரை ஒரு சாதியார் நம்பவே மாட்டார். ஒருவரை ஒருவர் வெட்டிச் சா-த்துப் பொருள் பறிப்பதில் கண்ணுங் கருத்துமாக இருப்பர். தன் உள்ளத்தில் எப்பொருளிருக்கிறதோ அப்பொருளே பிறன் உள்ளத்திலும் உண்டு என்ற ஞானம் ஐரோப்பாக் கண்டத்தில் என்று உதயமாகுமோ?

ஐரோப்பாக் கண்டத்திலும் சகோதர தருமமென்னும் நாகரிகத்தை நிலவச் செ-யவே ஆண்டவன் இந்த மகா யுத்தத்தை நடப்பித்தனன். மிருக சுபாவத்துக்கு உறைவிடமா யிருந்த ஜெர்மெனி ஒடுங்கிவிட்டது. பிரஸிடெண்ட்டு வில்ச னுக்கு உயர்ந்த வேதாந்த ஞானம் பிறந்திருக்கிறது. ஐரோப்பா வின் நாகரிகம் சமாதானக் கூட்டத்தின் முடிவைப் பொறுத்து நிற்கிறது. அம் முடிவைக் கொண்டு ஐரோப்பாவில் உண்மை நாகரிகம் பரவும் பரவாது என்பதைக் கூறிவிடலாம்.

சண்டை செ-யவேண்டும் என்ற எண்ணத்தோடு எந் நாட்டாரும் எக்கருவிகளையுஞ் செ-யலாகாது. சண்டைக் குரிய கருவிகள் எவரிடத்தும் மிகுதிப்பட்டிருத்தலாகாது. ஒரு சாதியாரை ஒரு சாதியார் தம் விருப்பப்படி ஆளுதலாகாது. இவைபோன்ற பல நிபந்தனைகள் சமாதானக் கூட்டத்தில் ஏற்படல்வேண்டும்.

மனிதன் தனக்கு வேண்டுவனவற்றைத் தானே செ-து கொள்ளல் வேண்டும். அவைகளை இயந்திர உதவியால் செ-துகொள்ளலாகாது. இயந்திர சக்தியின் துணையை நாடு கின்ற தேசத்தில் சகோதரத் தன்மை பரவல் அருமை, அங்கே உண்மை நாகரிகமும் பரவாது.

டால்ஸ்டா-, காந்தி இவர்களைப்போல மனிதர்கள் வாழ்க்கையை நடாத்தவேண்டும். அவ்வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை.

நாகரிகம் இன்னதென்றுணர்ந்த இந்தியாவிலும் மேல் நாட்டு அநாகரிகம் தலைகாட்டி நிற்கிறது. அஃதென்று ஒழியுமோ தெரியவில்லை. நம்மவர்களிற் சிலர் மேல்நாட்ட வர் வழக்க ஒழுக்கங்களை மேற்கொண்டொழுகுதலே நாகரிகம் என்று சென்று அந்நாட்டு ஆண்பெண் வாழ்க்கைகளை

நேரிற் காணுமாயின், அப்பொழுது தமது அறியாமை விளங்கப் பெறும்.

நமது நாட்டு நாகரிகமே நாகரிகம். நமது நாகரிகமே உலகெங்கும் பரவவேண்டும். நாம் மேல் நாட்டார்க்குப் பலவழியிலும் முயற்சிசெ-து நாகரிகம் இன்னதென்பதைப் போதிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். இனி மேல்நாடு எல்லா வழியிலுங் கீழ்நாட்டைப் பின்பற்றி நடக்குமென்று நம்புகின்றோம்.

கீழ்நாட்டு நாகரிகம் எவருக்கும் எவ்வாற்றானும் தீங்கு செ-யாதது என்பதை மேல் நாட்டவர்க்கு அறிஸவறுத்து கிறோம்.

*(13-12-1918)*

# அந்தணர் இல்லையோ?

தந்நலங் கருதாது பிறர் நலங் கருதி உலகத்தில் வாழ்வோர் அந்தணர் எனப்படுவர். "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழு கலான்" என்று திருவள்ளுவருங் கூறியிருக்கின்றார். இவர் பிராமணர், பார்ப்பனர், வேதியர் முதலிய நாமங்களாலும் அழைக்கப் படுவர். இக்கூட்டத்தார் பண்டைக் காலத்தில் பெருகியிருந்தனர். இவர் ஒரு வகுப்பினரல்லர். எவரெவ ரிடத்தில் அந்தண்மை உண்டாகிறதோ அவரவர் அந்தண ராவர். விசுவாமித்திரர் முதலியோர் தவஞ்செ-து அந்தண ராயினர். தாழ்ந்த குலத்தில் பிறந்தவரும் முயற்சியால் அந்தண ராகலாம். ஜீவகாருண்யப் பெருக்குள்ளோர் அனைவரும் அந்தணரேயாவர்.

இவ்வந்தணர்கள் கூட்டங் கூட்டமாகப் பண்டைக் காலத்தில் காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்துகொண்டு வந்தார்கள். அவர்களுக்கு அரசர்களும், மற்றவர்களும் உதவி புரிவது வழக்கம். இவர்கள் உதவியைப் பெற்றுக் கொண்டு அந்தணர்கள் வாளா காலங் கழிக்கவில்லை; உலக க்ஷேமத்துக் குரிய வழிகளைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஜபதப யாகங்களைச் செ-து கொண்டிருப்பார்கள். அவர்கள் எண்ணுவதும், பேசுவதும், செ-வதும் உலக நன்மைக்குரியன வாகவேயிருக்கும். அவர்கள் நாடுகள்தோறும் நிரம்பியிருந் தார்கள். ஊரில் பஞ்சம் நேர்ந்தால் இவ்வந்தணர்களிடத்தில் அரசன் உள்ளிட்ட எல்லாரும் சென்று முறையிடுவர். அவர்கள் தங்கள் தவவல்லமையால் உலகத்துக்கு வேண்டுவ செ-வார்கள்.

அந்தணர்கள் வேறு பற்றின்றி இறைவன் பற்றையே தங்கட்குரிய பற்றாகக் கொண்டிருந்தமையால், அவர்கள் உள்ளம் இறைவன் உறையுங் கோயிலாக இருந்தது. அவ்வுள்ள எழுச்சியால் அவர் பேசிய யாவும் வேதமொழிகளாகவும், வேதாந்த மொழிகளாகவும் நிலவலாயின. தூயவர்கள் வாக்கி னின்றும் எழும் ஒலிகள் யாவும் மந்திரங்களேயாகும். அவை களால் பயன் விளைவதுமுண்டு.

பின்வந்தவர்கள் அந்தணர் மொழிகளை வேதமொழி களாகவும், மந்திர மொழிகளாகவுங் கொண்டு பல நற்காரியங் களைச் செ-துவந்தார்கள். நாளேற நாளேற வேதமொழி களை ஓதுவோர் அரியராயினர். அவைகளை ஓதுவோரிடத் திலும் தீய ஒழுக்கங்கள் குடிகொள்ளலாயின. அவர்களால் ஓதப்பெறும் வேதமொழிகளால் பயன் விளையவில்லை.

பொ-யர்களும், வஞ்சகர்களும் வேதம் ஓதி உலகத் துக்குத் தீமை செ-து வருவதையும், ஜீவப்பிராணிகளை ஹிம்சிப்போர் பலர் பரதகண்டத்தில் குடியேறியதையும் அந்தணர்கள் கண்டுங் கேட்டும் உலகத்தினின்றும் மறைந்து விட்டார்கள். பலர் ஹிமாசலத்தைத் தமக்குரிய இடமாக்கிக் கொண்டனர். பலர் மனிதசஞ்சாரமில்லாத பலவேறிடங் களைத் தேடிச் சென்றனர். இக்கூட்டத்தார் நாட்டை விட்டு அகன்ற நாள்தொட்டு இந்தியாவில் ஐம்பெரும்பாவங்கள் பெருகலாயின. தற்கால நாகரிகம் என்னும் ஆலாலம் எங்கும் பரவலாயிற்று. இந்தியர்கள் ஒழுக்கத்தைக் கைவிட்டார்கள்; உறுதி நிலையை மறந்தார்கள். வேதம் ஓதிய வா-களெல்லாம் பொ-மை ஓத வாரம்பித்தன. மாமிசம் தின்னாதவர்கள் மாமிசம் தின்னத் தொடங்கினார்கள். இந்தியா குடிக்குங் கொலைக்கும் நிலைக்களமாகி விட்டது. ஜபதப யாகங்கள் இருந்தவிடந் தெரியாமல் பறந்துபோ-விட்டன. சுருங்கக் கூறின், ஆத்மஞானங்குன்றித் தேகாத்ம வாதபுத்தி பெருகிற்று என்னலாம். தேகாத்ம வாதபுத்தியுடையோர் எல்லாப் பாவங் களையுஞ் செ-ய ஒருப்படுவர். அப்பாவங்களால் தேசத்தில் பிணி, வறுமை, பஞ்சம் முதலியன குடி கொள்ளும். அவை களால் ஜனங்களுக்குப் பலவகை கஷ்டங்கள் நேர்ந்து கொண்டே யிருக்கும்.

இப்பொழுது இந்தியாவில் எல்லாப் பாவங்களும், எல்லா நோ-களும் நிரம்பியிருக்கின்றன. உணவுப் பொரு ளுக்கே இந்தியா வருந்தும் நிலையை அடைந்திருக்கிறது. அரசாங்கத்தாரோ இன்னும் பஞ்சம் உண்டாகவில்லை என்று எண்ணிக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. இப்படியே இந்தியா வருந்தி வருமாயின், விரைவில் அதன் வாழ்க்கை இழுக்கடைந்து, அழிந்து விடுமென்பது திண்ணம். இனி நாம் செ-ய வேண்டுவதென்ன? நமது ஆத்ம ஞானத்தை வளர்க்க வேண்டிய வழிகளைத் தேடவேண்டும். வேதங்கள் இருக்கின்றன. உபநிடதங்கள் இருக்கின்றன. மந்திரங்கள் இருக்கின்றன. அவை என்றும் மாறவேமாட்டா. ஆனால் அவைகளை ஓதுவோர் அரியராயினர். அதனால் அவை

*களின் பயன் சுருங்கிவிட்டது. மேல் நாட்டு நாகரிகம் பரவாத - இங்கிலீஷ் பாஷைமணம் வீசாத-கிராமங்கள் இன்னுஞ் சில இருக்கின்றன. அக்கிராமங்களில் வாழ்வோரைப் பழைய இந்தியராகக் கொள்ளலாம். அவர்களிடத்தில் வஞ்சனை, பொறாமை, லோபம் முதலிய துர்க்குணங்களில்லை. அவர் களிற் பலர் அந்தணராகவும் இருக்கக்கூடும். அவர்கள் அனை வரும் ஒன்று சேர்ந்து யாகங்கள் செ-யவேண்டும். யாகங் களால் பல நன்மைகள் விளைந்திருக்கின்றன. அந்தணரென் போர் ஆயுதங்களால் இராட்சத குணமுடையோரை வெல்ல வில்லை; மந்திர மொழிகளாலேயே அவரை வென்றிருக் கின்றனர். மந்திர மொழிகளுக்குள்ள வல்லமை எத்தகைய பீரங்கிகளுக்குமிராது என்பது எமது நம்பிக்கை.*

*பண்டைக்காலத்தில் சூரன், இராவணன் முதலிய ஒரு சில இராட்சதரிருந்தனர். இப்பொழுதோ வீடுகள் தோறும் இராட்சதர்கள் இருக்கின்றார்கள். இராட்சதர் என்போர் யாவர்? என்றும் பிறர்க்குத் தீங்கிழைப்பவர்; பிறரை அடக்கி யாள வேண்டுமென்று நினைப்பவர்; காம குரோத முதலிய தீக்குணங்கள் நிரம்பப் பெற்றவர். இன்னார் இராட்சதர் எனப் படுவர். இவரல்லாத பிறரே அந்தணர் என்போர். இராட்சத குணம் உலகத்தில் ஓங்கி வளருங்காலத்தில், அந்தணர்கள், அவைகளை யாகஞ் செ-தல் முதலிய அறச் செயல்களால் ஒழிப்பது வழக்கம். இப்பொழுது உலகம் இராட்சத மயமாக இருக்கிறது. இக் காலத்தில்தான் இந்தியர் வேதம்; வேதாந்தம், மந்திரம் முதலியன பயன்படவேண்டும்.*

*மேல் நாட்டு நாகரிகப் படுகுழியில் வீழ்தா அந்தணர் களே! பழைய இந்தியாவை விரும்பும் அறவோர்களே! உலகத் தில் அதருமம் பெருகி யிருக்கிறது. இந்தியா பஞ்சத்தால் வாடு கிறது. இப்பொழுது நீங்கள் வாளா கிடப்பது தருமமோ? வெளிவாருங்கள்; இமாசலத்திலுள்ள மகரிஷிகளைக் கூவி யழையுங்கள்; யாகஞ் செ-யுங்கள்; தருமத்தை நிலை நிறுத் துங்கள்.*

*பாரததேவீ! 'தேசபக்தன்' கூச்சலை நீ கேட்பதில்லையோ? உன் வயிற்றில் இப்பொழுது அந்தணர்கள் பிறப்ப தில்லையோ?*

*மஹரிஷிகளே! நவநாத சித்தர்களே! எங்கிருக்கின் றீர்கள்? உலகத்தில் இராட்சதகுணம் பெருகுகிறதே. நீங்கள் கருணை செலுத்த வேண்டிய காலமிதுவே.*

*(8-11-1918)*

# சமயச் சபைகள்

சமயம் என்பது கடவுளை அடைவதற்குரிய தூய வழி யாகும். மனிதன் உலகத்தில் தூயனா- வாழ வேண்டுமாயின், அவன் சமயநெறி கடைப்பிடித் தொழுகல்வேண்டும். மனிதனைத் தூ-மைப்படுத்துவது சமயமே. சமயப் பற்றில்லாத ஒருவன் சகல பாவங்களையுஞ் செ-யத் துணிவன். அவனைக் கண்டால் நாம் அஞ்சவேண்டும் என்று மாணிக்கவாசகர் திருவா-மலர்ந்திருக்கின்றனர். உலகத்தில் பெரும்பாலோர் சமயச் சார்புடையோராகவே யிருக்கின்றனர். இப்பொழுது சமயச் சார்பில்லா நாடு இல்லையென்று கூறலாம்.

சமய உணர்ச்சியைப் பரப்புவதற்கு உறுகருவிசபை என்னலாம். உலகத்திலே உள்ள எல்லாச் சமயங்களும் சபை களின் மூலமாகத் தங்கள் கொள்கையைப் பரப்பி வருகின்றன. அன்பு நிகழ்ச்சிக்கு மனிதர் கூட்டுறவு இன்றியமையாத தென்பது அறிவுடையோர் அனுபவத்திற் கண்ட உண்மை. எனவே சமய உணர்ச்சியைச் சபைகளின் மூலமாக வளர்க்க முயல்வது அறிவுடையோர் கடமையாகும்.

ஈண்டுச் சமயம் என்பது எச்சமயமாயினுமாக. உலகத் துள்ள எல்லாச் சமயங்களும் அன்பு வடிவாக உள்ள ஒரு பொருளையே போற்றுகின்றன. பல சமய நூல்களை ஆரா-ச்சி செ-த ஒருவன், சமரச ஞானத்தையே பெறுவன் என்று அனுபவ ஞானிகள் கூறியிருக்கின்றார்கள். "ஒன்றது பேரூர் வழியாறு அதற்குள" என்றும், "வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம்பொருளே நின் விளையாட் டல்லால் மாறு படுங் கருத்தில்லை" என்றும் பெரியோர்கள் அருளிச் செ-திருக்கின்றார்கள். சமயங்களின் முடிந்த கொள்கை ஒன்றே யாயினும், அவைகள் இறைவனை வழிபடு முறையில் நாட்டிற் கேற்றவாறு மாறுபட்டு நிற்கின்றன. உலகத்திலே உள்ள தொன்மைச் சமயங்கள் நான்கு. அவை கிறிஸ்து சமயம், மகமதிய சமயம், பௌத்த சமயம், ஹிந்து சமயம் என்பன.

கிறிஸ்து சமயத்தை எடுத்துக் கொள்ளலாம். கிறிஸ்து பெருமான் பன்னிரண்டு சீடருடன் தம் வாணாளைக் கழித்

தார்; தமது சுவிசேடத்தை உலகத்திற் சபைகளின் மூலமாகப் பரப்புமாறு சீடர்களுக்கு அறிவுறுத்தினார். அப்பெரியார் இன்னருள் துணைகொண்டு அச்சீடர்கள் பலவேறு தேசங் களுக்குச் சென்று, தங்கள் குருமொழியை ஜனங்களுக்கு உபதேசித்தார்கள். அவர்கள் உபதேசத்தைக் கேட்ட பலரும் ஆங்காங்கே சபைகளை ஏற்படுத்தி அவைகளின் வாயிலாகச் சுவிசேடத்தைப் பரப்பத் தொடங்கினர். கிறிஸ்தவர்கள், சபை களின் வாயிலாகச் சமய உண்மைகளை அறிவுறுத்தி வருவது உலகறிந்த தொன்றே. அவர்கள் முயற்சியை அறியாதாரில்லை. உலகெங்குங் கிறிஸ்துவ சங்கங்களிருக்கின்றன. கிறிஸ்துவ சங்கமில்லாத தேசமில்லையென்று கூறுவது மிகையாகாது. வெஸ்லியின் மிஷன், எஸ். பி. ஜி. மிஷன், சர்ச் மிஷன் முதலியன கிறிஸ்துவ சமயச் சபைகளே யாகும். இவைகளின் வாயிலாகக் கிறிஸ்தவர்கள் உலகத்தைப் பல வழியிலுஞ் சீர்திருத்தி வருகிறார்கள். கிறிஸ்துவ சங்கங்கள் கலாசாலை, வைத்தியசாலை முதலிய அறச்சாலைகளை அமைத்து ஜனங் களுக்கு நன்மை செ-துவருகின்றன. இந்தியாவிலுள்ள கலா சாலைகளிற் பல கிறிஸ்துவ சமயச் சங்கங்களால் நடத்தப்படு வனவாம்.

மகமதுவும் தம் மாணாக்கர்களுக்குக் கூட்டுறவால் சகோதரத்தன்மை உண்டாவதை விளங்க உரைத்திருக் கின்றனர். கூட்டம் என்பது சபையேயாகும். மகமதிய மதத்தில் சகோதரத் தன்மை பெரிதும் பாராட்டப்படுகிறது. மகமதுவும் தங்கொள்கையைப் பரப்புமாறு தம் கூட்டாத்தாருக்குப் பணி தந்துள்ளார். அவர்களும் அங்ஙனே சபைகள் வாயிலாகத் தங்கள் கொள்கையைப் பரப்பி வருகின்றார்கள்.

பௌத்த சமயமென்பது பகவான் புத்தரால் காணப் பட்டது. இது பிறந்தவிடம் இந்தியாவாகும். பகவான் புத்தர் தாங்கண்ட உண்மையை உலக முழுவதும் பரப்ப வேண்டு மென எண்ணங் கொண்டு எண்ணிறந்த சீடர்களை நானா திசைகட்கும் அனுப்பினர். அவர்கள் தாங்கள் சென்றவிடங்கள் தோறும் பௌத்த சங்கங்களை ஏற்படுத்தித் தருமத்தை வளர்த் தார்கள். பௌத்தர்கள் சங்கங்களுக்கு நமஸ்காரஞ் செ-வது வழக்கம். சங்கம் தெ-வமுள்ள இடமென்பது அன்னார் கொள்கை. தரும வளர்ச்சிக்குச் சங்க அமைப்பு அடிப்படை யென்பது பௌத்தர் கொள்கை. "புத்தஞ்சரணங்கச்சாமி; சங்கஞ்சரணங்கச்சாமி; தர்மஞ்சரணங்கச்சாமி" என்று பகவானைப் புத்தர்கள் அருச்சிப்பார்கள். அதன்பொருள் வருமாறு:-புத்தருக்கு வணக்கம்; அவரால் ஏற்படுத்தப்பட்ட

சங்கத்துக்கு வணக்கம்; அச்சங்கத்தால் வளர்க்கப் படுந் தருமத்துக்கு வணக்கம் என்பது. இம்மும்மொழிகளையும் பௌத்தர்கள் மும்மணி யென்று கூறுவார்கள். இம்மும் மணிகளையும் உற்று நோக்கி உண்மை உணர்வோர்க்குப் பௌத்தர் பிரான் கொள்கையின் மாண்பு இனிது விளங்கும். இம் மும்மணிகள் பிறந்த நாடு இந்தியநாடு. இப்பொழுது பௌத்த சங்கங்கள் எங்கே? பௌத்த தருமங்கள் எங்கே? கருணையே வடிவாக உள்ள பௌத்தர் பிரான் பிறந்த நாட்டில் அதருமந் தலை தூக்கியாடுகிறதே; அநாகரிகம் பரவு கிறதே; சகோதரத்தன்மை சாகிறதே; ஜீவகாருண்யஞ் சிதை கின்றதே. அறக்கடவுளே! உன் திரு நாட்டத்தை நீ பிறந்த நாட்டின்மீது சிறிது செலுத்தவாயாக. இதனால் பௌத்த சமயிகள் சங்கங்களுக்கு மேன்மை கொடுத்திருப்பது போலப் பிற எவருங் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

இனி ஹிந்து சமயத்தைப் பற்றிப் பேசுவோம். இச் சமயத்தின் தொன்மை காலங்கடந்து நிற்கிறது. எக்காலத்தில் எவரால் இச்சமயம் உண்டாக்கப்பட்டது என்பது சரித்திரக் காரர்களுக்கே தெரியவில்லை. இச் சமயம் பிற்காலத்தில் சைவம். வைணவம் என இரு கூறாகப் பிரிந்துவிட்டது. இச் சமயங்களும் சபைகளின் இன்றியமையாமையைத் தெரிவிக் கின்றன. மஹரிஷிகள் எல்லாருங் கூட்டங் கூட்டமாகக் கூடியே வேதாந்த விசாரணை செ-து வந்தனர். ஹிந்து சமயம் மனிதர்கள் கூட்டுறவை அடிக்கடி நினைப்பூட்டுமாறு பலவகைக் கிரியைகளை அங்கமாகக் கொண்டிருக்கின்றது. பஜனைக் கூட்டமில்லாத ஹிந்து தெருக்களில்லை என்பது உயர்வு நவிற்சியாகாது.

தமிழ்நாட்டின் சமயச் சபைகளைப்பற்றிச் சிறிது கூறு வோம். தமிழ் நாட்டில் பல சைவ, வைஷ்ணவ சபைகள் இருக்கின்றன. தமிழ் நாட்டிற் றோன்றிய பெரியோர்களும் தங்கள் கொள்கையை யாண்டும் பரப்புமாறு தமிழ் நாட் டாருக்கு அறிவுறுத்தி யிருக்கின்றார்கள். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றும், "சேர வாருஞ் செகத்தீரே" என்றும் அருளிச் செ-திருத்தலை நேயர்கள் கவனித்தல் வேண்டும். "வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர் இனத் தகத்தான்" "இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்து" என்று நங் குருமூர்த்திகள் திருவா- மலர்ந்துள்ள அரும் பெரும் வாக்குகளை ஆரா-ந்து உண்மை தேறல் வேண்டும். இத்திரு வாக்குகளால் சமயச் சபைகளின் அவசியம் நம்

முன்னோர்களுக்கு உடன்பாடென்பதைத் தமிழுலகம் அறிவதாக.

தமிழ் நாட்டில் எண்ணிறந்த சைவசபைகள் இருக்கின்றன; வைஷ்ணவ சபைகள் இருக்கின்றன. முன்னதற்கு ஒரு சமாஜமும், பின்னதற்கு ஒரு சமாஜமும் ஏற்பட்டிருக்கின்றன. அவை வருடத்திற்கு ஒருமுறை ஓரிடத்திற் கூடிக் கலைந்து விடுகின்றன. அவைகளின் முயற்சியால் எத்துணைக் கல்லூரிகள் ஏற்பட்டிருக்கின்றன? எத்துணை வைத்தியசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன? வீர சைவ சித்தாந்த சைவச் சண்டை ஒழிந்ததோ? வடகலை தென்கலைச் சண்டை ஓ-ந்ததோ? பேசுவது உயர்ந்த வேதாந்தம்! சித்தாந்தம்! செ-வதோ? **** உண்மை கூறப் 'பக்தன்' நடுங்குகின்றன்.

தென்னாட்டுச் சமயச் சபைகளுக்கு வருடோற்சவம் நடத்துவதில் உள்ள ஊக்கம், எந்நாட்டுச் சபைகளுக்கு மிராது என்பது சத்தியம். வருடோற்சவம் நடந்த இரவே சபை மூல காரணத்தில் ஒடுங்கிப்போ-விடும். உண்மையை விரித்துக் கூறின் 'பக்தன்' பக்தர்களால் பழிக்கப்படுவான். தமிழ்நாட்டில் சமயச் சபைகளைச் சீர்திருத்தஞ் செ-து அவைகளின் வாயிலாக நாட்டிற்கு நன்மை செ-விக்கப் பலர் வெளிவரல் வேண்டும். சபைகளை நடத்து முறைகள் சமயப் பற்றுடையவர்க்குப் போதிக்கப்படல் வேண்டும். வருடோற்சவ காலத்தில் உபந்நியாசம் மாத்திரம் செ-யப்படுவதால் பயன் விளையாது. சீர்திருத்தங்களுக்கு வேண்டிய முறைகளைத் தீர்மான வாயிலாக வெளியிடப் பழகல்வேண்டும். வருடோற்சவத்தில் பணத்தைச் சிக்கனமாகச் செலவழிக்க முயலல்வேண்டும். ஒவ்வொரு சமயச் சபையும் ஒவ்வொரு பாடசாலையை நடாத்த முற்படல் வேண்டும். சமய ஆரா-ச்சி தமிழ்நாட்டில் குறைந்து கொண்டு வருகிறது. சமய ஆரா-ச்சி குறையக் குறையத் தரும உணர்ச்சியுங் குறைந்துபோகும். தமிழ் நாட்டில் சமயச்சபைகளை நடத்துவோர் உலகநிலை கால நிலையை உணர்ந்து அவைகளுக் கேற்றவாறு சபைகளை நடத்துவாராக.

*(18-5-1918.)*

# ஹிந்து தேவாலயங்கள் (அ)

பண்டைக் காலத்தில் ஹிந்து அரசர்கள் பல தரும காரியங்கள் செ-திருக்கின்றார்கள். சுருங்கக் கூறின் முப்பத் திரண்டு அறங்களையும் வளர்த்துவந்தார்கள் என்று கூறலாம். அவ்வரசர்கள் பெரிதுந் தங்கள் கவலையைத் தேவாலயங்கள் கட்டுவதில் செலுத்தி வந்ததாகத் தெரியவருகிறது. இந்தியா விலே எண்ணிறந்த தேவாலயங்கள் இருந்தன. அவைகளிற் பல அழிந்தன. எஞ்சியுள்ள சிலவும் வெளி நாட்டாருக்குப் பலவாகத் தோன்றும். இமயம் முதல் கன்னியாகுமரி வரை யாத்திரை செ-த ஒருவன் உள்ளத்தில் பெரிதும் ஆலயத் தோற்றமே பதியும். "தெ-வ நினைப்பை ஊட்டக்கூடிய கட்டி டங்கள் பல இந்தியாவில் உண்டு" என்று சீன தேச யாத்திரை வாசிகள் கூறி யிருக்கின்றார்கள். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஹிந்துக்கள் உபதேசம்.

ஹிந்து தேவாலயங்களைச் சிற்பத்தொழில் நிரம்பிய ஒருகூடம் என்னலாம். ஒரு சிற்பசாஸ்திரி ஹிந்து தேவாலயத் துள்ளே நுழைந்து பிராகாரத்தைச் சுற்றி வருவானாயின், அவன் உள்ளமும் சிற்பத்தின் இயல்பும் ஒன்று பட்டுவிடும். அவன் அவ்வாலயத்தை விடுத்து வெளிவர ஒருப்படான். பழைய இந்தியாவின் பெருமையை ஆலயங்கள் நன்கு விளக்கிக் கொண்டிருக்கின்றன. பழைய நாகரிகத்தைத் தெரிவிக்கும் புத்தகங்களாகத் தேவாலயங்களைக் கொள்ளலாம். மேல் நாட்டினின்றும் வரும் சிற்பசாஸ்திரிகள் ஹிந்து தேவாலயங் களைக் கண்டு இன்புறுகின்றார்கள்; சிற்பத்தொழிலை உற்று நோக்கி உற்று நோக்கி மகிழ்வெ-துகிறார்கள். சிற்பங்கள் கட்புலனுக்கு இன்பங்கொடுப்பவை.

ஹிந்து தேவாலயங்களில் இன்னிசைக் கருவிகள் வாசிக் கப்படுவதை அறியாதாரில்லை. இப்பொழுதும் சில நாத்தி கர்கள் ஹிந்து தேவாலயத்துக்கு மிக விருப்பத்தோடு செல்கி றார்கள். அவர்களைக் கண்டு "நீங்கள் எற்றுக்கு ஆலயஞ் செல்கிறீர்கள்" என்று வினவினால், அவர்கள் "நாங்கள் சங்கீதங் கேட்கச் செல்கிறோம்" என்று சொல்கிறார்கள். பேர் பெற்ற ஒருவன் இன்னிசைக் கருவிகளை வாசிக்குங்கால், அவ்

விசை நுட்பந் தெரிந்தவர்கள் அவ்விசையோடு கலந்து ஒன்று படுகிறார்கள். அவ்வின்பம் அவர்கள் இல்லஞ் சேர்ந்த காலத்தும் அவர்களை விட்டு அகல்வதில்லை. அஃது அவர் தம் உள்ளத்தில் ஊர்ந்து கொண்டே நிற்கும். ஹிந்து வாத்தி யங்கள் சாத்துவிக உணர்ச்சியை விளைப்பவை என்று மேல் நாட்டாரே கூறுகின்றனர். இசைக் கருவிகள் செவிப் புலனுக்கு இன்ப மூட்டுவன.

ஹிந்து தேவாலயங்களிலுள்ள அபிஷேகத் திரவியங்கள் மூக்கிற்கு இன்ப மூட்டும். ஆகமங்களில் கூறியுள்ள அபிடேகப் பொருள்களுள் பலவற்றை இப்பொழுது உபயோகிப்ப தில்லை யாதலால், இவ்வின்பத்தைப் பலர் பலவிடங்களில் நுகரா தொழிகின்றனர். வாயால் இறைவன் நாமத்தை உச்சரித்தலில் சிலருக்கு இன்ப நிகழ்வது வழக்கம். வேறு சிலருக்கு ஆலயத்துள்ள உணவுப் பொருளால் ஆனந்தம் விளைவதுமுண்டு. அடியார்களை ஆலிங்கனஞ் செ-வத னாலும், கைத் தொண்டு செ-வதனாலும், மணி ஒலியும், தீபாராதனை ஒளியும் முறையே செவிப்புலனிலும், கட்புலனி லும் ஊடுருவிப் பாயுங்காலத்து உண்டாகும் விதிர் விதிர்ப்பு, மயிர்சிலிர்த்தல் முதலிய நிகழ்ச்சிகளாலும் மெ-க்கும் இன்பம் உண்டாகிறது. எனவே ஐம்புலனுக்கும் இன்பம் ஊட்டக்கூடிய பொருள் வடிவாகத் தேவாலயங்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன என்பதை உணரல்வேண்டும்.

ஐம்புலன் வழியாகச் செல்லும் இன்பத் தாரை, இன்ப உணர்ச்சியின்றிக் கிடக்கும் உள்ளத்தை நனைத்து, இன்ப அன்பால் குளிரச்செ-கிறது. இதுவே ஆத்ம இன்பம் என்பது. இவ்வாத்ம இன்பத்தை விளைக்கவே ஒவ்வொரு புலனுக்கும் இன்பம் ஊட்டக்கூடிய பொருள் வடிவாக ஆலயங்கள் நிருமிக்கப்பட்டிருக்கின்றன. உள்ளத்தெழும் இன்ப அன்பு வடிவாக இருப்பவன் கடவுள். இவ்வின்ப அன்பைப்பெற ஹிந்துக்கள் ஆலயஞ் செல்கின்றார்கள். இதுவே பண்டை மக்கள் கொள்கை. இவ்வான்ம இன்பத்தை நுகர்வோருக்கும் எல்லா உயிரும் இறைவன் வடிவாகத் தோன்றும். அவர் பிறவுயிருக்குத் தீமை செ-யா திருத்தலையே பேரறமாகக் கொள்வர். இவ்வண்மைகளை உணர்த்துவன வேதம், ஆகமம், புராணம் முதலியன. இவைகளைப் பயிற்சி செ-வதெற்கென ஒரு தனி மண்டப முண்டு. அம்மண்டபத்தை வேதாகம பாட சாலை என்று கூறலாம்.

இத்தகை அன்பு நெறி வளர்ச்சிக்கு ஆலயம் பெருங் கருவியா யிருத்தலான், அதற்கு நம்முன்னோர்கள் ஏராள

மான பொருள் உதவி வந்தார்கள்; ஆலயங்களுக்குப் பொருளுதவுவது புண்ணியம் என்று புராணங்களில் எழுதி வைத்தார்கள்; ஆலய தருமங்கள் வழாது நடைபெற ஆங்காங்கே மடங்களையும் ஏற்பாடு செ-தார்கள். அம்மடங்களில் உயிர்களுக்கு வேண்டிய எவ்வகை உதவிகளும் செ-யப்பட்டு வந்தன.

இதுவே ஹிந்து தேவாலாயங்களின் பண்டை நிலையாகும். அவைகளின் தற்கால நிலையைப் பின்னர் எழுதுவோம்.

(28-6-1918.)

# ஹிந்து தேவாலயங்கள் (ஆ)

ஹிந்து தேவாலயங்களின் பழைய நிலைமையை நேற்று எழுதினோம். இன்று அவைகளின் தற்கால நிலைமையைக் குறித்து எழுதுகிறோம். கட்புலனுக்கு இன்பம் பயக்கக்கூடிய சிற்ப அமைப்புகள் எவ்வாறு இருக்கின்றன? அவைகளின் அருமைகளை உற்றுநோக்குவோர் எத்தனை பேர்? ஆலயத்தில் சிற்பநுட்பங்கள் உண்டு என்ற எண்ணம் எத்தனை பேருக்குத் தோன்றுகிறது? என்பனவற்றை ஒவ்வொரு ஹிந்துவும் யோசிக்கவேண்டும். ஆலயங்களிலுள்ள சிற்ப அமைப்புக் களை உற்று நோக்கி யின்புறுவோர் மிக அரிய ராயினர். கோயில் ஊழியர்கள் தூண்களிலுள்ள அழகிய சிறிய பிம்பங் களின் அங்க நுட்பங்கள் கண்ணுக்குப் புலனாகா வண்ணம் அவைகள்மீது சுண்ணம் பூசி விடுகிறார்கள்; பிரசாதந் தின்ற பிறகு அவைகள் மீது கையைத் துடைக்கின்றார்கள். சிற்ப சாஸ்திரிகளுக்கு இன்ப மூட்டக்கூடிய பல உருவங்கள், சிலரது மூடச் செயலால் மறைந்து, பிண்டம் போல் தோன்று கின்றன.

ஆலயங்களிலுள்ள சிற்பங்கள் நின்று பயன்தராத குற்றத்துக்கு உட்பட்டுக் கிடக்கின்றன. அவைகளினால் விளை யும் இன்பத்தை ஹிந்துக்களிற் பலர் நுகரா தொழிகின்றனர்.

பண்டைக் காலத்திருந்தவர்கள் சிற்ப அமைப்புக்களால் கட்புலனுக்குரிய இன்பத்தை நுகர்ந்து வந்தார்கள். தற்காலத் துள்ளவர்கள் அவ்வின்பத்தை வேறொன்றின் வாயிலாக நுகர்ந்து வருகிறார்கள். அஃது யாது? அதுதான் வேசைமார் களின் போலி நடனமாகும். முன்னாளில் ஆண்மக்களைப் போலப் பெண்மக்களும் இறைபணி செ-து வந்தார்கள். இறைபணி செ-யும் ஆண் மகன் தேவடியான் என்றும், தாசன் என்றும் அழைக்கப்படுவான்; பெண் மகள் தேவடியாள், தாசி என்றழைக்கப்படுவாள். அப்பெண் மகள் அகத்துறவு பூண்டு ஆண்டவனையே வழிபட்டுவருவாள். அவள்ட்டையும் பொன்னையும் ஒன்றாகப் பார்ப்பாள்; பட்டையும் பருத்தியை யும் ஒன்றாகப் பாவிப்பாள்; ஒழுக்கத்தை உயிரினும் ஓம்புவாள். இத்தகையோர் தேவடியார் என்றும் தாசியர்

என்றும் அக்காலத் திருந்தவர்களால் அழைக்கப்பட்டு வந்தனர். இடைக் காலத்தில் ஆலய அதிகாரிகள் தீயொழுக்க முடையாரை ஆலயப் பணிக்கு அமர்த்திக் கொண்டார்கள். இதனால் உத்தம குணமுடையார் ஆலயத்தொண்டு செ-யக் கூசி - நாணி வாளா இருந்து விட்டனர். நாளேற நாளேற ஆலய அதிகாரிகள் பேருதவியால் தீயொழுக்க முடைய போலித் தேவடியார்களுக்கு உரிமை யேற்பட்டு விட்டது. அவரது தீச்செயலால் ஆலயங்களின் கொள்கை அறிவுடை யவரால் எள்ளி நகையாடப் படுவதாயிற்று.

செவிக்கின்பமூட்டும் சங்கீத ஞானமும் இக்காலத்தில் குறைவுபட்டு வருகிறது. புலன் ஒன்றக் கூடியவாறு இசைக் கருவிகளை வாசிப்போர் இதுகாலை ஒரு சிலரே யிருக்கின் றனர். இப்பொழுது பல தேவாலயங்களில் ராஜதகுணத்தை எழுப்பக்கூடிய மேல்நாட்டு வாத்தியங்கள் வாசிக்கப்படுகின்றன. ராஜதகுணத்தால் மனிதன் புலன் ஒன்றப்பெற்று, ஆத்ம இன்பத்தைப் பெறுவனோ? ஒருபோதும் பெறமாட்டான்.

பிற புலன்களுக்கு இன்பந்தரக்கூடிய பொருள்களும் நிலைகுலைந்திருப்பதை விரிக்கிற்பெருகும். அவைகளில் பெரும்பாலன அனுபவத்தி லிருக்கின்றமையால், அவைகளை நேயர்கள் ஊகித்துக்கொள்ளலாகும்.

ஐம்புலவாயிலாக ஆத்மவின்பத்தை உண்டாக்கி, அதன் மூலமாகச் சகோதரத்வத்தை வளர்ப்பது ஆலய மென்பதை நேற்றுச் சுருங்கக் கூறினோம். அவ்வைம் புலன்களுக்கு இன்பந் தரக்கூடிய நெறிகள் இப்பொழுது பிறழ்ந்துவிட்டமையால், ஆத்ம இன்பமும், சகோதரத்வமும் குன்றிப்போ- விட்டன. ஆத்ம இன்ப உணர்ச்சி யில்லாதவனிடத்துச் சகோதரத் தன்மை யிராதென்பது சாஸ்திரக் கொள்கை.

ஆத்ம இன்பத்தை அறிவிப்பதற்குக் கருவியாயுள்ள வேதாகமங்களைப் பயிற்சி செ-வதற்கென நிருமிக்கப்பட்ட மண்டபங்கள் மாடுகள் கட்டுதற்கும், ஆடுகள் படுப்பதற்கும், பிறவற்றிற்கும் உபயோகப்படுகின்றன. ஆலயங்களில் பல மண்டபங்கள் பாழாக் கிடக்கின்றன. பிரசங்க மண்டபம் என்றொரு மண்டபமுண்டு. அதில் கற்றவர்கள், ஆலய தரிசனத்துக்கு வரும் அடியார்களுக்கு ஒழுக்கம், நீதி, அன்பு, தத்துவம் இவைகளைப்பற்றிப் பிரசங்கஞ் செ-வார்கள். இப்பொழுது அம்மண்டபம் எவ்வேலைக்கு உபயோகப்படு கிறது? அது பிரசங்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மண்டப மென்பது கோயில் தரும கர்த்தர்களுக்கே தெரியாது. கோயில்

களைப் பாதுகாக்க ஏற்பட்ட மடங்கள் இதுகாலை எவ்வா றிருக்கின்றன? அதை விரித்துரைக்க வேண்டுவது அநாவசியம்.

ஆலயங்களின் தற்கால நிலை இக்கால நாகரிகம் உணர்ந்தோர்க்கு மிக ஆபாசமாகத் தோன்றும் என்பதிற் சந்தேகமில்லை. அறிவுடையோர் எள்ளி நகையாடக்கூடிய பல சிறுமைச்செயல்கள் ஆலயங்களில் நடைபெறுகின்றன.

அன்புவடிவாக உள்ள ஆண்டவனைப் பூசிக்கும் பிராமணன் இதுகாலை எத்தகையனாக இருக்கின்றான்? கல்லாயினும் ஒருகால் கனியும். அவன் பாழ்மனம் ஒருகாலுங் கனிவதில்லை. நீண்ட தூரத்தி லிருந்துவரும் எத்தனையோ பேர் பணக்குறைவால் இறைவனைக் காணாது செல்கின்றனர். அவர்கள் எவ்வளவு வருந்தி வருந்திக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்பினும் பார்ப்பான் கதவைத் திறந்து கடவுளைக் காட்டுவ தில்லை. ஆலயங்களைச் சுங்கச்சாவடிகளாக்கி விட்டார்கள் மாபாவிகள். ஆலய ஊழியருள் பெரும்பாலோர் கள்ள ராகவே யிருக்கின்றனர். இத்தீயர் உறையும் இடத்தில் ஈசன் சகளீகரித் திருப்பனோ? "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை" என்றும், "கள்ளமுள்ளவருக் கருள்வானலன்" என்றும் "பொக்க மிக்கவர் பூவு நீருங் கண்டு-நக்கு நிற்பன் அவர் தமை நாணியே," என்றும் "வஞ்சனையால் அஞ்செழுத்து வழுத்து வார்க்குச் சேயானை" என்றும் பெரியோர்கள் கூறியிருத் தலை நேயர்கள் கவனிப்பார்களாக.

ஆலயக்கொள்கைகள் மாறி விட்டமையால் ஆலயத் துக்குச் செல்வோர் தொகை அருகிவிட்டது. ஆலயங்களி லுள்ள களியாடல்களைக் காணவே பெரும்பாலோர் செல் கின்றனர். சிலர் காமிய கருமத்தை நிறைவேற்றிக் கொள்ளச் செல்கின்றனர். ஆண்டவனைத் தொழச் செல்வோர் ஒரு சிலரே. சுருங்கச் சொல்லின் அன்பு நெறி வளர்ச்சிக்கு ஏற்பட்ட ஆலயங்கள், அதன் வீழ்ச்சிக் கருவிகளாக மாறிவிட்டன என்னலாம். இந்நிலையிலேயே ஆலயங்கள் விடப்பட்டிருக்கு மாயின், அவைகள் கதி என்னாம் என்பதை விரித்துரைக்கவும் மனம் நடுங்குகிறது.

நம்முன்னோர்கள் ஆத்ம இன்பவளர்ச்சியை நாடி என்னிறந்த பொருளைச் செலவழித்துக் கட்டிய ஆலயங்கள் பாழ்படுவதைக் கண்ணுற்றும் வாளா காலங்கழிக்கும் அறிஞர்கள், செ-ந்நன்றி கொன்ற பாவத்துக்கு ஆளாவார்கள் என்பதில் சந்தேகமுண்டோ? நாட்டைச் சீர்திருத்தஞ் செ-வது கற்றவர் கடனோ? கல்லாதவர் கடனோ? நேயர்களே! யோசித்துப் பாருங்கள்.

ஆலயங்களிற் செ-யப்பட வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி மற்று மொருநாள் எழுத உத்தேசித்திருக்கின்றோம்.

***முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்***
***மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்***
***கன்னங் களவு மிகுத்திடுங் காசினி***
***என்னருள் நந்தி எடுத்துரைத் தானே.***

***பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தனை அர்ச்சித்தால்***
***போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்***
***பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மென்றே***
***சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே*** -திருமூலர்.

*(29-6-1918)*

# ஹிந்து தேவாலயங்கள் (இ)

*கடந்த வெள்ளிக்கிழமையும் (28-6-18) சனிக்கிழமையும் (29-6-18) முறையே ஹிந்து தேவாலயங்களின் முற்கால நிலையைப் பற்றியும், அவைகளின் தற்கால நிலையைப் பற்றியும் எழுதினோம். ஹிந்து தேவாலயங்களில் செ-யப்பட வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி இன்று எழுதுகிறோம்.*

*பண்டைக்காலத்தில் ஆலய பரிபாலனம் பெரிதும் அரசர் களால் நடத்தப்பட்டு வந்தது. ஆலயங்களின் செழுமையைக் கவனிப்பதில் அரசர்கள் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். அரசர்கள் முயற்சியால் ஆலய காரியங்கள் செவ்வனே நடை பெற்று வந்தன; நம்மையாளும் பிரிட்டிஷார் தொடக்கத்தில் ஆலய காரியங்களில் தலையிட்டிருந்ததாகத் தெரியவருகிறது. இப்பொழுது ஆலய பரிபாலனம் அரசாங்கத்தார் வசத்தில் இல்லை என்பதைப் பலர் அறிவர். அஃது அரசாங்கத்தார் பார்வையில் வருமட்டும் நாமே அதைப் பரிபாலனஞ் செ-யல் வேண்டும். அரசாங்கத்தார் உதவியின்றி ஆலயங்களைச் சீர்திருத்தஞ் செ-தல் மிக அருமை. அவர்தம் உதவியைப் பெற முயற்சி செ-யவேண்டுவது நம்முதற் பெருங் கடமை.*

*எவ்வகை முயற்சியும் ஒருவர் இருவர் உழைப்பால் சித்திபெறாதென்பது திண்ணம். பலர் கூடிய ஒரு சங்கம், தான் எண்ணிய கோரிக்கையை நிறைவேற்றும். மேல்நாட்டார் சங்கங்களின் வாயிலாகவே காரியசித்தி பெறுகின்றனர். சங்கங் களால் விளையும் நன்மைகளை நம்மவரிற் பலர் இன்னும் உணரவில்லை. சங்க அமைப்புக்கு முக்கியமாக வேண்டுவது ஒற்றுமை. ஒற்றுமைக்குள்ள ஆற்றல் பிறிதொன்றிற்கு மில்லை.*

*தேவாலயங்களைச் சீர்திருத்தஞ் செ-ய வேண்டுமெனச் சில அறிஞர் சிற்சில இடங்களில் முயற்சி செ-கின்றனர். இம் முயற்சி சங்கங்களின் வாயிலாக நடத்தப் பயிற்சி செ-ய வேண்டும்.*

*ஹிந்து சமயத்தை இரு கூறாகப் பிரிக்கலாம். ஒன்று சைவம்; மற்றொன்று வைஷ்ணவம். இவ்விரு சமயங்களுக்கும் இருசமாஜங் களிருக்கின்றன. இவைகள் இரண்டும் தேவாலய*

சீர்திருத்தஞ் செ-ய இன்னும் முயலவில்லை; வருடத்துக் கொருமுறை ஓரிடத்தில் கூடிக் கலைந்துவிடுகின்றன. ஹிந்துக் களுக்கு ஆலய வழிபாடு மிக அவசியம் என்பது பலருக்குந் தெரியும். ஆலய வழிபாடு ஆனந்தப் பெருக்கிற்கு ஊற்றாகும். இவ்விரு சமாஜங்களும் வருடத்துக் கொருமுறை கூடிப் பல அரிய உபந்நியாசங்கள் செ-வதனாலும் மாதாந்த சஞ்சிகை களை வெளியிடுவதனாலும் பெரும் பயன் விளையா தென்பது சத்தியம். இனி இவ்விரு சமாஜமும் ஆலயங்களைச் சீர்திருத்தும் முறையில் சிறிது ஊக்கங்கொண்டு உழைக்கு மென நம்புகிறோம்.

இப்பொழுது பெரும்பாலும் ஆலயங்களைப் பற்றிய வழக்குகள் நியாயஸ்தலத்துக்குச் செல்கின்றன. வழக்குக்குக் காரணம் அசத்தியமும் அயோக்கியத் தன்மையுமேயாகும். இவ்விரண்டும் இடைக்காலத்தில் ஆலய பரிபாலனஞ் செ-வோரிடத்துக் குடி கொண்டு விட்டன. பண்டைக்காலத்தில் சத்திய வழி நின்று ஒழுகுவோரே பெரிதும் ஆலய தருமங் களைப் பாதுகாத்து வந்தனர். இப்பொழுது ஆலயப் பொருளை அபகரித்து வாழ வேண்டுமென்னும் எண்ணம் உடைய பலர் ஆலய தருமகர்த்தராக வருகின்றனர். அன்னார் ஆலயத்தை வியாபாரக்கடையாக மாற்றி விடுகின்றனர். வியாபாரக் கடை அசத்தியத்திற்கு நிலைக்களம் என்பது சிறு குழந்தைகளுக்குந் தெரியும். ஆலய நிருவாகம் ஊரவர்களால் தெரிந்தெடுக்கும் ஒரு கூட்டத்தாரால் நடைபெறல் வேண்டும். அக்கூட்டம் சமயப் பற்றுடையதாயிருக்க வேண்டுமென்பது ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

ஒவ்வோர் ஆலயச் சார்பாக ஒவ்வொரு பாடசாலை யிருத்தல் வேண்டும். அதில் வேதாகமங்கள் போதிக்கப்படல் வேண்டும். ஆங்கே வேதாகமங்களைப் பயின்று பரீட்சையில் தேறிய அறிஞரைக் கோயில் அர்ச்சகராக அமர்த்தல் வேண்டும். அப்பாடசாலையில் ஆலய ஊழியர் எல்லாருக்குஞ் சமயக் கல்வி போதித்தல் வேண்டும். ஆலய ஊழியர் அனைவருஞ் சமயஞான முடையவராக இருத்தல் வேண்டும். பிரசங்க மண்டபம் பிரசங்கத்துக்கே பயன் படல் வேண்டும். அது பிறிதொன்றிற்கும் பயன்படலாகாது. அம்மண்டபத்தில் தக்கவர்களைக் கொண்டு புண்ணிய நாட்களில் பிரசங்கங்கள் செ-விக்கவேண்டும்.

இப்பொழுது தற்கால நாகரிகம் பரவியுள்ள இடங் களில் உற்சவங்கள் ஆகமக் கொள்கைக்கு மாறாக நடைபெறு

கின்றன. அவ்வாபாசங்களை விரித்தெழுத 'பக்த' னுக்கு விருப்பமில்லை. தூர்த்த அலங்காரங்களும், பாணங்களும், விளக்குகளும், பிறவும் மனிதன் அறிவைப் பிரவிர்த்தி மார்க்கத்தில் இழுத்துக் கொண்டு செல்கின்றன. அவைகள் கீழ்மக்களைக் களிப்புறச் செ-யுமன்றி, மேன்மக்களை இன்புறச் செ-யா. இன்னும், சில நகர்ப்புறங்களில் ஆகமக் கொள்கைப் படி உற்சவங்கள் நடத்தப்படுகின்றன. அவை மனிதன் புலன் களுக்கும் உள்ளத்திற்கும் இன்ப அன்பை உதிக்கச் செ-கின்றன.

ஆலயங்களில் சுங்கம் வாங்கும் வழக்கத்தை அறவே ஒழித்தல்வேண்டும், சுங்கம் வாங்குவோன் கடவுளைப் பூசிப் பவனா யிருப்பினும், அவன் உள்ளத்தைக் கடவுள் வெறுத்தே நிற்பர் சுங்கங் கட்டப் பணமின்றி வருத்தத்தோடு திரும்பும் ஏழையினுள்ளத்தையே கடவுள் விரும்புவர். அர்ச்சகனும் மற்ற ஊழியரும் சமயஞானமுடைய அன்பர்களா யிருப்பின், அவர்கள் பொருளாசையால் ஏழைகளை வருத்தமாட் டார்கள். அர்ச்சகர்கள், பொருளுடையாரை ஒருவகையாக வும், பொருளில்லாதாரை ஒருவகையாகவும் நடத்தும் கொடிய வழக்கத்தை ஒழித்தல் வேண்டும்.

சில தேவாலயங்களில் ஓதுவார்கள் என்னும் ஒரு கூட்டத்தார் இருக்கின்றனர். பூசாகாலங்களில் தமிழ் வேதம் ஓதுவது இன்னவர் கடமை. இக்கூட்டத்தவரும் இதுகாலைப் பொருளாசையால் பழைய வழக்க ஒழுக்கங்களுக்கு மாறாக நடந்துவருகின்றனர்; பழைய பண்ளை, (மறந்தோ மறவா மலோ) கூத்தாடிகள் இராகங்களாக மாற்றிக் கீழ்மக்களைக் களிப்பித்துப் பொருளீட்டும் முறையை அனு டித்து வருகின் றனர். பலர் பாக்களின் பொருளுணராது பிழைபட அவை களை ஓதுகின்றனர். ஆலயத்திற்கென ஏற்படும் பாடசாலை யில் ஓதுவார்களும் கல்வி பயின்று தேறல் வேண்டும்.

தாசிகளென நடிக்கும் வேசைமார்கள் ஆலயங்களில் உரிமைபெற்ற வரலாற்றைச் சென்ற சனிக்கிழமை சுருங்கக் கூறினோம். இவ் வேசைமார்கள் செயலால் விளைவது நன்மையோ? தீமையோ? இதைப் பகுத்தறிதல் வேண்டும். வேசைமார்களால் ஆலயங்களில் தீமையே விளைகிறது என்ற உணர்ச்சி ஏறக்குறைய எல்லா அறிஞரிடத்துந் தோன்றியிருக் கிறது. தோன்றியும் பயன் விளைந்ததோ? இல்லையே. வேசை மார்களும் மனிதப்பிறவி தாங்கினவர்கள். அவர்களும் மனிதப் பிறவியினாலாய பயனை அடையவேண்டியவர்கள். அவர்கள்

அறிவின்மையால் தீயொழுக்கத்தின் வாயிலாக ஊதியம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை அவ்வழியிலேயே நடத்திக்கொண்டு செல்வதோ அறிவுடையோர் கடமை? அவர்கட்குத் தக்க ஏற்பாடுகள் செ-து, அவர்களை ஆலயத்தி னின்றும் விலக்கி, அவர்களையும், அவர்களைத் தரிசிக்க வருவோரையும் தூ-மைப்படுத்த முயலல்வேண்டும்.

ஆலயத்தினுள்ளே சில வகுப்பார் நுழைதலாகா தென்னும் ஒரு நியதியைத் தென்னாட்டார் அனுஷ்டித்து வருகின்றனர். இவ்வழக்கத்தை ஒழிக்கவும் முயற்சி செயல் வேண்டும். ஒழுக்கத்தில் உயர்ந்தோர் அனைவரும் உயர் வகுப்பாரே யாவர். சில வகுப்பினரை ஆலயத்துக்குள் விடாம லிருப்பதனால், ஹிந்து மதம் தசையடைந்து வருகிறது என்பது எமது அபிப்பிராயம். 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதி' என்னும் உணர்ச்சிகொண்டு, எல்லாச் சாதியாரையும் எல்லாச் சமயத்தாரையும் ஆலயத்துக்குள் விட விதி பிறப்பித்தல் வேண்டும்.

ஆலய காரியங்களுக்குச் செலவழிந்த பொருள்போக, மிகுதியாக உள்ள பொருளைத் தேச முன்னேற்றத்துக்குரிய வழிகளிற் செலவழிக்க ஏற்பாடு செ-யல் வேண்டும்.

விரிவஞ்சி விடுக்கின்றோம்.

(1-7-1918)

# மடாதிபதிகள்

மடங்களுக்குத் தலைவர்களா யிருப்பவர்கள் மடாதி பதிகள் எனப்படுவார்கள். அவர்கள் பண்டார சந்நிதிக ளென்றும், தம்பிரான்களென்றும், ஆச்சாரிய சுவாமிக ளென்றும் அழைக்கப்படுவார்கள். பௌத்தர் காலத்திலேயே பல மடங்கள் இருந்ததாகச் சரித்திரங் கூறுகிறது. அசோகர் அளவில்லா மடங்களைக் கட்டினர். தமிழ் நாட்டில் சோழ பாண்டியரால் அமைக்கப் பட்ட மடங்கள் எண்ணில. மடங் களில் தலைவராயமர்ந்தோர் கல்வி யறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவரா-, அகத்துற வுடையோரா- இருந்தனர்; தம்முயிரைப் போல மன்னுயிரைப் போற்றிய அருளாளராயிருந்தனர். ஓரேழைக்காகத் தம்மரிய உயிரைக் கொடுத்த மடாதிபதியும் தமிழ்நாட்டில் வாழ்ந்ததாகப் பெரியோர் சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். மடாதிபதிகள் கடவுளுக்கு ஒப்பாகப் போற்றப்பட்டு வந்தார்கள். அவர்கள் உள்ளத்தில் அன்பு வடிவான ஆண்டவன் அருள் பொலிந்து விளங்கும். அவர்கள் யோகிகளுக்குரிய உணவுகொண்டு போகத்தை யொழித்திருப் பார்கள். தம்பிரான்கள், மடத்துக்கு வருவோரை ஆதரிக்கு மாறு, ஏராளமான பொருளை ஊரவர்களும் மன்னர்களும் மடங்களுக்கு உதவி வந்தார்கள். மடாதிபதிகள் அப்பொருளை மற்றவர்க்கே பெரிதும் பயன்படுத்துவார்கள். யாத்திரைவாசி கள் மடங்களைத் தங்கள் சொந்த வீடுகள் போல் கருதி அவைகளில் தங்குவார்கள். சீடர்களெல்லாரும் ஞானநூல் ஆரா-ச்சி செ-வர். மடங்களில் கல்வி இலவசமாகப் போதிக்கப்பட்டு வந்தது. இப்பொழுதுள்ள பல புத்தகங்கள் மடத்தவர்களாலும், மடத்தவருதவி பெற்றவர்களாலும் எழுதப் பட்டவை. சுருங்கச் சொல்லில் மடாதிபதிகள் தங்களை நாடி வருவோர் உடலை வளர்க்க உணவும், அறிவை வளர்க்கக் கல்வியும் உதவி வந்தார்கள் என்னலாம். பண்டாரசந்நிதிகள், அரசரும் தங்களை வழிபடும் பெருமையுடையவர்களா யிருந் தார்கள். சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளாக யிருந்தார்கள். சுமார் எழுபத்தைந்து ஆண்டுகளாக மடாதிபதிபதிகள் நிலை, குலைந்து கொண்டே வருகிறது.

ஜனங்கள் ஆங்கிலம் பயில்வதிலும் உத்தியோகஞ் செ-வதிலும் ஊக்க முடையவர்களானார்கள்; தீட்சைபெற்று ஞான நூலாரா-ச்சி செ-வதை அறவே ஒழித்தார்கள். தங்களை நாடிவரும் அறிவுடையோர்கள் வேறு துறை பற்றி யொழுகு தலால், மடாதிபதிகளும் வேறு துறைகளில் இறங்கத் தலைப் பட்டார்கள். அவர்கள் ஞானத்துறை விடுத்து ஊனத்துறை யடைந்தார்கள்; யோகத்தை வெறுத்துப் போகத்தை விரும்பி னார்கள். ஞானாரா-ச்சி செ-து கொண்டிருந்த சீடர்கள், வேறு ஆரா-ச்சி செ-து, பண்டார சந்நிதிகளுக்குத் துணை போகின்றார்கள். யாத்திரை வாசிகள் மடங்களில் தங்க அஞ்சு கின்றார்கள். பல மடங்களில் கொலை பொதுதருமமாக அனுஷ் டிக்கப்பட்டு வருகிறது. ஆச்சாரிய சுவாமிகள் போகத்துக்கு வேண்டிய சிற்றின்பக் காரியங்களை யொழுங்கு படுத்துவதில் சீடர்கள் ஊக்கமும் உண்மையும் உறுதியுங் காட்டி வருகின் றார்கள். சில மடாதிபதிகள் புலால் உண்பதாகவுங் கேள்விப் படுகிறோம். அவர்தம் அறச்சாலைகள் மறச்சாலைகளாக மாறி விட்டன. அரசர்களும் ஊரவர்களும் பொது தருமத்துக்கு உதவிய அரும் பொருள் பொது மகளிருக்குப் பயன்படுகிறது. மடாதிபதிகள் ஆங்கிலோ இந்தியர்களை வரவழைத்து விருந்து செ-விக்கின்றார்கள். அந்தோ! நம்முன்னோர் பணம் புலாலுக்கும் பிராந்திக்கும் செலவாகின்றது!! மடங்கள், உத்தியோகஸ்தர்களுக்குச் சொந்த சாலையாக உபயோகப் படுகின்றன. மடாதிபதிகளைச் சிறு குழந்தைகளும் பொருள் படுத்துவதாகத் தெரியவில்லை. இப்பொழுது மடாதிபதிகள் “மடங்கள் பொது ஜனங்களுக்கு உரியவை அல்ல; முன்னோர் அளித்த பொருளைக் குறித்துப் பொது ஜனங்களுக்குக் கேட்க உரிமையில்லை. எங்கள் விருப்பப்படி பொருளை நாங்கள் செலவழிக்கலாம்” என்று கூறுவதாகவுங் கேள்விப்படு கிறோம். சத்தியமே நிலவியிருந்த அக்காலத்தில் உறுதிச் சீட்டு முதலிய ஏற்பாடுகளின்றிப் பொதுக் காரியங்கள் நடத்தப்பட் டிருக்கலாம். அசத்தியமும் அயோக்கியத்தன்மையும் பெருகப் பெருக நீதிஸ்தலங்கள் பெருகும் என்பதை விளங்கவுவுரைக்க வேண்டுவது அநாவசியம். நாணமின்றி மடாதிபதிகள் நியாய சபையேறி வழக்கிடுகின்றார்கள். ‘ஒழுக்கம்’ அவர்களைக் காணக் கூசுகிறது; ‘சாத்விகம்’ அவர்களைக் கண்டு நடுங்கு கிறது அரக்கர் குணமெல்லாம் மடாதிபதிகளிடத்தில் பதிந்து கிடக்கின்றன. தீய ஒழுக்கத்திற்கு உறை விடமாகவுள்ள இப் போலிச் சுவாமிகள் புற ஒழுக்கத்தைப் பொன்னே போல்

போற்றி, ஊரையே மாற்ற நடிப்பதை அறிவுடையோர் உணர்ந்திருக்கின்றனர்.

பண்டாரச் சந்நிதிகள் சிற்றின்பத்துறையில் எளியரா யினுமாக, அதைக் கலியுகக் கொடுமையென ஒதுக்குகின் றோம். ஜனங்களுக்காக உழைக்க அவர்கள் வெளிவர வேண்டு மென்பது எமது வேண்டுகோள். அறிவிற் சிறந்த சில மடாதி பதிகள் தற்கால நாகரிக உணர்ச்சி பெற்று உலகத்திற்கு வேண்டிய சிலகாரியங்கள் செ-கிறார்கள். அவர்கள் திருவடிகளுக்கு நமஸ்காரஞ் செ-கின்றோம். சமயவளர்ச்சிக்காக மடாதிபதிகள் எவ்வளவோ வேலை செ-யலாம். அவர்கள் பல சங்கங் களைக் காணலாம்; பல நூல்களை யெழுதி வெளியிடலாம்; பல விடங்களுக்குச் சென்று உபந்நியாசமாரி பொழியலாம்; ஆலயங்களைச் சீர்திருத்தஞ் செ-யலாம். இன்னோரன்ன அறச் செயல்கள் பல செ-ய மடாதிபதிகள் எல்லோரும் ஒன்றுகூடி யோசித்து உலகத்தோ டொத்து உழைப்பாராக.

(28-1-1918.)

# வேதாந்திகள் என் செய்கிறார்கள்?

பாரத மாதாவின் பொன்மேனியைக் கருமேனியாக்க வல்ல இருட்டு மசோதா சட்டமாகிவிட்டது. அதிகார வர்க்கத்தார், உலக நிலையையும், இந்தியாவின் நிலையையும் ஆ-ந்தோ-ந்து பார்க்க அவகாசமின்றி மிக விரைவாகக் கொடிய சட்டத்தை நிறைவேற்றிவிட்டனர். இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சியினரும் அச்சட்டத்தை வெறுக்கின்றனர்; மறுக் கின்றனர்; ஆனால் அச்சட்டத்தை ஒழிக்க வேண்டிய முறைப் பாடுகளில் சிறிது மாறுபடுகின்றனர். எல்லாக் கட்சியினரும் ஒரு முகமாக மசோதாவை மறுத்தும், அம் மறுப்புரைகளை ஒரு பொருட்படுத்தாது, அதிகாரவர்க்கத்தவர் தங் கருத்து வழி நின்று காரியத்தை முடித்துக்கொண்டனர். ரௌலட் சட்டம் இந்தியாவின் சுதந்தரத்தை வேரோடு களைவது என்பதை யாவரும் அறிந்திருக்கின்றனர்; அறிந்தும் அதைக் களைய முந்துகின்றாரில்லை. காரணம் அச்சமும் பிறவுமே யாம்.

அச்சமும் பிறவும் அறிஞர்க்கு உண்டாதல் அருமை. ஈண்டு அறிஞர் எனப்படுவோர் மேல் நாட்டுக் கல்வி பயின்று மனித தருமத்தை மறந்திருப்பவரல்லர்; தேகம் பொருள் அன்று என்ற உறுதி நிலை கைவரப் பெற்றவரேயாவர். அறிஞரை வேதாந்தி என்றுங் கூறலாம். வேதாந்தி யாவார் அறிவின் முடிவுநிலை கண்டவர்.

வேதாந்தம் பிறந்த இடம் இந்தியா என்பதை உலகம் அறியும். வேதாந்தம் என்பது எல்லாச் சமய முடிபாக இருப்பது. அது, சைவர், வைணவர், புத்தர், மகமதியர், கிறிஸ்தவர் முதலியோருக்கும் உரியது. இச்சமயத் தலைவர்கள் யாவரும் வேதாந்த நிலையைக் கண்டவரேயாவர். அவ்வேதாந்த நிலையைக் கண்டவருள் பெரும்பாலோர் இந்தியர் என்பது கவனிக்கற்பாலது. பண்டைக்காலத்தில் அறச்சாலைகளிலும் தவச் சாலைகளிலும் மடங்களிலும் வனங்களிலும், முனிவர் களும் ரிஷிகளும் குருமார்களும் சந்நியாசிகளும் வேதாந்தங் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடியிருப்பார்கள். அவர்களைப் புலியும் பாம்பும் ஒன்றுஞ் செ-யா. அவர்கள்

ஆத்மசக்தி, நாட்டில் வாழும் அரசர்களையும் குடிமக்களையுங் காத்துவந்தது. பழைய காலத்தில் இந்தியாவை ஆண்டது, ஆத்மசக்தி என்று கூறுவது மிகையாகாது. நம் பெரியோர்கள் ஆத்மசக்தி கைவரப்பெற்ற வேதாந்திகளாக இருந்தபடியால், அரசர்களுக்கும் அரக்கர்களுக்கும் அமரர்களுக்கும் அஞ்சாது, உலகத்தில் தருமத்தை வளர்த்து வந்தார்கள்.

தேகத்தைப் பொருளாக மதித்து, 'நான் தேகம்' என்ற எண்ணமுடையோரை அச்சம் அலைத்துக் கொண்டேயிருக்கும். அன்னார் பூனைக்கும் எலிக்கும் அஞ்சுவர். 'நான் தேகமல்ல' என்னும் வேதாந்த நிலையைப்பெற்ற நம் முன்னோர்கள் அனுஷ்டித்த முறைகளும் அனுபவங்களும் பின்னர் உபநிடதங்களாகவும், ஞான வாசிட்டம், கீதை, பிரம சூத்திரம், ஆகமங்கள் முதலிய நூல்களாகவும் வகுக்கப்பட்டன. பின்வந்தார் இந்நூல்களை வாசித்து அவைகளின் போதனை வழி நின்று தம்மையுணர்ந்து தலைவர்களானார்கள்.

ஏறக்குறைய ஒரு நூறாண்டாக இந்தியருள் சிலர் வேதாந்தத்தை மறந்து, தேகாத்ம வாதத்தை எளிதில் பெறுவிக்கக்கூடிய நூல்களைப்பயின்று, பாரத நாட்டின் நாகரிகத்தைக் குலைத்தனர். மேல் நாட்டு நாகரிகம் பரவப் பரவ நம்மவர்கள் வேதாந்த ஆரா-ச்சியை விடுத்தார்கள். வேதாந்த ஆரா-ச்சியில் தலைப்பட்ட பெரியோர்களும், நூலாரா-ச்சியளவாக நின்று, அனுஷ்டான முறையை மறந்தார்கள். இதனால் செ-கை வேதாந்தஞ் செத்து, வா-வேதாந்தம் பரவலாயிற்று. அச்சுக்கூடங்கள் மலியும் இந்நாளில் வேதாந்த நூல்களை வாசிப்போர் தொகையில் பெருகி வருவதை மறுப்போரில்லை. அனு டான வேதாந்திகள் அருகி விட்டதைக் குறித்து யாம் வருந்துகிறோம்.

வேதாந்த ஞானம், நூல் அளவாக நின்றமையால், இந்தியாவில் ஆத்மசக்தி குன்றிப்போ- விட்டது. வேதாந்தி என்று வெளிவருவோர் அச்சத்தாலும் பயத்தாலும் விழுங்கப் பட்டுத் தேகாத்ம வாதிகளாகி விடுகிறார்கள்; பணக்காரர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் கள்ளர்களாக மாறிவிடுகிறார்கள். வேதாந்த தீட்சை பெற்றுச் சந்நியாசிகள் என்று வெளிவருவோர்களின் நிலை மிகப்பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் உள்ளத்தில் பிறரைப்பற்றிய எண்ணம் புகுவதில்லை. அவர்கள் தங்கள் வயிறு வளர்க்கவேண்டிய வழிகளை யோசிப்பதில் காலத்தைக் கழித்து விடுகின்றார்கள்.

தஞ்சுகத்தைக் கருதுவோர்க்கு ஆத்மஞான சக்தி தோன்றுதல் அருமையன்றோ?

உலகத்தை ஆத்மசக்தியால் ஆளவேண்டிய வேதாந்திகள் நிலை இங்ஙனமாகவே, உலகாயுதக்கொள்கை யுடையோர் அதிகாரமும் செல்வாக்கும் ஊற்றெடுத்து ஓடலாயின. வயிறு வளர்க்கும் வேதாந்திகள் உலகாயுதர்களைக் காணின் நடுக்குறுகின்றார்கள். பாவம்! உலகம் தேகாத்ம வாதிகள் வழியாக ஆடிக்கொண்டிருக்கிறது!! வா- வேதாந்தம் பேசிக் காலத்தைக் கழிக்குஞ் சந்நியாசிகளை யாம் குறை கூறப் புகவில்லை. அவர்கள் நிலையிழந்து நிற்கின்றார்களே என்ற இரக்கங்கொண்டு இவ்வாறு எழுதப் புகுந்தோம்.

சில வேதாந்திகள் உலகத்தைப் பற்று, பற்று என்று கூறிப் பணம் பறிக்கின்றார்கள். தேகத்தைப் பொருளாக்கொண்டு, அதை வளர்த்து வருவோனே "உலகத்தைப் பற்று, பற்று" என்று கூறி ஒதுங்குவன். உண்மையாக உள்ளப்பற்றை அறுத்த ஒருவன், தான் தாங்கிய பிறவி மற்றவர் பொருட்டு என்ற உணர்ச்சி பெற்று, நிஷ்காமிய கருமயோகியாகி, உலகத்துக்கு உழைப்பதையே தனக்குரிய தொண்டாகக் கொள்வான். பிறர்க்குழைத்தலைப் பற்றாகக் கொள்வோன், தன் பற்றை யறுக்காதவன் என்பதை நேயர்கள் நன்கு உணரல்வேண்டும். பற்றை யறுத்த பெரியோர் மோட்ச இன்பத்தையும் விரும்பாது, உலகத்துக்கு உழைக்க முந்துவர். அத்தகை அருளாளர் உடலை மாயா உடல் என்று கருதுவது அறியாமை. அப் புனிதர் உடலைக் கைலாயம், வைகுந்தம், பரலோகம், மோட்ச லோகம் என்றுங் கூறலாம்.

இப்பொழுது வேதாந்திகளென வெளி வருவோருள் பலர் "இராஜாங்க காரியத்தில் தலையிடக்கூடாது" என்று சொல்கின்றனர். இராஜாங்க காரியம் இன்னதென்று அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை என்றே கூறுவோம். இராஜாங்க முறை ஒழுங்காக இருப்பின் குடிமக்களுக்குத் துன்பமிராது. அது முறைதவறி நடப்பின், குடிமக்களுக்குத் துன்பமிகும். குடிமக்கள் துன்பத்தைக்கஷ்டு, மனஞ் சகியாத ஜீவகாருண்யமுடையோர், இராஜாங்க முறையைச் சீர்திருத்த முயல்வது வழக்கம். அன்னார் தேகத்தைப் பொருளாக் கொள்ளாத வேதாந்திகளாக இருப்பர். அரசதருமம் வழுவுங் காலத்து அதை நெறிப்படுத்த வேண்டுவது வேதாந்த ஞானங் கைவரப்பெற்ற சந்நியாசிகள் கடமை. இல்லாவிடின் உலகத் துள்ள எல்லா உயிரும் வருந்த நேரும். குடிமக்கள் துன்பத்தைக்

கண்டு, அதை ஒழிக்க முயலாத வேதாந்தி பெரும்பாவத்துக்கு உள்ளாவன்.

வேதாந்திகள் எவருக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. அவரை அலைக்க (துன்புறுத்த) எவராலும் இயலாது. அவர்கள் பிர்ம சொரூபமாக விருப்பவர்கள். பிர்ம சொரூபம் எத்தகைப் பீரங்கிப்படையாலும் அழிவு பெறாது. "நானே கடவுள்" என்று வாயால் பேசித் தேகத்தையும் பொன்னையும் மண்ணையும் பொருளாக் கொண்டு வாழ்வோர் சுய நலத்தை முன்னிட்டு 'இராஜாங்க காரியத்தில் தலையிடக்கூடாது' என்று கூறிக் கொண்டு ஊரைக் கெடுத்து வருகின்றனர். பொது ஜனங்கள் சோற்றையும் பொருளையும் தின்று வாழ்ந்து வருவோர், அவர்களுக்குத் துன்பம் நேர்ந்த காலத்து, அத்துன்பத்தை யொழிக்க ஏன் முன்வரலாகாது?

"நான் கடவுள்" "கடவுள் நான்" "நான் அது வானேன்" "அது நான் ஆனேன்" என்று பேசி வார்த்தையில் சண்டை செ-யும் வேதாந்திகளும் சித்தாந்திகளும் ஏன் சிறைபுக லாகாது? அவர்கள் வீட்டையும் சிறையையும் வேறாகக் கருத லாமோ? "சிறை வாசம் துன்பம்" "வீட்டுவாசம் இன்பம்" என்று கூறுவோன் 'அகம்பிர்மாஸ்மி' என்னும் மகாவாக்கி யத்தைப் பேசலாமோ?

முப்பத்து முக்கோடி ஜனங்களையும் பாதிக்கப் பெருங் கார் இருள், மலைபோல் உருண்டு வருகிறது. முப்பத்து முக்கோடி ஜனங்களின் பந்தத்தைப் போக்க முயலாது, திண்ணை வேதாந்தம் பேசும் வேதாந்த சந்நியாசியை என்னென்று கூறுவது? வட இந்தியாவிலுள்ள சந்நியாசிகளிற் பெரும்பாலோர் ரௌலட் சட்டத்தை ஒழிக்க முன்வந்திருக் கின்றனர். மகாத்மா முன்ஷிராம் ரௌலட் சட்டத்தை நீறுபடுத்த நிஷ்டை கூடியுள்ள சந்நியாசிகளையும் கூப்பிடு கிறார். அவரல்லரோ வேதாந்த சந்நியாசி?

தமிழ் நாட்டில் வேதாந்த சித்தாந்த சந்நியாசிகள் பல்லாயிரம்பேர் இருக்கின்றார்கள். இவர்களுக்கு மனைவி மக்கள் இல்லை. இவர்கள் சிறைபுகுந்தால் வருந்துவோ ரில்லை. இவர்கள் திண்ணையிலிருந்து கொண்டு வேதாந்தம் பேசிச் சோறு தின்று உறங்கிக் கிடப்பதுபோல் பொது ஜனங்கள் பொருட்டு உழைத்துச் சிறைபுகுந்து ஆண்டு உண்டு உறங்கிக் கிடக்கலாம். தமிழ்நாட்டுச் சந்நியாசிகள் இதைச் சிறிது ஊன்றிக் கவனிப்பார்களாக.

அரசியல் முறைகளில், ஆங்கிலங் கற்றவர்கள் மாத்திரந் தலையிட்டு உழைத்து வந்தமையால் அச்சுச் சட்டம் முதலிய அநாகரிகச் சட்டங்கள் தோன்றின. இப்பொழுது ரௌலட் சட்டம் புறப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தை ஒழிக்கப் பொது வாக எல்லாரும், சிறப்பாக வேதாந்த சித்தாந்த சந்நியாசி களும் புறப்படல் வேண்டும். ரௌலட் சட்டத்தை எதிர்க்கச் சாதாரண அரசியல் ஞானி புறப்படவில்லை. மகாத்மாகாந்தி புறப்பட்டிருக்கிறார். முப்பத்து முக்கோடி ஜனங்களுக்கு உண்டாகப் போகுந் துன்பத்தை ஒழிக்கக் காந்தியடிகளார் ஆத்மசக்தி தாங்கி வெளிவந்திருக்கிறார். காந்தியடிகளார் ஆயுதந் தாங்கிப் பிறவுயிர்க்குத் தீங்கிழைக்கும் கொள்கையை வெறுக்கின்றவர்; ஆத்ம சக்தியால் அடக்கு முறைகறை அடக்கு பவர். அவருக்குத் துணை புரிய ஆயிதந் தாங்கித் திரியும் சேனாவீரர் வேண்டாம்; துஷ்டர்கள் வேண்டாம்; பிறவுயிரை வருத்துபவர் வேண்டாம். பின்னை யாவர் வேண்டும்? அடிக ளார்க்கு ஆத்மஞானங் கைவரப் பெற்றோர் வேண்டும்; எக் காரணம் பற்றியும் பிறவுயிர்க்குத் தீங்கு செ-யாப் பொறுமை யாளர் வேண்டும்; சிறையைச் சிறையாகக் கருதாத சீலர்கள் வேண்டும்; குடும்பமில்லாச் சந்நியாசிகள் வேண்டும். இத் தகையாளர் நந்தமிழ் நாட்டில் இல்லையோ? ஆயிரக்கணக் காகக் கிடக்கின்றார்கள். இப்பொழுது சந்நியாசிகள் வெளிக் கிளம்பி வேலை செ-யாமல் வாளா கிடந்து விடுவார்களாயின், அவர்களை ஆதரிப்போரும், அவர்களுக்குச் சோறிட்டு நீர்வார்ப்போரும் இல்லாதொழிவர். நமது நாட்டில் வேதாந்தம் நிலவாதொழியும். இப்பொழுது புறப்பட்டுள்ள சட்டம் ஒரு சிலரை மாத்திரம் பாதிக்கும் என்று நினைப்பது அறியாமை. அது நாளேற நாளேறச் சமய ஞானிகளையும் சமய நூல்களையும் பாதிக்கும் என்று இப்பொழுதே யாம் தீர்க்க தரிசனங் கூறுகிறோம். ரௌலட் சட்டம் என்னவோ அரசியல் காரியம் என்று வாளாகிடத்தல் வேண்டாம். அச் சட்டஞ் சாதாரணமாக இருப்பதொன்றாயின், மகாத்மா காந்தி அதை ஒழிக்கப் புறப்பட்டிருக்கமாட்டார். அச்சட்டம் நம் சுதந்தரத்தை வேரோடு அறுப்பதென்பதை நன்குணர்ந்து மகாத்மா புறப்பட்டிருக்கிறார். இதை இந்தியர் அனைவரும் கவனிப்பாராக.

வேதாந்த சித்தாந்த சந்நியாசிகளே! உங்கள் முன்னோர்கள் வழியை நாடுங்கள். அவர்கள் அரசாட்சி முறையில் கவலை செலுத்தி உலகத்தைக் காத்து வந்ததைச் சிந்தியுங்கள். உங்கள் நிலை இடைக்காலத்தில் குலைந்து விட்டது. நீங்கள் எழுச்சி

கொள்ளவேண்டிய காலம் வந்து விட்டது. உங்கள் ஆத்ம சக்தியைக் காட்ட வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. நீங்கள் செல்லுமிடங்கள் தோறும், பேசும் சபைகள் தோறும் சத்தியாக்கிரகத்தைப் பற்றிப் பேசுங்கள். வேதாந்த நூல் ஆரா-ச்சியுடையோரன்றோ விரைவில் சத்தியாக்கிரக உண்மையை உணர்ந்து காந்தியடிகளுக்குத் துணைசெ-ய முந்துதல் வேண்டும்? வா- வேதாந்தம் வேண்டாம்; 'அகம்பிர் மாஸ்மி' என்னும் மகா வாக்கியத்தின் பொருளுணர்ந்த நீங்கள் யாருக்கு அஞ்சவேண்டும்? எதற்குப் பயப்பட வேண்டும்? உங்களைக் கட்டுப்படுத்துஞ் சட்டம் உலகத்தில் இல்லை என்பதை நீங்கள் உணருங்கள். வேதாந்த சித்தாந்த சபைகள் எல்லாவற்றையும் இனிச் சத்தியாக்கிரக ஆசிரமமாக மாற்றுங்கள். இந்தியாவின் பொறுப்பு உங்களிடத் திலிருக்கிறது. முப்பத்து முக்கோடி ஜனங்கள் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பயிர்கள் வாடுகின்றன. அவை களை ஆத்மசக்தி என்னும் மழை பொழிந்து வளருங்கள்.

காட்டிலுள்ள சந்நியாசிகளே! வீட்டிலுள்ள சந்நியாசி களே! நிஷ்டை கூடியுள்ள சந்நியாசிகளே! தவத்திலுள்ள சந்நியாசிகளே! சமாதியிலுள்ள சந்நியாசிகளே! எழுந்து வாருங்கள். காந்தியடிகளுக்குத் துணை புரியுங்கள்.

சூட்சும தேகந்தாங்கி உலவிவருஞ் சித்தர்களே! உங்கள் உதவி இப்பொழுது இந்தியாவிற்கு வேண்டும்.

சத்தியசொரூபனே! சத்தியாக்கிரகமென்பது உன்வடிவம். வேண்டுவ செ-வாயாக.

*(20-3-1919)*

# இந்தியக் கிறிஸ்தவர்கள்

இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் இந்தியக் கிறிஸ்த வர்கள் எனப்படுவார்கள். இவர்களிற் பெரும்பாலோர் தேசாபிமானமின்றி வாளா காலங்கழித்து வந்தனர். இப் பொழுது ஒரு சிலர் தேசாபிமான மேற்கொண்டு ஜனத் தலைவர்களோடு கலந்து உழைத்து வருகின்றனர். அன்பே வடிவமாக உள்ள கிறிஸ்துவைப் பின்பற்றி யொழுகல் போற்றத் தக்கதே. ஆனால் கிறிஸ்து பெருமான் பெயரை முன்னிறுத்தி நமது இந்தியாவைப் பாழாக்கச் சில ஐரோப்பியப் பாதிரி மார்கள் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். கிறிஸ்து யார்? ஐரோப்பியப் பாதிரிகள் யார்? கிறிஸ்து நம்மூரவர்; துறவொழுக்கம் பூஷ்டவர்; நாளைக்கென்று ஒரு பொருளைத் தேடாதவர். ஐரோப்பியர்களிற் பெரும்பாலோர் உலகாயுதக் கொள்கை யுடையவர்; பொருளாசையிற் பேர் பெற்றவர். மூவாசையில் முயங்கும் இவர்களுக்கும் முற்றத்துறந்த முனிவ ராகிய கிறிஸ்து பெருமானுக்கும் என்ன தொடர்பு உண்டு? அவர்களிற் பெரும்பாலோர், கிறிஸ்து பெயரைச் சொல்லி இந்தியர்களைத் தம் வயப்படுத்தி, தம் வழக்க ஒழுக்கங்களை அவர்கட்குப் போதித்து, அவர்களைத் தேச பக்தி யில்லாத வர்களாகச் செ-யப் பாதிரிவேஷம் தாங்கி வருகின்றனர். கிறிஸ்துவ சகோதர சகோதரிகளிற் பெரும்பாலோர் மேல் நாட்டு ஆடைகளை வாங்கித் தரிக்க விரும்புகின்றனர்; இந்திய வழக்க ஒழுக்கங்களை வெறுக்கின்றனர். சிலர் இந்த நாட்டிற் றோன்றாதவர்போல நடிக்கின்றனர். அன்னார் பல நூற்றாண்டு களாகப் பாதிரிகள் மயக்கிற் சிக்கிப் பாரத மாதாவை மறந் தனர். இந்தியாவில் தோன்றியவர்கள் கிறிஸ்துவர்களாயினும் ஆகுக; மகமதியர்களாயினுமாகுக; ஹிந்துக்களாயினுமாகுக; பௌத்தர்களாயினும் ஆகுக. அவர்கள் இந்தியர்கள் என்பதை மறத்தலாகாது. இந்தியக் கிறிஸ்துவ சகோதரர்களும் ஹிந்துக் களும் இந்தியராகவே மேல்நாட்டவர்களால் பாவிக்கப்படு கின்றார்கள். தென்னாப்பிரிக்காவில் இந்தியக் கிறிஸ்தவர் களுஞ் சிறுமைப்படுத்தப்பட்டார்கள். இந்தியக் கிறிஸ்துவ சகோதரர்கள், கிறிஸ்து பெருமானை வழிபடுவதைத் தடுப்பா

ரில்லை. கிறிஸ்து பெருமானை வழிபடுவதால் இந்தியாவை மறந்து விடவேண்டுமோ? 1916ஸ்ரீ ஆம் வருடம் சென்னையிற் கூடிய எல்லா இந்தியக் கிறிஸ்துவக் கான்பரன்ஸுக்குத் தலைமை வகித்த மிஸ்டர் தாஸ், இந்தியக் கிறிஸ்தவர்கள் இந்தியாவின் முன்னோர் செயல்களை அடிக்கடி பயிற்சி செயல் வேண்டு' மென்னுங் கருத்துப்படப் பேசினார். ஸ்ரீ டி. குழந்தை, ஸ்ரீ சக்கர செட்டி முதலிய இந்தியக் கிறிஸ்தவர்கள், தேச முன்னேற்றத் துக்காக உழைத்து வருகின்றார்கள். வங்காளத்தில் தேச காரியத்தில் இந்தியக் கிறிஸ்தவர்கள் ஹிந்துக்களோடு கலந்து வேலை செ-கின்றார்கள். இந்திய மாதாவின் உண்மைப் புதல்வருள் ஒருவரா-ப் பேரும் புகழும் நிறுத்தியண்று.ஊ. பானர்ஜி கிறிஸ்து நாதர் திருவடியைப் போற்றினவரே. அவர் ஒரு முறைக்கு இருமுறை காங்கரஸ் தலைமை வகித்துத் தேச பக்தரா- விளங்கி யிருந்ததை யறியாதார் யார்? அவரைப் போன்றார் பலர் வங்காளத்தில் உளர். சென்னை மாகாணத் தில், பாதிரிமார்கள் இந்தியக் கிறிஸ்தவர்களை ஹிந்துக் களோடு பழகவிடாமையால், பலருக்குத் தேசாபிமானம் உண்டாவதில்லை. இப்பொழுது சென்னை மாகாணத்தி லுள்ள இந்தியக் கிறிஸ்தவர்களிடையிலுந் தேசாபிமானம் பரவிவருகிறது. சென்னை மாகாணத்துள்ள இந்தியக் கிறிஸ்த வர்கள் ஒன்றுகூடித் தங்கட்கென ஒரு சங்கம் தனியாக ஏற்படுத்திக்கொள்ளல்வேண்டும்; ஐரோப்பியப் பாதிரிகள் சங்கத் தொடர்பை அறவே ஒழித்துவிடல் வேண்டும். கிறிஸ்து பெருமான் திருவடி துணைகொண்டு இந்தியா விரைவில் சுய ஆட்சிபெற நாடோறும் ஜெபஞ் செ-யல்வேண்டும்; இந்தியக் கிறிஸ்தவர்கள் ஐரோப்பியப் பாதிரிகள் கூட்டுறவு பெற்றுள்ள மட்டும் தேச முன்னேற்ற முறாதென்பது திண்ணம். இந்தியா முன்னேற வேண்டுமென்னும் எண்ணங் கொண்டு இந் நாட்டுக்கு வந்த ஐரோப்பியப் பாதிரிமாரும் உளர். அவர் இத் தேசத்திற்குச் செ-துள்ள நன்றியை யென்றும் மறவோம்.

(22-1-1918.)

# இந்தியாவில் கல்விமுறை

கல்வி யென்பது அறிவை வளர்ப்பது; அறியாமையைத் தே-ப்பது. கல்வி பலதிறப்படும். அதனை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று வைதிகக் கல்வி; மற்றொன்று லௌகிகக் கல்வி. இவை யிரண்டும் ஒன்றற்கொன்று இன்றியமையாதன. இந்தியாவில் பண்டைக்காலத்து மக்கள் இவ்விருவகைக் கல்வியையும் முறையாகப் பயின்று வந்தார்கள்.

இப்பொழுது இந்தியாவின் கல்விமுறை முற்றும் மாறு பட்டிருக்கிறது. அறிவு விளக்கத்துக்குக் கல்வி பயில்வோர் அரியராயினர். இந்தியருள் பெரும்பாலோர் ஊழியத்தின் பொருட்டே கல்வி கற்கின்றனர். ஊழியத்தின் பொருட்டுப் பயிலுங் கல்வி இன்பந்தரக் கூடியதன்று. இந்தியக்கல்வி உத்தி யோகக் கல்வியாக மாறியதற்குக் காரணர் அரசாங்கத்தாரே. அவர், சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர்க்கு உத்தியோகங் கொடுக்கப்படும் என்னும் நியதி வைத்திருக்கின்றனர். ஜனங்கள் வேலை செ-து ஊதியம் பெற்று வயிறு வளர்க்கச் சர்வகலா சாலை முறைப்படி சாத்திரங்களைப் பயின்று பரீட்சையில் தேற முயல்கின்றார்கள். பீ.ஏ.பட்டம் பெற்ற வருள் பலர், கல்லூரி விடுத்து உத்தியோகத்துறையில் இறங்கிய பின்னர்ப் புத்தகத்தைக் கனவிலுங் கருதாது வாளா காலங் கழித்துத் தாங்கற்றவற்றையும் மறக்கின்றனர். நில நூல், விலங்கு நூல், அக நூல் முதலிய நூல்களை இரவும் பகலும் வருந்திப் பயின்று, பரீட்சையில் தேறி, அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்து, தம்மருங் கல்வியைக் கூட்டல் கழித்தலுக்கு அர்ப்பணஞ் செ-வோர் எத்தனைபேர்? கணிதத்தில் பட்டம் பெற்றவருள் எத்தனை பேர் கணித சாஸ்திரியாக இருக்கின்றனர்? எத்தனை பேர் தங் கல்விக்கு முற்றும் மாறான துறைகளில் இறங்கி உழன்று வருகின்றனர்? என்று கணக்கிடின் உண்மை விளங் காமற்போகாது.

இங்கிலாந்தில் இத்தகைய முறை அனுஷ்டிக்கப்படுவ தில்லை; அரசாங்க உத்தியோகத்துக்கும் சர்வகலாசாலைக் கல்விக்கும் பெரிதுந் தொடர்பில்லை. ஆங்கே அரசாங்க உத்தியோகத்திற்கெனத் தனிப் பரீட்சை உண்டு. அப்பரீட்சை

யும் உத்தியோக முறைக்கு ஏற்றவாறிருக்கிறது. இங்கிலாந்தி லுள்ள கல்வி முறைக்கும் இந்தியாவிலுள்ள கல்வி முறைக்கும் வேற்றுமையுண்டு. இங்கிலாந்திலுள்ளோரது கல்வி பெரிதும் மற்றவர்க்குப் பயன்படுகிறது. ஆங்கே கற்றவர் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகத்தில் அமர்வதில்லை. உதாரணமாக லார்ட் மார்லி, ஆக்ஸ்பர்ட் கல்லூரியில் பயின்ற பின்னர்ப் பத்திரிகாசிரியராக இருந்து, நாட்டிற் குழைத்துப் பார்லி மெண்டில் மணிபோல் இலங்கி இந்திய மந்திரி பதவியையும் பெற்றிருந்தார். அறிவிற் சிறந்த கிளாட்ஸ்டன் வியாபாரத் துறையிலிருந்து உழைப்பினால் முதன்மந்திரியாயினார்.

இந்தியாவில் உத்தியோகத்தை விரும்பாதவர் வேறு தொழின் முறைகளை நாடுகின்றனர். அன்னார் கல்வி பயில் வதில் விருப்பஞ் செலுத்துவதில்லை. நாட்டுப் புறத்தாரும் தம் புதல்வர் பீ. ஏ. பரீட்சையில் தேறி அரசாங்க உத்தியோகத்தி லமர்வதைப் பெருமையாகக் கொண்டிருக்கின்றனர். 'பிள்ளை பரீட்சையில் தேறி, அரசாங்க வேலையில் அமர்வான்' என்ற எண்ணங்கொண்டு, ஒரு தொழிலாளி தன் பணத்தைப் பிள்ளை யின் பாடசாலைக் கல்விக்காகச் செலவழித்துக்கொண்டு வருகின்றான். பிள்ளை மெட்றிகுலேஷன் வகுப்பிலேயே பெருமூச்சு விட்டுப் பலமுறை முயன்றும் அப்பரீட்சையில் தேறாது வருந்தி வருந்திப் பாடசாலையை வெறுத்துவிடு கின்றான். வயது 19 அல்லது 20 ஆகிவிடுகிறது. இப்பிள்ளை யாண்டான் என்செ-வான்? அவனைத் தந்தையும் வெறுக் கின்றான்; தாயும் வெறுக்கின்றாள்; பெண்ணைக் கொடுக்க அவாவிக்கொண்டிருந்த மாமனும் வெறுக்கின்றான். தந்தை செ-துவருந் தொழிலுஞ் சிறுவனுக்குத் தெரியாது. அவன் சிறிது கற்றவனாகையால் தந்தையார் தொழிலை இழிவாக வும் நினைக்கின்றான். அவன் வாழ்நாள் துன்பமாக முடிகிறது. இன்ப நுகர்ச்சி அவனுக்கில்லாமல் போகிறது. இத்தகையோர் நம்நாட்டில் எண்ணிறந்தோர் இருக்கின்றனர். அரசாங்க உத்தியோகத்திற்காகவே 'நாம் படைக்கப்பட்டோம்' என்ற எண்ணமுடையார் இங்கிலாந்தில் அரியர். இந்தியா அரசாங்க உத்தியோகமென்னும் அவரால் தீண்டப்பட்டிருக்கிறது. இவ் வுண்மை கண்ட சர் டி. முத்துச்சுவாமி ஐயர் அவர்கள், ஒரு முறை பிரஸிடென்ஸி காலேஜ் மாணாக்கர்களைப் பார்த்துப் பேசியபோது, "அரசாங்க உத்தியோகத்தை நாடுவதைப் பார்க்கிலும் வேறு துறைகளை நாடுவதே நலம்" என்று கூறி யிருக்கின்றார். அக்காலத்திலேயே ஐயர் அவர்கட்கு அத் தகைய உணர்ச்சி பிறந்திருப்பது கவனிக்கத்தக்கது. அரசாங்க

உத்தியோகமே சாயுச்சிய பதவியென்ற உணர்ச்சி அறவே யொழிதல் வேண்டும். அவ்வுணர்ச்சி இந்தியாவில் பரவா திருப்பதற்கு அரசாங்கத்தாருங் கல்விமுறைகளை ஏற்றவாறு ஒழுங்குபடுத்தல் வேண்டும். நாம் அறிவு வளர்ச்சிக்காகக் கல்வி கற்று, நாட்டின் முன்னேற்றத்துக்கு வேண்டிய தொழின் முறைகளை அபிவிருத்தி செ-வதில் கண்ணுங் கருத்துமா யிருத்தல் வேண்டும்.

கல்வி முறையிலும் இங்கிலாந்து இந்தியாவைச் சிறுமைப் படுத்தி வருவது இரங்கத் தக்கது. இந்தியாவில் ஒருவன் ஹைகோர்ட் வக்கீலாக, பீ.ஏ. பரீட்சையில் தேறிய பின்னர், பீ.எல் பரீட்சையில் தேறல்வேண்டும். இந்தியாவில் மெட்றி குலேஷன் வகுப்பைக் கடப்பதற்கே வருந்திய ஒருவன், இங்கி லாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேறி மீண்டும் இந்தியா சேர்ந்ததும் அவன், இரவும் பகலும் பெருமுயற்சி செ-து பீ.ஏ., பீ.எல்., பரீட்சைகளில் தேறிய ஒருவனைப் பார்க்கிலும் போற்றப்படுகின்றான். இஃதென்ன விநோதம்? இந்தியாவினின்றும் இங்கிலாந்திற்குச் சென்று வருவோர் சீவன்முக்தர் ஆகின்றார் போலும்! அரசாங்கத்தார் இங்கி லாந்தின் கல்விமுறையைப்போல இந்தியாவின் கல்வி முறையையுஞ் சீர்பெறச் செ-வாரென நம்புகிறோம்.

இந்தியரும் (சிறப்பாகத் தமிழகத்தாரும்) கல்வி, அரசாங்க உத்தியோகத்துக்காகப் பயன்படுவது என்ற பித்தை ஒழிப்பாராக; எத்திறத் தொழின்முறைக்கும் கல்வி யின்றி யமையாதது என்ற பண்டைக்கால உணர்ச்சியை மீண்டும் பெற முயல்வாராக. மணிமேகலை என்னுஞ் சீரிய நூலை அருளிச்செ-த புலவர் பெருமானாகிய சாத்தனார் தானிய வியாபாரியாவர். அதுபற்றியே அன்னார் ‘கூலவாணிகன் சாத்தன்’ என்று புகழப்பட்டிருத்தல் காண்க.

“கூலம் எண் வகைத்து. அவை நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி. பதினெண்வகைத் தென்பர் கூத்த நூலார்” - அடியார்க்கு நல்லார். “பதினெண் கூலமும் உழவர்க்கு மிகுக” - மதிவாணனார்.

(31-1-1918.)

# நாட்டுக் கல்வியும் நமது கடமையும்

*நாட்டுக் கல்வியைப்பற்றி முன்னர் ஒரு முறை எழுதி யிருக்கின்றோம். நாட்டுக் கல்வி வாரம் நெருங்கியுள்ளமை யால், மீண்டும் நேயர்களுக்கு ஞாபக மூட்டவேண்டி இன்று நாட்டுக் கல்வியைப்பற்றிச் சிறிது கூறுவோம்.*

*நாட்டுக்குரிய கல்வி நாட்டுக் கல்வியெனப்படும். கல்வி யெனக் கூறாது நாட்டுக் கல்வி என்று ஏன் கூறல் வேண்டும்? என்று சிலர் வினவுகின்றனர். நம் நாட்டில் இதுகாலை வேறுநாட்டுக் கல்வி பரவிவருவதால், நமது கல்வியை நாட்டுக் கல்வியெனச் சொல்கின்றேனாம். வேறு நாட்டுக் கல்வி பரவா திருக்குமாயின், நாம் நாட்டுக் கல்வியெனக் கழறாது கல்வி யென்றே கழறுவோம். அப்பொழுது கல்வி யென்பது இந் நாட்டுக் கல்வியென்னும் பொருளைப் பயக்கும். இந்நாட்டி லுள்ளவர்கள் இந்நாட்டிற்கேற்ற கல்வியையன்றோ பயிலல் வேண்டும்? நாட்டுக்கல்வி யென்பது ஒவ்வோர் இந்தியர் பிறப் பிற்கு முரியது. திலகர் பெருமான் "சுய ஆட்சி எனது பிறப் புரிமை; அஃதெனக்கு வேண்டும்" என்று கூறுவதுபோல, ஸ்ரீமான் அருண்டேல் துரை மகனாரும் "நாட்டுக்கல்வியெனது பிறப்புரிமை; அஃதெனக்கு வேண்டும்" என்று புகல்கின்றார். சுய ஆட்சி பிறப்புரிமை என்ற உண்மை, நாட்டுக் கல்வியிற் சிறந்த புலமை யுடையாருக்கே இனிது புலனாகும்.*

*இப்பொழுது நம்முடைய தலைவர்கள் சுய ஆட்சி பெற முயற்சி செ-து வருகிறார்கள். அச்சுய ஆட்சி பெறுவதற்குள் நாம் நமது நாட்டிற்குரிய கல்வித் துறைகளை முறைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். சுய ஆட்சி முயற்சியினும் பதின்மடங்கு அதிகமாக நாட்டுக் கல்வி முயற்சி எழல் வேண்ம். இவ் வுண்மை உணர்ந்த அன்னைபெசண்ட் அம்மையார் சுய ஆட்சிக் கிளர்ச்சியைத் தொடங்கி, அதனை யொட்டியே நாட்டுக்கல்வி முயற்சியிலுந் தலைப் பட்டிருத்தலைக் கவனிக்க. நாட்டுக் கல்விவரின் இந்தியாவின் பண்டைக் கல்வித்துறைகள் யாவும் மீண்டும் உயிர்பெறும். மேனாட்டுக்கல்வி பரவிய நாள்*

தொட்டு, நம் நாட்டு நூற்கல்வி, தொழிற் கல்வி, வியாபாரக் கல்வி, விவசாயக் கல்வி, சமயக் கல்வி முதலிய எல்லாக் கல்விகளும் அழிந்தன. பிறநாட்டுக் கல்வியால் நமது நாட்டில் அடிமைத்தொழில் நிலைத்து நிற்கிறது. சுதந்தரம் வேரற்றுப் போ-விட்டது. சுதந்தரமில்லாத நாடு சுடுகாடேயாகும். எல்லா நாட்டவரைப் போலச் சுதந்தரம் பெற்று வாழவேண்டு மானால், தேசபக்தி யூட்டக்கூடிய நமது நாட்டுக் கல்வியை வளர்க்க முயலல்வேண்டும். தேசபக்திக்கு இடையூறு செ-யுங் கல்வி தேச நலத்தைக் கெடுப்பதாகும். தேசபக்தி யாண்டு இல்லையோ ஆண்டுத் தெ-வபக்தியும் இல்லையென்று கூற லாம். நமது நாடு தெ-வபக்தியில் பேர் பெற்றது. இப்பொழுது மாணாக்கர்கள் தெ-வ உண்மையிலேயே அவநம்பிக்கை கொள்கிறார்கள். தெ-வபக்தியை விரும்புவோர் நாட்டுக் கல்வியை நாடல்வேண்டும்.

சகோதரர்களே! மாவலிபுரத்துச் சிற்பத்தொழிலை உற்று நோக்குங்கள். தஞ்சைக் கோபுரத்தைத் தயை செ-து பாருங்கள். ஸ்ரீரங்கத்தைச் சிறிது நோக்குங்கள். சிற்பத் தொழிற் கல்விக்கு நிலைக்களமாகிய பிற ஆலயங்களைக் கவனியுங்கள். இந்தச் சிற்பத் தொழில்களைச் செ-தவர் யாவர்? அமெரிக் கரோ? ஆங்கிலேயரோ? ஆஸ்திரியரோ? அத்தொழிற்களைச் செ-தவர் நம்மவரன்றோ? அவர் இப் பொழுது யாண்டுள் ளார்? அவர் தம் பரம்பரை யில்லையோ? பரம்பரையிருக்கின் றது. அப்பரம்பரையிற் பிறந்த பலர் தந்தொழிலை மறந்து வேறுதொழில் முறைகளிற் சென்றிருக்கின்றனர். நம் முன் னோர்கள் கண்ட அரிய தொழில்களை அழிக்கவோ நாம் பிறந்தோம்? பிறநாட்டார் அவரவர் முன்னோர் கண்ட சிறு சிறு வித்தைகளை வளர்த்துக் கொண்டு வருகின்றனர். நம் தொழில்கள்தான் தேயவேண்டும் போலும்; சாகவேண்டும் போலும். அந்தோ! அந்தோ!!

நம் முன்னோர்கள் வானத்தை உற்று நோக்கி உலக நிலையைக் கூறுவார்கள்; மணியைக் கணிப்பார்கள். அங்ஙனங் கணிப்போர் இப்பொழுது எத்தனைபேர் பட்டணங்களில் இருக்கின்றனர்? நாட்டுப் புறங்களில் சிலர் இருக்கின்றனர்.

இவ்வித்தைகளின் அழிவால் மனச் சோர்வு யாருக்கு உண்டாகும்? நமக்குண்டாகுமோ? மற்றவர்க் குண்டாகுமோ? யோசித்துப் பாருங்கள்: நம் முன்னோர்கள் கல்வித்துறைகள் மீண்டும் உயிர்பெற்று உலவுங்காலத்தை இறைவன் நமக்கு வழங்கியிருக்கின்றான். நமது நாட்டின் நலத்தைப் பாதுகாக்கத் தோன்றிய அன்னைபெசண்ட், கல்வி முயற்சியில் மன

வெழுச்சி கொண்டு உழைக்கின்றார். நாட்டுக் கல்விக் கென்றே அருண்டேல் துரைமகனார் இரண்டும் பகலும் வேலை செ-து வருகிறார். நாட்டுக்கல்வி நாடெங்கும் பரவல் வேண்டும். நம் பெண்மணிகள் மேல்நாட்டு நாகரிகத்தில் பெறுப்புக்கொள்ளல் வேண்டும். இப்பொழுது அவர்களால் விரும்பப்படும் மிருக சுதந்தரம் தங்கள் வாழ்க்கைக்குக் கேடு விளைப்பது என்பதை அவர்கள் உணரல் வேண்டும். நமக்குரிய அன்பு சுதந்தரத்தை மீண்டும் நம் பெண்ணரசிகள் பெறல்வேண்டும். தற்காலக் கல்வி முறையால் ஆடவர்கள் மாத்திரம் கெட்டு வருகின்றார் களில்லை. மகளிர்களும் ஒழுக்கத்தை நெகிழவிடுகின்றார்கள். ஒருநாட்டின் ஆக்கமும் அழிவும் பெண்மக்களிடத்தே அடங்கி யிருக்கின்றன. அவர்கள் பால் மிருக சுதந்தரமென்னும் அநாகரிகம் பரவாதவாறு காத்துக்கொள்ள வேண்டுவது ஒவ்வோர் இந்தியர் கடமை.

நாட்டுக்கல்வி வாரம் அடுத்த வாரமாகும். அவ் வாரத் தில் நாம் செ-யும் முயற்சியால் பின் வருவோர்கள் நலம் பெறல் வேண்டும்; பாரத மாதாவின் துன்பம் ஒழியல் வேண்டும். மற்ற நாட்டவரைப்போல நம்மைச் செ-விக்கும் வாரம் அவ்வாரமே. அவ்வாரம் புனிதவாரம். அவ்வார முழுவதும் பாரத தேவியை இடைவிடாது வழிபடல் வேண்டும். ஒவ்வோர் இந்தியனும் தன்னால் கூடிய உதவி புரிதல் வேண்டும்.

சகோதரிகளே! உங்கள் தாயாகிய பாரத தேவி அந்நியர் உடையைத் தரிக்கின்றாள்; அந்நியர் அணியைப் பூண்கின் றாள். அதனால் மற்ற மாதர்களைப் போலச் சபையேற நாணு கின்றாள். அவள் நாணத்தைப் போக்க வேண்டுவது யாவர் கடமை? உங்கள் கடமையல்லவா? அவள் நாணத்தை யொழிக்க உங்கள் ஆடையை வழங்குங்கள்; அணிகலனை உதவுங்கள். பாரத புத்திரர்கள் உங்கள் வீடேறி வருவார்கள். அப்பொழுது ‘இல்லை’ என்ற சொல்லை மறந்தும் வழங்கா தேயுங்கள்; இந்தியாவிற்குரிய ஈகையில் தலை சிறந்து விளங்குங்கள்.

*(2-4-1918.)*

## பாரததேவி! உன் கல்வியெங்கே?

கல்வி யென்பது அறியாமையை யொழித்து அறிவைப் பண்படுத்துவது, அது மனிதன் உணர்வையும் இயற்கையின் நுண்மையையும் ஒன்றுபடுத்தி இன்பமூட்டுவது. அவ்வின்ப நுகர்ச்சி இல்லாதவன் விலங்கெனப்படுவன்.

அக்கல்வி ஒவ்வொரு நாட்டின் இயற்கை வளனுக்குத் தக்கவாறு போதிக்கப்பட வேண்டுமென்பது அறிவுடையோர் கொள்கை. இந்தியதேசம் எல்லாத் துறைகளிலுஞ் சீர்குலைந் திருப்பதுபோல, கல்வித் துறையிலுஞ் சீர்குலைந்து நிற்கிறது. பண்டைக் காலத்தில் ஏறக்குறைய எல்லாருங் கற்றவராகவே இருந்தனர். நூற்கல்வி, தொழிற்கல்வி, வியாபாரக்கல்வி, விவசாயக்கல்வி, ஒழுக்கக்கல்வி, சமயக்கல்வி முதலிய கல்வித் துறைகள் யாண்டும் யாண்டும் நிலவியிருந்தன. "பழைய காலத் தில் கல்வி குறைவு என்று சிலர் கூறுகின்றனரே. இஃதென்னை?" என்று சிலர் ஐயுறுகின்றனர். கல்வி யென்பது நூற்புலமை மாத்திரம் அன்று. ஒருவன் நூற் புலமையின்றியே தச்சனோடு பழகித் தச்சுவேலை கற்றுக்கொள்கிறான்; ஒருவன் சிற்ப சாஸ்திரியோடு உறவுகொண்டு சிற்பவித்தை பயில்கின்றான். பயிர்த்தொழில் செ-வோனிடம் பழகிப் பயிர்த் தொழில் பயிறல் ஆகாதோ? வியாபாரியினிடம் அமர்ந்து வியாபாரக் கல்வி பயிற்சி செ-யக்கூடாதோ? இங்ஙனம்-புத்தகமெடுத்து எழுத்துக்களாலாகிய சொற்களை நெட்டுருச்செ-யாமல் இயற்கை வடிவாக உள்ள கல்வியைப் பயின்று அறிவைப் பண்படுத்திக் கொள்ளலாகும்.

முன்னாளில் நமது நாட்டில் தொழிற் கல்வியை ஒட்டியே வகுப்புப்பெயர்கள் வழங்கப்பட்டு வந்தன. தச்சுவேலை செ-கிறவன் தச்சன் எனவும், தட்டுவேலை செ-கிறவன் தட்டான் எனவும் வழங்கப்படுதல் காண்க. பிற்காலத்தில் தொழிலைப் பற்றிய பெயர்கள் பிறப்பைப் பற்றிய பெயர் களாக மாறிவிட்டன. இதனால் சாதிபேதங்கள் உண்டாயின.

நம் முன்னோர்கள் கல்வியின் அருமையை உணர்ந்த வர்கள் என்பதற்குச் சான்று கூறத் திருவள்ளுவர் குறள்

முதலிய நூல்களே சாலும். புலவர்கள் செயற்கை நரகத் தழுந் தாமல் இயற்கை இன்பத்தில் திளைத்து நின்றார்கள்.

இந்தியாவில் பட்டினாலும் மயிரினாலும் பருத்தியி னாலும் வஸ்திரங்களும் கம்பளங்களும் நெ-யப்பட்டன. நமது நாட்டின் சிற்பத்தொழில் பெருமையை இப்பொழு துள்ள கோயில்கள் விளங்கச் செ-யும். கோயில்களிலுள்ள சிற்பத்தொழில்களை உற்று நோக்கி இந்தியாவின் நாகரிகத்தை அளவிடலாகும். வியாபாரக் கல்வி எங்கணும் பெருகியிருந்தது. இதற்கு முக்கியமாக வேண்டுவது கணிதம். இப்பொழுதும் ஆங்கிலம் பயிலாத கடைக்காரர் கணிதத்துக்கு முன்னர், ஆங்கிலம் பயின்றோர் கணிதம் தலையெடாது. சிறுகுழி' பெருகுழி என்னுங் கணித முறையால் நம்மவர்கள் நில வளவு பயின்று வந்தார்கள். நாட்டுக்கோட்டை நகர வணிகப் பிரபுக்களால் பழைய கணிதமுறைகளே இன்னுங் கையாளப் பட்டு வருகின்றன. நம்மதவர்கள் பஞ்சாங்கத்தை விரைவில் கணித்து விடுகிறார்கள். அவ்வளவு விரைவாகத் தற்காலத்திய வான சாஸ்திரிகள் பஞ்சாங்கங் கணிக்க இயலாமல் வருந்து கிறார்கள்.

சமயக் கல்வி இந்தியாவில் நிலவி யிருந்தது போல வேறெங்கும் நிலைவியிருந்தாகத் தெரியவில்லை. இந்தியர் உறக்கத்தினின்றுங் கண்விழிக்கு நேரந்தொட்டு இரவு உறக்கத்திற்குப் போகுமட்டும் கடவுளைத் தியானிக்கும் வழியே தமது லௌகிக வாழ்க்கையை நடத்துகின்றனர். அவர் காலைக் கடன் செ-யும்போதும் கடவுளைத் தியானஞ் செ-வர்; உண்ணும்போதும் ஆண்டவனை நினைத்து உண்ணுவர். தொழிலாளிகள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு முன்னர்த் தங்கள் தங்கள் இஷ்ட தேவதைகளைப் போற்று வார்கள். கடிதம் எழுதுவோர் 'உ ஓம் ஸ்ரீ' முதலிய கடவுள் நினைப்பூட்டுங் குறிகளைப் பொறித்த பின்னரே தங் கருத்தை எழுதுவர். சுருங்கச் சொல்லின் வைதிகங் கலவாத லௌகிக காரியமேயில்லை எனலாம். இதனால் இந்தியரது நித்திய வாழ்க்கை பரிசுத்தமாக இருந்தது என்பது நன்கு புலனாகும். மனிதன் தன் நித்திய வாழ்க்கையைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வது மோட்சத்துக்கு வழிதேடுவதாகும். பண்டைக் காலத்தில் ஒழுக்கக் கல்வி யெங்கணும் பரவி அனுஷ்டானத்தி லிருந்த தென்பதற்கு "ஒழுக்கம் உயர்குலத்தினன்று" "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்னுந் திருவாக்குகள் சான்று கூறும்.

பண்டைக் காலத்தில் பெண்மக்களுங் கல்வியுடையவர் களாயிருந்தார்கள். பெண்மக்கள் இளமையிலேயே கீரை வகைகளின் குணங்களையும் மிளகு முதலிய பொருள்களின் குணங்களையும் உணர்ந்து வந்தார்கள்; சிறு சிறு கைத் தொழில்களையும் பயின்று வந்தார்கள்; நூற் புலமையுடைய வரும் பலர் இருந்தனர். அரசனாகிய நாயகனுக்கு மந்திரி போல் பெண்ணரசி துணைபுரிந்து வந்தாள்.

பிள்ளைகள் “தந்தை தா- பணித்தல் செ-யும் தவமலால் தவம் வேறில்லை” என்னும் உறுதி மொழியைக் கடைப்பிடித் தொழுகிவந்தார்கள்.

இத்துணைக் கல்வி நிலவியிருந்த இந்நாடு வளஞ்சுருங்கி வறிய நிலை யடைந்ததற்குக் காரணமென்னை? இதற்கு என்ன விடையிறுப்பது? அறிவுடைய ஒவ்வொருவரும் ஒரு பதில் அளிப்பர். அது வேறு நாட்டுக் கல்விமுறை இந்நாட்டில் நிலவிப் பரவியது என்பது.

இப்பொழுதுள்ள சர்வ கலாசாலைக் கல்வி முறையால் பெரிதும் பயன்விளைவதில்லை. மாணாக்கர்கள் குறிப்பிட்ட சில புத்தகங்களை நெட்டுருப் பண்ணிப் பரீட்சையில் தேறி உத்தியோகத்தி லமர்ந்த பின்னர்ப் புத்தகப் பெயரையும் மறந்து விடுகின்றார்கள். இயற்கை வடிவாக இருந்த கல்வி அறிவு, உத்தியோக வடிவாக - அடிமை வடிவாக-மாறிவிட்டது. படித்தவர் அடிமைத்தொழிலில் பெருங்காதல் கொள்கின் றனர். தொழிற்கல்வி தொலைந்தது. வியாபாரக் கல்வி மாண்டது. சமயக்கல்வி செத்தேபோயிற்று. நாஸ்திகம் தலை சுழற்றியாடுகிறது. தற்காலப் பெண்கல்வி முறையால் அருமைச் சகோதரிகள் அடைந்த பயனை வருணிக்க வேண்டுமோ? வருணிக்க எமது எழுதுகோலும் நாணுகிறது. இந்தியா அறவே மாறிவிட்டது என்று கூறுவது மிகையாகாது.

கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பாரததேவி, அவைகளையிழந்து, உருமாறியிருக்கும் இக்காலத்தில், அவள் வயிற்றில் தோன்றிய புதல்வர்களாகிய நாம், செ-யவேண்டிய கடமைகள் யாவை? கடமைகள் பல உள. அவையிற்றுள் சிறந்தது பாரத நாட்டிற்குரிய கல்வி முறையை உயிர்ப்பிப்பதே யாகும். இவ்வுண்மை உணர்ந்த சர் ரபீந்திரநாத் தாகூர் முதலியோர் நாட்டிற்குரிய கல்வியைப் பரப்ப ஊக்கங் கொண்டிருக்கின்றனர். நாட்டுக் கல்விக்கென ஒருவாரம் அர்ப்பணஞ்செ-யப்பட்டிருக்கிறது. அவ்வாரம் சரித்திரத்தில் உறுதிபெற வேண்டிய தொன்று. இந்தியாவில் இடைக்காலந்

தோன்றிய அஞ்ஞானத்தை ஒழிக்கவேண்டிய வாரம் அதுவே. அவ்வாரத்தில் செ-யவேண்டிய கடமைகளை ஸ்ரீமான் அருண்டேல் துரைமகனார் ‘பக்தன்’ வாயிலாகத் தெரிவித்து வருவதை நேயர்கள் அறிவார்கள். அவ்வாரமுழுவதும் தா-நாட்டின் முன்னேற்றத்துக்காக உடல்பொருளாவி மூன்றையும் அர்ப்பணஞ்செ-து இந்தியர்களாக விளங்குமாறு சகோதரிகளையும் சகோதரர்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

*(19-3-1918.)*

## பாஷை வளர்வதெப்படி?

மனிதர்களுக்கு இருக்கவேண்டிய பொதுக்குணங்கள் பல. அவைகளுள் ஒன்று அபிமானமென்பது. அபிமானம் பல திறப்படும். அதனை அறிஞர் முத்திறமாகப் பிரித்திருக்கின் றனர். அவை தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் என்பன. அனுபவஞானங் கைவரப் பெற்றார்க்கு எவ்வபிமான மும் இல்லை என்பது ஈண்டுக் கவனிக்கத் தக்கது.

இம்முத்திற அபிமானங்களுள் ஒவ்வொருவர் ஒவ்வோர் அபிமானமுடையவராயிருப்பர். எவனிடத்துப் பாஷாபிமானம் உரம் பெற்று நிற்கிறதோ, அவனிடத்து ஏனைய ஈரபிமானமும் நிலைபெற்று விளங்கும். பாஷை வளர்ச்சியே தேசவளர்ச்சிக் கும் சமய வளர்ச்சிக்கும் மூலமாயிருப்பது. ஆங்கிலபாஷை இங்கிலாந்துக்கு உரியது. அஃது அந்நாட்டிலன்றி, ஆங்கிலேயர் அட்சிக்கு உட்பட்டுள்ள இந்தியா முதலிய தேசங்களிலும், ஜப்பான், அமெரிக்கா முதலிய பிறதேசங்களிலும் பரவியிருக் கிறது. அம்மொழி எங்கெங்கே பரவி நிற்கின்றதோ, அங்கங்கே ஆங்கிலேயர் வழக்க ஒழுக்கங்களும் நிலவி வருகின்றன. பொதுவாக இந்தியர்கள் சிறப்பாகத் தமிழ்நாட்டு மேதாவிகள் உபந்நியசிக்கும்போது மேல்நாட்டுக் கவிவாணர் உரைகளை மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றார்கள். அவர்கள் உள்ளம் ஆங்கிலமயமாக மாறியிருக்கிறது. நடை உடை பாவனையும் அங்ஙனே மாறுகின்றன. ஆங்கிலேயர் முறைப்படி உணவு கொள்ள எத்தனையோ பேர் முயல்கின்றனர். எத்தனைபேர் முயன்று பயன்பெற்று இன்ப நுகர்கின்றனர்! மனைவியையும் ஆங்கில மயமாக அழகு செ-து கண்டு களிப்போர் எத்தனைபேர்! சுதேசியம் பேசிக் கொண்டே ஆங்கில முறை யான உடை தரிப்போர் எத்தனைபேர்! இவைகட்குக் காரணம் யாது? ஆங்கிலமொழிப் பயிற்சியால் அவர் தம் உட்கரணங்கள் யாவும் அம்மொழியில் தோ-ந்து விடுவதே யாம். இதனால் மனிதன் வழக்க ஒழுக்கங்களை மாற்றும் ஆற்றல் மொழிகளுக்கு உண்டு என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல நன்கு விளங்கும். இவ்வுண்மை தெளிந்தே

மகாத்மா காந்தி சுதேச பாஷாபிவிருத்திக்காக முயன்று வருகின்றார்.

நாம் தமிழகத்தாராகலின், தமிழ் மொழியின் வளர்ச்சியைப் பற்றிச் சிறிது யோசித்தல் வேண்டும். தமிழ் மொழியின் தொன்மையும், அதன் மாண்பும் முன்னர் இருமுறை எழுதப் பட்டுள்ளன. தமிழில் உயரிய நூல்கள் பல இருக்கின்றன. அவையாவும் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யாக்கப்பட்டவை. அந்நூல்களில் இயற்கை வனப்பும், பிறசுவைகளும் மலிந்து கிடக்கின்றன. பிற்காலத்தில் அத்தகைய நூல்கள் ஒருவராலும் எழுதப்படவில்லை. வரவரத் தமிழ்வளம் அருகலாயிற்று. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாகரிகமுற்ற அறிஞர்களால் பேசப்பெற்றுப் பண்பட்ட ஒரு மொழியின் வளங்குன்றியதற்குக் காரணம் என்ன? அம் மொழியின் மாட்டுப் பலர்க்குப் பற்றின்மையே யாகும். நேற்றுத் தோன்றி இன்னும் பண்படாத கலப்புமொழியாகிய ஆங்கிலம் செழித்தோங்குவதற்குக் காரணம் யாது? அம்மொழியாளர் அதன்மாட்டார்வங் கொண்டுள்ளமையே யாகும். இந்தியாவிலும் அன்னார் தம்மொழியை நியாயஸ்தலத்திலும் சட்டசபையிலும் பிறவிடங்களிலும் கட்டாயமாகப் பேசவேண்டு மென்னும் நியதி ஏற்படுத்தி யிருக்கின்றனர்; சர்வகலாசாலையில் இவ்விப் பட்டம் பெற்றோரே இவ்விவ் வேலைக்கு அருகர் என்னும் விதியையும் பிறப்பித்திருக்கின்றனர். வயிற்றின் கொடுமைக்காக ஜனங்கள் எம்மொழி பயில விருப்பங்கொள்வார்கள்? அவர்கள் ஆங்கில மொழியைப் பயில வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் தேச வழக்க ஒழுக்கங்களும் தேசாபிமானமும் அற்றுப் போகின்றன.

பண்டைத் தமிழர் வழக்க ஒழுக்கங்கள் நிலவவேண்டுமாயின், முதலாவது தமிழ்மொழி வளர்ச்சிக்கு உழைத்தல் வேண்டும். ஒருவர் இருவர் சேர்ந்து சங்கங்கள் ஏற்படுத்தி உழைத்து வருதலால் சிறிதும் பயன் விளையாது. அரச காரிய முழுவதுந் தமிழிலேயே நடைபெறல்வேண்டும். அப்பொழுது தமிழ் ஆக்கமுறும்.

சென்னை மாகாணத்தில் தமிழ் பேசுவோருமிருக்கின்றனர்; தெலுங்கு பேசுவோரு மிருக்கின்றனர்; கன்னடம் முதலிய பாஷைகள் பேசுவோரு மிருக்கின்றனர். பல மொழி வழங்கும் இம்மாகாணத்தில் எம்மொழியை அரசியல் மொழியாகக் கொள்வது என்ற வினா பிறக்கலாம். பாஷாபிமானம் என்பது எவருக்கும் உண்டு. எவர் மனதையும் புண்படுத்தாது

நடந்து கொள்ள வேண்டுவது அரசாங்கத்தார் கடமை. இஃதொரு சிக்கான விஷயம். இதற்கென் செ-வது? பாஷைக் கேற்றவாறு மாகாணத்தைப் பிரிப்பதே நலம் என்று சில அறிவுடையோர் கருதுகின்றனர்.

தெலுங்கு நாட்டவர் இக்காரியத்தில் மிகச் சுறுசுறுப் பா- வேலைசெ-து வருகின்றனர். அவர் தம் உழைப்பின் பயன் இந்தியச் சட்டசபையையும் எட்டிப் பார்த்துவிட்டது. ஹானரபில் மிஸ்டர் சர்மா பாஷைக் கேற்றவாறு மாகாணங் களைப் பிரிக்கவேண்டுமென, ஒரு தீர்மானங் கொண்டு வந்தனர். அதனை ஓரங்கத்தவரே ஆமோதித்தனர்; மற்றவர் மறுத்தனர்; மறுத்தவருட்சிலர் "பாஷைக்கேற்றவாறு மாகாணங் களைப் பிரிக்க இது காலமன்று" என்று கூறியிருக்கின்றனர். இவர் தங் கூற்றுக் கொள்ளற் பாலதே. வேறு சிலர் வழிதுறை யில்லாமல் மிஸ்டர் சர்மா தீர்மானத்தை மறுத்தனர்.

மிஸ்டர் சர்மா தீர்மானம் இப்பொழுது தடுக்கப் பட்டதை யாமும் அங்கீகரிக்கின்றோம். ஆனால் அஃதொரு காலத்தில் நிறைவேற வேண்டுமென்பது எமது கொள்கை. ஜனங்கள் விருப்பப்படி ஜனத்தலைவர்கள் நடந்துகொள்ள வேண்டிய காலம் நம்மாகாணத்திலும் நெருங்கியிருக்கிறது.

தமிழ்ச் சகோதரர்களே! தெலுங்கரைப் போலப் பாஷாபி விருத்திக்காக நீங்களும் முயற்சி செ-யுங்கள். தமிழ் மொழி யிலேயே அரசியல் முறைகள் நடைபெற வேண்டிய வழிகளைத் தேடுங்கள். பாஷாபிமான முள்ளவர்களையே சட்டசபை அங்கத்தவர்களாகத் தெரிந்தெடுங்கள். தமிழ்த் தாயின் நலத்தை நாடோறுங்கோரி இறைவனை வழிபடுங்கள்.

(9-2-1918.)

# நாட்டுக்கல்வி நிதி யாருக்குப் பயன்பட வேண்டும்?

நமது நாட்டில் அடிக்கடி பல காரியங்களை முன்னிட்டு நிதிகள் சேர்க்கப்படுகின்றன. சின்னாள் கழிந்த பின்னர் எக் காரணத்தை யொட்டி நிதிகள் சேர்க்கப்பட்டனவோ, அக் காரணத்துக்கு அவை பயன்படுவதில்லை. பொது ஜனங்களும் அவைகளைக் கவனிப்பதில்லை. நாளேற நாளேறப் பொது நலத்திற்கெனச் சேர்க்கப்பட்ட நிதிகள் ஒருவர் இருவருக்கே பயன்படுகின்றன.

இப்பொழுது நாட்டுக் கல்விக்கெனப் பெருநிதி சேர்க்கப்பட்டடிருக்கிறது. இந்நிதி சேர்க்கப்பட்ட காலத்தில் ஜனங்கள் காட்டிய ஊக்கத்துக்கு அளவேயில்லை. காரணம் என்னை? நமது நாட்டிற்குரிய கல்வி வளர்ச்சியின் மாட்டு ஜனங்கள் கொண்டுள்ள ஆர்வமேயாகும். வருடந்தோறும் இந்நிதி சேர்க்கப் படுமென நம்புகிறோம்; நாட்டுக் கல்வி நிதிப் பாதுகாப்புக் கென ஏற்பட்டுள்ள கூட்டம் பொதுஜன அபிப் பிராயத்தைத் தழுவிக் காரியங்களை நடத்தல்வேண்டும். ஒருவர் இருவர் யோசனைப்படி நிதி செலவழிக்கப்பட லாகாது.

இப்பொழுது நாட்டுக்கல்லூரி ஒன்று ஏற்படுத்தி அதில் அரசியல் ஞான நூல், வியாபார நூல் முதலியன போதிக்கப் பட முயற்சி செ-யப்பட்டு வருகிறது. அரசியல் ஞான நூல் முதலியவற்றைப் பயில ஆங்கிலப் பட்டதாரிகளே சேர்வார்கள். அவர்களே நாட்டுக் கல்லூரியால் பயன் பெறுவார்கள். அவர்கள், அரசாங்கச் சார்பாக உள்ள கல்லூரிகளில் பயில் வதற்குப் பதிலாக நாட்டுக் கல்லூரியில் பயின்று அறிவு பெறு கிறார்கள். இதனால் நாட்டுக்கு விளையும் நன்மை யாது?

நாட்டுக்கு நன்மைசெ-ய முன் வருவோர் முதல் முதல் தாழ்ந்த வகுப்பாரைக் கவனித்தல் வேண்டும். தாழ்ந்த வகுப்பாரைக் கவனியாது தொடங்கப்படுங் காரியங்கள் பயன் பெறமாட்டா என்பது நிச்சயம். ஜனத்தலைவர்கள் தாழ்ந்த வகுப்பாரைக் கவனியாது, காங்கரஸில் பேசுவதைப் பெருமை

யாகக் கருதிய அறியாமை யன்றோ சுய ஆட்சிப் பேற்றிற்குப் பெருந் தடையாக நிற்கிறது? தேசத்தின் நன்மை தீமை தாழ்ந்த வகுப்பாரிடத்தில் அடங்கியிருக்கின்றன. தாழ்ந்த வகுப்பார் செல்வராயிருந்தால், அவர் வாழுந்தேசமுஞ் செல்வத் தேச மெனப்படும். அவர் வறியராயிருப்பின், அவரது நாடும் வறிய நாடெனப்படும். அரசாங்கச் சார்பாக உள்ள கல்லூரி தாழ்ந்த வகுப்பாருக்குப் பெரிதும் பயன்படுவதில்லை. அவ்வழியாக நாட்டுக்கல்லூரி நடத்தப்படுமேல் விளையும் பயன் யாது? ஒன்று மில்லை.

எமது கருத்தில் உதயமாகுஞ் சிலமுறைகளை ஈண்டுக் குறிப்பிடுகின்றோம். அவைகளை நாட்டுக்கல்லூரி நிதிக் கூட்டத்தாரும், பொதுஜனங்களும் கவனித்தல் வேண்டும். நமது நாட்டில் பெரிதுங் கல்வியறிவில்லாதவர் தாழ்ந்த வகுப்பாரும் பெண்பாலருமாவர்.

தாழ்ந்த வகுப்பார் இளமையிலேயே வயிறுவளர்க்கச் சிறுவேலைகளுக்குச் சென்றுவிடுகின்றனர்; அச்சிறுவேலை செ-தே காலங்கழித்து விடுகின்றனர். அவருள் பெரும் பாலோர் கல்வி அறிவின்மையால் இயற்கை இன்பத்தையும் பிற லௌகிக தருமங்களையும் உணர்ந்து அனுபவியாமலே மாண்டுபோகின்றனர். சிலர் பஞ்சமா பாதகங்களுக்குத் தலைவராகின்றனர். அன்னார் மனிதப் பிறவிக்குரிய பயனை அடையாமல் போகின்றனர் என்று சுருங்க உரைக்கலாம். இவ்வகுப்பாருக்கு உழைக்கவேண்டுவ தன்றோ கற்றறிவாளர் கடமை? தாழ்ந்த வகுப்பார் பலர் வேலை நேரம்போக, மிகுதி வேலையில் சமய நூல்களை ஆரா-ச்சி செ-யவும், நீதி நூல் களைப் பயிலவும் அவாவுகின்றனர். அவ்வவாவைத் தணிப்ப தற்குக் கல்லூரியுண்டோ? ஆசிரியர் உளரோ? இல்லையே. கல்வியிற் காதல் கொள்ளும் ஏழை வகுப்பினர் என் செ-வார் பாவம்! நாட்டுக் கல்விநிதி இவருக்கன்றோ பயன்படல் வேண்டும்? தாழ்ந்த வகுப்பாருக்கென நாட்டுப் பாட சாலைகள் பல ஸ்தாபிக்கப் படல்வேண்டும். அவைகளில் காலைவேளையில் சிறுவர்களும், மாலைவேளையில் பெரிய வர்களும் சேர்ந்து படித்து வருவார்கள் என்பதிற் சந்தேக மில்லை.

இரண்டாவது, பெண்பாலரைப் பற்றியதாகும். நமது நாட்டில் பெண்பாலர் பலர் தாழ்ந்த வகுப்பாரைப் போலவே கல்வி அறிவு ஒழுக்கமின்றி வாளா காலங்கழித்து வருகின் றனர். சிலர் பாதிரிமார்கள் பாடசாலையிலும், அரசாங்கத் தார் கலாசாலையிலும் பயின்று வருகின்றனர்.

*அப்பாடசாலைகளிற் பயின்று உயர்தரப் பட்டம் பெற்றுள்ள பெண்மக்களிற் பெரும்பாலோர், தம்மை ஆண் மக்களாகக் கருதி விடுகின்றனர். அசசம், நாணம், மடம், பயிர்ப்பு அவர்களிடத்தில் அருகிப் போகின்றன. நாயகனை அன்னார் ஒரு பொருளாக மதிப்பதில்லை. பிள்ளையை மாத்திரம் பெறுவார்கள். அவைகளை வளர்க்க வேண்டியவர் நாயகன்மாரே. தற்கால நாகரிகமுணர்ந்த மகளிர்களை மணம் புரிந்த ஆடவர்கள் கதியிவ்வாறாக முடிந்திருக்கிறது! ஆகலால், பெண்மக்களை மேல்நாட்டு முறைபற்றிப் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கே அனுப்பலாகாது என்று பல அறிஞர் அபிப்பிராயப் படுகின்றனர். வேறு எப்பள்ளிக் கூடங் களுக்குப் பெண்மக்கள் அனுப்பப்படல் வேண்டும்? தகுந்த பள்ளிக்கூடமின்றி நம்மவர்கள் தவிக்கின்றார்கள்.*

*இதுகாலை நாட்டுக் கல்விக் கிளர்ச்சி எங்கும் பரவிநிற் கிறது. அதற்கென நிதியுஞ் சேர்ந்துவிட்டது. தலைவர்கள் நம்நாட்டிற் குரியவாறு பெண்கல்வியைப் பரப்ப நாட்டுக் கல்விநிதியைப் பயன்படுத்துவார்களென நம்புகிறோம். நம் நாட்டு வழக்க ஒழுக்கங்கள் ஆண்மக்களிடத்து அருகினும், பெண்மக்களிடத்தாதல் அருகாதிருக்குமாறு காத்துக் கொள்ள வேண்டுவது தேசபக்தர்கள் கடமை.*

*நாட்டுக்கல்வி நிதி பெரிதும் தாழ்ந்தவகுப்பாருக்கும், பெண்பாலாருக்கும் பயன்படவேண்டு மென்பது எமது கொள்கை.*

*(22-5-1918.)*

# தாய்மொழி

சுதேச பாஷையையும், சுதேசக் கல்வியையும் வளர்க்க வேண்டுமென்னும் எண்ணம் பலருள்ளத்தில் தோன்றி யிருப்ப தாகத் தெரியவருகிறது. மஹாத்மாகாந்தி சுதேச பாஷாபி விருத்தியே தேசாபி விருத்தியெனக் கூறுகின்றனர். வட இந்தியாவில் பெரும்பாலோர் பாஷாபிமானிகளா யிருக்கின் றனர். திலக மகாரிஷி செல்லுமிடங்க டோறும் மஹரா டிர பாஷையிலேயே பேசுகின்றார். சர் ரபீந்திரநாத் தாகூர் வங்காள பாஷையை வளர்த்து வருவதை அறியாதார் யார்? தென்னாட்டில் பாஷாபிமானங் குன்றி யிருப்பது விசனிக்கத் தக்கது. தமிழ்த் தாயே பெரிதுஞ் சீர் குலைந்திருக் கின்றாள். தமிழ்த்தாயோ தொன்மையும், சிறப்பும் வா-ந்தவள். தமிழ் நாட்டிற் கல்வியென்றால் ஆங்கிலக்கல்வி என்று பொருள் கூறுவோர் பலரிருக்கின்றனர்; கற்றோரெனில் ஆங்கிலங் கற்றோர் எனக் கொள்கின்றனர்; தமிழ் வல்லாரைப் போற்று வார் அரியராயினர். மேடைகளில் தமிழிற் பேசுவதை அகௌரவமாகக் கொண்டிருக்கின்றார் பலர். "எமக்குத் தமிழ் பேச இயலாது" என்று கூறுவதைப் பெருமிதமாகக் கொண்டுள்ளார் சிலர்.

ஆங்கில ஆட்சியின் சார்பாக ஏற்பட்ட சர்வகலா சாலைகள் தொடக்கத்தில் சுதேச பாஷாபி விருத்தியில் கண்ணுங் கருத்துமாயிருந்தன. வரவர அவை சுதேச பாஷையை அலட்சியஞ், ச-து வரலாயின. சென்னைச் சர்வகலாசாலை யில் பல ஆண்டுகளாகத் தமிழ் கட்டாயப் பாடமாக இருந்தது. எம். ஏ. வரை மாணக்கர் தமிழ் பயின்று வந்தனர். எலிமெண்டரி வகுப்பில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, சிற்றிலக்கணம் இவை போதிக்கப்பட்டு வந்தன. லோயர் செகண்டரி வகுப்புக் களுக்கு இனியவை நாற்பது, இன்னா நாற்பது, நன்னெறி, நீதிநெறி விளக்கம், அறநெறிச்சாரம், திரிகடுகம், நான்மணிக் கடிகை, சிறு பஞ்ச மூலம், பழமொழி முதலியன பாடமாக விருந்தன. மெட்றிகுலேஷன் வகுப்பில் பெருந் தேவனார் பாரதம், கம்பராமாயணம் முதலிய அரிய நூல்களும்

நன்னூலும் போதிக்கப்பட்டன. எப். ஏ, பரீட்சைக்கு நாலடியார், வில்லிபாரதம் முதலிய அரிய நூல்கள் பாடப் புத்தகங்களாக ஏற்பட்டிருந்தன. பீ. ஏ, வகுப்பு மாணாக்கர்கள் புற நானூறு, பத்துப் பாட்டு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய செந்தமிழ் நூல்களைப் பயின்று வந்தார்கள். எம்.ஏ. பரீட்சைக்குச் செல்வோர் தொல்காப்பியம் முதலிய நூல்களை ஆரா-ச்சி செ-து வந்தனர். அதுகாலை மாணாக்கர்களிற் பலர் தமிழ் மயமாக விருந்தனர்.

இதுகாலை பாலர்களுக்கு ஆத்திசூடி கொன்றை வேந்தன் முதலிய நூல்களின் பெயரே தெரியாது. "கைவீசம்மா கைவீசு" என்னும் போலிப்பாக்கள் அவர்கட்குப் போதிக்கப் படுகின்றன. கட்டாயப் பாடமாக இருந்த தமிழ், இஷ்டப்பாட மாக மாற்றப்பட்டது. இஷ்டப் பாடமாக மாற்றப்பட்ட நாள் தொட்டுத் தமிழ் மணங்குன்றத் தலைப்பட்டது. ஒவ்வொரு கல்லூரியிலும் இன்டர்மிடியேட் வகுப்பு மாணவருள் தமிழ் பயில்வோர் எத்தனைபேர் என்று எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கிவிடும். சில கல்லூரித் தலைவர்கள் தமிழ் வகுப்பையே ஒழித்திருக்கிறார்கள். இதனால் மாணாக்கர் பலர் தமிழ்நூல் உள்ளுறையை அறியாதவராகின்றார். அவருக்குப் பாஷாபிமானம், தேசாபிமானம், சமயாபிமானம் எங்ஙனம் உண்டாகும்? கட்டுரை மாத்திரம் கட்டாயப் பாட மாக இருக்கிறது. இலக்கிய இலக்கண ஆரா-ச்சியின்றிக் கட்டுரை வரைய இயலுமோ? கட்டுரை வகுப்புப் பாடங்கள், பிள்ளைகளுக்கு இயற்கையாக உள்ள தமிழ் அறிவையுங் கெடுத்துவிடும். போலிப்புலவர்கள் எழுதும் நூல்களே பெரும்பாலும் பாடப் புத்தகங்களாக ஏற்படுத்தப் படுகின்றன. உதாரணமாக இரண்டொன்று ஈண்டுக் குறிப்பிடுவோம். இவ்வாண்டு ஸ்கூல் பைனல் வகுப்பிற்கு 'ஜெ-சீலன்' என்னும் ஒரு புத்தகம் கட்டாயப் பாடமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் விஷய ஞானமும் உண்டாகாது; பாஷா ஞானமும் உண்டாகாது. இன்டர் மீடியேட் வகுப்பிற்கு (ஜான்ஸனால் இயற்றப்பட்ட) ராஸலஸ் மொழிபெயர்ப்பு, கட்டுரைப் பாட மாக இருக்கிறது. அந்நூற்கண் போந்துள்ள வாக்கியங்கள் பெரும்பாலன ஆங்கிலப் போக்கை யொட்டியன. இச்சிறுமை நூல்களைப் பாடப் புத்தகங்களாக ஏற்படுத்துவோர் யார்? அவரே தமிழ்த் தாயின் சிறுமைக்குக் காரணர் என்று கூறு வோம்; பாட புத்தகங்களைத் தெரிந்தெடுக்குங் கூட்டத் தாருள் ஒருவர் இருவரே தமிழ் ஞானமுடையார். ஏனையோர் தமிழ்ப் புலமையில்லாதார் என்பதைச் செவ்வனே அறிவோம்.

தமிழ் ஞானமுடைய ஒரு சிலரும் முதியர். அவருக்குப் பின் தமிழ்க்கொலைஞரே அக்கூட்டத்திற் சேர்வரெனக் கருது கிறோம். தமிழ்நாட்டிற் றோன்றியவர்களே தமிழைக் கொலை செ-து வருவது அரசாங்கத்தாருக்குத் தெரியாது. அரசாங்கத் தில் உயர்பதவி பெற்றவர்கள் தயவைப்பெற்றுத் தம் போலி நூல்களையே பாடப் புத்தகங்களாக ஏற்படுத்த முயல்கின் றார் பலர். இச் செயலை டைரெக்டருக்கும் கவர்னருக்கும் அறிவிப்போர் யாவர்? புலிகள் போன்ற உத்தியோகஸ்தர்கள் முன்னே வயிறு கா-ந்துள்ள பண்டிதர்கள் என்செ-வார்கள்? பாவம்! தொல்காப்பியம் படித்தவர் தமிழ்ப் பண்டிதர்; அவரைச் சோதிக்க வருகின்ற இன்ஸ்பெக்டர் வல்லினம் இடையினந் தெரியாதவர். என்ன வேடிக்கை! ஆங்கிலந் தெரி யாத தமிழ்ப் பண்டிதர் அவரை ஏற இறங்கப் பார்த்து விழிக் கின்றார். இன்னுமுள்ள குறைகளை விரிக்கிற் பெருகும்.

இக்குறைகளை யொழிப்பதற்கு வழிதேடவேண்டுவது நம்பெருங்கடமை. இதன்பொருட்டு முயற்சி செ-யவும் உத்தேசித் திருக்கின்றோம். எத்துணை ஜனத் தலைவர்கள் உதவிசெ-ய முன்வருவார்கள் என்பது அப்பொழுது வெளி யாகும். காங்கரஸ் மேடையில் பேசிவிட்டுச் சென்னைசேர்ந்து வாளா காலங்கழித்து வரும் ஜனத்தலைவர்களை அம்பலத்தி லிழுத்து ஆட்ட வேண்டுவது ஊரார் கடமை. நமது வேண்டு கோளுக்கிணங்கித் தா-மொழி வளர்ச்சிக்கு உழைக்க முன்வாரா தொழிவாராயின், அவர்தஞ் செயலை இந்தியாவி லுள்ள பலருக்கும் அறிவித்தல்வேண்டும். தமிழ் மக்களே! சிறிதும் அஞ்சாது வேலைசெ-யுங்கள். உங்கள் குறைகள் பல அரசாங்கத்தாருக்குத் தெரியா. அவைகளை யெடுத்துக் காட்ட முயற்சிசெ-யுங்கள். வங்காள முதலிய பாஷைகள் வளர்ந்து வருகின்றன. பழைய மொழியாகிய தமிழ் அருகு வதைப் பார்த்துவருவது தருமமோ? உண்மை, அஞ்சாமை என்னுமிரண்டையும் இருகரங்களில் தாங்கி வெளிவாருங்கள். இறைவன் நமக்குத் துணை செ-வான்.

*(26-1-1918.)*

# திராவிட மொழிகள்

திராவிட மொழிகள் நான்கு. அவை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்பன. பின் மூன்றும் முதலதாகிய தமிழினின்றும் பிறந்தவை. தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய இம்மொழிகளைப் பேசுவோர் எண்ணல், எடுத்தல், முகத்தல் முதலிய அளவைகளுக்குத் தமிழ் மொழியையே வழங்கி வருகின்றனர். அம்மூன்று மொழிகளிலுமுள்ள பண்டை நூல்கள் பெரிதும் தமிழினின்றும் மருவிய சொற்களால் ஆக்கப்பட்டிருக்கின்றன. பின்னர் அம்மொழிகளில் ஏராள மான வடமொழிச் சொற்கள் கலந்துவிட்டன.

பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னர்த் தெலுங்கர் தம் மொழி வடமொழியினின்றும் பிறந்தது என்னுங்கொள்கை யுடையாராயினர். இன்னும் பண்டைத் தெலுங்கில் பேரபிமான முடையார் அங்ஙனங் கூறத் துணிகின்றாரில்லை. இதுகாலை தெலுங்கு பயில்வோர் எளிதில் வடமொழியைப் பயிலுதல் கூடும். காரணம் தெலுங்கில் வடமொழிச் சொற் களும், வடமொழி ஓசையும் பெரிதும் விரவி யிருத்தலே யாகும்.

மலையாளத்தா ருள்ளுங் கன்னடத்தா ருள்ளுஞ் சிலர் தம்மொழியின் வரலாற்றை யுணராது, வடமொழிப் பற்றுடையரா- வாழ்ந்து வருகின்றனர். மலையாளத்திலும் கன்னடத்திலும் இன்னும் தமிழ்ச்சொற்கள் வழங்கப்பட்டு வருதலை மறைக்க எவராலும் இயலாது.

தெலுங்கு, மலையாளம், கன்னடம் இம்மூன்று மொழி களும் தமிழ் மொழியினின்றுஞ் சிதைந்தனவேயாம். இஃது முழுதும் ஒப்பமுடிந்த உண்மை.

தமிழ் மொழியானது பிறமொழியினின்றும் பிறவாதது; தனித்தியங்கும் ஆற்றலுடையது. மக்கள் தங் கருத்தைக் கைக் குறி, கண்குறி முதலியவாற்றான் வெளியிட்டிருந்தார்கள்; பிற்றை நாகரிக முதிர்ச்சியால் வா- திறந்து பேச முயன் றார்கள். அவர்கள் பேச முயன்றபோது முதல் முதல் அவர்கள் வாக்கினின்றும் பிறந்த ஒலித்திரள்களே பின்னர் மொழியாக

உருக் கொண்டன. சிறு குழந்தைகள் பேசப் பழகும்போது, அவர்கள் வல்லோசை முதற்கணுள்ள எழுத்தால் ஆக்கப் பெற்ற சொற்களை உச்சரிக்க வியலாது இருத்தல் கண் கூடே. முதன்முதல் வா- திறந்து பேசிய மக்களும் உச்சரிப்பில் குழந்தைகள் போன்றவர்களாகவே யிருந்திருத்தல் வேண்டும். அம்மக்கள் வாக்கினின்றும் பிறந்தமொழி, பெரிதும் முதற் கண் வல்லோசை உடைய எழுத்தால் அமைவுறாத சொற் களைக் கொண்டு நடைபெறுவதாக இருத்தல்வேண்டும். அத் தகைய மொழி தமிழ் மொழி ஒன்றே. பிற, வல்லோசை யுடையனவாம்.

மக்கள் முதல்முதல் பேசிய மொழியாகிய தமிழைத் தனி மொழியெனக் கூறாது வேறென் கூறுவது? வடமொழி யொன்றே பயின்று, அம்மொழியின் மாட்டுப் பெரும் பற்றுடையரா- வாழும் ஒரு சிலர் "தமிழ் தனிமொழியன்று; அது வடமொழியினின்றும் பிறந்தது" என்று கூறத் துணிந் தனர் - அது கண்ட தமிழ் மக்களுள் வடமொழி யாரா-ச்சி இல்லாதார் "வடமொழி தமிழினின்றும் பிறந்தது" என்னுங் கொள்கையை நிறுத்த முயன்றனர். இவ்விரு கூட்டத்தினர் கூற்றையும் இருமொழியிலும் ஆரா-ச்சியுடைய ஒருவர் ஏற்றுக்கொள்ளார். " வடமொழியுந் தனிமொழியே" "தமிழ் மொழியுந் தனிமொழியே" என்பது எமது கொள்கை.

ஐங்குறு நூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து முதலிய தொன்னூல்களை ஆ-ந்த அறிஞர்கள் தமிழ் பிற மொழியின் உதவியால் இயங்குவது என்று கூறத் துணிவார்களோ? திருவள்ளுவரில் வடசொல் ஒன்று மிலாக் குறள் வெண்பாக்கள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன. பலரும் போற்றும் ஆத்தி சூடியை வாசிப்பின், உண்மை விளங்கும். அதில் வடமொழிக் கலப்பின்றிச் சிறுசிறு கட்டுரைகள் முத்துப்போல் கோக்கப் பட்டிருக்கின்றன. இன்றும் வடமொழிக் கலப்பின்றி எழுது வோரும் பேசுவோரும் இருக்கின்றனர். அன்னார், அந் நடை ஒரு சிலர்க்கே பயன் படுமாகலின்; அதை விடுத்துத் தமிழ் மொழியிற் கலந்து ஆட்சிபெற்ற வட சொற்களை இடை யிடையே பெ-து இப்பொழுது எழுதியும் பேசியும் வருகின் றனர். தமிழ் தனிமொழி என்பதை முற்கால ஆசிரியன் மார்களும், பிற்கால ஆசிரியன்மார்களும் நன்கு விளக்கிக் காட்டி யுள்ளார்கள். தமிழ்ப் புலமை நிரம்பப்பெற்று நூல் பல எழுதிவரும் மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயரவர்களும், இராகவ ஐயங்கார் முதலியோரும் தமிழ் தனிமொழி யென்னுங் கூற்றை மறுப்பரோ? ஒருநாளும் மறுக்கத்

துணியார். தமிழின் மூலை கண்டறியா ஒரு சிலரே அதைக் குறை கூறத் துணிவர். காலஞ் சென்ற சூரியநாராயண சாஸ்திரியார் எழுதிய 'தமிழ்மொழி வரலாறு' என்னுஞ் சீரிய நூலைத் தமிழின் எழுத்திலக்கணமுந் தெரியது "தமிழ் தனிமொழியன்று" என்று கூறும் அறிஞர்கள் வாசித்து உண்மை உணர்வார்களாக.

தனித்தியங்கும் ஆற்றலுடைய தமிழ்மொழியை நமது சென்னைச் சர்வகலாசாலையார் எங்ஙனம் வளர்த்து வருகின் றனர் என்பதைச் சிறிது ஆரா-ச்சி செ-வோம். சுமார் பன்னி ரண்டு வருடங்களுக்கு முன்னர்த் தமிழ் பீ.ஏ. வகுப்புவரை கட்டாயப் பாடமாக இருந்தது. தமிழொன்றே யெடுத்து எம்.ஏ. பரீட்சையில் தேறினவரும் பலர் இருக்கின்றனர். அங்ஙனம் தமிழை வளர்த்து வந்த சர்வகலாசாலையார் சில போலிக் காரணங்களை முன்னிட்டுத் தமிழை இண்டப் பாட மாக மாற்றி விட்டனர். சர்வகலாசாலை அங்கத்தவர்களிற் பலர் தமிழ் இன்னதென்றே தெரியாதவர். ஒரு சிலரே தமிழாரா-ச்சி யுடையவர். தமிழ் மொழியைப்பற்றி அடிக்கடி சர்வகலாசாலையில் விவாதம் நிகழ்கிறது. அவ்வக்காலங் களில் தமிழ்ச்சொல் காதிலுங் கேட்டறியாத சிலர் தமிழைப் பற்றி அபிப்பிராயங் கூறத் தொடங்குகின்றனர். தமிழாரா-ச்சி யுடையார் வாக்குச் சர்வகலாசாலை அரங்கமேறுவதில்லை. சிலகாலத்தில் தமிழங்கத்தினர் மௌனவிரதம் பூண்கின்றனர். சர்வகலாசாலை இன்னுந் தமிழ்மொழியைத் தனி மொழி என உணர்ந்ததோ இல்லையோ என்பது சந்தேகம்.

சென்னைச் சர்வகலாசாலையில் வித்துவான் பரீட்சை யென்று ஒன்று ஏற்பாடு செ-யப்பட்டிருக்கிறது. அப் பரீட்சைக்குச் செல்வோர் வடமொழி பயிலல் வேண்டுமாம். தமிழ் மக்களுள் பலர் வடமொழிப் பயிற்சி செ-வதில்லை; சிலர் வடமொழியை யுச்சரிக்கவே வருந்துவர். எத்தனையோ தமிழ் மக்கள் வித்துவான் பரீட்சைக்குச் செல்ல விரும்புகின் றார்கள். ஆனால் அவர்கள் தமிழல்லாப் பிற மொழிகளைப் பயிலல் வேண்டும் என்னும் நியதிக்கு அஞ்சித் தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செ-யாமலிருக்கின்றார்கள். இதைக் குறித்துச் சென்ற வாரம் சர்வ கலாசாலையில் பெரும் விவாதம் நடந்தது.***** அது காலை நீதிபதி சேஷகிரி ஐயரவர் களும், ஸ்ரீமான் சி.பி. இராமசாமி ஐயரவர்களும் தமிழ் உண்மை கண்டு பேசியதற்குப் பெரிதும் நன்றியறிதலுடையோம்.

தெலுங்கு முதலிய திராவிட பாஷைகளைப் பயில் வோர்க்கு வடமொழி ஞானம் அவசியம் வேண்டுமென்பதை மறுப்பாரில்லை. தமிழ் பரீட்சைக்குச் செல்வோர்க்கு வட மொழிப் பாடம் பெருந்தடையாக நிற்கிறது என்பதையே யீண்டு நாம் சர்வகலாசாலையாருக்கு அறிவுறுத்துகிறோம்.

தமிழ் மக்கள் இனி உறங்குதலாகாது; வேறுவித வேற்றுமை களைப் பாஷா விஷயத்தில் பாராட்டலாகாது; ஒற்றுமை உழைப்பிற்குப் பயன் உண்டு. தமிழ் தனிமொழி யென்பதைச் சர்வகலாசாலையாருக்கு நியாய வரம்புக்கு உட்பட்ட கிளர்ச்சி வாயிலாக அறிவுறுத்த வேண்டுவது நமது முதற் பெருங்கடமை. இக்காரியத்தில் பிராமணரும் பிராமண ரல்லாதாரும் ஒன்றுகூடி உழைப்பாரென நம்புகிறோம்.

*(12-3-1918)*

# தமிழ்ப்புலவர்கள்

பண்டைக் காலத்தில் தமிழ்ப் புலவர்கள் பலர் இருந் தனர். அவர் பெரிதும் மன்னர்களால் பாதுகாக்கப்பெற்று வந்தனர். தமிழ்ப் புலவர்கள் மன்னரை உடலாக அரண்செ-து வந்தார்கள் என்பது உயர்வு நவிற்சியாகாது. சில புலவர் அரசன் ஊரில் இல்லாக் காலத்து ஊரைப் பாதுகாத்து வந்தனர். சிலர் வேந்தன் இறந்ததும் இளவரசாக உள்ள அவன் மைந்தனுக்காகத் தாமே அரசாண்டு வந்தனர். சில புலவர் மன்னனோடு தோழமை பூண்டிருந்தனர். சிலர் இறைவ னோடு சேர்ந்து போர்க்களஞ் சென்று மாற்றாரோடு எதிர்த்துப் போர் புரிந்திருக்கின்றனர். அக்காலத்துப் புலவர்கள் ஒழுக்கத் திற் சிறந்த உத்தமர்கள். அவர்கள் அரசர்களுக்கு ஒப்பாகவும் உயர்வாகவும் இருந்தார்கள் என்பது மிகையாகாது.

சிலப்பதிகாரத்தை அருளிச்செ-த இளங்கோ அடிகள் தாமுந் தந்தமையனாகிய சேரன் செங்குட்டுவனும் தந்தையார் திருவடிக்கீழ் இருந்தபோது, ஒருநாள் ஒரு கணியன் ஆண்டுப் போந்து "இவ்விரு குமரருள் இளையோனே மன்னனாகுந் திருவுடையன்" என்று கூறியதைக்கேட்டு "நம்முன்னோன் இருப்ப நாம் செங்கோல் தாங்கி ஆட்சி புரிவது அறமன்று" என்று எண்ணி உடனே துறவொழுக்கம் பூண்டனர். மயிலுக்குப் போர்வை யீந்த வேள்பேகன் தன் மனை விடுத்து வேறு மனை புகுந்து துயின்று வந்தபோது தமிழ்ப் புலவர்கள் சிறிதும் அஞ்சாது அவன் தீயொழுக்கத்தைக் கண்டித்து, அவனுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தினர்கள். பறம்பு மலையில் வாழ்ந்து வந்த வேள்பாரியின் செல்வத்தைக் கண்டு அழுக்காறுற்ற மூவரசர்களும் அவன் மலையைச் சூழ்ந்து முற்றுகை யிட் டார்கள். அம்மலை அரண்வலி யுடையதாகலின், அதன் உள்புக இயலாது புறத்தே நின்றார்கள். பாரியின் உயிர்த் தோழராகிய கபிலர் "பறம்புமலை ஒருகாலத்தில் முற்றுகை செ-யப்படுமாயின், அதனுள் வாழ்வோர் உணவிற்கு வருந் துவர். அங்ஙனம் எவரும் வருந்தாதவாறு நாம் ஒரு காரியஞ் செ-யல் வேண்டும்" என்றெண்ணிக் கிளிகள், ஆகாய வழியாகப் பறந்துசென்று, நெடுந் தூரத்தேயுள்ள வயல்களை

அடைந்து, தானியக் கதிர்களைக் கொ-து கொண்டு வந்து, பறம்பு மலையில் போர் போராகக் குவிக்குமாறு அவை களைப் பயிற்சி செ-தனர். பறம்புமலை வாசிகள் முற்றுகை செ-யப்பட்டபோது அவர்கள் கிளிகள் உதவியால் உணவு கொண்டின்புற்றார்கள். வேள்பாரி இறக்குந் தறுவாயில் தன்னிரு குமரிகளையுந் தன் நண்பராகிய கபிலரிடத்தே ஒப்பு வித்தனன். அவருந் தந்தைபோல் அப்பெண்மணிகளைப் பாதுகாத்து வந்தனர்.

புலவர்கள் ஒன்றுகூடி மூன்று சங்கம் ஏற்படுத்தித் தமிழை வளர்த்திருக்கிறார்கள். பண்டைக் காலத் தமிழ்ப் புலவர்கள் செ-யுள்கள் யாவும் இயற்கை வடிவமாயிருப்பவை அவை களை வாசிக்குங் காலத்து இயற்கைப் பொருள்கள் எதிரில் புலனாகி உலவுவதுபோல் தோன்றும். பத்துப் பாட்டு,எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலிய நூல்கள் அப்புலவர் களால் செ-யப்பட்டவைகளே. இவர்களுக்குப்பின் வந்த வர்கள் அத்தகைய நூல்கள் இயற்றினார்களில்லை. வரவரத் தமிழ்ப் புலவர்கள் மாண்பிழந்து இயற்கை நுண்ணறிவும் மங்கப்பெற்று, வறுமைக்கும் சிறுமைக்கும் ஆளாகி வருகின் றார்கள். பல தமிழ்ப் பண்டிதர்களுக்குப் பண்டைத்தமிழ் நூல்கள் வேறுமொழி நூல்களாகத் தோன்றுகின்றன. அவர் கட்கு இயற்கையின்பந் தெரியாமல் போ-விட்டது. இதுகாலை ஒரு சிலரே சங்க இலக்கியங்களை ஆரா-ச்சி செ-து வருகின் றனர். அவரையும் வறுமை சிறுமைப் படுத்தி வருகிறது. என்செ-வர்? பாவம்!

இங்ஙனம் தமிழ்ப் புலவர் சிறுமை யுற்றதற்குக் காரண மென்னை? பலவேறு சாதியார் நந்நாட்டிற் குடி புகுந்தமையே யாகும். இற்றைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மணம் அருகிக்கொண்டு வந்திருக்கிறது. சில நூற்றண்டு களாகத் தமிழ் மாது வேறு மாதாக மாறி வருகின்றாள். தமிழ்ப் புலவர்கட்குச் சரித ஆரா-ச்சி செ-யப் போதிய அவகாச மின்மையால், அவர்கள் தற்கால நாகரிக உலக உணர்ச்சி யின்றி வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் பேசுவன வற்றை யும் எழுதுவனவற்றையும் போற்றுவாரில்லை. ஆங்கிலங் கற்றவர்கள் அவர்களை இழிவாகக் கருதுகிறார்கள். தமிழ்ப் புலவர்களும் ஆங்கிலங் கற்றவர்களை உயர்ந்த தேவர்களாக எண்ணி வழிபடுகின்றார்கள்.

இப்பொழுது ஆங்கிலத்தில் உயர்தரப் பட்டம் பெற்ற வர்களிற் சிலர் தம்மைத் தமிழ்ப் புலவர்களென்று கருதிப் புத்தகங்கள் எழுதுகின்றனர். அவையாவும் தமிழ் எழுத்துக்

களால் எழுதப்படினும் அவைகளின் கருத்துக்களும் வாக்கியப் போக்குகளும் சொற்றொடர்களும் ஆங்கிலமயமாகவே யிருக் கின்றன. அவர் தம் உள்ளத்தில் கருத்துக்கள் ஆங்கிலத்தில் பரிணமித்துப் பின்னர்த் தமிழொலியாகவும் எழுத்துக்களாக வும் வெளியாகின்றன. ஆங்கிலத்தில் உயர்தரப் பட்டம் பெற்றுத் தமிழ்ப் புலவர் களெனத் தலைகாட்டுவோருள் ஒரு சிலரே தமிழ் நடையாக எழுதும் ஆற்றலுடையவர். இது காலை, தமிழ் நாட்டில் ஆங்கிலத்தமிழ் உலவிவருவதைக் காண எமது மனம் புண்படுகிறது. பெரும்பாலும் கல்லூரி களிலும் ஆங்கில உணர்ச்சியுடைய தமிழ்ப் புலவர்களைத் தமிழ்ப் போதகாசிரியர்களாக நியமித்து வருகின்றார்கள். தமிழ் ஒன்றே பயின்றோர் பிழைப்பின்றி வருந்துவது பரிதபிக்கத் தக்கது. அன்னாருட் சிலர் வறுமையின் கொடுமையால் இழிதொழிலையுஞ் செ-து வருகின்றனர். "தமிழ் பயின்றால் வறுமையால் வருந்தவேண்டும்" என்று பெற்றோர்களே பிள்ளை களுக்கு உபதேசிக்குங் காலத்தைத் தமிழ்த்தா- கண்ணுற்று வருகின்றாள். இங்ஙனம் ஊரார் தமிழைக் கை விடுவா ராயினர்.

அரசாங்கத்தார் ஆதரவு தமிழிற்கு இருக்குமாயின், தமிழ்ப் புலவர் சிறுமையுறார் என்பது நிச்சயம். தமிழ்ப் புலவர்களும் தங்களுக்குள்ள குறைகளை அரசாங்கத்தாருக்கு முறையிடுவதில்லை. முறையிடும் முறைகளும் அவர்களுக்குத் தெரியா. சட்டசபையிலுள்ள பலருக்குத் தமிழ்ப் புலவர் களைப் பற்றிய எண்ணமே தோன்றுவதில்லை. ஆங்கிலப் புலவர்கள் சம்பளத்தையும் தமிழ்ப் புலவர்கள் சம்பளத்தை யும் ஆரா-ந்து பார்த்தால் தமிழ் எவ்வாறு அரசாங்கத்தா ரால் கவனிக்கப்பட்டு வருகிறது என்பது நன்கு விளங்கும். கருணையும் நீதியுங் கலந்தோங்கும் அரசாங்கத்தார் கவனத்தைத் தமிழின் மீது செலுத்துமாறு கிளர்ச்சி செ-யவேண்டுவது தமிழ்மக்கள் கடமை. சகோதரர்கள் எல்லா முயற்சிகளுக்கும் மகாநாடுகள் கூடித் தீர்மானங்கள் செ-கின்றார்கள். தமிழ் வளர்ச்சிக்காக இதுகாறும் எத்துணை மகாநாடுகள் கூடியிருக் கின்றன? எத்துணைத் தீர்மானங்கள் அரசாங்கத்தாருக்கு அனுப்பப்பட்டன? தமிழ்ப் பண்டிதர்கள் சம்பளத்தைக் குறித்து எத்தனைச் சட்டசபை அங்கத்தவர்கள் முயற்சி செ-தார்கள்? சில சங்கங்கள் மூச்சு விட்டிருக்கின்றன என்பதைச் சிலர் அறிவர். சட்டசபையிலும் ஒரு முறை தமிழ்க் காற்று வீசியதாகக் கேள்விப்படுகின்றோம். இச்சிறு முயற்சிகள் அரசாங்கத்தாரைக் கவனிக்கச் செ-யா. பல மகாநாடுகள்

கூடிப் பேரியக்கமும் முழக்கமுஞ்செ-யல் வேண்டும். இம் முயற்சி களுக்கு இடையூறு நம்மவர்களே செ-வார்கள் என்பதில் ஐய மில்லை. அவர்களை யொரு பொருட்படுத்தாது குறைகளை அரசாங்கத்தாருக்கு முறையிட ஊக்கமும் உறுதியும் நமக்கு வேண்டும். இக்காரியத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுங் கலந்து உழைக்கலாம்.

தமிழ்ப் புலவர்களே! ஆங்கிலப் புலவர்கள் பெருமையை உற்றுநோக்குங்கள்; 'பொறாமை' என்பதைக்களைந்து கடலிலே எறியுங்கள்; ஆகுபெயர் அன்மொழித் தொகை சண்டையை யொழியுங்கள்; ஓ-ந்த காலத்தில் ஆங்கிலம் பயின்றோரை அடைந்து பூதபௌதிக தத்துவ சாஸ்திரங்களைக் கேட்டுத் தற்காலத்துக்கேற்ற உணர்ச்சிபெற முயலுங்கள். ஜனத் தலைவர்கள் தங்ளுக்குள் வேறு வழிகளிலுள்ள வேற்றுமை களைப் பாராட்டாது உங்கள் முன்னேற்றத்துக்காக உழைப் பார்கள். மடாதிபதிகளே! தமிழ் வளர்ச்சிக்காயினும் நீங்கள் முயற்சி செ-யலாகாதா?

(21-1-1918.)

# தமிழுஞ் சுய ஆட்சியும்

உலகத்திலேயுள்ள மொழிகள் பலவற்றுள்ளுந் தமிழ் மிகத் தொன்மையது. தமிழ், பிறமொழிகளின் உதவியின்றி இயங்கும் ஆற்றலுடையது. உலக முழுவதும் அநாகரிகத்தில் அமிழ்ந்து கிடந்தபோது, தமிழுலகம் நாகரிகத்தில் செழுமை பெற்றிருந்தது. இற்றைக்குச் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் புலவர்களால் யாக்கப்பட்ட தொல்காப்பியம், புறநானுறு முதலிய நூல்கள் தமிழ் மக்களின் நாகரிகத்தையும் பெருமையையும் எடுத்து விளக்குங் கருவிகளாக இருக் கின்றன. பண்டைக்காலத் தமிழ் மன்னர்களுக்கு ஐம்பெருங் குழு, எண்பேராயம் என்னும் இரு கூட்டம் துணைசெ-து வந்தன. ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு மாறாக அரசர்கள் நடந்ததில்லை. குடிமக்கள் உள்ளமும் அரசன் உள்ளமும் அன்பால் ஒன்றுபட்டிருந்தன. அரசன் உயிராகவும் குடிகள் உடலாகவுமிருந்தார்கள்.

இந்நூற்றாண்டிலே மேல் நாட்டில் நடைபெற்று வரும் பெரும்போரில் ஜர்மானியர்கள் செ-யும் அநாகரிகச் செயல் களுக்கு அளவேயில்லை. தொல்காப்பியத்திலே புறத்திணை இயலில் போந்துள்ள யுத்தமுறைகளை உற்றுநோக்கி வாசிப் போருக்குத் தமிழர் நாகரிகம் நன்கு புலனாகும். ஓரரசன் மற்றோரரசன் மேல் படையெடுத்துச் செல்லுங்காலத்து, அவ் வரசன் ஊரிலுள்ள பசுக்களையும் பெண்களையும் குழந்தை களையும் சந்நியாசிகளையும் நோயாளிகளையும் பிள்ளை பெறாதவர்களையும் பாதுகாக்கவேண்டிய யுத்த தருமம் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. இதுகாலை மாற்றரசனது ஊரில் பசுக்கள் அகப்படின், அவையாவும் போர்வீரர்கள் வயிற்றிலே பாதுகாக்கப்படும்.

தமிழ் மக்கள் அகவொழுக்கத்தை அறியுமாற்றலுடைய வராயிருந்தார்கள். இப்பொழுது அகவொழுக்க நெறி அறவே ஒழிந்தது. அதைப்பற்றி விபரீத உணர்ச்சி ஆங்கிலங் கற்ற தமிழ் மக்களிடையில் விளைந்திருக்கிறது.

தமிழ்மக்கள் கடற்சண்டை செ-ததாகப் பதிற்றுப் பத்து, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் கூறுகின்றன. தமிழர்கள்

ரோம், கிரீஸ் முதலிய தேசங்களோடு வியாபாரஞ் செ-த தாகத் தெரிய வருகிறது. அவர்கள் எலி மயிரினால் ஒருவகை கம்பளஞ் செ-திருந்தார்கள். அக்காலத்தில் சாரைப்பாம்பின் தோல் போன்ற மிக மெல்லிய வஸ்திரம் நெ-யப்பட்டு வந்தது.

தமிழர்கள் ஒழுக்கத்தை விரித்துக்கூறப் பல நூல்கள் வேண்டுமோ? திருக்குறள் ஒன்றே சாலும். பதினாயிரம் ஆங்கில நூல்கள் ஒரு திருக்குறளுக்கு இணையாகுமோ? இரு மொழியிலும் வல்லார் இவ்வுண்மை யுணர்ந்திருக்கின்றனர்.

பண்டைக்காலத்தில் தமிழ் மக்களிடையில் சாதி வேற்றுமை பரவினதில்லை. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா - செ-தொழில் வேற்றுமை யான்" என்னும் வள்ளுவர் வா-மொழியை உற்று நோக்குக.

எம்முன்னோர்கள் கடவுளை அன்பு மயமாகவும், நீதிகள் திரண்ட ஒன்றாகவும் போற்றிவந்தார்கள்; அக்கடவுளைக் கொல்லாமை, பொ-யாமை, அருள், அன்பு, தவம், அறிவு முதலிய பூக்களினால் வழிபட்டு வந்தார்கள். தமிழ்ப் புலவர்கள் தங்கள் அகமும், புறத்தேயுள்ள இயற்கையும் இரண்டறக் கலக்கப்பெற்று, அதனால் உண்டாகும் இன்பத்தை நுகர்ந்து கொண்டிருந்தார்கள்.

பெண்பாலர் இல்லொளியா- விளங்கினர்; வீரத்தில் சிறந்தனர்; நாயகனைத் தெ-வமாகப் போற்றினர்; அன்பு சுதந்தரத்தைப் பெற்றிருந்தனர்; கல்விக்கரசிகளாயிருந்தனர்; செங்கோல் தாங்கி நாட்டையும் ஆண்டனர்; கற்பால் கடவு ளாயினர். ஒவ்வொரு வீடும் அவர்தங் குணநலத்தால் மோட்ச லோகம் போல் பொலிந்திலங்கினது.

இத்துணைச் சீருஞ் சிறப்பும் வா-ந்த தமிழ் நாடு இப்பொழுது எந்நிலை யுற்றிருக்கிறது? எல்லா நாடுகளுக்குங் கல்விப் பொருளையுஞ் செல்வப் பொருளையும் வழங்கி விட்டுத் தான் பட்டினி கிடந்து வருந்துகிறது. தமிழ் நாட்டார் தமிழை மறந்தார்கள்; சுதந்தரத்தையிழந்தார்கள்; ஆங்கில மயமாக விளங்குகிறார்கள்.

தமிழ் மக்கள் முன்னேற்றத்துக்கென வெளிக்கிளம்பிய டாக்டர் நாயர் மேல் நாட்டு நாகரிகங்கள் இந்தியாவிற் பரவிய பின்னரே ஜனப்பொறுப்பாட்சி கொடுக்கப்பட வேண்டு மென்று எழுதுகிறார்; பேசுகிறார். அவருக்குத் துணையாக மிஸ்டர் ஒ. கந்தசாமி செட்டியும் புறப்பட்டிருக்கின்றார். இவர்கள் தமிழ்மக்கள் வழக்க வொழுக்கங்களை மாற்ற

*முயலுகின்றார்கள். ஒரு பெருமாறுதல் உண்டானாலும் உண்டாகும். இவர்கள் மேல்நாட்டு நூல்களைப் பயின்று, அதனால் தோன்றிய அறிவினல் தமிழ் நாட்டைத் திருத்த வெளிவந்திருக்கின்றார்கள். தமிழ் நாட்டைத் திருத்தத் தமிழ் நூல்களே சாலும். இப்பொழுது திருவள்ளுவரைப் படிப்பவர் யார்? தொல்காப்பியத்தைத் தொடுபவர் யார்? புறநானூற்றைப் போற்றுவோர் யார்? சிலப்பதிகாரத்தைச் சிந்திப்பவர் யார்? மணிமேகலையை மதிப்போர் யார்? பத்துப் பாட்டைப் படிப் போர் யார்? பலரில்லையே. இந்நூல்களின் பெயர்களைக் கேட்டுள்ளவர் ஆயிரத்தில் ஒருவரோ? இருவரோ? அறிகிலேம். அரும் பெரும் நூற்கருத்துக்கள் அழிகின்றனவே. தமிழர் வழக்க ஒழுக்கங்கள் அருகுகின்றனவே. இப்பொழுது தமிழர்கள் செ-யவேண்டிய கடமை யென்னை? தமிழ்த் தாயைக் கொல்ல முன்வந்துள்ள பெரியோர்களோடு கலந்து உழைப்பதோ? சகோதரர்களே! நடுநிலை வழாது யோசி யுங்கள். சிற்சில சகோதரர்கள் ஆங்காங்கே தமிழ்க் கழகங்கள் ஏற்படுத்தி முயற்சி செ-தும் பயன் பெற்றார்களில்லை. மதுரைத்தமிழ்ச் சங்கம் எழுச்சி குன்றாது முயன்றாலும் தமிழ் கட்டாயப் பாடமாக ஆக்கப்படுமோ? சர்வகலாசாலை நம்பக்கந் துணை செ-யுமோ? இப்பொழுதுள்ள ஆட்சி முறை ஜன விருப்பப்படி நடைபெறுவதோ? இவ்வாட்சி முறை யில் நம் விருப்பம் நிறைவேறா தென்பது திண்ணம். உத்தியோக சாலைகளிலும், சட்ட நிருவாக சபைகளிலும் தமிழே வழங்கப் பட வேண்டுமென்பது நமது கோரிக்கை. நம் கோரிக்கை ஜன விருப்பப்படி நடைபெறக்கூடிய சுய ஆட்சியால் நிறை வேறும் என்பதில் ஐயமில்லை. தமிழ்மக்கள் சுய ஆட்சி பெற முயல்வது தமிழ்த்தா-க்கு உயிர் கொடுப்பதாகும். சுருங்கச் சொல்லல் - விளங்கவைத்தல் என்னும் உண்மையை உணர்ந்த தமிழ் மக்களுக்குப் பொருளை விரித்துரைக்க வேண்டுவது அநாவசியம், தமிழ்ச் சகோதரர்களே! விரைவில் சுய ஆட்சி பெற முயற்சி செ-வீர்களாக.*

*(4-1-1918.)*

# தமிழ்ப்பண்டிதர் மகாநாடு

இப்பொழுது இந்திய தேசத்தில் பலவகை மகாநாடுகள் (கான்பரன்சுகள்) கூடுகின்றன. தேச காரிய மகாநாடுகள் பல குழுமுகின்றன. ஆசார சீர்திருத்த மகாநாடுகள் பல சேர் கின்றன. வயித்தியாபி விருத்திக் காகவுஞ் சில மகாநாடுகள் கூடுகின்றன. சாதி மகாநாடுகளும் சமய மகாநாடுகளும் கூடிக் கலைகின்றன. ஆனால் தமிழ்ப் புலவர்கள் மகாநாடு மாத்திரம் இதுகாறுங் கூடவேயில்லை. காரணம் ஜனத்தலைவர்கள் கவலையின்மையும், தமிழ்ப் பண்டிதர்கள் ஒற்றுமையின்மை யும் பிறவுமாம்.

தமிழ் நாட்டு ஜனத்தலைவர்கள் தங்கள் நாட்டை மறந்தே யிருந்தார்கள்; தமிழ் மொழியை வீட்டில் மனைவிமார் களிடம் பேசவேண்டிய மொழியாகக் கொண்டார்கள்; தமிழ்ப் புலவர்களை அஃறிணைப் பொருளாகப் பாவித்து வந்தார்கள். இப்பொழுது பொதுவாக நமது நாட்டில் தோன்றியுள்ள கிளர்ச்சியின் பயனாகப் பல பெரியோர்கள் கவனத்தைத் தமிழ்த்தா- ஈர்த்திருக்கின்றாள். தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்னும் எண்ணம் அவர்களுக்கு உண்டாயிருக்கிறது. அவர்கள் பல சங்கங்களையும் வளர்த்து வருகிறார்கள்; தமிழ்ப்பண்டிதர்களையும் நேசிக்கின்றார்கள். ஜனத் தலைவர்கள் தமிழ் மொழி வளர்ச்சியில் ஊக்கங் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவர்கட்குத் தற்கால நாகரிக உணர்ச்சி உடைய பண்டிதர் கூட்டுறவு அவசியம் வேண்டியதாயிருக்கிறது.

தமிழ்ப் பண்டிதர்கள் பொருளீட்டல் ஒன்றிலேயே தங்கள் உள்ளத்தைப் பதியவைத்துப் பெருந்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ளாது நடந்து தங்களைச் சிறுமைப் படுத்திக் கொண்டார்கள். தமிழ்ப் பண்டிதர்கள் சிறுமைக்குக் காரணம் அவர்கள் சிறுமைச் செயலேயாகும்; ஆங்கிலங் கற்றாரைத் தேவர்களென நினைத்து அவர்கள் ஊழியர்கள் போல நடித்து வந்தார்கள்; தீயொழுக்கத்துக்கு நிலைக்கள மாகிய சில மடத்தலைவர்கள் காலில் விழுந்து கவிபாடி மானமிழந்தார் பலர். நாளேற நாளேறத் தமிழ்ப் புலவர்கள்

இயற்கை இன்ப உணர்ச்சியை இழந்ததோடு, ஒற்றுமையின் பயன், பரோபகாரம், சபைகளால் விளையு நலன், காரியங் களைக் கலந்துயோசிக்கு முறை முதலிய துறைகளை அறவே மறந்தார்கள். 'தாம் உண்டு; தம்மனைவி உண்டு' என்ற அளவோடு நின்று விட்டார்கள். பொது நலம், ஜனஊழியம் என்பன இன்னவென்றே பண்டிதர்கட்குத் தெரியா. ஒருவரை ஒருவர் பகைப்பதே அவர்கள் குணமா- விட்டது. பொறாமை, அவர்களை விட்டுப் பிரியா அணிகலனா- நிலைத்து விட்டது. சிறுசிறு காரியங்களுக்குப் பெருஞ் சண்டை பிடிப்பார்கள்; கண்டன நூல்கள் எழுதுவார்கள். சுருங்கக் கூறின் நாகரிக உலகம் வெறுக்கக் கூடியவாறு பண்டிதர்கள் நடந்து வந்தார்கள் என்னலாம். இப்பொழுது தமிழ்ப் பண்டிதர் களிற் பலர் தற்கால உணாச்சி பெற்றுப் பொதுக்காரியங் களில் தலையிட்டு உழைத்து வருகிறார்கள்; ஒற்றுமை அமைப்பின் இன்பத்தை உணர்ந்து வருகிறார்கள்.

ஜனத்தலைவர்களும் பண்டிதர்களும் ஒன்றுகூடிப் பல காரியங்கள் செ-யக்கூடிய காலத்தை ஈசன் கருணை செ-திருக்கின்றான். அக்காலத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுவது நம் பெருங்கடமை.

தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சியின் பொருட்டுப் பல சங்கங்கள் காணப்பட்டிருக்கின்றன. அவகைளிற் சில தற்கால வழி நின்று வேலைசெ-து வருகின்றன. சில பழம்பாடங் களைப் படித்துக் கொண்டிருக்கின்றன; சில யோகநிஷ்டை கூடியிருக்கின்றன. இச்சங்கங்கள் தனித்தனியாக வேலை செ-வதோடு வருடத்திற் கொருமுறை ஓரிடத்தில் மகா நாடாகக் கூடிப் பல தீர்மானங்கள் செ-து தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைப்பது நலம்.

இம்முயற்சி அரசியல் கிளர்ச்சியின் பாற்பட்டதன்று. ஆதலால் இதில் தேசாபிமானிகள், பாஷாபிமானிகள், சமயாபிமானிகள் எல்லாருஞ் சேர்ந்து உழைக்கலாம்.

தமிழ்ப்பண்டிதர்கள் தங்களுக்குள்ள பல வேற்றுமை களைக் கருதாது 'தமிழ்ப்பண்டிதர்கள் மகாநாடு' ஒன்று விரைவில் கூட்ட முயற்சி செ-வார்களென நம்புகிறோம். அம்மகாநாட்டால் பெரும்பயன் விளையும் என்பது திண்ணம். தமிழ்ப்பண்டிதர்கள் குறைகளெல்லாம் ஒழியும். அவர்கள் ஆங்கிலப் புலவர்களைப் போலப் பாவிக்கப்படுவார்கள்.

**"பெருமையுஞ் சிறுமையுந் தான்தர வருமே."**

*(6-5-1918.)*

# தென்னிந்தியாவும் தற்கால எழுச்சியும்

உலகத்திலே யுள்ள எல்லாத் தேசங்களிலும் இந்திய தேசம் இயற்கை வளத்திலும், ஞான உணர்ச்சியிலும் சிறந்த தென்பது அறிவுடையோர் கொள்கை. அவ்விந்தியாவின் தென் பாகத்தைப் பற்றியே இப்பொழுது சுருங்கச் சொல்லப்போகின் றோம். தென்னிந்தியாவில் வாழ்வோருள் பெரும்பாலோர் தமிழரேயாவர். கோதாவரி, கிருஷ்ணா முதலிய தெலுங்கு நாடுகளிலும், மைசூரிலும், மலையாள முதலிய விடங்களிலும் உள்ளவர்களிற் பெரும்பான்மையோர் தமிழரே. அவர்கள் பேசும் பாஷைகள் தமிழினின்றும் திரிவுற்ற பாஷைகளாகும். குமரி நாடு கடலால் விழுங்கப்பெற்றபோது, பல தமிழ்மக்கள் வடஇந்தியாவிற் குடிபுகு தார்கள் என்று சில அறிஞர்கள் கூறுகின்றார்கள். தென்னிந்தியாவைப் பற்றிய சரித்திரங் கருக் கொண்டிருக்கிறது. விரைவில் உருப்பெற்று வெளிவருமென நம்புகிறோம். தென்னிந்தியாவின் நாகரிகச் செயல்களைப் பற்றித் 'தமிழுஞ் சுய ஆட்சியும்' என்ற தலைப்பில் (4-1-18)ல் எழுதியிருக்கின்றோம்.

தென்னிந்தியாவை ஆண்டு வந்த அரசர் மூவர். அவர் சேர சோழ பாண்டியர் என்பவர். இம்மூவரசரின் கல்வி அறிவும், ஆட்சித்திறமும், அவர் குடிகளிடத்துக் கொண்டிருந்த அன்பும், ஜனவிருப்பப்படி ஆண்ட முறையுஞ் சங்க நூல்களால் இனிது விளங்கும். இராமாயண காலத்திலும், பாரதகாலத்திலும் மூவரசும் சிறப்புற்றிருந்தன. பஞ்சபாண்டவர் துரியோதன னாதியரோடு போர்செ-த காலத்து ஒரு சேரன் அவர்தஞ் சேனைகட்கு அன்னமிட்டுக் காத்ததாகப் பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. களவு மணமுங் கற்பு மணமும் நாட்டை நலஞ்செ-தன. உயிரினும் ஒழுக்கம் பாதுகாக்கப்பட்டது அங்கவை, சங்கவை, எயினிமார்கள் முதலிய பெண் புலவர் களுமிருந்தார்கள். திருஞான சம்பந்தர் முதலிய நால்வரும் நம்மாழ்வார் முதலிய பன்னிருவரும் தென்னிந்தியாவின் புத்திரர்களே. சங்கரர், இராமாநுஜர் முதலிய பாஷிய கர்த்தர் களும் தென்னிந்தியாவின் புதல்வர்களே. வட இந்தியாவிற்கும் பிற நாடுகளுக்கும் நாகரிகத்தை வழங்கியது தென்னா

டென்பது பலர் கருத்து. அத்தகைய தென்னாடு இப்பொழுது எந்நிலையிலிருக்கிறது?

தென்னிந்தியாவில் பல சாதியார் குடிபுகுந்தமையால் நாட்டின் வழக்க ஒழுக்கங்கள் மாறிவிட்டன. சாதிச் சண்டை யும் சமயச்சண்டையும் பெருகலாயின. சிலகாலஞ் சாதிச் சண்டை நடந்தது. சிலகாலஞ் சமயச் சண்டை நடந்தது. இச் சண்டைகளே தமிழ்நாட்டின் ஒற்றுமையைக் குலைத்தன. இச் சண்டைகள் குறைந்து ஒற்றுமை தலைப்பட்டு வரும்போது வேறொரு சண்டை கிளம்பி விட்டது. அது பிராமணர் பிராமணரல்லாதார் சண்டை. சண்டை யென்னுஞ் சொல்லை வயிற்றெரிச்சலால் உபயோகிக்கின்றோம். நேயர்கள் மன்னிப் பார்களாக. இச்சண்டை தேச முன்னேற்றத்துக்கு முட்டாக இருக்கிறது. வட இந்தியா எல்லா வழியிலும் ஒற்றுமைப்பட்டு நிற்கிறது. ஞானிகள் வாழ்ந்த தென்னிந்தியா சகோதரத் தன்மையை யிழந்து வருவது விசனிக்கத்தக்கது. திருவள்ளுவர் பிறந்த நாட்டிலோ அன்பொழுக்கங் குன்றுவது? உடையவர் உதித்த நாட்டிலோ சாதிச்சண்டை விளைவது? இத்தேச நூல் களை நன்காராயாது ஆங்கிலோ இந்தியர் கூட்டுறவால் வாழ்க்கையை நடாத்திவரும் இரண்டொருவர் முயற்சியால் நாட்டின் நன்மை கெடுவதோ?

பிராமணர் என்போர் இந்நாட்டைத் தா- நாடாகக் கொண்டோர். அவர் இன்றைக் கிங்கிருந்து நாளைக்கு மேல் நாட்டுக் கோடும் ஆங்கிலோ இந்தியரால்லர். நாட்டின் நன்மை தீமை ஆங்கிலோ இந்தியரைப் பொறுத்தனவோ? பிராமணரைப் பொறுத்தனவோ? பண்டைக் காலத்தில் சில பிராமணர்கள் செ-த தீமைகளை இப்பொழுது பத்திரிகைகளில் எழுதுவ தால் விளையும் பயன் யாது? பண்டைக் காலத்தில் நன்மை செ-த பிராமணர்களில்லையோ? பிராமணர்களை உயர்த்தி னவர் யாவர்? பிராமணர்களிடத்துச் சிலருக்குத் துவேஷ மிருக்கலாம். அதைத் தேச காரியத்தில் பாராட்டலாகாது.

பிராமணரிலும் நல்லவர் உளர்; தீயவருளர். பிராமண ரல்லாதவரிலும் நல்லவரிருக்கின்றனர்; தீயவரிருக்கின்றனர். எல்லா நாட்டிலும், எல்லாச் சாதியிலும் நன்மை தீமை யுண்டு. பிராமணர், பிராமணரல்லா மற்றவரைச் சிறுமைப் படுத்துகின் றனர் என்று சில சகோதரர்கள் கூறுகின்றார்கள். பிராமண ரல்லாதாருள்ளும் பல பிரிவுகளிருக்கின்றன. வேளாளர் பஞ்சமரைக் குறைவாகக் கருதுவதில்லையோ? பிராமண ரல்லாதார் கிளர்ச்சியில் ஊக்கமாக உழைத்து வரும் ஒருவர் "பிராமணரிடத்து மாத்திரம் துவேஷம் பாராட்டல் வேண்டும்.

ஆனால் பஞ்சமரை நம்முடன் சேர்த்தலாகாது" என்னுங் கொள்கையோடு பஞ்சமருக்காகப் பாடுபடுவார்போல நடித்து வருகின்றனர். வேளாளருள் ஒரு சிலர் எப்படிப் பிராமணரைத் துவேஷிக்கின்றனரோ அப்படியே பஞ்சமரும் வேளாளரைத் துவேஷிக்கின்றனர். இப்பகைமையால் நாட்டுக்கு நன்மை யுண்டாகவே யுண்டாகாது.

பிராமண ரல்லாதாருள்ளும் இரு பிரிவு ஏற்பட்டிருப் பதை நேயர்கள் அறிவார்கள். இனிச்சாதி சாதிப்பிரிவுகள் ஏற்படினும் ஏற்படும். நமது முன்னேற்றத்தைக் கெடுப்பதையே பொது தருமமாகக் கொண்டுள்ள சில ஆங்கிலோ இந்தியர்கள் தவம் பலித்துவிடும். சிலர் பட்டத்துக்காகவும், சிலர் உயர்ந்த உத்தியோகத்துக்காவும் ஆங்கிலோ இந்தியர் தயவை நாடி அவர் கட்டளைவழி நிற்கின்றனர். ஒவ்வொரு தேசத்திலுந் தேசத்துரோகிகள் உண்டு. கிறிஸ்துவ நாதரோடு பழகிய யூதாஸ்காரியத் அவருக்குத்துரோகஞ் செ-ய வில்லையோ? ‘குலத்தைக் கெடுக்குங் கோடாரிக் காம்பு’ என்னும் பழமொழி பொ-யாகுமோ? சில சகோதரர்கள் பிராமண துவேஷத்தை இடையீடின்றி எண்ணுகின்றமையால், அவர் உள்ளங் கொதித்து இரத்தங்கருகி, மூளையில் உஷ்ணந்தாங்கலால் வாயில் வந்த வாறு பேசுகின்றனர்; எழுதுகின்றனர். அப்பெரியோர்களொழிய மற்றச் சகோதரர்கள் ஒற்றுமையாகத் தேச முன்னேற்றத்துக்கு உழைப்பார்களாக. தென்னிந்தியாவின் ஒற்றுமையின்மையே சுய ஆட்சிக் கிளர்ச்சிக்குப் பெருந்தடையாக இருக்கிறது. மந்திரிமார்கள் நமக்கு ஆசை காட்டியிருக்கிறார்கள். நமக்குள் ஒற்றுமையின்மையைக் காரணமாகக்கொண்டு அவர்கள் காலந்தாழ்த்த முயல்வார்கள். தென்னிந்திய சகோதரர்களே! ஒற்றுமை உழைப்பே சுய ஆட்சி யென்பதை உணருங்கள்.

(10-1-1918)

# கல்வியும் மாணாக்கரும்

கல்வியின் அவசியத்தை அறியாதரில்லை. கல்வியைப் பற்றிக் கூறாத நூலில்லை. "கல்லாத மூடரைக் காணவு மாகாது" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். அத்தகைய கல்வியைப் பயிலவேண்டிய பருவம் இளமைப் பருவமாகும். அதுபற்றியே ஔவையாரும் "இளமையிற் கல்" என்றருளிச் செ-தனர். மனிதருக்குரிய பலவகைப் பருவங்களில் இளமைப் பருவமே இன்பந்தரக் கூடியது. அவ்விளமைப் பருவத்தில் துக்கந் தோன்றலாகாது; வறுமை முதலிய கொடுமைகள் தோன்றுதலாகாது. இன்பமே மாணாக்கர்கள் உள்ளத்தில் நிலைத்திருத்தல் வேண்டும். பண்டைக்காலத்தில் மாணாக் கர்கள் ஆசிரியன்மார்களை விடுத்துப் பிரியாமல் அவர்கள் பாலுள்ள கல்வி யறிவையும் குண நலத்தையும் பெற்று வாழ்ந்திருந்தார்கள். இக்காலத்து மாணாக்கர்கள் நிலை முற்றிலும் மாறாக இருக்கிறது. நாலாம் வகுப்பு வரை மாணக்கர்கள் மலர்ந்த முகத்தினரா-க் கல்வி பயின்று வருகின்றார்கள்; ஐந்தாம் வகுப்புப் போந்ததும், அவர்கள் உள்ளத்தில் அச்சம், நடுக்கம், கவலை முதலிய துன்பங்கள் தோன்றிவிடுகின்றன. உயர்தர வகுப்புக்களில் அவர்களுக் குண்டாகுங் கஷ்டத்திற்களவேயில்லை. போதகாசிரியர்களா லும் பாடசாலைத் தலைவர்களாலும் அவர்கட்கு உண்டாகுந் துன்பத்திற்கு எல்லையில்லை. சில கலாசாலைகளில் குண மென்னுங் குன்றேறி நிற்கும் ஆசிரியன்மார்களு மிருக்கின் றார்கள். பலவிடங்களில் மாணாக்கர்களைப் பகைவர்களைப் போல நடத்தும் ஆசிரியன்மார்களு மிருக்கின்றார்கள். மாணாக்கர்களில் தீயவர்கள், நல்லவர்கள் என்ற பாகு பாடு செ-தலாகாது. மாணாக்கர்களிடத்தில் தீமையுமில்லை நன்மையுமில்லை. அவர்கள் நன்மையையுந் தீமையையும் பகுத்தறிதற்குரிய கல்வி பயிலவே பாடசாலைகளுக்குப் போகின் றார்கள். ஆசிரியன் கொடியனா யிருந்தால் மாணாக்கர்களும் கொடியராவார்கள் ஆசிரியன் நற் குணமுடையனாயின் மாணாக்கர்களும் நற்குண முடையவர்களாவார்கள். குண நலமுடைய ஆசிரியனை மாணாக்கர்கள் காண்டலினாலும்,

அவனிடம் அவர்கள் சம்பாஷித்தலினாலும், அவர்கட்குக் குணநலமுண்டாகும். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாவது. மாணாக்கர்களுடைய குண நலத்துக்குக் காரணமாயிருக்க வேண்டியவர்கள் ஆசிரியன்மார்களே யாவார்கள். இப்பொழுது பல கல்லூரிகளில் அடிக்கடி ஆசிரியன்மார்களுக்கும் மாணாக்கர்களுக்கும் ஒற்றுமையின்மை யேற்பட்டு விடுகிறது. இங்ஙனம் நிகழ்ந்துவருமாயின் மாணாக்கர்கள் எங்ஙனம் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்களாவார்கள்? ஆதலால் இப்பொழுது மாணாக்கர்கள் பயின்று வருங் கல்வி உத்தியோகத்துக்குரியதே யன்றிப் பெற்றோர்களுக்குக் கீழ்ப் படிதல் முதலிய நற்குணங்கள் அமைவதற்குரியதன்று என்பது அறிவுடையோர் கொள்கை. பரீட்சைக்குப் பணங் கட்டினதும் மாணாக்கர்கள் உள்ளத்தை நடுக்கம் என்னும் பே- கோயில் கொள்கிறது. பரீட்சையில் தேறுவோமோ? தேறமாட்டோமோ? பரீட்சை செ-பவர் எக்குண முடையரோ? என்னுங் கவலையே மாணாக்கர்களுக்குப் பெருகிவிடுகிறது. ஒ-வு நாளில் அவர்கள் உள்ளம் ஆடலிலும் பாடலிலும் செல்வ தில்லை. பரீட்சை யேக்கத்தினால் அவர்களுக்கு இரத்தத்தின் இயற்கை யோட்டம் முட்டுப்படுகிறது. அது முட்டுப்படுத லினால் மூளையின் உரங் குன்றிப் போகிறது. அதனால் அவர்கள் அகமலர்ச்சி யொழியப் பெறுகின்றார்கள். மாணாக்கர்கட்கு இளமையிலேயே கிழத்தோற்ற முண்டாதல் உற்று நோக்குவோர்க்கு இனிது புலனாகும். இக்காரணத் தினால் சில மாணாக்கர்கள் நோயால் மெலிகின்றார்கள்; சில மாணாக்கர்கள் அகால மரணத்தை யடைகின்றார்கள். ஆதலால் மாணாக்கர் தந் துன்ப நோயை யொழிப்பதற்கு மருந்து யாது? சுய ஆட்சியே அந்நோயை யொழிக்கு மருந் தென்று நாம் கூறுவோம்.

*(18-12-1917)*

# சர்வகலாசாலை

கல்வி அறிவை வளர்க்கவேடி ஒவ்வொரு நாகரிக நாட்டிலும் சர்வகலாசாலை அமைப்பது தொன்று தொட்ட வழக்கம். படைக்காலத்தில் நமது நாட்டில் சர்வகலா சாலைகள் பல இருந்தன. பண்டை இந்தியக் கல்விப் பெருமையைப் பற்றிக் காலஞ் சென்ற வி. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் சென்னைச் சர்வ கலாசாலையில் ஓர் அரிய உபந் நியாசஞ் செ-தார்கள். அவ்வுபந்நியாசத்தில் சர்வகலாசாலை அமைப்பு நமது நாட்டிற்குப் புதிய தொன்றன்று என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். டாக்டர் ரா-, சர் ஜெ. ஸி. போஸ் இவர்கள் ஆங்காங்கே செ-து வரும் உபந்நியாசங்களாலும் இந்தியக் கலைஞானப் பெருமை நன்கு விளங்கும். பண்டை இந்தியாவின் கல்வி யறிவை ஆரா-ச்சி செ-யப் போதிய அவகாசம் பெறாத சிலர் வாயில் வந்தவாறு உளறுவர். காருண்ய பிரிட்டிஷார் இந்தியாவின் கல்வி யறிவை வளர்க்க ஆங்காங்கே சர்வகலாசாலைகள் அமைத்திருக்கின்றார்கள். அவைகளின் மூலமாகச் சில நன்மைகள் விளைந்திருப்பற்கு நன்றி கூறுகின்றோம். இன்னும் பற்பல சீர்திருத்தங்கள் சர்வகலாசாலைகளில் செ-யப்பட வேண்டுமென்பது எமது வேண்டுகோள்.

உதாரணமாகச் சென்னை மாகாணச் சர்வகலா சாலையை யெடுத்துக்கொள்வோம். இப்பெரிய மாகாணத்தில் குறைந்தது நான்கு சர்வகலாசாலைகள் இருத்தல் வேண்டும். இப்பொழுதுள்ள ஒரு சர்வகலாசாலை ஆயிரக் கணக்கான மாணாக்கர்களைப் பரீட்சை செ-கிறது. இதனால் மாணாக்கர் கட்குப் பல வழியிலுந் தீமையுண்டு. ஒரு பரீட்சகர் ஆயிரக் கணக்கான விடைப்பத்திரங்களைத் திருத்தல் கூடா தென்பது எமது கொள்கை. பெரும்பாலும் பரீட்சை செ-வோர் பிள்ளை கட்குப் பாடசாலைகளில் போதிக்கப்படும் முறைகளை யொட்டிக் கேள்வி கேட்பதில்லை. கேள்விகளைக் கண்ட வுடன் மாணாக்கர்கள் இடிமுழக்கங் கேட்ட நாகங்கள் போலாகின்றார்கள். கலாசாலைப் போதகாசிரியர்களே பரீட்சிகர்களாக இருத்தல் வேண்டும். சில நண்பர்கள்,

போதகாசிரியர்கள் சோதனைக் கர்த்தர்களாக இருத்தல் கூடா தென்று பேசினார்கள். ஒரு மூலையில் ஒரு போதகாசிரியர் அயோக்கியராகக் காணப்படுவதால், மாணாக்கர்கள் சுபாவத்தைச் சிறிது முணராத சிலரைக்கொண்டு சிறுவர்கள் முயற்சியைக் கொலைசெ-வது தருமம்போலும்! அசத்திய போதகாசிரியர்களைக் கல்லூரியினின்றும் விலக்கி விடுவது பொருத்தம். அவர்கள் நிமித்தமாக மாணாக்கர்கள் அறிவு வளர்ச்சியையும் முயற்சியையுங் கெடுப்பது முறையன்று.

சர்வகலாசாலை அரசாங்கத் தொடர்பைப் பெரிதுங் கொண்டிருத்தலாகாது. சர்வகலாசாலை நிருவாக அங்கத்த வர்கள் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும், ஆங்கிலோ இந்தியர்களாகவு மிருக்கின்றார்கள். ஜனப்பொறுப் பாட்சி முறையில் அரசாங்கம் நடைபெறுங் காலத்துச் சர்வ கலாசாலை அரசாங்கத் தொடர்புடைய தாகலாம். இப்பொழு துள்ள ஆட்சிமுறையில் சர்வகலாசாலை பெரிதும் ஜனப் பொறுப்புடையதாக விருத்தல் வேண்டும்.

தற்காலச் சர்வகலாசாலை முறையால் மாணாக்கர் களுக்குக் கல்வியறிவு வளர்வதில்லை. மாணாக்கர்கள் சில பாடப் புத்தகங்களை நெட்டுருப் பண்ணிப் பரீட்சையில் தேறி உத்தியோகத்திலமர்ந்து விடுகிறார்கள்; சின்னாள் கழிந்ததும் படித்தவற்றை மறந்துவிடுகிறார்கள். உத்தியோகஞ் செ-து வயிறு வளர்க்கத் கொள்ளலாம். தற்காலச் சர்வகலாசாலை துணை செ-வதாகக் மாணாக்கர்கள் சர்வகலாசாலையை மனமார நேசிக்கின்றார்களில்லை. அதை அவர்கள் வெறுக் கின்றார்கள். அவர்கள் உள்ளத்தில் அச்சமும் நடுக்கமும் படர்ந்து நிற்கின்றன. ஸ்விட்ஜர் லன்ட், அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள சர்வகலாசாலைகளின் முறையை இந்திய சர்வகலாசாலைகளும் அனுஷ்டிக்க வேண்டும்.

இப்பொழுதுள்ள சர்வ கலாசாலையால் மாணாக்கர் கட்குத் தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் உண்டாவதில்லை. இத்தகைய சர்வ கலாசாலையால் சிறிதும் பயனில்லை யென்றே கூறலாம். கல்வியால் மாணாக்கர் கட்குத் தேசாபிமானம் ததும்பவேண்டும்; பாஷாபிமானம் பெருக வேண்டும்; சமயாபிமானம் துளும்ப வேண்டும்.

தற்காலச் சர்வ கலாசாலையால் நாட்டிற்கு நன்மை யின்மையால், நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடிய சுதேசக் கல்வி முறைச் சர்வ கலாசாலையை ஏற்படுத்த நமது தலைவர்கள் முயற்சி செ-து வருகிறார்கள். ரபீந்திரநாத் தாகூர் முதலிய

பெரியோர்கள் இம்முயற்யிசியில் பெரிதும் ஊக்கங்கொண்டு உழைக்கின்றார்கள். தேசவளர்ச்சிக்குக் கருவி சுதேசக் கல்வி யென்பது பல அறிஞர் கொள்கையாகும். ஆனால் நமது ஸர்.பி.எஸ். சிவசாமி ஐயர் அவர்கட்கு மாத்திரம் சுதேசக் கல்வி விரோதமாகத் தோன்றுகிறதாம், ஐயர் அவர்கள் சென்னைச் சர்வகலாசாலையின் வைஸ்சான்ஸலர் என்பதை நேயர்கள் அறிந்திருப்பார்கள். தற்காலம் நிருவாக சபையில் இந்திய அங்கத்தவராயுள்ள திவான் பஹதூர் இராஜ கோபாலாச் சாரியார் அவர்கள் தமிழ் இஷ்ட பாடமாக மாறினமையால், அது வளர்ச்சி பெறுகிறது என்று கூறுகின்றார்கள். அவர்கள் எக்காரணம் பற்றி இங்ஙனம் கூறுகிறார்களோ தெரிய வில்லை. தேசபாஷை இஷ்டபாடமாக இருப்பதற்கு மகிழ் வுறும் ஒருவர் இந்திய அங்கத்தவராக நிருவாக சபையில் வீற்றிருக்கின்றார்! நமக்கென்ன குறைவு?

தற்காலச் சர்வ காலாசாலைக்குப் பிள்ளைகளை இரை யாக்குவதைப் பார்க்கிலும், சுதேச முறை பற்றி நடை பெறுஞ் சர்வகலாசாலையை வளர்த்து மாணாக்கர்கட்கு நலஞ்செ-வது பெரும் புண்ணியம். தானத்திற் சிறந்தது வித்தியாதானம். நம் விருப்பப்படி சர்வகலாசாலை யெங்கணும் அமைக்கத் தலைவர்கள் செ-து வரும் முயற்சிக்குத் துணை புரிய வேண்டுவது ஒவ்வோர் இந்தியர் கடமை.

*(20-2-1919)*

# நாடகம்

பண்டைக்காலத்தில் கல்வி முத்திறமாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவை இயல், இசை, நாடகம் என்பன. இவை மக்கள் அறிவைப் பண்படுத்த ஏற்பட்டவை. சிலருக்கு இயற் புலமையாலும், வேறு சிலருக்கு இசையாலும், மற்றுஞ் சிலருக்கு நாடகத்தாலும் அறிவு விளக்கமுறும். இம்முறை மூன்றனுள் இறுதியதாகிய நாடகத்தைப்பற்றிச் சில கூறுவோம்.

நாடகம் என்பது காட்சி வாயிலாக இன்பமூட்டுவது. நூலாரா-ச்சி செ-யப்போதிய ஓ-வுபெறாதவரும், கல்வி யறிவு இல்லாதவரும் பண்டைக்காலத்தில் நாடகத்தைக் கண்டு களிப்பர். நூற்புலமையுடையார் பெரிதும் நாடகத்தைப் பொருட்படுத்துவதில்லை. அரிச்சந்திரன் வரலாற்றை வாசித்து உணரப் போதிய கல்வியறிவு இல்லாதார்க்கு, அவ்வரலாற்றை யுணர்த்த அறிவுடையோர் அரிச்சந்திர நாடகத்தை நடித்துக் காட்டுவர். அதைக் கண்ட அன்னார் அரிச்சந்திரன் வரலாற்றைக் கட்புலன் வாயிலாக நன்கு மனதில் பதியப் பெறுவர். முற்காலத்தில் பலர் தொழிலாளராக இருந்தமையால், அவர் பொருட்டு, உண்மையுணர்த்த அறிஞர் நாடகத்தை நடாத்தி வந்தனர். இப்பொழுது பாடசாலைகளில் குழந்தைகளுக்கு இரண்டும் இரண்டும் நான்கு என்று போதிப்பதற்குப் பதிலாக, இரண்டு குன்றி மணியை ஒரு புறமும், மற்றிரண்டு குன்றி மணியை வேறொரு புறமும் வைத்துக் காட்டி, அவை களை எண்ணச் செ-வித்துப் பின்னர் அவைகளை ஒன்று சேர்த்து, மீண்டும் மணிகளை எண்ணச் செ-வித்து உண்மை விளங்கவைப்பது போல, பண்டை நாளில் உண்மை, ஒழுக்கம் முதலிய நறுங் குணங்களைச் சாதாரண மக்களுக்கு அறிவுறுத்த அக்குணங்களை உருவகப்படுத்தி நாடகமாக நடித்துக் காட்டு வது வழக்கம். அந்நாடகத்தைக் கண்ணுறுவோர் நல்லொழுக் கத்தில் தலைப்படுவர். இத்தகைய நாடகம் போற்றத்தக்கதே.

இடைக் காலத்தில் நாடகத்தால் சிற்றின்பக் கிளர்ச்சி உண்டாயிற்று. நாடகம் தன் சொரூபத்தையிழந்தது. அது கண்ட அறிஞர் நாடகத்தை வெறுத்து, அதை யொழிக்கத்

தொடங்கினர். இடைக்காலத்தில் நாடகம் மறைந்ததற்குக் காரண மிதுவே.

மேல் நாட்டு நாகரிகம் இந்தியாவில் பரவிய பின்னர் அந்நாகரிக முறை பற்றிச் சில புலவர்கள் மீண்டும் நாடகத்தை உயிர்ப்பிக்க முயல்கிறார்கள்; பண்டை நாடகமுறையை விடுத்து மேல் நாட்டு வழியாக அதைத் திருப்பி இடர்ப்படுத்து கிறார்கள். மேல் நாட்டு நாடக முறையின் நோக்கம் வேறு; நம்நாட்டின் நாடக முறையின் நோக்கம் வேறு, இரண்டையும் ஒன்று படுத்த முயல்வது இரும்பையும் பொன்னையும் ஒன்று படுத்த முயல்வதை யொக்கும். இக்காலத்து நாடகப் புலவர்கள் சிற்றின்பத்துறை வழிபற்றி நாடகம் நடித்து ஊரைப் பாழாக்கு கின்றார்கள். இப்பொழுது இந்தியாவில் எல்லாத்துறைகளுஞ் சீர்திருத்தம் பெறுவதுபோல, நாடகத்துறையுஞ் சீர்த்திருத்தம் பெறல் வேண்டும்.

மூலாதாரப் பாடசாலைகளிலும் நாடகங்கள் போதிக்கப் படுகின்றன. கிண்டர்கார்டன் முறையின் உண்மையை உணராத உபாத்தியாயர்கள் பாடசாலையை நாடகசாலையாக மாற்றி விடுகிறார்கள். சோதிக்கவரும் இன்ஸ்பெக்டர்களிற் பெரும் பாலோர் கூத்தைக் கண்டுகளித்து நன்மொழி கூறுகின்றனர். சில பாடசாலைகளிற் பிள்ளைகளுக்குப் பாடங்களே போதிக் கப்படுவதில்லை. நாடகம் நடித்துப் பேர்பெற அரியகாலமும் பொருளுஞ் செலவழிக்கப் படுகின்றன. பெற்றோர்களும் அதைக் கவனிப்பதில்லை. எழுத்துவாசனை தெரியாது, நாடகம் பயின்றுள்ள உபாத்தியாயர்களுக்கு இப்பொழுது நல்ல பிழைப்பு. இளமையிலேயே பிள்ளைகளுக்கு நாடகப் பாட்டிலும் நாடக உடையிலும் நாடகப்போக்கிலும் விருப்ப மெழச் செ-வது கற்றவர்க் கழகன்று. பிள்ளைகள் தீயொழுக்கத் துக்குப் பாடசாலை காரணமாயிருப்பது விசனிக்கத்தக்கது. நாடகத்தின் மீது நாட்டத்தைச் செலுத்தி வரும் சிறுவர்களும் சிறுமியர்களும் வயதில் நாடகத்தார் கூட்டுறவை விரும்பு வார்கள் என்பது திண்ணம். எத்தனையோ குலப்பெண்கள் கல்வியறிவு ஒழுக்கமில்லாக் கயவர்களுடன் கூடி நாடக அரங்கமேறி நாணஞ் சிறிதுமின்றி நடிக்கின்றார்கள். அவர்கள் நடிப்பைக் கண்டு களிக்க ஏழைமக்களும் பட்டினிகிடந்து பொருள் சேர்த்து நாடகக் கொட்டகைக்குச் செல்கின் றார்கள். சுருங்கச் சொல்லில் தற்கால நாடக முறை பெரிதும் நல்லொழுக்கத்தைக் கெடுத்து ஆண்களையும் பெண்களை யும் தீயொழுக்கத்தில் துரப்பிப்பது. நாடகத்தால் நல்லொழுக்கம்

வளரவேண்டுமென்பது நம் முன்னோர் கொள்கை, இக்கால நாடக முறையால் விளையுந் தீமைகளை விரித்தோதினால் பல நேயர்களது மனம் புண்படு மென்று அஞ்சுகிறோம். நாடகத் தால் விளைந்த தீமை போதும்.

இனித்தோன்றும் நாடகங்கள் தேசபக்தியூட்டடக் கூடிய நாடகங்களாயிருத்தல் வேண்டும். பாரத மாதா முன்னாளுற் றிருந்த பெருமையையும், அவள் இந்நாள் உற்றுள்ள சிறுமை யையும் நாடகவாயிலாக நன்கு விளங்கச்செ-யலாகாதோ? திலகர், காந்தி முதலியோர் சரிதங்களை நாடகமாக நடிக்கக் கூடாதோ? அன்பால் என்புருகக்கூடிய கதைகள் எத்தனையோ இருக்கின்றனவே. அவைகளை நாடகப் புலவர்கள் கவனிக் கின்றார்களோ? நாடக மூலமாகச் சாதாரண ஜனங்களுக்குப் பல வகை நன்மைகளை விளைவிக்கலாம். நாடகத்துறையில் தேர்ச்சி பெற்றுள்ள சகோதரர்கள் தேச நலத்தைக்கோரி உழைப்பார்களாக.

(21-3-1918.)

# தாழ்ந்த வகுப்பார்

ஒவ்வொரு நாட்டிலுந் தாழ்ந்த வகுப்பாரிருக்கின்றனர்: இறைவன் சிருஷ்டியில் உயர்வு தாழ்வில்லை. கல்வி அறிவு ஒழுக்கங்களால் உயர்வு தாழ்வு ஏற்படுகின்றன. கீழோர் குலத்தில் தோன்றி அறிவு குணஞ் செயலால் மேலோராதலுமுண்டு. மேலோரினத்திலுதித்துத் தீயொழுக்கத்தால் கீழோராதலுமுண்டு. பெருமை சிறுமைக்கும், மேன்மை கீழ்மைக்கும் காரணம் ஒழுக்கமே. "ஒழுக்கம் உயர் குலத்தினன்று" என்றார் பெரியோர். உலகத்தில் தோன்றிய பின்னர்த் தஞ்செயலால் கீழ்மைப்படுவர் தாழ்ந்தோர் எனப்படுவோர். இங்கிலாந்து, இடலி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களிலுந் தாழ்ந்த வகுப்பாரிருக்கின்றனர். ஒரு காலத்தில் மேல் நாட்டில் ஒவ்வொரு தேசத்திலும் மேல்வகுப்பாரே அரச இன்பங்களை நுகர்ந்துகொண்டு தாழ்ந்த வகுப்பாரைத் துன்புறுத்தி வந்தனர். இங்கிலாந்திலும் அத்தகைய நிகழ்ச்சி நேர்ந்ததுண்டு. காமன்ஸ் சபை வலுத்த பின்னரே உயர்வகுப்பார், எல்லாரையும் நேசிக்கத் தொடங்கினர். ஜப்பானில் சாமுரே என்ற ஒரு வகுப்பாரிருக்கின்றனர். அவர் உயர்வகுப்பாரென மற்றவரால் போற்றப்படுபவர். அவர் தஞ்செல்வாக்கு ஜப்பானில் இன்னுங் குறைந்திருப்பதாகத் தெரிய வில்லை. ஆட்சிப்பொறுப்பு ஒரு கூட்டத்தவரிடமில்லாது அது ஜனப்பொறுப்பாட்சியாகு மட்டும் உயர்வகுப்பார் பெருமையும், மற்றவர் சிறுமையும் உற்றுக்கொண்டிருப்பர் என்பது பலதேசஞான முதிர்ச்சியுடையோர் கருத்து. இப்பொழுது இந்தியாவில் நடைபெற்று வரும் ஆட்சி முறையில் ஒருவகுப்பாரே பெரும்பாலும் முன்னேற்ற மடைந்து வருவது பலர் அறிந்ததொன்று. இவ்வாட்சி முறைதாழ்ந்த வகுப்பாரை முன்னேற்றமுறச் செ-யாதென்பது திண்ணம். நூற்றைம்பது வருட அனுபவத்தை உற்றுநோக்கின் உண்மை விளங்கும். அதுபற்றியே ஜனப்பொறுப்பாட்சி பெறப் பல அறிவுடையோர் முயன்று வருகின்றனர்.

நமது நாட்டில் தாழ்ந்த வகுப்பார் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சிறுமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். உயர்வகுப்பார் அவர்களை விலங்குகளைப்போல நடத்தி வருகின்றனர்.

தாழ்ந்த வகுப்பாருள்ளத்திலும் ஆண்டவன் எழுந்தருளியிருக் கின்றான் என்ற உணர்ச்சி மேல் வகுப்பாருள் பலருக்கு விளங்குவதில்லைபோலும். நாகரிகம் பரவியுள்ள பட்டணங் களில் தாழ்ந்த வகுப்பார் சிறுமையுறுவதாகத் தெரியவில்லை. நாட்டுப்புறங்களில் அவர் படும் கஷ்டத்திற் களவில்லை. அவர்கள் தங்களை அடிமைகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். கீழ்ச் சாதியாரையின்னும் மத்திற்கட்டி அடிக்கும் வழக்கம் நாட்டுப் புறங்களில் அனுஷ்டிக்கப் படுவதாகக் கேள்விப்படு கிறோம். தாழ்ந்த வகுப்பார் பலருக்கு ஆங்கில ஆட்சியின் மேன்மை தெரியாது. சட்டத்திற்கு விரோதமாக உயர்குலத் தார் தங்களைத் தண்டிக்கின்றன ரென்பதும் அவர்கட்குத் தெரியாது. “மேலோரிடத்து அடி உதைப்பட்டு ஊழியஞ் செ-யவே நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்” என்று எத்தனையோ பேர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகையினரைத் தண்டிக்க மேல் வகுப்பாருக்கு எங்ஙனம் மனம் எழுகின்றதோ? அறிகிலோம். தாழ்ந்த வகுப்பார் துக்கத்தை யொழிக்கப் புத்தர், திருவள்ளுவர், சேக்கிழார், இராமாநுஜர் முதலியோர் பன்முறை முயன்றனர். முயன்றும் அவர் தம் வாக்குஞ் செயலும் சின்னாள் உரம்பெற்று நிலவி அருகின. நமது நாட்டில் தாழ்ந்த வகுப்பாருக்குத் துக்கம் நிரம்பியிருக்கிறதென்பதை மறுப்பாரில்லை.

உலகத்திலே வாழும் எல்லா வுயிர்களின் அறியாமையை நீக்கவே ஆண்டவன் என்றுங் கருணைபொழிந்து கொண டிருக்கிறான். ஆண்டவன் உயர்ந்தவன், ஆன்மாக்கள் தாழ்ந்த வர்கள். உயர்ந்தோர் தாழ்ந்தோருக்கு உதவிசெ-யவேண்டு வது இறைவன் செயலால் நன்கு விளங்குகிறது. அத்தகைய ஆண்டவன் அருளைப் பெறுவதற்கு வழியாது? அவனைப் போலத் தாழ்ந்தவர்கள் அறியாமையை நீக்கக் கூடிய அளவு முயற்சி செ-வதேயாகும். கைம்மாறு கருதாது தாழ்ந்தவர்கள் முன்னேற்றத்துக்கு உழைப்பது இறைவனுக்குகந்த திருத் தொண்டாகும். இத்திருத்தொண்டு செ-யவே நாம் சிருஷ்டிக் கப்பட்டோம் என்று நினைப்பது அறிவுடைமை. இதனைச் சமய விரோதம், சாத்திர விரோதம் என்று கருதுவோர் அன்பின் உண்மை நிலையை அறியாதவராவர். மக்கள் கடன் மற்றவர்களுக்கு உழைப்பதே. “என்கடன் பணிசெ-து கிடப்பதே” “நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” “தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளன்” “கிழமைப்பட வாழ்” எனவரூஉம் ஆன்றோர் உரைகளைக் கவனிக்க. இவ்வுரை

களுக்கு இலக்கியமாக இக்காலத்து விளங்குபவர் மஹாத்மா காந்தியாவர்.

இதுகாலை தாழ்ந்த வகுப்பாருக்கு உழைப்பவரெனப் பலர் வெளிவருகின்றனர். அவருள் பலர் நோக்கம் வேறு வழியாக இருக்கிறது. அவர் பட்டம் பெறுமட்டும் தாழ்ந்த வர்க்கு உழைத்தல் முதலிய பொதுஜன ஊழியத்தில் தலையிட்டு வருகின்றனர்; பட்டம் பெற்றதும் ஏழைகளுக்கு உதவி செ-தலை நிறுத்திவிடுகின்றனர். சிலர் தம் உள்ளத்தில் நிறைவாகக் கொண்டுள்ள ஓர் உயர் பதவி பெறுமட்டும் ஏழைகளுக்காக வேலை செ-கின்றவர்போல நடிக்கின்றனர். தம் எண்ணம் நிறைவேறியதும் ஏழைகள் வீடேறிவரின் அவர்கள் கழுத்தைப் பிடித்துத் தள்ளும்படி வாயில் காப்போருக்குக் கட்டளை பிறப்பித்திருக்கின்றனர். இங்ஙனம் காமிய ஊழியஞ் செ-வோர் நற்கதி அடையமாட்டார். நிஷ்காமிய ஊழியஞ் செ-வோர் பேரின்ப வாழ்வில் திளைத்திருப்பர்.

நமது மாகாணத்தில் தாழ்ந்தவர்களை உயர்த்த வேண்டிக் காணப்பட்ட சபைகள் பல. அவைகளிற் சில உண்மையாக உலகத்திற்கு நலஞ்செ-து வருகின்றன. இச்சபைகள் பல பாடசாலைகளை அமைத்திருக்கின்றன. அவைகளில் சில தாழ்ந்த வகுப்புப் பிள்ளைகளும் படித்து வருகிறார்கள். செல்வர்கள் உதவியை யெதிர்பார்த்து நடத்துப்படும் அப் பாடசாலைகள் நீண்டகாலம் பயன் செ-யா. அரசாங்கத்தார் கருணை தாழ்ந்த வகுப்பார் மேல் திரும்ப வேண்டும். இதுகாறும் அரசாங்கத்தார் தாழ்ந்த வகுப்பாருக்குப் போதிய உதவி செ-ததாகத் தெரியவில்லை. தாழ்ந்த வகுப்பார் கட்டாய இலவசப் படிப்பைப் பெறவேண்டிய ஏற்பாடுகள் அரசாங்கத்தாரால் செ-யப்பட வேண்டும். அப்பொழுதே தாழ்ந்தோர் உயர்வதற்கு வழிபிறக்கும்.

*(29-1-1918.)*

# தாழ்ந்த வகுப்பாருந் திலகரும்

உலகத்திலே வாழும் மனிதருள் சிலர் உயர்ந்தவ ரென்றும், சிலர் தாழ்ந்தவரென்றுஞ் சொல்லப்படுகின்றனர். உயர்வு தாழ்வு பிறப்பை ஒட்டினவோ அல்லது முயற்சிச் சிறப்பைப் பொறுத்தனவோ என்பது பலர் ஐயம். உயர்வு தாழ்வு என்பன எல்லா நாட்டிற்கும் பொது. அவை நாட்டிற் கேற்றவாறு வேறுபட்டிருக்கின்றன. இந்தியாவில் உயர்வு தாழ்வு பிறப்பை ஒட்டி நிற்கின்றன. இந்தியாவில் பலவகுப் பாருள் மிகத்தொன்மையோர் தமிழரும் ஆரியருமாவர். தமிழரின் பண்டை நூல்களிலும் ஆரியரின் பண்டை நூல் களிலுஞ் சாதி வேற்றுமை கூறப்படவில்லை.

இடைக் காலத்தில் இந்தியாவில் சாதிவேற்றுமை ஏற்படுத்தப்பட்டது. அக்காலத் தெழுந்த நூல்களும் சாதி வேற்றுமையைக் குறிப்பிடுகின்றன. இடை இடையே ஞானிகள் பலர் தோன்றிச் சாதி வேற்றுமையை மறுத்தனர். இராமாநுஜர் முதலியோர் சாதி வேற்றுமையைத் தொலைக்கப் பெரு முயற்சி செ-தனர். பின் வந்தார் அவர் தம் முயற்சிக்குக் கேடு சூழ்ந்தனர்.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நிலவிய பின்னர்ப் பட்டணங்களில் வாழ்வோருட் சிலர் சாதி வேற்றுமையை மறுத்துப் பேசலாயினர். கிராமங்களில் இன்னும் சாதி வேற்றுமை இன்றியமையாதது என்னுங் கொள்கையுடை யோர் பலர் இருக்கின்றனர். ஆங்கே பறையன் தன்னைத் தாழ்ந்தவனாகவே நினைக்கின்றான். வேளாளன் தன்னைப் பறையனிலும் உயர்ந்தவனாகவும், பார்ப்பானிலுந் தாழ்ந்தவ னாகவும் நினைக்கின்றான். பிராமணன் தன்னை உயர்ந்தவ னாகவே கருதுகிறான். இச்சாதி வேற்றுமை ஒழுக்கம் நாட்டுப் புறங்களில் இன்னும் பண்டை முறைப்படியே நிலவிவருகிறது. பட்டணங்களிலுள்ளோர் சிலர் சாதி வேற்றுமையை மறுத்து நீண்ட நேரம் மேடைகளின் மீது நின்று பேசுகின்றனர். அவர் வீடு சேர்ந்ததும் மனைவிக்குப் பயந்தோ, தா-க்கு அஞ்சியோ, பிற எவருக்கு நடுங்கியோ சாதிவேற்றுமை பாராட்டு

கின்றனர். இதனால் பட்டணங்களிலும் சாதிவேற்றுமை தொலைந்ததாகத் தெரியவில்லை.

சென்னை ஆசார சீர்த்திருத்தச் சங்கத்தில் சேர்ந்துள்ள ஒருவரைப்பற்றிச் சிறிது கூறுவோம். அவர் வேளாளர். அவர் சாதி வேற்றுமையை மறுத்துரைக்குமாறு எவரும் மறுத் துரைக்கமாட்டார். ஆசார சீர்திருத்த உலகத்தில் அவருக் குள்ள பேரும் புகழும் எவருக்கு மில்லையென்றே கூறலாம். அன்னார் அண்ணன்பிள்ளைக்கு ஒரு சிறுகிராமத்தில் விவாகம் நடந்தது. அப்பொழுது அங்கே சாதிச்சண்டை தோன்றி விட்டது. நமது ஆசார சீர்திருத்த நண்பரே அச் சண்டைக்குத் தலைமைவகித்தார். "அந்தோ! என் அண்ணன் என்னை மோசஞ் செ-து விட்டான். தாழ்ந்த சாதியில் பெண்ணைக்கொண்டு என் குலத்தைக் கெடுத்தனனே பாவி; பணப் பித்து அவன் புத்தியைக் கெடுத்தது" என்று கூறித் தம் உறவினரையும் உடன் அழைத்துக்கொண்டு ஒரு பிராமணன் வீட்டில் அன்னமுண்டு வீடுசேர்ந்தார். குலம் வேளாள குலம். அதில் உயர்வு தாழ்வு காண்போர் ஆசார சீர் திருத்தத்தைப் பற்றிப் பேசுகின்றார்; எழுதுகின்றார். ஆசார சீர்திருத்தக் காரருள்ளும் உண்மையாகச் சாதி வேற்றுமை பாராட்டாமல் வாழ்கின்றவர் மிக அரியர் என்பது எமது கொள்கை.

பிராமணர், முதலியார் என்போர் தங்கடவுளை வழிபடும் பறையரைத் தாழ்வாக நினைக்கின்றனர். அவர், கிறிஸ்துவர்களையும், மகம்மதியர்களையும், ஐரோப்பியர் களையும் அங்ஙனம் பாவிக்கின்றாரில்லை. பண்ணையில் வேலை செ-யும் பொன்னன் மகன் கிறிஸ்துவனாகி, பீ.ஏ. பரீட்சையில் தேறி, டெபுடி கலெக்டராகிக் குதிரை மேலேறிக் கொண்டு கிராமத்துக்கு வருவானாயின், பிராமணரும் முதலியாரும் அவனைக் கண்டவுடன் தண்டனிட்டு நிற்கின் றனர். பறையனாக உள்ள ஒருவனை நம்மவர் தாழ்வாக நினைக் கின்றனர். அவனே கிறிஸ்தவனா-விடின், அவனை முன் போல் பாவிப்பதில்லை. இதுகண்ட பஞ்சம சகோதரர்களில் எண்ணிறந்தோர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவுகின்றனர். அவர் பறையர் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளக் கூசுகின்றனர். இதுபோன்ற கஷ்டங்கள் பலவற்றையும் அனுபவித்துக் கொண்டு இன்னும் ஆயிரக்கணக்கான பஞ்சம சகோதரர்கள் ஹிந்து மதத்தைத் தழுவி வாழ்கின்றார்கள் பாவம்! அவர் களைக் கவனிக்கவேண்டிய கடமை உயர் வகுப்பாரைப் பொறுத்து நிற்கிறது.

*சில வைதிகர்கள் "சாதிவேற்றுமை நூல்களில் சொல்லப் பட்டிருக்கிறது. அவைகளுக்கு மாறாக நடத்தலாகாது" என்று கூறுகின்றார்கள். நூல்கள் ஒவ்வொரு காலத்துப் பெரியோர் களால் அவ்வக் காலத்துக்குத் தக்கவாறு எழுதப்பட்டவை. அக்காலத்துப் பெரியோர்கள் கூறியவாறு நடந்து வருவது போல, இக்காலத்துப் பெரியோர்கள் கூறும் வழி நின்றொழுகு வது நம் பெருங்கடமை. இக்காலத்துப் பெரியோர் யார்? இக் காலத்துப் பெரியோர் மஹரிஷி திலகர், மஹாத்மா காந்தி முதலியோர்.*

*சமீபத்தில் பம்பாயில் பரோடோ மஹாராஜா அக்கி ராசனத்தின்கீழ் நடைபெற்ற தாழ்ந்த வகுப்பார் மகாநாட்டில் திலக மஹரிஷி "சாதி வேற்றுமை ஹிந்து தர்ம சாஸ்திரங் களில் கூறப்படவில்லை. தீண்டாதவர் என்று எவரையும் பாராட்டலாகாது" என்னும் பொருள்படப் பேசியிருக்கின் றனர். கரவீரபீடம் ஸ்ரீமத்-சங்கராசாரிய சுவாமிகளும் தாழ்ந்த வகுப்பார் மீது கருணை பொழிந்திருக்கின்றனர். இவ்விரு குரு மூர்த்திகளை விடப் பெரியோர் வேறு யாவர்? இவர் வழி நில்லாதவர்கள் தேசத் துரோகிகளே.*

*உயர்வகுப்புச் சகோதரர்களே! தாழ்ந்த வகுப்பாரை மிருகங்கள்போல் பாவிக்க வேஷ்டாம். அவர்களும் மனிதர் களே. அவர்களை ஒழுக்கத்தில் உயர்த்த வேண்டுவது உங்கள் கடமை.*

*(27-3-1918.)*

# பிராமணரும் பஞ்சமரும்

பிராமணர் என்னுஞ் சொற்குப் பிரமஞான முடையோர் என்பது பொருள். இது காலை பிராமணர் என்னுஞ்சொல் ஒரு வகுப்பாருக்கே வழங்கி வருகிறது. அச்சொற்பொருள் உண்மை அழிந்து ஒழிந்துவிட்டது. பிராமணரை ஆரியர் என்று சிலர் கூறுப. இராமச்சந்தர தத்தர் "தென்னிந்தியாவி லுள்ள பிராமணர் திராவிடரே" என்று எழுதியிருக்கின்றார். ஸ்ரீமத் இராமாநுஜர் காலத்தில் பல திராவிடர் பிராமணரா யினர் என்று சில பெரியோர் சொல்கின்றனர். ஆரியர் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய நாடு புக்கதாகச் சரித்திரந் தெரிவிக்கிறது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாட்டில் குடி புகுந்த ஒரு சாதியார் அந்நாட்டிலுள்ள மற்றச் சாதியாரோடு கூட்டுறவு செ-யாமல் வாழ்தல் அரிது. இப்பொழுது இந்தியாவில் இன்னார் ஆரியர் இன்னார் திராவிடர் என்று பகுத்தறிதல் அருமையினும் அருமை யென்பது எமது அபிப்பிராயம். இவன் பிராமணன் இவன் பஞ்சமன் என்னும் வழக்காறற்று, எல்லாரும் இந்தியரென் னும் பெயரால் அழைக்கப்படல் வேண்டும் என்பது பல தேசாபிமானிகளின் கோரிக்கை. கோபால கிரு ண கோகலே இவ்வுண்மையைச் செ-கையிற் காட்டிச் சென்றனர். அவரை யாராவது "நீர் எச்சாதியார்" என்று கேட்பின், அதற்கு அவர் "நன் இந்தியச் சாதியான்" என்று பதில் கூறுவாராம். இந்தியா விற் பிறந்த எல்லாரும் ஓரினத்தவரா- வாழவேண்டிய இக் காலத்தில் சாதிவேற்றுமை பாராட்டுவது அறியாமை.

பஞ்சமரென்போர் இந்தியாவின் பூர்வகுடிகளில் ஒரு வகுப்பார். இக்கூட்டத்தார் பிராமணராலும் மற்றவராலும் நீண்ட காலமாகச் சிறுமைப் படுத்தப் பட்டவர். பிரிட்டிஷ் ஆட்சியில் இவர்களது அடிமைத் தன்மை நீங்கி வருகிறது. பிராமணர் என்னும் உயர்ந்த வகுப்பாருள் பலர் பஞ்சமருக் காக உழைக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். "பஞ்சமனைக் காண்டலுமாகாது; அவனைத் தீண்டலுமாகாது" என்னுங் கொள்கை பறந்து விட்டது. எல்லா ஆன்மாக்களும் கடவுள் சொரூபம் என்ற நம் முன்னோர் கொள்கை எங்கணும் பரவிவருகிறது. ஆங்கிலங்கற்றுத் தற்கால நாகரிக உணர்ச்சி

பெற்றுள்ள பிராமணரிற் பெரும்பாலோர் பஞ்சமர் முன்னேற்றத்துக்கு உழைத்துவருகின்றனர். பஞ்சமர்களிலும் சிலர் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவரா-ப் பிராமணரோடு கலந்து உழைக்கின்றனர். இந்தியாவில் இடைக்காலத்துத் தோன்றிய சாதி வேற்றுமை முதலியன சாகுங்கால மிக்காலமே யாம். சில பிராமணர்கள் பல பஞ்சமப் பாடசாலைகளுக்குப் போஷகர்களாகவு மிருந்து வருகின்றார்கள். இங்ஙனம் இரு வகுப்பாரும் ஒற்றுமைப்பட்டும் ஒற்றுமைப்படவும் வாழ்ந்து வருங்காலத்துச் சிற்சில தேசத்துரோகிகள் அவ்வொற்றுமையைக் கெடுத்து விட்டார்கள். சில பஞ்சம சகோதரர்கள் பிராமண சகோதரர்கள் செ-யும் உதவியைப்பெற லாகாதென்றும், அவர்களைப் பெரும் பகைவர்களாகப் பாவிக்க வேண்டு மென்றும் தீர்மானஞ் செ-ததாகக் கேள்விப்படுகிறோம். வேறு சில பஞ்சம சகோதரர்கள் அத்தீர்மானத்துக்கு உடன் படாமல் எல்லாரிடத்திலுஞ் சகோதரத்தன்மை பூண்டொழு கல் வேண்டும் என்ற எண்ணமுடையராக இருப்பதைக் கேட்டு மகிழ்வெ-துகிறோம்.

ஒரு பஞ்சம சகோதரர் “*** இப்பொழுது எங்களிற் சிலர் பிராமண துவேஷங்கொண்டு எங்களுக்கும் பிராமணர்களுக்கு மிருக்கும் ஒற்றுமை நேசத்தைக் கெடுத்து வருகிறார்கள். ஆனால் எங்களில் எல்லாரும் அக்கட்சியில் சேர்ந்தவர்களல்ல. இந்திய மாதாவின் வயிற்றில் பிறந்த எல்லாரும் சகோதரர்களே. வேற்றுமை பாராட்டுவது தருமமல்ல. ஆனபடியால் பிராமணரையும் மற்றவர்களையும் இந்தியர்களாக எண்ணி என் குறையை முறையிடுகிறேன்***” என்று எமக்கெழுதியிருக் கின்றார். *** பஞ்சம சகோதரர்கள் பிராமணர்களும் மற்றவர் களும் புரியும் உதவியால் தங்கட்கு இழுக்குண்டாகுமெனக் கருதுவது நியாயமன்று. பண்டைக்காலத்தில் பஞ்சம சகோத ரர்கள் பிராமணர்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் உழைத் திருக்கின்றார்கள். அக்காலத்தில் அவ்வுழைப்புக்குத்தக்க ஊதியம் அவர்கள் பெற்றதாகத் தோன்றவில்லை. அப்பொருள்கள் யாவும் பிராமணர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் அடங்கி யிருக்கின்றன. அவைகளை அவர்கள் இப்பொழுது பஞ்சமர் களுக்குச் செலுத்தி வருகின்றார்கள். பிராமணர்களிற் சிலர் தங் கடனைச் செலுத்திக்கொண்டு வருகின்றாரென்பது எமது கொள்கை. பிராமணர்களும் பஞ்சமர்களும் தங்களுக்கிருந்த பழம் பகையைப் பாராட்டாது ஒற்றுமையாகத் தேச முன்னேற்றத்தைக் கருதி உழைப்பார்களாக.

(25-12-1917.)

# யாருக்காக வாழவேண்டும்?

மனித வாழ்வு இருவகைப்படும். ஒன்று தன்னலங்கருதும் வாழ்வு; மற்றொன்று பிறர் நலங் கருதும் வாழ்வு. தன்னலங் கருதி வாழ்வோன் இன்னும் மனிதனாகச் சிருஷ்டிக்கப்படாதவன். பிறர்நலங் கருதி வாழ்வோனை மனிதன் என்னலாம். நமது நாட்டிற்றோன்றிய ஞானிகள் பலரும் "பிறருக்காக உலகத்திலே வாழவேண்டும்" என்னுங் கொள்கையை வலியுறுத்திப் பேசியிருக்கின்றார். அங்ஙனம் பேசியும் பலர் அன்னார் உரைவழி நிற்கின்றாரில்லை. பிறருக்கு உழைக்க அஞ்சித் துறவொழுக்கம் பூண்டு நடிப்பவர்கள் கள்ள ஞானிகளே யாவார்கள். இக்காலத்தில் இத்தகைய ஞானிகளை எங்குங் காணலாம். இல்லறத்திலிருந்து கொண்டு, தன்னலஞ் சிறிதுங் கருதாது "மற்றவர்க்கு வேலை செ-யவே நான் சிருஷ்டிக்கப்பட்டேன்" என்னுங் கொள்கை யுடையவனே ஞானி. ஈண்டு அருச்சுனன் செயலை உதாரணமாகக் கொள்வோம்.

அருச்சுனன் பாண்டவருள் ஒருவன்; வில்வித்தையில் பேர்பெற்றவன்; தவசிரேஷ்டன்; அன்பிற் சிறந்தவன். இவன் குருக்ஷேத்திரத்தில் எதிரிகளைக் கண்டவுடன் சிறிது யோசனை யுடையவனா- "இவர்களையேன் யான் கொல்லல்வேண்டும் இம்மண்ணுலகத்தை யாளவோ என்னருமைப் பாட்டனையும் குருவையும் சகோதரர்களையுங் கொல்வது?" என்று சிந்தித்து மனச்சோர்வடைந்தான். அவன் உள்ளஞ் சோர்வடையவே அவனது வில்லுஞ் சோர்வடைந்தது. தேர்ச்சாரதியாகிய கண்ணபிரான் அருச்சுனன் உள்ள நிலையையுணர்ந்து "அருச்சுனா! என்ன சோர்வு?" என்று வினவினர். அருச்சுனன் கிருஷ்ணமூர்த்தியை நோக்கி "சுவாமி இம்மண்ணுலகையாள இத்துணை உயிர்களை யான் கொல்லவேண்டுமோ? இவர்கள் அந்நியர்களல்ல; பாட்டனாகவும் குருவாகவும் சகோதரர்களாகவு மிருக்கின்றார்கள். இவர்களைக் கொல்ல மனமெழவில்லை" என்றான். அவ்வுரை கேட்ட எம்பெருமான் அருச்சுனா! 'இவர்களைக் கொன்று இவ்வுலகை நான் ஆளவேண்டும்' என்ற எண்ணங் கொண்டோவந்தனை! நன்று!

நன்று!! நான் என்னும் முனைப்போடு செ-யுங் காரியங்களும், தன்னலங் கருதிச் செ-யும் செயல்களும் வீடுபேற்றையளிக்க மாட்டா. நீ கொண்டுள்ள எண்ணத்தை மாற்றல் வேண்டும். சேனா பல முடைமையால் செருக்கித்திரிந்து பலருக்கு இடையூறு புரிந்துவரும் துரியோதனாதியரைக் கொன்றால் உலகத்துக்கு நலமுண்டாகும் என்ற எண்ணத்தைக் கொள்வா யாக. 'இவர்களைக் கொன்று நான் உலகத்தை ஆளல் வேண்டும்' என்னுஞ் சீவபோதத்தை யொழிப்பாயாக" என்று ஞானோபதேசஞ் செ-தனர். அவ்வருளுரையை அருச்சுனன் செவிமடுத்ததும், அவனுள்ளத்தில் ஒருவகை மாறுதல் உண்டா யிற்று. "யுத்தகளத்துள்ள சத்துருக்களை என் பொருட்டாகக் கொல்லல் பாவம். உலக நன்மைக்காகக் கொல்லல் பாவ மன்று. யான் மற்றவர் பொருட்டே தேகந் தாங்கியுள்ளேன்" என்று எண்ணலாயினன். உடனே அவன் வில்லும் நிமிர்ந்தது. அருச்சுனன் பரோபகார வடிவினனாயினன். முதலில் "இவர் களைக் கொன்று யான் உலகையாளல் வேண்டும்" என்ற எண்ணத்தோடு வந்த அருச்சனன் அஞ்ஞான அருச்சுனன். கண்ணபிரானின் உபதேசங் கேட்ட பின்னர் "தற்பயன் கருதாது உலக நன்மையை நாடி இவர்களைக் கொல்லல் வேண்டும்" என்ற உணர்ச்சிபெற்ற அருச்சுனன் ஞான அருச்சுனன். அருச்சுனன் வடிவத்தில் மாறவில்லை; தொழிலில் மாற வில்லை. வேடத்தில் மாறவில்லை. ஆனால் அவன் உள்ளம் மாறிற்று. 'நான் என்னும் முனைப்பு அவனை விட்டகன்றது' இதுவே ஞானம் என்பது.

உலகத்திலே மக்கள் தொழின் மாற்றத்தாலும் வேட மாற்றத்தாலும் ஞானிகளாகமாட்டார்கள். அவர் மனம் மாறல் வேண்டும். எவரெவர் எவ்வெத் தொழிலைச் செ-து கொண்டிருக்கின்றனரோ, அவரவர் அவ்வத் தொழிலைச் செ-துகொண்டிருக்கலாம். எவரெவர் எவ்வெவ்வேடந் தரித்துக்கொண்டிருக் கின்றனரோ அவரவர் அவ்வவ்வேடந் தரித்துக்கொண்டிருக்கலாம். தோட்டியாகவு மிருக்கலாம்; தொண்டைமானாகவு மிருக்கலாம். காட்டிலும் வாழலாம்; வீட்டிலும் வாழலாம். தன்னலங் கருதி வாழ்கிறவன் நரக மடைவான்; பிறர்நலங் கருதி வாழ்கிறவன் மோட்சமடை வான். தன் சுகத்துக்காக மனைவி மக்கள் வா-க்கப் பெற் றார்கள் என்று நினைக்கின்றவன் கயவன்; அவர்கள் சுகத்துக் காக "நான் சிருஷ்டிக்கப்பட்டேன்" என்று நினைக்கின்றவன் அறிஞன். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்றார் சாத்தனாரும்.

*இதுகாலை பகவத்கீதையின் கொள்கை பற்றி நிஷ்காமிய கருமஞ்செ-ய வெளிவந்திருக்கின்றவர் திலகமகரிஷி, மகாத்மா காந்தி அன்னை பெஸண்ட் முதலியோர். திலகர் பெருமான் மற்றவர் பொருட்டுத் தாங்கஷ்டத்தை மேற்கொள்ளலையே பேரின்பமாகக் கொள்கின்றனர். அவர் இப்பொழுது கிழ வயதில் பயங்கரமான யுத்த காலத்தில் கடல் யாத்திரை செ-யத் துணிவுகொண்டனர். இத்துணிவு தன்னலங் கருது வோனுக்கு உண்டாகுமோ? ஒருநாளும் உண்டாகாது. எல்லாம் வல்ல இறைவன், தான் ஆலம் உண்டு மற்றவர்க்கு அமுதளித்தது ஈண்டுக் கவனிக்கற்பாலது.*

*நாம் யாருக்காக வாழவேண்டும்? நம் பொருட் டாகவோ? பிறர்பொருட்டாகவோ? சிந்தியுங்கள். உண்மை உணருங்கள். பிறருக்காக உழைக்க வெளிவருங்கள். ஆண்டவன் நம்மைக் காப்பாற்றுவான்.*

*(16-3-1918)*

# நமது வேலை

மனிதன் வேலை செ-யவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். அவ்வேலை இருவகைப்படும். ஒன்று நமக்காகச் செ-யும் வேலை. வேறொன்று மற்றவர்க்காகச் செ-யும் வேலை. இவை யிரண்டனுள் பின்னது இன்பந் தரக்கூடியது. வேலை, கால தேச வர்த்தமானங்கட்குத் தக்கவாறு மாறுதல் அடையும். சில வேலைகளில் சமயத்திற்காகப் பாடுபடவும், சில காலங்களில் ஆசார சீர்திருத்தத்திற்காக உழைக்கவும், சில சமயங்களில் தேசகாரியங்களில் தலையிடவும் நேருதல் இயல்பு. சமயத் திற்கும் ஆசார சீர்திருத்தத்திற்கும் அடிப்படையாயிருப்பது தேசகாரியம். ஒருதேசம் நன்னிலையையிழந்து நிற்குங்காலத்து அத்தேசத்தின் வழக்க ஒழுக்கங்களும், சமய உணர்ச்சியுங் குன்றிப்போகும். சுவரின்றிச் சித்திர மெழுதுவோ ரில்லை. இப்பொழுது இந்தியர்களாகிய நாம் எவ்வூழியஞ் செ-தல் வேண்டும்? இமயம் முதல் கன்னியாகுமரி வரை எதைப்பற்றி ஜனங்கள் பேசிக்கொள்கிறார்கள்? ஜன நோக்கத்தை யுணர்ந்தே தலைவர்கள் தங்கள் கடமையைச் செ-யத் தொடங்குவது வழக்கம். இந்தியா முழுவதும் சுய ஆட்சிச் சந்தடி யன்றோ பரவியிருக்கிறது? காங்கரஸைப்பற்றியன்றோ எல்லாரும் பேசிக்கொள் கின்றனர்? நாட்டுப் புறங்களிலுந் தேசபக்தி நன்கு பரவியிருக்கிறது. ஆதலால் நாம் மேற்கொள்ள வேண்டிய ஊழியம் தேச ஊழியமேயாகும். சமய வளர்ச்சிக்காகப் பாடு படுவோரும், ஆசார சீர்திருத்தத்துக்காக வேலை செ-வோரும் தேச ஊழியத்திற் கருத்தைச் செலுத்தல் வேண்டும். சமயச்சபை களும், ஜன ஊழியச் சங்கங்களும், கல்விக்கழகங்களுந் தேச ஊழியச் சபைகளாக மாறுதல் வேண்டும். உலாவும் போதும், உண்ணும் போதும், உறங்கும் போதும் தேச முன்னேற்றத் திற்கு வேண்டிய காரியங்களையே நினைத்தல்வேண்டும். பஞ்சாட்சர அஷ்டாட்சர மந்திரங்களைப்போல வந்தேமாதர மந்திரத்தைப் போற்றி உச்சரித்தல் வேண்டும். தேசபக்தியை வளர்க்கும் மகா மந்திரம் வந்தேமாதர மந்திரமே. வந்தே மாதர மகா மந்திரத்தைச் சொல்லக் கூசுவோரும், நாணு வோரும், அஞ்சுவோரும் அன்னையைக்கொன்ற பாவத்திற்கு

ஆளாவர். ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு மந்திரம் ஈசன் திருவாக்கினின்றும் பிறந்ததுபோல வந்தேமாதரம் என்னும் மகா மந்திரமும் ஈசன் திருவாக்கினின்றும் பிறந்ததேயாகும். பெரியோர்கள் வாக்கினின்றும் பிறப்பன யாவும் இறைவன் திருவாக்கினின்றும் பிறப்பனவேயாம். பெரியோர்கள் உள்ளத்திற் கடவுள் நீங்காதுறைதலால், அவர்களைக் கடவுளாக வழிபடலாகும். அவர்கள் வாக்கும் கடவுள் வாக்கேயாகும்.

நமது அரசர் பெருமான் ஒரு முறைக்கு இருமுறை நம் நாட்டுக் கெழுந்தருளி "நம்பிக்கையோடு எதிர் பாருங்கள்" என்று திருவா- மலர்ந்திருக்கின்றனர். ஐரோப்பாவில் பெரும் போர் தொடங்கி யிருக்கிறது. முதன் மந்திரியாகிய மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் நமக்கு நன்மைசெ-யவேண்டும் என்று பேசி யிருக்கின்றார். மெசொபொட்டேமியாவில் நம்மவர் வெற்றி பெற்றுக் கொண்டே செல்கின்றனர். இந்திய மந்திரியாகிய மிஸ்டர் மாண்டேகு நம்தேசத்தில் விஜயஞ்செ-திருக்கின்றார். இங்கிலாந்திலுள்ள தொழிற் கட்சிக்காரரும் நம் சார்பாக நிற்கின்றனர். இச்செயல் யாவர்செயல்? ஈசன்செயல் அன்றோ? அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்னும் ஆப்த மொழி பொ-யாகுமோ? இப்பொழுது நாம் செ-ய வேண்டிய வேலை -பரோபகாரியாகிய அன்னை பெசண்ட் அம்மையார் தெ-வச்சபையாகிய காங்கரஸ் அக்கிரா சனத்திருந்து நமக்கு அனுப்பியுள்ள செ-தியை உற்றுநோக்குங்கள். அம்மையார் அக்கிராசன உபந்நியாசத்தில், அரசாங்கத்தார் 1918-ம் வருடத்தில் ஒரு மசோதா கொண்டுவர வேண்டுமென்றும், அதில் இந்தியாவிற்குப் பூரண சுய ஆட்சி 1923-ம் வருடத்துக்குள் அல்லது 1928-ம் வருடத்துக்குள் கொடுக்கப்பட வேண்டுமென்றும் இடைப்பட்ட காலத்தில் முதன்முறையாகக் காங்கரஸ்-லீக் கோரிக்கைகள் கொடுக்கப்பட வேண்டுமென்றும், பிற பின்னிரண்டு முறையாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடல் வேண்டுமென்றுங் கேட்டிருக்கின்றார். நாமுஞ் சுய ஆட்சி கேட்கின்றோம். அரசாங்கத்தாரும் சுய ஆட்சி வழங்க ஒருப்படுகின்றனர். ஆனால் 'எப்பொழுது' என்பது ஏற்படவில்லை. முப்பத்தைந்து கோடி ஜனங்களுக்குப் பிரதிநிதியாக அக்கிராசனம் வகித்துள்ள அம்மையார் காலங் குறித்துவிட்டார். அரசாங்கத்தார் அக்காலத்துக்குள்ளாகத் தம் கொடியின் நிழலில் இந்தியா சுயாட்சி பெற்றின்புறச் செ-வாரென நம்புகிறோம். அரசாங்கத்தார் கருணையை விரைவில் பெற நாம் முயற்சி செ-ய

வேண்டும். அம்முயற்சி அரசாங்க சட்டதிட்டங்கட்கு உட்பட்ட கிளர்ச்சியாகும். இதுவே இப்பொழுது நாம் செ-ய வேண்டிய வேலை. நியாய வரம்பு கடந்து கிளர்ச்சி செ-தல் இராஜத் துரோகமாகும். அதனைக் கனவிலும் மறந்துஞ் செ-யோம். நியாய வரம்புக்குட்பட்ட கிளர்ச்சியால் அரசாங்கத் தாருக்கும் குடிமக்களுக்கும் ஏற்பட்டுள்ள கூட்டுறவு உறுதிப் படும். ஜனத் தலைவர்கள் ஆணைவழி நின்று மாகாண ஜனத்தலைவர்களும் ஜில்லா ஜனத்தலைவர்களும் தாலுக்கா ஜனத் தலைவர்களும் கிராம ஜனத்தலைவர்களும் தேச காரியத்தில் ஒற்றுமையாக உழைத்துக் காங்கரஸ் கொள்கையை நிறைவேற்றுவார்களாக. நம்முடைய ஒற்றுமையையும், ஊக்கத்தையுங் காருண்ய அரசாங்கத்தார் கவனித்து நன்மை செ-வார் என்னும் நம்பிக்கையோடு வேலைசெ-தல் வேண்டும்.

சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதாருள் சிலர் வழிதுறை யில்லாமல் காங்கரஸ் கொள்கைக்கு மாறாக நடந்துவருகின்றார். அவர்தங் கிளர்ச்சியை யடக்கச் சென்னை மாகாணச்சங்கம் ஏற்பட்டிருக்கிறது. அது காங்கரஸ் லீக் கொள்கையைத் தழுவுவது என்பதை நேயர்கள் அறிவார்கள். பிராமணரல்லாதார் அச்சங்கத்தில் சேர்ந்து உழைப்பாராக.

(28-12-1917.)

# செல்வத்தைச் செலவழிக்கும் வழியும் காங்கரஸ் வேலையும்

மனித வாழ்விற்குச் செல்வம் இன்றியமையாதது. அஃது இருவகைப்படும். ஒன்று அருட்செல்வம்; மற்றொன்று பொருட் செல்வம். முன்னையது அவ்வுலகிற்கு வேண்டுவது; பின்னையது இவ்வுலகிற்கு வேண்டுவது. பொருளின்றி இவ் வுலகில் வாழ்தல் அரிது; அதுபற்றி ஈண்டுப் பொருட் செல்வத்தை நாம் எடுத்துக்கொள்வோம்.

பொருளை அறவழியால் சேர்த்தல்வேண்டும்; அதனைத் தக்கவர்க்குப் பயன்படுத்தல் வேண்டும். மறவழியால் பொரு ளீட்டலும், அதனைத் தீயவழியில் செலவழித்தலும் பெரும் பாவம்.

செல்வப் பொருளுடையாருள் பெரும்பாலோர் தம் பொருளைத் தமக்கும், தம்மைப் போன்றார்க்கும் பயன்படுத்து கின்றனர். அழகிய முடி, சுட்டி, மதாணி, காதணி, கையணி முதலிய ஆபரணங்களையும், விலையுயர்ந்த பட்டாடை களையும் அணிய விரும்பி, அவைகட்காகப் பொருளைச் செலவழித்தலும் பிறவும் தம்பெருட்டுப் பொருளைப் பயன் படுத்துவதாகும். மனைவி முதலியோரை அலங்கரிப்பதும் தம்பயன் கருதியே என்பது ஈண்டுக் கவனிக்கத்தக்கது. தம் போன்ற செல்வர்களை வரவழைத்து, அவர்களை விருந்தி னாலும், உல்லாசக் கச்சேரியினாலும் மகிழச் செ-தலும் பிறவும் தம்மைப் போன்றார் பொருட்டுப் பொருளைப் பயன் படுத்துவதாகும்.

செல்வனொருவன் மற்றொரு செல்வன் கலியாணத் திற்குச் சென்று ஆயிரக் கணக்கான பொருளைச் செலவழிக் கின்றான். பின்னர் இவன் அவன் கலியாணத்திற்குச் சென்று தான் அவன்பால் பெற்ற பொருளை மீண்டும் திருப்பிக் கொடுக்கின்றான். இஃதொருவித பண்டமாற்று வியாபார மாகும். இஃது அறவழியாகாது.

பொருளில்லா வறியாவர்க்கே பொருளை யுதவல் வேண்டும். அவர் மீண்டும் அப்பொருளைத் திருப்பிக்

கொடுக்க வியலாதவர். செல்வர்கள் ஏழைகட்காகவே சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றார்கள். செல்வர்கள் ஏழைகளுக்குக் கடன் பட்டிருகிறார்கள். "செல்வர்கள் கடன் காரர்கள்" என்று விவலிய வேதங் கூறுகிறது.

எத்தனையோ ஏழைகட்குச் செலுத்த வேண்டிய பொருளை மனைவியின் காதணி (கம்மல்) ஒன்றிற்குச் செலவழிக்கும் ஒருவன் நாளை கடவுளுக்கு உத்தரவு சொல்ல வேண்டியவன். கலியாண முதலிய நற்காரியங்களிலும், அந்தியேஷ்டி முதலிய தீக்காரியங்களிலும் அளவிலாப் பொருளைச் செலவழிக்கின்றவன் மூடன். சிறியர் தீக்களிநிமித்தம் தாசிக்கச் சேரிக்குப் பொருளைச் செலவழிக்கின்றவன் அறிஞனோ? தனக்குந் தன்னைச் சார்ந்தார்க்கும் வேண்டப்படும் பொருளிற்கு மேலாகத் தன்னிடத்துப் பொருளிருக்குமாயின், அதனைச் சேமித்துவைக்க வேண்டிய இடம் ஒன்றுண்டு. அது யாது? மதராஸ் பாங்கோ? மயிலைச் சேமநிதியோ? பிறநிதிகளோ? அன்று; அன்று. அஃது ஏழைகளின் வயிறே ஆகும். எவன் பொருளை வைத்திய சாலைக்கும், பாடசாலைக்கும், அன்னமடத்துக்கும் பயன்படுத்துகின்றானோ, அவனே தன் பொருளை நன்னிதியில் சேமித்த வனாவான். கூடிய அளவு பிறர் சுகத்தைத் தன் சுகமாகக் கருதுகின்றவனை 'பக்தன்' என்னலாம். வெளிவேஷத்தினால் எவனும் பக்தனாக மாட்டான்.

மஹாத்மா காந்தி மாணிக்கங்களிழைத்த ஆபரணங்களைத் தரிக்கின்ற அரசர்களையும், ஜமீன்தாரர்களையும் வெறுக்கின்றார். விலையுயர்ந்த ஆபரணங்களினால் மனைவியை அலங்கரித்து மகிழ்வுறும் ஒருவனை அவர் விரும்புகின்றாரில்லை. அப்பெரியார் விருந்துகச்சேரிக்கு அளவிலாப் பொருளைச் செலவழித்துப் பட்டம் பெறுவோரைச் சிறிதும் மதியார். காந்தியடிகள் உடல் பொருளாவி மூன்றையும் தேச நலத்திற்கே அர்ப்பணஞ் செ-து பிறர் பொருட்டுத் தேகந் தாங்கி உலவி வருவதை அறியாதாருளரோ?

இப்பொழுது செல்வர்கள் பொருளைப் பயன்படுத்த வேண்டிய ஒரு பெரும் வழியை இறைவன் உண்டாக்கியிருக்கின்றான். அஃதோர் அறவழி. அவ்வழியை என்றும் அழியாச் சேம நிதியென்றுங் கூறலாம். அதில் எல்லாச் செல்வர்களும் பங்குபெற முயலல் வேண்டும். அது காங்கரஸ் வேலை செ-வோருக்கு உதவுவது. காங்கரஸ் வேலை செ-வோர்க்கு உதவுவது பாரதமாதாவிற்கு உதவுவதாம்.

இப்பொழுது காங்கரஸ் வேலை பட்டணங்களில் செ-யப்பட வேண்டுவது அநாவசியம்; கிராமங்களில் செ-யப் பட வேண்டுமென்பதை அறிஞர் உணர்ந்திருக்கின்றனர். அதற்கு நூற்றுக் கணக்கான உபந்யாசகர்கள் வேண்டும். பலர் அவ்வூழியஞ் செ-யச் சித்தமா யிருக்கின்றனர். அவருக்கு உதவி புரிய எத்தனை பேர் சித்தமா யிருக்கின்றனர்? ஒருவருமில்லையே. சின்னாட்களுக்கு முன்னர்ச் சுயஆட்சிக்கு வேலை செ-ய ஆட்கள் தேவை என்று 'பக்த' னில் எழுதி வெளியிட்டோம். அதைக்கண்டு பலர் பல கடிதங்கள் எமக்கு விடுத்தனர். அதில் ஓரம்மையார் விடுத்த கடிதத்திலுள்ள சிலவற்றை யீண்டுக் குறிப்பிடுகின்றோம்.

"****எனது கணவர் தேச ஊழியத்தையே செ-து வந்தனர். ****இருந்த போது அவருடைய மனைவியாகிய யானும், என்னுடைய இரண்டு பிள்ளைகளும் எத்தனையோ நாள் பட்டினியாயிருந்தோம். ****முதலியோருக்குக் கடித மெழுதினேன். அவர்கள் பதில்கூட எழுதவில்லை."

இவ்வுரைகள் நந்தலைவர்கட்கு நல்லறிவு புகட்டுமென நம்புகிறோம். காங்கரஸ் மேடையில் பேசிவிட்டுக் கிராமங் களில் காங்கரஸ் வேலை செ-ய முயலாமலிருப்பது தருமமோ? காங்கரஸ் வேலைக்கென ஒரு நிதி யேற்படல் வேண்டும். அது காங்கரஸ் வேலை செ-ய வெளிவருவோர் குடும்பப் பாது காப்பிற்குப் பயன்பட வேண்டும். தலைவர்கள் சிறு முயற்சி செ-வார்களாயின், இதற்கு இலட்சக்கணக்கான பொருள் சேரும் என்பதிற் சந்தேகமில்லை.

செல்வர்களே! காங்கரஸ் வேலை கடவுள் வேலை. உங்கள் பொருளை அவ்வேலைக்குப் பயன்படச் செ-யுங்கள். அதுவே உங்கள் செல்வத்தைச் செலவழிக்கும் வழி. அதுவே உங்கட்குத் தோட்கோப்பாகும்.

*(4-3-1918.)*

# பூலோக நரகம்

பூலோக நரகம் என்பதைப் பலர் பலவாறு கொள்வர். பூலோகத்திலும் நரகம் உண்டோ? என்று சிலர் கருதுவர். சிலர் "சொர்க்க மத்திய பாதாள மென்னும் மூன்று லோகங் களைப் பற்றிக் கேட்டிருக்கின்றோம். புராணங்களில் வாசித்து மிருக்கின்றோம். ஆனால் பூலோக நரகத்தைப்பற்றிக் கேட்டது மில்லை; வாசித்தது மில்லை" என்று வியப்படைவர். செல்வர் களும், வக்கீல்களில் பலரும், ஜமீன்தார்களும், பட்டதாரி களும் பூலோக நரகத்தைக் கண்டிருக்க மாட்டார்கள். அவருட்சிலர் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பர். பூலோக நரகத்தைக்கண்டு துன்பத்திலழுந்துபவர்கள் ஏழைகளே. ஏழைகளிற் பெரும்பாலோர் நாடோறும் அந்நரகக் குழியில் அழுந்தித் துன்புறுகின்றனர். அந்நரகம் ஆங்கிலங் கற்றவர்க்கு அவ்வளவு துன்பம் பயப்பதில்லை; ஆங்கிலப் பயிற்சி யில்லாத நாட்டுப் புறத்தாருக்குப் பெருந்துன்பம் விளைக் கிறது; பெண்பாலாரை எல்லையின்றி வருத்துகிறது; குழந்தை களை வதைக்கிறது. அந்நரகம் யாதென்பதை அறிந்து கொள்ள நேயர்கள் அவாவுவார்கள். அதனை அறிந்துகொள்ள அவாவுவதிற் பயனில்லை. அதனைப் பூலோகத்தில் நிலைத்து நிற்க ஒண்ணாதபடி யொழித்து, ஏழைகள் துக்கத்தைப் போக்க அவாவுதல் வேண்டும்.

மஹாத்மாகாந்தி அந்நரகத் துன்பத்தை அனுபவத்தி லுணர்ந்து, அதனை யொழிக்க முயற்சிசெ-கின்றனர். அந் நரகம் இறைவனால் உண்டாக்கப்பட்டதன்று; மக்களால் உண்டாக்கப்படுவது. முயற்சியால் அதனை விலக்கலாகும். ஒற்றுமையால் அதனை ஒழித்தலாகும். அந்நரகம் யாது? அஃது இருப்புப்பாதை (ரெயில்வே) மூன்றாம் வகுப்பு வண்டித் தொடர். மூன்றாம் வகுப்பு வண்டிகளில் சிறப்பாகத் தென்னிந்திய ரெயில்வே மூன்றாம் வகுப்பு வண்டிகளில் ஏழைச்சகோதரர்கள் படுந் துன்பத்துக்கு அளவு உண்டோ? மூன்றாம் வகுப்புப் பயணச்சீட்டுப் (டிக்கட்) பெறுவது பெருங்கஷ்டம். கிராம வாசிகளிற் சிலர் டிக்கட் விற்குமிடந் தெரியாது விழித்து வருந்துவதை நேரிற் கண்டவர்

உணர்ந்திருப்பர்; மூன்றாம் வகுப்பு டிக்கட் பெறுவோருக்குத் தனியாகத் தங்குமிடமில்லை. அவர்கள் ஓர் அறையில் ஆடு மாடுகள் போல் அடைக்கப்படுகிறார்கள். வண்டி வந்ததும் வாசற்கதவு திறக்கப்படுகிறது. ஒருவர்மேல் ஒருவர் விழுந்து ஓடுவதையும் ஓடும் வலிமையில்லாதவர் "வண்டி போ-விட்டால் என் செ-வது" என்று நடுங்கி நிற்பதையும், அருமைச் சகோதரிகளுக்கு ஒவ்வொருகால் அங்கே நேரும் அவமானத் தையும் விரித்துரைத்தால் நேயர்களுக்குத் துக்கமிகும். இவ்வளவு வருத்தத்தோடு வாயிற்படி கடந்து வண்டியை நோக்கிச் சகோதர சகோதரிகள் ஓடும்போது, சில உத்தி யோகஸ்தர்களின் கூச்சலினாலும், அச்ச நோக்கத்தினாலும் கரத்தேயுள்ள கம்பினாலும், பெருமித நடையினாலும், அடி உதையினாலும் அவர்களுக் குண்டாகும் இடுக்கண் அளவிடற் பாலதன்று. கஷ்டப்பட்டுக் கூலி வேலை செ-து பெற்ற பணத்தைக்கொண்டு டிக்கட் வாங்கியுஞ் சகோதரர்கள் வருந்த நேரிடுவது விசனிக்கத் தக்கது.

வண்டி யேறின உடனாதல் சகோதரர்களுக்குச் சுக முண்டோ? ஒவ்வொரு வண்டியிலும் அளவிற்கு மேலாக ஜனங்கள் ஏறிவிடுகிறார்கள். ஒவ்வொரு வேளையில் திரும்ப வும் அசையவும் மூச்சு விடவும் முடியாமல் சிறுவர்களும் பெண்களும் பெருந்துக்கத்துக்கு ஆளாகின்றார்கள். திரும்ப வும் அசையவும் இடமில்லையென்றால், உறங்க இடம் எங்கிருந்து கிடைக்கும்? இந்தச் சந்தடியில் சில சகோதரர்கள் சுருட்டுப் பிடித்துப் புகை விடுகின்றார்கள். அப்புகை சிலர் மனதைப் புண்படுத்துகிறது; சில வேளைகளில் சண்டை யையும் மூட்டுகிறது. ஒவ்வோரிடத்திலும் பிரயாணிகள் வண்டியில் ஏறிக்கொண்டேயிருக்கின்றார்கள். கூட்டம் பெருகப் பெருகக் கூச்சல் பெருகுகிறது. இரவு முழுவதும் கண் விழித்தலினாலும், ஜன நெருக்கத்தினாலும், ஒருவர் மூச்சு ஒருவர் மேல் படர்தலினாலும், பிற துன்பங்களினாலும் சகோதரர்கள், மூன்றாம் வகுப்பு வண்டிகளில் அடையும் வேதனையை நரக வேதனைக்கு ஒப்பிடாது வேறு எதற்கு ஒப்பிடுவது?

இக்காரணம் பற்றி முன்றாம் வகுப்பு வண்டியைப் பூலோக நரகம் என்று யாம் சொல்வது வழக்கம். மூன்றாம் வகுப்பு வண்டியில் ஓர் இரவு பிராயணஞ் செ-பவர் வீடு சேர்ந்து சுகமடைய இரண்டுநாள் செல்லும். தேகத்தில் வலிமையில்லாதவர்கள் பித்த சுரத்தால் பல நாள் பீடிக்கப் படுகின்றார்கள். இங்ஙனம் பன்முறை யாத்திரை செ-வோர்

விரைவில் மரணமடைவர். இப்பொழுது இந்தியாவில் ஜனங்கள் அகால மரணமடைவதற்குப் பல காரணங்களுண்டு. அவைகளுள் ஒன்று மூன்றாம் வகுப்பு வண்டி யாத்திரையாகும்.

இவ்வாறு ஏழைகள் நாடோறும் அனுபவித்து வருந் துன்பத்தை யுணர்ந்தவர் யாவர்? முதலாம்வகுப்பு, இரண்டாம் வகுப்பு வண்டிகளில் பிரயாணஞ் செ-யும் ஜமீன்தார்கள் அறிந்திருக்கிறார்களா? பல ஜமீன்தார்களுக்கு ஏழைகள் துன்பம் தெரியாது. அவர்கள் சபாநாயகத்தின் கீழ் நடைபெறும் மகாநாடுகளில் செ-யப்படுத் தீர்மானங்கள் ஜன அபிப்பிராயத்தைத் தழுவினவாமோ? மூன்றாம் வகுப்பு வண்டி யாத்திரையால் நேரும் துன்பத்தை மகாத்மா காந்தி நன்கு உணர்ந்திருக்கிறார்; எப்படி அத்துன்பத்தை யுணர்ந்தார்? அப்பெரியார் தாமும் மூன்றாம் வகுப்பு வண்டியில் பிரயாணஞ் செ-து சகோதரர்கள் துன்பத்தை நன்குணர்ந்தார்; அதையொழிக்கவும் முயற்சி செ-துவருகின்றார். பல பெரியோர்கள் மூன்றம் வகுப்பு வண்டிப் பிரயாணத் துன்பத்தைப்பற்றிப் பத்திரிகைகளில் எழுதினார்கள்; சபைகளில் கேள்வி கேட்டார்கள்; மேடைகளில் உபந்நியாசஞ் செ-தார்கள். என்ன செ-தும் மூன்றாம்வகுப்பு வண்டிப் பிரயாணத்துன்பம் ஒழிந்ததோ? இல்லையே. இதுபோன்ற நோ-கள் இந்தியாவில் பல உள. அவை எல்லாவற்றையும் ஒழிக்க ஒரு மருந்துண்டு. அது யாது? அது ஜனப்பொறுப்பாட்சி என்னுஞ் சுய ஆட்சி யாகும்.

*(2-1-1918)*

# இந்தியாவில் சுகாதாரம்

மனித வாழ்க்கைக்குச் சுகாதாரம் இன்றியமையாதது. சுகாதார நலத்தால் மனிதர்கள் நோயற்ற வாழ்வைப் பெறு வார்கள். 'நோயற்ற வாழ்வே வாழ்வு'. நோயால் பீடிக்கப் பட்டவன் விரைவில் மரணமடைவான். அவன் உலகத்தில் உள்ள மட்டும் மற்றவர்க்குப் பெரும்பாரமாக இருப்பான். நோயுற்ற வாழ்க்கை வாழ்க்கையன்று. நோ-க்குக் காரணஞ் சுகாதாரக் குறைவேயாம். சுகாதாரம் இருவகைப்படும். ஒன்று இயற்கைச் சுகாதாரம்; மற்றொன்று செயற்கைச் சுகாதாரம். இயற்கைச் சுகாதாரம் இறைவன் ஆணை வடிவமாயிருப்பது. செயற்கைச் சுகாதாரம் மனிதர்கள் அறிவுக் கேற்றவாறு இயற்கைப் பொருள்களை மாற்றிச் செ-யும் வசதி இந்தியா வின் இயற்கைச் சுகாதார நிலை செம்மையாக இருக்கிறது. அஃதென்றும் ஒரு தன்மையாக இருப்பது. முற்காலத்தில் நம் பெரியோர்கள் நீண்ட காலம் உலகத்தில் சுகமாக வாழ்ந்து வந்தார்கள். ஒவ்வொருவரும் தொண்ணூறு வயது - நூறு வயது அளவும் சுகவாழ்வைப் பெற்றிருந்தனர். ஆயிரம் வருடம் இரண்டாயிரம் வருடம் ஜீவித்திருந்தவர்களையும் நம் பாரத மாதா ஈன்றிருக்கின்றாள். மரண மடையாமலே உலகத் தில் வாழும் நெறிகளும் உண்டு. இவைகளை நம்மவர்கள் கட்டுக்கதைகள் என்று சொல்லி நகையாடுகின்றார்கள். அது பற்றி யாமும் பழைய உண்மைகளை விரித்து உரையாடாது செல்கின்றோம். பழைய உண்மைகள் உறுதிப்படுங்காலம் நெருங்கியிருக்கிற தென்பதை நேயர்களுக்கு அறிவித்துக் கொளகிறோம். இப்பொழுது மேல் நாட்டு நாகரிகம் பரவாத இடங்களிலுள்ள ஜனங்கள் நீண்ட நாள் உலகத்தில் ஜீவிக்கின்றார்கள்.

இப்பொழுது இந்தியர்களின் சராசரி வயது இருபத் திரண்டு. ஒருகாலத்தில் இந்தியர்களின் சராசரி வயது நாற்ப தாக இருந்தது. இப்பொழுது இந்தியர் வயது குறைவடைந்த தற்குக் காரணம் யாது? இன்னும் அது குறைந்து செல்லினுஞ் செல்லும். இந்தியரினமே நசித்து வருமாயின், அவர் மற்ற

நாட்டவரைப்போல முன்னேற்ற மடைவது எக்காலம்? வரவர இந்தியரில் பெரும்பாலோர் இளமைவயதிலேயே முதுமை யுற்று மரணமடைவதற்குக் காரணம் என்னை? இயற்கையில் மாறுதல் நிகழ்ந்ததோ? ஒன்று மில்லையே. காரணம் பலர் பலவாறு கூறுப. எமக்குத்தோன்றிய சிலவற்றை யீண்டுக் குறிப்பிடுகின்றோம், பிற நாட்டார் வழக்க ஒழுக்கங்களை இந்தியர் மேற்கொள்ளல், இந்தியர்களிற் சிலர் மேல் நாட்டு மது மாமிசங்களை உண்ணல், பெண்ணோயால் பீடிக்கப் பட்டவர்களுக்கு வைத்திய சாலைகளில் சிகிச்சை செ-தல், ஏழைகள் குடிசைகளை அழித்து, அவர்களை வரிசைவரிசை யாகக் கட்டப்பட்ட சிறுவீடுகளில் அடைத்தல், மேல் நாட்டு மருந்துகளை உண்ணல், இத்தேச வொழுக்கத்தை விடுத்தல், பட்டணங்களில் ஜன நெருக்கம், காடுகளை அழித்தல், மின்சார விளக்கு - விசிறி முதலியவற்றை உபயோகித்தல், ஆங்கிலேயர் முறைப்படி உணவு கொள்ளக் காலங் குறிப் பிட்டுப் பெருந்தீனி கொள்ளல், தொழிற்சாலைகளில் தொழி லாளர் நீண்டநேரம் வேலை செ-தல் முதலியன. இவைகளிற் சில மகாத்மா காந்தியால் குறிப்பிடப்பட்டவை. இன்னோ ரன்ன காரணங்களால் இந்தியாவின் சுகாதார நிலை உகுன்றி விட்டது. பண்டைக்காலத்து மனிதர் காலையிலெழுந்து உறைவிடத்துக்குச் சிறிது தூரத்திலுள்ள தோட்டஞ்சென்று, உலாவி, ஊற்றுநீரில் மூழ்கிப் பூக்கொ-து அனுஷ்டானஞ் செ-வர். தோட்டத்தில் உலாவுவதாலும், ஊற்று நீரில் மூழ்குவ தாலும், மலர் வாசனையை முகர்வ தாலும் மனிதருக்குத் தேக சுகமில்லை என்று கூறுவோர் உளரோ? நித்தியானுடான முறைகள் யாவும் தேகாப்பி யாசத்திற்காக ஏற்படுத்தப்பட்டவை என்பது அறிவுடையோர் கருத்து. இடை இடையே இறைவன் திருநாமத்தை உச்சரித்தலால் ஆத்ம சுகமும் உண்டு என்பதை நேயர்கள் கவனிப்பார்களாக. நம்மவர்கள் தேகசுகம், ஆத்ம சுகம் என்னும் இரண்டிற்கும் உழைப்பவர்கள்.

முற்காலத்தில் ஏறக்குறைய எல்லோரும் பிராணா யாமம் செ-து வந்தனர். பிராணாயாமத்தால் தேக சுகம் பாதுகாக்கப்படும்.

**“புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை,**
**நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்,**
**உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்,**
**புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே”** -திருமூலர்.

இப்பொழுது பிராணாயாமம் என்ற சொல் இந் நாட்டினதா என்று கேட்போர் பலர் இருக்கின்றனர்.

முற்காலத்தில் பெண்பாலார் எல்லாருக்குஞ் சுகாதாரம் போதிக்கப்பட்டுவந்தது. புத்தகத்தை யெடுத்துப் படிப்பது தான் படிப்பு என்று சொல்வது அறியாமை. பல விடயங் களைத் தா-மார்கள் - தங்கள் அனுபவத்தைத் தங்கள் புதல்வி களுக்கு நாடோறுஞ் சொல்லிக் கொண்டு வருவார்கள். இப்பொழுது பட்டணங்களிலுள்ள பெண்கள் குழந்தைப் பருவத்திலேயே பள்ளிக் கனுப்பப்படுகிறார்கள். அங்கே அவர்கள், சுகவழியென்னும் நூலைப் படிக்கின்றார்கள்; அதன் பொருளை உணர்கின்றார்களில்லை. அவர்கள் வயதடைந்ததும் கல்யாணஞ் செ-துகொள்கிறார்கள்; தம் சுகத்தையும் நாயகன் மார் சுகத்தையும் பாதுகாக்க இயலாமல் விழிக்கின்றார்கள்; சுகாதாரத்துக்கு விரோதமான காரியங்கள் பல அறியாமை யாற் செ-து துக்கத்துக்காளாகின்றார்கள். பெண் பாலருள் ஒருவர் இருவர் எம். ஏ. பரீட்சையில் தேறுவதால் இந்தியா சுகாதார நிலையை யுணராது. சுகாதாரக் குறைவால் எண் ணிறந்தவர்கள் கொள்ளை நோயாலும், வாந்திபேதியாலும், வேறு பல கொடிய நோ-களாலும் பீடிக்கப்பட்டு மரண மடைகிறார்கள். கொள்ளை நோ- (பிளேக்) எத்தனை ஆண்டு களாக இந்தியாவில் தாண்டவமாடிக் கொண்டிருக் கிறது? இது போன்ற கொடிய நோ-களே இந்தியரின் வாழ்நாளைக் குறைத்து விடுகின்றன. அந்நோ-களைத் தடுக்கவும், சுகாதார வசதிகளைச் சீர்படுத்தவும் அரசாங்கத்தார் கவலைசெலுத்தி வருகின்றனர். நாமும் அவரோடு கலந்து உழைத்தல் வேண்டும். சுகாதாரத்துக்காக அரசாங்கத்தார் இப்பொழுது செலவழித்து வரும் பொருள் போதாது; இன்னும் ஏராள மான பொருள் செலவழிக்கவேண்டும். ஜன விருப்பப்படி பொருளைச் செலவழிக்கத் தற்கால ஆட்சி முறை இடந் தருமோ? சுய ஆட்சி வேண்டாம் வேண்டாம் என்று சொல்லி ஊரைக் கெடுத்துவருஞ் சகோதரர்களே! இந்தியரின் வாழ் நாள் குறைவுற்று வருவதை எங்ஙனந் தடுக்கப்போகின்றீர்கள்? வாந்தி பேதியையும் கொள்ளை நோயையுந் தொலைக்க எத்தனை டாக்டர்களை ஏற்படுத்தியிருக் கின்றீர்கள்? ஒரு டாக்டர் போதுமோ? ஏழை ஜனங்கள் சுகாதாரக் குறைவால் வாடி வருந்திச் சாகின்றார்களே! இராஜாக்களும் ஜமீன்தார் களும் உயர்ந்த மாடி வீடுகளில் வாழ்கின்றார்கள். அவர் களைக் கூப்பிட்டால் அசையாமல் மோட்டார் வண்டியில் ஏறி வந்து மகாநாடுகளில் அக்கிராசனம் வகிப்பார்கள்,

ஆங்கிலோ இந்தியர்கள் சொல்லிக் கொடுக்கிறபடி சுயஆட்சி வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, வீடு சேர்ந்து மகா நாட்டை மறந்து விடுவார்கள். இவர்கள் ஏழைகளின் துன்பத்தை யெங்ஙனம் அறிவார்கள்? சுகாதாரக் குறைவை யும் பிற குறைகளையும் ஒழிக்கவல்லது சுய ஆட்சியொன்றே என்பதை யுணருங்கள்.

*(11-1-1918)*

# ஆசார சீர்திருத்தம்

ஆசார சீர்திருத்த மென்பது மனிதனுடைய ஒழுக்க நிலையை ஒழுங்கு படுத்திக் கொள்ளு முறை. ஒழுக்கமே மனிதனுக்கு உயிர் போன்றது. அவ்வொழுக்க முறை நாட்டிற் கேற்றவாறு பலதிறப்பட்டு நிற்கிறது. அதை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று இயற்கை முறை; மற்றொன்று செயற்கை முறை. இயற்கை ஒழுக்கமுறை அவ்வந் நாட்டிற்கு இயற்கை யாக அமைந்து கிடப்பது. செயற்கை ஒழுக்க முறை பிற நாட்டார் கூட்டுறவால் அவர் தம் வழக்க ஒழுக்கங்களை மேற் கொண்டு நடப்பது.

நமது இந்திய நாட்டின் இயற்கை ஒழுக்க முறை அன்பை அடிப்படையாகக் கொண்டு நிலவுவது. அன்பொழுக்கங் கைவரப்பெற்ற ஒருவனுக்குச் சாதிவேற்றுமை முதலியன தோன்றா. அவனுக்கு ஆத்மவிளக்கம் புலனாகுமன்றி மாயா தேக வேற்றுமை புலனாவதில்லை.

அன்பொழுக்கம் உதயமாவதற்கு உரிய வழிகளும் தேசத் திற்கேற்றவாறு பல திறப்பட்டு விளங்குகின்றன. நந்தேசத்தார் கடவுள் சிருஷ்டிக்கு உட்பட்ட உயிர்கள்யாவும் ஒன்றே என்னும் உண்மை கைவரப் பெறுவதற்கு ஈசுர உபாசனை செ-து வந்தனர். நாமனைவருஞ் சகோதரர்கள் என்ற உணர்ச்சியை மறந்திருப்பது சாதிமுதலிய வேற்றுமைக்குக் காரணமாகும். அன்பு வடிவாகவுள்ள ஆண்டவனைப் பூசிப்பதால் அன் பொழுக்கம் வளரும் என்பது நம் ஆன்றோர் கொள்கை.

பிராமண குலத்துத் தோன்றிய திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள் பாணராகிய திருநீலகண்டேராடு உறவு கொண்டதையும், பிராமணராகிய அப்பூதியடிகள் வேளாள ராகிய திருநாவுக்கரசு சுவாமிகளைக் குருவாகக் கொண்டு அவரைப் பூசித்து அவருடனிருந்து அன்னம் உண்டதையும், பிராமணராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் உருத்திர கணிகை யராகிய பரவையாரையும், வேளாளராகிய சங்கிலியாரையும் மணம் புரிந்து கொண்டதையும் நேயர்கள் ஆரா-ச்சிசெ-து உண்மை தேறல் வேண்டும். இப்பெரியோர்களை ஒருவரோ

டொருவர் கலப்பித்து உறவாடச் செ-வித்தது யாது? ஈசுர உபாசனையான்றோ? அன்பாகிய இறைவனை நாடோறும் பூசிக்கின்ற ஒருவன் அன்பனாகாது வேறு எந்நெறியன் ஆவன்? அவ்வன்பு வழி நின்றொழுகிய பெரியோர்கள் "சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள், கோத்திரமுங் குலமுங் கொண்டு என் செ-வீர்" என்றும், "அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயரா- ஆண்ரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே" என்றும், "மல மில்லை மாசில்லை மானாபிமானக் குலமில்லை கொள்ளுங் குணங்களுமில்லை" என்றும் திருவா- மலர்ந்துள்ள அரிய வாக்குகளை ஆங்கிலம் பயின்று ஆசார சீர்திருத்தம் பேசும் அன்பர்கள் கவனிப்பார் களாக. இங்ஙனம் இறைவன் வழிபாட்டால் தம ஆசாரத்தைச் சீர்திருத்தஞ் செ-து வந்தனர் நம் பெரியோர். அத்தகை இந்தியர் நாடு பிறநாட்டுக் கூட்டுறவால் தன்னெறி விடுத்து வேறு நெறி பற்றத் தொடங்கினமையால், நம்மவருட் சிலர் பலவகை ஆசாரத்தை மேற்கொண்டு அல்லற்பட்டு வருகின் றனர். இந்தியரது தற்கால ஆசார சீர்திருத்த முறையைத் திரிசங்கு சுவர்க்கத்துக்கு ஒப்பிட்டுக் கூறுவது மிகையாகாது.

இப்பொழுது நமது இந்தியாவில் பல ஆசார சீர்திருத்த சபைகள் இருக்கின்றன. அவைகளை அநாசார சபைகள் என்றே நாம் கூறுவோம். அச்சபைகளில் சேர்ந்த பலர் தம் இயற்கை ஆசாரத்தைக் கெடுத்துக் கொண்டனர். சிலர் அச்சபையால் சாதிபேதம் முதலியவற்றைக் கண்டித்துக் கேட்போர் இன்புறு மாறு உபந்நியாசஞ் செ-து வீடு சேர்ந்ததும் சாதிபேதத்திற் பெருங்கவலை செலுத்துகின்றனர். ஆசார சீர்திருத்த சபை களில் சேர்வதனால் நம்மவர்கள் பல நன்மைகளைப் பெற்று வருகின்றார்கள். என்ன நன்மைகள்? புலால் உண்ணாதவர்கள் புலால் உண்கிறார்கள்; மதுபானஞ் செ-யாதவர்கள் மது பானஞ் செ-கிறார்கள்; சிலர் விபசாரஞ் செ-யவும் பழகி வருகின்றனர்.

நம்மூரில் ஓர் ஆசாரசீர்திருத்தச் சங்கமிருக்கின்றது. அதில் மேற்கூறிய மூன்றையும் பழகவே பல மாணாக்கர்கள் சேர்ந்து வருகின்றார்கள். அவ்வங்கத்தவர்கள் திருவிளை யாடல்களை நேரேகண்டவர் சொல்லப் பன்முறை யாம் கேட்டிருக்கின்றோம். அன்னார் தீயொழுக்கங்களைப் 'பக்த' னில் வரைய மனங் கூசுகின்றது.

சில ஆசார சீர்திருத்தக்காரர்கள் விதவா விவாகம் முதலியவற்றைப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். விதவா

விவாகத்தைப்பற்றி ஆண்மக்கள் பேசுவது அறியாமை. பெண் மக்கள் சீர்திருத்தங்களைப் பெண் மக்களே பேசி முடிவு செ-யல்வேண்டும். அவர் தம் முடிந்த கொள்கைக்கு ஆண் மக்கள் கூடுமானால் துணைபுரியலாம்.

நமது நாட்டில் ஆசார முறையைச் சீர்திருத்தஞ் செ-ய வேண்ண்டுமானால், சமயச் சார்பாக நின்றே செ-ய வேண்டு மென்பது எமது கொள்கை. இப்பொழுது சில இடங்களில் பரவி வருவது மேல் நாட்டு ஆசார சீர்திருத்த முறையாகும். அதனால் நம் நாடு ஒற்றுமைப்படாது. காந்தியடிகள் ஆசார சீர்திருத்த முறை நந்தேசத்துக்கு உரியதாகும். அவர் உரை வழி நிற்க வேண்டுவது உண்மை இந்தியர் கடமை. இதைப் பற்றிச் சமயம் நேர்ந்துழிப் பின்னும் எழுதுவோம்.

*(13-5-1918.)*

# மிஸ்டர் பேடலும் விவாகமும்

இப்பொழுது கூடியுள்ள இந்திய சட்டசபையின் இரண்டா நாள் நிகழ்ச்சி முறையை நேற்று வெளியிட்டோம். அந் நிகழ்ச்சி முறையில் ஹிந்துக்கள் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒரு விடய மிருக்கிறது. அது பேடல் கொண்டுவந்த ஒரு மசோதாவாகும். அம்மசோதா வருமாறு:-"ஹிந்துக்கள் ஒரு வகுப்பினின்றும் மற்றொரு வகுப்பில் விவாகஞ் செ-து கொள்ளலைச் சட்டமாகச் செ-யல்வேண்டும். அச் சட்டம் 1918-ம் வருஷத்திய ஹிந்து விவாக அங்கீகாரச் சட்டமென்று சொல்லப்படவேண்டும். பிரிட்ட இந்தியா முழுவதும் அச் சட்டத்தை ஆங்கீகரிக்க வேண்டும். ஹிந்துக்கள் தங்களுக்குரிய ஒரு வகுப்பைவிட்டு வேறு வகுப்பில் கலியாணஞ் செ-து கொள்வது நியாய விரோதமாகாது."

இம்மசோதா முன்னர் ஒருமுறை ஸ்ரீமான் பூபேந்திரநாத் பாஸுவால் கொண்டுவரப்பட்ட மசோதா போன்றது. பாஸு அவர்கள் கொண்டுவந்த மசோதா, எங்ஙனம் பொது ஜனங்களால் மறுக்கப்பட்டதோ, அங்ஙனமே மிஸ்டர் பேடலின் மசோதாவும் மறுக்கப்படும் என்பதிற் சந்தேக மில்லை. இம் மசோதா அரசியலைப் பற்றியதன்று; சாதியைப் பற்றியதொன்று. சாதி விடயத்தில் இது காலை அரசாங்கத் தார் தலையிடுவது அநாவசியம் என்றே தோன்றுகிறது. கால நிலைக்கேற்ற மசோதாக்களைச் சட்டசபையில் கொண்டு வருவது நியாயமாகும். இப்பொழுது இந்தியாவில் எத்தனையோ குறைகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்றைப்பற்றி மிஸ்டர் பேடல் பேசலாகும். தொழிலாளரைப் பற்றி இதுகாறும் எந்தக் கௌரவ அங்கத்தவரும் சட்டசபையில் பேசியதாகத் தெரியவில்லை. இந்தியா பஞ்சத்தால் விழுங்கப்படும் இக் காலத்தில் விவாக மசோதாவைக் கொண்டு வரவேண்டுவது அநாவசியம்.

மிஸ்டர் பேடல் கொண்டுவந்த மசோதாவைச் சிலர் ஆமோதித்தனர்; சிலர் மறுத்தனர்.

இந்தியாவில் இப்பொழுதுள்ள குடிமக்களுள் மிகப் பழையவர் இருவர். அவர் ஆரியர், தமிழர் என்பவர். இவ்

விருவரும் நாளடைவில் வழக்க வொழுக்கங்களிலும், தெ-வ பூசையிலும் ஒன்று பட்டு விட்டனர். இப்பொழுது இன்னார் ஆரியர் இன்னார் தமிழர் என்று பிரித்துக்கணக்கிடல் மிக அருமை. பண்டை ஆரியமக்களுள்ளும் சாதி வேற்றுமை யிருந்ததாகத் தெரியவில்லை. பண்டைத் தமிழ்மக்களுஞ் சாதிவேற்றுமை பாராட்டியதாகத் தெரியவில்லை. இவ்விரு கூட்டத்தவரும் ஒன்று பட்டுக் கலப்புற்ற காலத்திலேயே சாதிவேற்றுமை தோன்றிற்று என்பது சிலர் கொள்கை. பழைய காலத்தில் சாதி வேற்றுமை தொழிலைப்பற்றி ஏற் பட்டது. பிறப்பைப்பற்றி அஃது ஏற்படவில்லை. "பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செ- தொழில் வேற்றுமையான்" என்று திருவள்ளுவருங் கூறியிருக்கின்றனர். நாளேற நாளேறச் சாதி வேற்றுமை பிறப்பை ஒட்டி நின்று விட்டது. நால்வகை சாதி நான்கு கோடி சாதிகளாகப் பிரிந்து விட்டன. ஒவ்வொரு வீட்டினரையும் ஒவ்வொரு சாதியின ராகக் கொள்ளலாம். ஒரு சாதியாரெனக் கூறிக்கொள்வோ ருள்ளும் எத்தனையோ பேதங்களைக் காண்கிறோம்.

இந்தியா பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டபின்னர்ச் சில அறிஞர்கள் சாதி வேற்றுமையைத் தொலைக்கப் பல்வகை முயற்சிசெ-து வருகின்றார்கள். இற்றைக்குச் சுமார் இரண் டாயிரம் வருடங்களுக்கு முன்னர்ச் சாதி வேற்றுமையைத் தொலைக்கப் புத்தர் பெருமான் முயற்சி செ-தனர். பின்னா ளில் அதை ஒழிக்க முயன்றவர் இராமாநுஜர் முதலியோர். எவர் முயன்றும் இந்தியாவில் சாதிபேதம் ஒழியவில்லை.

சாதிகள் பலவாறாகப் பிரிந்தமையால் வழக்க ஒழுக்கங் களும் பலவாறாகப் பிரிந்து நிற்கின்றன. நாட்டிற்கு நாடு வழக்க ஒழுக்கங்களில் மாறுபட்டுக் கிடக்கின்றது. வங்காள தேசத்தார் வழக்க ஒழுக்கத்திற்கும் சென்னை வாசிகள் வழக்க ஒழுக்கத்திற்கும் வேற்றுமை உண்டு. பம்பா- வாசிகள் வழக்க ஒழுங்கங்களிற் பிற நாட்டார் வழக்க ஒழுக்கங்களினின்றும் மாறுபடுகின்றார்கள். நாட்டிற் கேற்றவாறும், பிறப்புக் கேற்ற வாறும் பலவகை வேற்றுமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ் வேற்றுமைகள் உள்ளமட்டும் விவாகமுறையும் வேற்றுமைப் பட்டே நிற்கவேண்டும்.

விவாக மென்பது ஒரு சாதாரண காரியமன்று. மேல் நாட்டார் அதை உலகவின்பமாகக் கருதுவர்: கீழ் நாட்டா ராகிய நாம் விவாகத்தைப் பேரின்பத்துக்கு வழியாகக் கொள் கிறோம். இல்லறமென்பது மனிதனைத் தூ-மைப்படுத்துவது. பண்டைத்தமிழ் நூல்கள் இல்லற இன்பத்தின் பெருமையையே

பெரிதும் பேசுவது கவனிக்கத்தக்கது. மனிதன் வாழ்க்கைக்கு உயிராக நிற்பது இல்லறம். அத்தகைய இல்லறத்தை நடாத்தும் நாயகனும் நாயகியும் வழக்க ஒழுக்கங்களில் மாறுபட்டு விடுவாராயின், அவர் பெற வேண்டிய இன்பம் துன்பமாகவன்றோ மாறும்?

பண்டைக் காலத்தில் சாதி வேற்றுமை பாராட்டாது பல கல்யாணங்கள் நடந்தேறின என்பதை மறுப்பாரில்லை. இப்பொழுது யாம் பெரும்பான்மை நோக்கிப் பேசுகின் றோம். பிராமணனுக்கு வாழ்க்கைப்பட்ட சூத்திரப் பெண்ணின் கதையையும், சூத்திரனுக்கு வாழ்க்கைப்பட்ட பிராமணப் பெண்ணின் கதையையும் யாம் அறிவோம். ஒரு கலா சாலையில் 'தேகப்பயிற்சி' போதிக்கும் ஆசிரியர் ஒருவர் இருந்தார். அவர் பிராமணர். அவருக்கு எப்படியோ ஒரு சூத்திரப்பெண் வாழ்க்கைப்பட்டாள். அவருக்கும் அவளுக்குந் தொடக்கத்தில் ஏற்பட்ட அன்பிற்கு அளவேயில்லை. காலசாலை மாணவரும் அவர் அன்பைக் கண்டு வியப்பதுவழக்கம். பிற்பகல் மூன்றரைமணிக்கே ஓரழகிய வண்டி பள்ளிக்கூடத்தருகே வந்து நின்று கொண்டிருக்கும். நான்கு மணிக்கு அவ்விருவரும் மாணாக்கர் காண, உபத்தியாயர்கள் காண வண்டியில் அணித்தாக அமர்ந்து கடலோரஞ் செல்வர். இத்தகைய ஒன்றிய அன்பு அவர்கள் உடலளவாக நின்றதன்றி உள்ளத்தில் ஊடுருவிப் பாயாமலே கிடந்தது. இறுதியில் அவ்விருவர் அன்பிற்கும் இடையூறு நேர்ந்துவிட்டது. இதற்குக் காரணம் யாது? வழக்க ஒழுக்கமும் உணவுமேயாகும். பிராமணர் தம் மனைவி வருந்த வேறு சாதிப்பெண்ணின் மாட்டு இன்பந் து-த்துவரினும், தம் வழக்க பொழுக்கங்களை விடாமலிருந் தனர்; சூத்திரப் பெண் சைவப்பெண்ணல்லள். அவள் புலால் உண்பவள். அவள் நாடோறும் தம் அருமை நாயகராகிய பிராமணரைப் புலாலுண்ணுமாறு வருத்துவதுண்டு. அதற்கு அவர் இணங்காமை கண்டு அவரை அவள் வெறுத்துவிட் டனள். வழக்க ஒழுக்கங்களால் அன்பிற்கும் இடையூறு நேரிடு வது இயல்புபோலும்! மேல்நாட்டில் வழக்க ஒழுக்கங்கள் பெரிதும் ஒன்றுபட்டே யிருக்கின்றன. மேல்நாட்டில் கோயி லுக்குப் போகும் வழியிலும், ரயில் யாத்திரையிலும், கப்பல் யாத்திரையிலும் முன்பின் அறியா ஒருவனும் ஒருத்தியும் சிறிதுநேரத்தில் இன்பத்திற்கெளியராவர். எத்தனை ஆசார சீர்திருத்தக்காரர்கள் தோன்றி முயற்சி செ-தாலும், மேல் நாட்டு முறை இந்தியாவில் அனுஷ்டானத்தில் நடைபெறா தென்பது சத்தியம்.

முதலாவது இந்தியாவிற்கு வேண்டுவது கல்வி. அக் கல்வி எங்கும் நன்கு பரவி விடுமாயின், காலத்துக் கேற்றவாறு சீர்திருத்தங்கள் நிகழ்ந்துவிடும். இதைக்கவனியாது மிஸ்டர் பேடல் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மறுக்கத்தக்க ஒரு மசோதாவைக் கொண்டு வந்ததற்குப் பெரிதும் வருந்து கிறோம். இத்தகைய மசோதாக்களை நிறைவேற்றுவதில் பொது ஜனங்களுக்கு மாறாக அரசாங்கத்தார் நடக்க மாட்டார் என்பது நிச்சயம்.

இந்தியா பல வழியிலும் தன் பெருமையையிழந்தே வருகிறது. சமய நூல் ஆரா-ச்சி ஒரு சிறிதுமின்றிச் சில மேல் நாட்டு நூல்களை ஆரா-ச்சி செ-து, மிருக உணர்ச்சி பெற்று, இந்தியாவின் வழக்க ஒழுக்கங்களைக் கெடுக்கச் சிலர் வெளிவந்திருக்கின்றனர் அவரை ஆசார சீர்திருத்தக் காரரர் என்று அழைக்கவே மாட்டோம். ஆசார சீர்திருத்தஞ் செ-ய வெளிவருவோர் ஹிந்து சமய நூல்களை ஆரா-ச்சி செ-து அன்பின் தன்மை யின்னதென் றுணர்ந்தவரா யிருத்தல் வேண்டும்.

*(7-9-1918.)*

# இந்தியாவில் பெண்மக்கள் நிலை

உலகத்திலே பலவகை உயிர்கள் இருக்கின்றன. அவை ஓர் அறிவு முதல் ஆறு அறிவு ஈறாக உள்ளவை என்று நம் முன்னோர் வகுத்து இருக்கின்றனர். ஆறு அறிவு உடையோர் மக்கள் எனப்படுவோர். மக்கள் என்னுஞ் சொல் ஆண் பாலாருக்கும், பெண்பாலாருக்கும் பொதுவாக வழங்குவது. பண்டை நூல்கள் மக்களைப்பற்றிக் கூறுவன யாவும் ஆண், பெண் என்னும் இருபாலார்க்கும் உரியனவேயாம். ஆண் மக்களுக்கிருந்த உரிமைகள் யாவும் பெண்மக்களுக்கு மிருந் தன. ஆண்ண்பாலாருங் கல்வி பயின்று புலவராயினர். பெண் பாலாரும் கல்வி பயின்று புலவராயினர். ஆடவரும் அவை யேறிப் பரிசு பெற்றனர். மகளிரும் அங்ஙனே பெற்றனர். ஆண் களைப்போலப் பெண்களும் நாடாண்டார்கள். பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டுப் பெண்மக்கள் பெரிதும் உரிமை யுடையரா- வாழ்ந்து வந்ததாகத் தெரிய வருகிறது.

ஆனால் நமது இந்திய தேசத்தில் சாதிவேற்றுமை பரவிய பின்னர் ஆண், பெண் வழக்க ஒழுக்கங்கள் மாறி விட்டன. சில சாதிப்பெண்கள் வீட்டைவிட்டு வெளியில் வாராமல் இருக்கின்றார்கள். சில வகுப்பு மாதர்கள் சில சாலம் வீட்டிற்குள் அடைபட்டிருந்து நாயகனை மணம்புரிந்த பின்னர் வெளியில் உலவும் உரிமை பெறுகின்றார்கள். சில கூட்டத்தார் தம்பெண்கள் வயதடைவதற்கு முன்னரே அவர்களுக்கு விவாகஞ் செ-விக்கின்றனர். சில இனத்தார் வயதடைந்த பின்னரே அவர்களை மணம் புரிவிக்கின்றனர். விதவா விவாகம் சில சாதியாருக்கு உண்டு; சில சாதியாருக்கு இல்லை. இவைபோன்ற வேற்றுமைகள் பலபடக்கிடக் கின்றன. இவ்வேற்றுமைகள் இடையில் நம்பெண் மக்கள் வாழ்க்கை நடை பெற்றுவருகிறது.

ஆங்கில அரசாட்சிக் கீழ் இந்தியா உட்பட்ட நாள் தொட்டு நம் பெண்மக்கள் நிலை மாறி வருகிறது. பெண் பாலர் பலர் கல்வியில் தேர்ச்சி பெறுகின்றார். பீ. ஏ., எம். ஏ. பட்டம் பெற்றவருஞ் சிலர் உளர். தற்காலம் பெண்பாலாருள் பெரும்பான்மையோர் மேல்நாட்டுக் கிறிஸ்துவப் பாதிரி

மார்கள் பாடசாலைகளிலே பயின்று வருகின்றனர். கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய பெண்மக்களே பெரிதும் கற்றவராயிருக் கின்றார்கள். ஹிந்துக்களில் கற்றவர் ஒரு சிலரே. மகமதியர் களில் கற்றார் அரியர். அரசாங்கத்தாருஞ் சில பெண்பாட சாலைகள் ஏற்படுத்திப் பெண் கல்வியைப் பரப்பிவருகின் றனர். தற்காலமுள்ள பெண்பாடசாலைகளில் பெரும்பாலும் மேல்நாட்டு முறை பற்றி மேல் நாட்டவர்களால் கல்வி கற்பிக்கப்படுகிறது. அன்னார் கூட்டுறவாலும் உபதேசத்தா லும் நம் பெண்மக்கள் தங்கள் ஆசிரியன்மார்கள் வழக்க ஒழுக்கங்களை மேற்கொள்கின்றார்கள். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாக மாறுவது. பெண்பாலருள் கற்றவரென வெளி வருவோர் பெரிதும் மேல் நாட்டு வழியாகத் தம் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முயல்கின்றனர். இவ்வழியே பெண்கள் பலர் காணப்படுவர். புருஷ பந்தமின்றிப் பலர் உலவுவர்; அடிக்கடி பெண்ணரசிகள் புருஷமாற்றஞ் செ-வார்கள். பெண்மக்களுக்குரிய அச்சம் நாணம், மடம், பயிர்ப்பு என்னுஞ் சீரிய குணங்கள் அவர்களை விட்டு அகன்றே போ-விடும். ஈசுரபக்தி யிருந்தவிடந் தெரியாமற் போகும். பல மாறுதலை இந்தியா அடையும் என்பதிற் சந்தேகமில்லை.

நம் பெண்மக்கள் அனைவரும் மேல் நாட்டவர்களாக மாறிவிட்ட பின்னர்ப் பெருங் கூட்டங்கூடி அவர்கள் வழக்க ஒழுக்கங்களைக் கண்டிக்க நேரினும் நேரும். ஆண்மக்கள் மேல்நாட்டு நாகரிகத்தை இன்போடு பருகினார்கள். இப் பொழுது அதைத் துன்போடு வெறுக்கின்றார்கள். இதற்குக் காரணம் அறியாமையன்றோ?

இப்பொழுது பெண்மக்கள் மேல் நாட்டவர்களைப் போலச் சட்டசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை முதலியவற்றைப் பெற விரும்புகின்றார்கள். கடந்த புதன்கிழமை சென்னை மயிலாப்பூரில் சகோதரிகள் சிலர் ஒன்று கூடிப் பிரதிநிதிகளைத் தெரிந் தெடுக்கும் உரிமை தங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்து, அத்தீர்மானத்தைப் பம்பாயில் இப்பொழுது கூடியுள்ள எல்லா இந்திய காங்கரஸ் கூட்டத்துக்கு அனுப்பியுள்ளார்.

ஆண்மக்களைப் போலப் பெண்மக்களும் முன்னேற்ற மடைந்தாலன்றி நமது நாடு நலமடையாதென்பது திண்ணம். ஆண்மக்கள் எவ்வழி செல்கின்றார்களோ அவ்வழியே பெண் மக்களுஞ் செல்லல்வேண்டும். ஆண் மக்கள் வாழ்க்கைக்குப் பெண்மக்கள் துணையாக நிற்றல் வேண்டும். இதுபற்றியே அன்னார் வாழ்க்கைத் துணை என்றழைக்கப்பட்டார். நம்

முன்னோர் பெண்மணிகளை அடிமைகளைப்போல் பாவிக்க வில்லை. நம் நாட்டிற்குரிய சுதந்தரத்தைப் பெண்மக்கள் பெற்றே இருந்தார்கள்; இருக்கின்றார்கள். தலைவன் உடல், பொருள், ஆவி மூன்றும் தலைவிக்கு உரியவை என்பது நமது கொள்கை. இதனால் பெண்மக்களுக்குச் சுதந்தர முண்டோ இல்லையோ என்பதை நேயர்கள் யோசிக்க.

இப்பொழுது இந்தியாவில் பெண்கள் நிலை மாறுந் தோற்றம் புலனா- விட்டது. அறிவிற்சிறந்த ஆடவர்களும் மகளிர்களும் ஒன்றுகூடி நம் முன்னோர் நூற்கருத்துக்களை நன்குணர்ந்து, நந்தேசத்துக்குரிய சுதந்தரம் இன்னது என்பதைச் சீர்தூக்கி, வேண்டிய சீர் திருத்தங்களைச் செ-து கொள்வார்களாக.

மேல்நாட்டுச் சுதந்தரத்தை நம் பெண்மக்களிடையில் பரப்புவோர் இந்தியாவைக் கொலை செ-யும் பாவத்துக் குள்ளாவர் என்பது சத்தியம். இந்தியப் பெண்மக்கள் வழக்க ஒழுக்கங்கள் யாவும் ஒருருக்கொண்டாற் போன்று விளங்கும். நமது காந்தியடிகள் அருமைமனைவியார் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கவேண்டுவது இந்தியப் பெண்மக்களின் கடமை. காந்தி யெம்பெருமான் அருந்தொண்டிற்குத் துணை புரிந்துவரும் பேற்றை அம்மையார் பெற்றிருக்கின்றனர். இதுவே இந்தியப் பெண்மக்களின் உரிமை.

***"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்***
***திண்மை உண்டாகப் பெறின்."***

***"தெ-வந்தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்***
***பெ-யெனப் பெ-யுமழை'*** - திருவள்ளுவர்.

*(4-5-1918)*

# இந்தியாவும் பெண்பாலரும்

உலகத்திற்கு நாகரித்தை வழங்கியது இந்திய நாடு என்பது ஆரா-ச்சிக்காரர் கொள்கை. ஒரு நாட்டின் நாகரிகம் பெண்மக்கள் செயலால் வெளியாகு மென்பர் அறிவுடையோர். இப்பொழுது இந்தியாவில் ஆண்மக்கள் சுதந்தரத்தை விரும்புவது போலப் பெண்மக்களுஞ் சுதந்தரத்தை விரும்புகின்றார்கள். கடந்த செவ்வா-க் கிழமை இந்திய மாதரசிகள் இந்திய மந்திரியைக் கண்டு தங்கள் அறிக்கையைச் செலுத்தினார்கள். அதில் அவர்கள் “ தேசகாரியத்தில் நாங்களுந் தலையிட்டிருக்கிறோம். எங்கள் சகோதரர்கள் இந்தியா விரைவில் சுய ஆட்சி பெறவேண்டி எங்ஙனம் முயற்சி செ-கின்றார்களோ, அங்ஙனமே நாங்களும் அக்காரணத்தை முன்னிட்டு உழைத்து வருகின்றோம். மகாத்மா காந்தியின் ஆணைப்படி மகஜரில் எங்களிற் பலர் கையெழுத்திட்டிருக்கின்றனர். ஆகலால் கேட்கப்படுஞ் சீர்திருத்த முறைகளில் எங்களுக்கும் உரிமை யேற்படுமாறு செ-தல் வேண்டும்” என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்; காங்கரஸ் மகாசபை பெண்பாலரை அன்போடு ஏற்றுக் கொள்கிறதென்றும், ஆண் மக்களைப்போலப் பெண் மக்களும் அதிற்கலந்து உழைக்கும் உரிமைபெற்றிருக்கின்றார்கள் என்றும் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். அவ்வறிக்கையைக் கேட்ட இராஜப்பிரதிநிதியும் மந்திரியாரும் இந்தியப் பெண்மணிகளின் அறிவாற்றலையும் மனவெழுச்சியையும் அளந்திருப்பார் கேட்பதைக் குறித்துத் தமிழ்மக்கள் பலவகை அபிப்பிராயமுடையராவார்கள். ஆங்கிலங்கற்றுத் தற்கால நாகரிக உணர்ச்சிபெற்ற சிலரொழிய மற்றவர் பெண்களுக்குச் சுதந்தரங் கொடுத்தலாகாதென்னுங் கொள்கையினர் என்பதைச் செவ்வனே யறிவோம்.

பெண்கள் வீட்டையாளலால் இல்லாள் எனவும், தலைவன் உயிர்வாழ்க்கைக்கும் உடல் வாழ்க்கைக்குந் துணை செ-து நிற்றலால் வாழ்க்கைத் துணை யெனவும் அழைக்கப்படுகின்றார்கள். பெண்மக்கள் உதவியின்றி ஆண்மக்கள் உலக காரியத்தை நடத்தல் இயலாது. பெண்பாலார் கல்வியறி

வின்றிச் சிறுமைக் குணமுடையரா- வாழ்ந்து வருவாராயின், அன்னார் தம் அருமைத் தலைவர் மேற்கொள்ளும் பொதுக் காரியங்களுக்குத் துணைசெ-ய இயலாதவராவர். சிலர் தலைவர் செயலுக்கு இடையூறுஞ் செ-வர். ஆகலால் ஆண்மக்கள் வாழ்க்கைக்குத் துணைசெ-ய இறைவனால் படைக்கப்பெற்ற பெண்மக்கள் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கல் வேண்டும். கல்வியறிவு ஒழுக்கத்திற் சிறந்த ஓருயிர் சுதந்தரத்தில் திளைத்து நிற்றலையே விரும்பும். தலைவ னுக்குத் தலைவி அடங்கி அடிமைப்பட்டு வாழ வேண்டு மென்பது நம் முன்னோர் கருத்தெனச் சிலர் கூறுவர். அது பண்டைத் தமிழ் நூலாரா-ச்சி யில்லாதார் கூற்றாம். "ஓராவிற்கு இருகோடு பூத்தாலென்ன****" என்று நக்கீரனார் கூறியிருக் கின்றனர். (ஒரு பசுவிற்கு இரண்டு கொம்பு கிளம்பினாற் போல) தலைவனும் தலைவியும் உடலால் வேறுபட்டிருப்பி னும் உயிரால் ஒன்றுபட்டவர். உயிரொன்றிய அன்பொழுக்கம் சுதந்தர மில்லாவிடத்து நிகழாதென்பதை அறிவுடையோர் அனுபவத்தி லறிவர். பண்டைக் காலத்துப் பெண்கள் அடிமைப் பட்டு வாழ்ந்து வந்தார்களெனக் கூறுவது அறியாமை.

இடைக்காலத்தில் வேறு சாதியார் இந்தியாவைக் கைப் பற்றிய காலந்தொட்டுக் காதல் மண மொழிந்து, வேறு மணம் பரவினமையால் நாம் நம்முடைய நாகரிக முதலிய வற்றை யிழக்கலானோம். பெண்கள் கல்வி பயில்வதை விடுத் தார்கள். அன்பொழுக்கம் அறவே ஒழிந்தது. அன்பொழுக்கம் ஒழியவே அடிமை யொழுக்கந் தலைப்பட்டது. கற்புக் கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றையும், ஞானச் செல்வியாகிய மணிமேகலையின் வரலாற்றையும், உற்று ஆரா- வோர்க்குப் பண்டைக் காலத்துப் பெண்மக்களின் நாகரிகம் நன்கு விளங்கும்.

இக்காலத்துப் பெண்மக்களிடையில் மேல்நாட்டு நாகரிகம் பரவிவருகின்றது. அந்நாகரிக வழி நின்று, அவ் வழியிற் பெறுஞ் சுதந்தரத்தால் தீமை விளையுமென்பதிற் சந்தேகமில்லை. அச்சுதந்தரம் ஆண் மக்களை அவமதிக்கச் செ-யும்; கல்யாணத்தை வெறுக்கத் தூண்டும்; கரவாகத் தீ யொழுக்கத்தில் மனதைச் செலுத்தும்; பெண்மைக் குணங் களைக் குன்றச் செ-யும்; பிற தீமைகளையும் விளைக்கும். ஆண்மக்கள் மேல்நாட்டு நாகரிகத்தைத் தழுவி உழன்றமையா லன்றோ இந்தியா தன் பழைய பெருமையை யிழக்க நேர்ந்தது? முன்பின் யோசியாது புதிய வழக்க ஒழுக்கங்களை மேற்கொண்டு பின்னர் இடர்ப்படுவது நம்மவர் வழக்கம்.

மஹாத்மா காந்தி ஒரு முறை "நம்மவர்கள் மேல் நாட்டார் வழக்க வொழுங்கங்களை மேற்கொள்கிறார்கள்**** இத்தனை ஆண்டுகளாக நம்மவர்கள் ஆங்கிலம் பயிலாது சுதேச பாஷையைப் பயின்றிருப்பார்களாயின் நம் நாடு இத் தகைய துக்கத்துக்கு ஆளாகாது" என்று பேசியிருக்கின்றார். அன்னைபெசண்ட் அம்மையார் இவ்வூரில் ஒரு பெண் பாடசாலையைத் திறந்த போது ஆங்கிருந்த சகோதரிகளைப் பார்த்து "குழந்தைகளே! நீங்களெல்லாரும் சீதை தமயந்தி முதலியோர் பரம்பரையில் வந்தவர்கள்; உங்கள் நாடு முனிவர்களும் கற்புக்கரசிகளும் வாழ்ந்த நாடு; உங்கள் பெற்றார்களிற் பலர் மேல் நாட்டு நாகரிகத்தைப் பின் பற்றத் தொடங்கியுள்ளார்; மேல் நாட்டார் உடைகளைத் தரிக் கின்றார். நீங்கள் உங்கள் முன்னோர் வழி நின்று வாழ வேண்டிய முறைகளை உங்களுக்குப் போதிக்கவே இப்பாட சாலை ஏற்படுத்தப்படுகிறது. என்று உபதேசஞ் செ-தனர். பண்டைக் காலத்து இந்தியப் பெண்மக்களின் பெருமையை விளக்கவந்த மணிவிளக்காகிய மாதுஸ்ரீ சரோஜனி நாயுடு அவர்கள் இந்திய உடையை அணிந்து நாட்டுக்கு நன்மை செ-யும் அருந்தொண்டை மேற்கொண்டிருப்பதைச் சகோதரிகள் கவனிப்பார்களாக.

பெண் மக்களிடையில் மேல்நாட்டு நாகரிகம் பரவிவரும் இக்காலத்திலேயே அதை யொழிக்க முயற்சி செ-யல் வேண்ம். அருமைச் சகோதரிகள் மேனாட்டு நாகரிகத்தால் தோன்றுஞ் சுதந்தர உணர்ச்சி வழியுழலாது, நம் நாட்டில் ஒரு காலத்திருந்து இறந்த சுதந்தர உணாச்சியை மீண்டும் பெற உழைப்பார்களாக. பெண்மக்கள் தாங்கள் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்து வாழவும், அதனால் தா- நாடு இழந்த பெருமையை மீண்டும் பெறவும் உழைக்க முன்வந்து நிற்றலால், இந்தியா விரைவில் சுய ஆட்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

(21-12-1917.)

# தமிழ் நாட்டுப் பெண்மக்கள்

உலகக் கடமைகளை நிறைவேற்றலில் ஆண்பாலருக்கு உள்ள உரிமை பெண்பாலாருக்கும் உண்டு. ஆண், பெண் வடிவ மாகவே உலகம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. ஆண்பாலார் செயல்களுக்குப் பெண்பாலார் உதவி இன்றியமையாதது. ஆண்பாலார் உடல் வாழ்க்கைக்கும், உயிர் வாழ்க்கைக் கும் பெண்பாலார் பெருந்துணை செ-து நிற்றலால் அன்னார் வாழ்க்கைத் துணை நலம் என்று அழைக்கப் படுகின்றனர். ஆண்மக்கள் பெருமைக்குஞ் சிறுமைக்குங் காரணராயிருப் போர் பெண்பாலரே. இப்பொழுது பெண்பாலருள் பெரும் பாலோர், விவாகஞ் செ-துகொள்ளல், நகைகளை அணிந்து அழகு செ-தல், மக்களைப் பெறல், வீட்டு வேலை செ-தல் முதலிய செயல்களையே தம் பெருங்கடமையாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இந்தியா முழுவதும் பரவியுள்ள சுய ஆட்சிக் கிளர்ச்சியைப் பற்றி எத்துணைச் சகோதரிகள் பேசுகின்றார்கள்? எத்துணைச் சகோதரிகள் அதன் உண்மை உணர்ந்திருக்கிறார்கள்? ஆயிரம் பேருள் ஒருவர் இருவர் இருப்பரோ என்பதுஞ் சந்தேகம். பண்டைக்காலத்தில் பெண் பாலார் கல்வியிலும், வீரத்திலும், ஞானத்திலும் அரசிய லுணர்ச்சியிலும் தேர்ச்சி பெற்றவரா யிருந்தனர்.

ஔவையார், அதிகமான் இறந்தபோது அவனைப் பற்றிப் பாடிய புற நானூற்றுச் செ-யுள் ஒன்றே அவர் தங் கல்வியறிவையும், அரசியலுணர்ச்சியையும் விளங்கச்செ-யும். அக்காலத்தில் வீரத்தா-மார்கள் பலர் இருந்ததாகப் புறநானூறு முதலிய நூல்கள் கூறுகின்றன. அவருள் ஒருவர் செயலை ஈண்டுச் சுருங்கச் சொல்கின்றோம்.

தோல்வற்றி, நரம்பு தளர்ந்த ஒரு கிழவியிருந்தனள். ஒரு நாள் அவள், தன் புதல்வன் மாற்றாரோடு போர் செ-து புறமுதுகிட்டு ஓடினன் என்று கேள்விப்பட்டதும், கரத்தில் அரிவாள் தாங்கி “என் பாலைக் குடித்த ஒருவனோ போரில் புறமுதுகிட்டு ஓடினான். அஃது உண்மையாயின், இவ் வாளால் அவனுக்குப் பாலைக் கொடுத்த என் மார்பை அறுத்து விடுவேன்” என்று வீராவேசங் கொண்டு போர்க்களத்தை அடைந்தாள். ஆங்கே தன் அருமைப் புதல்வன் மார்பிற் காயந்

தாங்கி இறந்து கிடத்தலைக் கண்டு, அம்முதியாள் அவனைப் பெற்றபொழுதினும் அப்பொழுது பெருமகிழ்ச்சி யெ-தி னாள். இத்தகைய வீரத் தா-மார்கள் இப்பொழுது தமிழ் நாட்டில் எத்தனை பேர் இருக்கின்றனர்?

கண்ணகி யென்னுங் கற்புக் கடவுளைப் பற்றிப் பலர் அறிந்திருப்பர். அத்தேவியார் நாயகன் பொருட்டுக் காவிரிப்பூம் பட்டினம் விடுத்து, மதுரையம்பதி சேர்ந்து, ஆ-ச்சியர் வீட்டில் தங்கியிருந்த போது, சிலம்பு விற்கச்சென்ற தந் நாயகன், அரசன் ஏவலால் கொல்லப்பட்டான் என்று கேள்வியுற்றவுடன் என் செ-தனர்? அழுது நின்றனரோ? தெ-வத்தை நொந்தனரோ? அரசன் செ-கையென்று அஞ்சினரோ? இல்லையே. வீராவேசங்கொண்டு, அரசன் அவை சென்று, உண்மை யுணர்த்தினர். பாண்டியன் தன் அறியாமையை உணர்ந்ததும் "யானோ அரசன் யானே கள்வன்" என்று உரைத்துக் கொண்டே அரியாசனத்தினின்றுஞ் சா-ந்து இறந்தான். நியாய முறைக்கு உட்பட்டு அரசன் சபை ஏறி உண்மை விளங்கச் செ-த கற்புக் கடவுளாகிய வீரத்தாயை ஈன்றது எந்நாடு? தமிழ் நாடன்றோ? கண்ணகியின் வீரச்செயலையும், கற்பின் திறத்தையுங் கேள்வி யுற்ற சேரன் செங்குட்டுவன், கோயில் கட்டி, அதில் அவரை எழுந்தருளுவித்து வழிபட்டனன். மற்றத் தமிழ் மன்னரும் அவரைத் தெ-வமாகப் போற்றினர். தஞ்செயலால் அரசரை யும் அடிமைகொண்ட பெண் தெ-வங்கள் வாழ்ந்த நாடு இந்நாடு.

வேறு சமயம் பற்றி நின்ற தங் கணவனைத் தம் முயற்சி யால் தஞ்சமயத்தைத் தழுவுமாறு செ-வித்த மங்கையர்க்கரசி தமிழ் நாட்டின் புத்திரியே. கற்புக் கடவுளர்களும் அன்புக் கரசிகளும் வீரத் தா-மார்களும் உதித்த தமிழ் நாட்டில் இதுகாலை தோன்றும் பெண்மணிகள் நிலை எவ்வாறு இருக் கின்றது? அதை நினைக்க நினைக்க நெஞ்சம் உருகுகிறதே. இப்பொழுதுள்ள அருமைச் சகோதரிகளைப் பேசும் பொம்மைகளென்றே கூறலாம். அவர்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டுவது கற்றவர் கடமையாகும். அஃது அரிய காரியமும் அன்று.

ஐரோப்பிய மாதர்களால் நடத்தப்படும் பாடசாலை களுக்கு நம்மருமைக் குழந்தைகளை அனுப்பலாகாது. அவர் களுக்கு முற்காலத்தில் பேர்பெற்ற தா-மார்களின் வரலாற்றைப் பெரிதும் போதித்தல்வேண்டும்; ஆத்மசக்தியை உணர்த்தக் கூடிய கல்வியைப் போதித்தல் வேண்டும். மற்ற நாடுகளின் பெருமையையும், நம் நாடு இது காலை எல்லா வழிகளிலும்

உற்றுள்ள சிறுமையையும் அவர்கட்கு உணர்த்தி, நம்நாட்டின் முன்னேற்றத்துக்காக அவர்களை உழைக்குமாறு தூண்டல் வேண்டும் பெண்பாலர் தேசபக்தியில் தலை சிறந்தவர்களா தலே தேச முன்னேற்றத்துக்கு அறிகுறியாகும். தா-மார்கள் உண்ணும்போதும், உறங்கும்போதும் தேசகாரியத்தை மறத்தல் ஆகாது. அவர்கள் வயிற்றில் உதிக்கும் பிள்ளைகள் தேசபக்தர்களாக விளங்குவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. ஆணபாலார் பத்திரிகைகளை வாசித்து, அவைகளிலுள்ள விடயங்களைப் பெண்பாலருக்குச் சொன்ன பிறகே உண்ணச் செல்லல் வேண்டும். இவ்வொரு திருத்தொண்டைச் சகோத ரர்கள் இடையீடின்றிச் செ-து வருவார்களாக.

பத்தாண்டுகளுக்கு முன்னர் வங்காளத்தில் நேர்ந்த கிளர்ச்சியில் சுவாமி விவேகாநந்தரின் அன்னையாரும், அரவிந்த கோஷின் சகோதரியாருங் காட்டிய வீரச்செய லன்றோ வங்காளத்தை ஒன்று படுத்தியது? வங்காளச் சகோதரிகள் தேசபக்தி நிரம்பப்பெற்றிருக்கின்றார்கள். அவர்களைப்போலத் தமிழ் நாட்டுச் சகோதரிகளும் உழைத்து முன்னேறல் வேண்டும். இறைவன் ஆணையால் நமது நாட்டின் முன்னேற்றத்துக்காக மூன்று தேவிமார்கள் வெளி வந்திருக்கின்றார்கள். அவர்கள் அன்னை பெசண்ட் அம்மையார், அன்னை அபாதிபானோ பேகம் சாஹெபா (ஆலி சகோதரர்களின் தாயார்), சகோதரி சரோஜனி நாயுடு என்பவர்கள். இப்பெருமாட்டிகளின் உறுதியையும் ஊக்கத்தையும் அறியாதாரில்லை.

தமிழ் நாட்டுச் சகோதரிகளே! இம்மூவரையும் நாடோறும் பூசியுங்கள். நீங்கள் அவர்களாவீர்கள். தமிழ் நாட்டிற் சில பண்டிதைமார்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தேச காரியத்தில் தலையிடல் வேண்டும். கற்றதனாலாய பயன் தேசத்துக்குத் தொண்டு பூண்டொழுகுவது. அது கடவுள் தொண்டேயாகும். பண்டிதைமார்களே! உங்கள் நாடு தாழ்ந்த நிலையிலிருப்பதைக் கருத்தூன்றிக் கவனியுங்கள். அஃது உங்கள் உதவியை எதிர்நோக்கி நிற்கிறது. உங்கள் கடமையைச் செ-யுங்கள். நாம் பிரிட்டிஷார் குடிமக்கள். நமது அரசர் பெருமான் அன்பே வடிவமாயிருக்கின்றவர். நம்முடைய சுதந்தரத்தை நாம் கேட்பது நியாய விரோதமன்று. நம் ஊக்கத்தையும் உறுதியையும் உண்மையையும் உழைப்பையுங் கண்டே அன்பும் அருளும் நிறைந்த அரசாங்கத்தார் நமக்குச் சுயஆட்சி வழங்குவர். ஆடவரோடு சுய ஆட்சிக் கிளர்ச்சியில் தலைப்பட்டு முழக்கஞ் செ-வீர்களாக.

*(12-1-918)*

# பெண்மக்கள் சுதந்திரம்

இறைவன் படைப்பில் ஆண், பெண் என்ற இருவகை வேற்றுமையுண்டு. தாவரமுதல் தேவர்கள் ஈறாக உள்ள எல்லா உயிர்களும் ஆண், பெண் என்னும் வேற்றுமை தோன்றவே சிருஷ்டிக்கப்படுகின்றன. அது பற்றியே சிருஷ்டி கர்த்தாவாகிய கடவுளையும் சிலர் ஆண், பெண் வடிவமாகக் கொண்டு வழிபடுகின்றனர். படைப்பில் இருதிறம் ஏற்பட்டிருத்தலால் குணத்திலும் இருதிறமுண்டு. உலகத்தில் ஆண்மைக் குணம், பெண்மைக் குணம் என்னுங் குணவேறுபாடுகள் இருபாலார்க்கும் இயற்கையாக விளங்குதல் காட்சியளவால் இனிது விளங்கும். ஆண்மைக்குணம், பெண்மைக்குணம் ஆகிய இவை தாவரங்களிலும் இருப்பது அறிஞர்க்கு இனிது புலனாகும். ஆண்மைக் குணமும் பெண்மைக் குணமும் வேறு பட்டிருந்தால் சுதந்தரம் முதலியனவும் வேறுபட்டிருத்தல் வேண்டும்.

இவ்வுண்மை உணர்ந்த நம் பெரியோர்கள் சுதந்தரத்தை இருபாலார்க்கு ஏற்றவாறு இரு கூறாகப் பிரித்து அனுஷ்டித்து வந்தார்கள். சுதந்தர மென்பது கட்டின்றி விளங்கும் ஒரு நிலை. அந்நிலையைக் காட்டிலிருந்தும் பெறலாம்; நாட்டிலிருந்தும் பெறலாம்; வீட்டிலிருந்தும் அடையலாம்; வெளியிலிருந்தும் அடையலாம். நம் பெண்மக்கள் வீட்டிலிருந்தே தங்களுக்குரிய சுதந்தரங்களை அனுபவித்து வருகின்றார்கள். ஆண் மக்களும் தங்களுக்குரிய சுதந்தரங்களை அனுபவித்து வருகிறார்கள். இம்முறைபற்றியே இந்தியாஇன்னும் நடைபெற்று வருகின்றது.

மேல் நாட்டார் கூட்டுறவை இந்தியர் பெற்றபின்னர் சில இந்தியர் வழக்கவொழுக்கங்களில் மாறுபடலாயினர்; மேல் நாட்டாரைப்போல் உணவு கொள்கின்றனர்; உடை தரிக்கின்றனர். வேறு சிலர் நம் நாட்டுப் பெண்மக்களை மேல் நாட்டுப் பெண்மக்களாக்க முயல்கின்றனர். முயன்று சிலர் சித்தியும் பெற்றனர்.

ஆடவர்கள் மேல்நாட்டு நாகரிகத்தைத் தழுவி, நம் நாட்டு வழக்க வொழுக்கங்களை அறவே ஒழித்ததனால், நமது

தேசம் எவ்வளவோ தாழ்ந்த நிலையை அடைந்து விட்டது. முதல் முதல் மேல்நாட்டு நாகரிகம் மிகவிரைவாகப் பரவிய இடம் வங்காளமாகும். அத்தேசத்தார் அளவின்றி மேல் நாட்டு நாகரிகத்தைத் தழுவினர். நாளடைவில் அவர்கள் தாங்கள் மேல்நாட்டு நாகரிகத்தைத் தழுவினமையால் விளைந்த கேடு களை நன்குணர்ந்து, சுதேசீயத்தைக் கைப்பற்றி இப்பொழுது திருந்திக்கொண்டு வருகின்றார்கள். வங்காளிகளில் பெரும் பாலோர் முன்னோர் வழக்க வொழுக்கங்களைக் கையாள வேண்டுமென்னுங் கொள்கையில் உறுதியாக நிலைத்து நிற்கின்றனர். சென்னை மாகாணத்துள்ளோர் இன்னும் பேச்சில் சுதேசீயத்தை வளர்ப்பவராகவும், செ-கையில் மேல் நாட்டு நாகரித்தை வளர்ப்பவராகவுமிருக்கின்றனர். இங்கே உண்மைச் சுதேசீயத்தை வளர்த்து வருபவர் ஒரு சிலரேயாவர்.

இங்ஙனம் ஆடவர்கள் கெட்ட அளவோடு நில்லாமல், அவர்கள் தங்கள் வீட்டிலுள்ள பெண்மக்களையுங் கெடுத்துக் கொண்டே வருகின்றார்கள். நம் பெண்மக்கள் வாழ்க்கைத் துணை நலம், இல்லொளி, வீட்டரசி என்று நம் முன்னவர் களால் அழைக்கப்பட்டார்கள். (இதைப்பற்றி யாம் 'பக்த'னில் முன்னர் இருமுறை எழுதியிருக்கின்றோம்.) இப்பொழுது மேல்நாட்டு நாகரிகத்தை அனு டித்து வரும் பெண் மக்கள் வாழ்க்கைத்துணை நலமாக விளங்குகின்றார்களோ? இல் லொளியாக ஒளிர்கின்றார்களோ? வீட்டரசிகளாக விளங்கு கின்றார்களோ? இல்லையே. மேல்நாட்டு நாகரிகத்தைத் தழுவும் பெண்மக்கள் வாழ்க்கைத் துணையையே வெறுக் கின்றார்கள்; இல்லத்தை இருளாக்குகின்றார்கள்; வீட்டரசி களாவதை விடுத்து வெளி அரசிகளாக விரும்புகின்றார்கள். வீட்டிலிருந்து புருஷனைத் தெ-வமாக வழிபடும் பெண் மக்கள் நாகரிக மில்லாதவர்களென இதுகாலை இகழப்படு கின்றார்கள். மேல்நாட்டு நாகரிக வழி நின்று கற்றவர்கள் கதைகளை யாம் அறிவோம். அவர்கள் இயற்கையில் நம் நாட்டவர்களா யிருப்பினும், செயற்கையில் மேல்நாட்டவர் களாக மாறியிருக்கின்றார்கள். அவர்கள் இப்பொழுது தலைவர்களாக நின்று நம் பெண்மக்களைத் திருத்த முயல் கின்றார்கள். அவர்களைப் பின்பற்றும் நம் பெண்மக்கள் கதி என்னாகுமோ தெரியவில்லை. இப்பொழுது அவர்கள் வழியே செல்லும் ஆடவர்களும் பின்னர் வருந்துவார்க ளென்பது நிச்சயம். இதைக் காங்கரஸ் கவனிக்க வேண்டும்.

நாம் இது காறுங் கூறியதைக்கொண்டு நாம் பெண்கள் சுதந்தரத்தை மறுக்கின்றோம் என்று நம்மீது பழி சுமத்தச்

சிலர் முன்வரலாம். பெண்கள் சுதந்தரத்தை மறுக்க வேண்டு மென்பது எமது கொள்கையன்று. நம் தேச வழக்க வொழுக்கத் துக்கு மாறுபடாத பெண்களுக்கு உரிய சுதந்தரத்தை அவர்கள் பெற வேண்டு மென்றே யாம் கூறுகின்றோம். நம் நாட்டுப் பெண்மக்களில் பலர் செங்கோல் தாங்கி அரசுபுரிய வில்லையோ? கற்பின் வன்மையால் அரசனை அழிக்க வில்லையோ? ஊரை எரிக்கவில்லையோ? இத்தகைச் செயல் களை அவர்கள் செ-யினும், அவர்கள் தங்களைப் பெண் மக்களாகவே நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆண் மக்களுக்கும் தங்களுக்கும் வேற்றுமையில்லை யென்று கருதி விலங்குகளைப் போல அவர்கள் திரியவில்லை. நம் தேச வழக்க வொழுக்கத்துக்கு மாறுபடாத கல்வியை நம் பெண் மக்களுக்குக் கொடுப்பதை நாம் மறுக்கவில்லை. மேல்நாட்டுப் பெண்கல்வி முறை நம் நாட்டுப் பெண்களிடையில் பரவாத வாறு காத்துக்கொள்ள வேண்டுவது நம் பெருங்கடமை யென்பதை யாம் வலியுறுத்துகின்றோம். நம் நாட்டுக் குரிய கல்வியை ஆடவர்களுக்கும் மகளிர்களுக்கும் போதிக்க நாட்டுக் கல்லூரிகள் சில ஏற்படுத்தப்பட்டன. தொடக்கத்தில் யாம் அவைகளின் மீது பேரன்பு செலுத்தி வந்தோம். நிகழ்ச்சி முறையில் அக் கல்லூரிகளும் நம் நாட்டுக்குரிய கல்வியை அளித்துவரவில்லை என்பதை இப்பொழுது உணர்ந்து கொண்டோம். கவர்ன்மெண்ட் பாடசாலைகளிலும், கிறிஸ்தவ பாடசாலைகளிலும் போதிக்கப்படுந் தமிழ்ப் பாடங்களும் நாட்டுக் கல்லூரிகளில் போதிக்கப்படவில்லை. தா-மொழியை அநாதரவு செ-யும் சிலர் சேர்ந்து நடத்தும் கல்லூரிகள் நாட்டுக் கல்லூரிகளாகா. நம்மவர்களே நம்மவர்கள் பணத்தைக் கொண்டு நம்மவர்கட்குக் கேடு விளைத்து விடுகிறார்கள். என் செ-வது?

நேற்று ரா-ட்டர் தந்திச் செ-தியில் ஒன்று காணப் பெற்றோம். அது, இங்கிலாந்தில் பெண்மக்கள் பாரிலி மெண்ட் அங்கத்தவர்களாக வேண்டு மென்ற மசோதா ஒன்று பாரிலிமெண்டில் (காமன்ஸ் சபையில்) கொண்டுவர வேண்டுமென்னும் ஒரு தீர்மான நிறைவேற்றம். இத்தீர்மானத் துக்குச் சாதகமாக நின்றவர் 274 பேர்; பாதகமாக நின்றவர் 25 பேர். இதைப் பற்றி யாம் எவ்வகை அபிப்பிராயத்தையும் வெளியிடுவது அநாவசியம். அது மேல்நாட்டு விஷயம்.

இத்தீர்மானத்தைக் கண்ணுறும் நம் பெண்மக்களிற் சிலர் “ ஆ! ஆ!! இங்கிலாந்தில் பெண்மக்கள் கிளர்ச்சி செ-து பார்லிமெண்ட் அங்கத்தவராகப் போகின்றனர். நாம்

எப்பொழுது சட்ட சபையில் அங்கத்தவராவது?" என்ற ஓரெண்ணங் கொள்வர். அது பேயாகி அவர்களைப் பிடித் தாட்டுமே என்றிரங்கி இன்று இவ்விஷயத்தை யாம் எழுதப் புகுந்தோம்.

****ஈசுரபக்தி எங்ஙனம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக இருக்கின்றதோ அங்ஙனே தேச பக்தியும் இருபாலார்க்கும் பொது என்பதை யாம் மறுக்கவில்லை. பெண்மக்களிடத்தில் தேசபக்தி என்று பரவுகிறதோ அன்றே நம் நோக்கங்களெல்லாம் நிறை வேறிவிடும் என்பதிற் சந்தேக மில்லை. ஈசுரபக்தியைப் புருஷனோடு கலந்து வளர்ப்பது போலத் தேசபக்தியையும் அவனோடு கலந்தே அவன் மனைவி வளர்க்கலாகும். இதற்கு இலக்கியமாக இந்நாளில் மகாத்மா காந்தியின் மனைவி விளங்குகின்றனர்; நமது தமிழ் நாட்டில் காந்திதாசராகிய டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்களின் மனைவியார் பொலிகின்றனர்.

நம் பெண்மணிகளுக்கு ஞானம், வீரம், கற்பு முதலிய நற்குணங்கள் அமையுமாறு போதிக்கக் கூடிய பாடசாலைகள் பல தாபிக்கப்படவேண்டும். மேல்நாட்டு நாகரிக உணர்ச்சியே அவர்கள் உள்ளத்தில் பரிணமியாதவாறு காத்துக்கொள்ள வேண்டுவது ஆடவர் கடமை.

நம்நாட்டுப் பெண்மக்களுக்குரிய சுதந்தரத்தை நம் பெண்மக்கள் பெற்றுத் தேசபக்தியை வளர்க்க வேண்டு மென்பது எமது கொள்கை.

(20-10-1918.)

# இந்தியாவும் பெண்மக்களும்

நமது இந்திய தேசமானது உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களுக்கும் நாகரிகத்தையும் ஞானத்தையும் வழங்கிய தென்பதை மறுப்பாரில்லை. கிரீஸ் தேசத்து மன்னனாகிய அலெக்ஸாண்டர் என்பவன் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து இந்தியாவில் சில காலந் தங்கியபோது, இந்தியாவின் ஞான பூஷணங்களைக் கொள்ளையடித்துச் சென்றான் என்று சில சரித்திரக்காரர்கள் சொல்கின்றார்கள். இந்தியா வின் கல்விச் செல்வமும் பொருட் செல்வமுமே மேல் நாட்டிற்கு ஞானத்தையும், செழுமையையும் நல்கின. மேல்நாடு நாகரிக நிலை பெற்றதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே இந்தியா நாகரிகத்தில் பண்பட்டிருந்தது. அத்தகைய நாகரிக நிலையைப் பெற்றிருந்த இந்தியா இப்பொழுது எந்நிலையைப் பெற்றிருக்கின்றது? எல்லாத் தேசங்களும் எள்ளி நகையாடும் நிலையை யன்றோ அடைந்திருக்கிறது! இதற்குக் காரணம் என்ன? நம்மவர்கள் மேல் நாட்டு நாகரிகத்தை அவலம்பித் தொழுகத்தலைப்பட்டதாகும். அதனால் இந்தியாவின் சிறப்பு பல வழியிலுங்குன்றத் தொடங்கியது.

நம்மவர்கள் முதல் முதல் மேல் நாட்டார் நடை உடை பாவனைகளில் விருப்பஞ் செலுத்திப் பின்னர்த் தம் அறியா மையை உணர்ந்து சுதேசியக் கிளர்ச்சியை உண்டாக்கினார்கள். மேல் நாட்டுப் பாஷையில் நம்மவர்க்குள்ள விருப்பத்துக்கு அளவேயில்லை. வட இந்தியாவில் இப்பொழுது பெரும் பாலோர் அதை வெறுத்து வருகின்றனர். சென்னை மாகா ணத்தை மேல் நாட்டு மாயை இன்னும் விடவில்லை.

இப்பொழுது நம்மவர்கள், பெண்கள் சுதந்தரத்துக் காகப் பாடுபடுகிறார்கள். அதை மறுப்போர் யாவர்? பண்டைக் காலத்தில் நம் பெண் மக்கள் சுதந்தரம் பெற்றிருக்க வில்லையோ? நம் முன்னோர்கள், பெண்களை மிருகங்களைப் போல நடத்தி வந்தார்களோ? எல்லாவற்றினுஞ் சம உரிமை பெண் மக்களுக்கு உண்டு என்பதை ஹிந்துக்களின் தெ-வ வடிவங்களே காட்டும். நம் ஆடவர்கள் மேல் நாட்டுக் கூட்டுறவு பெற்ற பின்னரே அவர்கள் நம் பெண்மணிகளைக்

குறைவாகக் கருதலானார்கள். ஆண்மக்கள், கல்லூரிகளில் மேல் நாட்டுக்கல்வி பயின்று அதன் வழியாக உழல்கின் றார்கள். பெண்மக்களோ அக்கல்வியின்றிப் பண்டை ஞான உணர்ச்சியோடு இல்லறம் நடத்துகின்றார்கள். இது செயற்கை யில் மேல்நாட்டு ஞானிகளாகிய நம் ஆடவர்களுக்கு அறியாமை யாகத் தோன்றுகிறது. அக்காரணம் பற்றி நம் இந்திய (மேல் நாட்டு) ஞானிகள் தங்கள் நிலைக்குப் பெண்மக்களையும் கொண்டுவர முயற்சிசெ-கிறார்கள். சிற்சில பெண்மக்களும் மேல்நாட்டுப் பெண்மக்களாகி வெளிக்கிளம்பி யுள்ளார்கள். இந்தியாவில் ஆண் உலகம் கெட்டு வருவதுபோலப் பெண் உலகமுங் கெட்டு வரத்தொடங்கியிருக்கிறது. பெண்மக்க ளிடத்திலும் மேல் நாட்டு அநாசாரங்கள் நுழைகின்றன. தொடக்கத்திலேயே அவ்வநாசாரங்களைத் தொலைக்க முயற்சி செ-ய வேண்டும். இல்லாவிடின் பின்னால் இந்தியா பெருந்துன்பத்துக்கு ஆளாகும் என்பது உண்மை.

பண்டை ஒழுக்கங்களை அனுஷ்டித்துவரும் பெண் மக்களைத் திருத்த அண்மக்கள் முயற்சி செ-கின்றார்கள் பாவம்! ஆடவர்களைப்போலப் பெண்க்களும் குடித்து வெறித்துக் களியாடல்கள் செ-யவேண்டும் போலும்! மேல் நாட்டு ஒழுக்கத்தில் முதிர்ச்சி பெற்ற பலர் சேர்ந்து செ-யும் வேலையை நம் நாட்டு ஒழுக்கத்தைப் பேணும் ஒருவர் செ-து விடுவர். மேல்நாடு உலகாயுத நாடு என்பதை நாம் கூறவும் வேண்டுமோ? அந்நாட்டுக் கல்வியால் நம்மவர் ஆத்ம சக்தி யிழந்து இடர்ப்படுவதைச் சீர்திருத்தக்காரர் இன்னும் உணர வில்லையோ? பெண்மக்களுக்கு ஆத்ம சக்தியைக் கொடுப்பது கற்பேயாகும். அக்கற்பைக் காக்க வேண்டுவது பெண்மக்களின் கடமை. மேல் நாட்டு முறையாகச் சுதந்தரம் பெற விரும்பும் பெண்மக்கள் தங்கள் உயிரணியாகிய கற்பைக் காத்தல் அருமை! அருமை!! உதாரணமாகப் பிரான்சு தேசத்தை எடுத்துக் கொள்வோம். அது பெண்மக்களுக்கு வழி துறை யில்லாச் சுதந்தரங்கள் கொடுத்து இப்பொழுது பெருந் துன்பத்துக் குட்பட்டு வருந்தி வருவதை உலகறியும். பிரான்சு தேசத்துப் பெண் மக்கள் ஒரு நாயகனை மணந்து இல்லறத்தை நடாத்த ஒருப்படாது தாங்கள் விரும்பிய வழியெல்லாம் உழன்று புத்திரப் பேறின்றிக் காலங்கழித்து வரலானார்கள். இதனால் பிரான்சு தேசத்துக் குடும்பங்கள் நசிக்கலாயின. பின்னர் அரசாங்கத் தார் தலையிட்டுக் கட்டாயக் கலியாண மசோதாவை நிறை வேற்றினர். கட்டாயக் கலியாணச் சட்டத்தைப் பிறப்பித்த நாகரிகத்தை என்னென்று கூறுவது?

*நமது ஞான தேசத்தை யும் ஒழுக்கத்தில் பிரான்சு தேசமாக்க வேண்டுமோ?*

*மகாத்மா காந்தியின் மனைவியார் எத்தேச வழக்க ஒழுக்கத்தை மேற்கொண்டு நிற்கின்றார்? மேல் நாட்டிற்பிறந்த அன்னைபெசண்ட் அம்மையார் எத்தேச ஆசாரத்தை அனுஷ்டித்து வருகின்றனர்? காந்தியடிகளுக்கு உண்டாகியுள்ள ஆத்ம சக்திக்குக் காரணமாக இருப்பது எது? அவரது மனைவியாரின் கற்புத்திற மன்றோ? மேல்நாடு சென்று பட்டம் பெற்ற நம் பெண்மணிகளின் கதைகளை விரித்தோத வேண்டுமோ? கூடா வொழுக்கத்துக்குத் துணைபுரியும் கல்வியையும், நாகரிகத்தையும், சுதந்தரத்தையும் நாம் வெறுக் கின்றோம்.*

*என் அருமைச் சகோதரிகளே! பாரத தெ-வங்களே! ஒரு சந்திரவதியின் செயல் முனிவர்களையும் கலங்கச் செ-ததை உற்று நோக்குங்கள்! ஒரு சீதையின் கற்பின் திறத்தால் இராவணன் செல்வம் அழிவுற்றதைச் சிந்தியுங்கள்! ஒரு கண்ணகியின் கற்பு மதுரை மாநகரை அழித்ததை உன்னுங்கள்! ஆனதுபற்றி நீங்களும் சந்திரவதியாக எண் ணுங்கள்; சீதையாக முயலுங்கள்; கண்ணகியாகக் கருதுங்கள்! ஒழுக்கத்தைப் பாதுகாக்கவேண்டிய வழிகளைத் தேடுங்கள்! நந்தேசத்துக்குரிய சுதந்தரத்தைப் பெற முயற்சி செ-யுங்கள்! ஆத்மசக்தி உங்களுக்கு உண்டாகும்.*

*(30-11-1918.)*

# பெண்மக்கள் நிலை

நமது தேசத்துப் பெண்மக்கள் நிலையைக் கவனிக்க வேண்டுவது ஒவ்வொருவரையும் பொறுத்த கடனாகவிருக் கிறது, பெண்மக்கள் எந்நிலையிலிருக்கிறார்களோ அந்நிலை யிலேயே தேசமும் இருக்கும் என்பது அரசியல் ஞானிகளின் கொள்கை. பண்டைக் காலத்துப் பெண்மக்கள் நிலையைச் சரித்திர அரா-ச்சியால் நன்கு உணரலாகும். அவர்கள் அக் காலத்தில் எல்லா வழியிலும் மேல் நிலையை யடைந்திருந் தார்கள். அவர்களை மேல் நிலைக்குக் கொண்டு வந்தது அவர்களது கற்பொழுக்கமேயாகும். பண்டைக் காலத்துப் பெண்மக்கள் நிலையைப்பற்றி விரித்துக் கூற வேண்டுவது அநாவசியம்.

இக்காலத்துப் பெண்மக்கள் நிலையைச் சிறிது கவனிப்போம். மேல்நாட்டுக் கூட்டுறவை நம் நாடு என்று பெற்றதோ அன்று தொட்டே நமது நாட்டு ஒழுக்க முறைகள் குன்றலாயின. நம்மவர்கள் நம் நாட்டுக்கல்வியைப் பயிலாது மேல் நாட்டுக் கல்வியைப் பயின்று வருகின்றமையால் அவர் களுக்கு மேல் நாட்டு நாகரிகத்தில் தணியாக்காதல் தோன்றி யிருக்கிறது. கீழ் நாட்டு நாகரிகத்துக்கும் மேல்நாட்டு நாகரிகத் துக்கும் உள்ள வேற்றுமைகள் பல. மேல் நாடு நாகரிகத்தில் இன்னும் அரும்பவில்லை. மேல் நாட்டவர் அறிவு, பூத பௌதிகங்களை ஆரா-ச்சி செ-வதிலேயே செல்கிறது. அறிவாரா-ச்சி பூதபௌதிக அளவில் நின்றுள்ள மட்டும் ஆத்மஞான உணர்ச்சி தோன்றுதல் அருமை. மேல்நாடு இன்னும் ஆன்மஞான உணர்ச்சியைப் பெறவில்லை என்ற உண்மையை இப்பொழுது நடந்தேறிய மகா யுத்தம் உறுதிப் படுத்தும். கீழ் நாடு நாகரிகத்தில் முற்றிய தென்பது அந்நாட்டு ஞான சாஸ்திரங்களால் வலியுறுத்தப்படும். ஆன்மஞான முதிர்ச்சி பெறாத நாடு அநாகரிக நாடேயாகும். நாகரிக முற்றாத மேல் நாட்டவர் கூட்டுறவால் நம் ஆண்மக்கள் நிலையும் பெண்மக்கள் நிலையும் குலைந்து விட்டன.

தற்காலப் பெண்மக்கள் கொள்கையை முத்திறமாகப் பிரிக்கலாகும். ஒன்று மேல் நாட்டுப் பெண்மக்களைப்போலத்

தாங்களும் ஆகவேண்டுமென்பது. மற்றொன்று நம் நாட்டு வழக்க ஒழுக்கங்களுக்கு மாறுபடாத சில மேல்நாட்டு வழக்க ஒழுக்கங்களை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பது. வேறொன்று நம்நாட்டு வழக்க ஒழுக்கங்களையே பற்றி நடக்க வேண்டு மென்பது.

முதல் கூட்டத்தவர் பெண்மக்களுக்குரிய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் மறுப்பவர்; ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேற்றுமை யில்லை என்று கூறுபவர்; பொதுக் காரியங்களில் ஆடவர் களோடு கலந்து உழைக்க வேண்டுமென்று சொல்பவர்; தற்கால ஆசார சீர்திருத்தக்காரர் கொள்கைகளைப் பொன்னே போல் போற்றுபவர். இவர்கள் நோக்கம் ஆடவர்களைப் போலச் சட்ட சபைகளிலும் நிருவாக சபைகளிலும் அங்கத்தவ ராக வேண்டு மென்பது. இக்கூட்டம் நமதுதேசத்தில் பல பாகங்களிலும் பெருகிவருகிறது.

இரண்டாவது கூட்டத்தார் தம் வழக்க வொழுக்கங் களை விடாமலும், மேல் நாட்டவர் வழக்க ஒழுக்கங்களில் கொள்ளற் பாலனவற்றைக்கொண்டும், தள்ளற் பாலன வற்றைத்தள்ளியும், தம் வாழ்க்கையை நடத்தவேண்டுமென்னுங் கொள்கையுடையவர். இக்கூட்டத்தார் ஆடவர்களோடு சட்டசபைக்குப் பறந்து செல்ல முயல்வதில்லை. அவர் தங்கல்வி அறிவு ஒழுக்கத்தைப் பண்படுத்திக் கொள்ளவே முயற்சி செ-கின்றனர். தமக்குத் தெரியாத காரியங்களில் தலைப்பட அவர் ஒருப்படுவதில்லை; தம் வீடுகளை ஹிந்து வீடுகளைப்போலப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றனர்; தேசகாரியங்களில் தலையிட்டுள்ள தம் ஆடவர்களுக்கு ஊக்கத்தை வளர்ப்பதற்குப் பெருந்துணை செ-து கொண் டிருக்கின்றனர். இக்கூட்டத்தவர் ஆடவர்கள் செயலுக்குப் பெருந்துணைபுரியுந் தேவிமார்களாயிருக்கின்றனர்.

மூன்றாவது கூட்டத்தார் கல்வியறிவின்றிக் கர்ண பரம்பரையாகப் பேசியதையே பேசியும் செ-வதையே செ-துங் காலங்கழித்து வருகின்றனர். அக்கூட்டத்தார் தம்மை ஆடவர் களின் வேலைக்காரிகள் என்று நினைத்துக் கொண்டிருக் கின்றனர். இவர்களைப்பற்றி விரித்துரைக்க வேண்டுவது அநாவசியம்.

இம்முத்திறக் கூட்டத்தவருள் எவரைக் கொள்வது எவரைத் தள்ளுவது என்பது கேள்வி. முதல் கூட்டத்தவரால் நமது தேசம் பாழ்படும் என்பது நிச்சயம். அப்பெண்மணிகள்

தாங்கள் வாழும் நாடு இந்தியா என்பதை மறந்து வேலை செ-யத் தொடங்குகிறார்கள். அவர்கள் தாங்கள் கெடுவது மன்றிப் பிறரையுங் கெடுக்க முயல்கின்றார்கள். அவர்கள் வழி நம் பெண்ணுலகஞ் செல்லுமாயின், நம் நாட்டுக் கற் பொழுக்கங் குன்றிப் புருஷ பக்தி சிதைந்துவிடும் என்பது சத்தியம். மேல் நாட்டு நாகரிக வழி நமது நாட்டைத் திருப்ப முயலும் பெண்மக்களை அநாதரவு செ-யவேண்டுவது நம் பெருங்கடமை.

இரண்டாவது கூட்டத்தாரை ஆதரவு செ-ய வேண்டுவது நமது இன்றியமையாக் கடமை. இப்பெண் மணிகள் நம் தேச வழக்க ஒழுக்கத்தைக் காக்குந் தெ-வங்கள். இவர்களாலேயே நம் நாடு செழுமையுற வேண்டும். இவர் களைக் கொண்டே நாம் பெண்ணுலகத்தைத் திருத்த வேண்டும்.

இவ்விரண்டாவது கூட்டத்தவர் வாயிலாக மூன்றாவது கூட்ட ஏழைகட்குப் போதிய உதவி செ-விக்கவேண்டும்.

நம் நாட்டில் கற்றவர்களென வெளிவரும் பெண்மக்கள், மேடைகளிலேறி வாயில் வந்ததைப் பிதற்றி விட்டு வீடு சென்று மேல்மாடிகளில் உலவுவதால் நம் மாதர்கள் முன்னேற்ற மடைந்துவிடுவார்களோ? நமது நாட்டில் ஏராளமான கைம் பெண்கள் இருக்கின்றார்கள். இவர்களில் பலர் சோம்பேறி களாகவும், தூர்த்தர்களாகவும், வழக்கிடுபவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். புருஷனை இழந்த இவர்கள், பூமிக்குப் பாரமாக ஏன் வாழ்தல் வேண்டும்? இவர்கட்குத் தேசபக்தி யுதயமாகுமானால், எவ்வளவு நன்மை தேசத்துக்கு உண் டாகும்? விதவைகட்குத் தேசபக்தி யுண்டாக்க எத்துணைச் சீர்திருத்தக்காரர் முயற்சி செ-தனர்; செ-கின்றனர் பதியிழந்த பெண்மக்கள் தேசத்துக்காக உழைத்தும் சிறைபுகுந்தும் தங்காலத்தைக் கழிக்கலாம். விதவைகளுக்குப் பலவகைக் கைத் தொழில்களைப் போதிக்கலாம். அதனால் அவர்கள் எவர் உதவியையும் எதிர்பாராது உலகத்தில் வாழ்ந்து வரலாகும். ஆயிரக்கணக்கான விதவைகள் வாளா காலங் கழித்து மாண்டுபோகிறார்கள். பெண்மக்கள் முன்னேற்றத்தை நாடும் ஆடவர்கள், முதலாவது விதவைகளுக்குத் தேசாபிமானம் உண்டாக்க முயல்வார்களாக.

விதவைகளுக்கென ஒரு சங்கம் ஏற்பட வேண்டும். அச் சங்கம் பெரிதும் ஆடவர் கூட்டுறவின்றியே நடைபெறல் வேண்டும். அச்சங்க வாயிலாக நாம் பெண்மக்களுக்குப் பல வழியிலும் நன்மை செ-யலாகும்.

இத்தகைக் காரியங்களைச் செ-யாது ஆங்கிலங் கற்ற ஒரு சில பெண்மக்கள், மேல் நாட்டு அநாகரிகத்தைக் கொண்டு வந்து கற்பொழுக்கம் நிரம்பிய நம் பெண்மக்களிடையில் நுழைக்க முயல்வது அறியாமையாகும். அவர்களுக்குத் துணை போகும் ஆண்மக்களையும் யாம் வெறுக்கின்றோம்.

கல்வி அறிவு ஒழுக்கமுடைய ஆடவர்கள் நம் பெண் மக்கள் நிலையை உணர்ந்து, அவர்கள் முன்னேற்றமடைய வேண்டிய வழியை நாடுவார்களாக.

*(6-12-1918.)*

# பெண்மக்களும் தேசபக்தியும்

பிரபஞ்சம் என்பது ஆண்மக்களும் பெண்மக்களுஞ் சேர்ந்த தொன்றாம். ஆண்மக்களின்றிப் பெமக்களும், பெண் மக்களின்றி ஆண்மக்களும் லௌகிக, வைதிக காரியங்களை நடத்தல் இயலாது. ஆமக்கள் எவ்வெத்துறையில் தலையிடு கின்றார்களோ, அவ்வத்துறையில் பெமக்களுந் தலையிடல் வேண்டும். பண்டைக்காலத்தில் முனிவரர் மனைவிமார்கள் முனிவரர் தொழிலையும், அரசர்கள் மனைவிமார்கள் அரசர்கள் தொழிலையும் செ-துவந்தார்கள். வைத்தியன் இல்லாளுக்கு வைத்தியம் தெரிந்திருந்தது. சோதிடன் துணைவி சோதிடத்தில் வல்லவளாயிருந்தாள். அக்காலத்தில் எல்லாத் துறைகளிலும் இந்தியா செழுமையுற்றிருந்தது. இதற்குக் காரணம் இருபாலரும் எல்லாத்துறைகளிலும் ஒன்றிய ஞான முடையவராக இருந்ததேயாகும்.

இக்காலத்தில் ஆண்மக்கள் மேற்கு முகமாகவும், பெண் மக்கள் கிழக்கு முகமாகவும் ஓடுகின்றார்கள். அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளோ வடக்கு முகமாக ஓடுகின்றன. தேசம் தெற்கு முகத்தை நோக்கிக் கொண்டிருக்கிறது. என் செ-வது?

மேல் நாட்டுக் கல்வி நம் நாட்டில் நுழைந்த காலந் தொட்டுச் சாதிச் சண்டைகளும் பிற சண்டைகளும் வலுத்து விட்டன. ஒற்றுமை என்பது இந்தியாவில் அருகிவிட்டது. குருவைச் சீடன் மதிப்பதில்லை. பிள்ளை தந்தைக்குக் கீழ்ப் படிவதில்லை. அண்ணன் சொல்லைத் தம்பி கேட்பதில்லை. நாயகனுக்கும் நாயகிக்கும் ஒன்றிய காதல் எழுவதில்லை. ஆன்ம விளக்க முடையோரைக் காண்டல் அருமையாகி விட்டது. இத்தகைய மாறுதல்களைக் காணுஞ் சில அறிஞர் கலிகாலத்தின் மீது பழி சுமத்துகின்றனர். கலியை நிந்திப்பது அறியாமை. இந்தியாவின் செழுமை வீழ்ச்சிக்குக் காரணம் தற்கால நாகரிக எழுச்சியேயாகும். இந்தியாவில் வேரூன்றி யுள்ள தற்கால நாகரிகத்தை அறவே அழிக்க இருபாலாரும் முயற்சி செ-யல் வேண்டும். ஒரு பாலார் முயற்சி செ-வதால் ஒரு பயனும் விளையாது. ஒற்றைக்கையனும், ஒற்றைக் காலனும், எவ்வேலைக்கும் உதவமாட்டார்கள். அவர்கள்

பிச்சை எடுத்தே பிழைக்கவேண்டும். இப்பொழுது இந்தியா வில் பொதுக்காரியங்களில் பெரிதும் ஒருபாலாரே தலைப் படுகின்றனர். மற்றப் பாலார் ஜடப் பொருள் போல் உலகத் தில் உருண்டு கொண்டிருக்கின்றனர். ஒரு பாலார் ஊழியத்தைப் பாரதமாதா பெற்று வருமட்டும், அவள் பிச்சைக்காரியாக இருக்க வேண்டியவளே. பாரத மாதாவின் சிறுமையும் வறுமையும் ஒழியவேண்டுமாயின், இரு பாலாருஞ் சேர்ந்து அவள் அடித்தொண்டு செ-தல் வேண்டும். ஆண்மக்கள் போலப் பெண்மக்களுந் தேசபக்தி யுடையவராதல் வேண்டும்.

பழைய காலத்தில ஈசுர பக்தியை இருவரும் சேர்ந்தே செ-து வந்தனர். இதற்கு நாயன்மார் சரிதங்களும் ஆழ்வார்கள் வரலாறுகளுமே சான்று. புகலும் இன்னும் ஹிந்து குடும்பங் களில் நாயகனும் நாயகியுஞ் சேர்ந்தே தெ-வ பூசை செ-கி றார்கள்; ஆலயத்துக்குச் செல்கிறார்கள். கலியாணம் முதலிய காரியங்களையும் ஆண்பாலாரும் பெண்பாலாரும் சேர்ந்தே செ-கிறார்கள். பண்டைக்காலப் புராணங்களையும், இதிகாசங் களையும் ஆரா-ச்சி செ-தால் ஆண்பெண் ஒற்றுமை நன்கு புலனாகும்.

இப்பொழுது இந்தியாவில் எங்கணுஞ் சுய அட்சிக் கிளர்ச்சி மல்கியிருக்கிறது. ஆனால் அக்கிளர்ச்சியால் பெரும் பயன் விளையவில்லை. இதற்குக் காரணம் என்ன? பெண் மக்களை விடுத்து ஆண் மக்கள் மாத்திரம் கிளர்ச்சி செ-வதே யாகும். சுய ஆட்சிக் கிளர்ச்சிக்குச் சக்தி வேண்டுமேல், பெண்களாகிய சக்திகளின் உதவியை ஆண்மக்கள் பெறல் வேண்டும். நம் பெண்மக்களுக்குப் பண்டைக்காலந் தொட்டுச் சக்தி என்னும் பெயர் வழங்கப்பட்டு வருவதை நேயர்கள் கவனித்தல் வேண்டும். சக்தி பூசை பண்டைக்காலத்தில் எங்கணுஞ் செ-யப்பட்டுவந்தது. இக்காலத்தில் அப்பூசை குறைந்துவிட்டது. சக்தி பூசையை மீண்டும் எழுப்புதற்கு வழியாது? பெண்களை நேசிப்பதும், அவர்களுக்கு மரியாதை செ-வதும், அவர்களை வழிபடுவதுமேயாகும். பெண் மக்கள் உதவியின்றி இந்தியா சுய ஆட்சி பெறா தென்பது சத்தியம்.

ஈசுர பக்தி எங்ஙனம் ஆண்மக்களிடத்தும் பெண்மக்க ளிடத்தும் பதிந்து வேரூன்றியிருக்கிறதோ, அங்ஙனமே தேச பக்தியும் இருபாலாரிடத்தும் பதிந்து வேரூன்றல்வேண்டும். நம்முன்னோர்கள் ஈசுரபக்தியை எல்லாரிடத்தும் பரவச் செ-ய எவ்வெம் முறைகளை அனு டித்தார்களோ, அவ்வம் முறைகளை இப்பொழுது நாமும் தேசபக்தியை வளர்க்க அனுஷ்டிக்க வேண்டும்.

பாரதமாதாவிற்கெனக் கோயில்கள் கட்டவேண்டும்; புராணங்கள் பாடவேண்டும்; நாடகங்கள் ஆடவேண்டும். நம்முன்னோர்கள் பெண்களிடத்துத் தெ-வபக்தி என்றும் இடையறாது நிலவ, அவர்கள் தாலிகளிலும் சமயக்குறிகளைப் புகுத்தி யிருக்கின்றார்கள். நம்பெரியோர்கள் எவ்வெவ்வழி யாகத் தெ-வ பக்தியை வளர்த்திருக்கின்றார்கள். பாருங்கள்! நேயர்களே!!

உண்மைத் தேசபக்தியின்னும் பக்தர்களிடத்துப் புலனாக வில்லை. 'பாரதமாதா' என்ற நினைவு தோன்றிய உடனே - 'பாரதமாதா' என்று சொன்ன உடனே- 'பாரதமாதா' என்று கேட்டவுடனே- 'பாரதமாதா'வின் படத்தைக் கண்ட உடனே- உள்ளன்பு எழல்வேண்டும்; உடல் நடுக்குற வேண்டும்; மனங் கசிந்து கசிந்துருக வேண்டும். அத்தகைய தேசபக்தி இப்பொழுது வெளிவந்துள்ள பல தேசபக்தர்களிடத்தில் நிகழ்கின்றதோ? பெண்மக்கள் தேசபக்தியுடையவர்களானால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் தேசபக்தி யுடையவர் களாகவே பிறப்பார்கள். இப்பொழுது பெண்களிடத்தில் தேசபக்தியில்லை. அதனால் அவர்கள் பிள்ளைகளிடத்தும் தேசபக்தியில்லை. தேசபக்திக்கு விதையிடவேண்டிய நிலம் பெண்மக்களேயாவர். அந்நிலத் தினின்றே தேசபக்தி என்னும் விருட்சம் ஓங்கி வளரவேண்டும். தேசபக்திக்குப் பிறப்பிட மாகிய சக்திமார்களை விடுத்து வேறு சக்திபெற முயற்சி செ-வது 'முயலைவிட்டுக் காக்கைப் பின் போனவன்' கதையாக முடியும்.

தேசபக்கதர்கள் அரசியல் உபந்நியாசஞ் செ-கின்ற காலத்தில் ஆயிரக்கணக்கான ஆடவர்கள் சேர்கின்றார்கள். மகளிர்கள் பதின்மர் சேர்வதும் அருமையாக விருக்கிறது. கூட்டங் கூட்டுவோரும் பெண்மக்களுக் கெனத் தனிவிடுதிகள் ஏற்படுத்துவதில்லை. பெண் மக்கள் பாவிகளோ? அவர் களுக்கு ஆன்மாவில்லையோ? அவர்களுக்கு அறிவில்லையோ? ஆண்பிள்ளைகள் தங்கள் வீட்டுப் பெண்பிள்ளைகளை நாடகத்துக்கும், சர்க்கஸுக்கும், சினிமாவுக்கும் அனுப்பு கிறார்கள்; தேசபக்தர்கள் கூட்டத்துக்கு அனுப்புகின்றார் களில்லை. நாடகஞ் சர்க்கஸ் சினிமா இவைகளுக்குச் செல்லுங் கூட்டங்களைவிடத் தேசபக்த கூட்டங்கள் கீழ்மைப் பட்டனவோ? குடியர், வெறியர், சிறியர், கீழ்மக்கள் இவர்கள் செல்லுங் கூட்டங்களுக்குஞ் சபைகளுக்கும் பெண்மக்களை அனுப்பிக் களிப்புறும் ஆண்மக்களே! உங்கள் பெண்மக்களைத் தெ-வசபைகளுக்கு அனுப்பலாகாதா? தேசபக்தர் சபைகளுக்கு

அனுப்பலாகாதா? பாரத தேவியைத் தரிசிக்க அனுப்ப லாகாதா? நாடோறும் நம் பெண்மணிகள் நாடகத்துக்கும் பிறவற்றிற்கும் ஆயிரக்கணக்கான பொருளைச் செலவழிக் கின்றார்களே! அவர்கள் தங்கள் அறிவையும் அன்பையும் பாரததேவி மீது செலுத்திவிடுவார்களானால், அப்பொருள் யாவும் தேசபக்தர்களுக்கன்றோ பயன்படும்? பெண்மக்கள் தேச பக்தியுடையவராவரேல் நாடகம், சர்க்கஸ், சினிமா முதலிய யாவும் தேசபக்த மயமாகவே மாறிவிடும். இனியாவது ஆண் மக்கள் பெண்மக்கள் மீது கருணை செலுத்தி அவர்களைத் தேசபக்தர்களாக்க முயல்வார்ளாக.

நம் இல்ல அரசிகளாகிய சகோதரிகள் உள்ளம் தேச பக்திக்குக் கோயிலாகி விடுமாயின், அதை அடக்க எவரால் இயலும்? ஒருவராலும் இயலாது. "அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்" என்றார் ஆன்றோரும்.

பெண்மக்களிடத்துத் தேச பக்தியை வளர்க்க முற்படுங்காலத்து, மேல்நாட்டு அநாகரிகம் அவர்களிடையில் பரவி அவர்களைத் தீட்டுப் படுத்தாதவாறு காத்துக் கொள்ள வேண்டும். நமது நாட்டிற்குரிய பண்பட்ட நாகரிக வழிநின்று, நம்பெண்மக்களுக்குரிய சுதந்தர நெறிக்குப் பழுது நேரா வண்ணம் பெண்மக்களுக்குத் தேசபக்தியை யூட்டிவரல் வேண்டும். சில போலி ஆசார சீர்திருத்தக்காரர்கள், பெண் மக்களை மேல்நாட்டு அநாகரிக மென்னும் பெருங்காட்டில் செலுத்தி, அவர்கள் நிலையைப் பாழ்படுத்துகின்றார்கள். அவர்கள் கூட்டத்தில் சேர்ந்த பெண்மக்கள் தேசத்தை அறவே மறந்து விடுகிறார்கள். அவர்கள் அறிவும் மனமும் கடலோரத் தையும், மூக்குக் கண்ணாடியையும், மோட்டார் வண்டியை யும் கட்டிக்கொண்டு கிடக்கின்றன. ஏ! போலி ஆசார சீர்திருத்தக்காரர்களே! பாரத தெ-வங்களைக் கெடுக்க வேண் டாம். உங்கள் ஆசாரமென்னும் அநாசாரத்தை அவர் களுக்கு ஊட்ட வேண்டாம். உங்களைக் கண்டால் பாரத தேவி அஞ்சுகிறாள்; அலமருகின்றாள். அவள் சாபம் உங்களை விட்டகலாது. சகோதரிகளை நல்ல வழியில் நடத்துங்கள்!

வங்காள தேசம் முன்னுக்கு வந்ததற்குக் காரணம் யாது? பெண்மக்கள் தேசபக்தியே யாகும். நமது தேசபக்தர்-இளமை யிலேயே பாரத தேவியின் பொருட்டு உலகைத் துறந்த முனிவரர்-மகான் அரவிந்த கோஷின் சகோதரி சரோஜனி தேவியின் (கவியரசி சரோஜனி நாயுடு வல்ல) தேசபக்தியை அளவிட யாரால் இயலும்? அத்தகைய தேசபக்தியுடைய தேவிமார்கள் ஒவ்வொரு வீட்டிலேயும் இலங்க வேண்டும்.

ஆண்மக்களே! பெண்மக்களைத் தாழ்வாக நினையாதேயுங்கள்; அவர்கள், சக்தியின் கூறு என்பதை மறவாதேயுங்கள்; ஆக்கலும் அழித்தலும் அவர்களிடத்தில் உண்டு. அவர்களை வேலைக்காரிகள் போலவும், அடிமைகள் போலவும் நடத்தாதேயுங்கள். உங்கள் வாழ்க்கைக்குத் துணையாக இருப்பவர்கள் பெண் மக்களே. அவர்களைச் சிறுமைப் படுத்தி விட்டுச் சுய ஆட்சிக் கூச்சலிடுவதால் சிறு பயனும் விளையாது. அவர்களைப் பெருமைப்படுத்துவங்கள். நீங்கள் பெருமைப்படுவீர்கள். அவர்களுக்குச் சுதந்தரங் கொடுங்கள். நீங்கள் சுதந்தரம் பெறுவீர்கள். பெண்மக்கள் சாபம் உங்களைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. அவர்களைப் போற்றுங்கள். அவர்கள் உள்ளத்தைக் குளிரச் செ-யுங்கள். நீங்கள் வாழ்வீர்கள்.

தா-மார்களே! சகோதரிகளே!! உங்கள் முன்னோர் நிலையை உற்று நோக்குங்கள்; உங்கள் நிலையை உற்று நோக்குங்கள். உண்மையைச் சிந்தியுங்கள்; தேறுங்கள்; உங்கள் முன்னோர்கள் உலகத்தை ஆக்கினார்கள்; அழித்தார்கள். நீங்கள் அந்தப் பரம்பரையில் வந்தவர்களல்லவா? இப்பொழுது உங்களுக்கு அந்தச் சக்தியுண்டா? நீங்கள் அடிமைகளல்ல; வேலைக் காரிகளல்ல; நீங்கள் தெ-வங்கள். உங்களால் எல்லாம் முடியும். எழுங்கள்! எழுங்கள்!! "இந்தியாவிற்குச் சுய ஆட்சியைப் பெறுவிக்கும் சக்தி எங்களிடத்தில் உண்டு" என்ற எண்ணதோடு எழுங்கள். பாரததேவி உங்களை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். தேசபக்தி கொள்ளுங்கள்! அதையே ஆபரணமாக அணியுங்கள்! 'தேசபக்தன்' என்னுங் குழந்தையை ஆதரியுங்கள்! அவன் உங்கள் தொண்டன். வந்தேமாதரம்!

*(23-1-1919)*

# தொழிலாளர் சங்கத்தின் அவசியம்

தொழிலாளர் உதவியின்றி உலகம் நடைபெறாது. தொழிலாளர்களுடைய உழைப்பினாலேயே உணவும் உடையும் உலகம் பெறல்வேண்டும். தொழிலாளர் செம்மை நலம் நாட்டின் செம்மை நலமாகும். அவர் வறியராயின் அவர் வாழும் நாடும் வறியநாடாகும்.

இந்தியாவில் பண்டைக்காலத்தில் தொழிலாளர் செல்வம் நூல்களில் சிறப்பிக்கப்பட்டிருத்தல் கவனிக்கத் தக்கது. அவர்தந் தலைவர்கள் அரசனுக்கு முடிசூட்டும் பேறு பெற்றிருந்தார்கள். இப்பொழுது இந்தியாவில் தொழிலாளர் தம் பெருமை தாம் உணராமலும், தம்மைக் கீழோரெனக் கருதியும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களிடத்தில் பிணியும் வறுமையும் நிலைத்து நிற்கின்றன. ஜனத்தலைவர்கள் அவர்கள் துக்கத்தைப் போக்க என்ன செ-யப்போகின்றார் களோ? அறிகிலேம். இந்தியாவில் தொழிலாளர்களுக்கும் ஜனத் தலைவர்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. தொழிலாளர் ஜனத் தலைவர்களைக் கவனிப்பதில்லை. ஜனத்தலைவர்கள் தொழிலாளரை நேசிப்பதில்லை. இனி ஜனத்தலைவர்கள் தொழிலாளரோடு நெருங்கிப் பழக வேண்டுவது அவசியம்.

இங்கிலாந்தில் தொழிலாளர் பெருமையுற்றிருப்பதை அறியாதாருளரோ? பார்லிமெண்டில் அவர்தங்கட்சியே வலுத்து நிற்கிறது. அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங் களில் தொழிலாளர்கள் ஆக்கம் பெற்றிருக்கின்றார்கள். ஆங்கே தொழிலாளருக் கெனப் பல சங்கங்களிருக்கின்றன. தொழிலாளர்கள் அரசியலை நன்கு உணர்ந்திருக்கின்றார்கள். தொழிலாளர்கள் பெருமை பெற்றிருத்தலால் அந்நாடுகளும் பெருமை பெற்றிருக்கின்றன.

இந்தியா தொழிலாளரையே ஏராளமாகக் கொண் டிருக்கிறது: அவர் செல்வமே இந்தியாவின் செல்வம். அவர் வறுமையே இந்தியாவின் வறுமை. அவர்கள் இப்பொழுது வறுமையின் கொடுமையால் பீடிக்கப்படுகின்றமையான், அவர்கள் வயிறார உணவுகொள்ள இயலாதவர்களா-, வாந்தி

பேதிக்கும் சீதபேதிக்கும், பிறநோ-களுக்கும் இரையாகின் றார்கள். அவர்கள் நோயால் விரைவில் இறந்து படுதலால் இந்தியாவின் சராசரி வயதும் குறைந்து வருகிறது. இந்தியா செல்வத்திலும் வயதிலும் நன்னிலை யுறவேண்டின் இந்தியத் தொழிலாளர் எல்லா வழியிலும் செம்மை பெறல்வேண்டும். நாட்டின் நன்மை நாடுவோர் யாருக்காக உழைக்க வேண்டும்? சட்ட சபை அங்கத்தவர்க்காகவோ அல்லது தொழிலாளருக் காகவோ என்பதை யோசித்துப் பாருங்கள்.

சிலர் தொழிலாளர் முன்னேற்றத்தைத் தடுக்க முயற்சி செ-யினுஞ் செ-வர்; நம்மைப் பயமுறுத்தினும் உறுத்துவர். பொது நலத்துக்காக உழைக்க முன்வருங்காலத்து நமக்கு என்ன என்ன கஷ்டம் நேர்ந்தாலும் அதையொரு பொருட் படுத்தலாகாது. மஹாத் மாகாந்தி பீஹார் மாகாணத்துத் தொழிலாளருக்காக எவ்வளவு உழைத்தார் என்பதை அறியாதாரில்லை. அப்பெரியாரை நாடோறும் வழிபட்டு வரின் அவரது ஆத்மசக்தி நமக்கும் உண்டாகும்.

இப்பொழுதும் சென்னையிலும் பிற முக்கிய பட்டணங் களிலும் தொழிலாளர் சங்கங்கள் காணல் வேண்டும். தொழி லாளர் நன்மைக்காக அரசாங்கத்தார் உதவியால் கூட்டுறவுச் சங்கங்கள் முதலியன ஏற்படுத்தல் வேண்டும். ஆங்காங்கே இராப்பள்ளிக்கூடங்கள் அமைத்துத் தொழிலாளருக்குக் கல்வி கற்பித்து, அவருக்கு அரசியல் ஞானத்தைப் போதிக்கவேண்டும். முதன்முறை சூளையில் கூடிய தொழிலாளர் கூட்டத்தைத் தலைவர்கள் கவனியாமற் போயினும், இனியாவது தொழி லாளர் சங்கத்தின் அவசியத்தை உற்றுநோக்கித் தலைவர்கள் துணை செ-வார்களென நம்புகிறோம்.

*(6-9-1918)*

# சென்னையும் தொழிலாளரும்

தொழிலாளரைப் பற்றிப் பன்முறை யாம் 'பக்த'னில் எழுதி யிருக்கின்றோம். சென்னைத் தலைவர்கள் தொழிலாளி களைக் கருத்தூன்றிக் கவனிப்பதாகத் தெரியவில்லை. ஜனப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்வோரும் தொழிலாளர் நலத்தை நாடுகின்றாரில்லை. ஜனத்தலைவர்கள் கோகலே மண்டபத்தில் பெருங் கூட்டங்கூடுவதும், பலர் கைகொட்டி நகைக்கப் பேசுவதுமே தங்கள் கடமை யென்று நினைத்துக் கொள்கிறார்கள் போலும். கோகலே மண்டபத்தில் உபந் நியாசங்கேட்க வருகின்றவர்களிற் பலர் உபந்நியாசஞ் செ-வோரினும் பன்மடங்கு கல்வியறிவிலும், அரசியல் ஆரா-ச்சி யிலும் தேர்ச்சி பெற்றவராயிருக்கின்றனர். தலைவர்கள் திருப்பித் திருப்பிக் கூறும் விடயங்கள் அவர்கள் காதுகளைச் செவிடுபடுத்தியிருக்கும். கற்றவர் முன்னிலையில் உபந்நியாச மாரி பொழிவதால் சிறிதும் பயன்விளையாது. இனி ஜனத் தலைவர்கள் உழைக்க வேண்டிய இடம் தொழிலாளர் கூட்டத் திடையேயாகும். தொழிலாளருக்கு அரசியல் ஞானத்தை விளங்கவைப்பதால் பெரும் பயன் விளையும் என்பதை விரித்தோதவேண்டுமோ? இங்கிலாந்தில் தொழிற்கட்சியென ஒரு கட்சியிருக்கிறது. அக்கட்சிப் பிரதிநிதிகள் பார்லிமெண்டு சபை அங்கத்தவர்களாக விருக்கிறார்கள். அவர்கள் செல் வாக்கே இப்பொழுது இங்கிலாந்தில் நிலைத்துச் செழித்து நிற்கிறது. இங்கிலாந்தின் வளனெல்லாம் அவர்களிடத்தில் அடங்கியிருக்கின்றன. அங்குள்ள லார்ட்களும் தொழிலாளர் உதவியை நாடவேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

இந்தியாவில் சிறப்பா-ச் சென்னையில் தொழி லாளருக்கு அரசியல் ஞானம் இன்னதென்று தெரியாது. சட்டசபை நிருவாக சபை என்றால் அவர்களுக்கு ஒன்றும் விளங்காது. அவர்களில் பெரும்பாலோருக்கு "நம்மை இங்கிலீஷ்காரர் ஆளுகின்றனர்" என்பது மாத்திரம் தெரியும். இதுகாறும் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் சட்டசபை அங்கத்தவர்களில் எத்தனை பேர் தொழிலாளருக்காக உழைத்தனர்? உழைக்க வெளி வந்தனர்? ஒருவரும் இல்லை.

ஜனப்பொறுப்பாட்சி கேட்கப்படும் இக்காலத்தில் ஜனத் தலைவர்கள் தொழிலாளர் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டும். இந்தியாவில் செ-யப்பட வேண்டிய வேலைகள் பலவற்றுள் இஃதும் ஒன்று.

சென்னை மாகாணத்தில் தொழிற்சாலைகள் பல இருக் கின்றன. ஆங்ககாங்கே ஜனத்தலைவர்கள் சென்று தொழி லாளரோடு பழகி, அவர்களுக்கு அரசியல் முறையை உணர்த்தி, அவர்களைக் கொண்டே பல சங்கங்கள் காணல் வேண்டும்; இராப்பள்ளிக்கூடங்கள் அமைத்தல் வேண்டும். அவர்களுக்கு அரசியல் முறையில் ஆர்வமுண்டாக்கல் வேண்டும். இவை போன்ற கடமைகள் பல உள.

சந்நியாசிகளும், செல்வரும் தொழிலாளருக்காக உழைக்க முன்வரலாம். ஆனால் இக்காலத்துச் சந்நியாசிகள் சுயநலப் பிரியர்களாகவேயிருக் கின்றார்கள். செல்வர்கள் செருக்கால் கண்மூடிக்கிடக்கின்றார்கள். இவர்கள் இப்படியிருந்தால் தொழி லாளர் கதி யென்னாகும்? அவர்கள் எங்ஙனம் முன்னேற்ற மடைவார்கள்? அவர்கள் முன்னேற்றமே இந்தியாவின் முன்னேற்றம். அவர்கள் வறியர்களாக வாழுமட்டும் இந்தியா வறிய நாடாகவேயிருக்கும்.

பாலகங்காதர திலகர் நம் நாட்டிலுள்ள ஏழை ஜனங் களை எத்தனையோ முறை ஒன்று கூட்டி, அவர்கள் முன்னிலை யில் அரசியல் முறையை எடுத்து விளக்கமாகப் பேசியிருக் கின்றார். மஹாத்மா காந்தி தொழிலாளருக்காக உழைத்து வருதலை யாவரும் அறிவர். சென்னையில் அத்தகைய பரோப காரத்தலைவர்கள் இல்லையே. அன்னை பெஸன்ட் அம்மையார் இருக்கின்றனர். இவருக்குத் தேசபாஷையில் உபந்நியாசஞ் செ-ய இயலாது. இயலுமாயின் அம்மையார் இதுகாறும் எத்தனையோ தொழிலாளர் சங்கங்களை ஸ்தாபித்திருப்பர். சில ஜனத்தலைவர்கள் "தொழிலாளருக்காக உழைக்கவேண்டும் என்னும் பேராவல் எங்களுக்குண்டு. ஆனால் எங்ளுக்குத் தமிழ் பேசவாராது. அது பெரியமுட்டாக விருக்கிறது. என் செ-வோம்" என்று சொல்கிறார்கள், அவர்கள் இக் கருத்தைத் தமிழிலேயே வெளியிடுகின்றார்கள் பாவம்! நாட்டுப் புறத்திலிருந்துவரும் வழக்காளிகளிடம் தமிழிலேயே சம்பாஷிக்கின்றார்கள், வீடுகளில் அவர்கள் பேசுவதுந் தமிழே; பீ. ஏ., வகுப்புவரை ஆங்கிலத்தோடு பயின்று வந்ததுந் தமிழே. தொழிலாளருக்கு உழைக்க மனமெழாத இவர்களா தேச ஊழியஞ் செ-கிறவர்கள்?

சில வாரங்களுக்கு முன்னர்ச் சென்னைச் சூளையில் தொழிலாளருக்காக ஒரு கூட்டங் கூடிற்று. அவ்வொரு கூட்டத்தில் தொழிலாளர் காட்டிய ஊக்கத்துக்கு அளவேயில்லை. மேலும் மேலும் அத்தகைக் கூட்டங்கள் பல கூட்டி, உபந்நியாசங்கள் செ-யின், தொழிலாளர் நலம்பெறுவர். தொழிலாளருக்கு நல்லுபதேசஞ்செ-து, அவர் கல்வியறிவை வளர்க்க அரசாங்க உத்தியோகஸ்தர்களும் முன்னுக்குவந்து உழைக்கலாம். சென்னையில் எத்தனையோ ஆசாரச் சீர்திருத்த சபைகள் இருக்கின்றன. அறிக்கைப்பத்திரம் ஆண்டுதோறும் வெளியாகிறது. அச்சங்கங்கள் என்ன வேலை செ-கின்றனவோ? தெரியவில்லை.

சென்னை ஜனத்தலைவர்களே! உங்கள் உபந்நியாசத்தைக் கேட்கத் தொழிலாளர்கள் அவாவுகிறார்கள். அவர்களுக்காக உழைக்க வெளிவாருங்கள். கால நிலைமாறி வருவதை உற்றுநோக்குங்கள். இதைக்குறித்து யாம் பன்முறையும் எழுதியிருக்கின்றோம். தொழிலாளர் முன்னேற்றத்துக்கு அரசாங்கத்தாரும் உதவி செ-வாரென நம்புகிறோம்.

*(10-3-1918)*

# தொழிலாளர் கூட்ட அமைப்பு

நமது நாட்டிலுள்ள தொழிலாளரது முன்னேற்றத்தை ஜனத்தலைவர்கள் நாடுவதில்லை. தொழிலாளருக்காக உழைத்த ஜனத்தலைவரரும் அரியர். மேல் நாட்டில் தொழிலாருக்காக உழைத்துப் பேறு பெற்றவர் பலர். ஜனத்தலைவர்கள் இந்தியாவில் தொழிலாளர் முன்னேற்றத்தை நாடாமலிருந்தமையால், தொழிலாளர் தம் பெருமை தாமுணராது வாளா காலங் கழித்து வந்தனர். தொழிலாளர் உணர்ச்சி பெற்றுத் தம் முன்னேற்றத்தைக் கருதி உழைக்க ஒன்று படுவாராயின், அவர்களை ஜனத்தலைவர்களும், மற்றவர்களும் போற்றுதல் செ-வார்கள்.

இந்தியாவில் முதல் முதல் தொழிலாளர் மீது கவலை செலுத்தினவர் மகாத்மா காந்தியாவர். பீகாரிலும், ஆமதாபாத்திலும் அப்பெரியார் தொழிலாளருக்காக உழைத்ததை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். சென்னையிலும் ஒரு தொழிலாளர் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினத்திலும் தொழிலாளர் கூட்டம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டதாகக் கேள்விப்படுகிறோம். இன்னும் பல இடங்களில் தொழிலாளர் சங்கங்களை ஏற்படுத்த ஆங்காங்கே உள்ள ஜனத்தலைவர்கள் முயற்சி செ-ய வேண்டும். தொழிலாளருக்காக உழைக்க முன்வருவோரே உண்மைத் தேசபக்தராவர். சென்னைக்கணுள்ள சில தேசபக்தர்கட்குத் தொழிலாளர் சங்க அமைப்பில் விருப்பமில்லையாம். அவர்கள் காங்கிரசிலும், கான்பரன்சுகளிலும் தங்கள் நாவன்மையைக் காட்ட ஜீவகாருண்ய புருஷர்களைப் போல நடிப்பார்கள்: இப்பொழுது இந்தியாவிற்குப் பிரதிநிதிகளாக நிற்பவருள் பெரும்பாலோர் ஆங்கிலங் கற்றவரே. இவர்கள் ஊர் பேருந் தொழிலாளருக்குத் தெரியா. இன்னவர் ஜனப் பிரதிநிதி யாவரோ? பீ. ஏ., பி. எல்., பட்டம் பெற்றவரெல்லோரும் ஜனத்தலைவரோ? பத்திரிகாசிரியர் எல்லோரும் ஜனத்தலைவராவதோ? எவராயினும் ஆக. தொழிலாளருக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செ-து உழைக்க முன்வருவோர் எவரோ அவரே ஜனத்தலைவராவர். சென்னையில் பல போலிப் பத்திரிகாசிரியர்கள் ஜனத்

தலைவர்களாகத் தங்களைக்கருதி ஊரை ஏமாற்றி வருகிறார்கள். தொழிலாளர் கூட்டம் வலுக்க வலுக்க அன்னார் கூட்டம் பொன்றிப் போ- விடும் என்பதிற் சந்தேகமில்லை.

தொழிலாளர் கூட்டங்கள் ஆங்காங்கே ஏற்பட்டு வருவது, நாட்டின் முன்னேற்றத்துக்கு நற்குறியேயாகும். தொழிலாளர் பல திறத்தினர்களாதலால், தொழிலாளர் சங்கங்களும் பல திறமாக வகுக்கப்படல் வேண்டும். துணி நெ-வோருக்கென ஒரு சங்கமும், ரெயில்வே தொழிற்சாலையாருக்கென ஒரு சங்கமும், சுரங்க வேலை செ-வோருக்கென ஒரு சங்கமும், அச்சு வேலைக்காரருக்கென ஒரு சங்கமும், பயிர்த் தொழிலாளருக்கென ஒரு சங்கமும், மற்றத் தொழிலாளருக்காக அவ்வத்தொழிற் பெயரால் ஒவ்வொரு சங்கமும் ஏற்படல் வேண்டும். இச் சங்கங்கட் கெல்லாம் பொதுவாக ஒரு தலைச்சங்கம் அமைக்கப்படல் வேண்டும். தொழிற் சங்கங்கட்கெனத் தனியாகப் பாடசாலைகள், வாசகசாலைகள், வைத்திய சாலைகள் முதலிய அறச்சாலைகள் எற்படுத்தல் வேண்டும். தொழிலாளருக்கென வக்கீல்மார்களும் இருத்தல் வேண்டும். தொழிற்சங்கத்தின் மூலமாக அவர் ஊதியம் பெற்றுக் கொள்ளவேண்டும். இவைபோன்ற அமைப்புகள் இன்னும் பல உண்டு. அவைகளைச் சிறிது சிறிதாக வெளியிடுவோம்.

'மெயில்' பத்திரிகை போன்ற போலிப் பத்திரிகைகள் தொழிலாளர் கூட்டங்களைப் பற்றி அரசாங்கத்தாருக்குத் துர் அபிப்பிராய-ம் உண்டாகுமாறு முயற்சி செ-து வருகின்றன. அப்பத்திரிகைகளின் பொ-யுரைகளை அரசாங்கத்தார் கவனிப்பினுங் கவனிப்பர். சென்னையிலும் நாகையிலும் கூடியுள்ள தொழிற் சங்கங்கள் அரசியற்றொடர்பு இல்லாதன (Non-Political) என்பதை அரசாங்கத்தார் உணர்தல்வேண்டும். அவர் 'மெயில்' பத்திரிகையின் பொ-யுரையை நம்பித் தொழிற்சங்கங்களின் அமைப்புக்கு இடையூறு செ-யக் கருத மாட்டாரென நம்புகிறோம். அரசாங்கத்தாரும் தொழிலாளர் முன்னேற்றத்துக்கு ஜனத்தலைவர்களோடு கலந்து உழைக்கலாகும். எமது விருப்பமும் அதுவே.

*(30-10-1918.)*

# தொழிலாளரும் ஜனத்தலைவரும்

தொழிலாளர் உதவியின்றி உலகம் நடைபெறாது. தோட்டி முதல் தொண்டைமான் வரையிலுள்ள எல்லாரையுந் தொழிலாளர் என்றே கூறலாம். எல்லாம் வல்ல இறைவனும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை நாடோறும் ஓயாது செ-து கொண்டே யிருக்கின்றான். உலகத்திலுள்ள எல்லாரையுந் தொழிலாளர் எனக்கூறுவது குற்றமாகாது.

தொழிலாளரை இருகூறாகப் பிரிக்கலாம். தேக உழைப்பால் தொழில் புரிவோர் ஒருசாரார்; அறிவால் தொழில் புரிவோர் மற்றொரு சாரார்; பின்னவர் முன்னவர் உதவியின்றி வாழ்தல் அரிது. கணிதர்கள், போதகாசிரியர்கள், வக்கீல்கள், நியாயாதிபதிகள் முதலியோர் உண்ண உணவை யும், உடுக்க உடுப்பையும், ஆரோகணித்துச் செல்ல வண்டி யையும், உட்கார நாற்காலியையும், எழுதக் கருவிகளையுஞ் சமைத்துக் கொடுப்போர் யாவர்? தேக உழைப்பால் தொழில் புரிவோரன்றோ? இதனால் தேக உழைப்பால் தொழில் புரிவோர் சிறந்தவரென்பது தெற்றென விளங்கும். ஓர் உத்தியோகஸ்தனுக்கு ஒன்பத்தெட்டு உழைப்பாளிகள் வேண்டும். எனவே நாட்டில் தேக உழைப்பால் தொழில் புரிவோரே பலரா யிருக்கின்றனர்.

நாடு என்பது தேக உழைப்பால் தொழில் புரிவோரைக் குறிப்பதாகும். ஆகவே நாட்டின் நலத்தைக் கருதி உழைக்க முன்வருவோர் தொழிலாளர் முன்னேற்றத்துக்காக வேலை செ-யல் வேண்டும். யாம் தொழிலாளர் என்று எழுதுவது தேக உழைப்பால் தொழில்புரிவோரைக் குறிப்பதாகும். ஏழைத் தொழிலாளர்களுக்காக வேலைசெ-யாது காங்கரஸிலும், கான்பரன்சுகளிலும் கற்றோர் சிலர் தம்மை நாவலர் எனப் பிறர் புகழப் பேசி ஜனத் தலைவராகின்றனர். ஜனத்தலைவர் என்போர் ஏழைத் தொழிலாளருக்காக வேலை செ-பவ ராகவுமிருத்தல் வேண்டும்.

நமது நாட்டில் ஏழைத் தொழிலாளர்களே பெரிதும் நிரம்பியிருக்கிறார்கள். இவர்தம் முன்னேற்றத்துக்காக

இதுகாறும் காங்கரஸ்காரராதல், பிறராதல் உழைக்க முன் வந்தாரில்லை. ஏழைத் தொழிலாளரைக் கவனியாது சுய ராஜ்ஜியக் கூச்சலிடுவதால் சிறிதும் பயன்விளையாது. காங்கரஸில் இது காறும் செ-யப்பட்ட தீர்மானங்கள் யாவுங் கற்றவர்கள் முன்னேற்றத்தைப் பற்றியனவேயாகும். இத் தீர்மானங்களால் தேசமுன்னேற்ற மடையாதென்பது திண்ணம். கற்றவர்கள் ஒன்று கூடித் தங்கள் முன்னேற்றத்துக்காகப் பாடு பட்டு வருவதையும் அவர்கள் ஏழைத் தொழிலாளர்களைக் கவனியாது வாளா காலங்கழித்து வருவதையும் அரசாங்கத் தார் நன்கு உணர்ந்து சிறு சிறு சீர்திருத்தங்களையே வழங்கிக் கொண்டு வருகின்றனர். ஏழைத் தொழிலாளார் அரசியல் ஞான முடையவராகிச் சுய ஆட்சி என்று கேட்கின்றனரோ அன்றே பிரிட்டிஷார் இந்தியாவிற்குப் பூரண சுயஆட்சி வழங்குவர் என்பதிற் சந்தேகமில்லை. ஏழைத் தொழிலாளர் முன்னேற்றத்துக்குப் பாடுபடாமல் கற்றவர் சிலர் சேர்ந்து கொண்டு சுய ஆட்சிக் கூச்சலிட்டு அதைப் பெற முயல்வது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதை யொக்கும். உண்மையாகச் சுய ஆட்சிக் கிளர்ச்சி செ-வோர் ஏழைத் தொழிலாளரது முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவர். ஏழைத் தொழிலாளர்க்காகப் பாடுபட முன்வாராது சுய ஆட்சிக் கிளர்ச்சி செ-வோரை என்னென்று கூறுவது? அவர், சட்ட சபையிலாவது, நிருவாக சபையிலாவது அங்ககத்தவராக வேண்டுமென்று எண்ணங்கொண்டு ஆரவாரஞ் செ-பவரே யாவர். இத்தகையினரை ஜனத் தலைவராகக் கொள்ள லாமே?

சில ஆண்டுகளாக அன்னைபெசண்ட் அம்மையார் முயற்சியால் தோன்றிய கிளர்ச்சி இந்தியாவிலுள்ள எல்லாரை யும் விழிக்கச் செ-தது. இந்தியாவின் பல பாகங்களிலுள்ள தொழிலாளர்களும் விழித்துக் கொண்டார்கள். பல விடங் களில் தொழிலாளர் சங்கங்களும் ஏற்பட்டிருக் கின்றன. நமது சென்னை மாகாணத்திலும் தொழிலாளர் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. சென்னை, நாகை, மதுரை முதலிய இடங்களில் தொழிலாளர் சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருப்பது நேயர்கட்குத் தெரியும்.

சென்னையிலுள்ள தொழிலாளர் சங்கத்தில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்திருக் கின்றார்கள். அச்சங்கத்தைத் தொடக்கத்தில் அரசாங்கத்தார் சந்தேகித்தனர். சமீபத்தில் சென்னையில் நடந்தேறிய கொள்ளையடியில் தொழிலாளார் சங்கம் சென்னைப்

போலீஸ் கமிஷனரோடு கலந்து வேலை செ-ததை அரசாங்கத்தார் நன்கு கவனித்திருப்பர். தொழிலாளர் சங்கத்திற் சேர்ந்துள்ள மில் வேலைக் காரர்களுள் ஒருவராவது கொள்ளையிடுவோருள் கலவாதிருந்ததைச் சென்னைப் போலீஸ் அதிகாரிகள் வாயிலாக அரசாங்கத்தார் நன்கு அறிந்திருப்பரென்றே நம்புகிறோம். இப்பொழுது அரசாங்கத்தார் சென்னைத் தொழிலாளர் சங்கத்தைப்பற்றி என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கின்றனரோ தெரிய வில்லை. இன்னும் நாளேற நாளேற அரசாங்கத்தார் சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் இராஜ பக்தி, அடக்கம், பொறுமை முதலிய நறுங்குணங்களைக் கண்டு, அதன் மீது நல்லெண்ணமே கொள்வர் என்று எதிர் பார்கிறோம்.

இனி நாம் சென்னை ஜனத் தலைவர்கள் தொழிலாளர் சங்கத்தின் மீது எவ்வகை அபிப்பிராய முடையவர்களாக விருக்கின்றனர் என்பதை ஆரா-வோம். சுய ஆட்சிக் கிளர்ச்சியில் தலையிட்டுள்ள பல ஜனத் தலைவர்களுள் ஸ்ரீமான் வாடியா அவர்கள் சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் தலைமை வகித்து நிற்கின்றார். பாரிஸ்டர் ஸ்ரீமான் இலட்சுமண ஐயர் அவர்கள், ஸ்ரீமான் தண்ட பாணிபிள்ளை அவர்கள், ('தேசபக்தன்' பத்திரிகாசிரியர்) முதலிய ஒரு சிலரே அவருக்குத் துணை புரிந்து வருகின்றனர். சில ஜனத் தலைவர் தொழிலாளர் சங்கத்தை அழித்துவிட முயற்சி செ-கின்றனர். சிலர் "தொழிாலளர் சங்கம் அரசாங்கத்தாருக்குப் பிடிக்க வில்லை. ஆனபடியால் நாம் அதில் சேர்தலாகாது" என்று கூறுகின்றனர். இன்னும் பலவாறு பிதற்றுவோரும் உளர். இவர்கள் அனைவரும் சுய ஆட்சிக்காரரே. தொழிலளாருக்கு உழைக்க நாணுவோரும் அஞ்சுவோரும் மஹரிஷி திலகரைப் பற்றியும் மஹாத்மா காந்தியைப் பற்றியும் ஏன் பேசுகின்றனரோ தெரியவில்லை. கள்ள ஜனத் தலைவர்கள், திலகர், காந்தி இவர்களோடு கரவாக நட்புக் கொண்டு தங்கள் பெயரைப் பரப்பி அரசாங்கத்தில் உயர் பதவியைப் பெற முயல்கின்றார்கள். சென்னைக்கணுள்ள சுய ஆட்சிப் பத்திரிகைகளுள் சில தொழிலாளர் சங்கத்தைப்பற்றி ஒன்றும் எழுதுவதில்லை.

தொழிலாளர்கள் முன்னேற்றத்தை நாடாதவர்களை நாம் தலைவர்களாகக் கொள்ளமாட்டோம். அவர்கள் செ-துவரும் வஞ்சகச் செயல்களை வெளியிடவும் யாம் துணிவு கொண்டுள்ளோம். ஏழைத் தொழிலாளர் பட்டினி கிடந்து வருந்த, ஜனத்தலைவர் என்னும் பட்டத்தைச் சூட்டிக்

கொண்டு மோட்டார் வண்டியிலேறிச் சுகமாக உலாவி வருவோரை ஜீவகாருண்யமில்லா மிருகங்களெனக் கூறாது வேறென் கூறுவது?

இப்போலி ஜனத்தலைவர்கள் ஒன்று கூறி ஊரை ஏமாற்றுகிறார்கள். அதாவது "சுய ஆட்சி பெற்றுவிட்டால் நாம் எளிதாகத் தொழிலாளர்கள் குறைகளை நிவர்த்தி செ-து கொள்ளலாம்" என்பது. தொழிலாளர் அரசியல் ஞானம் பெற்று முன்னேற்ற மடைந்தாலன்றிப் பிரிட்டிஷார் நமக்குப் பூரண சுய ஆட்சி வழங்கமாட்டார். மிஸ்டர் மாண்டேகுவும், லார்ட் செம்ஸ்பர்ட்டும் வெளியிட்டுள்ள இந்திய சீர் திருத்தக் கோரிக்கையில் "கிளர்ச்சி கற்றவர் களிடதத்தினின்றும் எழும்புகிறது. அதிற் பயனில்லை. நாட்டுப் புறத்திலுள்ள குடி மக்களிடத்தினின்றும் அஃது எழும்பல் வேண்டும்" என்னுங் கருத்துப்படக் குறிப்பிட் டிருக்கின்றனர். இதைப் போலி ஜனத்தலைவர்கள் கவனிக்க வில்லை போலும்! சுய ஆட்சிக் கிளர்ச்சியும் முயற்சியும் ஒருபால் செ-து கொண்டிருக்கவேண்டும். தொழிலாளர் முன்னேற்றத்துக்கும் ஒரு பால் முயற்சி செ-து கொண டிருக்கவேண்டும். இவ்விருவகை முயற்சியும் ஒன்றற்கொன்று இன்றியமையாதனவாகும். சுய ஆட்சி பெற முயல்வோர் தொழிலாளர் முன்னேற்றத்துக்கும் முயற்சி செ-யவேண்டும். தொழிலாளர் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவோர் சுய ஆட்சி முயற்சிக்குத் துணைபுரிவோர் என்பதை விளக்க வேண்டுவ தில்லை.

போலி ஜனத்தலைவர்கள் தொழிற் சங்கமொன்றிருந் தால் தங்களை அடிக்கடி அதற்கு உதவிசெ-யுமாறும், அதில் உபந்நியாசஞ் செ-யுமாறும் பலர் தொந்தரவு செ-வர் என்றெண்ணி அச்சங்கத்தை ஒழித்து விடவும் முயற்சி செ-வ தாகக் கேள்விப்படுகிறோம். இக்கள்ளர்கள் சுய நலங்கருதித் தொழிலாளர் சங்கத்துக்கு உதவிபுரியா தொழியினும் ஒழிக. அதற்குக்கேடு சூழாமலிருப்பார்களாயின் அவர்களுக்கு நாம் என்றும் நன்றி பாராட்டுவோம்.

தொழிலாளர்கள் நாளடைவில் சிறுமுயற்சிசெ-து காங்கிரஸைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு வழியாது? தொழிலாளர்களுக் குள்ளாக ஒருவகை ஒற்றுமை உண்டாதல் வேண்டும். ஆங்காங்கே உள்ள பரோபகாரிகள் தொழிலாளர்களை ஒன்று கூட்டி அவர்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பல பிரசங்கங்கள் செ-ய வேண்டும். பிரசங்கஞ் செ-வதோடு தொழிலாளர்கட் கெனச்

சங்கங்களை ஏற்படுத்தி விடவேண்டும். அச்சங்கங்களெல் லாம் தலைநகரிலுள்ள ஒரு பெருஞ் சங்கத்துக்குக் கட்டுப் பட்டு நடப்பனவா யிருக்கவேண்டும். வருடத்திற் கொருமுறை தொழிலாளர் கான்பரன்ஸ் என்றொரு கான்பரன்ஸ் கூட வேண்டும். இது நிறைவேற ஒவ்வொரு ஜில்லாவிலும் சில ஜனத்தலைவர்கள் முயலல்வேண்டும். அவர்கள் தொழி லாளர்க்கென உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செ-பவராக இருத்தல் வேண்டும். தலைநகரங்களில் தொழிலாளர் முன்னேற்றத்துக்கென ஒவ்வொரு கூட்டம் ஏற்படவேண்டும். அதில் ஒவ்வொரு ஜில்லாவிலும் தொழிலாளர்க்கு உழைக்குந் தலைவர்களே அங்கத்தவராதல் வேண்டும். அக்கூட்டத்தார் வழியாக அம் மாகாணத்துள்ள தொழிலாளர் சங்கங்கள் நடைபெறல் வேண்டும்.

இந்தியாவின் முன்னேற்றத்துக்காக இப்பொழுது உழைக்க முன் வந்து நிற்கும் அன்னை பெசண்ட் அம்மையார் இங்கிலாந்தில் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டு அனுபவம் பெற்றவர். அவ்வம்மையார் முதல் முதல் சென்னையில் தொழி லாளர் தலைவர்கட்கென ஒரு கூட்டங் கூட்டித் தொழிலாளர் முன்னேற்றத்துக்கு வேண்டிய முறைப்பாடுகளை ஒழுங்கு படுத்தி அக்கூட்டத்தவர்களை நடத்த முன்வருமாறு அம்மை யாரைக் கேட்டுக் கொள்கிறோம். தொழிலாளர் கூட்டத்தைத் திறம்பட நடத்தும் ஆற்றலும் அனுபவமும் அம்மையாருக்கு உண்டு என்பது உலகறிந்ததொன்றே. அம்மையார் எமது விருப்பத்தை நிறைவேற்ற அருள் புரிவாரென நம்புகிறோம்.

*(15-10-1918)*

# தொழிலாளர் இயக்கம்

இப்பொழுது உலகமெங்குந் தொழிலாளர் இயக்கந் தலையெடுத்து நிற்கிறது, உலகத்திலுள்ள எல்லாத் தேசங் களின் ஆட்சிமுறை தொழிலாளர் வழியாக நடைபெறுநாள் எந்நாளோ அந்நாளே சுதந்தர தேவியின் சுக நாள் என்று கூறலாம். உலக காரியங்கள் யாவும் தொழிலாளர்களால் நடைபெறுகின்றன என்பதை யாம் அடிக்கடி வற்புறுத்தி எழுதியிருக்கிறோம். தொழிலாளர் கூட்டம் ஆக்கம் பெற்றுள்ள இங்கிலாந்திலும், இம்முறை பார்லிமெண்ட் அங்க அமைப்பில் அவர்கள் கட்சி சிறிது சா-ந்து விட்டது. இதனால் இங்கி லாந்திலும் இன்னுந் தொழிலாளர் செல்வாக்கு முற்றவில்லை என்று கூறலாம். இங்கிலாந்தில் இலட்சக் கணக்கான தொழி லாளர் அடிக்கடி வேலை நிறுத்தஞ் செ-கிறார்கள். இங்கி லாந்திலுள்ள தொழிலாளர்கள் நாடோறும் எட்டு மணி நேரம் வேலை செ-கிறார்கள். இப்பொழுது அவர்கள் எட்டு மணி நேரத்தை ஆறுமணியாகக் குறைக்க வேண்டுமென்று வேலை நிறுத்தமுங் கிளர்ச்சியுஞ் செ-கின்றார்கள். இங்கி லாந்து தேசம் குளிர்தேசமாதலால் தொழிலாளர்கள் நீண்ட நேரம் வேலை செ-யலாகும். குளிர் தேசத்திலுள்ள தொழி லாளர்கள் நாள் ஒன்றிற்கு ஆறுமணிநேரம் வேலை செ-ய விருப்பங் கொள்கிறார்கள். இங்கிலாந்து தொழிலாளர்கள் தங்கள் முயற்சியில் வெற்றி பெறுவார்கள் என்பது நிச்சயம். அங்கே தொழிலாளர்களுடைய தலைவர்களை அடக்கக் கொடுந் சட்டங்களில்லை. இங்கிலாந்து தொழிலாளர்கள் எல்லா வழிகளிலும் அதிர்ஷட சாலிகளே.

இந்தியத் தொழிலாளர்கள் நிலையோ மிகப் பரிதாபமா யிருக்கிறது. இந்தியத் தொழிலாளர்கள் நாளொன்றுக்குப் பன்னிரண்டு மணி நேரம் வேலை செ-யச் சட்டமேற்பட் டிருக்கிறது. இங்கிலாந்து தேசத்தில் தொழிலாளர்கள் எட்டு மணி நேரம் வேலை செ-கிறார்கள். சில மில்களில் பதினொன்றரை மணி நேரம் இந்தியத் தொழிலாளர் வேலை செ-கின்றனர். குளிர் தேசத்திலுள்ள தொழிலாளர்கள் 8 மணி நேரம் வேலை செ-கிறார்கள். உஷ்ண தேசத்திலுள்ள

தொழிலாளர்கள் 11,1,2 மணிநேரம் வேலை செ-கிறார்கள். இதைச் சீதோஷ்ண நிலையையும் மனித தேகதத்துவ சாஸ்திரத்தையும் உணர்ந்தவர்கள் யோசிக்கவேண்டும். உஷ்ண தேசத்திலுள்ள வர்கள் உழைப்பு மிகுதியால் விரைவில் களைத்து விடுவார்கள்; அங்ஙனஞ் சீதள தேசத்திலுள்ளவர்கள் விரைவில் களைப் படையமாட்டார்கள். இன்னும் இந்தியத் தொழிலாளர் களுக்குப் பலவகைக் குறைகளுண்டு.

இந்தியாவில் தொழிலாளருக்காக வேலை செ-ய முன் வருவோர் அரியர். வருவோரையும் அதிகாரவர்க்கத்தவர் பயமுறுத்துகின்றனர். தொழிலாளர் முன்னேற்றத்துக்காகப் பாடுபட வருவோரை இராஜத் துரோகிகளென்று நினைப்பது பெரும்பாவம் என்று எவருக்குச் சொல்ல வேண்டுமோ அவருக்குச் சொல்லுகிறோம்.

பம்பாயில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செ-து வருந்தினார்கள். வங்காளத்தில் சில இடங்களில் தொழி லாளர்கள் வேலை நிறுத்தஞ் செ-திருப்பதாக நேற்றுக் கிடைத்த தந்திச் செ-தி அறிவிக்கிறது. தொழிலாளர்கள் அடிக்கடி வேலைநிறுத்தஞ் செ-வதற்குக் காரணமென்ன? அவர்கள் வறுமையுஞ் சிறுமையுமே யாகும். உணவுப் பொருள் விலைகளோ ஏறி இருக்கின்றன. தொழிலாளர்கள் கூலியோ முன்னிருந்த நிலையிலேயே யிருக்கிறது. இதனால் செலவிற்கேற்ற வரவின்றியே தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செ-கிறார்கள். இந்தியா முழுவதுந் தொழிலாளர் துக்கம் நிரம்பியிருக்கிறது. அவர் துக்கத்தை நிவர்த்திசெ-ய அரசாங்கத்தார் இதுகாறும் என்ன முயற்சி செ-திருக்கின் றனர்? ஜனத்தலைவர்களில் பலர் என்ன வேலை செ-திருக் கின்றனர்?

(29-1-1919.)

# முதலாளிகளும் தொழிலாளிகளும்

முதலாளிகளின்றித் தொழிலாளிகளில்லை. தொழிலாளி களின்றி முதலாளிகளில்லை. இவ்விருவரும் ஒன்றுபட்டுத் தொழில்களை நடாத்தல் வேண்டும். முதலாளிகள் தொழிலாளி களிடத்தில் அன்புடையவர்களாயிருத்தல் வேண்டும். தொழி லாளர்களும் முதலாளிகளிடத்தில் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும். முதலாளிகள் தொழிலாளிகளைத் தங்கள் ஊழியர்கள் என்று நினைப்பதும், தொழிலாளிகள் முதலாளிகளிடத்தில் மரியாதை யீனமாக நடப்பதும் அறியாமையேயாகும். முதலாளிகள் இலாபம் ஒன்றனையே குறிக்கொண்டு தொழிலாளர்களை வருத்துவது பெரும் பாவம். தொழிலாளிகள் வேண்டுமென்றே முதலாளிகளை ந டத்துக் குட்படுத்த முயல்வதும் பெரும்பாவம். முதலாளிகள் தாங்கள் உயர்ந்தவர்கள் எனக் கருதி, இறுமாந்து, ஆன்ம உணர்ச்சியின்றி, நடைப் பிணங்களாகித் தொழிலாளர் களைத் தாழ்ந்தவர்கள் என்று நினைப்பது மடமையாகும். தொழிலாளர்களும் தங்களைக் கூலி ஆளாக நினைத்து ஆன்ம விளக்கத்தை இழத்தலாகாது. இரு கூட்டத்தவரும் தத்தங் கடமையை இறை பணியாகக் கருதல் வேண்டும். முதலாளி களிடத்தும் தொழிலாளர்களிடத்தும் சகோதரத் தன்மை பொலிந்து விளங்கவேண்டும். சகோதரத்தன்மை சிறப்பாக முதலாளிகளிடத்தே இருத்தல் வேண்டும். சகோதரத்தன்மை யின்னதென்றறியா முதலாளிகள் எவ்வகைத் தொழிற்சாலை களையும் ஏற்படுத்தலாகாது. அவர்களிடத்தில் வேலை செ-யுந் தொழிலாளர்கள் நரகத்துன்பத்தை நாடோறும் அனுபவித்துக் கொண்டேயிருப்பார்கள். முதலாளிகள், தங்கள் வாழ்விற்கும், பெருமைக்கும், புகழிற்கும் கருவியாக இருப்பவர்கள் தொழிலாளர்கள் என்பதை உணரல் வேண்டும். இது முதலாளிகளின் சிறந்த இலக்கணம்.

செல்வச் செருக்கால் தன்னை உயர்வாக நினைக் கின்றவனும், வறுமைச் சிறுமையால் தன்னைத் தாழ்வாக நினைக்கின்றவனும் அறிஞன் ஆகான். மனிதன் உலகத்தில் பெறவேண்டிய செல்வம் ஒன்றுளது. அஃது இறைவனுக்கு

அன்பனாவது. அதுவே மேலான செல்வம். "செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே" என்று தமிழ்வேதம் முழங்கு கிறது. இறைவன் கழலேத்துஞ் செல்வமாவது எவ்வுயிரையுந் தன்னுயிர்போல் நேசிப்பது. பிறஉயிர்களிடத்து அன்பு செலுத்து வதும் இறைவனுக்குரிய பூசையாகும். "ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார் எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பில்லார்" என்று மெ-கண்ட சாத்திரங் கூறுகின்றது.

புண்ணிய வயத்தால் பொருட்செல்வம் பெற்ற முதலாளிகள் தங்களிடத்துள்ள முதற்பொருளைக் கொண்டு, தொழிற்சாலைகள் அமைத்து, அவைகளில் ஆயிரக்கணக் கான தொழிலாளர்களை அமர்த்தி அவர்களைச் சகோதரர் களைப் போல நடாத்துவது, பல கோயில்கள் கட்டிக் கடவுள் பூசைசெ-வதை யொக்கும். முதலாளிகள், தொழிலாளர் களை, மிருகங்களைப் போல நடாத்தி வருத்திப் பொருளீட்டத் தொழிற்சாலைகள் அமைப்பது நரக லோகத்துக்கு வழி தேடுவதாகும். அத்தகைய எண்ணமுடைய முதலாளிகளிடத் தில் வேலை செ-யத் தொழிலாளர்கள் செல்லாகாது. செல்லின் பெருங் கஷ்டத்துக்குள்ளாவார்கள் என்பது திண்ணம்.

பண்டைக் காலத்தில் இந்தியாவில் முதலாளிகள் தொழிலாளர்களைத் தங்கள் பிள்ளைகள் போல் நேசித்து வந்தார்கள். தற்கால இந்தியா தன் சொரூப மிழந்து கிடத்தலால் அதைப்பற்றிக் கூறவேண்டுவது அநாவசியம். பண்டைக் காலமுறை இன்னும் நாட்டுப்புறகளில் அனுஷ்டிக் கப்பட்டு வருகிறது. இந்திய முதலாளிகளின் போக்கிற்கும் மேல் நாட்டு முதலாளிகளின் போக்கிற்கும் பலவித வேற்றுமைகள் உண்டு. இந்தியர் தந் தொழில் முறையைக் கடவுள் வழிபாடாக நினைப்பர். மேல் நாட்டார் அதைப் பொருளீட்டு முறையாகக் கொள்வர். இந்தியர் தொழிலாளர் களுக்கென வீடு, வாசல், காணி, பூமி, மாடு, கன்று முதலியன உதவுவர். மேல்நாட்டார் தொழிலாளர்களுக்குக் கூலி ஒன்றே கொடுப்பர். இந்தியாவில் தொழிலாளர்களுக்கும் முதலாளி களுக்கும் ஒருவகை உறவு உண்டு. அவ்வுறவு மேல்நாட்டவ ரிடத்தில் கிடையாது. இந்திய முதலாளிகள் வீட்டில் நடைபெறுஞ் சுபாசுபகாரியங்களில் தொழிலாளர்கள் கலந்து சுகதுக்கங் கொண்டாடுவார்கள். இச்செயலை மேல் நாட்டார் அனுஷ்டிப்பதில்லை. எவ்வழியிலும் மேல்நாட்டில் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் நெருங்கிய நட்புரிமை ஏற்படுவதில்லை. மேல்நாட்டு முதலாளிகள்

செல்வச்செருக்கால் தொழிலாளர்களை வருத்தி வருவதைப் பெருந்தருமமாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

மேல்நாட்டு முதலாளிகள் தொழிலாளர்களை மிருகங் களைப்போல் நடாத்தி வந்தமையால், தொழிலாளர்கள் அடிக்கடி கலாம் விளைவித்து வேலை நிறுத்தஞ் செ-து வந்தார்கள். இறுதியில் தொழிலாளர்கள் பெருங்குழப்பம் விளைத்து முதலாளிகளின் கொட்டத்தைக் குறைத்து விட்டார்கள். இப்பொழுது பொதுவாக மேல்நாட்டில் சிறப் பாக இங்கிலாந்தில் தொழிலாளர் கட்சி வலுத்து நிற்பதை உலகறியும். பண்டை இந்தியாவில் முதலாளி களுக்கும் தொழிலாளர்களுக்கும் பகைமை நேர்ந்து கலாம் விளைந்தது என்று எந்நூலுங் கூறவில்லை; எச்சரித்திரக் காரர்களும் எடுத்துரைக்கவில்லை. முற்காலத்தில் இந்திய முதலாளிகள் தங்கள் கடமையினின்றும் வழுவுவது கிடையாது. தொழி லாளர்களுந் தங்கள் கடமையை அன்பு வழி நின்று செ-வார்கள். எவ்வகைக் குழப்பமும் நேரிட முதலாளிகளாதல் தொழிலாளர்களாதல் இடந்தருவதில்லை. பண்டை இந்தியா வில் பொதுக் காரியங்கள் தொழி லாளர்கள் உத்தேசமின்றி நடைபெறுவதில்லை. முதலாளி தொழிலாளர்களின் உத்தேசப் படியே தன் சொந்தக் காரியங்களையும் நடாத்தி வந்ததாகத் தெரியவருகிறது.

அத்தகை இந்தியாவில் மேல்நாட்டு முதலாளிகள் நுழைந்து பல தொழிற்சாலைகள் அமைத்துத் தொழிலாளர் களைப் பல வழியிலும் வருத்தி வருகின்றார்கள். மேல் நாட்டு முதலாளிகள் தங்கள் சொந்த சாதித் தொழிலாளர்களையே நேசிப்பதில்லை என்றால் கறுப்புச் சாதித் தொழிலாளர்களை நேசிப்பார்களோ? நேசிக்கவே மாட்டார்கள். அவர்கள் நோக்கம் பொருளீட்டுவதொன்றே என்பது அவர்கள் செயலால் நன்கு புலனாகிறது. நம் இந்தியத் தொழிலாளர்கள் அறிவின்றி மேல் நாட்டு முதலாளிகள் மாயவலையிற் பட்டு, நெட்டால், பிஜி முதலிய வெளி நாடுகளுக்குச் சென்று அனுபவித்து வருங் கஷ்டத்துக்கு அளவுமில்லை எல்லையு மில்லை. பீகாரில் முதலாளிகள் தொழிலாளர்களை வருத்தி வருத்தி அவர்கள் இரத்தத்தைப் பிழிந்து பொழிந்ததை நினைக்க நினைக்க மனம் உருகுகிறது. இத் தொழிலாளர்கள் கஷ்டத்தை யுணர்ந்தவர் மகாத்மா காந்தியாவர். இந்தியத் தொழிலாளர் துன்பத்தைப் போக்க இறைவனால் அனுப்பப் பட்ட ஓர் அவதார மூர்த்தி என்று மகாத்மா காந்தியைக்

கூறுவது மிகையாகாது. இந்தியத் தொழிலாளர்கள் மேல் நாட்டு முதலாளிகள் வயப்பட்டு விழிக்கின்றார்கள் பாவம்!

சென்னையில் இரண்டு மில்கள் மூடப்பட்டிருப்பதை நேயர்கள் அறிவார்கள். அவைகள் மூடப்பட்டதன் காரணமும் நண்பர்கட்குத் தெரியும். அது சிறு காரணமே யாகும். நமது நாட்டில் ஒரு புது உணர்ச்சியும், எழுச்சியும் தோன்றியிருக் கின்றன. அவை இறைவனருளால் தோற்றுவிக்கப்பட்டவை என்பது எமது கொள்கை. அவை தேச முன்னேற்றத்தைக் காட்டும் அறிகுறிகளேயாகும். அவ்வுணர்ச்சியும் எழுச்சியும் தொழிலாளர்களிடத்தில் தோன்றியிருப்பது வியக்கத்தக்கது. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் நியாயப்போர் தொடங்கியிருக்கிறது. இதில் தொழிலாளர்கள் விழுவார் களோ? முதலாளிகள் விழுவார்களோ? தெரியவில்லை.

சென்னையில் தோன்றியுள்ள தொழிலாளர் இயக்கம் சென்னையை மாத்திரம் பொறுத்ததன்று; நமது தா- நாடு முழுவதையும் பொறுத்தே நிற்கிறது. ஈண்டு யாம் பொது தருமம் பற்றி எல்லா முதலாளிகளையும் தொழிலாளர் களையுமே குறிப்பிடுகிறோம். சிறப்பா எவரையுங் குறிப்பிட முன்வரவில்லை.

முதலாளிகள் வாதம், தொழிலாளர்களுக்கு இப்பொழுது உண்டாகியுள்ள உணர்ச்சியையும் எழுச்சியையும் அடக்க வேண்டும் என்பது. முதலாளி களிடத்தில் அதிகார மிருக் கிறது; செல்வமிருக்கிறது; பிற துணைகளும் இருக்கின்றன. தொழிலாளர்களுக்கோ அவைகளில் ஒன்றேனுமில்லை. அவர்களுக்குத் துணை செ-யவேண்டுவது உண்மை ஒன்றே. உஷ்மை நெறி கடைப்பிடித்தொழுகுவோர்க்கு எவ்வித பயமும், ஆபத்தும் உஷ்டாகா வென்பது திஷ்ணம். தொழி லாளர்கள் ஊக்கங் குன்றாமல், உணர்ச்சி சலியாமல், ஒற்றுமை குலையாமல், உறுதி நெகிழாமல், உண்மை பிறழாமல் நியாயப்போர் முனையில் நின்று முதலாளிகளை எதிர்ப்பார் களாயின் வெற்றி தொழிலாளர்களுடையதே. இல்லையேல் வெற்றி முதலாளிகளதாகும்.

தேசத்தின் உயர்வுந் தாழ்வும் தொழிலாளர்களைப் பொறுத்து நிற்கின்றன. தேசத்தின் பலபாகங்களிலுமுள்ள தொழிலாளர்களெல்லாஞ் சென்னைத் தொழிலாளர் களுக்கு வேண்டிய உதவிபுரிய வேண்டும். அவர்கள் வேண்டு மென்றே வேலை நிறுத்தஞ் செ-யவில்லை. அவர்கள் செயலால் தேசத்திலுள்ள எல்லாத் தொழிலாளருக்கும்

*நன்மை விளையும் என்பதிற் சந்தேகமில்லை. ஆண்டவ னருளும், ஜனத்தலைவர்கள் கூட்டுறவும், மற்றத் தொழி லாளர்கள் உதவியும், சென்னைத் தொழிலாளர்கள் உறுதி நிலையை உரம்பெறச் செ-யும்.*

*தேசத்திலுள்ள அனைவரும் தம்மாலியன்ற உதவி சென்னைத் தொழிலாளர்களுக்குப் புரிய முந்தவேண்டும். எல்லாத் தேசங்களிலும் தொழிலாளர் கட்சி வலுத்து நிற்பது போல அவர்தங் கட்சி இந்தியாவிலும் வலுத்து நிற்கச் செ-விக்க வேண்டுவது நம் பெருங்கடமை. அக்கடமையை நிறைவேற்றுங் காலம் நெருங்கியிருக்கிறது.*

*முதலாளிகள் செருக்கும், தொழிலாளர்கள் சிறுமையும் விரைவில் ஒழிக! ஆண்டவன் அருள் தொழிலாளர்கள் பால் நிலைக்க.*

*(5-12-1918.)*

# தொழிற்சாலைகள் அமைப்பு

ஜனத்தலைவர்கள் பலரும் சுய ஆட்சி பெற முயற்சி செ-கின்றனர். அரசாங்கத்தாரும் இந்தியாவிற்குச் சுய ஆட்சி வழங்க நிச்சயித்திருக்கின்றனர். முதலில் சுய ஆட்சிக்கு அடிப்படையாக உள்ள சில சீர்திருத்தங்கள் வழங்கப்படும். நமது முயற்சியும் அரசாங்கத்தார் உதவியும் ஒன்று படுமேல், நாம் பூரண சுய ஆட்சியையும் பெற்று விடலாம். சுய ஆட்சியைப் பற்றிப் பேசுவோர், பலர் வக்கீல்களாகவேயிருக் கின்றனர். அவர் பல அரசியல் நூல்களை வாசித்து அவைகளி லுள்ள பொருள்களை விளக்கமாகப் பிறர்க் கெடுத்துக் கூறுபவர். செ-கை அவரிடத்தில் நிகழ்வது அருமை.

நாம் சுய ஆட்சி பெறுவதற்குள் நமது தேசத்து விளை பொருள்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல ஒண்ணாதவாறு காத்துக்கொள்ள வேண்டும். அதற்கு வழியாது? பலவிடங் களில் தொழிற் சாலைகள் அமைப்பதேயாகும். பொதுவாக, இந்தியாவில் சிறப்பாகச் சென்னை மாகாணத்தில் உள்ள தொழிற் சாலைகளுள் பெரும்பாலன ஆங்கிலோ இந்தியர் களுடையன. அந்நிய தேசங்களினின்று வரும் வியாபாரிகள் நம் தேசத்து விளை பொருள்களைக் கொள்ளை கொண்டு போகிறார்கள். நம் தேசத்து விளை பொருள்களால் பிறர் பயன்பெற்று வருகின்றனர். நம்மவர்கள் வா-ப்பேச்சில் காலங் கழிக்கின்றார்கள். நம் வியாபாரிகள் அந்நிய தேசத்துப் பொருள்களை வாங்கி விற்று வருகின்றார்கள். நமக்குரிய வியாபாரமுங் கைத்தொழிலும் செத்து ஒழிந்தன. அவை யாவும் அந்நியர் வா-ப்பட்டன. அவைகளை நம் வழியாகத் திருப்ப வேண்டுவது நம் பெருங்கடமை.

நம்மவர்கள் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்துவார் களானால், நம்தேசத்து ஏழைமக்கள் அனைவரும் அவை களிற் போந்து வேலை செ-வார்கள். அவர்கள் அந்நியர் தொழிற்சாலைகளுக்குச் செல்ல மாட்டார்கள்; வெளிநாடு களுக்கும் கூலியாட்களாகப் போகமாட்டார்கள். நம் ஏழை மக்கள் அந்நியர்கள் தொழிற்சாலைகளில் அகப்பட்டு விழிப் பதையும், வெளிநாடுகளுக்குச் சென்று வருந்துவதையும்

வருணிக்கவும் வேண்டுமோ? அந்நிய நாட்டு முதலாளிகள் இந்தியத் தொழிலாளர்களை நடத்தும் முறையை நினைக்க நினைக்க மனம் வருந்துகிறது. அவர்கள் பாம்பின் வா-ப் பட்ட தவளைபோல் தவிக்கின்றார்கள்.

நம்தேசத்தில் இயற்கைப் பொருளில்லையோ? முதலாளி களில்லையோ? இயற்கைப்பொருள்களும் இருக்கின்றன. முதலாளிகளு மிருக்கின்றார்கள். இருந்தும் பயன் என்னை? தொழிலாளர் வறுமை நீங்கியிருக்கின்றதோ? இல்லையே. நம் தேசப்பொருளைக் கொண்டும், நம்தேசத் தொழிலாளர் களைக் கொண்டும் அந்நியர்கள் செல்வ வாழ்க்கையை நடத்துகிறார்கள். "இனம் இனத்தைக் காக்கும்" என்பது பழமொழி. அந்நியர்கள் நம் தேசத் தொழிலாளர்கள் மீது இரக்கங் காட்டுவது அருமை! அருமை! இந்திய முதலாளிகள் தங்கள் செல்வப்பொருளை ஏழைத் தொழிலாளர்களுக்குப் பயன் படுத்த வேண்டிய காலமிதுவே. ஜனத் தலைவர்கள் சுய ஆட்சி முயற்சி செ-து கொண்டிருக்கு மிந்நாளில், இந்திய முதலாளிகள் கைத் தொழிலையும் வியாபாரத்தையும் பெருக்க முயற்சி செ-ய வேண்டும். கைத் தொழிலும் வியாபாரமும் பெருகுமானால் சுய ஆட்சி தானாக வந்து சேரும்.

நமது இந்திய நாட்டில் பெரும்பாலோர் அந்நிய நாட்டுத் துணிகளை வாங்குகின்றனர். சுதேசியக் கிளர்ச்சி தோன்றிய பின்னர் ஒரு சிலர் நந் நாட்டுத் துணிகளை வாங்க முயல்கின்றனர். பம்பாயில் நம்மவர்கள் சில பஞ்சுச்சாலை களை வைத்து நடத்துகிறார்கள். அங்கே நெ-யப்படும் வஸ்தி ரங்களே பெரிதும் இந்தியா முழுவதும் விற்கப்படுகின்றன. ஒரு மாகாணத்தில் நம்மவர்கள் பஞ்சுச்சாலைகள் அமைத்து நடத்துவதால் தேசத்துக்குப் பெருநன்மை விளையாது. ஒவ்வொரு மாகாணத்திலும் பஞ்சுச்சாலைகளும் பிறசாலை களும் ஏற்பட வேண்டும் பல தொழிற்சாலைகள் ஏற்படுவ தால் நம் தேசத்தில் விளையும் பருத்தி முதலிய பொருள்கள் வெளி நாடுகளுக்குச் செல்லாமல் நின்று விடும், ஆனதுபற்றித் தொழிற்சாலைகள் பல ஆங்காங்கே ஏற்படுத்த முயற்சி செ-யல் வேண்டும்.

மேல்நாட்டார் பெரிதும் ஒரு காரியத்தைத் தனியரா-த் தொடங்கு வதில்லை; பலர் கூடியே தொடங்குவர். அதனால் அவர்கள் காரியத்தில் சித்தி பெறுகின்றார்கள். இலாபமும் நஷ்டமும் பலரைப் பொறுத்துச் செல்கின்றன. அங்ஙனே நாமுஞ் செ-ய வேண்டும்.

இந்திய கைத்தொழில் விசாரணைக் கூட்டத்தார் வெளி யிட்டுள்ள அறிக்கையின் இறுதியில் பண்டித மதன் மோஹன் மாளவியா அவர்கள் தனியாக ஒரு பெருங்குறிப்பு எழுதி யிருக்கின்றார்கள். அதை ஒவ்வொரு இந்தியனும் வாசிக்க வேண்டும். பண்டிதரவர்கள், மேல் நாட்டுச் சரித்திரக்காரர்கள் உரைகளைக் கொண்டே நம் நாட்டுக் கைத்தொழில்கள் பண்டைக் காலத்தில் உற்றிருந்த பெருமையையும், இது போழ்து அவைகள் உற்றுள்ள சிறுமையையும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே நம்ம வர்கள் மிக மெல்லிய வஸ்திரங்களை நெ-து வந்தார்கள். அக்காலத்தில் மேல்நாட்டவர்கள் வஸ்திரங் கட்டுவதும் அருமையாக இருந்தது. மேல்நாட்டவர்கள் தழைகளையும் தோல்களையுங் கட்டிக்கொண்டு வனவாசிகள் வாழ்க்கையை நடத்திவந்த காலத்தில், நம்மவர்கள் பட்டாடைகளையும் பிற அழகிய ஆடைகளையும் அணிந்திருக்கின்றார்கள். அத்தகைய நாகரிகம் பெற்றிருந்த நம் தேசத்தின் தற்கால நிலைமையை நோக்க வயிறெரிகிறது. மேல் நாட்டவர்கள் எவ்வெவ்விடங் களில் செல்கின்றார்களோ அவ்வவ்விடங்களிலுள்ள கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் முதலில் தங்கள் வசப்படுத்திக் கொள்வார்கள். ஒரு தேசத்தின் செல்வநிலை அத்தேசத்தின் கைத்தொழிலையும், வியாபாரத்தையுமே பொறுத்து நிற்கிறது. இவ்வுண்மையை மேல் நாட்டவர்கள் நன்குணர்ந்து முன்னேற்றமடைந்து வருகிறர்கள்.

நம் தேசத்துக் கைதொழிலையும் வியாபாரத்தையும் உயிர்ப்பிக்க வேண்டுவது நம் பெருங் கடமையன்றோ? இந்திய முதலாளிகள் நம்பிக்கை, கூட்டுறவு என்னு மிரண்டையும் அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலை அமைப்பு என்னுங் கட்டிடத்தைத் தொடங்குவார்களாக.

சென்னை மாகாணத்தில் இப்பொழுது ஒரு பெரிய பஞ்சுச் சாலையை ஏற்படுத்துவது நலம். அதற்கெனக் குறைந்தது பத்து லட்சம் ரூபா- மூலதனஞ் சேர்க்க முயற்சி செ-யவேண்டும். ஒரு பங்கு நூறு ரூபாவாக இருக்கலாம். பத்து லட்சம் சேர்ப்பது அரிய காரியமன்று. தேசத்தொண்டு செ-யபப் பலர் வெளிக்கிளம்பியிருப்பது போலச் சுதேசக் கைத்தொழிற் சாலை அமைப்புக்காகப் பங்கு சேர்க்கப் பலர் வெளிக்கிளம்பி உழைக்கவேண்டும். தேசத்தொண்டு செ-ய அஞ்சுகிறவர்கள் இத்தொண்டாயினுஞ் செ-யலாகாதா?

(10-12-1918.)

# அச்சுவேலை

பண்டைக்காலத்தில் அரிய கருத்துக்கள் அடங்கிய நூல்கள் தோலிலும், பட்டைகளிலும், தாழைகளிலும், பனை ஓலைகளிலும், செப்புத்தகடுகளிலும் எழுதப்பட்டு வந்தன. அக்காலத்தில் ஒரு சிலரே நூலாரா-ச்சி செ-துவந்தனர். பெரும்பாலும் அரிய நூல்கள் மடங்களிலிருக்கும். அவை களைக் கண்ணாற் காணவும் அருந்தவங் கிடத்தல் வேண்டும். குருமார்கள் சீடர்களைத் துன்புறுத்தியதற்கு அளவேயில்லை. ஆசிரியர்கள் மாணாக்கர்களை இழிதொழில் செ-ய ஏவு வார்கள். பல புத்தங்களின்மையால் மாணாக்கர்கள் நெட்டுருப் பண்ணுவார்கள். நூல்கள் பெரும்பாலும் பாச்செ-யுளால் யாக்கப்பட்டதற்குக் காரணம் இதுவே.

அச்சு வித்தை கண்டு பிடிக்கப்பட்ட பின்னர்ப் புத்தகப் பஞ்சம் ஒழிந்தது. புத்தகங்கள் நண்பர்களைப் போலத் துணை புரிந்து வருகின்றன. அச்சு வித்தை அறிவுப் பிணியாகிய அறியாமை யென்னும் இருளை ஒழிக்குஞ் சூரியன் போன்றது. அத்தகைய அச்சுவித்தையை முதல் முதல் கண்டு பிடித்தவர் சீனா தேசத்தார். அதை மேல் நாட்டார் தாங்கண்டதாகக் கூறுகின்றனர். பெரும்பாலும் உலகத்தில் நிலவும் வித்தைகள் பிறந்தவிடம் கீழ் நாடேயாகும். மேல் நாடு ஆக்கம் பெற்ற பின்னர் ஈண்டிருந்த வித்தைகள் யாவும் ஆண்டுச் சென்றன. வித்தை யியல்களை வளர்த்தவர் மேல் நாட்டவர் என்பதை மறுப்பாரில்லை. கீழ் நாட்டை ஈன்ற தாயாகவும், மேல் நாட்டைச் செவிலித் தாயாகவும் கொள்வது பொருத்தம்.

அச்சுவித்தையால் உலகம் நடைபெறுகின்றது. அச்சு வித்தை இல்லையேல், உலகம் இல்லையென்றே கூறலாம். இவ்வச்சுவித்தை யாலன்றோ தமிழிலுள்ள பல அரிய நூல் களோடு யாம் நாடோறும் பேசியின்புறுகின்றோம். இப் பேரின்பத்தை நமக்கீந்த வள்ளல்களாகிய ஆறுமுக நாவலர் அவர்கள், ராவ் பஹதூர் தாமோதரம் பிள்ளையவர்கள், மகாமகோ பாத்தியாயர் வே. சாமி நாத ஐயர் அவர்கள் முதலிய தமிழ் மக்களுக்கு என்ன கைம்மாறு செ-ய வல்லோம்? அது மண்ணகத்துமில்லை; வானகத்துமில்லை.

அந் நூல்களை வாசிக்குங்காலத்து எமதுள்ளத்தெழும் இயற்கை இன்பமே அவர்க்கு யாம் செலுத்தக் கூடிய கைம் மாறாகும்.

உயிர்களின் அறிவு வளர்ச்சிக்குக் கருவியாகவுள்ள நூல்களை அச்சிடுவோரைப் பற்றி விரித்துரைக்கவேண்டுவது அநாவசியம். அன்னார் பெரிதுங் கல்வி யறிவு உடையவரா யிருத்தல் வேண்டும். மேல் நாடுகளில் நூல்கள் பிழையின்றி அச்சிடப்படுவதைப் பலர் அறிவர். இந்தியாவிலிருந்து கொண்டே ஒருவனால் எழுதப்படும் நூல்கள், இங்கிலாந்தில் அவன் உதவியைச் சிறிதும் எதிர்பாராது பிழையின்றி அச்சிடப்படுகின்றன. இதற்குக் காரணம் யாது? ஆண்டுள்ள அச்சு வேலைக்காரர் அனைவரும் கல்வியறிவுடையவரா யிருத்தலே யாம். இந்தியாவில் பெரும்பாலும் நூல்கள் பிழை யின்றி அச்சிறுக்கப் பெறல் அருமையினும் அருமை. பிழை திருத்த மில்லாத புத்தகங்களைக் காண்டலும் அரிது. ஆசிரியர் ஒரு கருத்துக்கொண்டு எழுதுவர்; அதை அச்சுக் கோப்போர் ஒரு விதமாகக் கொள்வர். நூலாசிரியர் அருகிருந்து பிழை திருத்தும் நூல்களிலும் பிழைகள் ஏராளமாகக் காணப் படுகின்றன. இந்தியாவில் நான்காம் ஐந்தாம் வகுப்புவரை வாசித்தவர்களே பெரிதும் அச்சுக் கோக்கும் வேலைக்கு வருகின்றார்கள். சிலர் தெருப் பள்ளிக்கூடங்களில் அட்சராப் பியாசஞ் செ-து அச்சுக் கூடங்களுக்குப் போகின்றனர். வல்லினத்துக்கு இடையினமும், இடையினத்துக்கு வல்லின மும் மாறி மாறி அச்சுக் கோக்கின்றனர். நாடோறும் இக் கஷ்டங்களைக் கண்கூடாக நாம் அனுபவித்து வருகின்றோம். வேலைக்காரர்கள் மீது குற்றஞ் சுமத்துவது அறியாமை. பெரும்பாலும் வறுமையால் பீடிக்கப்பட்டவர்களே அச்சு வேலைக்குச் செல்கின்றார்கள். அவர்கள் எங்ஙனம் கல்வி அறிவு நிரம்பப் பெறுவார்கள்? பாடசாலைச் சம்பளங்கள் பணக்காரர்களையே நடுங்கச் செ-கின்றன. ஏழைகள் என் செ-வார்கள்? பாவம்!

அச்சுக் கூடத் தலைவர்களுள் பெரும்பாலோர் இரக்க மின்றி வேலைக்காரர்களைக் கொல்லாமற் கொல்கிறார்கள்; பால் மணமாறாச் சிறுவர்கள் தலையிற் கொட்டுகின்றார்கள்; கன்னத்தில் அறைகின்றார்கள்; அவ்விளங் குழந்தைகளை அடிக்கின்றார்கள்; உதைக்கின்றார்கள். ஒவ்வொருகால் அச்சுக்கூட அதிகாரிகள் தங்களிடத்து வேலை செ-யுஞ் சிறுவர்கள் குடுமியைப் பற்றிக் கருத்தமுகமுஞ் சிவந்த

கண்ணுங் கொண்டு பயமுறுத்துகின்றார்கள். அது காலை அச்சிறுவர்கள் உள்ள நிலையை அறிய வல்லவன் ஈசனே.

பெரும்பாலும் அச்சுக் கூடங்களில் காலை முதல் மாலை வரை நின்று கொண்டே வேலை செ-கிறார்கள். எழுத்துக்களை உற்று நோக்கலால் கட்புலனும், நிற்றலால் காலுறுப்பும் பலஈனமடைகின்றன. இதனால் மூளைவரண்டு இரத்த ஒட்டமுங் குன்றும். உலகத்திலேயுள்ள ஆபாச நோ-கள் பல அச்சு வேலைக்காரர்களை உறைவிடமாகக் கொள்கின்றன. சில இடங்களில் கருவிகள் தே-ந்த இயந்திரங் களும், முகந்தே-ந்த எழுத்துக்களுமிருக்கின்றன. இவை களைக் கொண்டு வேலைக்காரர்கள் என் செ-வார்கள்? சொந்தக்காரர்கள் வேண்டுவது பண மொன்றே. தே-ந்த சாமான்களாலும் வேலைக்காரர்களுக்குப் பல வகை கஷ்டங் களுண்டு வயதடைந்தவர்கள் அச்சு வேலைக்குத் தங்களை இளமையில் அனுப்பிய பெற்றோர்களை நொந்து நொந்து வைகின்றார்கள். இன்னும் அச்சு வேலைக்காரர் துயரம் விரிக்கில் பெருகும். இவர்தந்துயரத்தை உணர்ந்தவர் எத்தனை பேர்? அதை ஒழிக்க முயன்றவர் எத்தனைபேர்? எத்தனைக் கௌரவ அங்கத்தவர் அச்சுவேலைக்காரரைப் பற்றிக் கவனஞ் செலுத்தினர்? ஒருவரும் இல்லை என்றே கூறலாம்.

அச்சுத் தொழிலாளருக்காக ஒரு தரும பாடசாலை அமைத்தல் வேண்டும். அதில் தேறும் பிள்ளைகளுக்கு ஒரு பத்திரம் கொடுத்தல் வேண்டும். அப்பத்திரம் இல்லாதார் அச்சு வேலைக்குப் போதல் கூடாது என்ற ஒரு நியதி ஏற்படல் வேண்டும். இவர்கள் உட்கார்ந்து வேலை செ-யவும், பிற துன்பங்களினின்றும் அவர்கள் விடுதலையாகவும் ஜனத் தலைவர்கள் முயற்சி செ-ய வேண்டும். இதன் பொருட்டு ஒரு சங்கம் உடனே ஏற்படுத்தல் வேண்டும். இதைக் குறித்துக் கௌரவ அங்கத்தவர்கள் சிறிது கவனஞ் செலுத்துவார் களென நம்புகிறோம்.

(16-2-1918.)

# அரசியற் பாக்கள்

## பாரத நாடு

### வந்தே மாதரம்

*மலைகளிலே உயர்மலையை மகிழ்ந்தணியு நாடு*
*மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு*
*உலகில்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு*
*ஒண்தொழிலும் வாணிபமும் ஓங்கியசீர் நாடு*
*கலைகளொடு மறைமுடியைக் கண்டதவ நாடு*
*கடவுளருட் கோயில்களே காட்சியளி நாடு*
*பலசமய உண்மையெலாம் பரந்தொளிரு நாடு*
*பழைமைமிகு புகழ்பெருகு பாரதநன் னாடே* (1)

*உண்மையரிச் சந்திரனை உவந்தளித்தநாடு*
*உயர்ஜனகன் ராமபிரான் உலவியபொன் னாடு*
*கண்ணன்விளை யாடலெல்லாங் கண்டுகளி நாடு*
*கன்னனொடு பஞ்சவர்கள் காத்ததனி நாடு*
*தண்மைநிறை புத்தரவர் தருமம்வளர் நாடு*
*தகைமையுறு வள்ளுவர்தந் தமிழ்பிறந்த நாடு*
*பண்ணமருங் கரிகாலன் பரித்தபுகழ் நாடு*
*பகைவர்களுந் தொழுதேத்தும் பாரதநன் னாடே* (2)

*வான்மீகி வியாசமுனி வளர்ந்திருந்த நாடு*
*வாகடதன் வந்திரியும் வசிட்டமுனி நாடு*
*'நான்' மறந்த சுகர்முதலோர் ஞான மொளிர் நாடு*
*நாயன்மார் ஆழ்வார்கள் நண்ணிபதண் ணாடு*
*மேன்மையுறு பட்டினத்தார் மேவுமணி நாடு*
*வேதாந்த ராமகிரு ஷ்ணர் விளங்கியசெந் நாடு*
*பான்மைபெறு கம்பர்முதல் பாவலர்கள் நாடு*
*பத்தரொடு ஞானிகள்வாழ் பாரதநன் னாடே* (3)

*சந்த்ரவதி சாவித்ரி ஜானகியின் நாடு*
*தமயந்தி திரௌபதியுஞ் சார்ந்திருந்த நாடு*
*இந்திரர்சொல் கண்ணகியின் எழில்நிறைகொள் நாடு*
*எங்களவ்வை யின்மொழியே எங்குமொளிர் நாடு*

*அந்தமிகு காரைக்கால் அம்மைசிவ நாடு*
*ஆண்டாளும் மங்கையர்தம் அரசிவந்த நாடு*
*பந்தமிலா விக்தொரியா பரிந்தாண்ட நாடு*
*பாவையர்தம் வடிவான பாரதநன் னாடே* (4)

*தந்தையெனுந் தாதாபா- தவழ்ந்துறைந்த நாடு*
*தத்தரொடு கோகுலர்தஞ் சரிதநிகழ் நாடு*
*நந்தலில்சு ரேந்திரநாத் நாவலர்வாழ்நாடு*
*நாயகனாந் திலகமுனி நலஞ்சிறக்கு நாடு*
*இந்துவெனக் காந்தியொளி எழுகின்ற நாடு*
*இனியஅர விந்தமலர் இன்பமிகு நாடு*
*பந்துவையும் நீத்தலஜ பதிபிறந்த நாடு*
*பற்றறுத்தோர் பதந்தாங்கும் பாரதநன் னாடே* (5)

*ஞானமொடு கல்விநலம் நல்குதிரு நாடு*
*நாதாந்த மோனநிலை நாட்டமிகு நாடு*
*தானமதை உடலாகத் தாங்குகின்ற நாடு*
*தான்வருந்திப் பிறர்க்குதவுந் தயைபிறந்த நாடு*
*வானவருந் தொழுதேத்தும் வளம்பெருகு நாடு*
*வாழ்விழந்தே இதுகாலை வாடுகின்ற நாடு*
*ஊனமிலா உரிமைபெற ஊக்கமிகு நாடு*
*உத்தமரை அளிக்கின்ற ஒருபரத நாடே.* (6)

**வந்தே மாதரம்**

# திலகர்

## வந்தே மாதரம்

*பனிவரையே முடியாகப் பலநதியே அணியாகக்*
*கனைகடலே உடையாகக் கருணையதே வடிவாகக்* (1)

*கொண்டுலகை வளர்த்துவருங் குணமுடைமை எவரெவருங்*
*கண்டவுடன் தொழுதேத்துங் கருதரிய பரதமெனும்* (2)

*அன்னையவள் சிறப்பிழக்க அதையளிக்க இந்நாளில்*
*அன்னவள்தன் திருவயிற்றில் அவதரித்த ஒருமுனியே!* (3)

*திலகமென உலகினுக்குத் திகழொளிசெ- பெருமையதைத்*
*திலகரெனு மியற்பெயரால் திறமுறவே நிறுத்தினையே* (4)

*செந்தண்மை உயிர்களுக்குச் செயநாளும் பரதமதில்*
*அந்தணனா யவதரிக்க அருளினதும் ஆண்டவனே* (5)

*ஆரியர்தம் வரலாற்றை அறிவிக்கும் ஒருநூலின்*
*சீரியலைப் புகழாத சிறப்புடையோர் செகத்துளரோ?* (6)

*கண்ணபிரான் திருவார்த்தை கலியுகத்தில் மணம்பெறவே*
*வண்ணவுரை வகுத்திங்கு வழங்கியதெம் புண்ணியமே* (7)

*இளமைதொட்டே அடிமைதனை எவரெவரும் வெறுத்தொழிக்க*
*அளவில்லா உரையதனை அகிலமெலாம் பரப்பினையே* (8)

*உடல்வாழ்க்கை பிறர்க்கென்னும் உறுதிமொழிச்*
*செழும்பொருளைக்*
*கடைப்பிடித்துச் செயல்வழியே கண்டதுவுஞ் சிறையன்றே* (9)

*"பிறப்புரிமை சுயஆட்சி; பெறவேண்டும்" எனுமரிய*
*அறமொழியை உரைசெ-த அருள்முனிவ ரெவரேயோ?* (10)

*உலகமெலாங் கலக்குறினும் உறுதிநிலை கலங்காத*
*திலகமுனி யென்றுன்னைத் தேவர்களுஞ் செப்புவரே* (11)

*சிந்தியா உளம் உளதோ செப்பாத நாவுளதோ*
*இந்தியா முழுவதுமே இயங்குவதும் வடிவன்றே* (12)

*தம்பொருட்டு வாழாத தகைமையுள ஒருநாடே*
*எம்பொருட்டுக் கிழவயதில் எழுகின்றா- பெருமானே* (13)

*சுயஆட்சிக் கொடிதாங்கிச் சுகமளிக்கத் திரும்பிவரச்*
*சுயமாக விளங்குமொளி சுகப்பொருளை வழுத்துவமே.* (14)

**வந்தே மாதரம்**

# இங்கிலாந்தும் திலகரும்

**வந்தே மாதரம்.**

*எங்கள் மன்னர் இணையடி யேந்தியே*
*பொங்கு பேற்றைப் புனைந்தெமை யாண்டிடுந்*
*தங்கு சீர்த்தி தழைத்தொளி வீசுநல்*
*இங்கி லாந்தெனும் இன்ப அணங்குகேள்* (1)

*தண்மை செம்மை தகைமையுங் கொண்டவோர்*
*வண்ணமாமுனி வந்தனர் நின்னிடை*
*வெண்மை நீலம் விரிந்து பரந்தநின்*
*கண்க ளாலவர் காட்சியைக் காணுமே* (2)

*கல்வி ஞானங் கருணை நிரம்பிய*
*செல்வ மாமுனி சேர்ந்தனர் நின்னிடை*
*பல்வ ளங்களும் பான்மையுங் கொண்டநீ*
*ஒல்லை அன்னார் ஒளிமுகங் காணுமே.* (3)

மற்ற வர்க்கே மனதை நிறுத்தியே
உற்ற நேரத் துதவும் அறமுனி
பற்றி வந்தனர் பண்புடை நின்னிடை
செற்ற மில்லவர் சிந்தையை நோக்குமே. (4)

பரத மென்னும் பழையவோர் நாடளி
விரத மாமுனி வேந்தர் கிழக்குதி
பரிதி யென்னப் பரிந்து படர்ந்தனர்
கருதி யன்னார் கரத்தினை நோக்குமே (5)

எங்கள் தலைக்கணி எம்பெரு மானடி
பங்க யப்பனி மாமலர் பூத்தது
துங்க மிக்க சுகமுடை நின்னிடை
அங்க ணாலதை அன்பொடு காணுமே (6)

உரிமை வேண்டி உவந்துனை நாடினர்
பெரிய மாமுனி பேச அருள்புரி
அரிய வாசகம் அன்பி லுதிப்பது
தெரிய ஓதுவர் எங்கள் சிறுமையே (7)

அன்னவர் பெயர் ஆரும் புகழ்பெயர்
பின்னை யென்றும் பெயர்வது மின்றியே
இந்நி லத்தி லிருப்பது கூறுவல்
சென்னி கொள்ளுந் திலகரெனும் பெயர் (8)

இப்பெயர்ப் பொருள் இந்தியா என்பது
செப்பு மித்தகைச் செம்பொருள் சேர்ந்தது
அப்பு மிக்க அருணதி பா-ந்திடும்
ஒப்பில் இந்தியா உற்றதை ஒக்குமே (9)

சிந்தை நல்ல திலகர் சொலும்மொழி
இந்தியாவின் இனிமொழி யாகுமால்
அந்தணர்சொலை யார்ந்து செவிகொடு
சொந்த மாகச் சுதந்தர நல்குமே. (10)

வந்தே மாதரம்

## காந்தியடிகள்

சாந்தமய மௌனவிலங்குந் தனிப்பொருளை உளத்தென்றும்
ஏந்தியுயிர் தமக்கெல்லாம் இனிமைசெய உலகிடையே
போந்தகுண மலையாகும் புனிதநிறை கடலாகும்
காந்தியடி இணைமலரைக் கருத்திருத்தி வழுத்துவமே.

○○○

# என் கடன் பணிசெய்து கிடப்பதே!

(1921)

# முன்னுரை

அறிவு விளக்கமும் அன்பு நிகழ்ச்சியும் மக்கள் வாழ்விற்கு இன்றியமையாதன. வினை இல்வழி அறிவும் விளக்கமுறாது; அன்பும் நிகழாது. அறிவு விளக்கத்துக்கும் அன்பு நிகழ்ச்சிக்கும் ஊற்றாயிருப்பது வினை. வினை, அறிவுக்கும் அன்புக்குங் கொழு கொம்பு போன்றது. ஆதலால், மக்கள் வினைவழி அறிவு பண் பட்டு அன்பு நிகழும்.

அறிவு-வினை-அன்பு, இவை முறையே வடமொழியில் ஞானம்-கருமம்-பக்தி எனப்படும். பொதுப்படக் கருமம் என்று கூறும்போது நிஷ்காமிய கருமம் என்று கொள்ளல் வேண்டும். நிஷ்காமிய கருமமாவது பயன் கருதாது புரியும் வினை. பயன் கருதா வினையில் தூய அறிவு மலர்ந்து, உண்மை அன்பு சொரியும்.

ஞானத்துக்கும் பக்திக்கும் ஊற்றாயுள்ள கரும யோகத்தைத் தமிழ்நாட்டுச் சக்தியாக்கிரகியாகிய அப்பர் சுவாமிகள் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று ஒரு பாவின் ஓர் அடியில் அமைத்து ஓதியிருக்கிறார். அப்பர் மனமொழி மெய்களால் இடையறாது பணி செய்து, பணியின் திறத்தை யுணர்ந்தவர். அவர் மனத்தால் ஆண்டவனை நினைந்து, வாயால் அவன் புகழைப் பாடி, கையால் உழவாரத் தொண்டைச் செய்து, நிஷ்காமிய கருமயோகியாய், ஞானத்தையும் பக்தியையும் பெற்றுப் பேரின்பம் நுகர்ந்த வரலாற்றைப் பெரிய புராணத்திற் பார்க்க.

அப்பெரியார் அருளிச் செய்த தமிழ் மறையில் ஞானமும் கருமமும் பக்தியும் ததும்பி வழிதலைக் காணலாம். அவரது அநுபவம் அல்லது அடைவு, 'என் கடன் பணி செய்து கிடப் பதே' என்னுந் திருவாக்காகப் பரிணமித்தது என்று கூறலாம்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னுந் திருவாக்கில் எனக்கு அளவிலாப் பற்றுண்டு. இளமையில் இதைப் பற்றிச் சொற்பொழிவுகள் சில நிகழ்த்தினேன். இத்திருவாக்கைப் பற்றி ஒரு கட்டுரை வரையல் வேண்டுமென்றும் எண்ணிக் கொண்

டிருந்தேன். அடியேன் சென்னை ஆயிரம்விளக்கு 'வெஸ்லியன் முதல் தர மூலாதாரப் பாடசாலை'யில் போதகாசிரியனா யமர்ந்தபோதும், பின்னைச் சென்னை இராயப்பேட்டை 'வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியனாய்த் தொண் டாற்றியபோதும் "இக்கட்டுரை எழுதல் வேண்டும்" என்னும் எண்ணம் என்னைவிட்டு அகலாமற் கிடந்தது. ஆனால், 'தேச பக்தன்' பத்திரிகை ஆசிரியனாய்ப் பணிசெய்தபோதே இக் கட்டுரை எழுதல் நேர்ந்தது. 'தேசபக்தன்' ஆசிரிய பீடத்தில் அமர்தற்கு முன்னர், இஃது எழுதப்பட்டிருப்பின், இதன் உரை நடையும், உள்ளுறையும், முறைவைப்பும் வேறுபட்டிருக்கும்.

இக்கட்டுரை 1919ஆம் ஆண்டில், 'தேசபக்தன்' இரண் டாம் வருட அநுபந்தத்துக்கென என்னால் எழுதப்பட்டது. இதைப் பெயர்த்து இச்சிறு நூல் வடிவாக 1921ஆம் ஆண்டில் அச்சிட்டபோது, பல பொருளைக் கூட்டியும் புதுக்கியும் மாற்றியும் ஒழுங்கு செய்தேன் ஏறக்குறைய ஒரு பாதி புதிய பொருள் சேர்க்கப்பட்டது. பின்னே ஐந்தாம் பதிப்பில் சில கூட்டப்பட்டன.

பத்திரிகை ஆசிரியனாகி, அரசியல் துறையில் இறங்கிய நாள்தொட்டுத் தமிழ்ப்புலவர் உலகில் யான் வாழ்வதாகக் கருதுவதில்லை; ஆனால் தமிழுலகில் வாழ்வதாகக் கருதுவ துண்டு. போதகாசிரியனா யிருந்தபோது தமிழ்த்தாயின் கேசமும், மேகலையும், சிலம்பும் என் கண்களுக்குப் புலனாயின. இப்பொழுது தமிழ்த்தாயின் அலமரலும் விம்மலும் அழுகையும் புலனாகின்றன. தமிழ்ப் புலவர்களுக்கு இவை புலப்படுகின்ற னவோ என்னவோ தெரியவில்லை. ஆனால் தமிழகத்துக்கு இவை புலப்படா தொழியவில்லை.

என்னைத் தொண்டிற்குப் பண்படுத்தி விடுத்த எனது தமிழ் அன்னை-என்னை ஈன்ற அன்னையினுஞ் சிறந்த அம்மை- அலமந்து விம்மி விம்மி அழுது அழுது ஆவிசோரும் வேளை யில், அவள் துயர் தீர்க்க முயலாது, அவளைச் செயற்கை அணிகளால் அழகு செய்ய எனக்கு மனமெழவில்லை. அது பற்றித் "தேசபக்த'னிலும் 'நவசக்தி'யிலும் என்னாலியன்ற அளவு முறையே தொண்டு செய்தேன்; வேறு துறைகளிலும் தொண்டு செய்து வருகிறேன்.

என் தாய்நாடு உரிமை பெற்றாலன்றி, என் தமிழ்த்தாய் அரசு போற்றுங் கழகமேறி அரியாசனம் வீற்றிருக்கமாட்டாள் என்றும், சிறப்பாக அரசியல் துறை நண்ணிப் பணிசெய்தால்

தமிழ்த் தாய்க்கு நலம் விளையும் என்றும் எண்ணி, அத்துறையில் இறங்கித் தொண்டு செய்யலானேன். இந்நூலிலும் தேசப் பணியையே பெரிதும் வலியுறுத்திப் போற்றியிருக்கிறேன்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் நன்மொழியில் போந்துள்ள ஒவ்வொரு சொல்லும் விரிவுரைக் குரியது. இந்நூல், என் - கடன் - பணி - செய்து கிடப்பதே என்னும் நான்கு அதிகரணங்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. என் - என்பதில், உயிர் உண்மை, அதன் முன்னிலை, பின்னிலை, நாத்திகக் கொள்கை மறுப்பு, மேல்நாட்டு நிலை, கடமைத் தோற்றம் முதலியனவும்; கடன் - என்பதில், நான்குவித வாழ்க்கை, கடமையினின்றும் பணி அரும்புதல் முதலியனவும்; பணி - என்பதில், இறைவன் பணி, சராசரப் பணி, எல்லாம் பணி மயம் என்பது, உயிர்கள் பணிவிளக்கம், மனிதன் பணிநிலை, நிஷ்காமியப் பணியின் பெருமை, காமியப் பணியின் சிறுமை, ஆலயப் பணிச் சிறப்பு, அதன் உண்மை, அதன் பயன், அதன் தற்கால நிலை, அதன் நோக்கம், அன்பு நிலை, உருவ வழிபாடு, அதைக் கொள்ளல் - தள்ளல், வேண்டும் பணி, தேசப் பணி இந்தியாவின் தற்கால நிலை, நாட்டுக் கல்வி, சுயராஜ்யம், தேசப்பணி கடவுள் பணியே என்பது, எல்லாப் பணிகளுக்கும் அடிப்படை தேசப்பணி யென்பது, தேசபக்தி, சாதி பேதம், இந்தியா ஒரு பெருந் தேவாலயம் என்பது, உலக சகோதரத்துவம், இந்தியாவின் அறம், பழைய அரசியல், அருளாட்சி, ஒழுக்கம், பணிக்கு ஒழுக்கம் இன்றியமையாததென்பது, பணி செய்வோர் இயல், காலத்துக்கேற்ற பணி முதலியனவும்; செய்து கிடப்பதே - என்பதில், சகுண வழிபாடு, ஐந்தொழில், வீட்டின்பத்தினும் பணி சிறப்புடையதென்பது, காமியப் பணி நிட்காமியப் பணி இயல், கரும யோகத்தை விவேகாநந்தர் திலகர் போற்றியது, காந்தியடிகள் பொறுமை, வேண்டுகோள் முதலியனவும் அடங்கியிருக்கின்றன.

இந்நூலில் எங்கணும் பணியின் மணமே கமழ்ந்து கொண்டிருக்கும். தேசப்பணியின் பற்றை வளர்க்க வேண்டுமென்னும் நோக்கத்தோடு இந்நூல் எழுதப்பட்டது. பணியில் விருப்புடையார்க்கு இந்நூல் பெருந்துணை செய்யும். பணியில் விருப்பின்றி உறங்குவோரையும் இந்நூல் தட்டி எழுப்பும். இந்நூல் கரும யோகிகள் தொகையைத் தமிழ் நாட்டில் பெருக்கும் என்னும் நம்பிக்கை எனக்குண்டு.

*தமிழ்நாட்டில் பிறந்த ஒரு [1]'சத்தியாக்கிரகியின் மெய்ம் மொழியைப் பற்றி விரித்துக் கூறும் 'இந்நூலைத் தமிழ் மக்கள் ஆதரிப்பார்களாக' என்று 1921ஆம் ஆண்டில் வேண்டு தல் செய்தேன். இன்று ஏழாம் பதிப்பு வெளிவருகிறது. இத னால் இந்நூல் தமிழ்நாட்டுக்குப் பயன்பட்டு வருகிறது என்று கூறும் அளவில் நிற்கிறேன்.*

*ஏழாம் பதிப்பு வெளிவரும் இவ்வேளையில் என் கண்கள் படலத்தால் மூடப்பட்டன. எனது நிலையுணர்ந்து, எவ்விதக் கைம்மாறுங் கருதாது, அன்புளங்கொண்டு அச்சுப்பிழை திருத்தி உதவிய வித்துவான் அன்பு கணபதிக்கு எனது வாழ்த்து உரியதாக.*

*இராயப்பேட்டை*
*10.10.1952.* **திருவாரூர் வி. கலியாணசுந்தரன்**

1. அப்பர் சத்தியாக்கிரகி என்பது 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூலில் விளக்கப்பட்டிருக்கிறது.

# 1. தோற்றுவாய்

*'என் கடன் பணிசெய்து கிடப்பதே' - இத் திருமொழி யாண்டுளது? இஃது அப்பர் சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் - இரண்டாந் திருமுறை - திருக்குறுந்தொகை - திருக்கடம்பூர்ப் பதிகம் - ஒன்பதாஞ் செய்யுளின் இறுதியடியா யிருப்பது. அப்பர் தேவாரத்துள் மக்கள் உள்ளத்தைக் கவரத் தக்க பல மணிகள் மிளிர்கின்றன. அவற்றுள் ஒன்று 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது. எல்லார்க்கும் இம்மணி அணி யாகும் என்பதில் ஐயமில்லை.*

*ஒவ்வொரு சமயத்தையும் ஆராய்ச்சி செய்தால், அதன் அதன் முடிவு. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னுந் திருமொழிக்கு அரண் புரிந்தே நிற்கும். சமயப் பற்றில்லார்க்கும் இம் மூதுரை பயன்படுமென்று கூறலாம். மனிதப் பிறவி தாங்கியுள்ள அறிஞர் கடைப்பிடித்தொழுகும் நெறிகட்கும் துறைகட்கும் ஏற்றவாறு பொருளை அறிவுறுத்தும் பெற்றி, 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் அப்பர் மொழியில் உண்டு என்று சுருங்கச்சொல்லலாம். இத்துணைச் சிறப்பு வாய்ந்த பெருமொழியை ஆராய்வது அறிஞர் கடமையாகும்.*

**பிறப்புரிமை**

*யான் இளமையில் அப்பர் சுவாமிகள் தேவாரத்தை ஆராய்ச்சி செய்தபோது, அப்பெரியார் உரைகள் பல என்னை ஆட்கொண்டன. அப்பர் தேவாரத்தைச் செவ்வனே ஆராய் வோர்க்குப் பிறப்புரிமை இன்னதென்பது நன்கு விளங்கும். 'நாமார்க்குங் குடியல்லோம்', என்றும் 'நாம் யாவர்க்கும் இடைவோம் அல்லோம்'., அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்ச வருவதுமில்லை', அஞ்சல் நெஞ்சே', புந்தி வட்டத் திடைப் புக்கு நின்றானையும் பொய்யென்பனோ'; 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே' - இவை போன்ற உறுதிமொழிகள் அப்பர் தேவாரத்தில் பலபடக் கிடக்கின்றன.*

*அப்பர் தேவாரத்தைத் துருவி ஆராயின், அதன்கண் மூன்று பொருள் சிறப்பாக விளங்கித் தோன்றுதல் காணலாம்.*

அவை: அஞ்சாமை, உண்மை, இன்பம் என்பன. இம் மூன்றும் உள்ள இடத்தில் உரிமை என்னுஞ் செம்பொருளுமிருக்கும். இம்மூன்றும் இல்லாத இடத்தில் உரிமை யுணர்விராது. உரிமை இல்லாதஇடத்து இம் மூன்றும் இரா என்க.

உரிமை என்பது முதன்மை. அதினின்றும் முகிழ்ப்பன அஞ்சாமை, உண்மை, இன்பம் என்பன. முதன்மைக்குக் கேடு நேரின், மற்றவற்றுக்குங் கேடு நேரும். ஆதலால், மனிதர் தம் பிறப்புரிமையை இழப்பாராயின் அவர்பாலுள்ள அஞ்சாமையும், உண்மையும், இன்பமும் தாமே மாயும். உரிமை யில்லா நாட்டில் இம்மூன்றும் அருகி நிற்றல் கண்கூடாம். தமிழ் நாட்டிற்றோன்றிய அப்பர், தம் பின்வருவோர்க்கு உடலுரிமை, உயிருரிமை இன்னவென்பதை அறிவுறுத்தவே தம் அநுபவத்தைத் தேவாரமாகப் பாடினர் போலும்!

**பணி**

அஞ்சாமை, உண்மை, இன்பம் - இவற்றின் முதன்மையாகிய உரிமை - இவற்றைப் பெறுதற்கு அப்ப ரெம்பெருமான் ஒரு வழி குறிப்பிடுகிறார். அது ‘பணி’ என்னுஞ் செவ்வழி. பணியினால் எல்லாம் பெறலாம் என்பது அவர்தங் கருத்து. அப்பர், மனமொழி மெய்களால் பணிபுரிந்தே அஞ்சாமை, உண்மை, இன்பம், உரிமை என்பவைகளைப் பெற்றனர். பணியின் சிறப்பை அப்பர் தம் பாக்களின் ஊடே ஊடே விதந்தோதிச் செல்வது கருதத்தக்கது. சுவாமிகள்,

***நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்***
***தென்க டம்பத் திருக்கரக் கோயிலான்***
***தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்***
***என்க டன்பணி செய்து கிடப்பதே***

எனவரூஉந் திருப்பாட்டில் உள்ளங்கை நெல்லிக்கனி போலப் பணியின் சிறப்பை எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள்.

‘என் கடன் பணிசெய்து கிடப்பதே’ என்னுந் திருவாக்கு என் கண்ணுக்குப் புலனாகிய நாள்தொட்டு, அதை ஓதி ஓதி, எனது நாவும் தழும்பேறியது. உறக்கத்திலும் எனது நா அத்திருவாக்கை உச்சரித்துக் கொண்டிருக்கும். நான் அதை மறந்தாலும் அஃது என்னை மறப்பதில்லை. ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்னும் பொன்னுரையில் எனக்குள்ள அன்புக்கு ஓர் அளவும் உண்டோ? என்னைத் திருப்பணி வழியில் நிறுத்தி ஆட்கொண்ட அத் தமிழ்மொழி எனது குருமொழியாகும். அக்குருமொழி என்னைப் பண்படுத்தி வருவதுபோல

வேறெம்மொழியும் என்னைப் பண்படுத்தி வருவதில்லை. உலகிலுள்ள அறிவுநூல்களின் திரண்ட பொருள், 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதாகவே இருக்கிறது. இவ் வொன்றே பல அறிவு நூல்களாகவும் விரிந்து நிற்கிறது.

### பொருளாழம்

திருப்பணியை (Service)ப் பற்றிப் பேசாத பெரியோரில்லை; நூலில்லை. பணிசெய்யாதார் உலகத்திலுளரோ? தோட்டியும் பணி செய்கிறான்; தொண்டைமானும் பணிசெய்கிறான். அறவோனும் பணிசெய்கிறான்; ஆண்டவனும் பணி செய் கிறான்; இயங்கியற் பொருளும் பணி செய்கிறது; நிலையியற் பொருளும் பணி செய்கிறது; எல்லாம் எல்லாம் பணி செய் கின்றன. உலகமெல்லாம் 'பணி' மயமாகவே பொலிகின்றன. எல்லா உயிர்கட்கும் பொதுவாயுள்ள பணியின் சிறப்பை, நந்தமிழர் பெருமான், 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று ஒரு பாவின் ஓர் அடியில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னுஞ் செம் மொழி, காலதேச வர்த்தமானப் போக்குக் கேற்றவாறு பொருளை நல்கிக் கொண்டே நிற்கும். எவரெவர் எவ்வெப் பணியில் காதல் கொண்டிருக்கிறாரோ, அவரவர் அவ்வப் பணிவழி நின்று, என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதற்குப் பொருள் விரிக்கலாம். எல்லாவிதப் பணி செய்வோர்க்கும் பொதுவாக நிற்பது, என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் பெருமொழி இஃதோர் ஆழி.

யான் இளமை தொட்டு ஓதிவரும் இப்பெரு மொழியைப் பீடிகையாகக் கொண்டு, என் சிற்றறிவிற் கெட்டியவாறு ஒரு கட்டுரை வரைதல் வேண்டும் என்னும் அவா எனக்கு நீண்ட நாளாக உண்டு. அவ்வவா நிறைவேறுங் காலம் 1919இல் இன்று கூடிற்று. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் அடியிற் போந்துள்ள ஒவ்வொரு சொல்லும், ஓசை நிரப்புவதாக மட்டும் நிற்கவில்லை; பொருள் நிரம்பியதாகவும், குறிக்கொண்ட ஒரு கருத்தை உருவாக்கும் உறுப்பாகவும், அளவைக்கு முரண் படாததாகவும் நிற்கிறது. இஃது அறிஞரால் உற்று நோக்கத் தக்கது. அப்பர் ஆழியில் மூழ்குதல் என்னால் இயலாது. அதை ஓதத்தில் நின்று பார்க்கிறேன். ஒவ்வொரு சொல்லையும் எடுத்து ஆராயு முகத்தான் இக்கட்டுரையை முற்றுவிக்க ஒல்லும்வகை முயல்கிறேன்.

# 2. என் - (நான்-யான்)

நான்-யான் என்னுந் தன்மை ஒருமைச் சொல், வேற்றுமைப் படுங்காலத்து, 'என்' எனத் திரியும். ஈண்டு ஆராய்ச்சிக்கு, வேற்றுமைப்பட்ட 'என்' என்பதற்குப் பதிலாக, வேற்றுமைப் படாத முதலாகிய 'நான்-யான்' என்பதையே எடுத்துக் கொள்கிறேன்.

'நான்-எது, யார் என்னும் ஆராய்ச்சி, உலகந் தோன்றிய நாள் தொட்டு நிகழ்ந்து வருகிறது. அவ்வளவு நீண்டகாலம் அவ்வாராய்ச்சி நிகழ்ந்துவரினும், 'நான்' என்னும் பொருளைப் பற்றிக் கிடைத்துள்ள உண்மையை உலகத்தார் அனைவரும் ஒருமுகமாக இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை. ஒவ்வோர் அறிஞரும் ஒவ்வொரு வழி நின்று, 'நான்' என்பதன் உண்மையைக் கண்டு வருகிறார்; பிறர் கூற்றை மறுத்தும் வருகிறார்.

**இருவிதக் கொள்கை**

மண், புனல், தீ, காற்று இவற்றைப் பற்றி அறிஞர் ஆராய்ச்சி நிகழ்த்தி, இவற்றின் உண்மையை எவரும் ஒப்புக் கொள்ளும் முறையில் முடிவு செய்திருக்கின்றனர். இந்நான்கு பூதங்கட்கும் ஆதாரமாயுள்ள வெளியின் (ஆகாயத்தின்) உண்மையையும் புலவர் கண்டுவிட்டனர்.

இதுகாலை, ஐந்து பூதங்களின் உண்மையை மறுக்கும் அறிஞர் இல்லையென்றே கூறலாம். மண் முதலிய நான்கும் தூல பூதங்கள்; அவை புலனறிவிற்கெட்டக் கூடியவை. அவற்றைக் கருவிகொண்டாய்ந்து, அவற்றின் உண்மையை எவரும் ஒப்ப நிறுத்திக் காட்டுதல் கூடும். நான்கு தூல பூதங்களின் துணைகொண்டு, புலனறிவுக் கெட்டாத சூக்கும பூதமாகிய ஆகாயத்தின் உண்மையும் புலவரால் இந்நாளில் நிறுவிக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, பூதங்களின் உண்மையைக் காட்சி, வழி என்னும் இரண்டானும் நிறுவிக் காட்டலாகும்.

ஐந்து பூத உண்மை கண்ட புலவர் சிலர், இப்பூதங்கட்கு வேறாக 'நான்' என்னும் பொருள் ஒன்றில்லை என்ற முடிவிற்கு

வந்தனர். ஐந்து பூத காரியமாகிய உடலே 'நான்' என்ற முடிவை அவ்வறிஞர் பெற்றனர் என்று தெரிகிறது. 'நான்' என்பதை ஐம்புல உணர்ச்சியென்றும், மனமென்றும், கரணமென்றும், பிராணனென்றுங் கூறுவோரும் உளர். இக்கூட்டத்தார் அனைவரும் சித் (அறிவுப்) பொருளுண்மையை மறுத்து, அசித் (சடம் - அறிவில்லாப்) பொருளுண்மையை மட்டும் கொள்வோர். (சடம்) அறிவில்லாப் பொருளுக்கு வேறாக (சித்) அறிவுப் பொருளொன்று உண்டு என்னும் கொள்கையுடையாரும் உலகில் வாழ்கின்றனர். இவர் கூற்றையும் அவர் கூற்றையும் ஈண்டு அளந்தளந்து ஆய்ந்து ஒரு முடிவு கட்டல் வேண்டுமென்பது இக்கட்டுரையின் நோக்கமன்று. ஆதலால் சுருங்கிய முறையில் சில சொற்களால் எனது கொள்கையை நிறுவி மேற்செல்கிறேன்.

**மேலை நாட்டார்**

சடத்துக்கு வேறாகச் சித்தில்லை என்னுங் கொள்கையினர் தொகை உலகில் அருகிவருகிறது. நமது நாட்டில் அக்கொள்கையிற் சிறந்து விளங்கும் அறிஞர் பெரும்பான்மையோரில்லை. முன்னை நாளில் மேலைநாட்டுத் தத்துவர் தமக்கு வேறாக உள்ளனவும், புலன்களுக்குப் பொருளாகக் கூடியனவுமாக உள்ள பூதங்களையே தங்கூர்த்தமதியால் ஆராய்ந்து, அகமுக ஆராய்ச்சியில் தலைப்படாது, சித்துப் பொருளுண்மையை மறுத்துப் பற்பல நாத்திக நூல்களை எழுதினர் அந்நூல்களே மேலை நாட்டிற் பெரிதும் பரவி வந்தன.

நாத்திக நூல்களை வரைந்து விடுத்த மேலைநாட்டுத் தத்துவர், ஆராய்ச்சியில் முதிர்ந்த அறிஞர் என்பதை யான் ஏற்கிறேன். அன்னார் புறப்பொருளையே பெரிதும் ஆராய்ச்சி செய்தமையான், அகப் பொருளுண்மை அவருக்குத் தோன்றாது போயிற்று. பூதபௌதிக ஆராய்ச்சியாதல் பிற ஆராய்ச்சியாதல் செய்யாது, 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்னும் மூட உணர்ச்சி கொண்டு திரிவோரை, மரம்-கல்-என்றே ஒதுக்குதல் வேண்டும். பூத பௌதிக நூல் ஆராய்ச்சியில் தலைசிறந்து, நாத்திகம் பேசுவோரது அறிவு, உண்மைகாணும் அவாவில் தோய்ந்து நிற்கும். அவ்வாராய்ச்சி யில்லாதார் அறிவு, விளக்கமின்றித் திண்மையாகி, மயக்குற்றுக், கட்டுப்பட்டு நுண்ணிய பொருள்களை விளங்கிக் கொள்ளுந் திறனிழந்து கிடக்கும். இவ்வறிவுடைய 'பெரியோர்கள்' ஒழுக்க ஈனர்களாக உலகில் திரிந்து மாண்டு போவார்கள்.

மேலைநாட்டு நாத்திக நூல்கள் பல, கீழை நாட்டு ஆத்திக நூல்களுக்கு ஆக்கந் தேடுவன என்பது எனது அநுபவத்திற் கண்ட உண்மை. மேலைநாட்டு நாத்திகப் பெரியோர் புறப் பொருளை ஆராய்ந்து கண்ட உண்மையை ஆதாரமாகக் கொண்டு, அவர் பின் வந்தார் சிலர், அதை ஆராய்ச்சிசெய்து, இப்பொழுது சடப்பொருளுக்கு வேறாக ஒரு சித்துப் பொருளுண்டு என்னும் முடிவிற்கு வந்திருக்கின்றனர். பூதபௌதிக தத்துவ நூலில் தேர்ச்சி பெற்ற ஸர் ஓவியர் லாட்ஜ் முதலியோர் கண்ணுக்குப் புலனாகுஞ் சடப்பொருளுக்கு வேறாக மற்றுமொரு பொருளின் இருத்தலை நிறுவிக் காட்டியிருக்கின்றனர் இத்தகைய அறிஞர் நூல்கள் பரவப் பரவ, மேலை நாடும் ஆத்திக பூமியாக மாறும்.

**முதலாளியின் ஆக்கம்**

இப்பொழுது மேலைநாட்டிலும் ஆத்திக நூல்கள் பல எழுதப்படுகின்றன. கடவுளுண்மை மறுக்கும் 'அறிஞர்' தொகை ஆண்டுஞ் சுருங்குந் தோற்றம் புலனாகியிருக்கிறது. பூத பௌதிக ஆராய்ச்சி மேம்பாட்டான், இயந்திர வாயிலாக, மக்கள் வாழ்க்கை நடைபெறும் அநாகரிகம் வலுத்தமையே, நாத்திகத்துக்கு மேலைநாடு இரையாதற்குக் காரணம். இயந்திரங்களும், விதவிதமான கப்பல்களும், வேறு பல புதுமைக் கருவிகளும் செல்வத்தை ஒரு கூட்டத்தவர் பக்கம் திரட்டித் தள்ளுகின்றன. அக்கூட்டத்தவரே முதலாளிகள் எனப்படுவர். அவ்வினத்தவர் வழியே அரசுகள் நடைபெறுகின்றன. அவ்வரசுகள் வாணிப வாயிலாகச் செல்வம் பெறவேண்டியும், இயந்திரங்களால் செய்யப்படும் பொருள்களை விலைப்படுத்த வேண்டியும் அடிக்கடி தங்களால் நடத்தப்படும் பத்திரிகைகள் மூலமாகப் போர்களைக் கிளப்பி மகாயுத்தங்களை நடத்துகின்றன; யுத்தங்களில் வெற்றி பெறும் பொருட்டுப் பூத பௌதிகக் கருவிகளைப் புதிது புதிதாகக் காண்பதில் அறிவைச் செலுத்தி உலகத்தைப் பாழ்படுத்துகின்றன.

முன்னே (1914-18) நடைபெற்று ஓய்வடைந்த ஐரோப்பா யுத்தம் உலகத்தின் கண்களை ஒரோர் வழித் திறந்தது. பின்னே (1939-44) நடந்த உலகப் போர் கண்களை நன்கு திறந்து வருகிறது. போரைக் கிளப்புவோர் முதலாளிகள் என்றும், போர் புரிந்து அமர்க்களத்தில் மடிவோர் தொழிலாளர் என்றும் உலகம் உணர்ந்துவிட்டது. இவ்வுணர்ச்சியால் முதலாளியின் கருவியாக இனித் தொழிலாளி உழலமாட்டான். தொழிலாளியின்உணர்ச்சி, முதன்மையை (Capitalism) அழிப்பதாகும்.

முதன்மை நாசத்தால் உலகத்தில் சண்டை யொழிந்து, சுதந் திரம் - சகோதரத்துவம் - சமத்துவம் ஏற்படும் அப்பொழுதே மேலைநாடு ஆத்திகத்துக்கு அடிகோலும் இப்பொழுது மேலை நாட்டில் சில பகுதிகளில் ஆத்திகக் கண் மலர்கிறது. அப்பகுதி யில் ஆத்திக உணர்ச்சி பெருகப் பெருகப், புறமுக உணர்ச்சி அருகி அருகி அகமுக உணர்ச்சி இயல்பாகவே தோன்றும். அப்பொழுது ஆண்டெழும் ஆராய்ச்சியால் சடப்பொருளுக்கு வேறாகச் சித்துப் பொருள் ஒன்றிருப்பது விளங்கும்.

**சடமும் சித்தும்**

ஐந்து பூத காரியமாக உள்ள உடலுக்கும், கரணத்துக்கும், மனத்துக்கும், பிராணனுக்கும் வேறாக மற்றுமொரு பொருள் இருத்தலெங்ஙனம் என்று எண்ணி எண்ணிக் கண்ணீர்விடும் சகோதரர்களுக்கு நான் இரங்குகிறேன். நம் முனிவரர் எழுதிவைத்துள்ள உபநிடதங்களையும், மேலைநாட்டு அறிஞர் எழுதிவரூஉம் அறிவு நூல்களையும் ஆராய்வோர் உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கப் பெறுவர். ஐந்து பூதக் கூட்டுறவால் தோன்றும் உணர்ச்சியே 'நான்' என்று கொள்ளும் 'பெரியோர்', ஐந்து பூதங்களுள் எப்பூதத்தினின்றும் அவ் வுணர்ச்சி தோன்றியது என்னும் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். மஞ்சளையும் சுண்ணத்தையும் குழைத்தால் ஒருவகைச் சிவப்பு நிறம் உண்டாவதையும், வெற்றிலை பாக்கு சுண்ணம் என்னும் மூன்றையும் ஒற்றி மெல்லுங் காலத்து ஒருவிதச் சிவப்பு நிறம் உண்டாவதையும் அப் 'பெரியார்' எடுத்துக் காட்டுவர். அஃதுண்மையே. அதை மறுப்பாரில்லை. உள்ளதினின்றும் ஒன்று தோன்றுமேயன்றி இல்லதினின்றும் ஒன்று தோன்றுவ தில்லை என்பது மாறாத உண்மை. புதிதாகத் தோன்றிய சிவப்பு நிறம், உள்ள ஒன்றினின்றே தோன்யிருத்தல் வேண்டும். பாழி னின்றும் (சூந்யத்தினின்றும்) ஒன்றும் தோன்றாது. மஞ்சளில் கரந்து நின்ற சிவப்பு நிறமும், பாக்கில் கரந்து நின்ற சிவப்பு நிறமும், பிறபொருள் கூட்டுறவால் வெளிப்பட்டுத் தோன்று கின்றன. அதுபோல் எந்தப் பூதத்தினின்றும் 'நான்' என்னும் உணர்ச்சி கரந்து நின்று தோன்றுகிறது என்பது ஆராயற்பாலது.

ஐந்து பூதமும் சடம் என்பதை மறுப்பாரில்லை. அச் சடத்தினின்றும் தோன்றுவதும் சடமாகவன்றோ இருத்தல் வேண்டும்? சடப்பொருளாகிய மஞ்சள் பாக்குகளினின்றுந் தோன்றுஞ் சிவப்பு நிறமுஞ் சடத்துவ குணமுடையதே. அதேபோல ஐந்து பூதத்தினின்றும் 'நான்' என்னும் உணர்ச்சி தோன்றுவதாயின், அது சடமாகவன்றோ இருத்தல் வேண்டும்?

'நான்' என்பது சடமாக இருப்பின், மனிதனது அறிவு, ஆராய்ச்சியிற் புகாது, கிடந்த இடத்திலேயே கிடத்தல் வேண்டும். அஃது அங்ஙனமிருத்தல் காணோம். ஆதலால், 'நான்' என்னும் அறிவு (சித்) ஐந்து பூதக் கூட்டுறவால் உண் டாகும் ஒரு புதிய குணம் என்று கூறுவது பிழையேயாகும்.

**சிறுகதை**

மனிதர் தம்மிடத்திருந்து, தம்மை நடாத்தும் ஒன்றில் ஐயமுறுவது என்ன அறிவுடைமையோ தெரியவில்லை. எல்லா வற்றையும் ஆராய்ந்து, அவ்வாராய்ச்சிக்குக் கருவியாக நின்று துணைபுரிந்து வருந்தன்னை மறந்து விடுவதன் அறியாமையை என்னென்று கூறுவது? ஈண்டு யான் இளமையில் வாசித்த ஒரு சிறு கதை எனது நினைவுக்கு வருகிறது. அக்கதை வருமாறு:-

ஓர் ஊரில் ஒரு விழா நடைபெற்றது. அதைக் காண அவ்வூருக்கணித்தாக உள்ள மற்றோர் ஊரிலிருந்து நூறு பேர் புறப்பட்டனர். அவருள் சிலர் தளர்ந்தும் மெலிந்தும் நடந்தனர்; சிலர் விரைந்து நடந்தனர். இங்ஙனம் முன்னும் பின்னுமாக நடந்து பலர் ஒரு குளக்கரை சேர்ந்தனர். அவர் பின்வந்த மற்றவரும் அக்கரை சேர்ந்தனர். அக் கூட்டத்தவருள் ஒருவர் 'நாம் நூறுபேரும் வந்து சேர்ந்தோமா?' என்று கேட்டனர். அப்பொழுது ஒருவர் எல்லாரையும் எண்ணி எண்ணித் தம்மை விடுத்து, 'அந்தோ! தொண்ணுற்றொன்பது பேரே இருக் கின்றனர். ஒருவரைக் காணோம்' என்று கூக்குரலிட்டனர். இன்னொருவர் அவரை மற்றுமொருமுறை எண்ணுமாறு தூண்டினர். பழையபடியே அவர், தம்மை விடுத்து எண்ணி, 'தொண்ணுற்றொன்பது பேரே' என்று கூவினர். அவர், தம்மை விடுத்து எண்ணுவதைக் கண்ணுற்றுக் கொண்டிருந்த வேறோர் நண்பர், 'தோழனே! உன்னோடு சேர்த்து நாம் நூறு பேர் இருக்கிறோம்' என்று உரத்த குரலோடு அறைந்தனர். அது கேட்டு உண்மை கண்ட நண்பர் நாணமடைந்தார்.

தனக்குப் புறமாக உள்ள எல்லாப் பொருளையும் ஆராய்ச்சி செய்து, 'தோல் நானா', 'நரம்பு நானா' 'இரத்தம் நானா', 'நிணம் நானா' என்று தன் உடலுறுப்புக்களைக் கூறிட்டாய்ந்து, 'நான் என்பதைக் காணோமே' என்று நாத்திகம் பேசுவோன் கூற்றுக்கு இக்கதையை ஒப்பிடலாம். உலகத்தையும், உடலையும், உறுப்பையும் ஆராயும் அறிவுடைய இவன், அவ்வாராய்ச்சி செய்யக் கருவியாக உள்ள ஒன்றை மறந்தது எவருடைய அறியாமை? எல்லாவற்றிற்குங் காரணமாக நின்று

*துணைபுரியும் அறிவை (நான் என்னும் என்னை) மறந்து, அதற்கு இன்மை கூறுவோர், மேற்போந்த கதையையாவது உற்று நோக்கி உறுதி பெறுவாராக.*

**பளிங்கனைய சித்து**

*இச் சிற்றாராய்ச்சியினால் 'நான்' என்பது, உடலன்று, கரணமன்று, இந்திரியமன்று; சுருங்கக் கூறின் சடமன்று என்பது ஏற்படுகிறது. 'நான்' என்பது மாயாகாரியமாகிய உடலுக்கு வேறாயிருப்பது, இதனை,*

***வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை***
***வசமெனவே அத்துவா மார்க்க நோக்கி***
***ஐந்துபுல னைம்பூதங் கரண மாதி***
***அடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை***
***இந்தவுடல் அறிவறியா மையுநீ யல்லை***
***யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று***
***பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்***
***பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேம்யாம்***

*எனவருந் தாயுமானார் திருவாக்கானுணர்க.*

**பலதிறக் கருத்துக்கள்**

*'நான்' என்பதைச் சித்தாகக் கொள்வோருள்ளும் பலதிறக் கருத்து வேற்றுமைகள் உலவி வருகின்றன. 'நான்' என்பதைக் கடவுள் கூறாக்கொண்டு, அதற்கு வேறாக ஓர் அறிவு - சித் - இல்லை என்னுங் கொள்கையுடையாரையும், 'நான் என்பது சீவான்மா, அதற்கு வேறாகப் பரமான்மா என்பதொன்றுளது' என்னுங் கொள்கையுடையாரையும், 'சீவான்மா பரமான்மா என இரண்டு சித்துக்கள் வேறுபட்டிருப்பினும் ஒன்றை விட்டொன்று பிரிந்து நிற்பதில்லை' என்னுங் கொள்கையுடையாரையும் உலகம் பெற்றிருக்கிறது. சீவான்மா பரமான்மாக்களைப் பற்றி மற்றும் பல கொள்கை யுடையாரும் இருக்கலாம். இவ் வாதங்களைச் சங்கரர், இராமாநுஜர், நீலகண்டர், மத்துவர், சிவஞானமுனிவர் முதலிய அறிஞர் எழுதியுள்ள மாபாடியங்களிற் காணலாம். இவரனைவரும் 'நான்' என்பது 'சடமன்று' என்ற கொள்கையுடையவராவர். இவருக்குள்ள பிற வேற்றுமைகளை ஈண்டுக் கருத வேண்டுவதில்லை.*

**ஆன்மாவின் முன்னிலை**

*'நான்' என்னும் ஆன்மா - உயிர் - உடலைப் பெறுதற்கு முன்னர், அறிவும் செயலும் விளக்கமுறாமல், பாம்பால் தீண்டப்*

பெற்ற மனிதனைப் போலக் கிடந்திருத்தல் வேண்டும். பாம்பு தீண்டிய மனிதனிடத்து உயிர் இருப்பினும் அவன் உணர்ச்சி யின்றிக் கிடக்கிறான். அதனால் அவனை உயிர் நீங்கிய பிணம் என்று சொல்லுதல் முடியாது. அவன் அறிவு, நஞ்சால் விழுங்கப் பட்டிருக்கிறது. அதனால் அவன், அறிவு செயல் விளக்கமின்றிக் கிடக்கிறான். பாம்பால் தீண்டப்பெற்றவன் நிலையை, உயிர் மாயாவுடல் தாங்குதற்கு முன்னர்ப் பெற்றிருத்தல் வேண்டு மென்பது முடிந்த கொள்கையா யிருக்கிறது. இக் கருத்தையே தாயுமான சுவாமிகள்,

**காரிட்ட ஆணவக் கருவறையி லறிவற்ற**
**கண்ணிலாக் குழவி யைப்போல்**
**கட்டுண் டிருந்தஎமை வெளியில்விட் டல்லலாங்**
**காப்பிட் டதற் கிசைந்த**
**பேரிட்டு மெய்யென்று பேசுபாழும் பொய்யுடல்**
**பெலக்கவிளை யமுத மூட்டிப்**
**பெரியபுவ னத்தினிடைப் போக்குவர வுறுகின்ற**
**பெரியவிளை யாட்ட மைத்திட்**
**டேரிட்ட தன்சுருதி மொழிதப்பி னமனைவிட்**
**டிடருற வுறுக்கி யிடர்தீர்த்**
**திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்**
**இசைந்து துயில் கொண்மி னென்று**
**சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே**
**சித்தாந்த முத்தி முதலே**
**சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே**
**சின்மயா னந்த குருவே**

என்னுந் திருப்பாசுரத்தில் விளக்கமுறுக் கூறியுள்ளார்கள்.

### கடவுள் துணை

அறிவுஞ் செயலும் விளங்கித் தோன்றாத நிலையைப் பெற்றிருந்த (நான்) உயிர், தானே தன் முயற்சியால் தன் அறிவுஞ் செயலும் விளங்குமாறு செய்துகொள்ளல் இயலாது. அறிவுஞ் செயலும் விளங்காது அறியாமையால் விழுங்கப்பெற்றுள்ள உயிர், மாயாவுடல் தாங்கப் பெற்றதும், அறிவுந் தொழிலும் விளங்கப் பெறுகிறது. அறிவு-செயல்-விளக்கத்துக்குக் கருவி யாயுள்ள மாயைதானே இயங்கிச் சென்று உயிரைப் பற்றாது. என்னை? மாயை சடமாகலின் என்க. ஆதலால், மாயாவுடல் என்னுங் கருவிகொண்டு, உயிரின் அறியாமையைக் களைய

வல்ல பொருள், சடம் அல்லாததாயும், அறியாமை என்னும் இருள் செறிந்த உயிர் அல்லாததாயும் இருத்தல் வேண்டும். அப்பொருளே எல்லாவற்றையுங் கடந்தும், (மாயையிலும் உயிரிலும்) எல்லாவற்றிலுங் கலந்தும் நிற்குங் கடவுள் என்பது. அக்கடவுள் அறியாமையால் விழுங்கப் பெறாது, அறிவு வடிவாயிருத்தலால் அஃதென்றும் அருள் வடிவா யிலங்கிக் கொண்டிருக்கும். அருள் வடிவாயிலங்குங் கடவுள், அறியாமை என்னும் இருளால் மூடப் பெற்று அறிவு செயல் முகிழ்த்த லின்றிக் கிடக்கும் உயிரைத் தன்னைப் போல் ஆக்க வேண்டி, மாயா உடலை அதற்கு (உயிருக்கு) வழங்குகிறது. உயிர், ஆண்டவனருளால் உடலைத் தாங்கப் பெற்றதும், அதற்குச் சிற்றறிவும் சிறு தொழிலும் அரும்பி வளர்ந்து வருகின்றன. மையால் மறைக்கப் பெற்ற கண்ணாடியைச் சிற்றுளியால் கீறினதும், அதன் மாட்டுச் சிறிது வெண்ணிறந் தோன்று கிறதன்றோ? அதேபோல இறைவன், தனு கரண புவன போகங் களை உயிருக்கு வழங்கியதும், அதன் மாட்டுச் சிற்றறிவுஞ் சிறு தொழிலும் முகிழ்க்கின்றன.

தண்ணீரைப் பாண்டத்தில் விட்டுக் காய்ச்சினால், அது கொதிக்கிறது. அக்கொதிப்பு எங்கே யிருந்து தோன்றுகிறது? நெருப்பின் வெம்மைக் கூட்டுறவால் தண்ணீரில் கரந்து நின்ற கொதிப்பு இப்பொழுது வெளி வருகிறது. நெருப்பிலிருந்து கொதிப்பு உண்டாகிறதென்று கூறுவது தவறு. தண்ணீரில் கரந்து கலந்திருந்த கொதிப்பு, வெம்மைக் கூட்டால் வெளித் தோன்றுகிறது. இதுபோல, உயிரில் அடங்கிக்கிடந்த செயல் (கருமம்) மாயையின் கூட்டுறவால் முகிழ்க்கிறது. விரிக்கிற் பெருகும்.

**கடமை**

உடலோட கூடிய உயிர், தன் சிற்றறிவைக் கொண்டு தன்னை ஆராய்ந்தால், தான் உடலன்று என்பது நன்கு புலனாகும். இவ்வாராய்ச்சி உயிரின் அறிவு விளக்கத்தைப் பொறுத்து நிற்பது.

ஆண்டவன் உயிரின் அறிவை விளக்கும் பொருட்டு அதற்குப் படிப்படியாக மரம், புல், விலங்கு, மனிதன் முதலிய வடிவங்களை வழங்கி வருகிறான். அவ்வடிவங்களுக்கேற்ப உயிர் சிறிது சிறிதாக அறிவுந் தொழிலும் விளங்கப் பெறுகிறது. நம் முன்னோர் உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவுவரை வகுத் திருப்பது ஈண்டுக் கருதற்பாற்று.

உயிர் மனித உடல் தாங்கும்போது அதன் நிலையை அறிவிக்கும் ஆறாவதறிவு அரும்புகிறது. அவ்வறிவின் துணை யால் மனிதன் கடவுள் நிலையடைதல் வேண்டும். மனிதன் கடவுள் நிலையைக் கலைஞானத் தளவில் உணர்வதால் எவ் விதப் பயனும் விளையாது. மனிதன் கடவுள் நிலையை மெய்ஞ் ஞானத்தால் பெறுதல் வேண்டும். உலகத்தில் எத்தனை வாய் வேதாந்திக ளிருக்கிறார்கள்? அவர்களாலென்ன பயனுண்டு? மனிதன், ஆண்டவனருளால் பெற்ற அறிவைக் கொண்டு, தன் மாட்டு நிகழுஞ் செயல்களை அன்றாட வாழ்வில் தூய்மைப் படுத்திக் கொள்ளல் வேண்டும். ஈண்டே கடமை என்பது ஏற்படுகிறது.

# 3. கடன்

கடன் என்பதும் கடமை என்பதும் ஒன்றே. மாயா காரிய மாகிய உடலைத் தாங்குதற்கு முன்னர், உயிர், அறிவுந் தொழிலும் விளக்கமுறப்பெறாமையான், அதற்கு அந்நிலையில் கடமை என்பது ஏற்படவில்லை. கடமை என்பது உயிர் உடலோடு தொடர்பு கொண்டுள்ள நிலையில் ஏற்படுவது. அக்கடமை பல திறப்படும்.

**வாழ்க்கை விதம்**

மனிதனது கடமை பல திறமாகப் பகுக்கப்படலாம். நம் முன்னோர் மனிதர் வாழ்க்கையை நான்கு கூறிட்டு, அவ்வவ் வாழ்க்கையில் செய்யத்தக்க கடமைகளையுந் தொகுத்துள்ளனர். நான்கு கூறுகள் பிரமசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன. இந்நான்கும் அன்பின் படிகளாகும். பிரம சரியம் அன்புக்குரிய கல்வி பயில்வது; கிரஹஸ்தம் கற்ற கல்வியைச் செயலிற் பெற்று அன்பை உணர்வது; வானப்பிரஸ்தம் கட்டுப் பட்ட அன்பில் நின்று தொண்டு புரிவது; சந்நியாசம் கட்டற்ற அன்பில் நின்று எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகு வது. இவை அடங்கப் பெற்ற ஒன்றே வாழ்க்கை என்பது.

இந்நான்கும் எல்லா நாடுகட்கும் பொதுவாயிருப்பன. ஒவ்வொருவரும் இந்நான்கும் அடங்கிய வாழ்க்கையில் நின்று ஒழுகுதல் அறம். இது பொதுமை அறம். இவ்வறத்துக்குச் சில புறனடைகளுமுண்டு.

ஒவ்வொரு நாட்டிலும் மனிதர் இளமையில் கல்வி பயில்கின்றனர் வயதில் திருமணஞ் செய்கின்றனர்; அதற்குமேல் வானப்பிரஸ்தமோ சந்நியாசமோ ஏற்கின்றனர். இக்காலத்தில் பின்னிரண்டும் பெரிதும் அருகிவிட்டன என்று துணிந்து கூற லாம். முன்னிரண்டும் ஒருவாறு நிலவிக் கொண்டிருக்கின்றன.

நம் முன்னோர் மக்கள் கடமையை நான்கு கூறிட்டிருப்பது உன்னத்தக்கது. இந்த நான்கில் அடங்காத மக்கள் கடமைகள் இருத்தல் அரிது. மக்கள் கடமைகளெல்லாம் நான்கில் அடங்கிவிடும்.

**பணி மயம்**

மனிதர் அறிவுஞ் செயலும் விளக்கமுற்று, வாழ்க்கையில் நுழைந்து, தங் கடமையைச் செய்து வருங் காலத்தில், அவர்தம் வினைகள் யாவும் பணி மயமா யிருப்பதைக் காண்பர். என்று கடமை ஏறபட்டதோ அன்றே பணியும் ஏற்பட்டது. எனவே, மனிதரது கடமை, பணியைப் பற்றியே கிடக்கிறது. மனிதர் மேற்கொள்ளும் ஒவ்வொரு கடமையிலும் பணி இருப்பது கண்கூடாக விளங்குவதொன்றாகலான், அதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. ஆதலால், இனிப் பணிமேற் செல்கிறேன்.

# 4. பணி

ஈண்டுப் பணி என்பது முதனிலைத் தொழிற்பெயர்ப் பொருள் கொண்டு நிற்கிறது. பணி, வணக்கம், தொண்டு, வேலை, சேவை - இவை யாவும் ஒரு பொருளையே தருவனவாம். கடமை வழிபற்றி நிகழும் பணி பல திறப்படும். கடவுள் முதல் தாவரமீறாக உள்ள எல்லாம் பணி செய்த வண்ணமிருக்கின்றன. பணி செய்யாத உயிர் இல்லை என்று கூறுவது மிகையாகாது.

**இறை பணி**

எல்லாம் வல்ல இறைவன் என்றும் பணி ஆற்றிக் கொண்டிருக்கிறான். ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐம்பணிகளையும் இடையீடின்றி ஆண்டவன் நிகழ்த்திய வண்ணமிருக்கிறான். அவனுக்கு ஓய்வே இல்லை. உலகில் உள்ள உயிர்களுக்கு ஓய்வு உண்டு உறக்கம் உண்டு. ஆண்டவனுக்கோ ஓய்வுமில்லை உறக்கமுமில்லை. ஆண்டவனைப் போலப் பணி புரிகிறவர் ஒருவருமில்லை. ஆண்டவன் தன் பணியைச் சிறிது நிறுத்துவானாயின் உலகங்களின் நிலைகள் குலையும்; ஐம்பெரும் பூதங்களின் தொழில்கள் நடைபெற மாட்டா; உயிர்களெல்லாம் மாயும்; அணுக்களைக் கூட்டுஞ் சக்தியும் பிரிக்குஞ் சக்தியும் தன் தன் ஆதாரத்தையிழந்து தளர்ந்து ஒழியும். இறைவன் ஒருவன் பணியால், சராசரங்களெல்லாம் ஒருநிலையில் நின்று தத்தம் பணியைச் செய்கின்றன. இறைவன் இத்துணைப் பணியைச் செய்தும், அப்பணிக்கென ஒருவிதக் கைம்மாறுங் கருதுவதில்லை.

**உலகம் பணிமயம்**

இனி உலகை நோக்குழி உலகத்துள் அனைவரும் பணி செய்கின்றனர்; அனைத்தும் பணிசெய்கின்றன. அரசுக்கும், அதன் பரிவாரங்களுக்கும் உள்ள பணிகள் பலப்பல. நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன, தாவரம் முதலிய யாவும் தத்தமக்குரிய பணிகளை முறையாக நிகழ்த்தியே வருகின்றன. உலகத்தை மனத்தில் சித்திரப்படுத்திச் சிறிது நேரம் உற்றுநோக்கின், ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாக உள்ள எல்லா உயிர்களின் பணியும்

அப்பணிக்குக் காரணமாக உள்ள ஞாயிறு முதலிய கோள்களின் பணியும், எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ள கடவுளின் பணியும் இனிது விளங்கும். எல்லாம் பணிமயமாயிருப்பதை அறிஞர் உற்று நோக்கி உண்மை உணரல் வேண்டும்.

### அஃறிணையுலகும் கடவுளும்

ஆண்டவன் பணியும், மற்ற அஃறிணைகளின் பணியும் என்றும் ஒரு பெற்றியனவாகவும், மாறுதலின்றியும் நடைபெற்று வருகின்றன. ஆண்டவன் பணிகள் யாவும் நியதி வழி நடைபெறு கின்றன. நியதிக் கோடாகிய இயற்கை என்றும் யாண்டும் ஒரு தன்மையதாகவே தன் செயல்களை நடத்தும். நியதிவழி இயற்கை தொழிற்படலால், அதனைக் காரியப்படுத்துங் கடவுள், உயிர்கள் பொருட்டு ஆற்றும் பணியும் என்றும் ஒரு பெற்றியதாய் நிகழ்ந்து வரும். இதன் விரிவைத் தத்துவ நூல்களிற் காண்க.

அஃறிணையின் பாற்பட்ட மரம், செடி, கொடி, புள், விலங்கு முதலியன என்றும் ஒரே தன்மையனவாய் வாழ்ந்து வருவது கண்கூடு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மரம் செடி கொடிகள் எவ்வாழ்வைப் பெற்றிருந்தனவோ, அவ்வாழ்வையே இன்னும் அவை பெற்றிருக்கின்றன. பறவைகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எவ்விதக் கூடுகள் கட்டினவோ, அவ்விதக் கூடுகளையே இப்பொழுதும் அவை கட்டுகின்றன. விலங்குகள் புதிதாக ஒன்றை இது காறுங் காணவில்லை. அவைகள் தங்களுக்கென்று புதுப் புது மாடிகள் கட்டுவதில்லை. வேறு எவ்விதப் புதுத் துறைகளையும் தங்கள் வாழ்விற்கென அவைகள் கோலுவதில்லை. அவைகளின் வாழ்வு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எந்நிலையிலிருந்ததோ, அந்நிலையி லேயே இன்னும் இருந்து வருகிறது.

ஆண்டவன் முற்றறிவு உடையவனாகலானும், அஃறிணைப் பொருள்களுக்குப் பகுத்தறிவு இன்மையானும், முறையே அவன்றன் பணியும் அவைகளின் பணியும் மாறுதலின்றி என் றும் ஒரு பெற்றியனவாய் நடைபெறுகின்றன.

### மனிதர் நிலை

இவ்விரண்டிற்கும் இடைப்பட்டுள்ள மக்களுக்கு முற்றறிவு இன்மையானும், பகுத்தறிவு உண்மையானும் அவர்களின் எண்ணம்-செயல்-தொழில்-பணி-நாளுக்கு நாள் வளர்ந்தும் தேய்ந்தும் பலவித மாறுபாடுகளைப் பெற்று வருகின்றன. மனிதர் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னர் எப்படி யிருந்தனர்? ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எவ்வாறிருந்தனர்? இப்பொழுது

*எந்நிலையிலிருக்கின்றனர்? ஈண்டு மனிதர் என்றது சிறப்பாக அவரது வாழ்க்கையைக் குறிப்பதாகும்.*

*மனிதர், மர நிழலில் வாழ்ந்த காலமுண்டு; குடிசைகளில் வாழ்ந்த காலமுண்டு; கருவி தாங்காத காலமுண்டு. அவருக்கு நெருப்பை உண்டாக்கும் முறை தெரியாத காலமுண்டு. இயற்கைப் பொருள்களைப் பதன் செய்யாது, அவற்றையே, உண்டு கழித்த காலத்தையும் மனிதர் கண்டிருக்கின்றனர் இப்பொழுதோ மனிதர், மாட மாளிகைகளைக் கட்டுகின்றனர்; கப்பல் கட்டுகின்றனர்; வானத்தில் பறக்கின்றனர்; தண்ணீருக் குள் சென்று போர் புரிகின்றனர் மனிதரால் காணப்பட்டு வரும் அரிய புதுமைகளை என்னென்று வருணிப்பது! அச்சுத் தொழிலின் அருமையும், புகைவண்டியின் பெருமையும், மின்சாரத்தின் வியப்பும் வருணனைக்கு எட்டாதன. ஒருவர் வீடு கட்டுவதுபோல் மற்றொருவர் கட்டுவதில்லை. இன்று ஒருவர் ஒன்றைக் கண்டால், நாளை மற்றொருவர் அதை வேறுவிதமாக வளர்க்கிறார். மனிதர் அறிவுத்திறனை என்னென்று கூறுவது?*

*இவை யெல்லாவற்றிற்குங் காரணமாக நிற்பது மனித ரிடத்தில் விளக்கமுற்றுள்ள ஆறாவது அறிவேயாகும். இவ் வறிவை மனிதர் நன்னெறியில் செலுத்தல் வேண்டும். சில இடங்களில் இவ்வறிவு தீநெறியில் செலுத்தப்படுகிறது. அதனால் மன்பதைக்குக் கேடு விளைகிறது.*

*மனிதர்பால் அருமையாக அரும்பியுள்ள பகுத்தறிவி னின்றும் முகிழ்க்கும் பணி பலதிறப்பட்டு நிற்கிறது. சிலர் துறவொழுக்கம் பூண்டு தமக்கேற்ற பணியை ஆற்றுகின்றனர்; சிலர் ஆட்சி புரிகின்றனர்; சிலர் உழுது பயிரிடல் முதலிய தொழில்களை நிகழ்த்துகின்றனர்; சிலர் திருடுகின்றனர்; சிலர் கொள்ளையிடுகின்றனர்; சிலர் கொலை செய்கின்றனர். எனவே, உலகில் நற்செயல்களும் தீச்செயல்களும் நலிந்து வருகின்றன. ஆதலால், மனிதர் செய்யும் பணிகளுள் எதைக் கொள்வது, எதைத் தள்வது என்னும் ஐயம் உலகில் அடிக்கடி நிகழ்கிறது.*

### இருவிதப் பணி

*மனிதர் செய்யும் பணியை இரண்டு கூறாகப் பிரிக்கலாம். ஒன்று பயன் கருதும் பணி. அதாவது காமியப் பணி; மற்றொன்று பயன் கருதாப் பணி. அதாவது நிஷ்காமியப் பணி. பின்னதைச் செய்வோர் கடவுட்டன்மை பெற்றவராவர். அவர் செழுமையுற்று ஓங்கி வளர்ந்து கடவுள் நிலை எய்துவர். அவரைக் கடவுளாகவும் வழிபடலாம். முன்னதை அதாவது காமியப்பணியைச் செய்*

வோர் பல துன்பங்கட்கு ஆளாகி வருந்துவர். அவர் தம்நிலை குலைந்து, கீழ்ப்பட்டுள்ள விலங்கு புள் முதலிய அஃறிணைப் பொருள் நிலையை அடையினும் அடைவர். பகுத்தறிவைப் பண் படுத்த இயலாத அஃறிணை உடலங்களைத் தாங்கிய பின்னர், அரிய மனித உடல் தாங்கப் பெறுவோர், தம் பகுத்தறிவை நற்றுறையில் நிறுத்தி வினையாற்றாது, அதைக் காமியப்பணி யாந் தீத்துறையிலாட விடுவது எத்தகைய அறியாமை? மனிதப் பிறவி தாங்கிய பகுத்தறிவு பெற்றுள்ள செல்வரே! எச்சரிக்கை! எச்சரிக்கை!! இன்னும் உலகில் நிட்காமியப்பணி நிகழ்த்துவோர் தொகை மிகக் குறுகியே நிற்கிறது; காமியப் பணி செய்வோர் தொகை பெருகியே நிற்கிறது! என்ன அறியாமை!

### தெய்வப் பணி

நம் முன்னோர் உலகப் போக்கை உணர்ந்தே உலகத்தை நிட்காமியப் பணிவழி நிறுத்தப் பல முறைகளைக் கோலிச் சென்றனர். அவற்றுள் சிறந்தது தெய்வ வழிபாடு. நிட்காமியப் பணி மக்களிடைக் கனிவதற்குக் நம்மவர் தெய்வ வழிபாட் டையே கொண்டனர். காரணம் யாது?

அருள் வடிவாக உள்ள கடவுள் பணிகளெல்லாம் கைம் மாறு கருதாதன. அவ்வியல்புடைய ஒன்றை ஒருவர் இடை யறாது எண்ணுவராயின், அதன் இயல்பு அவரிடத்திலும் படியும். அவர் கடவுளைப் போலக் கைம்மாறு கருதாப் பணி செய்து நின்மலராவர்.

இன்னோரன்ன காரணம் பல பற்றியே நம் முன்னோர் இறைபணியை முதலாவதாக வைத்தனர். விடுதலை விரும்பும் அனைவரும் நிட்காமியப் பணி செய்தே தீரல் வேண்டும். காமியப்பணி செய்வோருக்கு அடிக்கடி மனக் கலக்கமும் பிற துன்பங்களும் நேர்ந்துகொண்டே போகும். ஆதலால், உலகில் பிறந்த மக்கள் அனைவரும் நிட்காமியப் பணி ஆற்றக் கடமைப் பட்டிருக்கின்றனர்.

### ஆலயப் பணி

நிட்காமியப்பணி வளர்ச்சிக்கென ஏற்பட்ட தெய்வ வழிபாடுகள், பிற்றை ஞான்று காமியப்பணிக்கும், பிற பணிகளுக் கும் நிலைக்களமாகிவிட்டன. நம் முன்னோர் நிட்காமியப் பணியை வளர்க்கும் தெய்வ வழிபாட்டை மூர்த்தி வழியாகவும், தல வழியாகவும், தீர்த்த வழியாகவும் நிகழ்த்தி வந்தனர். இந்தியாவில் தேவாலயங்கள் நிரம்பியிருப்பதன் காரணத்தை அறிஞர் ஓர்தல் வேண்டும். ‘எல்லாம் கடவுள் வடிவம்’ என்னும்

ஞானம் பிறந்த இந்தியாவில், உருவ வழிபாட்டிற்குரிய கோயில்கள் மல்கியிருப்பது ஆராயத் தக்கது. உபநிடதங்களை ஓதிய முனிவரர் - அவைகளுக்குப் பாடியங்கள் வரைந்த அறிஞர் - ஆலயப் பணி செய்திருக்கின்றனர். இந்தியரல்லாத மற்ற நாட்டவரும் ஆண்டவன் கோயிலென ஒரு தனியிடம் வகுத்தே கடவுளை வழிபட்டு வருகின்றனர்.

கடவுள் நீக்கமற யாண்டும் நிறைந்து நிற்பவர். அவரை வழிபடுதற்கு ஓரிடம் வகுக்கப்படுவதன் நோக்கம் யாது? அந்நோக்கம் மக்கள் மனத்திடை நிட்காமியக் கருமத்தை - பணியை - பதியச் செய்யவேண்டுமென்பதே யாகும்.

உலகில் பெரும்பான்மையோர் இலௌகிகத் தொழில் களைச் செய்வோரேயாவர். அன்னார் என்றும் எங்கும் நிறைந் துள்ள கடவுளை மனமொழி மெய்களால் போற்றப் போதிய ஓய்வு பெறமாட்டார். அவர் பொருட்டு ஆலய வழிபாடு ஏற் பட்டிருக்கலாம்.

**நோக்கம்**

கோயில் வழிபாடு பெரிதும் தற்கால நாகரிகம் பெற்றுள்ள மக்களால் எள்ளி நகையாடும் நிலையை இது போழ்து அடைந்து விட்டது. இதற்குக் காரணம் கோயில் அதிகாரிகளின் மூடச் செயல்களும், தற்கால நாகரிகத்தால் நாட்டுக் கல்வி மறப்பு மாகும். கோயில் வழிபாடு இப்பொழுது தனது நோக்கத்தை இழந்திருப்பினும், அதன் உண்மை நோக்கத்தை ஈண்டுச் சிறிது சுருங்கக் கூற விரும்புகிறேன்.

மனிதர், மண்ணிற் பிறந்து வளர்ந்து வரும்போது, அவர், இயற்கை அறியாமையோடு பல செயற்கை அறியாமைகளும், பல தீ நீர்மைகளும் பதியப் பெறுகின்றனர். அதனால் அவர் தம்மை (உயிரை) மறந்து விடுகின்றனர். அம் மறப்பால் ஆண்ட வன் உண்மையும் அவர்க்குப் புலனாவதில்லை. இவ்வாறு உலக மாயையில் விழுந்து கிடக்கும் மக்களை உய்விக்க வேண்டியே நம் முன்னோர் திருக்கோயில் வழிபாட்டை ஏற்படுத்தினர். அவ்வழி பாட்டால் நிலையாத நெஞ்சும் நிலைத்துவிடும்.

**சும்மா இருத்தல்**

மனம் உலகச் செயல்களில் உழன்று வருதலால் அது நிலைபெறுதலில்லை. அது பாதரசம் போல ஓடிக் கொண்டே யிருக்கிறது. அதைக் கட்டியாளல் மனிதரால் இயல்வதில்லை. மனத்தைக் கட்டியாளும் ஆற்றல் பெறுமட்டும், மனிதர் அதன் வழியே உழன்று, பல பாவச்செயல்களைப் புரிவோராகின்றனர்.

எல்லாப் பாவங்களுக்கும் காரணமாக நிற்கும் மனத்தை ஒரு வழியில் நிறுத்தும் ஆற்றல் ஒரு சிலருக்கே உண்டு. மனிதரால் எல்லாக் காரியங்களையுஞ் செய்தலாகும். ஆனால் அவர் மனத்தை அடக்கிச் சும்மாயிருக்கும் ஒரு செயலை மட்டும் மேற்கொள்ளல் அரிது.

**கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்**
**கரடிவெம் புலிவா யையுங்**
**கட்டலாம் ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்**
**கட்செவி யெடுத்தாட் டலாம்**

**வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்**
**வேதித்து விற்றுண் ணலாம்**
**வேறொருவர் காணாம லுலகத்து லாவலாம்**
**விண்ணவரை ஏவல் கொளலாம்**

**சந்ததமு மிளமையோ டிருக்கலாம் மற்றொரு**
**சரீரத்தி னும்புகு தலாம்**
**சலமேல் நடக்கலாம் கனன்மே லிருக்கலாம்**
**தன்னிகரில் சித்தி பெறலாம்**

**சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற**
**திறமரிது சத்தாகி என்**
**சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே**
**தேசோ மயானந் தமே.**

என்றார் தாயுமானரும்.

### மனிதரியல்பு

மனிதர் எதனோடு பழகுகின்றாரோ, எதை அடிக்கடி நினைக்கின்றாரோ, அவர் அதனதன் வண்ணமாக மாறுந் தன்மையர். மனிதர், தம் மனம் பாச காரணங்களில் தோயப் பெற்று, வஞ்சனை, பொறாமை, லோபம் முதலிய தீக்குண வடிவினராகித், தமது நிலை யிழந்து, விலங்கு நிலை அடைவதை வலியுறுத்தக் காட்சியளவை ஒன்றே சாலும். ஆதலால், மனிதர் தம் மனத்தைப் பாச கரணங்களில் தோயவிடாது, அதை அன்பில் தோயவிடுத்துக் காண்பனவும் கேட்பனவும் அன்பு மயமாகப் புலனாகவும், ஒலிக்கவும் செய்து கொள்ளல் வேண்டும். இதற்கு வழி யாது? ஆலயப் பணி என்னலாம்.

### வழிபாடு

நாடோறும் கோயில் வழிபாட்டைச் செய்யும் ஒருவரது செயலை எடுத்துக்காட்டாகக் கொள்வோம். கோயில் வழிபாடு

செய்யப் புகுந்த அன்னார் நாடோறும் கோயிலுக்குச் செல்லும்போது, அவர்தம் உள்ளத்தில் கடவுள் நினைவு குடி கொள்கிறது. வேறு எண்ணங்கள் அவர் உள்ளத்தில் தோன்று தல் அருமை. 'கோயிலுக்குச் செல்லும் ஒருவரது உள்ளம் வேறு நெறியில் செல்லாது காக்கப்படல் வேண்டும்' என்ற கருத்துக் கொண்டே நம் பெரியோர், 'கோயிலுக்குச் செல்லும்போது, வேறு பேச்சுப் பேசாமலும், வேறு எண்ணம் எண்ணாமலும் செல்லல் வேண்டும்' என்னும் நியதியை விதித்தனர். இவ் விதியை நடையில் கொண்டுவரவே, "மகா மந்திரங்கள்" தோற்று விக்கப்பட்டன. அம்மகா மந்திரங்களைச் செபித்துக் கொண்டு செல்லும் ஒருவரது மனம் வேறு துறையில் எளிதில் செல்லாது. அவர் திருக்கோயிலடைந்ததும், அலகிடல், மெழுகிடல் முதலிய திருப்பணிகளில் ஈடுபடுகிறார். அப்பொழுது அவர்தம் மனம் அன்பு வடிவாகிய ஆண்டவனிடத்துப் பதிந்து கிடக்கிறது. அதற்குமேல் அம்மனிதர் கடவுளுக்குப் பூக்கொய்யப் பூந் தோட்டஞ் செல்கிறார். செல்லும்பொழுது அவர் மந்திர செபத்துடன் செல்கிறார். பூக் கொய்யும் பொழுதும், பூமாலை தொடுக்கும்போதும், அவர் தம் நினைவு ஆண்டவன் பால தாகவே யிருக்கும் இன்னோரன்ன திருப்பணிகள் பல செய்து, ஆண்டவனைத் தொழுது இன்பநீர் சொரியப் பெறுவோரின் உள்ளம், வேறு நினைவுகளுக்கு இடம் பெறாது, ஆண்டவன் நினைவு ஒன்றற்கே இடம் பெறுகின்றமையால், அவர் பாவச் செயல்களுக்கு ஆளாகாமல் புண்ணியச் செயல்களுக்கே ஆளாகிறார்.

### ஆண்டவனை எங்குங் காணல்

இவ்வாறு நாடோறும் கோயிற்பணி செய்யும் ஒருவர் தம்பாலுள்ள சீவகரணங்களெல்லாம் தெய்வ கரணமாக மாறப்பெற்று; ஓரிடத்தில் கண்டு வந்த ஆண்டவன் அன்பு வடி வத்தை, யாண்டும் கண்டின்புறும் ஒரு நிலையை அடைகிறார். அவருக்கு எல்லா உயிருந் தம்முயிர் போலத் தோன்றும். அவ்வன்பர்,

***இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி***
***இயமான னாய்எறியுங் காற்று மாகி***
***அருநிலைய திங்களாய் நாயி றாகி***
***ஆகாச மாய்அட்ட மூர்த்தி யாகிப்***
***பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்***
***பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி***

**நெருநலையாய் இன்றாகி நாளை யாகி**
**நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே.**

எனவரூஉம் அப்பர் திருவாக்கின்படி, கடவுள் உண்மையைச் சராசரங்களில் கண்டு, 'பூக் கிள்ளல்' முதலியனவும் பாவம் என்னும் உணர்ச்சி பெற்று.

**பண்ணே னுனக்கான பூசையொரு வடிவிலே**
**பாவித் திறைஞ்ச வாங்கே**
**பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்**
**பனிமல ரெடுக்க மனமும்**
**நண்ணே னலாமலிரு கைதான் குவிக்கவெனின்**
**நாணுமென் னுள நிற்றிநீ**
**நான்கும் பிடும்போ தரைக்கும்பி டாதலால்**
**நான்பூசை செய்யல் முறையோ**
**விண்ணே விணாதியாம் பூதமே நாதமே**
**வேதமே வேதாந் தமே**
**மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்**
**வித்தே யவித்தின் முளையே**
**கண்ணே கருத்தேயென் எண்ணே எழுத்தே**
**கதிக்கான மோன வடிவே**
**கருதரிய சிற்சபையு ளானந்த நிர்த்தமிடு**
**கருணா கரக் கடவுளே.**

என்ற தாயுமானார் நிலையை அடைந்து, தம்மை மற்றவர்க்குப் பலியாக்கி, யாம் எமது என்ற பற்றுக்களின்றி, உயிர்களின் நலத்துக்காக வாழவேண்டுமென்னும் நிட்காமிய கருமம் விளங்கப் பெறுகிறார். இத்தகையோரே உயிர்களுக்கு உண்மை யாக நலஞ் செய்வோராவர். உள்ளத்திலே பலதிற அழுக்கு களைப் பதிய வைத்துக் கொண்டு, உயிர்களுக்கு நலஞ் செய்ய வருவோர் நம்பற்குரியரல்லர். இறைவனிடத்து அன்பில்லாதவர் உயிர்களிடத்து அன்புடையராதல் அருமை.

### கடவுளிடத்தன்பு உயிர்களிடத்தன்பு

ஈசன் எங்கும் நீக்கமற நிற்கிறான். எங்கும் நிறைந்துள்ள ஒருவனிடத்து அன்பு செலுத்தப்படின், அவன் இருப்புள்ள எங்கும் அவ்வன்பு செல்லும். எங்கும் நிறைந்துள்ள இறைவன் பால் அன்பு செலுத்தாதவரது அன்பு, எல்லா உயிர்களிடத்தும் நிகழாது. அவர்க்கு அன்பு ஒரே இடத்து ஒவ்வொரு வேளை நிகழும். கட்டுப்பட்ட அன்பு கடவுள் அன்பாகாது. அது விலங்கு அன்பு (பாசம்) எனப்படும். புலி தன் குட்டிகளிடத்து அன்பு

காட்டுகிறது. அவ்வன்பை அஃது ஏனைய உயிர்களிடத்துச் செலுத்துவதில்லை. கடவுளுண்மை மறுப்போரது அன்பைப் புலியின் அன்புக்கும் ஒப்பிடலாம். ஆதலால், எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஆண்டவனிடத்து அன்புடையவரே எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவராவர். கடவுள் ஒரே இடத்தி லிருக்கிறார் என்னுங் கொள்கையுடையாரும் எல்லா உயிர்க்கும் அன்பு செலுத்தும் உயரிய நிலையை யடைய மாட்டார். ஈசனிடத்து அன்புடையார் தமக்கும், தம்மைப் போன்றார்க்கும், மற்ற உயிர்கட்கும் அன்பராவர்.

**ஈசனுக் கன்பில்லார் அடியவர்க்கும் அன்பில்லார்**
**எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்**

– சிவஞானசித்தியார்

ஆகவே, ஆலய வழிபாட்டின் நோக்கம், மனத்தைப் பாசகரணங்களில் தோயவிடாது, பத்தி-அன்பு-கரணத்தில் தோயவிடுத்து, 'அஹிம்சா பரமோ தர்ம:' என்னும் உயரிய அறத்தைப் பெறுவிப்பதாகும்.

இவ்வுண்மை கண்டே,

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்கும்**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்**
**சங்கரா சயபோற்றி போற்றி என்றும்**
**அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே**

என அப்பரும்,

**புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம்மிறை ஈசனை**
**நண்ணறி யாமல் நழுவுகின் றாரே**

எனத் திருமூலருங் கூறிப் போந்தனர்.

அன்பை வளர்க்குங் கோயில்பணி செய்யாது, வீட்டி லிருந்து திண்ணையில் தூங்கி, வாசாஞானம் பேசிப் பாவத்தில் காலத்தைக் கழிப்போர் மரண மென்னுந் துன்பத்துக்கு ஆளாவர்.

**பாவத்தின் சம்பளம் மரணம்** – கிறிஸ்து

***பேதைமை என்னும் வித்தில் பிறந்தபின் வினைக ளென்னும்***
***வேதனை மரங்கள் நாறி வேட்கைவேர் வீழ்த்து முற்றிக்***
***காதலுங் களிப்பு மென்னுங் கவடுவிட்டு அவலம் பூத்து***
***மாதுயர் இடும்பை காய்த்து மரணமே கனியு மென்றான்***

- திருத்தக்கதேவர்

***ஆமாறுன் றிருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்***
***பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்***
***கோமான்நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்***
***சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.***

- மாணிக்கவாசகர்

## ஆலயங்களின் தற்கால நிலை

*மனிதப் பிறவிக்கு உய்வளிக்குங் கோயில் பணி, இதுகாலை வெறும் பணியாய், வாய்ப்பேச்சுப் பணியாய்ப் போலிப் பணியாய் முடிந்திருக்கிறது. மனிதப் பிறவியின் நோக்கத்தை நிறைவேற்றவல்ல ஆலயப் பணி குலைந்துவிட்டது. அதைப் புதுக்கிப் பண்டைய நிலைக்குக் கொணரச் சில அறிஞர் முயல்கின்றனர். அவர்தம் முயற்சியும் பயன் தாராது ஒழிகிறது.*

*பணிக்கு நிலைக்களமான ஆலயங்கள், **கள்ளர், சோம்பர், வேசையர், சோற்றாட்கள்** முதலிய தீயர் உலவும் குகை களாக மாறியிருக்கின்றன. ஆலயங்களில் பணிசெய்வோர் கூலிக்காரராகவும், **வயிற்றுச் சாமி**களாகவும் மாறியிருக் கின்றனர். ஆலய அர்ச்சகர் உள்ளத்துப் பணமும் பிரசாதமும் பிற பேய்களுங் கோயில் கொண்டிருக்கின்றன. **ஆலய அர்ச்சகர்க்கும் கல்விக்கும் இடையில் பொருள் மலையும், சோற்றுக் கடலும் நிற்கின்றன.** அவர் தாம் பூசை செய்வன, 'கல், செம்புதானே' என்று எண்ணிப் பலதிறப் பாவங்களையுஞ் செய்கின்றனர். ஆலய அர்ச்சகரின் நிலை இவ்வாறாயின், ஏனை யோர் நிலையைக் கூறலும் வேண்டுமோ?*

## உருவ வழிபாடு

*உருவ வழிபாடு இந்தியாவில் மட்டுமின்றி, ஒரு காலத்தில் உலக முழுவதும் பரவியிருந்தது. பழைய காலத்தில் உலகத்தி லுள்ள அனைவரும் உருவ வழிபாடு செய்திருந்தனர். **கோயில் அர்ச்சகரின் தீயொழுக்கத்தால் அறிஞர்க்கு அவ்வழி பாட்டிலிருந்த பற்று அறுந்தது. பின்னர் அவ்வறிஞர் உருவ வழிபாட்டையே ஒழிக்க முயன்றனர்.***

*இப்பொழுது உலக முழுவதும் பரவிவருங் கிறிஸ்துவ மதம் உருவ வழிபாட்டைத் தனக்குள் எவ்விதக் கட்சியுமின்றிப்*

போற்றி வந்தது. குருமாரின் மறச் செயல்கள் கிறிஸ்தவ மதத்தில் பிளவை உண்டுபண்ணின. பின்னர் உருவ வழிபாட்டையே ஒழிக்கும் பிரிவு கிறிஸ்துவ சமயத்தில் தோன்றலாயிற்று.

நபி நாயகமென்று போற்றப்படும் மகமதுவும் உருவ வழி பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் போற்றிய சமயம் விக்கிரக ஆராதனையை வெறுப்பதுபோல வேறு எச்சமயமும் அதை அவ்வளவு வெறுப்பதில்லை.

உருவ வழிபாட்டிற் சிறந்த நமது பரதகண்டத்திலும் இந்நாளில் பிரமசமாஜம், ஆரிய சமாஜம் முதலியன தோன்றி ஆலய வழிபாட்டை ஒழித்து வருகின்றன. அறிஞர் பலர் உருவ வழிபாட்டை விலக்கி வருகின்றனர். இவ்வளவுக்குங் காரணம், மன அடக்கத்துக்கென ஏற்பட்ட **கோயில்கள்** மன விகாரத் துக்கும் விரிவுக்கும் களியாட்டத்துக்கும் உரிய **கள்ளர் குகை களாய் மாறினமையே யாகும்.**

திருக்கோயில் நிலை இவ்வாறாகவே, ‘நாத்திகம்’ நமது நாட்டில் கொழுத்து வருகிறது; ‘பணி’ என்பதே படுத்துவிட்டது. வழி வழி ஆலய சேவை செய்து வருவோருட் சிலரும், சில விளையாட்டுக்காரரும், ஆலய சேவையின் பொருள் தெரியா தாரும், சிறுமைக் குணமுடையாருமே இந்நாளில் பெரிதும் ஆலய சேவை செய்து வருகின்றனர். ஆகவே, ஆலயமும், ஆலய சேவையும் இருந்தும் இல்லாதனவாகவே முடிந்திருக்கின்றன. **பயன் விளைவியாமலும், தீமையைப் பெருக்குவித்துக் கொண்டும் உள்ள ஒன்று, இருப்பதும் இறப்பதும் ஒன்றே.** இருந்து பயன் விளையாத ஒன்று இருந்தாலென்ன? இறந்தா லென்ன? ‘எல்லாம் பணி மயம்’ என்னும் உண்மையையும், மனிதர்பாலுள்ள குற்றங்களைக் களைந்து அவரை அன்பராக்கு வதையும் தன்னிடத்தே கொண்டு விளங்கிய ஆலயப் பணியின் குலைவு, நாட்டின் உயிர்நிலை ஒடுக்கத்தைக் குறிப்பிடுவதாகும். இந்தியாவின் உயிர் நிலை ஒருபோது ஆலயப் பணியிலிருந்தது. அதன் குறைவால் நாட்டில் எல்லாக் குறைகளும் தோன்ற லாயின.

### வேண்டும் பணி

ஆலயப் பணியின் நோக்கம் பாழ்பட்டதற்கும், ஆலயங்கள் கள்ளர் குகைகளாக மாறியதற்கும், ஆலய சேவை செய்வோர் தொகை அருகியதற்கும், பிற திருப்பணிகள் குறைபட்டதற்குங் காரணம் பலபடக் கூறலாம். அவற்றுள் தலையாயது நாட்டுக் கல்விக்குக் கேடு நேர்ந்தமை யாகும். நாட்டுக் கல்வி அழிவுற்ற

தற்குக் காரணம் ஆட்சி முறை அயலார் வயப்பட்டுக் கிடப்ப தென்பதை விளக்க வேண்டுவதில்லை. பிறர் வயப்பட்டுள்ள ஆட்சி முறை குடிமக்களுடையதாக மாறின், நமது நாட்டுக் கல்வியும் பிறவும் பண்டை நிலை யடையும். ஆதலால், இப் பொழுது நாடு வேண்டும் பணி யாது? இப்பொழுதுள்ள ஆட்சி முறையை மாற்றிப் பொறுப்பாட்சியை நிலைபெறுத்துதற்குரிய பணியையே நாடு இந்நாளில் வேண்டுகிறது.

இப்பணியே இப்பொழுது நிகழும் பணிகளுள் தலை யாயது. இப்பணியால் நமது நோக்கம் நிறைவேறப்பெறின், நமது நாட்டுக் கலைகளும் அறங்களும் உயிர் பெறுமாதலால், இந்தியாவில் பிறந்த அனைவரும் இப்பொழுது மேற்கொள்ளத் தக்கது நாட்டுப் பணியே யாகும். எனது உள்ளம் அப்பணியைக் குறிக்கொண்டு, அதன்மீது பதிந்து கிடத்தலால், வேறு பணிகள் மீது நினைவு செல்வதில்லை. அவற்றைப் பற்றி எழுதவுங் கை ஓடுவதில்லை.

**நாட்டுப் பணி**

மாற்றப் பணிகளை விடுத்துத் திடீரென நாட்டுப் பணியில் பாய்ந்ததன் நோக்கத்தை அன்பர்கள் ஊகித்துக் கொள்ளலாம். எல்லா நலங்களும் நாட்டு நலத்தில் அடங்கும். நாட்டு நலத்தில் அடங்காத நலங்கள் இரா. ஒவ்வொரு நலத்துக்கும் ஒவ்வொரு வகைப் பணி வேண்டும். அவ்வந் நலத்துக்கேற்ற பணி செய் வதைப் பார்க்கிலும் எல்லா நலன்கட்கும் அடிப்படையாயுள்ள நாட்டு நலத்துக்குப் பணி செய்வதொன்றே சாலும்.

உலகத்திலுள்ள நாடுகளின் நிலையையும், நமது இந்தியா வின் நிலையையும் உற்று நோக்குவோர்க்கு உண்மை புலனாகும். உலகத்திலுள்ள மக்களெல்லாம் பிறப்புரிமை இன்பத்தை நுகர்ந்து வரும் பொழுது, இந்தியர் மட்டும் அவ்வின்பத்தை இழந்து நிற்பதைக் கண்டு எவரே இரங்காதிருப்பர்!

**சகோதர மயம்**

இயற்கை வளனும், செயற்கை நலனும் பெற்ற நமது இந்தியா, நீண்ட காலமாகச் சுய ஆட்சி யிழந்து, வறுமைக்கும் பிணிக்கும் இரையாகி வருவதை நோக்கும் ஒருவருக்கு எப்பணி சிறப்பாகத் தோன்றும்? இந்தியாவில் பிறந்த ஞானிகள், முனிவர்கள், அன்பர்கள், பெரியோர்கள் கண்ட சகோதரநேயம் என்னும் பேரறம் ஒன்றே உலகத்தை நல்வழியில் நிறுத்தவல்லது. அவ்வறத்தை (சகோதரத்துவத்தை) உலகத்துக்கு அறிவுறுத்த வேண்டிய இந்திய மக்கள் பிறப்புரிமையை இழந்திருப்பதால்,

இவர்கள் சொல்லிற்கு எந்த நாடுஞ் செவி சாய்ப்பதில்லை. பிறப்புரிமை இழந்தவர் சொல் அம்பலம் ஏறல் அரிதே. ஆதலால், முதலில் சுய ஆட்சி பெற முயலவேண்டுவது ஒவ் வோர் இந்தியர் கடமை. இவ்வுண்மை உணர்ந்தோர் நாட்டுப் பணியை இழித்துக் கூறார்.

## சுய ஆட்சிக் குறி

இப்பொழுது நாட்டுப் பணியை இழித்துக் கூறுவோர் இந்திய அறத்தைக் கெடுப்பவராவர். அன்னார் 'தன்னலம்' என்னுங் கொடும் பாவக் குழியில் வீழ்ந்து கிடப்பவராயிருத்தல் வேண்டும். உயர்ந்த வேதாந்தத்தை - ஆன்ம ஞானத்தை - சகோதரத்துவத்தை - சநாதன தருமத்தை - என்றும் நிலைபேறாக உள்ள பேரறத்தை - உலகத்துக்கு அறிவுறுத்தும் பொறுப்பை ஏற்றுள்ள இந்தியா, இப்பொழுது அப்பொறுப்பை நிறை வேற்றக் கூடாத நிலையிலிருப்பதை அறியாதாருளரோ? நாம் சுய ஆட்சி பெற முயற்சி செய்வது பிற நாடுகளைப் பற்றுதற் கன்று; வாணிகப் பெருக்கத்துக்கன்று; பிற தீச்செயல்களுக்கன்று; நமது அறத்தை உலகத்துக்கு அறிவுறுத்த வேண்டுமென்னும் ஒரு நோக்கத்தை நிறைவேற்றவேயாகும். மற்ற நாட்டவர் பெற்றுள்ள உரிமையை நாம் பெறுவோமாயின், நாமும் இவ்வுலக மனிதராக அவரால் கருதப்படுவோம். நாம் சுய ஆட்சி பெறாது அடிமை களாக (Subject Nation) வாழ்ந்து வருமளவும் நமது சொல்லை - நமது அறவுரையை எவரும் செவி மடுக்க மாட்டார். ஆனது பற்றி உலகத்துள்ள மக்கள் நாத்திக வழியில் திரும்பி அல்லற்படு வதைப் போக்க வேண்டுமென்னுங் பெருங் கருணைகொண்டு, முதலில் (உலக) சுய ராஜ்ஜியம் பெறவும், பின்னை நமது ஆன்ம நேயமென்னும் பேரறத்தை அறிவுறுத்தி, உலகில் சகோதர நேயத்தை நிலை பெறுத்தவும் நாம் முயற்சி செய்தல் வேண்டும்.

## இலௌகிகம் – வைதிகம்

இந்தியாவில் இப்பொழுது வைதிகத்துக்கு அடிப்படை யாயுள்ள இலௌகிகத் துறைகளெல்லாம் பாழ்பட்டுக் கிடக் கின்றன. இலௌகிகம் வளம் பெற்றிருந்தாலன்றி வைதிகம் வளம் பெறாது. உடல் வளமாயிருந்தால் உயிரும் வளமா யிருக்கும். இலௌகிகம் உடல் போன்றது; வைதிகம் உயிர் போன்றது. இலௌகிகத்தைப் புறப்பொருளாகவும், வைதி கத்தை அகப் பொருளாகவுங் கொள்ளலாம். வைதிகத் துறை (அறிவு நெறி) வறுமை எய்திருப்பது நேயர்கட்குத் தெரியும். வைதிகத்தின் பொருட்டு இலௌகிகத்தை வளம்படுத்தல்

வேண்டுமன்றோ? பலபடக் கிடக்கும் இலௌகிகத் துறைகளுள் ஏதாவது ஒன்று வளம் பெற்றிருக்கிறதா? ஒன்றேனுமில்லை. ஒவ்வொரு துறையுங் குலைந்திருக்கிறது. இதற்குக் காரணம் பொறுப்பாட்சி இன்மை என்று அடிக்கடி நினைவூட்ட வேண்டுவதில்லை. ஆட்சி முறை அயலாரிடத்திருக்கு மட்டும் நமது நாட்டின் அறம் மணம்பெறாதென்பது உண்மை.

**இந்தியாவின் முற்கால நிலை**

இந்தியத் தொழிலாளர் பலரும், 'நம் நாட்டுத் தொழின் முறைகள் பாழ்படுகின்றனவே' என்று வருந்திக் கவல்கின்றனர். வெறுங் கவலையால் மட்டும் நம் நாட்டுத் தொழின்முறைகள் உயிர் பெறுமோ? ஒருநாளும் பெறமாட்டா. அவைகளை மீண்டும் உயிர்ப்பிக்கவல்ல மருந்து சுய ஆட்சி ஒன்றே. நமது நாட்டின் முன்னிலையையும், இப்போதைய நிலையையும் உற்று நோக்குவோர் உயிர்தரிக்க விரும்புவரோ? உலகத்திலே உள்ள பல இனத்தார் உடை அணியாமலும், தம்மை மனிதர் என்று உணராமலும் விலங்கு வாழ்க்கையை - அநாகரிக வாழ்க்கையை - பேய் வாழ்க்கையை - நடாத்தியபோது, நம் இந்தியர் பிறப்புரிமை இன்னதென்று தெரிந்திருந்தனர்; ஒருவரை ஒருவர் அடக்கியாளல் அதருமம் என்று தெளிந்திருந்தனர்.

அந்நாளிலேயே நம்மவர் அரச அங்கத்தைத் திறம்பட வகுத்திருந்தனர். பொருளாக்கத்துக்கும், அற வளர்ச்சிக்கும், இன்ப நுகர்ச்சிக்கும் என்று அந்நாளில் அரசியல் வகுக்கப்பட்டது. அக்காலத்தில் அரசியல், வஞ்சனை - சூது - பொறாமை முதலிய பேய் நீர்மைகளை வளர்க்கவில்லை. பண்டைத் தமிழ் மக்கள் அரசியல் மாண்பைத் தொல்காப்பியம், திருக்குறள், பதிற்றுப் பத்து முதலிய நூல்களிற் காண்க. வயித்தியம், சங்கீதம், வானசாஸ்திரம் முதலிய துறைகளெல்லாம் இந்தியாவில் வளம் பெற்று விளங்கின. அக்காலத்தில் நம்மவர் கட்டிய கோயில்களிலுள்ள ஓவியங்களையும், எழுதிய நூல்களையும் உன்ன உன்ன உள்ளம், உருகுகிறது. அத்தொழிலாளரெல்லாம் பிறந்த நாடு நமது இந்தியாவன்றோ?

**இந்தியாவின் இக்கால நிலை**

நமது அருமை நாடு இப்பொழுது என்ன நிலையிலிருக்கிறது? எல்லா நலன்களையும் இழந்து வறுமையுற்றுச் சிறுமைப்பட்டுக் கிடக்கிறது! இவ்வெண்ணமும் தோன்றாத மனத்தைத் தாங்குவோர் இந்தியராவரோ? நம் நாட்டார் இது காலை, வேதாந்தம், வானசாஸ்திரம், வயித்தியம், சித்திரம்,

*சங்கீதம் முதலிய கலைகளைக் கனவிலும் நினையாமல் வயிற்றுக்கு உணவு தேடும் ஒன்றைக் குறிக்கொண்டு பறவைகள் போல் பறந்தும், விலங்குகள்போல் உழன்றும் வாழ்ந்து வரும் நிலையை அடைந்திருக்கின்றனர். வயிறார உண்டு புலனார இயற்கை யின்பத்தை நுகர்ந்து, மெய்யறிவிற் குழைத்து வந்த பாரத கண்டம் இப்பொழுது உணவிற்கும் வருந்தும் நாடாக மாறியிருக்கிறது! சோற்றுக்கு வருந்தும் நம்மவர் எந்தத் துறையில் அறிவைச் செலுத்துவர் பாவம்! இந்தியாவின் இயற்கை வளங்கள் இந்தியாவுக்குப் பயன்படாது, மற்றைய நாடுகளுக்குப் பயன்படுகின்றன. இந்தியத் தாயின் உருவம் மாறுபட்டுவிட்டது. அவள் மேனி கருகி விட்டது. அவள் பொலிவு குலைந்து விட்டது. முடியணிந்து, கோல் தாங்கி, பட்டாடை யுடுத்தி, அரியாசனத்து வீற்றிருந்த நம் அன்னை, கட்டத் துணியின்றியும் உண்ண உணவின்றியும் வருந்துங்காலம் நேர்ந்திருப்பதை ஊன்றி நோக்கும் எவருக்கும் நாட்டுப் பணிமீது காதல் செல்லாது?*

**தேசப்பணியே தெய்வப்பணி**

*சிலர் தேசப்பணியை நாத்திகப்பணி என்றும், தெய்வப் பணியை ஆத்திகப்பணி என்றும் நினைந்து இதுபோழ்தும் வாழ்ந்து வருகின்றனர். இவர்தம் அறியாமைக்கு இரங்காது வேறென் செய்வது? இவர் தேசப்பணி என்பது மண்பணி என்று நினைக்கின்றனர் போலும்!*

*மண்ணிலுள்ள மனிதர்க்கே நாம் செய்யும் பணி பயன்படுகிறது. மனிதர்க்குச் செய்யும் பணி அவர் தம் உள்ளத்துள்ள ஆண்டவனையே சாரும். ஆதலின், தேசப் பணி என்பது தெய்வப்பணியே என்க. உயிர்களை வழிபடுவதும், ஆண்டவனை வழிபடுவதும் ஒன்றே. இதைக் குறித்து யான் பல முறை எழுதியும் பேசியுமிருக்கிறேன். ஆதலால் அதைப்பற்றி ஈண்டு விரித்தெழுதாது செல்கிறேன். தேசத்தில் உலவும் (நடமாடும்) கோயில்களுக்கு பணி செய்யாது, ஒரே இடத்திலுள்ள விக்கிரங்களுக்குப் பணி செய்வது அறியாமையே யாகும். அண்டை வீட்டு ஏழை பசியால் வருந்துவதைக் கண்டும் கேட்டும் அவனை நோக்காது, பாலும் பழமும் தேனுங் கொண்டுபோய் விக்கிரகத்தின் தலையில் பொழிந்து இன்புறுவோன் பூசையைக் கடவுள் ஏற்றுக் கொள்வரோ? ஒருபோதும் ஏற்றுக் கொள்ளார். இயற்கைக் கோயிலை வழிபடாது, செயற்கைக் கோயிலை மட்டும் வழிபடுவோர் கடவுள் அன்பு வடிவாக உயிர்களில் எழுந்தருளியுள்ள உண்மையறியாத பேதை மாக்களே யாவர். தேசத்திலுள்ள மக்கள் பட்டினி கிடந்து வருந்துங்' காலை,*

செல்வர் பயனற்ற காரியங்களுக்குப் பணத்தைக் கொடுப்பதும், கற்றவர் பயனற்ற பொருள்களில் தமது அறிவைச் செலுத்து வதும் வெறுக்கத்தக்கனவே. தேசத்தில் மக்கள் - உயிர்கள் - தெய்வக் கூறுகள் - வருந்தி உழலுங் காலத்து, பல்லாயிரக்கணக் கான பணத்தைக் கோயில் கட்டடத்துக்கும், வாகனத்துக்கும், தேருக்கும், மடமைக்கும், வக்கீலுக்கும், தாசிக்கும், பொன்னுக் கும், பிணத்துக்கும், வேறு பல களியாடல்களுக்கும் சொரிவது அன்பர் செயலாகாது. இத்தகைய மூடச் செயல்கள் நமது நாட்டை விடுத்து அறவே அகலல் வேண்டும். நான் இவ்வாறு கூறுவது சிலருடைய மனத்தைப் புண்படுத்தலாம். இக்கால அறத்தை வலியுறுத்த வேண்டுமென்று என்னுள்ளத்துள்ள **தெய்வ ஆணை (மனச்சான்று)** என்னைப் பிடர் பிடித்து உந்துகிறது. அதுவழியே யான் நடக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். அத்தெய்வ ஆணைக்கு மாறுபட்டு நடப்பேனாயின், யான் மனிதப் பிறவி எடுத்தவனாகேன். எனது கடமையை யான் செய்கிறேன். எவர் என்ன கூறினும், என்ன நினைப்பினும், என்ன செய்யினும் எனது மனச்சான்று வழியே யான் எழுதுவேன்; பேசுவேன்; நடப்பேன். என் உரைகளால் சிலர் உள்ளம் புண் படுமாயின், அதனால் விளையும் பாவத்தை என்னுள்ளத்தி லுள்ள தெய்வம் தாங்கிக் கொள்ளும் என்னும் உறுதி எனக் குண்டு.

### ஒருமுகச் சேவை

நமது நாட்டில் செய்யத்தக்க பணிகள் பலபடக் கிடக் கின்றன என்று சிலர் நினைக்கின்றனர். சிலர் பல துறைகளில் விழுந்து பணிசெய்தும் வருகின்றனர். ஒரு சிலர் சமயத்துக் கென்று உழைக்கின்றனர்; வேறு சிலர் சீர்திருத்தத்துக்காகப் பாடுபடுகின்றனர்; மற்றுஞ் சிலர் கல்வித் துறைகளில் இறங்கி உழைக்கின்றனர். இவரனைவரும் ஒன்றுபட்டுத் தம் உழைப்பை நாட்டுப் பணியில் ஒருமுகமாகச் செலுத்தின், நாட்டு நலம் விரைவில் பண்படும். நாட்டுப்பணி ஒன்றில் தலைப்படுவதே விழுப்பம்.

நாட்டுப்பணியாவது முழு விடுதலை (பூரண சுதந்திரம்) பெற முயற்சி செய்வது. உரிமையில்லா நாடு வறுமைக்கும், பிணிக்கும், தீயொழுக்கத்துக்கும், நாத்திகத்துக்கும் இரையாகிக் கொண்டே போகும். நமது நாடு இப்பொழுது இவற்றிற்கு இரையாகி வருவதை உன்னுங்கால் எந்த உண்மை இந்தியன் வயிறு எரியாமலிருக்கும்?

நமது நாட்டின் முன்னிலையை உணர, நமது நாட்டு நூல்களைத் தொடுவோர் யாவர்? நமது நாட்டு நாகரிகம் அருகி வருவதைக் கவனிப்போர் யாவர்? நமது நாட்டு அறிஞர் தொகை அருகி வருவதைக் கருதுவோர் யாவர்? நமது நாட்டுக்குரிய கல்வி அறிவுறுத்தப்படுகிறதோ? நமது நாட்டுக்குரிய தொழில்கள் கற்பிக்கப்படுகின்றனவோ? நமது நாட்டுக்குரிய ஒழுக்கமுறைகள் போதிக்கப்படுகின்றனவோ? அந்தோ! பாரத நாடே! உனது கல்வி எங்கே? உனது தொழில் எங்கே? உனது ஒழுக்கம் எங்கே? கண்ணீர் பெருகுகிறது! நாட்டுப் பணி ஒன்று செய்து, சுயஆட்சி பெறுவோமாயின், நமது நாட்டில் இப்பொழுதுள்ள குறைகள் பல ஒழியும். ஒவ்வொரு குறையைப் போக்க ஒவ்வொரு துறையில் இறங்கி உழைப்பதனால் நாடு முழுவிடுதலையை விரைவில் அடையாது. ஆனது பற்றி எல்லாரும் ஒன்றுபட்டு நாட்டுப் பணி செய்ய ஒருப்படுதல் நலம். நம் முன்னோர் தெய்வ பக்தியை வளர்க்க எவ்வெம்முறைகளைக் கொண்டனரோ, அவ்வம் முறைகளை இப்பொழுது நாட்டுப் பணிக்குங் கொள்ள நாம் முற்படல் வேண்டும்.

### பணித்திறம்

தேசப் பணிக்கு வேண்டற்பாலது தேசபக்தி. தேசபக்தி ஊட்டக்கூடிய துறைகள் பலவற்றையும் நம்மவர் கைக்கொள்ளல் காலத்துக்குரிய அறமாகும். பாரத மாதாவிற்கென நிலையங்கள் கோலலும், விழாக்கள் எடுத்தலும் வேண்டும்; புராணங்கள் பாடலும், தேச கீதங்கள் பாடலும், தேசபக்தி ஊட்டவல்ல நாடகங்கள் நடித்தலும் நல்லன. சொற்பொழிவுகள் யாவும் தேசபக்தியை எழுப்பக் கூடியனவாயிருத்தல் மாண்பு. பண்டைக் காலத்தில் நம் முனிவரர் தம் மனைவி, சகோதரி, தாய் முதலிய வருடன் தவப் பணியை எங்ஙனம் செய்து வந்தனரோ, அங் ஙனமே நாமும் நாட்டுப் பணியைச் செய்யப் பெண் மக்கள் கூட்டுறவைப் பெறுதல் விழுப்பம். ஒருபாலார் செய்யும் எந்தச் செயலும் பயனளியாது என்பது திண்ணம். இரு பாலாரும் நாட்டுப் பணியை வளர்க்க முந்த வேண்டுமென்பது எனது வேட்கை.

இப்பொழுது ஒரு சிலரே நாட்டுப்பணி செய்து வரு கின்றனர். அவ்வொரு சிலர் உழைப்பால் இந்தியா முழு விடுதலை பெறுதல் அருமை. ஆதலின் வீட்டிலுள்ள தாய்மார், சகோதரிமார், சிந்தை தேசப்பணியைப் பற்றி நிற்பதாக. அஃது அவரது கருவிலுள்ள பிண்டத்திலும் ஊறுவதாக. இந்தியாவில்

வாழும் பல சமயத்தவரும் தேசத்தொண்டைத் தம் சமயத் தொண்டாகக் கருதுவாராக. இந்தியர் அனைவரும் தேசப் பணியையே தம் சமயமாகக் கொண்டிருக்கின்றனர் என்னுஞ் செய்தி உலகமெல்லாம் பரவுவதாக. ஒவ்வோர் இந்தியரும் தம் பணியைத் தேசப் பணியாகத் திருப்பல் நல்லது. தேசப் பணிக் காகவே நாம் படைக்கப்பட்டோம் என்னும் எண்ணம் இந்தியர் நெஞ்சில் வேரூன்றல் சிறப்பு. இந்தியா முழுவதும் ஓரினமாகும் நாளே இந்தியாவின் விடுதலை நாளாகும்.

**ஒற்றுமை**

நாட்டுப் பணிக்கு இன்றியமையாதது ஒற்றுமை. அவ் வொற்றுமையைக் குலைக்குஞ் சாதிப்பகை முதலியவற்றை இனிப் பாராட்டுவோர் தேசத் துரோகியாவர். சாதிச் சண்டை, சமயச் சண்டை, பிற மூடச் சண்டைகள் அனைத்தையும் கட்டிச் சுருட்டி வங்காளக் குடாக்கடலில் எறிதல் வேண்டும். நமது நாட்டுத் தெய்வ பக்தர்கள் சாதிப்பகை முதலியவற்றில் தலைப் படவேயில்லை. ஹிந்து மதாசாரியர், தெய்வத்தை வழிபடுவோர் அனைவரும் ஒரு சாதியினரே என்னுங் கொள்கை யுடையவராய் வாழ்ந்து வந்தனர்.

***சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து***
***தரணியொடு வானாளத் தருவ ரேனும்***
***மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்***
***மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்***

***அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்***
***ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்***
***கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்***
***அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே*** - அப்பர்

தெய்வப்பணி செய்வோர் அனைவரும் எங்ஙனம் ஓரினத்த வராக கருதப்பட்டனரோ, அங்ஙனமே நாட்டுப்பணி செய் வோர் அனைவரும் ஓர் இனத்தவராகக் கருதப்படல் வேண்டும். இந்தியாவில் பிறந்த அனைவரும் ஓர் இனத்தவராகவே எண்ணப்படல் வேண்டும். சாதிச்சண்டை, சமயச் சண்டை முதலியவற்றை வளர்த்து வருவோரை நான் எனது நாட்டுப் பகைவர் என்றே கருதுகிறேன். சண்டையில் காலங் கழிப்பது அறியாமை. அந்தோ! அவ்வரிய காலம் நமது பாரத மாதாவின் தொண்டிற்குப் பயன் படலாகாதா என்னும் எண்ணம் அடிக்கடி எனக்கு நிகழ்வதுண்டு. சாதிச் சண்டை முதலியவற்றில் தலைப் படும் நண்பர்கள், தங்கள் நாட்டின் பொருட்டாவது, தருமத்

தின் பொருட்டாவது, தங்கள் பகைமைகளை ஒழிக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவில் பிறந்த மக்களை, மக்களாகப் பிறர் மதியாமலிருக்கிற இந்நாளில், தங்களுக்குள் பூசல் விளைத்துக் கொள்வது என்ன ஆண்டகை மையோ தெரியவில்லை. பிறப்புரிமை இழந்து பேடிகளாயுள்ள நாம் நம்மை ஆண்டகையாளராக எண்ணி, நமக்குள் கலாம் விளைத்துக் கொள்வது அறியாமையன்றோ? மற்ற நாட்டார் இந்தியாவை எவ்வாறு மதிக்கின்றனர் என்று சாதிச் சண்டை செய்வோரும், அவர் போன்ற ஏனைய கலகக்காரரும் கருதுவ துண்டோ என்னவோ தெரியவில்லை. அதை அன்னார் கருது வாராயின் சண்டையிடார். சாதிச் சண்டை முதலிய முரட்டுச் செயல்கள் இந்தியாவில் இனித் தலைகாட்டலாகாது. அவற்றை ஒழிக்க முயல்வதும் ஒருவிதப் பணியே யாகும்.

**இந்தியர் ஆலயம்**

இனி இந்தியர்க்கு ஆலயம், இமயகிரியைக் கோபுரமாகக் கொண்ட இந்தியாவே. ‘இமயகிரியே கோபுரம்; இவ்வாலயத் தில் உலவும் பாரத மக்களே தேவர்கள்; வந்தே மாதர மந்திரமே மகா மந்திரம்; இம்மகா மந்திரத்தை ஓதிப் பரத கண்டத்தை வழிபடுவதே தெய்வப் பணி’ என்னும் விரதத்தை ஒவ்வோர் இந்தியருங் கொள்வாராக. ஓர் ஆலயத்தை வழிபடுவதினும், ஒரு குடும்பத்தை வழிபடுவதினும், ஒரு கிராமத்தை வழிபடுவதினும், ஒரு தேசத்தை வழிபடுவது சிறந்த புண்ணியம். அதனினுஞ் சிறந்தது அண்டத்தை வழிபடுவது. அதுவே உலக சகோதரத் துவம் என்பது. அச் சகோதர நேயமே இந்தியாவின் பேரறம். அதை வளர்க்க நாம் முதலாவது உரிமை பெற்ற நாட்டவராதல் வேண்டும். அது பற்றியே முதலாவது பரத கண்டத்தைக் கோயி லாக வழிபடுமாறு என் சகோதரர்களை யான் கேட்டுக் கொள் கிறேன். பாரத நாட்டை வழிபடும் முறைகளைத் தேச மகா சபைகள் காலத்துக்கேற்றவாறு வெளியிடும்.

(இக்கட்டுரையை யான் அநுபந்தத்துக்கென எழுதிய போது ஒத்துழைக்கும் முறைகள் ஆட்சியிலிருந்தன. இதைப் பெயர்த்துப் புத்தக வடிவாக்கியபோது ஒத்துழையா இயக்கம் தோன்றிற்று. பின்னே பல மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. இப்பொழுது ஒருவித சுயராஜ்யம் நிகழ்கிறது. இனி முழு விடுதலைக்கென்று என்னென்ன இயக்கங்கள் தோன்றுமோ அறிகிலேன்) நாட்டுப் பணி காலத்துக்கேற்றவாறு மாறுபடுவதென்பதை ஈண்டு வலியுறுத்துகிறேன். நாடு அடிமைத் தன்மையினின்றும் நீங்கி விடுதலை பெறினும்,

நாட்டில் பணி யிராதென்று நினைத்தலாகாது. அப்பொழுது நாட்டில் அரசியல் கிளர்ச்சிப் பணி குன்றலாம்; வேறு பணிகள் பெருகலாம்.

**அருளாட்சி**

நமது நாடு சுய ஆட்சி பெற்ற பின்னர் நமது நாட்டவர் பெரும்பணி செய்யுங் கடமை ஏற்றல் வேண்டும். உலகத்தி லுள்ள அரசுகளெல்லாவற்றையும் அன்பு மொழிகளால் சத்தியாக்கிரக நெறி நிற்கும் அருளரசுகளாக்க முயலல் வேண்டும். சத்தியாக்கிரக நெறியை உலகத்தில் நிலவச் செய்யா தொழிவோமாயின், மீண்டும் நாம் உரிமை இழந்து அடிமை களாவோம். நம் உரைக்கு உலகத்தவர் மதிப்புக் கொடுக்கும் பொருட்டுச் சுதந்திர கிளர்ச்சி செய்கிறோம். அரிச்சந்திரன், இராமன், கிருஷ்ணன், விருஷபதேவர், புத்தர், திருவள்ளுவர், கிறிஸ்து, மகமது முதலிய பெரியோர் கண்ட உண்மையை-அறிவை-இன்பத்தை-உணர்த்தும் சகோதர தருமத்தை உலக முழுவதும் வளர்க்கவே நாம் இப்பொழுது சுயராஜ்ஜியம் பெற முயல்கிறோம். வேறு உலகாயத மத எண்ணங்கொண்டு நாம் கிளர்ச்சியும் முயற்சியும் செய்கின்றோமில்லை.

நமது கிளர்ச்சியாலும் முயற்சியாலும் வரும் உரிமை இன்பத்தை ஒரு கூட்டத்தார் கொள்ளையிடல் நேரினும் நேரும். ஒல்லும்வகை அப்படி நேராதவாறு காக்க வேண்டுவது ஏழை கட்குழைக்குந் தொண்டர்கள் கடமை. முதலாளிகள் தங்கள் செல்வத்திமிரால் ஏழைகளை ஏமாற்றித் தங்கட்கு மட்டும் நன்மை பயக்கும் ஓர் ஆட்சிமுறை வகுத்துக் கொள்ளினும் கொள்வார்கள். முதலாளி ஆட்சியால் நாட்டில் சகோதரத் துவம் ஓங்கி வளராது. ஆதலால், முதலாளி தொழிலாளி என்னும் வேற்றுமை நிகழாதவாறு, இறைவன் படைப்புக்கு உட்பட்ட இயற்கை எவர்க்கும் பொதுவாகப் பயன்படு முறையில் பணி செய்யும் ஓர் ஆட்சி முறை வகுக்கப்படல் வேண்டும். செல்வப்பொருளில் பகைமை விளையாதவாறு ஆட்சி முறை கோலப்படின் மக்கள் பொறாமை ஆசை முதலிய பேய்களுக்கு இரையாகாது, கடவுள் நிலையடைவார்கள். மக்கள் கடவுள் நிலை யெய்துவதற்குத் துணை நிற்கும் ஆட்சி முறை போற்றற் குரியதன்றோ? அவ்வாட்சியே அருளாட்சி எனப்படும்.

**பண்டை அரசியல்**

பண்டைத் தமிழ்மக்கள் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் - நடுவணதாகிய பொருளின்பால் அரசியலைப்

புகுத்தினார்கள். மக்களை அறவழியில் நிறுத்தி, அவர்கட்கு இன்பம் நல்க வல்லது பொருள் என்பது அநுபவத்தில் உணரும் உண்மை. அறத்துக்கும் இன்பத்துக்கும் காரணமாக உள்ள பொருட்பாலில் அரசியல் பொலிவதன் உள்ளக் கிடக்கையை ஆராய்ந்தால், நம் முன்னோரின் அரசியல் நோக்கம் இனிது புலனாகும்.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் அறமும் பொருளும் புறப்பொருளென்றும், இன்பம் அகப்பொரு ளென்றுஞ் சொல்லப்படும். புறப்பொருள் அகப்பொருள் என்பனவற்றுள் அரசியல் புறப்பொருளின் பாற்பட்டது. அகமும் புறமும் ஒன்றற்கொன்று தொடர்புடையனவா யிலங்குவன. ஒன்றை விடுத்து மற்றொன்று நிகழாது. புறம் வளம்பெறின், அகமும் வளம் பெறும். அகம் கேடுறின் புறமும் கேடுறும். ஒன்றற்கொன்றுள்ள இயைபு என்றும் எக்காரணம் பற்றியும் அழிந்து படாது. புறப்பொருளின் பாற்பட்ட ஆட்சி முறை கோணின், அவ்வாட்சிக்கு உட்பட்ட மக்கள் அக இன்பத்தை இனிது நுகர மாட்டார்கள். அக இன்பத்தை இனிது நுகராத மக்கள் அறநெறி நின்றொழுகல் அரிது. அறநெறி வழுவுமிடத்தில் சகோதரநேயம் நிகழாது. ஆங்கே வலியார் எளியாரை அடக்கியாள்வர். மூர்க்கசக்தி யாண்டும் மக்களைத் துன்புறுத்தும். மூர்க்க சக்தி எழுதற்கு இடந்தராத ஓர் ஆட்சி முறை பண்டைக் காலத்தில் நமது நாட்டில் நிலவியிருந்தது. அதைப் போன்ற ஒன்றை இந்நாளில் வகுத்துக் கொள்வது நலம். முதலாளி தொழிலாளி என்னும் வேற்றுமை நிலவுமட்டும் மூர்க்க சக்தி தன் ஆட்சி செலுத்திக்கொண்டேயிருக்கும். மக்கள் ஆசைக்கும், பொறாமைக்கும் நிலைக்களமாகும் அரசைக் கோலாது, அவைகளைக் களையும் அருளாட்சியைக் கோலின் சகோதரத்துவம் யாண்டும் பொலியும்.

### அருட்பணி

நமது நாட்டில் சகோதர தருமத்தை வளர்க்கும் ஆட்சி முறை வகுத்து, அதைச் செழுமையுற ஓம்பி, அதன்வாயி லாகச் சகோதர தருமத்தை எல்லா நாடுகளிலும் பரப்பி, இப்பொழுது உயிர்களை வருத்தி வரும் இக்கால நாகரிக ஆட்சிகளை மாற்றி, மூர்க்க சக்தியை - தேகாத்ம வாத புத்தியை - கடவுளால் படைக்கப்பட்ட மக்களனைவருஞ் சகோதரர் என்ற உணர்ச்சியை மறைத்துவரும் இராட்சத குணத்தை - ஒழிக்க முயலுதல் நமது கடமை. தீய வழியில் பொருளீட்டுதற்கென்றும் அவ்வழியில் வாணிப நடத்துதற்கென்றும் ஏற்பட்டுள்ள

அரசியல் முறைகள், அன்பை - அருளை - ஜீவகாருண்ணியத்தை - வளர்க்கும் முறையில் மாற்றப்படல் வேண்டும். இதற்கு இந்தியா கடமைப்படாது வேறு எந்நாடு கடமைப்படும்? ஆதலால், இந்தியாவிற்கு முன்னே நிற்கும் பணி பெரியது; மிகப் பெரியது. இப்பணி உயிர்களுக்குள் சகோதர உரிமையை விளங்கச் செய்வதாதலின், இதனை அருட்பணி என்னலாம். அருட்பணி யாவது, தேசப்பணி யளவில் கட்டுப்பட்டு நில்லாது, எல்லாத் தேசங்களின் நலனையும் நாடிச் சகோதர தருமத்தைப் பரப்பச் செய்வதாக நிலவுவதென்க.

**ஒழுக்கம்**

பணிக்கு உயிர்நாடி ஒழுக்கம். ஒழுக்கமுடையோரே பணிக்கு உரியர். ஒழுக்கமில்லாதாரது பணி நிஷ்காமிய முடையதாகாது. ஒழுக்கமில்லாதவன் பிணம் போன்றவன். ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்-உயிரினும் ஓம்பப்படும்' என்றார் திருவள்ளுவர். ஒழுக்கமில்லாதவன் பணியால் உலகத் துக்குக் கேடு விளையும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து பணி செய்வது எளியகாரியமன்று. நிஷ்காமியப் பணி செய்ய வெளி வருவோர் குணமென்னும் குன்றேறி நிற்பவராயிருத்தல் வேண்டும்.

பணியில் காதல் உள்ளவர் முதலாவது தம்மிடத்துள்ள அழுக்குகளைக் கழுவ முயல்வாராக. அன்னார், கொலை களவுகள் காமம் பொய் முதலிய பாவங்களைக் கனவிலும் மறந்துங் கருதலாகாது. பொருளாசை, புறங்கூறல், பிறர் குற்றம் பாராட்டல், வன்மங்கொள்ளல், களியாடல்களைக் காமுறல், பொறாமை கொள்ளல், பக்கத்தாரை ஐயுறல், சிற்றினஞ் சேரல் முதலிய குற்றங்கட்கு நிஷ்காமியப்பணி செய்வோர் என்றும் ஆளாதல் கூடாது. நிஷ்காமியப்பணி செய்வோர் உள்ளத்தில் என்றும் அன்பு, அருள், உண்மை, இன்பம், பொறுமை முதலிய நறுங்குணங்கள் ஊர்ந்து கொண்டிருத்தல் வேண்டும். அவர் மாதரைத் தாய்போல் கருதல் வேண்டும். தூர்த்தர் பணியால் எவ்வித நலனும் விளையாது. உயிர்களுக்குப் பணி செய்யப் புகுவோர், தமது அன்றாட வாழ்க்கையைத் தூய்மையினின்று எக்காரணம் பற்றியும் வழுவ விடலாகாது. ஒழுக்கவீனர்,., பணி யென்னும் பெருந் துறையிலிறங்கி, அதைக் கலக்காமலிருப்பது நலம். மற்றவர் நலங் கருதி உழைக்கவேண்டுமென்னும் எண்ணங்கொள்வோர், இல்வாழ்க்கையில் நன்கு பழகி, ஒழுக் கத்தினின்றும் வழுவாத மனஉறுதி பெற முயலல் வேண்டும்.

ஒரு குடும்பம் ஒரு நாடு போன்றது. குடும்பப் பணியைப் பயன் கருதாது குறைவற நிறைவேற்றும் ஆற்றல் உற்ற பின்னர்ப் பற்றில்லாப் பெரும் பணி செய்யப் புறப்படுதல் நலம்.

தமது நலங்கருதிப் பயன் கருதாதார் போல நடித்துப் பணிசெய்து ஊரை வஞ்சிப்போர், தீயொழுக்கமென்னும் நரகத்தில் இடர்படுவோரே, யாவர். சில தீயொழுக்கமுடையோர் தமக்குள்ள கல்வியாற்றலால் - நாவன்மையால் - பணி செய்வோர் போல் நடித்து மக்களை ஏமாற்றுவது வழக்கம். ஒருவரது கல்வியறிவையும் நா வன்மையையும் மட்டுங் கண்டு மக்கள் ஏமாறலாகாது. கல்வி யறிவோடு - நாவன்மையோடு - நல்லொழுக்கமுமிருத்தல் சிறப்பு. கல்வியறிவு நாவன்மை இவைகளினுஞ் சிறந்தது ஒழுக்கமுடைமை. கல்வியறிவினும் நாவன்மையினும் ஒழுக்கமே விழுப்பந் தருவது. ஆதலால், பயன் கருதாப்பணி - நிஷ்காமியப்பணி - செய்ய வருவோர் ஒழுக்க முடையவராயிருத்தல் வேண்டுமென்பதை இன்னும் வலி யுறுத்தத் தேவையில்லை.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று பணியின் சிறப்பைக் கூறிய அப்பர் சுவாமிகள், 'பொய்யினைத் தவிர விட்டு' என்றும், 'நெஞ்சினைத் தூய்மை செய்து' என்றும், 'நீதியால் நினைசெய் நெஞ்சே' என்றும், 'சீலமும் நோன்பு மாவார்' என்றும், 'பொருத்திய குரம்பை தன்னுட் பொய்நடை செலுத்துகின்றீர் - ஒருத்தனை உணரமாட்டீர் உள்ளத்திற் கொடுமை நீக்கீர்' என்றும், 'ஓதியே கழிக்கின்றீர்கள் உலகத்தீர் ஒருவன் தன்னை - நீதியால் நினையமாட்டீர் நின்மலனென்று சொல்லீர்' என்றும், 'நீதியால் வாழமாட்டேன் நித்தலுந் தூய னல்லேன்' என்றும், 'கரவிலா மனத்த ராகிக் கைதொழுவார்கட் கென்றும்' என்றும், 'கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானை' என்றும், 'நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே' என்றும், 'வஞ்சகர்க் கரியர்போலும்' என்றும், 'கள்ளம் உள்ளவருக் கருள்வானலன்' என்றும், 'பொக்கமிக்கவர் பூவுநீ ருங் கண்டு, நக்கு நிற்பன் அவர் தமை நாணியே' என்றும், 'வஞ்சனையால் அஞ்செழுத்து வழுத்துவார்க்குச் சேயானை' என்றும், 'மெய்யானைப் பொய்யரொடும் விரவாதானை' என்றும், 'தூநெறிக்குந் தூநெறியாய் நின்றார் போலும்' என்றும் ஒழுக்கத்தின் விழுப்பத்தை ஓதியிருத்தல் காண்க.

**பணியின் திரிபு**

நாட்டுப்பணி இதுகாலை வேண்டப்படுவதாதலால், அதை இக்கட்டுரையில் சிறப்பாகச் சிறிது எடுத்துக்காட்டினேன்.

எதிர்கால இந்தியா விரும்பும் பணி வேறொன்றாகலாம். அப் பொழுது, 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதன்கண் போந்துள்ள பணி' 'வேறு நோக்கத்தைக் குறிக்கொண்டு நிற்கும். காலத்துக்கேற்றவாறு 'பணி' என்பதற்கு விரிவுரை வரைந்ததைக் குறித்து என்மீது சமயப்பற்றுடையார் பழி சுமத்தா திருப்பாராக.

பணி ஒன்றே. அது, கால நிலைக்கேற்றவாறு திரிந்து நிற்கும். அஃது ஒரு காலம் ஆலயப் பணியா யிருக்கும்; மற்றொரு காலம் தேசப் பணியாக மாறும்; இன்னொரு காலம் சமயப் பணியாகப் புரளும்; வேறொரு காலம் சமூகப் பணியாகவும் திரும்பும். எப்பணி செய்யினும் அது நிஷ்காமியமாகச் செய்யப் பட வேண்டுமென்பது மட்டும் என்றும் நிலைபேறாக நிலவும் ஓர் அறம். இவ்வுண்மை என்றும் மாறாதது. நிஷ்காமியப் பணிக்கும் கடவுள் பணிக்கும் வேற்றுமையில்லை.

# 5. செய்து கிடப்பதே

பணிசெய்து கிடத்தலே உயிர்களின் நோக்கமாதலால் 'செய்து கிடப்பதே' என்று அப்பர் கூறினார். ஏகாரத்தை அசை யாகக் கொள்வோரும் உளர். எனக்கு அங்ஙனங் கொண்டு பொருளுரைக்க விருப்பமில்லை. சராசரங்களை அளிக்குங் கடவுள், என்றும் பணி செய்த வண்ணம் இருத்தலான், அவர்தம் படைப்புக்கு உட்பட்ட உயிர்களும், பணி செய்தவண்ணம் இருத்தல் வேண்டும். கடவுள் கைம்மாறு கருதாது பணி செய் வதைப்போல, மக்களுங் கைம்மாறு கருதாது கால நிலைக்கேற்ற பணி செய்தல் வேண்டும். வீட்டின்பத்தைப் பார்க்கிலும் பணிசெய்தலில் எனக்கு விருப்பம் அதிகம். கடவுள் குணத்தை ஒருவன் அடைய வேண்டுமானால், அவன் நிஷ்காமியப்பணி செய்தல் ஒழுங்கு. கை கால் கண் மூக்கு இல்லாத ஒரு நிர்க் குணத்தை நினைத்துச் செய்கையற்றிருக்க விழைவதினும், ஓயாது ஐந்தொழில் செய்யுஞ் சகுண மூர்த்தியை நினைந்து நினைந்து அவரைப் போலக் கைம்மாறு கருதாது பணிசெய்ய விழைதல் ஒப்புரவை வளர்ப்பதாகும். பணி செய்வோர்க்குச் சகுணமூர்த்தி பெருந்துணை செய்வாராதலால், ஈண்டு அம்மூர்த்தியைக் குறிப்பிடலானேன். நிர்க்குண வாழ்வைப் பெறுவோர் பெறுக.

சில நாள் பணிசெய்து, பின்னை என்றும் வீட்டின்பத்தில் செய்கையற்றுக் கிடப்பதினும், என்றும் பணி செய்து கிடப்பது சிறப்புடைத்தாதலாலும், அப்பணியால் மற்றவர்க்கு நலம் விளைவதாலும், 'பணி செய்து கிடப்பதே' என்று அப்பர் அருளினர். 'வித்தகம் பேச வேண்டாம் பணிசெய்ய வாரு மென்றார்' என்னும் பெரிய புராண வாக்கும் ஈண்டு நினைவிற்கு வருகிறது.

### பயன் கருதல் கருதாமை

பணிசெய்து கிடத்தலே மக்கள் கடமை யெனில் ஆன்மாக் களின் அறியாமை நீங்கி, மாயை ஒழிந்து, கருமங்கெட்டு, அவை ஆண்டவன்போல் ஆவது எக்காலம் என்று சிலர் வினவலாம். நாம் தொண்டு செய்து ஆண்டவன் போலாதல் வேண்டு

*மென்று நினைத்துச் செய்யும் பணியும் பயன் கருதும் (காமியம்) ஒன்றாதலால், அந் நினைவு கொண்டும் பணி செய்தலாகாது.*

***ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்***
***ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்***
***ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்***
***ஆசை விடவிட ஆனந்த மாமே.***

*எனவரூஉந் திருமூலர் திருவாக்கு ஈண்டுக் கருதற்பாலது.*

*காமியப்பணி செய்வோரது கருமங் கெடாதிருத்தலால் அவர் அடிக்கடி மாயா உடலைத் தாங்குவர். காமியப் பணி யாளரின் எண்ணங்கள் யாவும் தந்நலங் கருதி எழுகின்றமை யால், அவை மீண்டும் மீண்டும் மாயா உடலாகப் போந்து உயிரைப் பற்றியே செல்லும். நிட்காமியப் பணியாளரின் எண்ணங்கள் தந்நலங் கருதாதனவாதலால், அவற்றால் முன்னை ஊழின் முடிப்பு அவிழ்ந்து கெடுகிறது; பின்னைவினை ஈண்டி உடலாக வருதற்கு இடமில்லாமற் போகிறது. ஆதலால், நிட்காமியப் பணி செய்வோர் தாங்கும் உடல்கள் வினைக்கீடாக உண்டாகும் மாயா உடலங்களாகா. அவர் தாங்குவன அருள் உடலங்களாகும். பார்வைக்கு இரண்டும் ஒன்றாகத் தோன்றும். ஆனால் பொருளில் வேற்றுமை யுண்டு. சிறை மதில்களுக்குள் குற்றவாளிகள் இருக்கின்றார்கள். அவர்களைப் பார்க்க மன்னர் முதலியோருஞ் செல்கின்றனர். பின்னவர் சிறை மதில்களுக்குள் ளிருப்பினும் அவர்க்குச் சிறைக் கட்டில்லை. இரு கூட்டத்தவரும் மதில் சூழ்ந்த சிறைக் கூடத்திலே யிருக்கின்றனர். ஆனால், சிறை ஒருவரைச் சார்கிறது; மற்றொருவரைச் சார்வதில்லை. இவ் வெடுத்துக்காட்டைக் கருத்துட் கொண்டு, காமியப் பணியாளர் உடல் நிலையையும் நிட்காமியப் பணியாளர் உடல் நிலையை யும் ஆராய்ந்து பார்க்க.*

**வீடும் வேண்டாமை**

*செய்கையில்லாத நிரதிசயானந்தத்தை நுகர வீடு பேற்றை அடைவதினும், செய்கையுள்ள உடல் தாங்கிப் பயன் கருதாப் பணி செய்வது போற்றத்தக்கது. இப் பணியின் பயனாக வரும் உடல்களைத் தாங்குவோர் கடவுள் நிலை எய்தினவர் என்று கூறலாம்.*

***கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்***
***ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்***
***கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி***
***வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.*** - சேக்கிழார்

இக்கொள்கையை இப்பொழுது, 'ஆரிய சமாஜத்'தாரும், 'தியோசாபிகல் சங்கத்'தாரும் பெரிதும் போற்றுகின்றனர். இது நம் ஆகமங்களில் சொல்லப்பட்ட உண்மை. இடைக்காலத்தில் சோம்பேறி ஞானம் நமது நாட்டில் பழுத்து நாட்டின் ஊக்கத்தைக் கெடுத்தது. சுவாமி விவேகானந்தர் காலந்தொட்டுச் சோம்பேறி ஞானம் ஒரு வழியில் பட்டு வருகிறது. திலகர் பெருமான் தமது கரும யோகத்தால் - கீதா ரகசியத்தால் - நாட்டைத் தட்டி எழுப்பினர். நாடும் கண்விழித்துக் காந்தியடிகள் சத்தியாக்கிரகத்தைக் காண்கிறது.

**வேண்டுதல்**

நானும் எல்லாம் வல்ல இறைவனை நோக்கி,

**ஐந்தொழில் புரியும் ஆண்டவனே,**

"வீட்டின்பம் வேண்டா; ஓய்வில் விருப்பமில்லை; மனிதப் பிறவி வேண்டும்; அப்பிறவியை எனதருமைத் தமிழ்நாட்டில் தாங்குதல் வேண்டும்; நின் திருவடியை என்றும் மறவா மனம் வேண்டும்; செல்வ வாழ்வு வேண்டா; எளிய வாழ்வு வேண்டும்; பயன்கருதாப் பணியில் நெஞ்சம் பதிதல் வேண்டும். எனது தமிழ் மொழிக்கும், எனது அன்புச் சமயத்துக்கும், எனது அருமைத் தாய்நாட்டுக்கும் இடையறாது பயன் கருதாப் பணி செய்தவண்ண மிருத்தல் வேண்டும். இறக்கும் போதும் நின் திருவடி நினைவும், எனது மொழி சமயம் நாடு இவைகளின் நினைவும் அகலாமல் நிற்றல் வேண்டும். இவ்வேண்டுதல்களைத் திருவருள் செய்க" என்று வேண்டுகிறேன்.

என்னைப் படைத்த கடவுள் என் எண்ணங்களை நிறை வேற்றுவார் என்னும் உறுதி எனக்குண்டு.

# 6. முடிவுரை

'என்' என்பது ஆன்மா என்றும், அவ்வான்மா உடலைப் பெறுதற்கு முன்னர் அறிவு செயலில்லா நிலையைப் பெற் றிருக்கிறதென்றும், அஃது உடல் தாங்கப் பெற்ற பின்னர்ச் சிற்றறிவுஞ் சிறு தொழிலும் விளங்கப் பெறுகிறதென்றும், அறிவுந் தொழிலும் விளங்கப்பெறுங் காலத்தை வீணே கழியாது பணி செய்தலில் கழித்தல் வேண்டுமென்றும், அப் பணி, காலத்திற் கேற்றவாறு செய்யப்படல் வேண்டுமென்றும், அதுவும் பயன்கருதா (நிஷ்காமிய) வழிபற்றிச் செய்யப்படுதல் வேண்டுமென்றும், இக்காலத்துக்கு வேண்டப்படுவது தேசப் பணி யென்றும், பிற பணிகள் அப்பணியிலொன்றி விடு மென்றும், தேசப்பணி செய்து பிறப்புரிமை பெற்றுவிடின் நமது உரைக்கு உலகத்தில் மதிப்புண்டாகுமென்றும், அதுபோழ்து நம் முன்னோர் கண்ட சகோதர தருமத்தை உலகத்துக்கு அறி வுறுத்த அருட்பணி நிகழ்த்தல் வேண்டுமென்றும், அப் பேரறத்தை உலகத்தில் நிலை பெறுத்தவே நாம் படைக்கப் பட்டோ மென்றும், எப்பணிக்கும் உயிர் நாடி ஒழுக்கமென்றும், வீடுபேற்றை விரும்பாமலும் பணியை இடையீடின்றிச் செய்து கிடத்தல் வேண்டுமென்றும், அஃதே இறைவன் இயல்பைப் பெறுவிப்பதென்றும் இந் நூற்கண் கூறப்பட்டுள்ளன.

இதை வாசிக்கும் நண்பர்கள் பணியில் காதல் பூண்டு, வீட்டையும் விரும்பாது எத்தகைக் கைம்மாறுங் கருதாது, ஆண்டவன் அருட்குணம் பெற்றுப் பணி செய்து கிடப்பார் களாக.

**அப்பர் திருவடி வாழ்க**

***காமி யஞ்செய்து காலம் கழியாதே***
***ஓவியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ***
***சாமி யோடு சரச்சு வதியவள்***
***கோமி யும்முறை யுங்குட மூக்கிலே***
***ஊனி லாவி உயிர்க்கும் பொழுதெலாம்***
***நானி லாவி யிருப்பனென் நாதனைத்***

***தேனி லாவிய சிற்றம் பலவனார்***
***வானி லாவி யிருக்கவும் வைப்பரே***

***அல்லல் என்செய்யும் அருவினை என்செயும்***
***தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்***
***தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்***
***கெல்லை யில்லாதோர் அடிமைபூண் டேனுக்கே.***

***ஆரி யந்தமி ழோடிசை யானவன்***
***கூரி யகுணத் தார்குறி நின்றவன்***
***காரி கையுடை யான் கடம் பத்துறைச்***
***சீரி யல்பத்தர் சென்றடை மின்களே.*** - அப்பர்

❍❍❍

# தமிழ்நாட்டுச் செல்வம்

**(1924)**

# தமிழ்நாட்டுச் செல்வம்

## தோற்றுவாய்

உங்கள் சங்கத்தின் ஆறாம் ஆண்டு விழாவிற்கு என்னைத் தலைமை வகிக்குமாறு விரும்பி அழைத்ததற்குப் பெரிதும் நன்றி யறிதலுடையேன். இரண்டாம் ஆண்டு விழாவிற்கு ஈண்டுப் போந்து தலைமை வகித்துப் பேசியபோது எனக்கிருந்த உடல் உரம் இப்பொழுது இல்லாமை குறித்து வருந்துகிறேன். எனது உடல் நிலைகருதி மறுத்து விடலாமா என்றும் எண்ணினேன். ஆனால் எனது வருகையால் சிறிது நலம் விளையும் என்று ஈண்டுள்ள அன்பர்கள் எழுதிய கடிதங்களைக் கண்டு இத் தொண்டை இயன்ற வரை புரிய ஒருப்பட்டேன். நீங்கள் எதிர்பார்த்த வண்ணம் என்னால் பேச இயலாமையை உங்களுக்கு முதலில் அறிவித்துக் கொள்ளுகிறேன். ஆதலால் என்பால் நிகழும் குற்றங் குறைகளை மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

## தமிழ் நாடு

அன்பர்களே! உலகிலுள்ள பன்னாடுகள் நன்னிலை உற்று வரும் இந்நாளில், நந்நாடு எந்நிலையிலிருக்கிறது என்பது கவனிக்கப்படல் வேண்டும். நேற்றுத் தோன்றிய நாடுகளெல் லாம் உயரிய நிலை எய்தியிருக்கின்றன. பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் வளம் பெற்றிருந்த நந்தமிழ் நாட்டின் தற்கால நிலையை என்னென்று கூறுவது? நந்தமிழ் தொன்மையை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் கண்ணீர் பெருகுகிறது. தமிழ் மக்களாகிய நாம் இற்றைக்குச் சுமார் 8000 ஆண்டுகட்கு முன்னரே உயரிய நாகரிக நிலை பெற்றிருந்தோம். நாம் வாழ்ந்த நிலப்பரப்பு பண்டைநாளில் குமரிநாடு என்னும் பெயர் பெற்றிருந்ததென்றும், அந்நிலப் பரப்பு பின்னைநாளில் நீரால் விழுங்கப்பெற்றதென்றும், நாம் அக்காரணத் தால் வடக்கு நோக்கி வந்தோமென்றும் சில ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். இப்பொழுது இந்து மகாசமுத்திரம் என்று

வழங்கப் படும் நீர்ப்பரப்பு நிலப்பரப்பாக விருந்தகாலத்தில் ஆண்டுக் குமரி, பஃறொளி என்னும் இரண்டாறுகள் ஓடின என்று புறநானூறு முதலிய நூல்கள் கூறுகின்றன. அவ்விரு ஆறுகளின் அழிவைச் சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் செப்புகின்றன. எனவே பண்டைத் தமிழ் நூல்களில் இவ்விரண்டு ஆறுகளைப் பற்றிக் கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது.

ஜெர்மன் தேசத்துத் தத்துவ சாஸ்திரியாராகிய அறிஞர் ஹெக்கல் என்பாரும் இந்து மகாசமுத்திரம் நிலப்பரப்பாக இருந்த காலத்தில் அங்கே மனிதன் முதன்முதல் படைக்கப் பட்டான் என்று ஊகித்து உரைத்துள்ளார். லெமோரியா என்பதும் அந்நிலப் பரப்பே. விவல்ய வேதத்தை ஆராயுமிடத்து நோவா பிரளயம் என்றொரு பிரளயம் நிகழ்ந்ததைக் காணலாம். அப்பிரளயம் குமரி நாட்டை விழுங்கியிருக்கலாமென்று சிலர் ஊகிக்கின்றனர். குமரி நாடு நீரால் விழுங்கப்பட்டதும் ஏறக்குறைய அவ்வளவினதாக ஒரு பெரும் நிலப்பரப்பு வட ஆப்பிரிக்காவில் தோன்றியதென்று சிலர் சொல்லு கின்றனர். ஸஹாரா வனாந்திரம் என்னும் பெயரால் அஃது இப் பொழுது வழங்கப்படுகிறது. இவையாவும் ஊகங்களாகும். இன்னும் ஆராயஆராய உண்மை காணலாம். இதைப்பற்றி விரிக்கிற் பெருகும், ஆதலால் இப்பொருள் விடுத்து வேறுபொருளின் மேற்செல்கிறேன்.

## தொன்மை

பழந்தமிழ் நூல்களை நோக்குழி மக்கள் வாழ்வு முதல் முதல் மலை நிலத்தில் தொடங்கப்பட்டது என்பது புலப்படும். மனிதன் வாழ்வு மலையில் தொடங்கப்பட்டிருத்தல் வேண்டு மென்று சில மேல்நாட்டு அறிஞர்களும் அபிப்பிராயப்பட் டிருக்கிறார்கள். நாம் ஆளும் எண்ணலளவை, எடுத்தலளவை முகத்தலளவை முதலிய அளவைகளின் தோற்றத்தை ஆராயின் அவையாவும் மலைபடு பொருள்களினின்றும் முதல்முதல் ஆக்கப்பட்டிருப்பதை யுணரலாம். தமிழ் மக்கள் வணங்கும் கடவுளாகிய முருகப் பெருமான் மலை நில இறைவன் என்பதைப்பற்றி விரித்துக் கூறவேண்டுவதில்லை. "சேயோன் மேய மைவரையுலகமும்" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். இன்னோரன்ன குறிப்புகளான் தமிழ்நாட்டின் தொன்மை நன்கு புலனாகும். இப்பொழுது கிடைத்துள்ள கருவி நூல்களை ஆராய்ந்து பெற்ற உண்மைகளானும் மேலே யான் கூறிய சில குறிப்புகளானும் தமிழ்நாடு இற்றைக்கு சுமார் ஏழாயிரம்

ஆண்டுகட்கு முன்னரே சிறந்த நாடாக விளங்கியதென்பது பெறப்படும். தமிழ்நாடு தொன்மையது என்னும் ஒன்றைக் கொண்டு தமிழ்நாடு மிகச் சிறந்த நாடெனக் கூறி விடலாமோ வெனச் சிலர் ஐயுறலாம். தமிழ்நாடு தொன்மை யோடு வேறு பல நாகரிகத் துறைகளிலும் செழுமை பெற்றிருந்தமை கவனிக்கற் பாற்று.

## மொழி

தமிழ் மக்கள் பேசியமொழி பெரிதும் தொன்மையுடைய தாகும். உலகிலுள்ள பல மொழிகளை ஒரு பக்கமும் நந்தமிழ் மொழியை மற்றொரு பக்கமும் கிளத்திச் சீர்தூக்கி அளந்து ஆராயின் அம்மொழிகளில் வல்லோசை பெருகியும், இம்மொழியில் அவ்வோசை அருகியும் நிற்றலைக் காணலாம். சிறு குழந்தைகள், "ராமா; டமருகம்" என்ற சொற்களைச் சொல்லும் போது, ஆமா என்றும், அமருகம் என்றும் சொல்லுதலைக் கேட்கிறோம். இதற்குக் காரணம் என்னை; 'ற, ர, ட' என்னும் வல்லோசையுடைய எழுத்துக்களை உச்சரிக்கப் போதிய நரம்பு உரம் பெறாமையே யாகும். இவ்வண்ணமே மனிதன் கைக்குறி, கட்குறி முதலியவை களால் கருத்தை அறிவித்துக் கொண்டிருந்து பின்னை, மொழியால் கருத்தைவெளியிட முயன்றபோது அன்னான் இளங் குழந்தை போலவே வல்லோசை யுடைய எழுத்துக்களை உச்சரிக்க இயலா நிலையைப் பெற்றிருத்தல் வேண்டும். தமிழ்மொழியில் பெரிதும் வல்லோசைச் சொற்கள் இன்மையையும் 'ட,ர' முதலிய வல்லோசை எழுத்துக்கள் சொல்லின் முதற்கண் வாராமையை யும் உற்று நோக்கின் உண்மை விளங்கும். தமிழ்மொழியிலுள்ள வல்லெழுத்துக் கள்அம்மொழிக்கணுள்ள மெல்லெழுத்துக் களினும் வல்லோசை யுடையனவே யாகும். ஏனைய மொழிகளி லுள்ள வல்லோசை எழுத்துக்களை நோக்கத் தமிழ் மொழியின் வல்லோசை எழுத்துக்கள் மிக மென்மையுடையனவாம். தமிழ் மொழியின் மெல்லிய நடை ஒன்றே அம் மொழியின் தொன்மையை அறிவுறுத்துவதாகும்.

## வாழ்வு

தொன்மையிற் சிறந்த தமிழ் மக்கள் தங்கள் வாழ்வை யிரு கூறாகப் பிரித்துக் கொண்டதையும் சிந்தித்தல் வேண்டும். நம் பண்டை மூதறிஞர்கள் வாழ்வை அகவாழ்வென்றும் புறவாழ் வென்றும் வகுத்து நாகரிகத்தை வளர்த்து வந்தது அறிஞரால்

இன்றும் போற்றுந் தகையனவா யிலங்குகிறது. அகமென்பது நுண்மை; புறமென்பது பருமை. அகத்தின் பரிணாமமே புறமாகும். அகமின்றிப் புறமில்லை. புறமின்றி அகமில்லை. அகத்தால் நுகரப் படும் இன்பத்திற்குப் புறம் இன்றியமையாதது. தொல்காப்பியத்தில் அகத்திணையும் புறத்திணையும் விரித்து ஓதப் பட்டிருத்தல் காண்க. அகப்பொருளில் ஒருவனும் ஒருத்தியும் நுகரும் இன்பத்துறை ஓதப்படுகிறது. புறப்பொருளில் போர்த்துறை முதலிய அரசியற் றுறைகள் ஓதப்படுகின்றன. அரசியல் ஒழுங்குபெற நடைபெற்றா லன்றி மக்கள் அக இன்பத்தை அன்பு வழியில் நுகர இயலாது. இக்காரணம் பற்றியே புறப்பொருட்கண் போர் முறைகளும் பிறவும் விரிவாக ஓதப்பட்டிருக்கின்றன.

### அரசியல்

தமிழ்நாட்டுப் பண்டைக்கால அரசியலைச் சிறிது கவனிப் போம். பழந்தமிழ் மன்னர்கள் குடிதழீஇக் கோலோச்சி வந்த உண்மை திருக்குறள் முதலிய நன்னூல்களில் நனி விளங்குதல் காண்க. அவர்கள் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் இரண்டு ஆலோசனைக் கூட்டங்களின் துணைகொண்டு ஆட்சி புரிந்து வந்தார்கள். அந்நாள் ஆட்சியின் தன்மையை,

> ***சோறு படுக்குந் தீயொடு***
> ***செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது***
> ***பிறிது தெற லறியார் நின்னிழல் வாழ்வோரே***
> ***திருவிலல்லது கொலைவில் லறியார்***
> ***நாஞ்சிலல்லது படையு மறியார்.***

எனும் புறநானூற்றுச் செய்யுளாற் காண்க. நந்தமிழ் வேந்தர்கள் உயிர்களிடத்து இரக்கங்காட்டிக் காவல் புரிந்துவந்ததை விளக்க ஈண்டோர் உதாரணம் குறிப்பிடுகிறேன். வேள்பாரி என்பார் தேரூர்ந்து காடு சென்று திரும்பிய போது, ஒரு முல்லைக்கொடி கொழுக் கொம்பினின்றும் வழுவித் தொங்கிக் கொண்டிருத் தலைக் கண்டு மனம் சகியாது வருந்தித் தாம் ஊர்ந்துவந்த தேரை அக் கொடிக் கீழ் நிறுத்தி அதனை அதன் மீது படருமாறு செய் வித்து இல்லஞ் சேர்ந்தாராம். அஃறிணைப் பொருளினிடத்தும் இரக்கங் காட்டிச் செங்கோல் நடாத்திய மன்னரைக் கண்டது நந்தமிழ்நாடு. திருவாரூர் மநுநீதிச் சோழன் வரலாறு உங்கட்கு நன்கு தெரியும். அதனை இங்கு விரித்துக் கூறிக் காலத்தைப் போக்க விரும்புகின்றே னில்லை. பிள்ளைப் பற்றை அறவே விடுத்து அப்பிள்ளையின் மருமத்தின் மீது தேரைச் செலுத்த

உடன்பட்ட மன்னரையன்றோ நந்தமிழ் நாடு ஈன்றது! தமிழ்நாட்டு மன்னர்கள் அன்பை என்னென்று வருணிப்பது? நந்தமிழரசர்கள் மாற்றார் நாடு புகுந்து ஆண்டுள்ள அனைவரையும் கொல்ல இசையமாட்டார்கள். போர்க்கெனச் சில நாகரிக முறைகள் பண்டைக் காலத்தில் வகுக்கப்பட்டன. திடீரென மாற்றார் நாடு புகுந்து ஆண்டுள்ள அனைவரையுங் கொல்லுதல் நாகரிகமாகாது. தமிழ்நாட்டுப் போர்முறைகளை நூல்களிற் காணும்போது, என்னுள்ளம் உருகு கிறது. அந்தோ! தமிழ்நாட்டின் நாகரிகம் என்னே! என்னே!! நந்தமிழ் மன்னர்கள் மாற்றார் நாட்டிலுள்ள பசுக்களையும் அந்தணர் களையும் பெண்மக்களையும் பிணியாளர்களையும் புத்திரப் பேறில்லாதவர்களையும் அப்புறப்படுத்திப் பின்னரே யுத்தம் தொடங்குவார்கள். இதனை,

**ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**
**எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென.**

என வரூஉம் புறநானூற்றுச் செய்யுளாற் காண்க.

## நாகரிகத் துறைகள்

பழந் தமிழர்கள் போர்த்துறையில் மாத்திரமின்றி வேறு பல துறைகளிலும் வல்லவர்களாயிருந்தார்கள். அவர்கள் பூத பௌதிக ஆராய்ச்சியிலும், கட்டிட அமைப்பிலும், வாணிபத்திலும், வைத்தியம், சோதிடம், இசை முதலியவற்றிலும் தேர்ச்சி பெற்றவர்களா யிருந்தார்கள்.

**மண்டிணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித்தலை இய தீயுந்**
**தீமுரணிய நீரும் என்றாங்**
**கைம்பெரும் பூதத் தியற்கை போலப்**
**போற்றாற் பொறுத்தலுஞ் சூழ்ச்சிய தகலமும்**
**வளியுந் தெறலும் அளியு முடையோய்.**

எனவும்,

**செஞ் ஞாயிற்றுச் செலவுமஞ் ஞாயிறுற்றுப்**
**பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்.**

எனவும் வரூஉம் புறச் செய்யுளைக் காண்க. அணுக்களால் உலகம் ஆக்கப்பட்ட உண்மையினையும், ஆகாயம் எவ்வித ஆதாரமு மின்றி இயங்குவதையும் சூரியனைச் சுற்றி மண்டிலங்கள் சுழன்று வருவ தையும் அறிந்து வாழ்ந்தவர்கள் நந்தமிழ் மக்கள். அவர்கள் வழித் தோன்றிய நாம் இந்நாளில் எந்நிலையை அடைந்து இருக்கின் றோம்? பூதங்களின் தன்மை தெரியாத புல்லர்கள் என்றும், மண்டி லங்களின் இயல்பு தெரியாத மடையர்கள் என்றும், பிறரால் எள்ளி நகையாடப் படுகிறோம். நாம் எந் நிலையி லிருந்தோம்? இப் பொழுது எந்நிலையிலிருக்கிறோம்? பெரியோர்களே! உங்கள் நிலையை உற்று நோக்குங்கள்!!

நம் முன்னோர்கள் சிற்பத் தொழிலின் பெற்றியை நான் விளங்க உரைப்பதற்கு அருகனல்லேன். நமது நாட்டு ஆலயங்களும், கோபுரங்களும், நமது நாட்டுச் சிற்பத் தொழிலின் பெற்றியை இனிது விளங்கச் செய்யும். நமதுநாட்டுப் பழைய மாளிகைகளை நூல்கள் குறிப்பிடுமிடத்து, மான்கண் போன்ற சாளரங்கள் கட்டிடங்களில் அமைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லுகின்றன. "மான்கண் காலதர் மாளிகை. . ." என்று சிலப்பதிகாரம் ஓதுதல் காண்க. நமது நாடு ரோமாபுரி, கிரீஸ், பாபிலோன் முதலிய வெளி நாடுகளோடு வாணிபம் செய்திருக் கிறது. நமது நாட்டுத் தொழில் முறைகளை சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் பரக்கக் காணலாம். பல தேயப் பொருள்களைக் கப்பல்கள் தாங்கித் துறை முகத்தில் நின்ற காட்சியை இளங்கோவடிகள்,

**முழங்கு கடன்ஞால முழுவதும் வரினும்**
**வழங்கத் தவாஅ வளத்த தாகி**
**யரும்பொரு டரூஉம் விருந்திற் றேஎ**
**மொருங்குதொக் கன்ன வுடைப் பெரும் பண்டங்**
**கலத்தினுங் காலினுந் தருவன ரீட்ட**

என்று சிலப்பதிகாரத்தில் வருணித்திருத்தல் காண்க! நமது நாட்டு இசையின் மாண்பை ஈண்டு இயம்பவும் வேண்டுமோ? சிலப்பதிகார அரங்கேற்று காதையைச் சிறிது உற்று நோக்குங்கள்! இசையின் மாண்பைக் காண்பீர்கள். யாழுங் குழலும் எந்நாட்டு இசைக் கருவிகள்? அவ்விசைக் கருவிகள் இப்பொழுது எங்கே? பாழான ஹார்மோனியமன்றோ நமதுநாட்டைக் கெடுக்கிறது? வைத்தி யத்தை எடுத்துக் கொள்வோம். நாடிப் பரீக்ஷை நம்முடைய நாட்டில் தான் உண்டு. நாடி பார்த்து நோயின் தன்மையுணரும் வைத்தியர்கள்

*இப்பொழுது வாழ்கிறார்களா? தமிழ் வைத்தியத்தைப் போற்றுகின் றேன். ஆனால் தமிழ் வைத்தியர்களை நம்ப மாட்டேன். இலைமறை காய்போல் சிலர் இந்நாளும் நமது நாட்டிடை வதிகின்றார். சமீபத்தில் சென்னையில் கூடிய தமிழ் வைத்திய மகா நாட்டில் ஒருவர் ஓரரிய தமிழ்நாட்டு வித்தையை உலகுக்கு புலப்படுத்தினார். ஒரு சிறு தொட்டியில் நீர்நிரப்பி அதன் மேலிருந்து அவர் பிராணாயாமம் செய்தார். தொட்டியி லுள்ள நீரானது காற்றை ஈர்க்கும்போது வயிற்றினுள்ளே நுழைந்து, காற்றை விடும்போது வயிற்றிலுள்ள அழுக்குகளைக் கழுவிக்கொண்டு தொட்டியில் இறங்கிவிடுகிறது. இவ்வித்தை பயின்றவர்க்கு இக்கால எனிமா வேண்டுமோ? நம்மவர்கள் நோக்காலும், பரிசத்தாலும், மூச்சாலும் அறிந்து வந்த நோய்களின் நுட்பத்தை அறிய இப்பொழுது கருவிகளின் உதவி நாடப்படுகிறது. நமது சோதிடத்தின் பெரு மையும் இத் தகைத்தே. இன்னோரன்ன பலதுறைகளைக் கண்ட அறிஞர்கள் வழிவழித் தோன்றிய நம்மெதிரில் அவை யாவும் மாண்டு வருகின்றன. அவைகளைக் கண்டு நமது மனங் குழைய வில்லை. நம்முன்னோர்கள் அறிவை - கல்வியை - அரிய துறையை - நாம் கொல்லவோ பிறந்தோம்?*

## பாட்டு

*நந்தமிழ் மக்கள் பாக்கள் யாப்பதில் மிக வல்லுநரா யிருந்தார்கள். பண்டைத் தமிழ்ப் புலவர்கள் இயற்கையோடு வாழ்ந்து இயற்கையாய் நின்று இயற்கையையே பாக்களாகப் பொழிந்தார்கள். பழந்தமிழ்ப் பாக்களை உற்றுநோக்கும்போது எழுத்துக்களா தோன்றுகின்றன? சொற்களா தோன்றுகின்றன? இல்லை; இல்லை. காடுகள் பொலிகின்றன. மலைகள் நிற்கின்றன. ஆறுகள் ஓடுகின்றன. அலைகள் வீசுகின்றன. அன்னார் பாக்களில் ஞாயிற்றைக் காணலாம்; திங்களைக் காணலாம்; எல்லாவற்றுக்கும் மேலான கடவுளைக் காணலாம். அத்தகைய பாவாணர் பரம்பரையில் வந்த நாம் என்ன செய்கின்றோம்? பட்டங்களில் அறிவைப் பதிய வைக் கின்றோம். உத்தியோகங்களில் உணர்வைச் செலுத்துகின்றோம். நாம் இயற்கையை மறந்தோம். பாடலை மறந்தோம். அடிமைகளாக வாழ்கின்றோம். பாட்டில்லாத நாடு பாழ் நாடன்றோ? பாட்டில் வாழ்ந்த ஆன்றோர் வழிவந்த ஆண் மக்களே! உங்கள் பாட்டு எங்கே?*

**சமயம்**

*தமிழ்ப் பெரியோர்களே! மேற்குறிப்பிட்ட துறைகள் எல்லாவற்றினும் உயர்ந்ததாய், ஆன்ம ஞானத்திற்கு வழிகோலுவதாயுள்ள சமயத் துறையிலும் நம் முன்னோர்கள் சிறந்து விளங்கினார்கள். தமிழ்மக்கள் கண்ட சமய உண்மை யாது? பண்டைத் தமிழ் நூல்களுள் தலையாயது தொல்காப்பியம். அந்நூலில் கடவுளைக்* ***கந்தழி*** *என்று சொல்லப்பட்டிருக்கிறது? கந்தழி என்றாலென்ன? பலர் பலவாறு பொருள் கூறுப. கட்டு அற்ற ஒன்றைக் கந்தழி என்று சில அறிஞர் உரைத்துளார். தத்துவங் கடந்த தனிப்பரம் பொருளை நம் நாட்டுப் பெரியோர்கள் கந்தழி என்று வழங்கி வந்ததைப் பெரிதும் கவனித்தல்வேண்டும். தத்துவங் கடந்த பொருள் எத் தன்மையது? தத்துவங்கடந்த பொருள் முழு அன்பு வடிவா யிருத்தல் வேண்டும். என்னை? தத்துவங்களால் கட்டப்பட்ட ஒன்று அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீக் குணங்களால் விழுங்கப் பெற்றதா யிருக்கும் என்க. பொறாமை முதலிய தீயகுணங்கள் அன்புள்ள இடத்தில் நிகழா. இவ்வுண்மை கண்டே நம் முன்னோர் கள் ஆண்டவனைக் கந்தழி என்று அழைத்தார்கள். அதாவது, ஆண்டவன் அன்பு வடிவினன் என்பதாம். இதனைப் பின் வந்த திருமூலர், மணிவாசகனார் முதலியோர், "அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார், அன்பே சிவமாவ தாரு மறிகிலார், அன்பே சிவமாவ தாரு மறிந்தபின், அன்பே சிவமா யமர்ந் திருப்பாரே" "ஈறிலாப்பதங்களியாவையுங்கடந்த இன்பமே என்னுடையன்பே" என்றும் "அன்பினில் விளைந்த வாரமுதே" யென்றும் அருளிச் செய்த திருவாக்குகளாற் காண்க. இறைவன் தத்துவங் கடந்து ஒளிர்தலை அருணந்தி சிவாச்சாரியார் என்னும் தமிழ்நாட்டு ஞானபாநு தமது சிவஞான சித்தியாரில்*

***மொய்தரு பூதமாதி***
***மோகிநி யந்த மாகப்***
***பொய்தரு சமய மெல்லாம்***
***புக்குநின் றிடும்பு கன்ற***
***மெய்தரு சைவ மாதி***
***யிருமூன்றும் வித்தை யாதி***
***எய்துதத் துவங்க ளேயும்***
***ஒன்றுமின் றெம்மி றைக்கே***

*என்றருளிச் செய்திருத்தல் காண்க. தமிழ்நாட்டில் தோன்றிய சமயநூல்கள் எல்லாம் ஆண்டவனை அன்பு வடிவினன் என்று*

அறிவுறுத்தியிருத்தலை இக்காலத்துத் தமிழ் மக்கள் கவனியா திருப்பது பெரிதும் வருந்தத் தக்கதே. அன்பர்களே! உங்களுக்கு வேதம் எது? உங்களுக்குச் சாத்திரம் எது? என்று அடிக்கடி நினைக்கின்றீர்களா? நாம் நமதுநாட்டு அரசியல், இசை, வைத்தியம், சோதிடம், முதலிய எல்லாத் துறைகளையும் மறந்தாலும் மறக்கலாம்; விட்டாலும் விடலாம். ஆனால் சமய ஞானத்தை மட்டும் மறத்தலாகாது. இத்துறைகளை மறக்கவேண்டு மென்று நான் கூறுவதாக நீங்கள் தவறாக எண்ணல் வேண்டாம். எல்லாவற்றிலும் சிறந்தது சமயம் என்னும் உண்மையை வலி யுறுத்தவே இவ்வாறு கூறினேன். நமது வாழ்வு சமயத்தை அடிப்படையாகக் கொண்டது. நாம் உலகிற் பிறந்ததும் வளர்ந்து வருவதும் கல்வி பயில்வதும் தொழில் புரிவதும் பொருளீட்டு வதும் மனைவி மணப்பதும் பிள்ளை பெறுவதும் எற்றுக்கு? சமய ஞானத்தைப் பெற அன்றோ? சமய ஞானம் பெறுவதே நமது வாழ்வின் நோக்கம். நமது வாழ்வு சமயத்தோடு பின்னிக் கொண் டிருக்கிறது. ஆகவே சமயத்தை உயிரினும் பெரிதாக ஓம்பல் வேண்டுமென்றோ? இந்நாளில் நமது சமய வாழ்வு எக்கேடு கெட்டிருக்கின்றது? பரிதாபம்! பரிதாபம்!!

## தமிழ்வேதம்

நமக்குத் தமிழ் வேதங்களாகத் தேவார திருவாசகங்கள் இலங்குகின்றன! நாலாயிரப் பிரபந்தம் விளங்குகிறது. இவ் வேதங்கள் கூறாத உண்மைகளும் உண்டோ? இவ்வேதங்களைப் படிப்பவர் தொகை அருகி வருவதைக் காண என்னுள்ளம் துடிக் கின்றது. தற்கால நாகரிகம் பரவியுள்ள சில நகரங்களில் யான் சென்றிருந்த போது சில வேளைகளில் திருவாசகத்துக்காக நான் அலைந்ததும் உண்டு. பலரைக்கேட்டதும் உண்டு. என்னருமைத் திருவாசகத்தைப் பெறாது வருந்தியதும் உண்டு. சில தமிழர் வீடுகளில் ஷேக்ஸ் பியரைக் கண்ட துண்டு. மணிவாசகரைக் கண்டே னில்லை. என்ன காலம்? என்ன கொடுமை? தமிழ் நாட்டுக்கு இத்தகைய இடுக்கண் விளைந்திருக்கிறதே! இந் நிலையை நீங்கள் ஆராய்கின் றீர்களா? சிந்திக்கின்றீர்களா? சிந்தித்துச் சிந்தித்து உருகி இந்நிலையை ஒழிக்க முயற்சி செய்கி றீர்களா? தமிழ்நாட்டில் திருவாசகமில்லாத வீடுகள் இருக்க லாமோ? இந்நாளில் ஆங்கிலம் பயின்ற பலர், "தேவாரத்தில் என்ன இருக்கிறது? திருவாசகத்தில் என்ன இருக்கிறது? நாலாயிரப் பிரபந்தத்தில் என்ன இருக்கிறது?" என்று கேட்கின் றனர். அன்னார் அறிவுக்கு இரங்குவதா? அறியாமைக்கு

இரங்குவதா? தேவாரத்தில் என்ன இல்லை? திருவாசகத்தில் என்ன இல்லை? நாலாயிரப் பிரபந்தத்தில் என்ன இல்லை? இங்கே திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கு ஒன்றை நினைவு ஊட்டுகிறேன். திருநாவுக்கரசர் தில்லையம்பதியை நண்ணிய போது ஆங்கே தில்லைக்கூத்தன், "எங்கு வந்தாய்?" என்று கேட்குமாபோல் காட்டும் திருக்கரக் குறிப்பை யுணர்ந்து, "அனைத்து நிந்நிலையங் காண்பான் அடியனேன் வந்தவாறே" என்று செவ்வனிறை இறுத்தாற்போல அருளிச்செய்த திருவாக்கை யோர்க. இத்திருவாக்கான் அறியக் கிடப்பது என்னை? மனிதன் தன் வாழ்வில் ஆண்டவன் யாண்டும் உறைவதைக் கண்டு இன்புறுவதன்றோ? அப்பெருநிலையை அப்பரெம்பெருமனார் ஓரடியில் நமக்கு அறிவுறுத்தி யுள்ளார்.

**ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை**
**யாருன்னை அறியகிற்பாரே**

என்று மணிவாசகனார் ஓரடியில் அரிய உபநிடதக் கருத்தை எவரும் எளிதில் உணருமாறு ஓதி யிருத்தலை உற்று நோக்கு வோர்க்குத் தமிழ் வேதங்களின் மாண்பு இனிது புலனாகும். தமிழ் வேதங்களை முற்றும் ஒருவன் ஆராயின் அவன் அறிவு விளங்கப்பெற்றுத் தன்னிடத்தும் மற்றப் பொருளிடத்தும் அன்பு வடிவாய் எழுந்தருளி யுள்ள ஆண்டவ னிருப்பை உணர்ந்து சமய ஞானியாய்த் திகழ்வன். தமிழ் நாட்டில் பிறந்த மக்கட்குச் சமய ஞானத்தை அறிவுறுத்துங் கருவி சிறந்த தமிழ் வேதமே யாம். அத்தமிழ் வேதத்தை ஓதாது ஞானநெறிநாடி வேறு நூல் களை ஓத முயல்வது கரும்பை விடுத்து இரும்பை மெல்வதை ஒக்கும். தமிழர்களே! உங்களுக்கென உங்கள் முன்னோர்கள் வேதங்களை அருளிச் செய்தார்கள். அவ்வேதங்களில் அரிய பொருளுண்மைகளும் மிளிர்கின்றன. அவ்வரிய வேதம் தமிழ் நாட்டில் அந்நிய வேதம்போல் இப்பொழுது பாவிக்கப்படு கின்றது. தமிழர்களே! நீங்கள் வேதத்தையே மறந்து வாழ்கிறீர் கள். அதனால் உங்களுக்குப் பல இன்னல்கள் விளைந்து கொண் டிருக்கின்றன. அன்பர்களே! 'தமிழ்நாடு எங்கள் நாடு' என்று இறுமாந்து எழுந்து அத்தமிழ் நாட்டு 'வேதங்கள் எங்களுடை யன' என்று கிளம்பி அவ்வேத நுண்பொருள்களை நீங்கள் உணர்வதோடு நில்லாமல் மற்றவர்களும் அவைகளை எளிதில் உணருமாறு நீங்கள் முயற்சி செய்யலாகாதா? தமிழ் மொழியில் வேதங்கள் இருந்தும் அவை தமிழ் மக்களுக்குப் பயன்படா திருப்பது கவலை யீனமோ? என்னவோ? அறிகிலேன்.

## சமய போதனை

தமிழ்நாட்டிற் பிறந்தமக்கள், "கண்டதேகாட்சி கொண்டதே கோலம்" என்று உலகில் உலகாயத வாழ்வை நடத்தினார்க ளில்லை. அவர்கள் தத்துவங்களை ஆராய்ந்து அவைகளின் தோற்றநிலை யிறுதிகளைக்கண்டு, அவைகளைப் பொய்யென்று தள்ளி, தோற்ற நிலையிறுதி யென்னும் விகாரமெய்தாத சித்பொருளுண்மைகண்டு அதன் இயல்களை உலகத்தார்க்கு அறிவுறுத்தினார்கள். தமிழ் நாட்டின் கலைகளின் பயனா யிருப்பது சமயவாழ்வொன்றே யாம். நம் முன்னோர்கள் தாங்கள் கண்ட உண்மையைப் பின்வருவோரும் கண்டு இன்புறல் வேண்டுமென்ற பெருங்கருணை யானே தங்கள் அனுபவங் களைப் பாடல்களாகப் பாடி வைத்தார்கள். ஒருவன் தான் காணும் உண்மையை மற்றையோர்க்கும் உணர்த்தல் வேண்டும். இல்லையேல் அவன் கண்ட உண்மையின் பயனை இழந்தவ னாவான். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று திருமூலரும் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்.

நம் சைவாச்சாரியர்களும் வைணவாச்சாரியர்களும் தாங்கள் பெற்ற இன்பத்தை நாமும் பெறவேண்டித் தேவார, திருவாசக, நாலாயிரப் பிரபந்தங்களாக வெளியிட்டனர். அவ்வேதங்களை ஓதும் நாம் நம்மளவில் நிறைவு கொண்டு மற்றையோர்க்கு வேத உண்மை கூற முற்படாதது வன் கண்மையே யாம். நீண்ட தூரத்தி லுள்ள மேல் நாட்டுப் பாதிரிமார்கள் நம் நாட்டிடைப் புகுந்து இரவு பகல் ஓயாது உழைத்துத்தங்கள் மதத்தைப் பரப்புகிறார்கள். தங்கள் மதத்தின் பொருட்டுக் கோடிக்கணக்கான பொருளைச் செலவு செய்து பாடசாலைகளையும் வைத்திய சாலைகளையும் வேறு பல தொழிற்சாலைகளையும் அமைக் கிறார்கள். இவ்வளவு உழைப் பையும் அவர்கள் மேற் கொள்ளு வதற்குக் காரணம் யாது? தங்கள் மதத்தைப் பரப்ப வேண்டும் என்ற ஒரு நோக்கமேயாம். அவர்கள் தாங்கள் பெற்ற இன்பத்தை மற்றவர்களும் பெற வலிந்து தொண்டு செய்கிறார்கள். நாமோ சாத்திரங்களை மூடி மூடி வைக்கின்றோம். இன்னார் சாத்திரம் படித்தல் வேண்டு மென்றும், இன்னார் படித்தலாகா தென்றும் இடைக் காலத் தில் தோன்றிய சில செல்வாக்குள்ள வகுப்பார் வெறுக்கத்தக்க கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினார்கள். இக் கட்டுப்பாட்டால் நமது சமய நூலாராய்ச்சி குன்றிப் போய்விட்டது. அதனால் நமது வாழ்வு குலைந்தது. வாழ்வுக் குலைவால் நமது

கல்வித்துறைகளும் தொழின் முறைகளும் அருகி விட்டன. நம்மவர்களே நம்முடைய சமய நூல்களைக் குறை கூறத் தொடங்கிவிட்டார்கள். சிலர் புறச் சமயம் புகுகின்றனர்.

சென்னையில் பங்கஜம் என்ற ஒரு ஹிந்துப் பெண் கிறிஸ்துவ மதம் புகுந்து திரும்பினதைப் பற்றிப் பத்திரிகைகள் கூக்குரலிட்டன. அவைகளை வாசித்தோரும் ஆராவாரஞ் செய்தனர். பத்திரிகைக் கூக்குரலும் மற்றையோர் ஆரவாரமும் என்ன செய்தன? நம் பெண்மக்கள் கிறிஸ்துவப் பாடசாலை களுக்குப் போகாமல் நின்று விட்டார்களோ? ஜனானா மிஷன் வேலை குறைந்து விட்டதோ? நம் பெண்மக்கள் கிறிஸ்துவ மதம் புகுதலை நிறுத்தி விட்டார்களோ? இல்லையே! ஒரு பங்கஜத்துக் காக ஓலமிட்ட பத்திரிகைகள் ஒன்பதாயிரம் பங்கஜங்கள் ஹிந்து மதத்தின் உண்மை தெரியாது கிறிஸ்துவ மதம் புகுந்து வருவதை உணரவில்லை போலும்! நம்மவர்கள் புறமதம் புகுதலைக் கண்டு பொறாமையுற்றுக் கூக்குரலிடுவதால் விளையும் பயன் என்னை? நாம் ஆற்ற வேண்டிய கடனை ஒழுங்காக ஆற்றின் நம்மவர்கள் புறமதம் புகுவது நின்று போகும். நம்மவர்கள் கவலையீனத் தாலும், சமய போதனைக் குறைவாலும், தாராள சிந்தையின்மை யாலும் நம் சகோதரர்கள் புறச்சமயம் புகுகிறார்கள். நான் கிறிஸ்துவப் பாதிரிமார்களைக் குறை கூறமாட்டேன். நம்மவர்கள் மீதே பழி சுமத்துவேன்.

கிறிஸ்துவப் பாதிரிமார்கள் தங்கள் மத உண்மைகளைப் பரப்பத் தொண்டு செய்வதுபோல நாம் ஏன் செய்தலாகாது? அதற்கு வரி உண்டா? வழக்கு உண்டா? அத்தொண்டுகளைச் செய்ய நம்பாற் பொருளில்லையோ? பொருளுண்டு; ஆனால் சமயப்பற்று இல்லை. சமயப்பற்று என்பது ஆலயங்களுக்குப் போதல், அநுஷ்டானஞ் செய்தல் மாத்திரமல்ல. அவைகளோடு ஞான நூல்களைப் பயிலல் வேண்டும். அந்நூல்களைப் பயின்று ஞான உண்மையை ஜாதிமத பேதம் பாராட்டாது அனை வர்க்கும் அறிவுறுத்தக் கடமைப்படல் வேண்டும்.

## சங்கங்கள்

பாடசாலைகள் வாயிலானும், வைத்தியசாலைகள் வாயி லானும், வேறு பல அறச்சாலைகள் வாயிலானும் சமய உண்மை களைப் பரப்பலாம். நம்மவர்கட்கு இன்னும் படமாடுங் கோயில்கள் மீது பற்று நிகழ்கின்றதன்றி நடமாடுங் கோயில்கள்மீது பற்று நிகழ்வதில்லை. இக்காரணத்தால் நஞ்சமய உண்மை பரவாது கிடக் கின்றது. சமய உண்மைகளைப் பரப்ப நாம் பல முறைகள்

கோலிக் கொள்ளல் வேண்டும். அம்முறைகள் பல. எல்லாவற்றை யும் இன்று விரித்துக் கூற இயலாது. எல்லாவற்றிற்கும் ஆதாரமா யிருப்பது பலர் கூடும் சங்கம். சங்க வாயிலாகச் சமயத் தொண்டுகள் பல செய்யலாம். ஒருவர் இருவர் சேர்ந்து உழைப்பதினும் பலர் சேர்ந்து உழைக்கும் உழைப்பால் பயன் விளையும். ஆதலால் சங்கங்களைக் காண்பதில் கண்ணுங்கருத்துமா யிருத்தல் வேண்டும். பாதிரிமார்கள் சங்கங் களின் வாயிலாகத் தங்கள் மதவுண்மையைப் பரப்பிக் கொண்டுள்ள முறைகளில் சிலவற்றை நாமுங் கொள்ளலாம். காலநிலை நோக்கிப் போதனா முறை களையும், அநுஷ்டான முறைகளையும், வேறு பல முறைகளை யும் மாற்றிக் கொள்வது பாவமாகாது.

## ஹிந்து மதாபிமான சங்கம்

இன்று ஹிந்து மதாபிமான சங்கத்தின் ஆறாம் ஆண்டு விழாக்கூட்டம் இங்கு குழுமியிருக்கிறது. இச்சங்கம் ஆறாண்டு களாகச் செய்துவரும் வேலைகளை நான் ஒருவாறு அறிவேன். இச்சங்கத்தின் ஆண்டு விழா சில ஆண்டுகளில் இரண்டுநாள் நடை பெற்றது; சில ஆண்டுகளில் ஒருநாள் நடைபெற்றது; இம் முறை அரைநாள் நடைபெறுகிறது. இதற்குக் காரண மென்னை? ஊக்கக் குறைவென்றே நான் ஊகிக்கிறேன். இந் நாட்டிற்கு இச்சங்கத்தைத் தலைச் சங்கமாகக்கொண்டு பல அருந் தொண்டுகள் செய்யலாம். ஒவ்வோராண்டும் காரைக்குடியில் ஆண்டுவிழா நிகழ்த்துவதைக் காட்டிலும் பல வேறிடங்களில் அவ்விழாவை நிகழ்த்துவதால் எவ்வளவு எழுச்சியுண்டாகு மென்பதை நான் உங்கட்கு விளங்க வுரைக்க வேண்டுவதில்லை. அடுத்த ஆண்டு தேவகோட்டையில் ஏன் ஏழாம் ஆண்டு விழாவை நடத்துதல் கூடாது? மூன்று நாள் பெரிய மகாநாடு கூட்டலாமே! தக்க ஒருவரை அக்கிராசனராக அமர்த்திப் பரந்த ஞானமுடைய புலவர்களைக் கொண்டு அரிய உபந்யாசங்கள் செய்விக்கலாம். ஆலயங்களிலும் சில அநுஷ்டான முறைகளி லும் அவசியம் செய்யப்பட வேண்டிய சில மாறுதல் களைத் தீர்மான வடிவமாக நிறைவேற்றிச் சமய உண்மை பரவலுக்குப் பாடுபடலாம். வெறும் உபந்யாசங்கள் மாத்திரம் செய்வதால் என்ன பயன் விளைந்துவிடும்? ஆதலால், பெரியோர்களே! இந்நாட்டிற்கு இச்சங்கத்தை அல்லது வேறு சங்கத்தைத் தலையானதாகக் கொண்டு அதன் வாயிலாக இந்நாட்டிலும் வேறு நாடுகளிலும் நந் தமிழ்மக்கள் சமயத்தை வளர்த்து வரலாம்.

## இறுவாய்.

இன்னும் பல உபந்யாசங்கள் நடைபெற வேண்டியிருத்தலால் என் பேச்சைப் பெருக்கிக்கொண்டு போக விருப்பமில்லை. அன்பர்களே! உங்களை நான் வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன். உங்கள் நாட்டின் தொன்மையைக் கவனியுங்கள். உங்கள் மொழியின் பழமையைக் கருதுங்கள்; உங்கள் இலக்கிய இலக்கணங்களை உற்று நோக்குங்கள்; உங்கள் காவியங்களை ஆராயுங்கள்; உங்கள் முன்னோர்கள் இசைப் புலமையையும் வைத்திய முறையையும் பிற துறைகளின் பெற்றியையும் சிந்தியுங்கள்; உங்கள் முன்னோர்கள் கண்ட சமய உண்மைகளை ஓருங்கள்; உங்கள் முன்னோர்கள் அறிவு நிலையென்ன? அன்பு நிலையென்ன? அருள் நிலை யென்ன? இப்பொழுது உங்கள் நிலையென்ன? எல்லாத் துறைகளிலும் உயரிய நிலை பெற்றிருந்த நாம் இப்போது மிக்க இழிநிலையை யெய்தியிருக்கிறோம். அவ்விழிவைப் போக்க வேண்டியவர் யாவர்? மற்றவரோ? நாமே அதற்குக் கடமைப் படல்வேண்டும். இந்நாட்டில் செல்வப் பெருக்கிற்கு ஓரளவில்லை. செல்வத்திற் சிறந்த நீங்களே தமிழ் நாட்டை வளர்க்க முற்படல் வேண்டும். இந்நாட்டினின்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உரிய எழுச்சி தோன்றின் அவ்வெழுச்சி யாண்டும் கிளம்புமென்பதில் ஐயமில்லை. ஆதலால் தமிழ்நாட்டின் நலத்திற்கு உழைக்க வாருங்கள்! ஒன்றுசேருங்கள்! ஹிந்து மதாபி மான சங்கத்தை வளர்க்கவாருங்கள்! உங்கள் உயிர் சமயம். உங்கள் வாழ்வு சமயம். எல்லாம் சமயம். சமய ஞானத்தில் பிறந்து, சமய ஞானத்தில் வளர்ந்து, சமய ஞானத்தில் வாழ்ந்துவரும் அறிஞர்களே! அன்பர்களே! உங்களுக்குச் சிறியேன் உபதேசஞ் செய்ய வேண்டுவ தில்லை. உங்கட்கு எல்லாந் தெரியும். உடனே சமய வளர்ச்சிக்கு உழைக்க எழுங்கள்!

❍❍❍

# சீர்திருத்தம்

## அல்லது

# இளமை விருந்து

(1930)

# முன்னுரை

உலகம் இயற்கைவழி இயங்கவே அமைந்தது. இயற்கைச் செந்நெறி நல்வாழ்வைக் கூட்டும். அந்நெறியினின்றும் வழுவ வழுவ மாசுகள் வாழ்விடைப் புகும். மாசுகள் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு விதமாக நின்று, மன்பதையின் ஆக்கத்துக்குக் கேடு சூழ்ந்து கொண்டிருக்கும்.

நமது நாட்டிலும் பலதிற மாசுகள் புகுந்து நாட்டைக் குலைத்து வரல் கண்கூடு. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன: பிறப்பு வழி உயர்வு தாழ்வு கருதல், மக்களுள் தீண்டாமை கொண்டொழுகல், பெண்ணை அடிமைப்படுத்தல், கண்மூடி வழக்க ஒழுக்கங்களை உடும்பெனப் பற்றிக் கிடத்தல் முதலியன. இக் கறைகளும் நாட்டை அடிமைக்குழியில் வீழ்த்தியிருக் கின்றன என்று நம்புவோருள் யானும் ஒருவன். அந்நம்பிக்கையி னால் நாட்டின் விடுதலை முயற்சியில் யான் தலைப்பட்ட நாள் தொட்டுச் சீர்திருத்த முறைகளையும் அம்முயற்சியுடன் புகுத்திப் பேசியும் எழுதியும் வருகிறேன். இது நாட்டவர்க்குத் தெரிந்த தொன்றே.

மேடைகளில் தாய்மொழியில் பேசப்படும் பேச்சுக்கள் பெரிதும் நேர்முறையில் நாட்டுக்குப் பயன்படுவதில்லை. அப் பேச்சுக்களைப் பத்திரிகை யுலகம் படுத்தும் பாட்டை ஆண்ட வனே அறிவன்.

அப்பாட்டை எனது தலைமையுரைகளிற் சிலவற்றைக் கொண்ட மற்றுமொரு நூலாகிய ‘தமிழ்த் தென்றல்’ என்னும் நூலின் அணிந்துரைக்கண் சிறிது விளக்கியுள்ளேன். அப்பகுதி வருமாறு :-

‘***மகாநாடுகளில் தலைமை வகிப்போர் தமது முதலுரையைச் சமயத்துக் கேற்றவாறு சில இடங்களில் பேசிவிடுவது வழக்கம்; சில இடங்களில் எழுதிப் படிப்பது வழக்கம். இவை முறையே (இக்கால வழக்கில்) வாய்ப் பேச்சு (Extempore Speech), எழுத்துப் பேச்சு (Written Speech) எனப்படும். இவ்விரு வழியிலும் அடியேன் கடனாற்றி யிருக்கிறேன்.

நமது நாட்டில் தாய்மொழி வாயிலாக நிகழ்த்தப்பெறும் வாய்மொழிப் பேச்சுக்கு உள்ள அல்லல் வேறெதற்கும் இல்லையென்று கூறலாம். அவ்வல்லலுக்குக் காரணம் தமிழ்மொழியில் சுருக்கெழுத்துப் பயிற்சி இன்னும் முற்றும் வளம்பெறாமையே யாகும். தமிழ்ப் பத்திரிகை நிருபர்கள் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயில்வதில் கவலை செலுத்துகிறார் களில்லை. அப்பயிற்சி பெரிதும் இப்பொழுது போலிஸார்க்கு உரிமைப் பொருளாயிருந்து வருகிறது. போலிஸாரல்லாத இரண்டொருவர் தமிழ்ச் சுருக்கெழுத்திற் பயிற்சி பெற்றிருத்தல் எனக்குத் தெரியும். அவர்க்குப் போதிய தமிழ்ப் புலமை இன்மையால் அவர் இடர்ப்படுவதையும் கண்டிருக்கிறேன். தமிழ்ப் புலமையுடன் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயின்றோர் வேறு சிலரிருக்கிறாரோ என்னவோ யான் அறியேன். தமிழ்ப் புலமையுடையார் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயின்று தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்வது நலம்.

தமிழில் நிகழ்த்தப்பெறும் வாய்மொழிப் பேச்சுக்கள் அவ்வண்ணமே புதினத் தாள்களில் வருவதில்லை. அவைகட்கு நடக்கும் கொலைகட்கோர் அளவுமுண்டோ? ‘அந்தோ! அந்தோ!’ என்று அலமந்து அழவேண்டுவதே.

பேசுவோன் கருத்தை நிருபர் தம்மொழியில் வடிக்கிறார். இனால் பேசுவோன் கருத்து அவன்மொழி யெனும் உடையிழக்கிறது. சிலபோழ்து பொருளே மாறுபடுதலுமுண்டு; வலிந்து மாற்றப்படுதலுமுண்டு. கட்சிப் பத்திரிகைகளின் திருவிளையாடல்களை ஈண்டு விரிப்பின் அவை பெருகும். தாய்மொழியில் நிகழ்த்தப் பெறும் வாய்ப்பேச்சு உள்ளவாறே பத்திரிகைகளில் காட்சியளித்தல் அரிது என்று சுருங்கச் சொல்லலாம்.

பத்திரிகைகளில் வெளிவரும் தாய்மொழி வாய்மொழி கொண்டு, பேசுவோன் உள்ளக்கிடக்கையை நேரியமுறையில் அளந்து காண இயலாத நிலையைத் தமிழ்நாடு உற்றிருக்கிறது. யான் ஒன்று இன்று மேடையில் பேசுவேன்; மறுநாள் பத்திரிகையில் அது வேற்றுருவில் திரிந்து வரும். என் செய்வது! ஆகவே பொதுவாக மகாநாடுகளில் - சிறப்பாகக் கட்சிக் கிளர்ச்சிகள் கனண்றெரியும் அரசியல் மகாநாடுகளில் - தலைமை வகிப்போர் எழுத்துப் பேச்சு முறைகொண்டு, பலதிற அல்லலைத் தொலைப்பது சிறப்பு. எழுத்துப் பேச்சில் வேறு சில நலன்களுமுண்டு***’

தாய்மொழி வாய்மொழிப் பேச்சுகள் படும் அல்லலைக் குறிக்க ஈண்டு இவ்வுரைகளே சாலும்.

‘தமிழ்த் தென்றல்’ என்னும் நூல் வெளிவந்த பின்னரும் எனது தலைமை கொண்ட மகாநாடுகள் சில, சில இடங்களில்

கூடின. அம்மகாநாட்டுத் தலைமையுரைகளிற் பல வாய்ப் பேச்சு கள்; சில எழுத்துப் பேச்சுகள். எழுத்துப் பேச்சுகளில் 'வாலிப நாடார் மகாநாட்'டின் தலைமையுரையும், யாழ்ப்பாண மாணாக்கர் மகாநாட்டுத் தலைமையுரையும் நூல் வடிவாக வெளிவருதல் வேண்டுமென்று நண்பர் சிலர் விழைந்தனர். அவர் விழைந்தவாறே அவ் விரண்டும் நூல் வடிவில் முதற் பதிப்பில் (1930) வெளியிடப்பட்டன.

**இரண்டாம் பதிப்பில்** (1937) 'திருச்சி - தஞ்சை ஜில்லாத் தமிழர் மாணாக்கர் மகாநாட்'டின் தலைமையுரை சேர்க்கப் பட்டது.

நூலின் உள்ளுறைக்கேற்ப நூலுக்குச் 'சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து' என்னுந் தலைப்பு அணியப்பட்டது.

நூன்முறை பற்றி இந்நூல் எழுதப்பட்டதன்று. மூன்று மகாநாடுகளின் தலைமையுரைகளைக் கொண்டதே இந்நூல். அம் மூன்றும் வெவ்வேறிடங்களில் வெவ்வேறு பொழுதில் கூடப்பெற்றன. இளமையுலகம் மூன்றற்கும் பொதுப்பட நிற் கிறது. ஆகவே, ஒரு மகாநாட்டுத் தலைமையுரையில் போந் துள்ள பொருள் சில, மற்றொரு மகாநாட்டுத் தலைமையுரை யிலும் வேற்றுருவில் திகழா நிற்கும்.

இந்நூற்கண் இளமை மாண்பு, அழகின் பெற்றி, இளமை யழகோம்பு முறைகள், காவியச் சிறப்பு, ஓவியத் திறன், இசை நுட் பம், நாடக நலன், சமரச சன்மார்க்கமென்னும் அன்பு நெறியே சமயமென்பது, கோயில் சீர்திருத்தம், தமிழ் மாண்பு, தமிழர் யார் என்பது முதலியன ஓதப்பட்டிருக்கின்றன; நாடு மொழி பிறப்பு முதலியவாற்றான் வேற்றுமை பாராட்டுவதால், சகோதர நேயத்துக்கு ஊறு நிகழ்தல் தெள்ளத் தெளிய விளக்கப்பட்டிருக் கிறது; சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண்ணடிமை முதலிய சிறுமைகளின் நீக்கம் நாட்டுக்கு விடுதலை நல்குவது என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது; கண்மூடி வழக்கவொழுக்கங்கள் மிக உரமாக மறுக்கப்பட்டிருக்கின்றன; வாழ்விற்குரிய வேறுபல சீர்திருத்தங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலின் உள் ளுறை இளைஞருலகிற்கு நல்விருந்தளிக்குமென்று கருதுகிறேன்.

இராயப்பேட்டை
12-08-1937 **திருவாரூர் – வி. கலியாணசுந்தரன்**

# வாலிப நாடார் இரண்டாவது மகாநாடு;
## (அருப்புக்கோட்டையில் கூடியது)
## – 1928 வருடம் ஜூலை மாதம் 5ஆம் நாள்

**எழுவாய்**

**அன்பிற் சிறந்த இளஞ்சகோதரிகளே! சகோதரர்களே!**

*ஈண்டு இன்று குழுமியுள்ள வாலிப நாடார் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் பேற்றைச் சிறியேற்கு வழங்கிய வரவேற்புக் கூட்டத்தார்க்கும், ஏனைய அன்பர்க்கும் எனது நன்றியறிதலான வணக்கம். அடியேன் ஆற்றப்புகுந்தொண்டில் குற்றம் குறைகள் நிகழுமேல், அவற்றைப் பொறுத்து மன்னிக்குமாறு உங்களை வேண்டுகிறேன்.*

*இந்நாளில் நமது நாட்டில் நிமிர்ந்தெழுந்து சுழன்று வரூஉம் இயக்கங்களிலுங் கிளர்ச்சிகளிலுங் கலவாது ஒதுங்கி நிற்கும் அடியேன், இம் மகாநாடு போந்து பணியாற்ற ஒருப் பட்டதற்குத் தலையாய காரணங்கள் இரண்டு. ஒன்று 'வாலிபம்' என்பது; மற்றொன்று அதைத் தொடர்ந்து நிற்கும் 'நாடார் மகாநாடு' என்பது. இவை இரண்டும் என்னை இம் மகாநாட்டுக்குப் போதருமாறு பிடர் பிடித்து உந்தின.*

**இளமை**

*இளமை எது? இன்பமா? இன்ப முகிழ்வா? இன்பக் கூர்தலா? என்னென்று சொல்வது? இளமை, நெஞ்சைக் கவர்வது போல வேறெதேனுங் கவர்கிறதா? இளமை இல்லையேல் உலகில் இன்பமேது? புல் பூடுகளிலும், செடி கொடிகளிலும், பறவை விலங்குகளிலும், மக்களிலும் இளமை அரும்பிக் கண்ணையுங் கருத்தையுங் கவர்ந்து, இன்ப அமிழ்தால் அகவிருந்து நல்கி வருவதை எவரே அறியார்? உலகை இன்பத்தால் ஓம்பி வருவது இளமை இளமையே.*

*கடவுள் உணர்விற்கு உறையுளா யிருப்பது இளமை என்று கூறல் மிகையாகாது.* ***இளமையின் கடவுட்டன்மையை*** *நம் முன்னோர் உணர்ந்தே யிருந்தனர். பண்டைத் தமிழர்*

இளமையைக் கடவுள் கூறுகளுள் ஒன்றெனக் கொண்டது ஈண்டு நினைவிற்கு வருகிறது. 'என்றும் இளையாய்' எனவும், 'மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி' எனவும் வரூஉம் நக்கீரனார் உரைகளை நோக்குக.

மக்கள் அகவைகளுள் விழுமியது இளமை என்பது எவரும் அறிந்ததொன்று. இளமையே வாழ்வுப் படிகட்கெல்லாம் அடி யாயிருப்பது; இளமையே வாழ்விற்கு அடிகோலுவது; இளமையே எல்லாவற்றிற்கும் ஊற்று; இளமைக் கால் கொண்டே வாழ் வெனும் நிலையம் எழுகிறது; ஒருவனது ஆக்கமுங் கேடும் அவனது இளமை யொழுக்கத்தையே பொறுத்துநிற்றலும் ஈண்டுக் கருதத்தக்கது.

இளமையில் பகைமை பொறாமை முதலியன நெளிதல் அரிது. அதன்கண் அன்பும் அருளும் பொலிதல் இயல்பு. பகைமை பொறாமையில்லா இடத்திலேயே ஒற்றுமைக்கு இடனுண்டு. ஆகவே, **இளமை, ஒற்றுமைக்கு உறுகருவியா யுதவுவ தென்க.** ஒற்றுமை என்ன செய்யாது? ஒற்றுமை எல்லாஞ் செய்யும். அவ்வொற்றுமைக்குரிய இளங் குழுவைக் காண எவரே விழையார்?

உலக சரித்திரத்தை நோக்குழி இளைஞர் முயற்சியா லேயே பல நாடுகள் ஆக்கமுற்ற உண்மை செவ்விதிற் புலனாகும். **மாஸினி** முதலிய தேசபக்தர்கள், இளைஞர் இயக்கத்தின் வாயி லாகவே தங்கள் நாட்டுக்கு விடுதலை கண்டது உங்கட்குத் தெரி யும். அவ்வரலாறுகள் சரித்திரத்தில் பலபடக் கிடக் கின்றன. அவற்றை விரிக்கிற் பெருகும். துருக்கி வளர்பிறையென வளர்ந்து வருவதையும், சீனத்துக்குற்ற சிறுமை பொன்றி வருவதையுங் கண்கூடாகக் கண்டு வருகிறோம். இக்காட்சிக்குக் காரணம் யாது? இளைஞர் இயக்கமன்றோ?

எக்காரணத்தாலேனும் நாடுகள் சவலையுறுமேல், அச் சவலை போக்குமாற்றல் அவ்வந்நாட்டு இளஞாயிறு களுக்குண்டு. நமது நாட்டின் சவலையைக் கூறவேண்டுவ தில்லை. அது வெள்ளிடைமலை. அச் சவலை போக்கவல்ல இள ஞாயிறுகள் ஈண்டும் மகாநாடு என்னுங் கருத்துக்கொண்டே இம்மகாநாடு நோக்கத் துணிந்தேன்.

**நாடார்**

நாடார் என்போர் மிகத் தொன்மை வாய்ந்த தமிழ்க் குடி மக்களிற் சேர்ந்தவர். அன்னார் பண்டைப் பெருமையும் பிறவும் பல மகாநாடுகளிற் பேசப்பட்டிருக்கின்றன. நாடார், பேச்சுடன்

*நில்லாது, ஆக்கத்துறை நண்ணிச் செயலில் பல வினைகள் நிகழ்த்தி வருவது, நாட்டின் நலத்தில் நாட்ட முடையார்க்குக் கழிபேருவகை யூட்டாநிற்கிறது. நாடார், பூசல் - பிணக்கு - போர் - முதலிய கேடுகளை விளைக்கும் அழிவினை யாற்றாது, ஆக்க வினை யாற்றிவருவது போற்றற்குரியது. நாடார் முயற்சியால் அவர் மரபுமட்டும் நலனுறுகிறது என்று எவருங் கருதாதிருப் பாராக. நாடார் ஊக்கத்தால் நாடும் உடன் வளர்ந்து வருகிறது. நாடார் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம் என்னும் நம்பிக்கை எனக்குண்டு. அந்நம்பிக்கையும் என்னை ஈங்கு ஈர்த்தது,*

**பாண்டி நாடு**

*இம் மகாநாடு இளஞைருடையதாதலின், இதன் கண் இளைஞர்க்குரிய பொருள் கிளத்திப் பேசலே சால்புடைத்து. நமது நாட்டின் தொன்மை, நாகரிகம், முன்னோர் வரலாறு முதலியவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுவது இளைஞரின் முதற் கடமை. அவற்றுடன் வேறு நாடுகளின் பழைய வரலாறு களையும் இளைஞர் ஆராய்ந்துணரல் அறிவிற்கழகு. சில வேளை களில் பழையன* ***சில இளைஞருலகிற்குப் புத்துயிரளித்தலு முண்டு;*** *சில இடங்களில்* ***பண்டைப் பெருமை யுணர்வு, புதுப்புதுக் சக்திகளைக் கிளப்பி*** *நலஞ்செய்தலு முண்டு.*

*உலகில் சரித்திரம் அறிஞரால் எழுதப்படுவதன் நோக்க மென்னை? வாழ்விற்கு அதன் துணை வேண்டற்பாலது என் பதே. ஒவ்வொன்றிற்கும் வாழ்வில் அனுபவம் பெற்று, நல்லன தீயன காண்பதற்குள் வாழ்வு முடிவெய்தும். சரித்திரத் துணை கொள்ளின், அதன்கண் போந்துள்ள நல்லன - வாழ்வில் கொள்ளத் தக்கன - இன்ன இன்ன என்றும், தீயன - வாழ்வில் தள்ளத்தக் கன - இன்ன இன்ன என்றும் அறிவுறுத்தும். ஆதலால், சரித்திர ஆராய்ச்சி இளைஞர்க்கு இன்றியமையாதது என்று வலியுறுத்து கிறேன்.*

*இளைஞர்களே! உங்கள் தாய்நாட்டின் ஒரு கூறாயிருப்ப தும், உங்கள் முன்னோர் பெருமைக்கு நிலைக்களனாக நின்றது மாயுள்ள* ***பாண்டி நாட்டின் தொன்மை, நாகரிகம், வழக்க வொழுக்கங்கள்*** *முதலியன உங்கள் முன்னேற்றத்துக்கு ஒரு பெருஞ் சக்தி வழங்குமென்பதில் ஐயமில்லை. அந்நாட்டின் பண்டைப் பெருமையை விரித்துக்கூற இம்மகாநாடும் இடந் தராது; போதிய நேரமுமில்லை. பத்துப் பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய* ***தமிழ்ப் பொருட்காட்சி*** *களிருக்கின்றன. அவற்றில் பழைய பாண்டி நாட்டைக் கண்டு*

ஊக்கங்கொள்க. அப்பெருநாட்டின் பழைய நிலைகளில் எடுத்துக்காட்டாக இரண்டொன்றைக் குறிக்கிறேன்.

பாண்டி நாட்டின் பெரும்பகுதி கடலால் விழுங்கப்பட்டது. இப்பொழுதுள்ள (மதுரை - இராமநாதபுர -திருநெல்வேலி - ஜில்லாக்களைக்கொண்ட) நிலப்பரப்பு, பழம் பாண்டியின் ஒரு கூறேயாகும்.

பாண்டி நாட்டின் தொன்மை சரித்திர காலத்தையுங் கடந்து நிற்பது. இராமாயண பாரதங்களில் பாண்டி நாட்டின் மாண்பு பேசப்பட்டிருக்கிறது. மகா வம்சத்தில் பாண்டி நாட்டின் மணங் கமழ்கிறது. **அசோகன் சாசனத்தில்** பாண்டி நாடு இடம் பெற்றிருக்கிறது. **மெகஸ்தினிஸ்** குறிப்பிலும் பாண்டி நாடு மிளிர்கிறது.

இத்தொன்மை வாய்ந்த நாட்டைப் புரந்த பாண்டி மன்னரின் வீரம், நீதி, அன்பு, அருள் முதலியன பழைய சங்கப் பாக்களாகப் பரந்து நிற்கின்றன. அப் பா நூல்களை இக்கால அறிஞர் சிலர் ஆய்ந்து, சரித்திர உலகம் ஏற்றுக்கொள்ளும் முறை யில் நூல் பல யாத்துள்ளனர். அவற்றுடன் உறவுகொள்ள வேண்டுவது உங்கள் கடமை என்று சொல்லத் தேவையில்லை.

பாண்டி மன்னரின் பெருமையை உணர்த்த ஈண்டொரு சிறு குறிப்பே பொறிக்க விரும்புகிறேன். கண்ணகி வரலாறு உங் கட்குத் தெரியும். அக்கற்புக் கடவுள் பாண்டியன் அவைக் களம் புகுந்து, தனது காதலனைக் கொன்றது அறமன்று என்று வாதம் புரிந்தபோது, 'கள்வனைக் கோறல் கடுங்கோலன்று' என்று அவள் கூற்றுக்கு மறுப்புரை பகர்ந்த மன்னன், பின்னைத் தன் தவறுத லுணர்ந்ததும், 'யானோ அரசன் யானே கள்வன்' என்று அரியாசத்தினின்றுங் கீழே சாய்ந்து, தனது இன்னுயிர் நீத்தான். ஒரு மன்னன் தன்பிழையை உணர்ந்ததும் மனச் சான்றால் தாக் குண்டு மாண்டான்! அவன் செங்கோல் மாட்சி என்னே1 அவன் முன்னோர் அறத்திறன் என்னே! இளைஞர்களே! உங்கள் **முன்னோர் ஆட்சியின் நீதியை** உன்னுங்கள்; உன்னுங்கள்.

பின்னே இவ்வரலாறு **களியாட்டின் பொருட்டு நாடகக் காரரால்** குடல் பிடுங்கிய கொலைக் கதையாகத் திரிக்கப் பட்டது. இடைக்காலத்தில் நமது கலைகளும், வழக்க வொழுக்கங்களும் பாழ்படுத்தப்பட்டதை நினைக்குங் கால் கண்ணீர் பெருகுகிறது. இப்பாழ்களைப் பொருளாகக் கொண்டு சிலர் நாட்டையே குலைக்கிறார்.

ஈண்டு வேறொன்று உங்களிற் சிலரது நினைவில் உறலாம். மனச்சான்றால் ஒருமன்னனை மாள்வித்த அறம் வளர்த்த

ஒருநாட்டில் **சமணரைக் கழுவேற்றிய மறம்** வளர்ந்ததென்னை என்று சிலர் கருதலாம். சமணரைக் கழுவேற்றிய வரலாற்றிற்குப் போதிய அகச்சான்றாதல் புறச்சான்றாதல் உண்டா என்பது, முதலாவது சிந்திக்கத்தக்கது. அச்சான்றுகள் கிடைக்கும்வரை, சமணரைக் கழுவேற்றிய வரலாற்றை யான் கொள்ளேன்; கொள்ளேன். தேவாரத்தில் போதிய அகச்சான்றில்லை. அந் நாளில் பாண்டி நாடு போந்த வெளிநாட்டார் சிலர் எழுதிய குறிப்புக்களிலும் அவ்வரலாறு காணோம். திருஞான சம்பந்த ருக்குப் பின்னே, பன்னூறு ஆண்டு கடந்து எழுதப்பெற்ற சில புராணங்களில் சமணரைக் கழுவேற்றிய கதைகள் சொல்லப் படுகின்றன. அக் கதைகளும் ஒருமைப்பாடுடை யனவா யில்லை. ஒரு புராணக் கதைக்கு மற்றொரு புராணக் கதை முரண்பட்டு நிற்கிறது. **இப்புராணக் கூற்றுக்களைச் சரித்திர உலகம்** ஏற்குங்கொல்! சரித்திர உலகம் ஏற்றுக்கொள்ளும் முறையி லல்லவோ சான்றுகளிருத்தல் வேண்டும்?

இப்பொழுது 'ஞான சூரியன்' என்னும் ஒரு நூல் தமிழ் நாட்டில் உலவுகிறது. அந்நூற்கண் எடுத்துக்காட்டப்பட்ட திரு ஞானசம்பந்தர் திருப்பாக்களில் ஒரு மாற்றஞ் செய்யப்பட்டிருக் கிறது. 'அந்தணாளர் புரியும் அருமறை - சிந்தை செய்யா அருகர் திறங்களை - சிந்தவாதுசெயத்திரு வுள்ளமே' என்பது தேவாரம். இதன்கண் போந்துள்ள 'திறம்' என்னுஞ் சொல், 'ஞானசூரிய' னில், 'சிரம்' என்னுஞ் சொல்லாக மாற்றப்பட்டிருக்கிறது. இம் மாற்றங் கண்டு, அந்நூலாசிரியரை நேரே பார்த்து அடியேன் கேட்டபோது, அவர் பெரிதும் வருந்திப் பத்திரிகைகட்கு ஓர் அறிக்கை அனுப்பினர். அது வருமாறு:-

அன்புடைய சகோதரர்கட்கு இக்கடிதம் வழியாய் அறி விப்பது யாதெனில், 'ஞான சூரியன்' என்றபுத்தகத்தில் பக்கம் 96-ல் சமணர்களை ஐயிக்கத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆலவாய்ப் பதிகத்தில் 'அந்தணாளர் புரியு மருமறை' யென்கிற பாட்டில் 'சிந்தை செய்யா வருகர் திறங்களை' என்ற சொற் றொடர்பு, 'சிந்தை செய்யா வருகர் சிரங்களை' என்று மாறியிருக் கிறது. அச்சுப் பிழையாக உள்ளதை 'ஞான சூரிய'னை வாசிக் கும் ஜனங்கள் 'சிரங்களை' என்று இருத்தலைத் 'திறங்களை' என்று திருத்தி வாசிக்கக் கேட்டுக்கொள்கிறேன். நான் எழுதின 'அப்ராஹ்மனோத்யோதனம்' என்ற மலையாள புத்தகத்தில் திறங்களை யென்றே எழுதி யிருக்கிறேன். மேற்படி 'ஞான சூரியன்' புத்தகத்தில் 80 பக்கம் அச்சிடும் வரைக்கும் என் கண் பார்வையில் நடந்தது. மிகுதி அச்சியற்ற திரு. வயி.சு. ஷண்முகம்

செட்டியார் அவர்களிடம் ஒப்புவித்தேன். ஆனால் இப்புத்தகத்தில் நிகழ்ந்த பிழை அச்சுப் பிழையாயிருத்தல் வேண்டும். அல்லது என் புத்தகத்தைக் காப்பி செய்தவர்களின் பிழையாயிருத்தல் வேண்டும். அதுவன்றி இப்புத்தகத்தில் பல அச்சுப் பிழைகள் வடமொழிப் பாட்டுகளிலும் தமிழ் நடைகளிலும் இருப்பதால் இனி, திருத்தி வெளியிட்டால் லோகோப காரமா யிருக்குமென்று நம்புகிறேன். (ஒ.ம்) சுவாமி சிவானந்த சரஸ்வதி.

இதை 6-4-28-ல் கூடிய பௌத்த மகாநாட்டிலும் அடியேன் விளக்கமாகக் குறிப்பிட்டேன்( திறம் - சமயக் கொள்கை. மணிமேகலையில் சமயக் கணக்கர் தந்திறம் உரைத்த காதை என வரூஉந் தலைப்பை நோக்குக)

அறிந்தோ அறியாமலோ உறும் மாற்றங்கள் பின்னே சரித்திர உலகிற்குப் பெருந்தொல்லை விளைக்கின்றன. அச்சில்லாத பழைய காலமாயின், 'ஞான சூரிய' னிலுள்ள மாறுபாடு யாண்டாயினும் ஒரு மூலையில் ஏட்டில் உறங்கிக் கொண்டிருக்கும்.

பண்டைப் பாண்டிமன்னர் எச்சமயத்துக்கும் இடையூறு செய்தனர் என்பது தெரியவில்லை. **சமயப் பொறை** அவரணிகலனா யிருந்தது. அம் மன்னர் காலத்தில் பல சமயத்தார் தத்தஞ் சமயம் வளர்க்க இடம்பெற்றனர். சங்கப் புலவருள் பல சமயத்தாரிருந்தனர். சமணர், புத்தர், கிறிஸ்துவர் முதலிய பல சமயத்தார் பாண்டி நாடு போந்து தத்தங் கொள்கையைப் பரப்பி வந்தனர். எல்லா வழியிலுஞ் செங்கோலாட்சி செலுத்திய பாண்டி மன்னர் வழி வழி வந்த ஒருவர், சமய வெறி மேலீட்டான், உயிர்களைக் கழுவேற்றுங் கொலைத்தொழிலை மேற்கொண்டிருப்பரோ? **கழுவேற்றிய கதையைச் சரித்திர முறையில்** கொள்வது பாண்டி மன்னரை இழிவுபடுத்துவதாகும்.

பழைய பாண்டிப் பெருநாட்டில் **பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதிப் புன்மையில்லை. தீண்டாமை** அந்நாளில் கிடையாது. சாதி யென்னுஞ் சொல் தமிழ்ச் சொல்லன்று. அந்நாளில் பெண்மக்கள் உரிமை பெற்றிருந்தார்கள்; கல்வியாளர்களா யிருந்தார்கள். செங்கோலும் ஓச்சினார்கள். விரிவு என்னால் எழுதப்பட்ட 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்னும் நூலில் காண்க.

பாண்டி நாடு **கிரீஸ், ரோம், பாபிலோன்** முதலிய நாடுகளுடன் வாணிபத் தொடர்பு பெற்றிருந்தது. வாணிபத்துக் குரிய துறைகள் பல வளம்பட்டிருந்தன. கல்வி நிலையைக் குறித்தற்குச் சங்கநூல்களே சாலும். வாழ்விற்கு இன்றியமையாத துறைகள்

*பல அமைந்தே யிருந்தன. பழம் பெருமையை இவ்வளவோடு நிறுத்திக் கொள்கிறேன்.*

*இளைஞர்களே! உங்கள் பாண்டி நாட்டின் அற்றை நிலையையும் ஒருங்கள்; இற்றை நிலையையும் ஒருங்கள். இந்நாளில் பாண்டிநாடு, சாதிப் பிணக்குகளாலும் சமயப் பூசல்களாலும் மோதுண்டு உடைந்து உடைந்து சிதறுண்டு கிடக்கிறது. அதை அன்பால் ஒருமைப்படுத்துங் கருவிகள் நீங்களே. பாண்டிப் பழமை உங்கட்குப் போதிய ஆற்றல் வழங்கும். அப்பழமை காணப் புதுக்கருவி கொண்டு எழுங்கள்; எழுங்கள்.*

**உடலோம்பல்**

*இளைஞர் உடலோம்பல்மீது பெருங்கவலை செலுத்தல் வேண்டும். இவ்வுலக இன்பத்தை நேரிய வழியில் நுகர்தற் பொருட்டே* ***கடவுளால் அளிக்கப்பெற்ற உடைமை*** *இவ்வுடல். இவ்வுடலை இளமையிலேயே வளம்படுத்திக் கொள்ளல் வேண்டும். இளமையில் உடலைக் காவாது கவலை ஈனமாகக் கிடத்தல், பின்னை இவ்வுலக வாழ்வை இழந்து துன்புறுதற்குக் கால்கொள்வதாகும். உடல்வளம் பெறாத ஒருவன் எச்செல்வம் பெற்றிருந்தாலென்னை? எப்பேறு பெற்றிருந்தாலென்னை?*

*நல்லுடலுக்கு அறிகுறி என்னை? அதன்கண் ஊறும் அழகேயாகும். அழகிலா உடல் நோயுடையது என்பதில் என்ன ஐயம்? அவ்வழகுக் கடவுள் கோயில் கொள்ளும் அகவை எது? இளமை இளமை என்று சொல்லலும் வேண்டுமோ?*

*இளமை அழகுக்குரியது. இக்கால இளைஞர் முகத்தில் அழகு ஒழுகுகிறதோ,* ***இளைஞரல்லரோ நாட்டின் செல்வம்?*** *அச்செல்வம் எந்நிலையிலிருக்கிறது? அதை உன்ன உன்ன உள்ளங் குழைகிறது.*

*பொதுவாக நமது நாட்டு இளைஞரையும், சிறப்பாகப் பள்ளி மாணாக்கரையும் நோக்குழி நாட்டுச் செல்வத்தின் நிலை புலனாகும். விழுந்த கண்ணும், வளைந்த முதுகும், சரிந்த தோளும், உடைந்த மார்பும், தளர்ந்த நடையுமுடைய உடலில் அழகுக் கடவுள் எங்ஙனம் கோயில் கொள்ளும்? அழகென்பது யாது? அழகு என்பது நிறத்தில், மயிர்நீவலில், மூக்குக் கண்ணாடியில், கழுத்துச் சுருக்கில், பட்டுடையில், பிற அணிகளில் அமைந்திருப்பதன்று. மூளை, இதயம், நுரையீரல், மண்ணீரல், குண்டிக்காய் முதலிய பேருறுப்புக்கள் செழிய நிலையில் நின்று ஒழுங்குபெறக் கடனாற்றலால் உற்று, நரப்புக் கட்டினின்றும் - தடைபடாக் குருதி யோட்டத்தினின்றும் - முகிழ்க்குந் தசையிடை அரும்புவது அழகாகும்.*

அழகு அரும்பா தொழிதற்கு மூலகாரணம் மலச்சிக்கலே யாம். வியர்வை முதலிய அழுக்குகள் வெளி வாராது ஆங் காங்கே தேங்கலும் மலச்சிக்கலின் பாற்பட்டதே. மலச்சிக்கலால் பிணி யுறுகிறது. பிணியால் பேர் உறுப்புக்களின் இயக்கமும், நரப்புக் கட்டும், இரத்த ஓட்டமுங் குலைகின்றன. இக்குலை வால் அழகு உறைதற்கு இடனில்லாமற் போகிறது. ஆகவே, மலச்சிக்கல் உறாதவாறு உடலை ஒம்புதல் வேண்டும்.

மலச்சிக்கல் உறுதற்குக் காரணம் என்னை? காரணம் பல படக் கூறலாம். சுருங்கச் சொல்லுமிடத்து இயற்கையோடி யைந்து வாழாமை, மீதூண், பொருந்தா உணவு, தீயொழுக்கம், செயற்கை முறைகட்கு இரையாதல், கடவுளிடத் தன்பின்மை, உயிர்களிடத் தன்பின்மை முதலியவற்றைச் சொல்லலாம்.

நல்லுடற் பேற்றிற்கெனப் பெரு முயற்சி செய்யவேண்டுவ தில்லை. **வைகறைத் துயிலெழப் பயிலுதல்** வேண்டும்; எழுந்து காலைக்கடன்களை முடித்து வியர்வை சிந்த ஏதாயினும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

**உடற்பயிற்சிகள்** பல திறத்தன. அவரவர் உடல்நிலைக் கேற்றவண்ணம் அவரவர் ஏதாயினும் ஒன்றைக் கொள்ளலாம். தண்டால், நீச்சு முதலியன சிறப்பாகக் குறிக்கத்தக்கன. எல் லாருங் கொள்ளத்தக்கதும் எளியதுமா யிருப்பது ஒன்று. அஃது உலாவுதல், நடையில் **உடற்பயிற்சியும், காற்றிடை மூழ்கலும் ஞாயிற்றொளியில் தோய்தலும்** நிகழ்ந்து விடுகின்றன. பின்னே நறுநீராடிக் கடவுளை நினைந்துருகி, உளத்தை அன்பு மய மாக்கிப் பொருந்திய உணவு கொள்ளல் முறைமை.

**உணவு முறைகள்** பெரிதும் கவனிக்கற்பாலன. முதலாவது வேளை நாழியின்றிச் சாப்பிடுவதை நிறுத்தல் நல்லது. பசித் தோற்ற மில்லாதபோது எக்காரணம் பற்றியும் உணவு கொள்ள லாகாது.

**மீதூண்** கொள்வது அறியாமை. நோய்க்கும், அகால மரணத்துக்கும் அடிகோல்வது மீதூண் மீதூணாகும். முன்னே உண்டது செரிப்பதற்குள், மேலே உண்டு உண்டு சுமை சுமத்திக் கொண்டிருந்தால், ஈரலுக்குச் சவலை ஏற்படும்; பின்னே மற்றப் பேருறுப்புக்கட்குக் கேடு நிகழும். அதனால் பிணியும் அகால மரணமும் நேரும்.

**பொருந்தா உணவு** கூடாது. இப்பொழுது நமது நாட் டில் மக்கள் பலர் பொருந்தா உணவு உண்டு, பலதிற நோய் வாய்ப்பட்டு, அகால மரணத்துக்குட்படுகிறார். நமது தென்

னாட்டார்க்கு ஜீவாதார உணவுப் பொருளா யிருப்பது அரிசி. அவ்வரிசி இயந்திரத்தால் நன்கு தீட்டப்படுகிறது. தவிட்டுக் கொழியல் ஜீரணத்துக்கெனக் கடவுளால் அமைக்கப் படுவது. அது நீங்கிய அரிசி பொருந்திய உணவாகுமா? கொழியல் நீங் காத கைக்குத்தரிசியைச் சமைத்துண்பது சிறப்பு. கைக்குத்தாலுங் கொழியல் நீங்குதலாகாது என்பது கருதத்தக்கது. **சமையல் மட்பாண்டங்களில்** செய்வதே பொருத்தம்.

***காய் கீரை*** முதலியவற்றை நாமே வீட்டுக் கொல்லைகளில் பயிரிட்டுக் கொள்வது நலன். **ஞாயிற்றினொளியிலுள்ள ஒரு விதச் சத்து,** காய் கீரைகளிற் புகுந்து படிகிறது. அச்சத்து நீங்கு தற்குள் அவற்றைச் சமைத்துச் சாப்பிடுதல் வேண்டும். இரண்டு நாள் மூன்றுநாள் வண்டிகளில் அடிபட்டு வறண்டு சத்திழந்த காய் கீரைகளைச் சாப்பிடுவது வெறும் மரத்துகளைத் தின்பதை யொக்கும். காய் கறிகளில் அளவுகடந்த புளி காரம் பெய்து சமைப்பது கூடாது. நந் தென்னாட்டார்க்குப் புளி காரப் பித்து என்று விடுமோ அறிகிலேன்.

**புலால் உணவுப்** பித்து மற்றொன்று. புலால் உணவில் உடல் உரம் உண்டு என்று சிலர் கருதுகிறார். புலால் உணவில் அமிழ்ந்து கிடந்த மேல்நாட்டு அறிஞர் பலர், இப்பொழுது புலால் உணவின் புன்மை தெரித்து வருகிறார். புலால் பொருந் திய உணவின் பாற்பட்டதன்று என்று அன்னார் ஆராய்ச்சி முறையுடன் பல நூல் எழுதி யிருக்கிறார். நம் முன்னோர் ஜீவ காருண்யத்தை அடிப்படையாகக் கிடத்திப் புலாலுணவை மறுத்துக் கூறினார். மேல்நாட்டு அறிஞர், 'புலால் உணவால் உடல் வளத்துக்கே கேடு உண்டு' என்பதை ஆராய்ச்சியால் நிறுவிக்காட்டி அவ்வுணவை மறுக்கிறார். ஆதலால், உடல் நலன் விரும்புவோர் புலாலுண்ணா திருப்பாராக.

**காப்பி, டீ, கொக்கோ, ஓவல்டையன்** முதலிய குடி களையுந் தொலைத்தல் வேண்டும். குளிர் மிகுந்த மேனாட்டறிஞரே அவற்றை இப்பொழுது விலக்கி வருகிறார். வெம்மை நாட்டில் வாழும் நமக்கு அக்குடிகள் எற்றுக்கு? நமது நாட்டில் என் புருக்கி(க்ஷயரோகம்) முதலிய நோய்களைப் பெருக்கி வருவன அக்குடிகளேயாகும். அப் பானங்கட்குப் பதிலாக நீர் மோர் இளநீர் முதலியன கொள்ளலாம்.

***கள், சாராயம்*** முதலியவற்றின் கொடுமையை ஈண்டுக் குறிக்கவேண்டுவதில்லை. இப்பொல்லாக் குடிகளால் மக்களின் ஈரல் முதலிய உறுப்புக்கள் அரிக்கப்படுகின்றன; எரிக்கப்படு கின்றன. இவற்றைக் கனவிலும் மறந்துங் கருதலாகாது.

புது நாகரிகத்தால் வேறொரு கொடுமை சிறப்பாக இளைஞரிடைக் காட்டுத் தீப்போல் பரவி வருகிறது. அஃ தென்னை? சுருட்டு, சிகரெட், பீடி முதலியன பிடித்தல். சிறு சிறு குழந்தைகள் வாய்களும் புகை யந்திரங்களாக மாறிவிடுகின்றன. அவர் தமது நுரையீரலும் இதயமும் அப்புகை வெம்மையால் எரிக்கப்படுவதைத் தொடக்கத்தில் உணர்கிறாரில்லை. நாளடை வில் இளைஞர் அழகிழந்த என்புக் கூடுகளா கின்றனர். உடலுக்குக் கேடு விளைக்கத்தக்க வழக்கஒழுக்கங் களில் இளைஞர்க்குப் பற்றும் பிடிவாதமும் உண்டாதல் தவறு. அத் தீப்பயிற்சியுடைய இளைஞர் மெல்ல மெல்ல அதை ஒழிப்பாராக.

**நல்லொழுக்கம்** உடலோம்பலுக்கு இன்றியமையாதது. மீதூண் கொள்ளாது பொருந்திய உணவு கொள்ளும் ஒருவன், ஒழுக்கங் காவாதொழிவனேல் பயன் விளையாது. நல்லுண வுடன் நல்லொழுக்கமும் தேவை. **நல்லுணவு, நல்லொழுக்கத் தின் பொருட்டே கொள்ளப்படுகிறது.** ஒழுக்கம் உடல் நல னுக்கு உயிர் போன்றது. 'ஒழுக்கம் விழுப்பந் தரலால் ஒழுக்கம் - உயிரினும் ஓம்பப்படும்' என்றார் நாயனார்.

பொறாமை, சினம், அவா, பிறர்மனை விழைதல், வரை வின்மகளிர் இன்பந் துய்த்தல் முதலிய **தீய ஒழுக்கங்கள்** உடல் வளனைக் கெடுத்தல் இயல்பு. **கெட்ட எண்ணங்கள் உடலை எரிக்கும் எழுநா** என்று சுருங்கச் சொல்கிறேன். கெட்ட எண்ணங்களுடன் உணவு கொள்வோன், உணவுடன் நஞ்சையும் கலந்து உண்பவனாகிறான். இக்காரணத்தான் உண்பதன் முன் அன்புக் கடவுளை நினைந்து உணவுகொள்ளும் முறை நம் முன் னோரால் கோலப்பட்டது. **அன்புக் கடவுளை** நினைந்து, அக் கடவுள் கோயில் கொண்டுள்ள உயிர்களின் நலங் கருதிப் பணி யாற்றுவதற்கு, உடலோம்பலும் (கடவுள்) வழிபாட்டில் ஒரு முறையாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அன்பு நினை வுடன் உணவு கொள்வதும் உடலோம்புவதாகும்.

நமது நாட்டின் **சிலம்பப் பயிற்சியை** உங்கட்கு நினை வூட்ட விரும்புகிறேன். பண்டை நாளில் நமது நாட்டில் முனிவர் உள்ளிட்ட பலருஞ் சிலம்பம் பயின்று வந்தனர். இப்பொழுது அதன் நிலை எவ்வாறிருக்கிறது. நகரங்களில் அதன் பெயரே மறைந்துவிட்டது. அது தத்தாரிகளின் ஆட்டத்துக்குரிய தென்றுஞ் சில இடங்களிற் கருதப்படுகிறது. சிலம்பத்துறை ஒவ் வொன்றும் உடலோம்பலுக்குரியது. அஃதெங்ஙனம் ஒரு சிற் றினத்துக்கு மட்டும் உரியதாகும்? அதுபற்றி ஈண்டுப் பலபடப் பேசாது, நமது நாட்டுச் சிலம்பப் பயிற்சியை உயிர்ப்பிக்க

வேண்டுவது இளைஞர் கடமைகளுள் ஒன்று என்று குறித்து மேற்செல்கிறேன்.

ஆசனங்களைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். **ஆசனங்கள்** யோகிகளுக்குரிய சாதனங்கள் என்று பலரால் கருதப்படுகிறது. அப்பிழைபட்ட கருத்து ஒழிக; ஒழிக. ஆசனங் களின் கூறுகள் இப்பொழுது நன்கு ஆராயப்பட்டன. உட லோம்பலுக்கு அவற்றினுஞ் சிறந்த சாதனங்கள் வேறில்லை என்று கூறல் மிகையாகாது. தோல், நரம்பு, சினையுறுப்பு, முத லுறுப்பு முதலிய எல்லாவற்றிற்கும் உரமூட்டும் ஆற்றல் ஆசனங் கட்குண்டு. **ஓரிடத்திருந்துகொண்டே உடற்பயிற்சி செய்யும் முறைகள்** நம் முன்னோரால் காணப்பட்டன. அவர்தம் அறிவுத் திறனை என்னென்று புகழ்வது?

வேறு பல **யோக நெறிகள், சந்தியாவந்தன முறைகள், சரியையாதித் தொண்டுகள்** முதலிய யாவும் உடலோம்பலைக் குறிக்கொண்டே காணப்பட்டன என்பது எனது கருத்து. அவை யாவும் ஆண்டவன் நினைவூட்டும் முறையில் கோலப்பட்ட பெருமை நம் ஆன்றோருடையது. **தற்கால பூத பௌதிக நூற்றுணைகொண்டு,** அப்பழைய முறைகளை ஆராய்ந்தால், அவற்றின் நுட்பம் புலனாகும்.

உடலோம்பி, உடலை வளஞ்செய்த பின்னை, **இல்லறத்தி லிறங்கல்** வேண்டும். இல்லறத்தின் இன்றியமையாமையைப் பற்றி, 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்னும் நூலில், 'இயற்கையறம்' என்னும் பகுதியில் என்னால் இயன்றவரை விளக்கி யிருக்கிறேன். **இல்லறத்திலுள்ள பல நலன்களுள் உடலோம்பலு மொன்று.**

இன்னோரன்ன பலதிற வழிகளில் உடலையோம்பிவரின், நோயற்ற வாழ்வெனுங் குறைவற்ற செல்வம் பெறலாம்; மறுமை யிலும் இன்பம் நுகரலாம். ஆகவே, **நோயணுகா அழகுடல்** பெற முயலுங்கள்.

மேல்நாட்டார், சிறப்பாக அமெரிக்க நாட்டார், உட லோம்பல் முறையை ஒழுங்குபடுத்தி வருகிறார். இயற்கையோ டியைந்த எளிய வாழ்வை அன்னார் அறிவுறுத்தத் தொடங்கி யிருக்கிறார். அவர், **ஞாயிற்றின் ஒளிக்கணுள்ள சக்திகளை** ஆய்ந்து ஆய்ந்து பல உண்மை காண்கிறார்; காற்று, நீர், மண் முதலிய இயற்கைக் கூறுகள் வாழ்விற்கு நல்கி வரூஉம் அருமை களை யெல்லாம் கண்டு வருகிறார்; மக்களுடன் அழகு என்றும் நிலைத்து உறைதற்குரிய முறைகளைத் தெரிந்து வருகிறார்.

அழகு வளர்ச்சிக்கெனவும் காப்புக் கெனவும் பல கழகங்கள் ஆங்கே காணப்படுகின்றன. நாம் என் செய்கிறோம்? நமது காலம் எவ்வழியில் செலவாகிறது? இளைஞர்களே! ஓர்மின்! ஓர்மின்! நம் முன்னோராய பழந்தமிழர் அழகின் நுட்பம் தெளிந்து, **அழகையே கடவுளாக்** கொண்டாரெனில், அவர் இயற்கையுடன் எவ்வளவு இயைந்து வாழ்ந்தனர் என்பது விளங்கும். அழகைப் பற்றியும் பிறவற்றைப் பற்றியும், 'முருகன் அல்லது அழகு' என்னும் நூலில் விரிவாக எழுதியுள்ளேன்.

இளைஞர்களே! உடலோம்பலுக்குரிய அகவை இதுவே. இவ்வேளையிலேயே உடலோம்பலிற் கருத்தைச் செலுத்துங்கள்; உடல்வளம் பெறா வாழ்வு என்ன வாழ்வு? நீங்கள் **அழகுக் கொழுந்துகளாகப்** பொலிதல் வேண்டும்! உங்களைப் பார்க்கும் போது அழகுக் கடவுள் நினைவு தோன்றுதல் வேண்டும்; ஆகவே, **அழகை எண்ணுங்கள்; அழகை உன்னுங்கள்;** அழ காகுங்கள். நாடு முழுவதும் உங்களால் அழகு பெறல் வேண்டு மென்பது எனது பேராவல்.

**வீரம்**

வாழ்விற்கு வீரம் வேண்டற்பாலது என்று பல நாட்டு ஆன்றோர் கூறியுள்ளார். வாழ்விற்கு வீரம் வேண்டற்பாலதே. வீரம் எது? பொறாமையினின்றெழும் மூர்க்க சக்தியே பெரிதும் வீரம் என்று வழங்கப்படுகிறது. அது தவறு.

**பொறாமை,** அழகுடல் பெற்ற அழகுளத்தில் எழுதல் அரிது. பொறாமை முதலிய தீநீர்மைகட்கு அடிப்படை நல் லுடலின்மையே யாகும். குருதிநிலை குன்றிய உடலில் வெம்மை செறிதல் இயல்பு. அவ்வெம்மையினின்றும் சினம் அழுக்காறு முதலிய நச்சுக்குழவிகள் பிறந்துகொண்டே யிருக்கும். அவை பிறரைத் துன்புறுத்தவே தூண்டும். அத்துன்புறுத்தல் எங்ஙனம் வீரமாகும்? மெலிந்த உடலில் குருதி சுவறிய காரணத்தால் பொறாமை வெகுளி நிரம்பிய உள்ளத்தினின்றும் பிறப்பது வீரமன்று. அஃது அச்சமாகும். அச்சம் கருவி தாங்கச் செய் கிறது. **அச்சம் பின்னாளில் வீரமாகக் கொள்ளப்பட்டது.** அதற்கேற்ற கதைகளும் எழுதப்பட்டன.

பிறர் வெகுண்டெழுந்து துன்புறுத்தும்போது அதைப் பொறுத்தலே வீரம். கோழைமையால் துன்பம் பொறுத்தல் வீரமாகாது. அன்பால் அதைப் பொறுத்தலே வீரம். அன்பி னின்றும் வீரம் பிறத்தல் வேண்டும். இவ்வீரத்துக்கு இலக்கிய ராகப் பண்டை நாளில் **மார்க்கண்டர், பிரகலாதன், சோக்ரதர்,**

***கிறிஸ்து, திருநாவுக்கரசர்*** முதலியோர் விளங்கினர். இற்றைநாளில் ***மகாத்மா காந்தி*** அவ்வீரத்தைப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இளைஞரிடைப் பொறுமை வீரம் பொலிதல் வேண்டு மென்பது எனது வேணவா. இவ்வீரம் பெற இளைஞர் முயல்வா ராக. இதற்கு நல்லுடல் தேவை. ஆதலால், உடலை நல்வழியில் ஓம்புக.

**கல்வி**

'இளமையிற் கல்' என்பது ஔவையார் அமுதமொழி. **இளமை** கல்விக் குரியது. இளமையைக் கல்விக்குப் பயன் படுத்தலே பொருத்தம். அதனைப் பிறவற்றிற்குப் பயன் படுத்தல் பொருத்தமன்று. வயிற்றுப் பிழைப்பு நாட்டமே பொருத்தமற்ற ஒன்றில் மக்களைப் புகுத்துகிறது. 'வயிற்றுப் பிழைப்புக்கெனக் கல்வி பயில்வோர் போக, மற்றையோர் ஏன் கல்வி பயிறல் வேண்டும்' என்னும் எண்ணம் இளமையைப் பாழ்படுத்துகிறது; பலரைக் கல்வியறிவில்லாத கயவராக்குகிறது. இவ்வெண்ணம் நாட்டை விட்டகலல் வேண்டும். இக் குறைபாட்டைப் போக்கவே கட்டாயப் படிப்பு முறை வலியுறுத்தப்பட்டு வருகிறது.

சட்டம் வந்தபின்னைக் கட்டாயப் படிப்பில் தலையிடுவது அறிவுடைமையாகாது. சட்டமில்லா நாளில் கட்டாயக் கல்வி பெற முயல்வதே அறிவுடைமை. நாடார் சகோதரர்கள் இம் முயற்சியில் தலைப்படுவரேல் மிக எளிதில் வெற்றி பெறுவார்கள் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இம்முயற்சியில் விரைந்து தலைப்படுமாறு சகோதரர்களை வேண்டுகிறேன். 'கல்வியறி வில்லாதார் நாடாரிலில்லை' என்று உலகங் கருதுமாறு நீங்கள் உழைப்பீர்களென்று உறுதியாக நம்புகிறேன். உங்கள் உழைப்பால் விளையும் பயனைக் காணும் மற்றவரும் உங்கள் அடிச்சுவட்டைப் பற்றி நடக்க எழுவர். நாளடைவில் நாடே கல்விநலம் பெறும். கல்வி அறிவால் நாட்டிலுள்ள பலதிறக் குறைபாடுகள் ஒழியும். குறைபாடுகட்குக் காரணம் போதிய கல்வி யறிவின்மையன்றி வேறென்னை?

அறிவு விளக்கத்துக்கும், ஒழுக்கத்துக்கும், இன்ன பிற வற்றிற்கும் பொதுவாயுள்ள கல்வியுடன், பின்னை வாழ்விற் கென,. வேறு பல கல்வித் துறைகளுள், தத்தம் இயல்புக் கியைந்த ஏதாயினும் ஒன்றைக் கணித்துக்கொண்டு, அதில் சிறந்த புலமை பெற இளைஞர் முயல்வாராக. இப்பொது - சிறப்புக் கல்வி, வாழ்விற்குப் பெருந்துணை செய்யும். **ஏடெடுத்துப் படித்தல்**

***மட்டுங் கல்வியாகாது.*** *தொழிற் பயிற்சியுங்* ***கல்வியின்பாற் பட்டதே.***

*இந்நாளில் கல்வி யென்பது பொருளற்றுக் கிடக்கிறது. குறிப்பிட்ட பாடங்களை நெட்டுருச்செய்து, பரீட்சையில் ,தேறிப் பட்டம்பெற்று, ஒரு தொழிலில் நுழைவதற்குக் கல்வி ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. நாளடைவில்* ***அக் கல்விக்கும் வாழ்விற்கும்*** *தொடர்பில்லா தொழிகிறது. இது கல்வியாகுமா?*

*'ஆங்கிலம் பயிறலே கல்விக்கழகு' என்று சிலர் கருதுகிறார். அப்பயிற்சியுடையாரே கற்றவரென்றுஞ் சிலர் சொல்கிறார். ஆங்கிலம் பயிறலாகாது என்று யான் ஒருபோதுஞ் சொல்லேன்; உலக மொழியாகப் பரவிவரூஉம் அம்மொழிப் பயிற்சி இளை ஞர்க்கிருத்தல் வேண்டும் என்றுஞ் சொல்வேன். ஆனால், 'ஆங் கிலத்திலேயே கல்வி யறிவுண்டு. அதுவே வாழ்விற்கு உய்யுநெறி காட்டுவது' என்பன போன்ற கூற்றுக்கள் ஏற்றுக்கொள்ளுந் தகையனவல்ல.*

*ஆங்கிலமென்பது ஒரு நாட்டு மொழி. அம்மொழிப் பயிற்சியிலேயே கல்வியறிவுண்டு என்று கருதுவது அறியாமை. கல்வி யறிவை எம்மொழி வாயிலாகவும் பெறலாம். கல்வி யறிவிற்கு 'இம்மொழி' 'அம்மொழி' என்னுங் கட்டுப்பாடில்லை. ஜெர்மெனி, பிரான்ஸ் முதலிய நாட்டிலுள்ளோர் தத்தம் தாய் மொழி விடுத்து, ஆங்கிலம் படித்தா கல்வி அறிவு பெறுகிறார்? புதுவைக் கணுள்ள தமிழ்மக்கள் ஆங்கிலம் கற்றா மேல்நாட்டுத் தத்துவங்களை உணர்கிறார்கள்? திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர், சேக்கிழார் முதலியோர் ஆங்கிலம் பயின்றா உலகம் போற்றுங் காவியங்களை எழுதினர்? ஆகவே, 'ஒரு நாட்டுமொழியே கல்விக்குடையது' என்று கொள்ள இயற்கை யில் எந்நியதியுமில்லை என்பதை உணர்க. அவரவர் தத்தம் தாய் மொழியிலேயே கல்வி பெறலாம்.*

*நாம் தமிழ் மக்கள். நாம் நமது தாய்மொழி வாயிலாகக் கல்வி பெறலே சிறப்பு. அதுவே இயற்கை முறை. போதிய ஓய்வும் நேரமும் வாய்ப்பும் இருப்பின் வேறு பல மொழிகளையும் பயிலலாம்.*

*தமிழில் "அக்கலை இல்லையே; இக்கலை இல்லையே; சிறப்பாக 'ஸைன்ஸ்' என்னும் அறிவுக்கலை இல்லையே" என்று சிலர் கூக்குரலிடுகிறார். 'ஆங்கிலத்தில் முதல் நூல்களாகவா எல்லாக் கலைகளும் பிறந்தன' என்பதை அச்சகோதரர்கள்*

உன்னுவார்களாக. வேறு மொழிகளிலிருந்தும் ஆங்கில அறிஞர் தம் மொழியில் பல கலைகளைப் பெயர்த்தெழுதியுள்ளனர். இதுகாறும் உலகில் காணப்பட்டுள்ள புதுமைகளெல்லா வற்றையும் ஆங்கிலேயர் மட்டுமா கண்டனர்? இல்லை; இல்லை. சில பிரஞ்சுக்காரரால் காணப்பட்டன. சில ஜெர்மானியரால் காணப்பட்டன; மற்றுஞ் சில வெவ்வேறு நாட்டினரால் காணப் பட்டன; ஆங்கிலேயருஞ் சில கண்டுள்ளனர். நமது டாக்டர் போஸ் சில கண்டு வருகிறார். உலகில் பல இடங்களில் பல நுட்பங்கள் காணப்படல் இயல்பு. அவற்றைக் காணும் அறிஞரை 'அவ்வந் நாட்டார்' 'அவ்வம் மொழியினர்' என்று கருதல் கூடாது. ஆங்காங்கே அறிஞர் கண்ட உண்மைகள் மன்பதைக்குரியன. அவற்றை நாடு, மொழி என்னுஞ் சிறைகளிலிடுவதினுஞ் சிறந்த மடமை பிறிதொன்றில்லை. அவ்வுண்மைகளை அவரவர் தத் தம் மொழியில் பெயர்த்து அறிவுபெறல் வேண்டும். அவ்வழியி லேயே உலகம் இயங்கி வருகிறது.

அவ்வம் மொழிக்கே சிறப்பாக விளங்கும் நூல்களுமுண்டு. அவற்றை மொழிபெயர்ப்பதால் பயன் விளையாது. அவை யாது? அவையே காவியங்களென்பன. காவியங்கள் எவ்வெம் மொழியில் தோன்றினவோ அவ்வம்மொழியாளர்க்கே அவற் றின் கலந்த இன்பந் தோன்றும். அவ்வின்பம் மொழி பெயர்ப்பில் உறுதலரிது. காவியங்கள் போக, மற்றக் கலை ளெல்லாம் உலகி லுள்ள அனைவர்க்கும் பொது உடைமை.

நமது தாய்மொழியில் உலகிலுள்ள பலதிறக் கலைகளைப் பெயர்த்தெழுதி நாம் பயின்று வரலாம். இந்நோக்குடனே தமிழ்ப் பல்கலைக் கழகங் காணப்படும் முயற்சி நாட்டில் அரும்பி வருகிறது. இவ்வேளையில் நமது தாய்மொழியில் எல்லாக் கலை களையுங் கொணர அறிஞர் முயல்வாராக. இம்முயற்சி தாய் மொழியின்மாட்டுக் கொள்ளும் அன்பைப் பொறுத்து நிற்பது. இளைஞர்களாகிய நீங்கள், 'தாய்மொழியிலேயே கலைகளைப் பயிறல் வேண்டும்' என்னும் உறுதி கொள்வீர்களானால், தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தமிழ்நாடு நாளையே பெற்றுவிடும். 'இளைஞர்களே! இம்முயற்சியில் தலைப்படுங்கள்' என்று எவ ரேனும் உங்கட்குச் சொல்லலும் வேண்டுமோ? அஃது உங்கள் கடமை என்று முழங்குகிறேன்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழி நிலையைப் பொறுத்தே நிற்கும். நமது தாய்மொழியின் தொன்மை, சிறப்பு முதலியவற்றை விரித்துரைக்க வேண்டுவதில்லை. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே பெரும் பெரும் காப்பியங்களை அணிந்

தவள் நந்தமிழன்னை. அவ்வளமுடைய தமிழில் எக் கலையை நுழைத்தல் முடியாது?

நம்மவர்க்குத் தாய்மொழிப் பற்று குறைவு என்பது வெளிப் படை. தாய்மொழிப் பற்றில்லாத இடத்தில் முன்னேற்ற முயற்சி எங்ஙனம் உருக்கொள்ளும்? முன்னேற்றத்துக்கு உயிர் தாய் மொழியன்றோ? அதன்மீது கவலை செலுத்தாதிருப்பின், நாட் டின் சவலை எவ்வாறு நீங்கும்? அயர்லந்தின் விடுதலைக்கு அந் நாட்டுத் தலைவர்கள் எவ்வெத் துறையிலோ முயன்றார்கள். அம்முயற்சிகளால் அவர்கள் வெற்றி பெற்றார்களில்லை. இறுதி யில் அவர்கள் நாட்டு மொழியில் காதல் கொள்ள லானார்கள். நாட்டு மொழியை ஓம்பினார்கள். அதனால் அவர்கள் வெற்றி பெற்றார்கள். இஃது உலகறிந்ததொன்று. நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டது. அம்மொழியை வஞ்சிப்பது பிறந்தநாட்டை வஞ்சிப்பதாகும்.

நமது நாட்டில் 'தலைவர்' கற்றவர்' என்று சொல்லிக் கொள்வோருள் எத்துணைப்பேர் தாயை வஞ்சிக்கிறார் என் பதை, இளைஞர்களே! கூர்ந்து கூர்ந்து உன்னுங்கள்; உன்னி உன்னித் தாய்மொழியின் இன்றியமையாமையை உணருங்கள். உணர்ந்து உணர்ந்து தாய்மொழியின் ஆக்கத்துக்குப் பாடு படுங்கள். உங்கட்கு எல்லா நலனுமுண்டாகும்.

உலக வாழ்விற்கு மிக மிக இன்றியமையாதது 'ஸைன்ஸ்' என்னும் அறிவுக்கலை. உடற்கூறு, உடலோம்பு முறை, பூத பௌதிகம், மின்சாரம், நம்மைச் சூழ்ந்துள்ள செடி கொடி பறவை விலங்கு முதலியவற்றினியல், கோளியக்கம், கணிதம், அகத்திணை முதலியன வாழ்விற்கு வேண்டுமா? வேண்டாவா? இந்நாளில் இவைகளைப்பற்றிய பொது அறிவாதல் பெற்றே தீரல் வேண்டும். இவ்வறிவுக் குறைவால் நாடு மிக இழிந்த நிலை யுற்றிருக்கிறது. இவ்விழி நிலையைப் போக்கவேண்டுவது உங்கள் கடமை.

புற உலக ஆராய்ச்சிக்கு 'ஸைன்ஸ்' கொழுகொம்பு போன்றது. நம் முன்னோர் கண்ட பல உண்மைகள், 'ஸைன்ஸ்' அரணின்றி இந்நாளில் உறுதிபெறல் அரிது. இக்கால உலகத் தோடு உறவு கொள்ளுதற்கும் 'ஸைன்ஸ்' தேவை. ஆதலின், 'ஸைன்ஸ்' என்னும் அறிவுக் கலை இளைஞருலகில் பரவல் வேண்டும்.

வாழ்விற்குரிய இன்பத் துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று. அதைத் தலையாயது என்றுங் கூறலாம். வாலிப

*நாடார்களே! நாம் தமிழர்கள், நாம் பாட்டின்பத்தை நுகர வேண்டுமேல் நாம் யாண்டுச் செல்லல் வேண்டும்? தமிழ் இலக்கியங்களிடையன்றோ? இப்பொழுது தமிழ் இலக்கியங் கள் தமிழிளைஞரால் பெரிதும் படிக்கப்படுகின்றனவா? இல்லையே. எனவே, இளைஞர் வாழ்வில் ஒரு பெரும் இன்பத்தை இழப்பவ ராகிறார்.*

*தமிழில் பாட்டுருங் காப்பியங்களில்லையோ? பலப்பல இருக்கின்றன. இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு; இயற்கை இன்பக்கலம் கலித்தொகை; இயற்கை வாழ்வில்லம் திருக்குறள்; இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணி மேகலையும்; இயற்கைத் தவம் சிந்தாமணி; இயற்கைப் பரி ணாமம் கம்பராமாயணம்; இயற்கை அன்பு பெரிய புராணம்; இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக் திருவாய் மொழிகள். இத் தமிழ்க் கருவூலங்களை உன்ன உன்ன உள்ளத் தெழும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்லல் இயலாது. அஃது அநு பவ நிகழ்ச்சியில் உறுவது. இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள்; தமிழ் இன்பத்தினுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ? 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்குங் காணோம்' என வரூஉந் தமிழை - தமிழ்ப் பாரதியை - நோக்குங்கள்; தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்; இன்பம் நுகருங்கள்.*

**சமயம்**

*சமயம் மக்களை விலங்கினின்றும் பிரிப்பது. சமயம், மக் கட்குக் கடவுள் உணர்வூட்டி, அவர்களைக் கடவுள் நெறியில் நிறுத்துவது. சமயம், மக்கள்பாலுள்ள அழுக்காறு அவா வெகுளி முதலிய விலங்கு நீர்மைகளைச் செகுத்து, அவ்விடத்தில் அன்பு அருள் அறம் முதலிய கடவுள் நீர்மைகளைப் பெய்து, அம் மக்கள் கடவுள்நிலைபெறத் துணைபுரிவது. இப்பேறு பெறு வதே மக்கள் வாழ்வின் நோக்கம். பிறந்து வளர்ந்து மாண்டுபோவதா வாழ்வின் நோக்கம்? அன்று; அன்று. மாண்ட பின்னரும் நமக்கு வாழ்வுண்டு. முன்னே இவ்வாழ் வுண்மை ஆன்றோர் மொழிகளி லும், நம்பிக்கையிலும் நின்றிருந்தது. இப்பொழுது அஃது* ***ஏதுக்களால்*** *உறுதிபெற்று வருகிறது.*

*இவ்வுடல் நீத்தல் என்னும் இறப்பு நிகழும்போது, இவ் வுடலினின்று பிரிந்து செல்லும் நுண்ணுடலைப் படம் பிடிக்கும் ஒரு புதுமை இப்பொழுது மேல்நாட்டில் காணப்பட்டு வரு*

கிறது. இன்னும் அம்முயற்சி மேன்மேலும் அந்நாட்டுத் தத்துவ உலகில் வளர்ந்துவரும். நம் முன்னோர் அகமுகத்தில் கண்ட பல உண்மைகள், மேல்நாட்டுப் புறமுக ஆராய்ச்சியில் உறுதிப்படுங் காலம் சேய்மையிலில்லை. இவ்வுடலை நீத்த உயிர்களுடன் உரையாடுவது அத்துறையில் பயில்வோர்க்கு மிக எளிதாய் விட்டது.

இவ்வுடல் நீத்த பின்னை, ஒருவர் பெறும் வாழ்வு, பெரிதும் இவ்வுலகில் அவர் நடாத்தும் வாழ்வையே பொறுத்து அமைவது. இவ்வுண்மை யுணராது, 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று அலங்கோல வாழ்வு நடாத்துவது அறிவுடைமை யாகாது. ஆதலால், இவ்வுலகில் நாம் நல்வாழ்வு நடாத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அந் நல்வாழ்வே சமயநெறி என்பது.

சமயநெறி என்றதும், கோலம் - வேடம் - கோயில் - விழா முதலியவற்றின்மீது கருத்துச் செலுத்தி, அவையே சமயம் என்று கொண்டு இடர்ப்படலாகாது. அவை சாரங்கள் போன்றன. இந் நாளில் அவை சாரங்களாகவுந் துணை புரிவதில்லை. சமய ஒழுக் கத்தையே குலைக்குங் கூற்றுகளாக அவை மாறிநிற்கின்றன. 'அவையே சமயம்' என்று கருதிச் சமயத்தைக் குறைகூறல் அறிவுடைமையாகாது.

அன்பை வளர்த்து வளர்த்து, அன்பில் தோய்ந்து தோய்ந்து, அன்பின் முழுநிலையெய்த முயல்வதே சமயநெறி நிற்றலாகும். உள்ளத்தில் அன்பு நிலவும்போது எவ்வுயிர்க்காதல் தீங்கு செய்யும் எண்ணம் எழுகிறதா? இல்லை. பின்னை எப் பொழுது தீநீர்மை இடம் பெறுகிறது? உள்ளத்தில் பகைமை முருகி எழும்போது பிறர்க்குத் தீமை செய்யும் தீநீர்மையும் உடன் எழுகிறது. தன்னுயிரைப் போல மன்னுயிரையுங் கருதாமைக் கும், கொலை களவு முதலிய பெரும்பாவ நிகழ்ச்சிகட்கும் மூலமா யிருப்பது எது? அன்பின் குறைபாடேயாகும். முழு அன்பு எத் தீமைக்கும் இடந்தராது. எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாமை என்னும் பேரறம், வாழ்வில் அரும்ப வேண்டுமேல், நாம் என் செயல்வேண்டும்? என்றும் அன்பை நினைந்து நினைந்து அன்பு வினையாற்றி, அன்பு வாழ்வு நடாத்தும் செந்நெறி நிற்றல் வேண்டும். அச்செந்நெறியே சமயநெறி என்பது.

அன்பாவது, அழுக்காறு அவா வெகுளி முதலிய தீநீர்மை கள் இல்லாத இடத்தில் பொலிவதென்பது எவர்க்குந் தெரியும்? அவ்வன்பே கடவுள், 'கடவுள் அன்பாயிருக்கிறார்' என்று பைபில் சொல்கிறது. 'அன்புஞ் சிவமு மிரண்டென்பர் அறிவிலார் - அன்பே'

சிவமாவ தாரும் அறிகிலார் - அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின் - அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே' என்று திருமந்திரஞ் செப்புகிறது. அவ்வன்புக் கடவுளோடு தொடர்புகொண்டு வாழ் வதே சமயநெறி நிற்பதென்க.

இச் சமயநெறி இவ்வுலக வாழ்வைத் தூய்மைப்படுத்தி, மறுவுலக வாழ்விற்கும் அடிகோல்வது. பின்னை மெய்வாழ்விற்கு அடிகோலவல்ல ஒரு நெறி, வாழ்விற்கு எத்துணை இன்றியமை யாத தென்பதை இயம்பலும் வேண்டுமோ? இளைஞர்களே! 'சமயமென்ன' என்று கவலையீனமா யிராதே யுங்கள்; பின்னை வாழ்வு, சமயத்தையே பொறுத்து நிற்பதை உன்னுங்கள். பின்னை வாழ்வுண்மை, ஆராய்ச்சியுலகில் உறுதி பெற்று விட்டது. இன்னும் என்ன ஐயம்? ஆதலால், சமயநெறி நிற்க முயலுங்கள்; முயலுங்கள்.

"உலகில் 'பல கடவுளர்', 'பல சமயங்கள்' இருக்கின்ற னவே; எக்கடவுளைத் தொழுவது; எச்சமயநெறிநிற்பது' என்று சிலர் ஐயுறலாம். அப் பன்மையுணர்வு முதலாவது ஒழிதல் வேண்டும். கடவுளர் பலரில்லை; சமயங்களும் பலவில்லை. ஆனால் கட வுளையுஞ் சமயத்தையுங் குறிக்கத்தக்க பெயர்கள் பல உண்டு. மொழிகள் பலவுள்ள மட்டும் பல பெயர்களிருந்தே தீரும். அறிஞர் அப்பெயர்ப்பொருளையே கொள்வர். பெயர்ப்பன்மை கொண்ட சமயப் போரில் இறங்குவது மடமை. சமயப்போரில் தலைப்படுவோர், இவ்வுலகிலும் அன்பு நிலை யிழந்து, மறுவுல கிலும் நிலைபேறான வாழ்வு பெறாது இடர்ப்படுவர்.

கடவுள் நெறி ஆங்காங்கே தோன்றிய அருளாளரால் அறி வுறுத்தப்பட்டது. அவ்வறிவுறுத்தல் உலகில் பல சமயங்க ளாகக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு சமயத்தையும் துருவித் துருவி ஆராய்ந்தால், கடவுள் ஒருவர் என்பதும், அவர் அன்பு வடிவினர் என்பதுஞ் செவ்வனே பெறப்படும். மக்கள், அருளாளர் அறி வுறுத்திய கடவுள் நெறியெனுஞ் சமயநெறி நின்றொழுக வேண் டுமே யன்றிக் காம வெகுளி மயக்கத்தால் சமய வாதத்தி லிறங்குதல் கூடாது. அஃது அறியாமை.

சமய வாதங்களால் விளையுங் கேடுகளைக் காணுஞ் சிலர் 'சமயமே வேண்டா' என்று கூறத் தொடங்குகிறார். இஃது ஆராய்ச்சியுந் தெளிவுமில்லாதார் கூற்று. சமய வாதத்தை வெறுத்துத் தள்ளுதல் வேண்டுமேயன்றிச் சமய வாழ்வை வெறுத்துத் தள்ளுதலாகாது.

வாழ்விற்கு இன்றியமையாத சமய நெறியைப் பண்டைத் தமிழர் மிகத் திறம்பட வகுத்துச் சென்றனர். பழந்தமிழர் அழகுக்

*கடவுளை இயற்கை வாயிலாகப் போற்றினர்; இயற்கை வழி பாட்டை அக்கடவுளுணர்விற்குரிய நெறியாகக் கொண்டனர். பின்னே அவ்வழகுக் கடவுள் பல பெயர் பெற்றது; அப்பெயர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடவுள் பெயராகக் கொள்ளப்பட்டது; இயற்கை வழி பாட்டு முறையும் பலவாறு திரிபுபட்டது. 'ஒன்றற்கே பல பெயர்' என்னும் உணர்வில்லா தார் போர்த் துறைகளிலிறங்கி, நாட்டுவாழ்வைக் குலைத்துக் கொண்டனர். நாம், முன்னை ஒருமையின்மீது கருத்துச் செலுத்துவதா? அல்லது பின்னைப் பன்மையின்மீது கருத்துச் செலுத்தவதா? பின்னைப் பன்மைப்போர் நமக்கெற்றுக்கு? முன்னை ஒருமை அன்பையே நாம் கொள்வோம்.*

*அவ்வப்போது உலகிடைத் தோன்றிய பெரியோர் சமரச ஞானத்தையே அறிவுறுத்திச் சென்றனர். அவருள் நந்தமிழ் நாட்டிற்றோன்றிய பெரியோர் அருளிய செம்மொழிகளிற் சில வருமாறு :-*

***'வாது செய்து மயங்கு மனத்தராய்***
***யாது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்***
***யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்***
***மாதேவ னலால் தேவர்மற் றில்லையே'*** - திருநாவுக்கரசர்

***'எங்குவந் துறுகோ என்னையாள் வோனே***
***ஏழுல கங்களும் நீயே***
***அங்கவர்க் கமைத்த தெய்வமும் நீயே***
***அவற்றவை கருமமும் நீயே***
***பொங்கிய புறம்பால் பொருளுள வேலும்***
***அவையுமோ நீயின்னே யானால்***
***மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே***
***வான்புல னிறந்ததும் நீயே'*** - நம்மாழ்வார்

***'ஆன சமயம் அதுவிது நன்றெனும்***
***மாய மனிதர் மயக்க மதுவொழி***
***கானங் கடந்த கடவுளை நாடுமின்***
***ஊனங் கடந்த உருவது வாமே'***

***'ஒன்றது பேரூர் வழியா றதற்குள***
***என்றது போல விருமுச் சமயமும்***
***நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்***
***குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே'***

***'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்***
***நன்றே நினைமின் நமனில்லை நாணாமே***

***சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து***
***நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே'*** - திருமூலர்

***'வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின்***
***விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்***
***மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன***
***வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா'***
- தாயுமானார்

***'எவ்வகைச்சார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்***
***எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது தெய்வம் என்று,***
***கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன் றறியீர்'***
- இராமலிங்க சுவாமிகள்.

***'ஓதுசம யங்கள் பொருளுணரு நூல்கள்***
***ஒன்றோடொன்று ஒவ்வாமல் உளபலவும் இவற்றுள்***
***யாதுசம யம்பொருள் நூல் யாதிங் கென்னில்***
***இதுவாகும் அதுவல்ல எனும்பிணக்க தின்றி***
***நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண***
***நிற்பதுயா தொரு சமயம் அதுசமயம்'*** - அருணந்திசிவம்

*இப்பொழுது சமரசஞான வேட்கை யாண்டுங் கிளம்பி யிருக்கிறது. அவ்வேட்கை தணிக்கத் தமிழ்அறிஞர் முன்னரே தமிழ்க் கேணிகள் உதவியிருக்கிறார். அக்கேணிகளில் இறங்கித் தண்புனல் அருந்துமாறு இளைஞரை வேண்டுகிறேன். இளைஞர் சமரசச் சமயநெறி பற்றி நடப்பாராயின், உலகில் சமயப் போர் தொலையும்; ஒரு சமயம் விடுத்து மற்றொரு சமயம் புகுதலும் ஒழியும். எங்குமுள்ள கடவுள் ஒரு சமயத்தில் வீற்றிருந்து மற்றச் சமயத்தில் வீற்றிரார் போலும்! அகண்டாகார ஆனந்தப் பொருளைக் கண்டப் படுத்தி இடர்ப்படுவது அறியாமை.*

***'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்***
***அங்கங் கிருப்பதுநீ அன்றோ பராபரமே'***

*என வரூஉந் தாயுமானார் திருவாக்கை ஓர்க.*

*எங்கும் நீக்கமற நிறைந்துள்ள கடவுளை எப்படி வழிபடுவது? உலகில் பலதிற வழிபாடுகளிருக்கின்றன. அவற்றைப் பற்றிய ஆராய்ச்சி ஈங்கு வேண்டுவதில்லை. உயிர்கள் வழிபாடு எல்லா வழிபாடுகளினுஞ் சிறந்தது.*

*எவ்வுயிரையுந் தன்னைப்போல் கருதி, அவ்வுயிர்க்குத் தீங்கு செய்யாது, நலஞ்செய்யப் புகுவதே சிறந்த வழிபாடாகும். உயிர்களுக்குச் செய்யுந் தொண்டே கடவுளுக்குரிய தொண்டாகும்.*

*'ஆண்டவன் எங்குமுளான்' என்னும் உணர்வு வளர வளர மக்கள் எக்காரணம் பற்றியும் உயிர்கட்குத் தீங்கு செய்ய ஒருப் படார்கள். எவ்வுயிரிலுங் கடவுளிருப்பை உணரும் ஒருவன் கொலை களவு முதலிய மறவினைகளை ஆற்றுவனோ? ஆற்றான். இவ்வருணெறியே சமயநெறியாகும்.*

***'எவ்வுயிரும் நீங்கா துறையும் இறைசிவனென்று***
***எவ்வுயிர்க்கும் அன்பா யிரு'*** - சைவ சமய நெறி

***'தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்***
***செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே'***

***'கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்***
***றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே'***

***'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே***
***அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே'*** - தாயுமானார்.

***'எவ்வுயிரும் பொதுவெனக்கண் டிரங்கியுப***
***கரிக்கின்றார் யாவர் அந்தச்***
***செவ்வியர்தஞ் செயலனைத்துந் திருவருளின்***
***செயலெனவே தெரிந்தேன்'***

***'எத்துணையும் பேதமுறா தெவ்வியுருந்***
***தம்முயிர்போல் எண்ணி யுள்ளே***
***ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்***
***யாவர்அவர் உளந்தான் சுத்த***
***சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்***
***இடமெனநான் தெரிந்தேன்'***

***'கருணையொன்றே வடிவாகி எவ்வுயிருந்***
***தம்முயிர்போல் கண்டு ஞானத்***
***தெருணெறியிற் சுத்தசிவ சன்மார்க்கப்***
***பெருநீதி செலுத்தா நின்ற***
***பொருணெறிசற் குணசாந்தப் புண்ணியர்'***

- இராமலிங்க சுவாமிகள்

*கொலை களவு முதலிய தீமைகளை ஒழிக்கவல்லது சமய நெறி ஒன்றே என்று அறைகூவுகிறேன். அந்நெறி பற்றி ஒழுகு மாறு இளைஞரை வேண்டுகிறேன்.*

*உயிர்கள் சேவையென்று மனைவி மக்களைத் துறந்து ஓடுவது சமயநெறி யாகாது. மனைவிமக்களும் உயிர்களே. அவ் வுயிர்களிலும் ஆண்டவன் எழுந்தருளியிருக்கிறான். அவ்வுயிர் கட்குச் சேவை செய்யவேண்டுவது நமது கடமை. போலித்துறவு, வாய்வேதாந்தம் இவைகளால் நாடு உற்றுவரும் அல்லலுக்கோர்*

*அளவில்லை. அத்துறவில், அவ்வேதாந்தத்தில் - இளைஞர்களே! எக்காரணம் பற்றியுங் கருத்துச் செலுத்தாதேயுங்கள். மனைவி மக்களோடு வாழ்ந்து, கெட்ட எண்ணங்களைக் களைந்து, எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் செய்கைவேதாந் தத்தில் தலைப்படுங்கள்.*

*எவ்வுயிரையுந் தன்னைப்போற் கொண்டு போற்றுஞ் சமயநெறி யென்னும் ஒரு பெருநெறியில் நடப்பதைத் தகைய வல்ல சிறு முட்சுரங்கள் ஆங்காங்கே பெருகி யிருக்கின்றன. அவை நாட்டுக் கேற்றவாறு உருக்கொண்டிருக் கின்றன. நமது நாட்டு வாழ்வுத்துறையில் படிந்து கிடக்கும் முட்டுப் பாடுகள் பலப்பல. அவற்றைச் சீர்திருத்தப் புகுவது தற்போதைக்குச் சிறந்த தெய்வத் தொண்டாகும். ஈண்டுச் சிலவற்றை மட்டுங் குறிக் கிறேன்.*

**சடங்குகள்**

*சடங்குகள் பல காரணம் பற்றி ஒவ்வொருபோது, ஒவ் வொரு நாட்டில், ஒவ்வொரு விதமாக ஏற்படுகின்றன. தொடக் கத்தில் அவை சில பொருள்களை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. பின்னே நாளடைவில் அவை பெரிதும் பொருளற்ற குருட்டு முறைகளாக மாறி விடுகின்றன. அப் பொழுது அவை இயற்கை ஏவற்படி சீர்திருத்தம் பெறுகின்றன. மீண்டும் அவற்றில் இருள் சூழ்ந்துவிடுகிறது. மறுபடியும் அவ் விருள் அகற்றப்படுகிறது. இவ்வாறு சடங்குகள் சுழன்று கொண்டே யிருக்கும். ஒல்லும்வகை சடங்குகளைச் சுருக்கி, அவற்றில் கண்மூடி வழக்கங்கள் நுழையாதவாறு காத்துவரல் வேண்டும்.*

*இந்நாளில் நமது நாட்டில் நடைபெற்றுவரூஉஞ் சடங்கு களில் சில குருட்டு நம்பிக்கைகள் நுழைந்திருக்கின்றன. அவற்றில் மூன்றைச் சிறப்பாகக் குறிக்கிறேன். ஒன்று சடங்குகளைச் சமயத்துடன் தொடர்புப்படுத்துவது; மற் றொன்று பிறப்பில் குறிக்கொண்டு நல்வினை தீவினைகட்குப் பண்டாரத்தையோ தேசிகனையோ பார்ப்பானையோ பிறனையோ அழைப்பது; இன்னொன்று குறிப்பிட்ட ஒரு மொழியிலேயே மந்திரஞ் சொல்ல வேண்டுமென்பது.*

*சடங்குகட்குங் சமயத்துக்குந் தொடர்பில்லை. சடங்குகள் வேறு; சமயம் வேறு; இரண்டையும் ஒட்டவைத்தல் அறி யாமை. நல்வினை தீவினைகட்குக் குறிப்பிட்ட ஒரு வகுப்பார் அல்லது வினைகளாற்றக் குறிப்பிட்ட ஒரு மனிதன் வேண்டுவ*

தில்லை. அவ்வக் குடும்பத்திலுள்ள ஒரு முதியோரைக் கொள் வது நலன். மந்திரம் குறிப்பிட்ட ஒரு மொழியிலேயே அமைதல் வேண்டும் என்னும் நியதியில்லை. அவரவர் தத்தம் தாய்மொழி யில் மந்திரம் வகுத்துக் கொள்ளலாம்.

**சாதி**

நமது நாட்டில் பண்டைக் காலத்தில் பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதியில்லை. அவ்வேற்றுமை இடைக்காலத்தில் நாட்டிடைப் புகுந்தது. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதல் இயற்கையுடன் மாறுபட்டு நிற்பதாகும். சிறப்பில் உயர்வு தாழ்வு நேர்தல் இயல்பு. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுஞ் சாதி வேற்றுமை நமது நாட்டைப் பெருஞ்சனியாய்ப் பீடித்து நிற்கிறது.

நமது நாட்டில் அவ்வவ்போது தோன்றிய பெரியோர் சாதியைக் கடிந்திருக்கிறார். திருவள்ளுவர், நால்வர், ஆழ்வார் முதலியோர் சாதிக்கொடுமையை மறுத்துரைத்த செம்மொழிகள் பல.

**'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்'**

**'சாத்திரம்பல பேசுஞ் சழக்கர்காள்**
**கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்;'**

**'சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிபட்டுத் தடுமாறும்**
**ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாண்டானை'**

இவ்வருண்மொழிகளை நோக்குக. பிறப்பால் உயர்வு தாழ்வுகருதுஞ் சாதிக்கொடுமை தாண்டவம் புரிந்தவேளையில், அக்கொடுமை களைய அக்கால நிலைக்கேற்ற வண்ணஞ் சீர்திருத்தஞ் செய்ய எழுந்த தமிழ் நூல் ஒன்றுண்டு. அதுவே பெரிய புராணம் என்பது. அது பதினெண் புராணங்களுள் சேர்ந்ததன்று. அந்நூலை ஆராயாமலே 'புராணம்' என்னுஞ் சொல்லைக் கண்டோ கேட்டோ அதையும் புராணக் குப்பை யில் கலக்கிறார் சிலர். சாதிக்கொடுமை மிகுந்திருந்த வேளை யில், எவ்வளவில் எம்முறையில் அக்கொடுமை போக்கக் கால தேசவர்த்தமானம் இடந்தருமோ, அவ்வளவில் அம்முறையில் நின்று பெரிய புராணஞ் சீர்திருத்தஞ் செய்யப் புகுந்தது. அந் நூலெழுந்த காலநிலை கருதியே அந்நூலை ஆய்தல் வேண்டும்.

பெரிய புராணத்தில் கலப்பு மணம், உடனுண்ணல், பார்ப்பனரல்லாதாரைப் பார்ப்பனர் குருவாக் கோடல்,

எந்நிலையில் நின்றும் எவ்வேடங் கொண்டும் ஆண்டவனை வழிபடல் முதலிய பல சீர்திருத்தங்கள் நிலவுகின்றன. இவை இக்காலத்துக்கு வேண்டற்பாலன என்று யான் சொல்லலும் வேண்டுமோ? இச் சீர்திருத்த முறைகளைக் கொண்டு இப் பொழுதும் எவ்வளவோ சீர்திருத்தங்கள் செய்யலாம்.

'சாதிவேற்றுமை தொலைதல் வேண்டும்' என்னும் பேச்சும் எழுத்தும் யாண்டும் பெருக்கெடுத் தோடுகின்றன. ஆனால், செயலிலோ சாதி வேற்றுமையோடு சாதிப்பூசலும் வளர்ந்து வருகிறது. சாதிப் பூசலால் நாட்டுக்கு நலன் உண்டா தீமை உண்டா என்பதை விரித்துரைக்க வேண்டுவதில்லை. சாதி வேற்றுமை உள்ளமட்டும் சாதிப்பூசல் கனன்று கொண்டே யிருக்கும். சாதி வேற்றுமை அறவே ஒழிந்தாலன்றி நாட்டுக்கு நலன் விளைதல் அரிது. சாதிக்குள் சாதியாகவே வேர் விட்டுள்ள வேற்றுமைகள் எளிதில் ஒழியுங்கொல்1 என்செய்வது?

இளைஞர் மனங்கொண்டால் சாதி வேற்றுமையைத் தகர்க்கலாம். நமது நாட்டின் விடுதலை சாதி வேற்றுமை அழி வில் இருப்பதை இளைஞர் உலகம் நன்கு அறிந்திருக்கிறது. அவ்வுலகில் தேசபக்தி பெருகப் பெருகச் சாதி வேற்றுமை தானே மறைந்து போகும். தேசபக்தி யூட்டத்தக்க இயக்கங்களிலேயே இளைஞர் சேர்தல் வேண்டும். பிளவையும், பிரிவையும், காழ்ப் பையும் உண்டுபண்ணும் நச்சியக்கங்களில் இளைஞர் சேர்த லாகாது. இவ்வுறுதி இளைஞர் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிதல்வேண்டும்.

'நாட்டில் சாதியுள்ள மட்டுஞ் சாதி இயக்கங்கள் தோன்றுதல் இயல்பு' என்று சிலர் வாதிக்கிறார். சாதி இயக்கந் தோன்றாதிருப்பது நலன்; சில காரணம்பற்றித் தோன்றினும் அது சாதிப்பூசலுக்கு நிலைக்களனாயிருத்தல் கூடாது. சாதி இயக்கங்களால் சாதிகள் வலுப்படலாகாதென்பது எனது உள்ளக்கிடக்கை.

இளைஞர்களே! பிறப்பில் உயர்வு தாழ்வு குறிக்குஞ் சாதி வேற்றுமையைத் தொலைக்க உங்கள் வாழ்வில் கொள்ளத்தக்க சில முறைகளை ஈண்டுப் பொறிக்கிறேன்.

1. எக்காரணம் பற்றியும் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாதேயுங்கள்.

2. பிறப்பில் உயர்வு தாழ்வு கருதி எவரையுங் குருவாகக் கொள்ளாதேயுங்கள்; அக்கருத்துடன் எவர்க்கும் வந்தனை வழிபாடு செய்யாதேயுங்கள்.

3. தீண்டாமையை முற்றும் விலக்குங்கள்.

4. பிறப்பில் சாதி வேற்றுமை குறிக்கும் எவ்வினைகளிலுந் தலைப்படாதேயுங்கள்; எவ்விடத்துக்கும் ஏகாதேயுங்கள்.

5. கலப்புமணத்தில் கருத்திருத்தி அதை வினையில் ஆற்றுங்கள். கலப்புமணம் நாட்டில் பெருகப் பெருகச் சாதி வேற்றுமை தானே சாய்ந்துவிடும்.

இன்னோரன்ன பல சீர்திருத்த முறைகளை, நீங்கள் வாழ்வில் கடைப்பிடித்தொழுக முயன்றால், சாதிப்பேய் நாட்டை விடுத்தோடுதல் ஒருதலை.

இளைஞர் ஓய்வு நேரங்களில் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்புவரேல், அவர்க்குச் சாதி வேற்றுமையில் வெறுப்புத் தோன்றும். பல நாட்டார் கூட்டுறவு, சாதி அழிவுக்கு ஓர் ஏது வாகும்.

### பெண்ணுலகு

உலகத் தோற்றத்துக்கும், ஆக்கத்துக்கும், பிறவற்றுக்கும் முதலாயிருப்பவர்கள் பெண்மக்கள். பெண்ணுலகின் பெண் மையும், தாய்மையும், இறைமையுமே உலகை நடாத்தி வரு கின்றன. அப்பெண்ணுலகின் நிலைகொண்டே ஒரு நாட்டின் நாகரிகத்தை அளந்துணரல் வேண்டும்.

நமது நாட்டின் பெருமையை அடிக்கடி நாம் பேசி மகிழ்வடைகிறோம். அப்பெருமையை நமது நாடு எப்பொழுது பெற்றிருந்தது? பெண் உரிமை பெற்றிருந்த காலத்திலன்றோ? பெண் உரிமை இழந்த நாள்தொட்டு நமது நாடு அடிமைக் குழியில் விழுந்து வருந்துகிறது. தாயை அடிமைப்படுத்திய பாவம் நாட்டைச் சூழ்ந்து நிற்கிறது.

கடவுளை அம்மையப்பராகப் போற்றிய இந்நாட்டில் பெண்ணடிமை எங்ஙனோ நுழைந்துவிட்டது! வேத காலத்தில் பெண் மக்கள் உரிமை பெற்றிருந்தார்கள். சங்க காலத்தில் அம் மக்கள் உரிமை யின்பம் நுகர்ந்தார்கள். கம்பர் காலம்வரை பெண்ணுரிமைக்குப் பெருங்கேடு நிகழவில்லை. தமிழ் நாட்டில் பெண்ணுரிமைக்கு ஊறு நேர்ந்த காலம் பின்னைய காலமே யாகும்.

பெண்மக்கட்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை உன்ன உன்ன உள்ளம் உருகுகிறது. அவற்றை விதித்தவரின் நெஞ்சைக் கல்லெனக் கழறுவதா? இரும்பென இயம்புவதா?

பெண் கல்வி மறுப்பு, இளமை மணம், நாயகனைப் பெண் தானே தெரிந்தெடுக்கும் முறை அழிவு, இளங்கைம்மையரையும் மொட்டையடித்துச் சிறையிடல், அவரை இயற்கையினின்றுஞ் செயற்கைக் கொடுமையால் பிரித்தல், அவரைப் பட்டினியால் மெலிவித்தல், அவரை மூதேவிகளாகக் கருதல், ஒருவன் பல பெண்களை மணத்தல், நரை மூதாளன் கட்டழகுக் கன்னியை மணத்தல், பெண் விபசாரத்துக்கு மட்டுந் தண்டனை, அத்தண்டனை ஆணுலகிற்கின்மை, திருமணம் என்னும் பெயரால் பெண்ணை விற்றல் வாங்கல், இன்னோரன்ன சிறுமைக் கொடுமைகள் நாட்டிடைப் புகுந்து நாட்டைக் குலைக்கின்றன. இக்கொடுமைகள் இளைஞர் உலகில் முற்றுங் களையப்படல் வேண்டும்.

எதற்குஞ் சட்டங்களை எதிர்பார்த்தல் கூடாது. சமூகங்களே சீர்திருத்தஞ் செய்துகொள்வது நலன். சமூகங்கள் அந்நிலை எய்தாவிடின் சட்டங்கள் புகுக்குவது அறம். சீர்திருத்தச் சட்டங்கள் பிறக்கும் வேளையில் அவைகட்குத் தடை கிளத்தல் முன்னேற்றத்தை நாடுவதாகாது. இப்பொழு துள்ள ஹிந்து சட்டங்களிற் பல - சிறப்பாகப் பெண் மக்களின் உரிமையைக் கட்டுஞ் சட்டங்கள் - கால நிலைக்கேற்ற முறையில் சீர்திருத்தஞ் செய்யப்பெறல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட குறைபாடுகளுள் சில உங்கள் வகுப்பில் இல்லை. இல்லையேனும் பெண்ணுலகச் சீர்திருத்தத்துக்கு உங்கள் ஒத்துழைப்பும் வேண்டற்பாலதே.

பெண்ணுலகச் சீர்திருத்தம் பெரிதும் ஆண் இளைஞர் மனோ உறுதியைப் பொறுத்து நிற்பது. ஆணுலகம் பெண்ணைக் காமக்கூடாகக் கருதிக்கொண்டிருக்குமட்டும், பெண்ணுலகம் வளர்ச்சியுறாது. பெண்ணுலக வளர்ச்சி யில்லையேல் மற்ற உலகத்துக்கும் வளர்ச்சி யில்லை, இனியாதல் ஆணுலகம் பெண்ணுலகிற்கு மதிப்பும் உரிமையும் நல்க முந்துவதாக.

**கோயில்**

மிகப் பழைய காலத்தில் கோயில் வழிபாடு கிடையாது. அந்நாளில் இயற்கை வழிபாடொன்றே வழக்கிலிருந்தது. மீண்டும் அவ்வழிபாட்டைப் புதுக்க வேண்டுமென்பது எனது தணியா வேட்கை. இப்பொழுது அவ்வழிபாட்டைப் பற்றி நூற்களில் எழுதும் அளவோடு நின்றுகொண்டிருக்கிறேன். கண்ணுக்குப் புலனாகும் இயற்கைவழிக் கண்ணுக்குப் புலனாகாத இறையை வழிபடலே சிறந்த வழிபாடென்று எனது

ஆராய்ச்சியும் அடைவும் அறிவுறுத்துகின்றன. உலகில் பின்னாளில் தோன்றிய பலதிற வழிபாடுகளெல்லாம் இயற்கை வழிபாட்டினின்றும் பிறந்தனவே யாகும். இது நிற்க.

நமது நாட்டில் வழிபாடு பெருகியதற்குப் பல காரணங் களுண்டு. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன இரண்டு. ஒன்று பௌத்த மத வழிபாட்டமைப்பு; மற்றொன்று ஓவிய உணர்வுப் பெருக்கு.

தொடக்கத்தில் கோயில் அமைப்பும், வழிபாடும் பொரு ளுடையனவாகவே யிருந்தன. 'இயற்கையின் உறையுள் இறை வன்' என்னும் உண்மையை அறிவுறுத்துங் கருவிகளாகவே அவை துணைபுரிந்து வந்தன. நாளடைவில் அவை தங்கள் நோக்கி னின்றும் வழுவி வீழ்ந்தன. எருசலேமில் கோயில்களின் பாழ் பட்ட நிலையைக் கண்ட **கிறிஸ்து பெருமான்,** கோயிலைக் 'கள்ளர் குகை' என்று சொற்றதையும், தற்போது நமது கோயில்களின் சீர்கெட்ட நிலையை நோக்கி, **மகாத்மா காந்தி,** கோயிலை 'வேசையர் விடுதி' என்று கூறியதையும் ஈண்டு உங்கட்கு நினைவூட்டுகிறேன். சில குக்கிராமங்களில் மிகச் சில கோயில்கள் ஆண்டவன் நினைவூட்டும் அன்பு நிலையங்களாக இன்றும் நிற்கின்றன.

இழிநிலை யுற்றுள்ள 'பெரும் கோயில்கள்' மீண்டுஞ் சீர்திருத்தமுறுமா என்பது ஐயம். இதைப்பற்றிப் பலதிறக் கருத்து வேற்றுமைகளுண்டு. கோயில்களைச் சீர்திருத்த முயல்வோர் முயல்க.

கோயில்கட்கென நிதி ஏற்பட்ட நாள் தொட்டுக் கோயில் களின் உண்மை நிலைக்கு ஊறு ஏற்பட்டது. நிதியுள்ள இடத் தில் நீதி நிலவுமோ?

கோயில்களில் சாதிப்பேய் தாண்டவம் புரிகிறது. பிறப்பை ஒட்டிய சாதி வேற்றுமை கோயிலில் என்று நுழைந்ததோ, அன்றே அங்கு ஆண்டவன் அருள் மணமுங் குலைந்தது. எங்கும் நிறைந்த ஆண்டவனை வழுத்தற்கென அமைக்கப்பெற்ற ஒரு நிலையத்தில்கூடவா சாதிப் பாகுபாடு! இக்கொடுமையுள்ள நாட்டில் கடவுள் திருவருள் கொழிக்குமோ? இளைஞர்களே! உங்கள் முன்னோர் முயற்சியாலுஞ் செல்வத்தாலுங் கட்டப் பெற்ற இப் பாண்டி நாட்டுக் கோயில்களில் உங்கட்கு இப் பொழுது இடமிருக்கிறதா? என்ன கொடுமை! பன்றிக்கு அருள் சுரந்த பரமன் - கருக்குருவிக்குக் கருணைசெய்த கடவுள் - நாரைக்கு முத்தி கொடுத்த நாதன் - ஆறறிவுடைய மக்கள்

*வரவையா தகைவன்? இக்கொடுமையைப் பேசிப் பேசி எனது நாவும் மரத்துவிட்டது; எழுதி எழுதி எனது கையுங் காப்பேறி விட்டது. பேச்சாலும் எழுத்தாலும் இனி விளைவதொன்று மில்லை.*

*இக்கொடுமைகளுடன் வேறொரு கொலை கோயில்களில் நடைபெறுகிறது. கோயில்கள் ஏற்பட்டபோது, அவற்றில் தொண்டாற்ற ஆண் அடியவரைப்போலப் பெண் அடியவரும் போந்தனர். சில பெண்மக்கள் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் கோயில் வழிபாட்டிற்கென்றே அர்ப்பணஞ் செய்தார்கள். நாளடைவில் கொழுத்த கோயில் குருக்கண் மாரும், கோயில் அதிகாரிகளும் அவ்வடியவரைக் காமக்கிழத்தி யராக் கொண்டு, அவரை ஒரு தனி வகுப்பாராகவுமாக்கிவிட் டார்கள். அவர்தம் வழிவழி வருவோர் ஆண்டவன் பெயரால் பொட்டுக் கட்டிக்கொண்டு மானம் விற்கும் விலைமாதராகிறார். அப்பொட்டுக் கட்டுதலைச் சட்டத்தால் தகைய முயன்றால், சமயத்தின் பெயரால் மறுப்புகள் புறப்படுகின்றன. இப்பாழும் நாட்டுக்கு உய்வுமுண்டோ? இளைஞர்களே! நாம் எந்நாட்டில் வதிகிறோம்?* **புத்தர்** *பிறந்த நாட்டிலா?* **திருவள்ளுவர்** *பிறந்த நாட்டிலா? இல்லை; இல்லை. அந்நாடுகள் மறைந்து போயின. நாம் இப்பொழுது வதிவது பேய் நாடு; நோய் நாடு. நரகக்குழி யில் நாம் வதிகிறோம். தெய்வத்தன்மை பொருந்திய பெண்ணுல கின் ஒரு பகுதியை ஆண்டவன் பெயரால் அலகை யாக்குவதைக் கொடுமையென்று சொல்வதா? அல்லது கொலையென்று சொல்வதா? சகோதரிகளே! சகோதரர்களே! உன்னுங்கள்; உன்னுங்கள்.*

*சாதிக் கொடுமையும் பெண்கொலையும் நிகழும் ஓரிடத்தில் நீதிக்கடவுள் - அன்புக்கடவுள் - அறக்கடவுள் - வீற்றிருப்பனோ? இக்கொடுமையும் கொலையும் நிகழுங் களத்துக்கு அன்பர் ஏகலாமோ? இக்கொடுமை கொலைகளைப் பற்றிப் பேசிவிட்டு, எழுதிவிட்டு, மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றிவிட்டுக் கோயில்கட்குப் போவதால், அப் பேச் சுக்கும் எழுத்துக்கும் தீர்மானங்கட்கும் ஆண்டவன் அருள் செய்வனோ?*

*சாதிக் கொடுமையினின்றும் - பெண் கொலையி னின்றும் - கோயில்களை விடுதலை செய்யப் பலர் பல வழி கூறு கிறார். சிலர் மூர்க்க சக்தி துணைகொள்ள வேண்டுமென்கிறார்; சிலர் சத்தியாகக்கிரகமே சாலச் சிறந்ததென்கிறார். இரண்டில்*

பின்னையதே சிறந்தது என்று யான் சொல்வேன். கோயில் கொடுமை போக்கப் பேசுவோர் அனைவரும், அக்கோயில் புகாதிருக்கவும், விழா செய்யாதிருக்கவும், பிற நிகழ்த்தாதிருக் கவும் உறுதிகொண்டால் நலன் விளையாமற் போகாது. ஆனால், உறுதிகொள்வோர் எத்துணை பேர்?

உங்கள் பெரியோர் சில இடங்களில் புதுக்கோயில்கள் அமைத்து வருவதாக அறிகிறேன். அக்கோயில்களில் சமரசத் தெய்வம் தாண்டவம் புரியுமாறு செய்ய வேண்டுவது உங்கள் கடமை.

ஆண்டவன் வழிபாட்டிற்கெனக் கோயில் ஏற்பட்டது. அதன் நோக்கத்துக்குக் கேடு நேரின், முறையை மாற்றிக் கொள் வதே அறிவுடைமை. தற்காலக் கோயில் வழிபாட்டால் இயற்கை எண்ணமும், உயிர்கள் வழிபாடும் அருகுகின்றன. கோயில்முறை கோணிய காரணங்கொண்டு ஆண்டவன் அருள்நெறியை எவரும் விடுத்தலாகாது.

எவரெவர்க்கு எவ்வெச்சமய வேதத்தில் அன்பு நிகழ் கிறதோ, அவரவர் அவ்வவ் வேதத்தைப் படிக்கலாம். ஆண்ட வன் அருள்பெற்ற அடியார் மொழிகளே நமது வாழ்வுக்குக் கொழுகொம்பு. அவர்தம் அருண்மொழித் துணையால் நமது உள்ளத்தையே கோயிலாக்கிக் கொள்ளலாம். உள்ளத்தைக் கோயிலாக்கிக் கொள்வோர் உயிர்கள் வழிபாட்டிலேயே உறைந்து நிற்பர்.

***'காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக***
***வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக***
***நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்***
***பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே'*** - அப்பர்

***'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்***
***வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்***
***தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்***
***கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே'*** - திருமூலர்

**அரசியல்**

இளைஞராகிய உமக்கு அரசியல் தொடர்பு வேண்டுமா வேண்டாவா என்பதைப்பற்றிப் பலதிறக் கருத்துவேற்றுமை களுண்டு. இளைஞர்க்கு அரசியல் ஞானம் வேண்டுமென்றே யான் சொல்வேன். ஈண்டு அரசியல் ஞானம் என்பது அரசியல் கிளர்ச்சியையாதல் அரசியல் கட்சிகளையாதல் குறிப்பதன்று.

நமது நாடு உரிமை இழந்த நாடு. உரிமை இழந்த நாட்டில் அரசியல் கட்சிகள் பல தோன்றுதல் கூடாது. நாடு உரிமை பெற்ற பின்னைப் பன்னூறு அரசியல் கட்சிகள் தோன்றலாம். உரிமை யில்லா நாட்டில் அரசியல் கட்சிகள் தோன்றுமேல் அவற்றால் நாட்டில் உட்பகை, குழப்பம், பிளவு, பிணக்கு முதலிய தீங்குகளே விளையும். இத்தீங்குகளை விளைவிக்கும் அரசியல் கட்சிச் சேற்றிலா இளந்தளிர்களைப் புரளுமாறு யான் சொல்வேன்?

'நாட்டின் விடுதலைக்கு உழைக்கத் தக்கவர் இளைஞரல் லரோ' என்று அரசியல் அறிஞர் கேட்கலாம். இதற்கு 'ஆம்' என்று உடன்பாட்டு முறையிலே விடையிறுக்கிறேன். நாட்டின் விடுதலைக்கு உழைக்கத்தக்கவர் இளைஞர் என்பதில் ஐயமில்லை. நமது நாட்டின் விடுதலைக்குரிய வழி எதுவோ அவ்வழி நின்று இளைஞர் தொண்டாற்றலாம்.

நாட்டுக்கு உரிமை வழங்கல் என்னும் முழக்கத்துடன் பற் பல கிளர்ச்சிகள் தோன்றின. அவை யாவும் சிலர்க்குப் பதவி பட் டம் வழங்குவனவாகவே முடிந்தன. ஒன்றுமட்டும் நாட்டுக்கு உண்மையில் உரிமை வழங்கும் நோக்கத்துடன் தோன்றி இயங் கிற்று. அதுவே 'ஒத்துழையாமை' என்பது. அப்பேரியக்கமாதல் வெற்றிபெற்றதா? இல்லை. இதனால் விளங்குவதென்னை? முழு உரிமைக்கு நாடு இன்னுந் தன்னைப் பண்படுத்திக்கொள்ள வில்லை என்பதே. எனவே, இந்நிலையில் நாட்டுக்கு நாம் ஆற்றத் தக்க முதற்கடமை யாது? நாட்டை முழு உரிமைக்குப் பண்படுத்தத் தொண்டு புரிவதேயாகும்.

பதவி பட்டங்களைக் குறிக்கொண்டு, அரசியல் கட்சிகளை வகுத்து, வெறுங்கிளர்ச்சி மட்டுஞ் செய்வதால் நாடு ஒருபோதும் பண்படாது. அக்கிளர்ச்சி செய்வோர் செய்க. அதைப் பெரி யோர்க்கு விடுத்துவிடலாம். இளைஞர் ஏன் அவ்வெரியில் மூழ்கிக் கரிதல் வேண்டும்? பின்னை இளைஞர் நாட்டுக்கு என்செய்தல் வேண்டும்? விடுதலைக்கு நாட்டைப் பண்படுத்துந் துறையி லிறங்கி அவர் உழைத்தல் வேண்டும்.

ஒத்துழையாமை ஒடுக்கத்துக்குத் துணைநின்ற கொடுமை களைக் களைய முயல்வதே நாட்டின் விடுதலைக்கு வழி தேடுவ தாகும். அக்கொடுமைகள் யாவை? பிறப்பு வழி வகுப்பு வேற் றுமை கருதல், மக்களுக்குள் தீண்டாமை திகழ்தல், பெண்ண டிமை, இன்னோரன்ன பிற. இக்கொடுமைகளைக் களையப் புகு வதே இளைஞர்க்குரிய தற்காலத் தொண்டெனத் தோன்றுகிறது. கதர்த் தொண்டையும் உடன் சேர்த்துக் கொள்க. ஆதலால்,

இளைஞர் வெறுங் கிளர்ச்சி எரியில் வீழாமலும், கட்சிச் சேற்றில் நெளியாமலும், நாட்டிலுள்ள குறைபாடுகளைப் போக்கவல்ல சீர்திருத்தத்தொண்டில் தலைப்பட்டுழைப்பாராக. இத்தொண்டே ஆக்கவேலை என்பது. அவ்வாக்க வேலையே தற்போதைக்குச் சிறந்த தேசப் பணியாகும். இளைஞர்க்குரிய பணி இதுவே.

**இறுவாய்**

இளஞ் சகோதரிகளே! சகோதரர்களே! இதுகாறும் எனது புல்லிய உரையைப் பொறுமையுடன் செவிமடுத்த உங்கள் பெருந்தகைமைக்கு வணக்கஞ் செலுத்துகிறேன். நீங்கள் இளமையின்பத்தில் திளைக்கும் பேறுபெற்றிருக்கிறீர்கள்; பகைமை பொறாமை அறியாத இளமை நிலத்தில் தக்க விதை களை விதைத்துக்கொள்ளுங்கள்; உடலை நல்வழியில் ஓம்புங்கள்; கற்பன கற்றுக் கடவுள்நெறி நில்லுங்கள்; கடவுள்நெறி நின்று நாட்டிலுள்ள குறைபாடுகளைக் களையுந் தொண்டிலிறங் குங்கள்; அத்தொண்டுக்கு இன்றியமையாத குணமெனும் குன்றேறி நில்லுங்கள்; பொறுமையைப் பூணுங்கள்; பொறுமை யின் ஆற்றலை உணருங்கள்; உணர்ந்து உலகை நோக்குங்கள்; நமது நாட்டை நோக்குங்கள். நமது நாடு நாடாயிருக்கிறதா? நம் அன்னைக்கு முடியுண்டா? உடையுண்டா? போதிய உணவுண்டா? தாய் முகம் நோக்குங்கள்; அவள் முகத்தில் அழகு காணோம். அவள் இதயந் துடிக்கிறது. சாதி வேற்றுமை, தீண்டாமை, பெண் ணடிமை, உட்பகை முதலிய நோய்கள் அவளை அரிக்கின்றன; எரிக்கின்றன. இந்நோய்களால் அவள் குருதியோட்டங் குன்றிச் சவலையுற்றுக் கிடக்கிறாள்; இளஞாயிற்றொளி நோக்கி நிற்கிறாள். இள ஞாயிறுகளே! உங்கள் தொண்டெனும் ஒளியே அவள் நோய்க்குரிய மருந்து. அவ்வொளி வீசி எழுங்கள்; எழுங்கள். ஆண்டவன் உங்கட்கு அருள் செய்வான்.

**திரு.வி.க.**

# யாழ்பாண மாணாக்கர் மகாநாடு

## (காங்கேயன் துறையில் கூடியது)

## –1929ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 10, 11, 12ஆம் நாட்கள்–

***'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'*** - திருமூலர்

**தோற்றுவாய்**

**சகோதரிகளே! சகோதரர்களே!!**

இயற்கை வளனுஞ் செயற்கை நலனுஞ் செறிந்து, செம்மை கொழிக்கும் இலங்கா தேவியின் எழின் முகமாயிலங்குவதும், தொன்மை வாய்ந்ததும், தமிழ்த்தாய்க்கோர் உறையுளாய்ப் பொலிவதுமாய யாழ்ப்பாணத்தில், தெய்விகம் நிரம்பிய காங்கேயன்துறை யென்னும் இத் திருப்பதியில், இன்று குழுமி யுள்ள இம் மகாநாட்டில், தலைமை வகிக்கும் பேற்றை எனக்கு வழங்கிய உங்கட்கு எனது நன்றியறிதலைச் செலுத்துகிறேன். யான் ஆற்றப்புகும் பணியில் குற்றங்குறைகள் நிகழுமேல் பொறுத்தருளுமாறு உங்களை வேண்டுகிறேன்.

இம் மகாநாடு மாணாக்கருடைய தென்பதும், இம் மகா நாட்டினர் கொண்டுள்ள நோக்கங்களின் விழுப்பமும், அந் நோக்கங்களுள் ஒன்றாய நாட்டுக் கல்வியின் வேட்கைக் குறிப்பும், பலதிற வேலைச் சூழலிடை மூழ்கிக் கிடக்கும் என்னைத் தமிழகத்தின் ஒரு பாங்கரினின்றும் மற்றொரு பாங் கர்க்குப் போதருமாறு முடுக்கின. இம் மகாநாட்டை முன்னிட்டு, மீண்டும் ஒருமுறை ஈழநாட்டுத் தமிழ்மக்களைக் கண்டின்புறும் பேறுபெற்றதைக் குறித்துக் கழிபேருவகை எய்துகிறேன்.

யாழ்ப்பாணத்தைத் தமிழகத்தின் ஒரு பாங்கரென்று மேலே குறிப்பிட்டுள்ளேன். யாழ்ப்பாணம் தமிழகத்தின் ஒரு பாங்கரே. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தமிழகத்தின் எல்லை, இப்போதைய தமிழ்நாட்டையும் உளப்படுத்தித் தென்னாப்பிரிக்கா வரை நீண்டு பரந்து விரிந்து நின்றதென்று ஆராய்ச்சியாளர் கூறுப. இப்பொழுது நீர்ப்பரவைக் காட்சி யளிக்கும், 'இந்து மகா சமுத்திரம்' அப்பொழுது நிலப்பரப்புக்

காட்சி யளித்தது. அப் பெரு நிலப்பரப்பைக் கடல் கொண்ட போது சில நிலக்கூறுகள் எச்சமாக நின்றன. அக் கூறுகளுள் ஒன்று இவ் வீழமாகும். பின்னை இந்நிலத்தில் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்தன.

இப் பழமை ஆராய்ச்சியை விடுத்துச் சரித்திர உலகில் நுழைந்து பார்ப்பினும், யாழ்ப்பாணத்துக்குந் தென் தமிழ் நாட்டுக்குமுள்ள தொடர்பு இனிது புலனாகும். தென்னாட்டி னின்றும் யாழ்ப்பாணத்துக்குச் சில தமிழ் மக்கள் குடிபுகுந்ததைச் சரித்திரஞ் சாற்றுகிறது. தமிழ்நாட்டுப் பதிகளின் சில பெயர் களை யாழ்ப்பாணத்துள்ள சில பதிகள் தாங்கியிருத்தலும், யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் வழக்க ஒழுக்கங்களும் பிறவும் இரண்டு நாட்டுக்குமுள்ள தொடர்பை வலியுறுத்துஞ் சான்று களாக நிற்கின்றன.

இயற்கையின் ஒருகூறு இருநாட்டையும் பிரித்திருப்பி னும், மற்றொரு கூறு அவ்விரண்டையும் இணைத்துப் பால மிட்டிருக்கிறது. அப் பாலம் கண்ணுக்குப் புலனாவதன்று. அது கருத்துக்குப் புலனாவது. அதுவே தமிழ்த் தென்றல் என்னும் பாலம்.

அப்பாலத்தை ஒழுங்குபடுத்திச் செப்பஞ் செய்து, இரு நிலத்துக்குமுள்ள தொடர்பிற்குப் பேராக்கந்தேடிய பெருமை, ஞானப்பிரகாசர், ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை, சபாபதி நாவலர் முதலிய தமிழ்ச்செல்வர்க்குண்டு. அப்பாலங் குலையாதவாறு காக்கவேண்டுவது நம் பெருங் கடமை.

**மாணாக்கர் இயக்கம்**

இதுபோழ்து உலகில் தோன்றியுள்ள இயக்கங்கள் பலப் பல. அவற்றுள் சிறந்தன சில. அச் சிலவற்றுள் ஒன்று மாணாக்கர் இயக்கமென்பது. நிகழ்கால உலகைக்கொண்டு வருங்கால உலகைப் படைக்கும் பொறுப்பு மாணாக்கர்பாலுளது. அப் படைப்பில் நிகழ்கால உலகிலுள்ள குறைபாடுகள் பல களையப் படுவதற்கு இடனுண்டாகும்.

(முதல்) ஐரோப்பாப் போருக்குப் பின்னர் யாண்டும் அமைதி நிலவல்வேண்டுமென்றும், ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாருடன் பொருதல் பொன்றல் வேண்டுமென்றும், அதன் பொருட்டு வல்லரசுகள் போர்க் கருவிகளின் பெருக்கையும், படைகளின் பெருக்கையுஞ் சுருக்குதல் வேண்டுமென்றும் காலஞ்சென்ற டாக்டர் வில்சன் உள்ளிட்ட அறிஞர் பலர் அறி வுறுத்தினர். அமைதி காப்புக்கெனச் சர்வதேச சங்கம், உலகத் தொழிலாளரியக்கம் முதலிய அமைப்புகளுங் காணப்பட்டன.

*அவ்வமைப்புகளின் நோக்கங்கள் செவ்வியன. ஆனால், அவை முற்றும் நிறைவேறாது துருப்பிடித்துக் கிடக்கின்றன. அங்ஙனங் கிடப்பதற்குக் காரணம் பலபடக் கூறலாம். அவற்றுள் சிறந்த ஒன்று, முதியோர் உள்ளத்தில் ஆன்ம நேயமெனும் உலக சகோதர நேயம் எளிதில் அரும்பாமையே யாகும். அவர், நாட்டு வேற்றுமை, நிறவேற்றுமை, வழக்க ஒழுக்க வேற்றுமை முதலிய வேற்றுமைகளையே பாராட்டும் பயிற்சியில் தேர்ச்சி யடைந் திருக்கிறார். அவர் நெஞ்சில் உலக சகோதர நேயம் எளிதில் படி தல் அருமை. அத்தகை நெஞ்சுடைய முதியவர் காணும் இயக்கங் களால் எங்ஙனம் ஆன்மநேயம் விளையும்?*

*மாணாக்கருடைய இளைய நெஞ்சில் - மாசிலா நெஞ்சில் - பெரிதும் வேற்றுமை யுணர்வு தோன்றுவதில்லை. அந்நெஞ்சில் வேற்றுமை கடந்த ஆன்மநேயம் அல்லது சகோதரநேயம் எளி தில் வளர்தல் கூடும். அந்நிலம் பண்படுதற்கு ஏது உண்டு.*

*தற்போதைய மாணாக்கருலகில் புறவேற்றுமை யுணர்வு ஒரளவு அருகியும், உலக சகோதர நேயம் அவ்வளவில் ஒருவாறு பெருகியும் வருதல் கண்கூடு. இஃது இயற்கை யன்னையின் திருவருள்.*

*வருங்கால உலகில் ஒரு பெரும் மாறுதல் நிகழப்போதல் உண்மை. அதை, இயற்கை அன்னையின் நோக்கைக்கொண்டும் தற்கால உலக நிலையைக்கொண்டும் அளந்து கூறுதல் கூடும். அம் மாறுதலை அன்புவழியில் நிகழ்த்தற்குரிய இயக்கம் எது வாயிருக்கலாம்? இப்பொழுதுள்ள இயக்கங்களைப் பார்த்தால் அது மாணாக்கரியக்கமாகவே யிருக்கலாமென்று கூறலாம்.*

*பெரு நோக்குடன் தோன்றியுள்ள உலக மாணாக்கரியக்கத் துக்கு ஆக்கந் தேட ஆங்காங்குள்ள மாணாக்கர் முயன்று வரு கிறார். யாழ்ப்பாண மாணாக்கராகிய நீங்களும் அம்முயற்சிக்குத் துணை செய்யவே ஈண்டுக் கூடியிருக்கிறீர்.*

*அப்புனித இயக்கத்துக்கு ஆங்காங்குள்ள மாணாக்கர் எவ்வெவ்வழியில் துணை புரிதல் வேண்டும்? முதலாவது நமது நாட்டிலுள்ள குறைகளைப் போக்கவும், ஆங்குக் காலதேச வர்த்தமானத்துக் கேற்ற அறங்களை ஆக்கவும் முயலல்வேண்டும். உமது மகாநாட்டின் நோக்கங்களில் அவ்வழிவு ஆக்கம் என்னும் இரண்டு மிருக்கின்றன.*

*1. 'மானம் பாராட்டும் உயர்ந்த நாடாய் நம் ஈழம் நிலைக்க வேண்டுமாயின் எமக்கு நமது தாய்நாட்டுக் கல்வித் (ஓவியம், சிற்பம், மொழி, இசை, ஞானம்) தேர்ச்சி இன்றியமையாத தென்பதும்;*

2. நமது நாட்டுக்குத் தன் அரசை மீண்டும் நிறுவுதல் எமக்குப் பெரியதொரு கடனாம் என்பதும்;

3. நமது நாட்டிலுள்ள பல வேறு சாதியாருக்கும், அரசியல் நிலையினும், மக்கள் கூட்டவாழ்வினும் ஒரு வேறுபாடும் இல்லை யென்பதும்;

4. சாதிபேதம் பாராட்டுதல் நமது நாட்டாரின் மக்கட்டன்மைக்குப் பெரியதோர் இழிவாம் என்பதும்;

5. பிறநாட்டுப் பொருட்களை வரவழைத்துப் பயன்படுத்து தல் பிறர் பொருட்களுக்கு அடிமையாந் தன்மையை நாட்டில் நின்று நிலவச்செய்து வருகின்றதென்பதும்'.

இவை உமது நோக்கங்கள். இந்நோக்கங்களைக் குறிக் கோளாக்கொண்டே எனது பணியாற்றலாமெனக் கருது கின்றேன்.

**இயற்கை**

மாணாக்கரியக்கத்தின் நோக்கம் இனிது நிறைவேறுதற்கு மாணாக்கர் கொள்ளத்தக்க பொது அறம் ஒன்றுண்டு. அஃது இயற்கையோடியைந்து வாழ்வது. இயற்கையின் திருவருள் எல்லாவற்றிற்கும் வேண்டற்பாலது.

இயற்கையின் நோக்கமும் ஈண்டுக் கருதற்பாற்று. இயற்கை யின் நோக்கம் உயிர்களைப் பண்படுத்தி மேன்மையுறச் செய்ய வேண்டுமென்பது. மக்களின் விலங்கு நீர்மையைச் செகுத்துத் தெய்வ நீர்மையைப் பெய்ய இயற்கை அன்னை விரைந்து நிற்கி றாள். மக்கள் இயற்கையோடியைந்த வாழ்வு நடாத்துவரேல், அவர்கள் எளிதில் இயற்கை அன்னையின் திருவருள் பெறுதல் கூடும். மக்கள் வாழ்வில் இயற்கைக்கு மாறுபட்ட வினைகள் இடையிடையே நிகழ்ந்துவிடுகின்றன. அந்நிகழ்ச்சியான் மக்கள் இயற்கை அன்னையின் கண்ணோட்டத்துக்குச் சிறிது சேய்மையரா கிறார்கள். ஆகவே, மாணாக்கர் இயற்கையோடியைந்து வாழத் தம்மைப் பண்படுத்திக்கொள்வாராக.

வருங்கால உலகைப் படைக்கும் பொறுப்பு வாய்ந்த மாணாக்கர், தம் வாழ்வில் கொள்ளத்தக்க அறத்துறைகள் பலவுள. அவற்றுள் சிலவற்றை ஈண்டுச் சுருங்கச் சொல்லப் புகு கிறேன்.

**ஒழுக்கம்**

மாணாக்கர் என்னுஞ் சொல் விழுமிய பொருளுடையது. பின்வாழ்விற்கு வேண்டப்படும் மாண்பொருளை ஆக்குதற்கு

ஒழுக்கநெறி நிற்போர் மாணாக்கராவர். மாணாக்கருலகிற்கு முதல் முதல் வேண்டற்பாலது ஒழுக்கம். ஒழுக்கம், கல்வியறி விற்கு அடிப்படை. ஒழுக்கத்தால் 'ஒரைந்துங் காக்கும் உரன்' பெறலாம். அக்காப்பு, அமைதியென்னுந் தெய்வ இயல்பை நிலைபெறுத்தும். அமைதியில் அறிவு விளக்கமுறல் இயல்பு. எல்லா நலன்கட்கும் வித்து ஒழுக்கம் ஒழுக்கமே யாகும்.

முன்னைநாளினும், இந்நாளில் பள்ளியென்னும் கட்டடத் துக்குப் பலர் செல்கிறார். ஆனால், அவருள் எத்துணைபேர் 'மாணாக்க'ரா யிருக்கிறார் என்பது மட்டும் ஐயம். காப்பி, டீ, சுருட்டு, சிகரெட், புலால், இளமை மணம், களியாடல் முதலியன இக்கால மாணாக்கர் உலகை அரித்தும் எரித்தும் வருதலை ஈண்டு எம்மொழியால் இயம்பவல்லேன்! இம்மாணாக்கருட லில் என்புந் தோலும் காட்சியளிக்கின்றனவேயன்றி அழகுக் கடவுள் காட்சியளிப்பதில்லை. அழகிலா இளமை, இளமை யாகுங்கொல்! மாணாக்கர் ஒவ்வொருவரும் அழகுக் கடவுள் போலல்லவோ உலவுதல் வேண்டும்? 'கந்தனை யனையவர் கலைதெரி கழகம்' என்றார் கம்பரும்.

மாணாக்கர் உடலில் அழகு நிலவு காலல் வேண்டும். அதற்கு இன்றியமையாதது ஒழுக்கம். ஒழுக்கமுள்ள இடத்தில் அழகு ஒளி செய்யும். 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' 'ஒழுக்க முடைமை குடிமை', 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' என வரூஉந் திருவள்ளுவர் மொழிகளை ஊன்றி நோக்குக.

**கல்வி**

மாணாக்கர் இளமையில் ஈட்டத்தக்க மாண்பொருள் கல்வி. அப்பொருள் கற்பகம் போன்றது. அது வாழ்விற்கு வேண்டப் படும் மற்றப் பொருள்களை யெல்லாம் உதவும்.

கல்வி என்பது வெறும் ஏட்டுப் படிப்பு மட்டுமன்று. பட்டம் பதவிகளைக் குறிக்கொண்டு படித்தலுங் கல்வியாகாது. கல்வியென்பது அறியாமையை நீக்கி அறிவை விளங்கச்செய்வது. தொழிற்கல்வி முதலியனவுங் கல்வியின் பாற்பட்டனவே.

**மொழி:** கல்விப் பயிற்சிக்கு எம்மொழியைக் கொள்வது என்னும் ஆராய்ச்சி, தற்காலப் 'பெரியோ'ரிடை நிகழ்ந்து வருகிறது. இந்தியாவும் இலங்கையும் இழைத்த பாவந்தான் என்னையோ தெரியவில்லை.

உலகைப் பல நாடுகளாக இயற்கை பிரித்திருக்கிறது. நாடுகள் பலவும் மொழிப்பெயரால் ஆக்கப்பட்டிருக்கின்றன. அவ்வந்நாட்டின் இயல்புக் கேற்றவண்ணம் அவ்வம்மொழி

அங்கங்கே அமைந்திருக்கிறது. அவ்வந்நாட்டார் அவ்வம்மொழியை முதலில் பயில்வதே அறம். அஃதே இயற்கையோ டியைந்து நிற்பதுமாகும். பின்னே போதிய வாய்ப்பும் ஓய்வும் பிறவுங் கிடைப்பின், வேறு மொழிகளையும் பயிலலாம்.

இவ்வீழம் தமிழ்நாட்டின் ஒரு கூறு. ஈழத்துக்குரிய இயற்கை மொழி எது? அம்மொழி வாயிலாக மாணாக்கர் கல்வி பயிற்றப் படுகிறாரா? தொடக்கத்திலேயே மாணாக்கர் இயற்கையி னின்றும் பிரிக்கப்படுகிறார். இவ்வநியாயத்தை யாண்டுச் சென்று முறையிடுவது?

ஈண்டு ஈண்டியுள்ள மாணாக்கர்களே! யாழ்ப்பாண மாணாக் கர்களே! என்னருமைத் தமிழ் மாணாக்கர்களே! உங்கள் பொறுப்பை உணருங்கள்; உங்களுக்குள்ள பொறுப்புச் சாலப் பெரிது. உலகிலுள்ள தாய்மாரையும் நோக்குங்கள்; உங்களை ஈன்ற தாயையும் உற்று நோக்குங்கள். அத்தாய்மார் உரிமை யென்னும் அரியாசனத்தில், முடியணிந்து, கோல் தாங்கி, தங் கலை பூண்டு, இறுமாப்புடன் வீற்றிருக்கிறார். உங்கள் தாயோ - நம் பெருந்தமிழ் அன்னையோ - எல்லார்க்கும் மூத்த நம் அம்மையோ - எந்நிலையிலிருக்கிறாள்? அவள் முடியெங்கே? அவள் செங்கோலெங்கே? அவள் கலைகளாம் அணிகளெங்கே? அவள் யாண்டுறைகிறாள்? அவட்குப் போதிய உணவுண்டா? உடையுண்டா? உன்ன உன்ன உள்ளங் குழைகிறது; கண்ணீர் பெருகுகிறது. நந் தமிழ்த்தாய் துச்சிற் கிடந்து துயருறுகிறாள்; அலமருகிறாள். இப்போதைய தமிழுலகம் தாய்மீது பெரிதுங் கருத்துச் செலுத்துவதில்லை. அதன் கவலையீனத்தால் நந்தாய் சவலையுற்றிருக்கிறாள். அவள் கவலையை நீங்கள் போக்கப் போகிறீர்களா அல்லது அவட்கு ஈமக்கடனாற்றப் போகிறீர் களா என்று வினவுகிறேன்.

இளைஞர்களே! உங்கள் தமிழ்த்தாய் நேற்றுப் பிறந்தவ ளல்லள்; இன்று பிறந்தவளல்லள். அவள் மிகமிகத் தொன்மை யுடையவள்; கலைகளை யுடையவள். அவளையா கொல்வது? தாய்க்கொலை புரிவதா தமிழர் வீரம்? வீரத்துக் குரிய உங்கள் இளமுகம் நோக்கிக் கேட்கிறேன். நேற்றும் இன்றும் பிறந்த நாடு களையும் கலைகளையும் ஓம்பவும் பெருக்கவும் அவ்வந்நாட்டார் முயன்று வருகிறார். நாமோ - பாவிகளாகிய நாமோ - பழம் பழம் பெருநாட்டை மறைக்கப் பார்க்கிறோம். தமிழ் இறந்தபின் 'தமிழ்மண்' மட்டுமிருந்தென்? மொழியன்றோ நாடு? கலை களல்லவோ நாட்டின் உயிர்? மொழி இறந்துபடின் நாடும்

*இறந்துபடுமன்றோ? உலகிற்கே ஒரு போது நாகரிகத்தை வழங்கிய மாண்பு வாய்ந்த ஒரு பெரும் நாட்டையா மறப்பது? அதனையா மறைப்பது? ஈழத்திளைஞர்களே! தமிழுலகின் இழிந்த நிலையை ஓருங்கள்; ஓர்ந்து உங்கள் பொறுப்பை உணருங்கள்! தமிழ்த் தாயைப் புதுப் போர்வையால் ஒப்பனை செய்து, அரியாசனத்தமர்த்தச் சூள்கொண்டெழுங்கள்; எழுங்கள்; பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள்.*

*“‘தமிழ் தமிழ்’ எனில் தமிழில் போதிய நூல்கள் இல்லையே” என்று சிலர் கேட்கிறார். இச் சகோதரர் நிலை இரங்கற்குரியதே. காலதேச வர்த்தமானத்துக்கேற்ற கலை நூல்கள் தமிழில் இல்லையேல், அவற்றை யாக்கப்புகுவதே அறிவுடைமை. நில நூல், வான நூல், உயிர் நூல், பொருள் நூல் முதலியவற்றைப் பிற மொழிகளினின்றும் பெயர்த்தெழுதிக்கொள்ளலாம்.*

*ஜெர்மானியர், பிரெஞ்சுக்காரர் முதலியோர் எம்மொழியில் கல்வி பயில்கிறார்? அவர் தத்தம் தாய்மொழியிலேயே கல்வி பயில்கிறார். தமிழன் மட்டும் ஏன் பிறமொழி வாயிலாகக் கல்வி பெறல் வேண்டும் என்பது விளங்கவில்லை. தமிழன் அடிமைப் பேய்வாய்ப்பட்டுக் கிடக்கிறான்.*

*ஆங்கில நூல்கள் யாவும் முதல் நூல்களல்ல. அவற்றிலும் மொழிபெயர்ப்பு நூல்களிருக்கின்றன. ஜெர்மானியன் ஒருவன் ஏதாயினும் ஒரு புதுமை காண்பனேல், அவன் அதை ஆங்கிலத்திலா எழுதுகிறான்? அவன் அதைத் தன் தாய்மொழியிலேயே எழுதுகிறான்? ஆங்கிலேயர் அதைத் தமது தாய்மொழியில் பெயர்த்தெழுதிப் பயில்கிறார். இவ்வாறு தமிழர் ஏன் செய்தலாகாது?*

*கலைகள் இருவிதம். ஒன்று பொது; மற்றொன்று சிறப்பு. நில நூல், வான நூல், உயிர் நூல், பொருள் நூல் முதலிய அறிவியல் நூல்கள் பொதுமையின்பாற்பட்டன. சிறப்புக் கலைகள் என்பன அவ்வந்நாட்டுக் காவியங்கள்.*

*பொதுக் கலைகள் முதல் முதல் எம்மொழியிலாதல் பிறக்கும். அம்மொழியினின்றும் மற்றவர் தத்தம் தாய் மொழியில் பெயர்த்தெழுதி அவற்றைப் பயன்படுத்தல் மரபு. நியூட்டன், போஸ் முதலிய பேரறிஞர் ஆராய்ந்து கண்ட உண்மைகள் உலகிற்குரிய பொது உடைமைகள். அவர்தம் ஆராய்ச்சியிற் போந்த உண்மைகளின் கருத்தையே உலகங்கொள்ளல் வேண்டும். அவ்வாராய்ச்சியாளரது மொழிமீது, உலகம் தன் கருத்தைச் செலுத்தல் வேண்டுவதில்லை.*

*சிறப்புக் கலைகளாகிய காவியங்களை மட்டும் அவ்வம் மொழியிலேயே பயிலுதல் வேண்டும். அவை மொழிபெயர்ப்பில் அடங்கா. காவியங்களிலுள்ள சொற்களை வேண்டுமேல் மொழிபெயர்க்கலாம். அவைகளிலுள்ள இயற்கை இன்பத்தை எங்ஙனம் மொழிபெயர்த்தல் கூடும்? அவ்வின்பத்தை அவ ரவரே துய்த்தல் வேண்டும்.*

**ஷேக்ஸ்பியரை** *ஆங்கிலத்தில் படிப்பதே பொருத்தம்.* **காளிதாசன்** *சாகுந்தலத்தை, அவன் எழுதிய வடமொழியில் பயில்வதே சால்பு.* **இளங்கோவின்** *சிலப்பதிகாரத்தை, அவர் யாத்த தமிழில் கற்பதே சிறப்பு.*

*தமிழில் இல்லாத பொதுக்கலைகளைப் பிற மொழியி னின்றும் பெயர்த்தெழுதிப் பயின்றும், சிறப்புக்கலைக்கு நாட்டுக் காவியங்களைப் பயின்றும் தமிழுலகை வளர்த்து வரலாம். இவ்வியற்கை முறையால் விளையும் பயன்கள் பல. அவற்றுள் ஒன்று பள்ளிப்பயிற்சியின் காலச்சுருக்கம். இப்பொழுது பள்ளிப் பயிற்சிக்கென ஏறக்குறைய பதினைந்தாண்டுகள் கழிகின்றன. இத்துணை ஆண்டுகள் எற்றுக்கு? தாய்மொழி வாயிலாகக் கல்வி பயின்றால், இத்துணைக் காலம் வேண்டுவதில்லை.*

*நாட்டுமொழியைப்பற்றிப் பலதிறத் தடைகள் கிளத்தப்படு கின்றன. அவற்றை இம் மகாநாட்டுத் தலைமையுரையில் விரித் தல் வேண்டுவதில்லை. ஆயினும், இன்றியமையாத மூன்றை மட்டும் ஈண்டுப் பொறிக்கிறேன்.*

1. *இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் பல மொழி யினர் இருத்தல்;*
2. *ஆங்கிலம் உலகமொழியாய்ப் பரவி வருதல்;*
3. *தமிழில் குறியீடுகளின்மை.*

*(1) இலங்கை, இந்தியாபோன்ற நாடுகளில் பலமொழியின ரிருத்தல் உண்மையே. அதனால், அவ்வத் தாய்மொழிகளைக் கொலைசெய்தல் வேண்டும்போலும்! ஒரு கண்டத்தில் ஒரு மொழியினரிருக்கின்றனரா? பல மொழியினரிருக்கின்றனரா? உலகத்திலேயே ஒரு மொழியினரிருத்தல் வேண்டும் என்றும் வாதஞ் செய்தல் கூடும்! இயற்கையின் நோக்குணர்ந்து நடப்பதே அறிவுடைமையும் அறவொழுக்கமும் ஆகும். இயற்கை வழியே மக்கட்கு மொழி, வழக்க ஒழுக்கம், நிறம் முதலியன அமை கின்றன. இவற்றுள் மொழியை மட்டும் ஏன் நெகிழவிடுதல் வேண்டும், இவ்வினை இயற்கை நோக்கிற்கு அரண் செய்வ தன்று.*

இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் பல மாகாணங் களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வம் மாகாணத்துக் கெனத் தனித்தனி மொழியும் அமைந்திருக்கிறது. அவ்வம் மொழியினர் அவ்வம்மொழிவழிக் கல்விபெறுவதே இயற்கை.

இவ்வீழம் இலங்கையின் ஒருபகுதி. ஈண்டு வதிவோருள் பெரும்பான்மையோர் தமிழர். ஈண்டுக் குடிபுகுவோரும் நாளடைவில் தமிழராகிறார். ஆதலால், தமிழ் மக்களுக்குரிய வழக்கவொழுக்கம், கலைகள் முதலியவற்றை இவண் வளரச் செய்வதே இயற்கையோடியைந்து வாழ்வதாகும்.

(2) ஆங்கிலம் வேண்டா என்று யான் கூறுகிறேனில்லை. ஆங்கிலம் தற்கால உலக மொழியாக வளர்ந்து வரலால், அதனைச் சில உலகியல்வினைகட்கும், உலகத்தோடொத்த வினைகட்கும் பயன்படுத்துவது மாண்பாகும். தமிழ்க்கல்லூரி யில் ஆங்கிலம் ஓர் இஷ்டபாடமா யிருக்கலாமென்பது எனது உட்கிடக்கை. விரும்புவோர் அம்மொழியைப் பயில்வாராக. அறிவு வளர்ச்சிக்கு இன்னும் பலநாட்டு மொழிகளையும் பயிலலாம்.

(3) குறியீடுகளைப்பற்றி இரண்டோர் உரை பகர்கிறேன். தமிழில் குறியீடுகளை உண்டுபண்ண முயலல்வேண்டும். தமிழில் பொருந்திய சொற்கள் பெரிதுங் கிடைக்கும். கிடையா தொழியின் மூலக்குறியீட்டை அங்ஙனே ஆண்டுகொள்ளலாம். ஆங்கில நூல்களிலுள்ள குறியீடுகளிற் பெரும்பான்மையன ஆங்கிலமல்ல. அவை லத்தீன் என்பது உங்கட்குத் தெரியும்.

இனித் தமிழ்க் கல்வித்துறைமீது சிறிது கருத்துச் செலுத்து வோம். தமிழருக்கெனக் காவிய மாளிகைகளிருக்கின்றன; ஓவியக் கூடங்களிருக்கின்றன; இசைப்பொழில்கள் உள்ளன; வேறு பல ஞான நிலையங்களும் உள்ளன. அக் காட்சிச்சாலையைக் காணாத கண்ணென்ன கண்ணே!

**காவியம்;** பல மொழிகளில் இயற்கைக் காவியங்கள் அமைய வில்லை. மிகச் சில மொழிகளிலேயே அவை அமைந்திருக்கின்றன. அம்மொழிகளுள் நந் தமிழ்மொழியும் ஒன்றெனக் கூற யான் வரம்பிலா இறும்பூதெய்துகிறேன். தமிழனாகப் பிறந்தமை குறித்தும் யான் இறுமாப்படைகிறேன். யான் தமிழனாகப் பிற வாதிருப்பனேல் பாட்டில் - ஆ! ஆ!! தேனென இனிக்குந் தீந் தமிழ்ப் பாட்டில் - கடல் முழக்கங் கேட்பேனா? செஞ்ஞாயிற் றொளியில் மூழ்குவேனா? வெண்டிங்கள் நிலவில் தோய்வேனா, இளந்தென்றலில் படிவேனா? அப்பாட்டுள், பசுங்கடல் பொங்கி

*எழுந்தாலெனவும், கருங்கடல் பெருகி எழுந்தாலெனவும் வான ளாவி நிற்கும் மலைக் குலங்களைக் காண்பனோ? வெயில் மறைத்து மென்கால் வீசும் பூம்பொழிற் பந்தரிடைப் புகுவனோ! மரகதக் கதிர்ப்பரப்போவெனப் பரந்து விரிந்த பசும் புல் லணையில் கிடப்பனோ? தமிழ்ப் பாவில் பொலியும் - 'புயல் சுமந்து விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடி'களென்ன! 'யாழுங் குழலும் அமிழ்துங் குழைந்த' மழலைக் குழந்தைக ளென்ன! தமிழ்க்காவிய உலகில் எத்துணை மேக மண்டிலங்கள்! எத்துணை ஏரிகள்! எத்துணை வயல்கள்! ஊர்கள் எத்தனை! நகரங்கள் எத்தனை! நாடுகள் எத்தனை! உழவு ஒருபால் - வாணி பம் மற்றொருபால் - அரசு இன்னொருபால் - அறம் வேறொரு பால்! யாண்டும் விருந்தோம்பல் - யாண்டுங் கொடை - எங் கணும் விழா! நம் பெருங் காவியங்களில் உலகைக் காணலாம்; உயிரைக் காணலாம்; கடவுளைக் காணலாம். காவிய இன்பம் பேரின்பம்! பேரின்பம்!*

**தொல்காப்பியர்** *பொருளின்பமும்,* **திருவள்ளுவர்** *அற மும்,* **இளங்கோவின்** *எழிலும்,* **திருஞானசம்பந்தர்** *பண்ணும்,* **சேக்கிழார்** *அன்பும்,* **கம்பர்** *கவியுமல்லவோ நம் பெருஞ் செல்வம்? இவையே நமது கருவூலம் - அழியாச் சேமநிதி. இந் நிதியருகே இக்காலத் தமிழர் பலர் அணுகவும் அஞ்சுகிறார். அதனால் அவர் வாழ்வுப் பொருளிழந்து வறியராய் வாடுகிறார். அப் பெருஞ்செல்வத்தைப் பயன்படுத்த மாணாக்கர்களே! முந்துங்கள்; முந்துங்கள்.*

***ஓவியம்:*** *மக்கள் இயற்கையுடன் கலந்து வாழ்வதற்கு வேண்டப்படுங் கல்வித் துறைகளுள் ஓவியமும் ஒன்று. வாழ்வை இயற்கையுடன் ஒன்றுபடுத்தற்கு ஓவியம் பாலம் போலத் துணை செய்யும். அவ்வோவியத் துறையிலும் நமது பழைய நாடு கைபோயதாயிருந்தது. இயற்கைக் காவியங்களாக எழுதிய நம் முன்னோர் அதை ஓவியங்களாகவும் வரைந்தனர். ஓவியத்தில் உளம்பதித்த ஒரு நாடு நமது நாடு.*

*நந்தமிழ் மக்கள் எழுதிய ஓவியங்கள் இன்னும் பல இடங்களில் உருக்காட்டிக் கொண்டிருக்கின்றன. அவ்விடங் களுள் ஈண்டு ஒன்றை மட்டுஞ் சிறப்பாகக் குறிக்க விரும்புகிறேன். சென்னைக்கு அணித்தே மல்லை - மாவலிபுரம் - என்றொரு பதி யிருக்கிறது. அப்பதியை ஓவிய வைப்பு என்றுஞ் சொல்லலாம். பண்டைத் தமிழர் நாகரிகத்துக்கு அஃதோர் இலக்கியமாகவும் இலங்குகிறது. மாணாக்கர்களே! அவ்வோவியப் பெற்றியை விளக்கும் ஆற்றல், எனக்கில்லை. அதைக் காண உலகின் பல பாங்கரினின்றும் அறிஞர் போதருகிறார்.*

ஆங்கு மலைகளில் தேர்கள் செதுக்கப்பட் டிருக்கின்றன; விலங்குருவங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன; மக்கள் வடிவங்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன; வேறு பல சிறு சிறு ஓவியங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வோவியங்களை ஊன்றிப் பார்ப்பின், அவற்றின் நுண்ணிய அருமைப்பாடுகள் புலனாகும். வடிவங்களில் திகழும் சிறு சிறு நுண்ணிய எடுப்புகளும், அரும்பு களும், இதழ்களும் வியக்கத்தக்கனவா யிருக்கின்றன. கண்களும், விரல்களும், அவற்றைச் சுற்றியுள்ள கீற்றரும்புகளும், ஓவியப் புலவரின் நுண்ணறிவைப் புலப்படுத்துகின்றன. யாழ்ப்பாண மாணாக்கர்களாகிய நீங்கள், ஓய்வு நாட்களில் மாவலிபுரம் போந்து, ஆண்டு மலிந்துள்ள தமிழ் ஓவிய விருந்தைப் பருகு மாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடவுள் நினைவூட்டும் இடங்களில் நம்மவர் ஓவியம் அமைத்ததையும் ஈண்டு உன்னுதல் வேண்டும். நமது நாட்டுப் பழைய கோயில்கள் யாவும் ஓவியக் கூடங்களாகவே பொலி கின்றன. அவற்றின் மதிலெலாம் ஓவியம்; தூணெலாம் ஓவியம்; கோபுரமெலாம் ஓவியம். கோயில் முழுதும் ஓவியம்; ஓவியம். இவ்வளவில் நமது ஓவியம் நின்று விட்டதோ? கடவுளிலும் ஓவியம் உருக்கொண்டது! 'குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் - பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும் - இனித்த முடைய எடுத்த பொற் பாதமும்' உடைய தில்லைக்கூத்தன் வடிவமென்ன? அழகிய ஓவியமன்றோ? பச்சைமேனியும், பவளவாயும், கமலக்கண்ணும், கிடந்த கோலமும் உடைய அச்சுதன் உருவமென்ன? அழகிய ஓவியமன்றோ? நீலக்கடலில் செஞ்ஞாயிறெழுதல் போல நீலச் சிகியில் எழுந்தருளுஞ் செவ்வேள் செம்மையென்ன? அழ கொழுகும் ஓவியமன்றோ? இயற்கை அழகை ஓவியத்தில் அமைத்து அமைத்து அவ்வழகுடன் இரண்டறக் கலந்து, அழகாகிய மக்கள் நந் தமிழ்மக்கள்.

அழகைச் சொல்லும்போதெல்லாம் தமிழர் ஓவியத்தைக் குறிப்பிடத் தவறமாட்டார். பரவையார் வனப்பை வருணிக்கப் புகுந்த தெய்வச் சேக்கிழார், 'ஓவியநான் முகனெழுத ஒண் ணாமை யுள்ளத்தான் - மேவியதன் வருத்தமுற விதித்தவொரு மணிவிளக்கோ' என்று ஓவிய நினைப்புக்கொண்டார். பெண் மக்களைக் குறிப்பிடு மிடங்களில் தமிழ்ப் புலவோர் 'எழுது பூங்கொடி' என்றே பெரிதுஞ் சொல்வது வழக்கம்.

இவ்வாறு ஓவியத்தில் மூழ்கி ஓவிய மயமாகப் பொலிந்த நமது நாடு, இப்பொழுது எந்நிலையுற்றிருக்கிறது? ஓவியத்தைக்

கொலை செய்யும் ஒரு நாடாகவன்றோ நமது நாடு மாறி விட்டது? கோயில்களில் நடக்குங் கொடுமைகளை என்னென்று கூறுவேன்? அவ்விழிவுகளை என்னென்று இயம்புவேன்? அவற்றைக் கொலைகளென்றே சொல்வேன்.

கோயில் ‘பிரசாதம்’ என்பதை விலாப்புடைக்கத் தின்று - பாவிகள் - எச்சிற் கையை, அழகிய முகங்காட்டிக் குழந்தைகள் போல நிற்கும் ஓவிய உருவங்கள்மீது துடைக்கிறார்கள். இஃது ஓவியக் கொலையன்றோ? ஓவியநுட்பம் முகிழாத உள்ளத்தில் அன்பேது? அருளேது? அந்தோ! நாட்டில் ஓவிய அறிவு நுட்பம் மாண்டுவிட்டது! ஓவியம் கல்லாக - மண்ணாகப் பாவிக்கப் படுகிறது. இதைவிட நாட்டுக்கு வேறொர் இழிவு உண்டோ?

இந்நாளில் சிலர் ஓவியம் என்னும் பெயரால் தமிழர் நாகரிகத்துக்கே கேடு சூழ்ந்து வருகிறார். இவர் பழைய கோயில்களை இடித்துப் புதிய கோயில்களைக் கட்டப்புகுகிறார். அக்கட்டடங்களில் ‘ஓவியம்’ (ஓவியம் என்று நினைக்கவும் மனம் நடுங்குறுகிறது) என்னும் பெயரால் சில ஆபாச - அநாசார - இழிவுகள் பொறிக்கப்படுகின்றன. இவ்விழிவுகள் ஓவியங்களாம்! எத்தகை நெஞ்சம் தமிழ் மக்களுக்கு உண்டாயிருக்கிறது! அச்சோ! நாம் எங்கிருந்தோம்? இப்பொழுது எங்கிருக்கிறோம்? மாணாக்கர்களே! நீங்கள் ஓவியத்துறை ஓம்பப் புகுதற்கு முன்னர், இடையில் முளைத்த இழிவுகளைக் களைந்தெறியுங்கள். மறைந்த தமிழ் ஓவிய உலகை உயிர்ப்பிக்கும் பொறுப்பும் உங்களுடையதே. ஓவியமென்பதும் நாகரிகத் துறைகளுள் ஒன்று. தமிழ் மக்கள் ஒரு பெரும் நாட்டினராக உலகர் முன்னர் ஒளி பெய்யவேண்டுமேல், அன்னார் ஓவியத்துறையை உயிர்ப்பிக்க உறுதி கொண்டே தீர்தல் வேண்டும்.

***இசை:*** இறைவன் இசை மயமா யிருக்கிறான். இயற்கை இசைமயமா யிருக்கிறது. நாமும் இசை மயமா யிருத்தல் வேண்டும். இசையிலா வாழ்வில் இன்பமில்லை. அது வசையுடையதாகும். ஒருவன் இசைப் புலவனாயிருத்தல் வேண்டும் அல்லது இசையை மடுத்து இன்புறுவோனா யிருத்தல்வேண்டும். இரண்டுமிலா ஒருவன் கொலையஞ்சா அரக்கனாவன்.

இசைக் கல்வியில் தமிழர் பேரூக்கஞ் செலுத்தினர் என்பதற்குப் பல சான்றுகளும் எடுத்துக்காட்டுகளும் வேண்டுவதில்லை. இசைப்புலமை இன்னும் ஆட்சியிலிருத்தல் ஒன்றே சாலும். ஆயினும், அதனூடுஞ் சில கறைகள் படிந்து வருகின்றன.

தமிழர் இசையுலகின் எல்லையைக் கண்டவர் என்று கூறுல் மிகையாகாது. தமிழர் கண்ட யாழுங் குழலும் பண் ணளவும் இசையுலகின் எல்லையை அளந்து காட்டுவன என்று அறிஞர் கூறுப. சிலப்பதிகார மென்னும் ‘நெஞ்சையள்ளும்’ நூலில், அரங்கேற்று காதையில், தமிழ் மக்கள் கண்ட இசை யுலகந் திகழ்கிறது. தேவாரப் பண்களிலும் தமிழரின் இசைத் திறன் விளங்குகிறது. “ஏழிசையாய் இசைப்பயனாய்’ என்று தமிழ்மறை முழங்குதல் காண்க. தமிழ் இசை வரலாற்றை நன்கு ஆய்ந்து, காலஞ்சென்ற ஆபிரகாம் பண்டிதரென்பார், ‘கருணா மிர்த சாகரம்’ என்னும் ஓர் அரிய நூல் இயற்றினார். அந்நூல் இசையாராய்ச்சியில் இறங்குவோர்க்குப் பெருந்துணை செய்யும் என்பது எனது கருத்து.

இப்பொழுது மாணாக்கர் பலர் இசை பயில்கிறார். ஆனால், அவர் இசைஆழியில் மூழ்கியெழுவதில்லை. அவர் சிற் றோடையில் - அதிலும் பாசி படர்ந்த சிற்றோடையில் - படிந் தெழுகிறார். இதனால் இசையுலகம் வளர்ச்சியுறாது.

இந்நாளில் யாழ் வாசிப்போர் தொகை அருகிவிட்ட தென்றே சொல்லலாம். தமிழ் உலகில் யாழ் வாசிப்பவர் ஒரு வரோ இருவரோ இருக்கிறார் என்பதை ஆறாத் துயருடன் தெரி விக்கிறேன். முறைப்படி குழல் ஊதுவோர் தொகையும் அருகி வருகிறது. தேவாரப் பண்களோ மிகச் சில இடங்களில் கட்டுப் பட்டுக் கிடக்கின்றன. இவற்றை ஓம்ப மாணாக்கர் உலகங் காப்புக் கட்டிக்கொள்ளல் வேண்டும். ‘ஹார்மோனியம்’ முத லிய சிறுமைக்கருவிகள் இசையுலகைக் கறைப்படுத்துகின்றன. அக்கருவிகளில் மாணாக்கர் கருத்துச் செலுத்தாதிருப்பாராக.

**நாடகம்:** ஒரு நாட்டின் நலம் பெரிதும் நாடகத்தைப் பொறுத்திருக்கிறது. நாடகம், இயல் - இசை - போன்றதன்று. அஃது எல்லார்க்கும் பயன்படுவது. எல்லார்க்கும் பயன்தரக் கூடிய அக்கல்வி தூய்மை வழியில் வளர்ந்துவரல் வேண்டும். அது நல்வழியில் வளராது, வேறு வழியில் வளர்ந்து வருமேல், உலகம் பாழ்படுதல் ஒருதலை.

இப்பொழுது தமிழ்நாடக உலகம் எந்நிலையிலிருக்கிறது? சொல்லலும் வேண்டுமோ? இப்போதைய நாடக உலகில் மாணாக்கர் ‘நாட்டஞ் செலுத்தலாகாது; எக்காரணம் பற்றியுஞ் செலுத்தலாகாது’ என்று சொல்வேன். ஆனால், நாடக உலகைப் பண்படுத்தாமல் வாளா கிடத்தலுங் கூடாது. நாடகத்தால் நாடு நலமுறல் வேண்டும். மாணாக்கர் நாடகத்தை நன்முறையில் -

நாடு ஆக்கமுற்று வளர்ந்தோங்கும் முறையில் - பயின்று நடாத்தக் கடமைப்படல் வேண்டும். தமிழுலகிற்குப் புதுப்புது நாடகம் தேவை.

**உடலோம்பல்:** இக்கல்வி எல்லாவற்றிற்கும் அடிப்படை. மாணாக்கர் இதன்மீது பெருங்கவலை செலுத்துவாராக. சுவரை வைத்தே சித்திரமெழுதல் வேண்டும். உடலோம்பு முறைகளை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

'உடலோம்பல் மருந்திடை உண்டு' என்னும் எண்ணமே உடலைக் கெடுக்கும். உடலோம்பலுக்கென மேல்நாட்டுத் தண்ணீரும் வேண்டா; மாத்திரையும் வேண்டா; கீழ்நாட்டுப் பற்பமும் வேண்டா; இலேகியமும் வேண்டா.

மாணாக்கர் உடற் பயிற்சிக்கெனச் சில ஆடல்கள் ஆடுகிறார். அவைகளிற் சில, மாணாக்கர்க்குப் பெருங் கவலையுண்டாக்குகின்றன. பந்தாட்டம் முதலியன, சிலவேளைகளில் வெற்றி - தோல்விக் கவலையை யூட்டுகின்றன. கவலை உடல் நலத்தை அரித்து அரித்து எரிக்கும் நஞ்சு. கவலையிலா உளத்தினின்றும் பிறக்கும் மகிழ்ச்சியே அமிழ்தாய், உடலைச் செந்நெறியில் ஓம்பிவரும். ஆகவே, கவலை யூட்டக்கூடிய எண்ணமோ சொல்லோ செயலோ ஒன்றும் தம்பால் உறாதவாறு தம்மை மாணாக்கர் காத்துவரல் வேண்டும். மகிழ்ச்சி, என்றும் மனத்தில் கோயில்கொள்ளத்தக்க வினைகளை நிகழ்த்த அவர் பயிலல் வேண்டும்.

'உடற்பயிற்சி உடற்பயிற்சி' என்று சிலர் உடலைக் கெடுத்துக் கொள்கிறார். முரட்டுப் பயிற்சிகள் முற்றும் விலக்கற்பாலன. கதிரொளி படரக் காற்றில் முறைப்படி உலவுதல் நற்பயிற்சி. நம் முன்னோர் உடற்பயிற்சிக்கென **ஆசன முறைகள்** கோலினர். அம்முறைகள், மேல்நாட்டு நாகரிகம் நாட்டில் நுழைந்தபொழுது எள்ளி நகையாடப் பட்டன. பின்னை ஆசனங்களின் நுட்பங்கள் ஆராயப்பட்டன. அவை ஒவ்வொரு முதலுறுப்புக்கும், சினை உறுப்புக்கும் உரமூட்டுதல் காணப்பட்டது. இப்பொழுது மேல்நாட்டறிஞர் சிலரும் அவற்றைப் பயின்று வருகிறார். வட இந்தியாவில் அப்பயிற்சி காட்டுத் தீப்போல் பரவிவருகிறது. ஆசனங்கள் எல்லாவற்றினும் மாணாக்கர் பயிற்சிபெற வேண்டுவதில்லை; இரண்டொன்றில் மட்டும் பயிற்சி பெறுவது சாலும்.

பிராணாயாமப் பயிற்சியும் நலன் தரும். இப்பயிற்சியைத் தக்கார்மாட்டுப் பயிலுமாறு மாணாக்கரைக் கேட்டுக்கொள்கிறேன். பிராணாயாமம் என்னும் பெயரால் சில கயவர் போலி

யோகங்களைச் சிறுவர்க்குச் சொல்லி அவர் வாழ்வைப் பாழ் படுத்துகிறார். மாணாக்கர் அப்போலி யோகிகளின் மாயவலை யிற் சிக்குற்று இடர்ப்படாதிருப்பாராக.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே நம்மவர் காற்றின் பெற்றியையுணர்ந்து, அதை ஈர்த்துவிடும் முறையை ஒழுங்கு படக் கோலியது ஈண்டுப் பெரிதுங் கருதற்பாற்று. புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை - நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கின்- உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும் - 'புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே', 'ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங் - காற்றைப் பிடிக்குங் கணக்கறிவாரில்லை - காற்றைப் பிடிக்குங் கணக்கறி வார்க்குக் - கூற்றை உதைக்குங் குறியது வாமே' என்று திருமூல னார் பிராணாயாமத்தால் விளையும் நலத்தை விளக்கியிருத்தல் காண்க.

உணவில் மாணாக்கர் பெருங் கவலை செலுத்தக் கடமைப் படல்வேண்டும். இரண்டு வேளை பொருந்திய உணவு கொள் வது சால்பு. ஒரு நாளைக்கு நான்கு ஐந்து முறை சாப்பிடுவது நோய்க்குக் கால்கொள்வதாகும். காப்பி, டீ, ஓவல்டைன், புலால், தீட்டிய அரிசி முதலிய உணவுப்பொருள்கள் பொருந்தியனவல்ல. கைக்குத்தரிசி, கீரை, மோர், பழம், தேங்காய், வாதுமை, நிலக் கடலை முதலியவற்றை முறைப்படி அளவாக உண்பது நலன்.

தீய எண்ணங்கட்கு எக்காரணம் பற்றியும் இடந் தர லாகாது. எண்ணும் எண்ணம் தூயதாயிருத்தல் வேண்டும். தீய எண்ணம் நஞ்சினுங் கொடியது. நல்லெண்ணம் அமிழ்தென உடலை ஓம்பும். இன்னும் விரிக்கிற் பெருகும்.

**செலவு :** இயற்கைப் படங்களாகிய காவியம், ஓவியம் முதலியவற்றின் வாயிலாக இன்பம் நுகர்வதோடு, நேரே இயற்கை வாயிலாக இன்பம் நுகரவும் மாணாக்கர் பயில்வது நலம். **இவ்வுலகம் பெரிய பல்கலைக் கழகம்.** மலையுங் காடும் ஆறுங்கடலும் பெருங்காவிய ஓவியங்களல்லவோ? அவைகள் பால் அணுகி இயற்கை அன்னையுடன் உறவு கொள்வதால் விளையும் இன்பம் சொல்லுந் தகையதன்று. இதற்குத் தரைச் செலவும், கடற் செலவும் வேண்டற்பாலன. மாணாக்கர் ஓய்ந்த வேளைகளில் தரை வழியாலோ கடல் வழியாலோ சென்று பல பதிகளைப் பார்த்தல் வேண்டும்; பல மக்களோடு பழகல் வேண்டும்; உலக இயல்களை நன்கு தெளிதல் வேண்டும். இச் செலவால் அவர் இயற்கைக் கல்வியறிவும் பெறுதல் கூடும். மாணாக்கர் வாழ்விற்கு இச்செலவு மிக இன்றியமையாதது.

***சமயம்:*** *சமயக் கல்வியின் இன்றியமையாமையை ஈண்டு எவ்வுரையால் இயம்புவேன்? மனிதனை விலங்கினின்றும் பிரித்து மேம்படுத்துவது சமயம்.*

*மனிதன் சமய வாழ்வை விடுவனேல், அவன் என்னாவன்? விலங்காவன் என்று சொல்லலும் வேண்டுமோ? மனிதனை விலங்கினின்றும் பிரிக்கவல்ல சமயக்கல்வி, மாணாக்கர்க்கு வேண்டுமா வேண்டாவா என்று ஆராயப் புகுவதே அறியாமை. வாழ்வே எற்றுக்கு? அவ்வாழ்விற்கெனக் கல்வி பயிறல் எற்றுக்கு? தொழில் புரிதல் எற்றுக்கு? சமய ஞானப் பேற்றிற்கன்றோ?*

*எச்சமய ஞானத்தை மாணாக்கர்க்கு அறிவுறுத்துவது? எச்சமய ஞானத்தையாதல் மாணாக்கர் பெறுதல் வேண்டும். தொடக்கத்தில் சமயம் பலபலபோலத் தோன்றும். ஆராய்ச்சி முடிவில் எல்லாம் ஒன்றாகவே புலப்படும்.*

*தமிழர் அறிவுறுத்திய சமயம் ஓர் எல்லைக்குள் கட்டுப் பட்டுக் கிடப்பதன்று. அஃதொரு சிறைப்பட்ட சமயமுமன்று. 'உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே' என்றும், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்றும், 'இது ஆகும் அது அல்ல எனும் பிணக்க தின்றி - நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காணநிற்பது - யாதொரு சமயம் அது சமயம்' என்றும், 'வேறு படு சமயமெலாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம்பொருளே நின்விளையாட்டல்லால் - மாறுபடுங் கருத்தில்லை' என்றும் நந் தமிழ் மக்கள் அருளிய சமரச மொழிகளை நோக்குக. இச்சமர சத்தையே உலகம், இப்பொழுது வேட்டு நிற்கிறது.*

*உலக நேயம் யாண்டும் பேசப்படுகிறது; எழுதப்படுகிறது. அந்நேயம் பரவாமைக்குக் காரணம், நாடு - மொழி - நிறம் - வகுப்பு - முதலிய புற வேற்றுமைகளில் மக்கள் கருத்தைப் பதித் திருப்பதே யாகும். மக்கள் அக்கருத்தைச் சிறிது அகமுகமாகத் திருப்பி, ஆன்ம ஆராய்ச்சியிற் செலுத்தின், அங்கே எவ்வேற்று மையுங் காணப்படா. அவ்வான்ம ஆராய்ச்சியே சமயக்கல்வி யென்பது. மற்றக் கல்வித் துறைகள் யாவும் சமயக்கல்விக்கு உடல்போன்றன.*

*'சமயப் பெயராலும் உலகில் பல போர்கள் நிகழ்ந்து வருகின்றன' என்று சிலர் வினவுதல் கூடும். பல சமய உணர்வும், பல கடவுளர் உணர்வும், அவை காரணமாக முத்திநெறி யறியாத மூர்க்கர்பா லெழுஞ் சமய வெறியும் 'சமயம்' என்னும் பெயரால் உலகில் பல போர்களை மூட்டின. மனிதன் பல நாடு - பல மொழி - பல நிறம் - பல வகுப்பு - முதலிய பன்மைகளை நினைந்து*

நினைந்து, காழ்ப்பேறிய நெஞ்சங் கொண்டவனாதலால், அவன் சமயத்தை நோக்கும் போதும் அவனுக்குப் பன்மையே புலனா கிறது. இது மகன்பாலுள்ள குற்றம். தொடக்கத்தில் தோன்றும் பன்மையுணர்வைப் போருக்குப் பயன்படுத்துவது அவனது அறியாமையே யாகும். சமயம் என்பது ஒன்றே. .இது குறித்து 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூலில், 'சமய வாழ்வு'என்னும் பகுதியிலும், 'சைவத்தின் சமரசம்' என்னும் நூலிலும் விரித்துக் கூறியுள்ளேன்.

பன்மை உணர்வால் உலகம் பட்டபாடு போதும். உலகம் அயர்ந்து அயர்ந்து, இப்பொழுது சகோதர நேயமெனும் ஒருமையைக் குறிக்கொண்டு நிற்கிறது. அக் குறிக்கோளை மிக எளிதில் நிறைவேற்ற வல்லது சமய ஞானம் ஒன்றே என்பது எனது உட்கிடக்கை. சமய ஞானம் பெருகப் பெருக ஆன்ம நேயமும் முருகியெழுந்து பன்மைப் பகையை மாற்றும்.

நாம், நாம் பிறந்த நாடு, உலகம் ஆகிய மூன்றையும் பிணித்து நிற்பது சமயமென்பதைக் கூர்ந்து உணர்வோமாக. பிற, இம் மூன்றையும் பிரித்து நிற்றல் வெள்ளிடைமலை. ஆகவே, சகோ தர நேயம் என்பதை எளிதில் கூட்டவல்லது சமயம் என்று தெளிக. அச்சமயக் கல்வி, இனிவரும் உலகைப் படைக்கப்போகும் உங்களுக்கு வேண்டுமா வேண்டாவா என்று நீங்களே உன்னிப் பாருங்கள். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே - அல்லா மல் வேறொன்றறியேன் பராபரமே' என்பதே சமய ஞான நிலை.

சமய ஞானம், மக்களுக்குச் சோம்பல் - துறவில் எண்ணம் - வாழ்வில் வெறுப்பு முதலியவற்றைத் தோற்றுவித்தலால், அஃது எற்றுக்கு என்று இந்நாளில் சிலர் கருதுகிறார். சமய ஞானம் சோம்பலையாதல் பிறவற்றையாதல் உண்டு பண்ணும் என்று எவருங் கருத வேண்டுவதில்லை.

ஆன்மாவின் அறியாமையைப் போக்கவேண்டுமென்னும் நோக்குடன் ஆண்டவனால் இவ்வுடல் இவ்வுலகம் முதலியன வழங்கப்பட்டிருக்கின்றன. ஆண்டவன் கொடையாகவுள்ள இவ் வுடலையும் இவ்வுலகையும் துறப்பது, ஆண்டவனை மறப்ப தாகும். பெறற்கரிய இவ்வுடலைக் கொண்டு, இவ்வுலக இன் பத்தைச் செம்மை நெறியில் நுகர்ந்து, தனக்கென வாழாது பிறர்க்கென வாழுமாறு சமயம் அறிவுறுத்துகிறது. எல்லா வற்றையும் விடுத்து ஓடுமாறு உண்மைச் சமயம் அறிவுறுத்த வில்லை. ஆண் பெண்ணை வெறுத்தலும், பெண் ஆணை வெறுத்தலும் இயற்கைக்கு மாறுபட்டு நடப்பதென்பதை யான்

எழுதியுள்ள நூல்களிலெல்லாம் ஒல்லும்வகை விளக்கியிருக் கிறேன். துறவு, நீத்தல் என்னுஞ் சொற்கட்குப் பின்னாளில் கொள்ளப்பட்ட பொருள், முதல் நூல்களின் கருத்துக்கு அரண் செய்வதன்று. தன்னலத்துக்குக் காரண மாகவுள்ள அழுக்காறு அவா முதலிய தீநீர்மைகளைத் துறந்து, எவ்வுயிரையும் தன்னைப் போல் கருதித்தொண்டு செய்யுமாறே நம் முன்னோர் அறி வுறுத்திச் சென்றார். 'நீத்தார் பெருமை' அருளிய திருவள்ளுவ னார், எல்லாவற்றையும் விடுத்துக் காட்டுக்கோடி மூக்கைப் பிடித்துக் கொண்டிருக்குமாறு யாண்டாயினுங் கூறியிருக்கி றாரா? 'அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் - செந்தண்மை பூண்டொழுக லான்' என்று 'நீத்தார் பெருமை' க்கண், பயன்கருதாத் தொண்டை அவர் வலியுறுத்தியிருக்கிறார். 'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும் நின் - தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே' என வரூஉந் தாயுமானார் திருவாக்கையும் ஓர்க.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல் வேண்டுமென் னும் எண்ணத்தை விதைப்பது சமய ஞானமாகும். சமய ஞான மில்லையேல், ஒப்புரவு முதலிய நல்லியல்புகள் அருகும். புறக் கோலங்களையும், வழக்கவொழுக்கங்களையும் சமயமாகக் கருதிச் சிலர் சமயத்தையே நிந்திக்கிறார். கோலங்கட்கும், வழக்க வொழுக்கங்கட்கும், சமயத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. கோலம், வழக்க ஒழுக்கம் முதலியன நாட்டுக் கேற்றவாறு பலபடக் கிடக்கும். அவை, காலதேச வர்த்தமானத்துக்கேற்ற வண்ணம் மாறுந் தகையன. சமயமோ எல்லா நாட்டார்க்கும் பொதுவாயிருப்பது. அது மாறுந் தன்மையதுமன்று. மக்கள் எந் நிலையில் நின்றும், எவ்வேடங்கொண்டும் சமய வாழ்வு நடாத்த லாம். அற வொழுக்கம் அதற்கு அடிப்படை. 'எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருளன்றே... என்றார் சேக்கிழார்.

'தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் வாழ்வே' தன் னுரிமை நல்கும்; தன்னரசளிக்கும்; உலக சகோதர நேயத்தையு முதவும். அப் பெருவாழ்வைக் கூட்டும் சமயம், உலக சகோதர நேயத்தை வளர்க்கும் பொறுப்பேந்தியுள்ள மாணாக்கர்க்கு எவ்வளவு இன்றியமையாததென்று சொல்ல வேண்டுவதில்லை.

யாழ்ப்பாணத்துச் சமய நிலையில் ஒரு பெரும் மாறுதல் விரைவில் நிகழின் நலன் விளையும். அது பெரிதும் மாணாக் கருலகைப் பொறுத்து நிற்பது. யாழ்ப்பாணத்தில் சைவர்க்கும், கிறிஸ்துவர்க்கும் சமயப் போர் முன்னே அடிக்கடி நிகழ்ந்து

வந்தது. அப்போர் இப்பொழுது எழுநாவிட்டெரியவில்லை. ஆயினுங் கனல் இன்னுந் தணியவில்லை. பெரும்போர் நிகழ்ந்த காலநிலைக்கும் இக்காலநிலைக்கும் வேற்றுமையுண்டு. அந் நாளைய சைவர் கிறிஸ்துவை நன்கு உணராதிருந்தனர். அவ்வாறே கிறிஸ்துவரும் நால்வரை நன்கு உணராதிருந்தனர். அந்நாளில் ஒருவரை ஒருவர் நன்கு உணர்தற்குப் போதிய வாய்ப்புமில்லை. இப்பொழுது சைவ அறிஞர் பலர் கிறிஸ்துவை நன்கு உணர்ந்திருக்கிறார். கிறிஸ்துவ அறிஞரும் நால்வரை நன்கு உணர்திருக்கிறார். நன்மனங்கொண்டு இருவர் அருளுரையையும் ஆய்ந்தால் 'அன்பே கடவுள்' என்னும் முடிவிற்கு வருதல் கூடும். அம்முடிவிற்கு வந்தவருஞ் சிலருளர். மாணிக்கவாசகனார் திரு வாசகத்துக்கும், கிறிஸ்து பெருமான் சுவிசேஷத்துக்கு முள்ள கருத்து வேற்றுமை எனக்கு விளங்கவில்லை. மொழி வேற்றுமை யும், வழக்கத்தில் வருஞ் சில கண்முடி வேற்றுமையுந் தவிர, பிறி தொரு வேற்றுமையிருத்தல் எனக்குத் தோன்றவில்லை. ஆகவே, சைவர் கிறிஸ்துவையும், கிறிஸ்துவர் நால்வரையும் போற்றும் ஓர் அன்பு வாழ்வு யாழ்ப்பாணத்தில் கால்கொள்ள வேண்டுமென் பது எனது வேணவா. அக்கால்கோள் விழா நடாத்த மாணாக்கர் உறுதிகொள்வாராக.

மற்றும் பல சமயங்களுடன் உறவுகொண்டு, உலகில் சமரச ஞானத்தை வளர்க்க முயல்வதே அறிவுடைமை. உலக சகோ தரநேய முழக்கம் யாண்டும் எழுந்துள்ள இவ்வேளையில் பல சமய உணர்வு, ஒரு சமயம் விட்டு இன்னொரு சமயம் புகல், அதற்குச் சடங்குகள் முதலியன கொள்ளல் நாகரிகமாகா.

**தன்னரசு**

கல்வித்துறைகள் பல பயில்வதால் மக்கட்கு உரிமையில் வேட்கையும், உயிர்களிடத் தன்பும் உண்டாகும். உரிமை வேட்கை இல்லாத இடத்தில் உயிர்களிடத்தன்பு நிகழல் அரிது. உரிமைக்கும் அன்புக்கும் பெருந்தொடர்புண்டு. உரிமையில்லா வாழ்வு வாழ்வாகாது. வாழ்விற்கு அழகளிப்பது உரிமை உரிமையே.

உலக சகோதர நேயம் என்பது குறிக்கோள். அதற்குத் தன் னரசு இன்றியமையாதது. தன்னரசில்லா நாடு தன்னைக் கெடுத்துக் கொள்வதுடன் பிறரையுங் கெடச் செய்கிறது. அதனால் சகோதர நேயத்தை வளர்த்தல் இயலாது.

இலங்கையும் இந்தியாவும் சுயராஜ்யம் இழந்த நாடுகள். இவைகள் தங்கள் நலன்களை இழந்துவரல் கண்கூடு. இவற்றை

ஆள்வோருக்குப் பல வழியிலும் நலனிருத்தலால், அவர் வலிந்து சுயராஜ்யம் வழங்க எளிதில் ஒருப்படார். ஆசை எவரை விடும்? பெரிய இரண்டு நாடுகளைப் பற்றி ஒரு நாட்டார் ஆட்சி புரி வதைக் காணும் மற்ற நாட்டார்க்கு அழுக்காறெழுதல் இயல்பே. அவ்வாசையும் இவ்வழுக்காறும் வாளா கிடக்குமோ? விரிவுரை வேண்டுவதில்லை.

இவ்வளவிற்குங் காரணமாயிருப்பது எது? இரண்டு நாடு களும் சுயராஜ்யமிழந்து நிற்பதேயாகும். உலக சமாதானத்துக்கே கேடு விளைத்து வருவோர் இலங்கையரும் இந்தியருமென்று இங்கே கூறல் மிகையாகாது. ஆகவே, இருநாட்டாரும் விடுதலை பெறுதற்குரிய முயற்சி செய்யக் கடமைப்பட்டிருக்கிறார். உலகில் சில நாடுகள் உரிமையிழந்து கிடக்கும்வரை உலக சகோதர நேயத்துக்கு இடனில்லை என்பது பெரிதுங் கருதற்பாலது.

தன்னரசு பெறுதற்கு இதுகாறும் உலகில் கொள்ளப்பட்ட முறையை இனி எவருங் கொள்ளுதலாகாது. எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யா அருண்முறையே இனிக் கொள்ளப் பெறல்வேண்டும். நெப்போலியனும் கெய்ஸருங் கொண்ட கொலைமுறை இனி வேண்டா. காந்தியடிகள் அறிவுறுத்தும் அறமுறையே இனி வேண்டும். மாணாக்கர் இம்முறையில் பயிற்சி பெறுவாராக.

காந்தியடிகள் உலகுக்கு அறிவுறுத்தும் முறைகள் உங்கள் நோக்கங்களில் மிளிர்கின்றன. பின் மூன்று நோக்கங்களும் தன் னரசுக்கு வழிகோலுவன என்பதில் ஐயமில்லை, அவற்றைச் செயலில் கொணர்ந்தால், தன்னரசு தானே அரும்பும். தன்னரசு, பிறர் கொடையிலில்லை யென்பதும், அது தன் முயற்சியால் தன்னகத்திருந்தே எழுதல் வேண்டுமென்பதும் உணரற்பாலன.

‘மாணாக்கர் அரசியலில் தலைப்படுதலாகாது’ என்று சில இடங்களிற் சொல்லப்படுகிறது. அதற்கு மாணாக்கர் செவி சாய்த்தலாகாது. அரசியற் போராட்டத்தில் - அதிலும் உரிமை இழந்த நாட்டிலெழும் அப்போராட்டத்தில் - மாணாக்கரே பெரிதுந் தலைப்படுதல் வேண்டுமென்பது எனது கருத்து. உலக சரித்திரமும் அவ்வாறே கூறுகிறது. இதாலி, ஜப்பான், துருக்கி, சீனம் முதலிய நாடுகளின் விழிப்புக்கும் விடுதலைக்கும் காரண ராக நின்றவர் யாவர்? மாணாக்கரல்லரோ? கடந்த ஐரோப்பாப் போரில் தத்தம் தாய் நாட்டுக்காக உயிர்துறந்தவர் யாவர்? மாணாக்கரல்லரோ? தேசபக்தி என்னும் மணிவிளக்கு ஒளிவிட் டெரியுமிடம் மாணாக்கருள்ளமே யாகும். அவ்வுள்ளமுடையார் ஏன் உரிமைப் போராட்டத்தில் கலத்தலாகாது?

அரசியலுக்கென ஒரு தனிக் கூட்டம் நாளை கூடப் போவ தால், யான் அதுகுறித்து இன்று இங்கே விரிவுரை நிகழ்த்த வேண்டுவதில்லை.

**இலங்கை**

உங்கள் தாய்நாடு இலங்கை. இலங்கையெனில் இலங்கைத் தரையா? இலங்கை என்பது வெறுந் தரையன்று. இலங்கையின் இயற்கை, கலை, நாகரிகம், அரசு முதலியன சேர்ந்த ஒன்றே இலங்கை என்பது. இத் தாய்நாட்டை, ஈன்ற தாயைப்போலவே நேசித்துவரல் வேண்டும்.

இலங்கையில் பலவேறு மொழியினர், பலவேறு வகுப்பினர், பலவேறு சமயத்தினர் இருக்கின்றனர். அவரனைவரையும் இலங்கையராகக் கொள்வதே தேசபக்தியாகும். மொழி வேற்றுமையோ பிற வேற்றுமைகளோ வீறிட்டெழுந்து இலங்கையர் என்னும் எண்ணத்துக்குக் கேடுவிளைப்பின், தன்னரசுத் தோற்றமும் சேய்த்தே ஓடி மறைவுறும்.

எக்காரணம் பற்றியும் வகுப்புவாதம் தலைகாட்டலாகாது. வகுப்பெண்ணம் தேசபக்தியை விழுங்கிவிடும். இலங்கையில் பிறந்தவர் தமிழராயினுமாக; சிங்களவராயினுமாக; மற்றவராயினு மாக, அவரனைவரையும் இலங்கையராகவே கருதுதல் வேண்டும். ஆகவே முதலில் இலங்கையராக இருங்கள்.

நாட்டில் தன்னரசை நிறுவுவதற்கு முதலில் நாட்டிலுள்ள குறைபாடுகளைக் களைய முயலல் வேண்டும். அம்முயற்சியுடன் நாட்டுக்கலை, நாட்டுத்தொழில் முதலியவற்றையும் வளர்க்க ஊக்கங்கொள்ளல் வேண்டும். குறைபாடுகள் பலபடக் கிடக் கின்றன. அவைகளுள் சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறித்துச் செல்கிறேன்.

***பிறப்பு;*** பிறப்பில் உயர்வு தாழ்வு பாராட்டுதல் இந்தியா விலும் உண்டு. இலங்கையிலுஞ் சில பகுதிகளில் உண்டு. பிறப் பில் உயர்வு தாழ்வு கருதும் ஒரு நாடு தன்னரசை இழத்தல் இயல்பு. எல்லாரையுஞ் சமமாகப் படைக்கும் ஆண்டவன் நோக்குக்கு மாறுபட்டு நடப்பவர் ஒறுக்கப்படுதலும் இயல்பு. தன்வினை தன்னைச் சுடாது மற்றறெவரைச் சுடும்?

பண்டை நாளில் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுங் கொடுமை இருந்ததில்லை. பின்னாளிலேயே அக்கொடுமை எங்ஙனோ நுழைந்து இடர் விளைக்கலாயிற்று.

பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவதை மன்பதையினின்றுந் தொலைக்கப் **புத்தர் பெருமான்** முயன்றார். நாளடைவில் அவர்

முயற்சியும் பாழ்பட்டது. இலங்கையில் புத்தர் அறவுரை புகுந்து நீண்ட நாளாகியும் இலங்கை இன்னும் பிறப்பில் வேற்றுமை கருதுங் கொடுமைக்கு இடந் தந்து வருகிறது! அந்தோ!

யாழ்ப்பாண மாணாக்கரிற் பெரும்பான்மையோர் தமிழராக இருத்தலான், தமிழ்நாட்டு நிகழ்ச்சிகளிற் சில கூறுகின்றேன். பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் இழிவு பழந்தமிழர் காலத்திலில்லை. பின்னரே இவ்விழிவு தமிழ் அகத்தில் நுழைந்தது. இவ்விழிவைப் போக்க அவ்வப்போது தமிழறிஞர் முயன்றனர். திருவள்ளுவர், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமையான்' என்று பிறப்பில் உயர்வு தாழ்வின்மையை அறிவுறுத்திச் சென்றனர்.

தமிழ் மக்களிடைச் சாதிப்பேய் தாண்டவம் புரிந்த காலத்திலேயே **நாயன்மார்** தோன்றினர். அவர், சாதிக் கோட்டையைத் தகர்க்கக் கடவுளன்பு என்னுங் கருவி கொண்டனர். கலப்பு மணம், உடனுண்ணல், பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாமை முதலிய அன்பொழுக்கத் துறைகள் நாயன்மார் காலத்தில் ஆக்கம் பெறலாயின. பல வகுப்புக்களில் பிறந்த நாயன்மாரைப் பார்ப்பனர் குலத்திற் றோன்றிய வன்றொண்டப் பெருந்தகையார், 'அடியார்க்கும் அடியேன்' என்று வழுத்தியதும் ஈண்டு உன்னற்பாற்று. சாதியைத் தொலைக்க எழுந்த அவ்வன்பியக்கமும் நாளடைவில் மறைந்து போயிற்று. சாதிக் கொடுமை ஓங்கி வளர்ந்து வளர்ந்து முடிவில் தன்னரசையே வீழ்த்திற்று. தன்னரசு வீழ்ந்தும் இன்னும் நம்மவர் நல்லறிவு பெறாதிருக்கிறார். இஃதெதைக் காட்டுகிறது? இன்னும் தேசபக்தி இன்மையையே காட்டுகிறது. ஆகவே, பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவதை ஒழியுங்கள்; ஒழியுங்கள்.

***தீண்டாமை;*** தீண்டாமை என்றொரு நோய் நம்மைத் துன்புறுத்துகிறது. மக்களுள் தீண்டாமை வகுத்தது எத்தகைக் கொடுமை! பிறப்பில் தீண்டாதான் என்று சொல்லப்படுவோனுக்கும், மற்றவனுக்கும் என்ன வேற்றுமை இருக்கிறது? பின்னைத் தீண்டாமை யாண்டிருந்து முளைத்தது? மக்கள் செய்த கற்பனை என்னே! என்னே! அக்கற்பனையால் விளைந்துள்ள கேடுகளைக் கண்ணாரக் கண்டும் இன்னுமா தீண்டாமை பாராட்டுவது? நாட்டின் கலை, செல்வம், நாகரிகம், அரசு எல்லாம் போயின. நாடு வறுமைக் குழியில் வீழ்ந்து வருந்துகிறது. இன்னுமா தீண்டாமை!

தீண்டாதாரிடை ஒழுக்கமில்லை என்று சிலர் சொல்கிறார். 'மற்றவரெல்லாரும் ஒழுக்கமுடையரா?' என்று அச்சகோத

ரரைக் கேட்கிறேன். தீண்டாதார் என்று சொல்லப்படுவோருள் எத்தனையோ பேர் ஒழுக்கசீலரா யிருக்கிறார். உயர் வகுப்பா ரென்று சொல்லப்படுவோருள் எத்துணையோ பேர் ஒழுக்க ஈனராயிருக்கிறார். அவரைப் பார்ப்பனரென்றும், இவரைத் தீண்டாதாரென்றும் ஏன் கொள்ளுதல் கூடாது? பிறப்பில் தீண்டாமை கருதுவது கொடுமை; வன்கண். அநாகரிகம். பிறப் பில் தீண்டாமை கருதப்படுமிடத்தில் 'தேசபக்தி' எங்ஙனம் இடம்பெறும்?

தீண்டாமையை வேரோடு கல்லி எறிதற்கு **மகாத்மா காந்தி** முயன்று வருவது உங்கட்குத் தெரியும். அவர் ஓர் ஆதி திராவிடப் பெண்ணை வளர்த்து வருகிறார்; தமது ஆசிரமத்தில் தீண்டாதாரெனப்படுவோரைச் சேர்த்துக் கொள்கிறார். அப் பெண்மணியும், மற்ற ஆசிரமப் பிள்ளைகளும் ஒழுக்கமுடைய ராய் ஒளிர்கிறார். மக்கள் கூட்டத்தைக் கண்டு ஒதுங்கி ஓடு வதைப் பார்க்கிலும், அவர்களுடன் கலந்து பழகி அவர்களை உயர்த்துவதே அருளுடைமையாகும். அப்பொழுதே மக்கள் ஒழுக்கமுடையராய் மேல்நிலையுறுதற்கு வழியுண்டாகும். ஒதுங்கி ஒதுங்கி, 'ஒழுக்க ஈனம்' என்னுங் குற்றம் மட்டும் சுமத்திக் கொண்டிருப்பது அறியாமை. ஒதுங்கி ஓடுவோர்க்குப் போதிய அன்பொழுக்க மென்னும் இரக்கமில்லை என்று கூறல் மிகை யன்று.

**பெண்மக்கள்** : பெண்ணடிமை மற்றுமொரு கொடுமை. உலகம் பெண் ஆணால் ஆக்கப்பட்டிருக்கிறது. உலகின் ஒரு கூறாகிய பெண்ணினம் மட்டும் தாழ்த்தப்பட்டதற்கு ஏதாயினும் பொருளுண்டோ? பெண்ணுலகந் தாழ்த்தப்பட்டால் ஆணுலக முந் தாழ்த்தப்படும். இரண்டும் உரிமை பெற்றுள்ள இடத்தி லேயே உரிமை ஞாயிறு ஒளிசெய்து கொண்டிருக்கும். ஒன்று அடிமைப்படின் மற்றொன்றும் அடிமைப்பட்டு, முடிவில் நாடே அடிமைக்குழியில் வீழ்ந்துபடும்.

வடமொழியில் உபநிடதங்களை அருளிய பெண்ணரசிகள் தமிழிற் காவியங்களை யாத்த பெண் தெய்வங்கள் - வழி வழி வந்த பெண்மணிகளின் அறிவைக் குலைத்து அடிமைக் குழியில் வீழ்த்திய பாவம் நம்மைச் சூழ்ந்து நிற்கிறது. 'ஒத்த நலனும் ஒத்த குணனும் ஒத்த கல்வியுமுடைய ஒருவனும் ஒருத்தியும்' என வரூஉம் நக்கீரனார் உரையை நோக்குக. ஒத்த கல்வி பெறத் தோன் றிய பெண்ணுலகம் அடிமைப் படின் ஆணுலகிற்கு இன்பமேது? யாழ்ப்பாணத்தில் பெண் மக்கள் தளை அறுபட்டு வருகிறது. இது நற்குறியாகும். இன்னும் முற்றும் அறுபட மாணாக்கருலகம்

முயல்வதாக. பெண்ணுலகின் விடுதலை நாட்டின் விடுதலை என்பதை யாழ்ப்பாண மாணாக்கர் உணர்ந்து நடப்பது சிறப்பு.

பெண்ணுரிமை என்னும் பெயரால் சில குப்பைகளைக் கொணர்ந்து பெண்ணுலகில் குவிப்பதும் நாட்டுக்குப் பெருங் கேடு விளைப்பதாகும்.

பெண்மக்களிடம் பெண்மை, தாய்மை, இறைமை ஆகிய மூன்று இயல்புகளிருக்கின்றன. அவை முறையே மலர்ந்து, காய்த்து, கனியும் முறையில் அவர்கள் வாழ்வு நடாத்துதற்கு ஆணுலகந் துணைபுரிதல் வேண்டும். இறைமை கனியாதவாறு பெண்ணுலகைக் கெடுத்தல் பாவம். விரிவு யான் இயற்றிய 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை' என்னும் நூலிற் பார்க்க.

**கண்மூடி வழக்கங்கள்:** கண்மூடி வழக்கங்கள் பல நாட்டுக்கேற்றவாறு ஆங்காங்கே ஆட்சி பெற்றிருக்கின்றன. அவற்றைப் படிப்படியாக இறக்குவதே அறிவுடைமை. கல்வி யறிவுக் குறைபாடே கண்மூடி வழக்கங்கட்குக் காரணம். கல்வி யறிவு ஒளி படரப் படரக் கண்மூடி வழக்கங்களென்னும் இருட் குழாம் தானே இரிந்தோடும். ஆகவே, கல்வியறிவு நாட்டிடைப் பெருகல்வேண்டும்.

**சுதேசியம் :** குறைபாடுகளைக் களைவதுடன் சுதேசி யத்தை ஓம்பிவருவது ஒழுங்கு. இல்லையேல் நாடு நலனுறாது. ஒல்லும்வகை நாட்டுப் பொருளைப் பயன்படுத்தவே மக்கள் உறுதி கொள்ளல்வேண்டும். நாட்டுப் பொருள்களைப் பயன் படுத்தப் பயன்படுத்த வேற்று நாட்டுப் பொருள்கள் தாமே அகன்று போய்விடும்.

இந்தியாவில் காந்தியடிகள், நாட்டுடையில் கருத்துச் செலுத்தி வருவது உங்கட்குத் தெரியும். நீங்களும் அம்முயற்சி யில் தலைப்படலாம். நாட்டுக் கதருடை, நாட்டில் ஒருவித நாட் டுணர்ச்சியை எழுப்பும். எளிதில் கிடைக்கக் கூடிய நாட்டுப் பொருள்களை விடுத்து, அவைகட்குப் பதிலாகப் பிறநாட்டுப் பொருள்களை பயன்படுத்துவது தாய்க் கொலையாகும். வேற்று நாட்டுப் பொருள்களில் கருத்தைப் பதியவைத்துக்கொண்டு 'நாட்டுரிமை நாட்டுரிமை' என்று வாயினால் பேசினால், யாண் டிருந்து உரிமை வரும்? நாட்டுரிமை, நாட்டுப் பொருளைக் காத்தலிலும், வேற்றுநாட்டுப் பொருளை விலக்கலிலுமிருத்தலை உணர்ந்து நடப்பது உரிமை வேட்கைக்கு அறிகுறியாகும். இவ் வேட்கை மாணாக்கர் உலகில் முருகியெழுவதாக. நாட்டுடை,

*நாட்டுக் கலை, நாட்டுத்தொழில் முதலியவற்றை ஓம்ப மாணாக் கர் முனைந்து தொண்டாற்றுவாராக.*

*இவ்வழிவு ஆக்கத் தொண்டால் இலங்கை அன்னை விடுதலை பெறுவாள் என்பது ஒருதலை.*

**இறுவாய்**

*சகோதரிகளே! சகோதரர்களே! இதுகாறும் எனது புன் மொழியை பொறுமையுடன் செவிமடுத்த உங்கள் பெருந்தகை மைக்கு எனது நன்றி யறிதலான வணக்கஞ் செலுத்துகிறேன். யாழ்ப்பாணத்தில் புத்துயிர் பிறப்பிக்க வேண்டுவது உங்கள் கடமை. கதிரும் மதியும் ஒருங்கு திரண்டு காட்சி யளித்தாலென இருபாலாருந் திரண்டு, மகாநாட்டைச் சிறப்பிக்கப் போந்துள் ளது யாழ்ப்பாணப் புத்துயிர்ப் பேற்றிற்கு அறிகுறியாகும்.*

*யாழ்ப்பாண இளைஞர்களே! வருங்கால உலகம் உங் களை நோக்கி நிற்கிறது; உங்கள் தாய்நாடு உங்களை நோக்கி நிற்கிறது; உங்கள் தமிழ்த்தாய் உங்களை நோக்கி நிற்கிறாள். உலகில் சகோதர நேயம் பெருகல் வேண்டும்; நாடு தன்னர சின்பம் நுகரல் வேண்டும்; தமிழ்த்தாய் அரியாசனம் ஏறல் வேண்டும். இத்துணைக் கடன்கள் உங்களைச் சூழ்ந்து நிற் கின்றன. அக்கடன்களாற்ற எழுங்கள்; எழுங்கள்.*

*நாட்டுக் கலைமகளும், திருமகளும், பிறமகளிரும் உங்களை நினைந்தவண்ண மிருக்கிறார்கள். தங்களை ஓம்பவல்ல கல்வி, அறிவு, அன்பு, ஒழுக்கம், திறன் முதலியவற்றை நீங்கள் பெற்று வருகிறீர்களா என்னும் ஏக்கம் அவர்கட்குண்டு. அவ்வேக்கம் நீங்கும் முறையில் நீங்கள் கல்வியறிவு முதலியன பெற எழுங்கள்;*

*செங்கதிர்களே! உங்கள் ஒளியால் இலங்கைக் கட்ட விழ்ந்து மலர்வதாக. அம்மலர் பிலிற்றும் உரிமையின்பத்தேனை, நீங்கள் நுகர, எல்லாம் வல்ல இறைவன் திருவருள் உங்கள்பால் நிலவுவதாக.*

*உலகில் அன்பு பெருக; இலங்கை செழிக்க; யாழ்ப்பாணம் ஓங்க; தமிழ் வாழ்க;*

**திரு.வி.க.**

# தமிழ் மாணாக்கர் மகாநாடு

## (துறையூரில் கூடியது)

## - 1932 ஆகஸ்டு 6ஆம் நாள் -

**அன்பார்ந்த சகோதரிகளே! சகோதரர்களே!**

*தஞ்சையும், திருச்சியும் ஒன்றிக் கூட்டிய தமிழர் மகா நாட்டுச் சார்பில், இன்று இவண் ஈண்டியுள்ள தமிழ் மாணாக்கர் மகாநாட்டில், தலைமை வகிக்கும் பேற்றை எனக்கு வழங்கிய உங்கள் அனைவர்க்கும் எனது நன்றியறிதலான வணக்கத்தைச் செலுத்துகிறேன். தமிழர் மகாநாட்டுக்கு [1]ஓர் அமைச்சரும், தமிழ்ப்புலவர் மகாநாட்டுக்கு [2]ஒரு புலவரும் தலைமை பூண்டது சால்பே யாகும். தமிழ் மாணாக்கர் மகாநாடும் சிறப்புடைய ஒரு வர் தலைமையில் கூடுவது முறைமை. உடல் உரமும், உள்ளக் கிளர்ச்சியுங் குன்றியுள்ள எனது தலைமையை நீங்கள் விழைந் தது எற்றுக்கு என்பது விளங்கவில்லை. உங்கள் துணைகொண்டு நீங்கள் குறித்த கடனாற்ற ஒல்லும்வகை முயல்கிறேன். குற்றங் குறைகள் நிகழுமேல் மன்னிப்பீர்களாக.*

**சோழநாடு**

*இக்காலத் தஞ்சை திருச்சி ஜில்லாக்களின் பரப்பு, இடைக் காலச் சோழநாட்டின் பெரும் பகுதியைக் கொண்டது என்பது உங்கட்குத் தெரியும். இக்காரணம் பற்றி இம் மகாநாட்டைச் சோழநாட்டு மகாநாடு என்று கொள்ளுதற்கும் இடனுண்டு.*

*சோழநாடு தொன்மை வாய்ந்தது; மாண்புடையது; நாக ரிகத்தில் முதிர்ந்தது. அதன் வளன், அரசு, வண்மை, வீரம், கல்வி, தொழில் முதலியன சரித்திர ஆழியில் பதிந்து கிடக்கின்றன.*

*சோழநாட்டின் இயற்கை போற்றற்குரியது. மக்கள் வாழ் விற்கு ஏற்ற பெற்றியில் அஃது அமைந்திருக்கிறது. வெம்மையால் வெந்து எரிதலும், தண்மையால் நடுங்கி வீழ்தலும் சோழநாட்டு இயற்கையிலில்லை. குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்*

1. ஸர் எஸ். குமாரசாமி ரெட்டியார்.
2. திரு. கா.ரா. நமசிவாய முதலியார்.

தலும் சோழநாட்டுச் செல்வங்களாய் மக்களுக்கு இன்பூட்டு கின்றன.

'வான்பொய்ப்பினுந் தான் பொய்யா'க் காவிரி பாட் டெனப் பரந்து, கிளை கிளையாய்ப் பிரிந்து, கால் காலாய் விரிந்து சோழ நாட்டை அணி செய்கிறது. காவிரிப்பயனைச் சோழநாடு நுகர்தலால், அது புனல்நாடாய்ச் சோறுடைத் தாயது போலும்!

சோழநாட்டு மன்னரின் வீரமும், வண்மையும், பிறவும் ஆட்சிமுறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இலங்குவன. சோழ மன்னர் வீரம் இமயம்வரை முட்டியது ஈண்டு நினைவிற்கு வருகிறது. சோழ மன்னரின் மாண்புக்குக் கரிகாற் பெருவளத் தான் வரலாறு ஒன்று சாலும்.

கண்ணகி என்னும் வீரத்தாயையும், மணிமேகலை என்னும் அறச்செல்வியையும் ஈன்ற பெருமை சோழநாட்டிற்கு உண்டு. அவர்வழிச் **சிலப்பதிகாரமென்னும்** கற்பகமும், **மணிமேகலை** என்னுங் காமதேனுவும் பிறந்தன. காதலின்பமும், அதன்வழிக் கடவுளின்பமும் ஒன்றித் தேங்கும் அமிழ்தக்கடல் நம் பெருஞ் சிலப்பதிகாரம். அஃதீன்ற மகவு மணிமேகலை.

சோழநாட்டிற் றோன்றிய அன்பர் பலர்; அறவோர் பலர்; பாவலர் பலர்; வீரர் பலர். அவர்தம் மொழிகளும் செயல்களும் உலகைப் பலவழியிலும் வளர்த்து வருகின்றன. சோழநாட்டை ஓர் ஓவியக் கூடல் என்றுங் கூறலாம். சோழ நாட்டுப் பழம்பெருங் கோயில்கள் ஓவியக் காட்சி வழங்குதல் வெள்ளிடைமலை. வேறு பல சிறப்புக்களும் சோழநாட்டை அழகு செய்கின்றன.

சிலம்பையும் மேகலையையும் தந்த சோழநாடு இப் பொழுது இருக்கிறதா? அச்சோழநாடு மறைந்துவிட்டது. அதன் நிலப்பரப்பு மட்டும் இப்பொழுது இருக்கிறது. நாடு என்பது நிலப்பரப்பை மட்டுங் குறிப்பதன்று. அரசு-கல்வி-வாழ்வு-நாகரிகம் முதலியன சேர்ந்த ஒன்று நாடு என்பது. மறைவுற்ற சோழநாட்டைச் சரித்திரத்திற் பரக்கக் காணலாம். சரித்திரத் தால் அக்காலச் சோழநாட்டையும் இக்காலச் சோழ நாட்டை யும் ஒப்பிட்டு நோக்கிச் சோழநாட்டை நன்முறையில் பண் படுத்தல் வேண்டும்.

**சரித்திரம்** வீணுக்கு ஏற்பட்டதன்று. அது பாடத்துக்கும் பட்டத்துக்கும் மட்டும் ஏற்பட்டதன்று. முற்கால தற்கால நலந் தீங்குகளை உணர்ந்து, தீங்கைக் களைந்து, நலத்தைக் கொண்டு, ஒழுங்குபட்ட வாழ்வு நடாத்த வழி கோலிக் கொள்ளுதற்குச்

சரித்திர உலகம் ஏற்பட்டது. சரித்திரக் கண்கொண்டு எதையும் ஆராயவேண்டுவது நம் பெருங் கடமை.

ஆராய்ச்சித்துறை நண்ணாது, ஒன்றைப் பழமை என்றதும் அதனைப் போற்றவோ தூற்றவோ புகுவதும், அவ்வாறே ஒன்றைப் புதுமை என்றதும் அதனைத் தூற்றவோ போற்றவோ புகுவதும் பகுத்தறிவுச் செயல்கள் ஆகா. பழமையில் நல்லனவும் இருக்கலாம்; தீயனவும் இருக்கலாம். அங்ஙனே புதுமையிலும் தீயனவும் இருக்கலாம்; நல்லனவும் இருக்கலாம். பழமை புதுமை என்னும் அளவில் நின்று, ஒன்றைத் தள்ளல் கொள்ளல் விதிப்பது அறிவுடைமையாகாது. அதன் அதன் தன்மைகளை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பின்னரே தள்ளல் கொள்ளல் விதிப்பது அறிவுடைமை.

இக்கால உலகிற்கு ஆராய்ச்சி இன்றியமையாதது. அவ் வாராய்ச்சிக்குரிய பலதிறக் கல்வித்துறைகளைப் பயிலும் பருவம் எது? உங்கள் சீரிய செம்மைப் பருவம் என்று சொல்லலும் வேண்டுமோ? வருங்கால உலகுக்குரிய ஆக்கங்களைத் தம் மாட்டு மாணுற ஆக்கும் முயற்சியில் தலைப்பட்டுள்ளோர் மாணாக்கராவர் என்று சுருங்கச் சொல்லலாம். இப்பருவமுடைய நீங்களல்லவோ நாட்டின் செல்வம்?

வருங்கால உலகை ஆக்கும் வாய்ப்பு உங்களிடமிருக்கிற தெனில், உங்கள் பொறுப்பு எத்தகைத்து என்பதை உன்னுங்கள். உங்கள் பொறுப்பு, பெரிது! பெரிது! கடலினும் பெரிது! இப் பொறுப்பு வாய்ந்த மாணாக்கர்க்குரிய கடமைகள் பலப்பல. அவற்றை இம் மகாநாட்டுத் தலைமையுரையில் எங்ஙனம் விரித்துரைப்பது? இன்றியமையாத மிகச் சிலவற்றை மட்டும் ஈண்டுச் சுருங்கச் சொல்ல முயல்கிறேன்.

**உடலோம்பல்**

'சுவரை வைத்தே சித்திரம் எழுதல்வேண்டும்' என்பது பழமொழி. எதற்கும் உடல் நலன் வேண்டற்பாலது. பெரும் பொறுப்பை ஏற்கப்போகும் நீங்கள் உடல்களைப் பேணுதல் வேண்டுமா வேண்டாவா என்பதை உன்னுங்கள். கிளர் ஈரலும், தடைபடாக் குருதியோட்டமும், எஃகு நரம்பும், ஏக்கழுத்தும், பீடுநடையும் உடையவர்களாக நீங்கள் திகழ்தல் வேண்டும்.

'இஃதென்ன மாயும் உடல்; இவ்விழிந்த உடலைப் போற்றி ஓம்பப் புகுதல் அறியாமை' என்று சிலர் சொல்வ துண்டு. அருமை மாணாக்கர்களே! இப்போலிக் கூற்றுக்குச் செவி சாயாதேயுங்கள். உடலைவெறுத்தல், பெண்ணை வெறுத்தல்,

மண்ணை வெறுத்தல், பொன்னை வெறுத்தல் முதலிய வற்றைக் கொண்ட வெறுப்புத் துறவு, நாட்டிற்கு என்புருக்கி நோயாய், நாட்டை அலைத்து அரித்துக் குலைத்து வருகிறது.

தனு கரண புவன போகங்கள் ஆண்டவனால் அளிக்கப் பட்டன. அவைகளை ஏன் நீத்தல் வேண்டும்? அவைகளை நீத்தல் என்பது ஆண்டவன் படைப்பையே அவமதிப்பதாகும். தொல் காப்பியனார், திருவள்ளுவனார் முதலிய அறிஞரின் மொழி களை எடுத்துக்காட்டிப் பொல்லாத் துறவுக்கோளை நிறுத்தச் சிலர் முயல்வதை யான் அறிவேன். அவர்தங் கூற்றுக்கு உரை யாசிரியரின் கூற்றுகள் துணை நிற்குமேயன்றித் தொல்காப்பிய னார் திருவள்ளுவர் கூற்றுகள் துணைநில்லா.

தொல்காப்பியனார் திருவள்ளுவனார் உள்ளிட்ட பெரி யோர் பொல்லாத 'வெறுப்புத் துறவை' அறிவுறுத்தவில்லை என்பதையும், இயற்கையோடியைந்த இன்ப அன்பு வாழ்வை நடாத்தி, உலகுக்கு நலஞ்செய்யும் பேரறத்தை ஓம்புமாறு அவர் அறிவுறுத்தி யிருக்கிறார் என்பதையும் என்னுடைய நூல்கள் பலவற்றில் ஒல்லும்வகை விளக்கி யிருக்கிறேன்; 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்னும் நூலிலும், 'முரு கன் அல்லது அழகு' என்னும் நூலிலும் சிறப்பாக இயற்கை யறத்தை வலியுறுத்தி, 'வெறுப்புத் துறவு' இயற்கைக்கு மாறு பட்டதென்பதைக் கடா விடைகளான் நிறுவிக் காட்டியுள் ளேன். விரிவு ஆண்டுக் காண்க.

சில மாணாக்கர் உடலை ஓம்பாது, இரவும் பகலும் ஏடு களைக் கட்டியழுவதைப் பார்த்திருக்கிறேன். அவர் வாழ்வு இரங்கத்தக்கதாக முடியும். சில இடங்களில் அவ்வாறு முடிந்த தும் எனக்குத் தெரியும். ஆண்டவன் அளித்த அரிய உடலை நல் வழியில் ஓம்பாதாரை இயற்கையன்னை ஒறுத்தே தீர்வள். அவ்வொறுத்தலுக்கு ஆளாகாத வழியில் உடலை ஓம்ப வேண்டு வது உங்கள் கடன்; தலையாய கடன் என்றுங் கூறுவேன்.

மாணாக்கர் பார்வைக்கு இனியரா யிருத்தல் வேண்டும். **இளமை** அழகுள்ள இடத்தில் இனிமையுண்டு. மாணாக்கர் உடலில் இளமை மணங் கமழின் அதன்கண் அழகொளி வீசும். 'கண்கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர் விரிப்ப - விண்கொள்ளாப் பேரொளியான்' என வரூஉஞ் சேக்கிழார் மொழியின் பொருளாக மாணாக்கர் இலங்க விரும்புவர் என்றே நினைக்கிறேன். கம்பரும் 'கந்தனை யனையவர் கலைதெரி கழகம்' என்று கூறியதும் ஈண்டுக் கருதற்பாற்று.

**இளமை** அழகுக்கு இயற்கை வாழ்வு வேண்டற்பாலது. அதற்கு முதலாவது ஒழுங்கு வேண்டும். இயற்கை நிகழ்ச்சி ஒவ்வொன்றும் **ஒழுங்கு** என்னுங் கோட்டின் வழியே இயங்குகிறது. ஆகவே, இயற்கையோடியைந்த வாழ்விற்கு ஒழுங்கு இன்றியமையாதது.

நம்மிடத்தில் ஒழுங்கில்லை என்று உலகமே நம்மீது பழி சுமத்துகிறது. **லார்ட் நார்த் கிளிப்** என்பவர், 'கண்ட இடங்களில் எச்சில் துப்புதலும், வாழ்வில் ஒழுங்கீனமும் இந்தியரை விட்டகலாத குற்றங்கள்' என்னுங் கருத்துப்பட ஒருபோது சொற்றனர். இக்குற்றங்கள் நம்பால் ஊடுருவிக் குருதியிற் கலந்து நிற்றல் உண்மையே. 'ஒழுங்கு ஊராளும்' என்பது பழமொழி. ஐரோப்பியரது வாழ்வில் ஒழுங்கு என்பது ஊடுருவிப் பாய்ந்து நிற்கிறது. அவர்தம் ஒழுங்கு, ஊரையும் ஆள்கிறது; உலகத்தையும் ஆள்கிறது. அவரிடத்திருந்து நாம் கற்கத்தக்கனவற்றுள் ஒழுங்கும் ஒன்று.

ஒழுங்கை மாணாக்கர் உறுதியாகக் கடைப்பிடித்து ஒழுகுவாரானால், வருங்காலத்தில் நாடே நன்னிலை எய்தும். படுக்கைவிட் டெழுதல், உலவல், உண்ணல், படித்தல், ஆடல், உறங்கல் முதலியன குறித்தகாலத்தில் நிகழுமாறு பயிற்சி செய்யின், அவற்றினின்றும் வாழ்வு நிகழ்ச்சிகளெல்லாம் ஒழுங்கிற்கு வரும்.

காலையிலும் மாலையிலும் **உலவுதல்** நல்லது. உலாவரலில் கதிரொளியில் மூழ்கலும், காற்றில் தோய்தலும் நிகழ்கின்றன. உலவ இயலாதார் ஏதாயினும் வேறுவிதப் பயிற்சி செய்யலாம். அன்னார் குதிரை ஏற்றம், நீச்சு, சிலம்பம், ஆசனம் முதலியவற்றில் ஏதாவதொன்றைக் கொள்ளலாம். பயிற்சியின் பின்னை நீராடுதல் சிறப்பு.

***தீட்டிய அரிசியைத் தள்க;*** கொழியல் குத்தரிசியைக் கொள்க. கீரை காய் கனிகளை உண்க. காப்பி, டீ, கொக்கோ முதலிய பானங்கட்குப் பதிலாக நீர், மோர், இளநீர் முதலியவற்றை அருந்துக. வாதுமை, நிலக்கடலை, தேங்காய் இவற்றில் கொழுமையுண்டு. எதையும் அளவறிந் துண்பது சால்பு. மட்பாண்டச் சமையல் நல்லது. பசியெழுந்த பின்னை உண்ணும் பயிற்சி உடலோம்புவதாகும். வேளைக்கு வேளை பசி யெழும்புவது உடலோம்பு முறையைப் பொறுத்திருக்கிறது. சுருட்டு, பீடி, சிகரெட்டு முதலியவற்றைக் கனவிலுங் கருதாதேயுங்கள். தரைச்செலவு, கடற்செலவு முதலியனவும் உடலோம்பலுக்குத் துணைசெய்வன.

உடற்பயிற்சியை ஒழுங்காகச் செய்தும், பொருந்திய உணவைத் திருந்த உண்டும், நல்லெண்ணங்களை நெஞ்சில் உலவச் செய்யப் பயிலல் வேண்டும். இல்லையேல், உடல் நல னுறாது. தீய எண்ணங்கள் நரப்புக் கட்டைக் குலைத்து, நரப்புக் குழாய்களில் நஞ்சூட்டி, உறுப்புக்களை அரிக்கும்.

மனிதன் எவன்? அவன் எதனால் ஆக்கப்படுகிறான்? **'மனி தன் எண்ணம்'**. அவன் எண்ணத்தால் ஆக்கப்படுகிறான். எண் ணங்கட்கு நுண்ணிய உருவங்கள் உண்டென்பதும், நிலங்கள் உண்டென்பதும் இந்நாளில் ஆராயப்பட்டு வருகின்றன. இங்கே சிறப்பாகக் குறிக்கத் தக்கவர் பிரான்சு தேசத்து **டாக்டர் பாரடே** என்பவர், எண்ணமே மனிதனாகக் காரியப்படுதலால், எத்தகைய எண்ணம் நெஞ்சில் எழுதல் வேண்டும்?

நல்லெண்ணங்களைப் பற்றிப் பேசலாம்; எழுதலாம். பேச் சும் எழுத்தும் என் செய்யும்? மன்பதையைச் சுற்றி எத்துணையோ தீமைகள் சூழ்ந்து நிற்கின்றன! 'ஜனநாயகம்' என்னும் 'நாகரிகத் தாய்' ஈன்றுவரும் நச்சுக் குழவிகள் பெருகிக்கொண்டே போகின் றன. பத்திரிகை யுலகிலும், தேர்தல் திருவிழாவிலும் ஈடுபட்ட வர்க்கு அக் குழவிகளின் இயல்பு நன்கு தெரியும். மன்பதையை அடிமையாக்கும் பேய்கள் கோடிக் கணக்கில் நடமாடுகின்றன. அவற்றினிடையில் மக்கள் நல்லெண்ண முடையவராக வாழ் தலின் அருமையை விளக்க வேண்டுவதில்லை. பின்னை எங்ஙனம் நல்லெண்ணங்களை நெஞ்சில் பிறக்கச் செய்வது?

உள்ளத்தின் இயல், ஒன்றைச் சார்ந்து நிற்பது. அச்சார்பு தீயதாயிருந்தால் தீய எண்ணம் பிறக்கும்; நல்லதாயிருந்தால் நல்ல எண்ணம் பிறக்கும். தீய எண்ணத்துக்குரிய சார்புகள் பல உண்டு. நல்ல எண்ணத்துக்கும் சார்பு வேண்டுமன்றோ?' 'மன நெடுந் தேரேறிப்' பாருங்கள்.

தீய எண்ணங்கட்குத் தாயகமாயுள்ள தத்துவங்களைக் கடந்து கடந்து **அறிவாய் அன்பாய் இன்பமாய்** நிற்கும் ஒன் றிருக்கிறது. அவ்வொன்றைப் பல மொழியில் பலவாறு பலர் அழைத்துப் போந்தனர். 'ஒருநாமம் ஓருருவம் ஒன்று மிலாற்கு ஆயிரம் - திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ' (திருவாசகம்) எனவும், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' (திருமந்திரம்) எனவும் வரூஉம் ஆன்றோர் மொழிகளையும் நோக்குக. பேர்களைப் பற்றிப் பெரும் போர்களும் அறியாமை யால் நிகழ்ந்து வருகின்றன. அப் போராட்டங்களும் தீய எண்ணங்களை உண்டுபண்ணுவனவே யாகும். சமயப் போரிடு

வோரைப் பார்க்கினும் நாத்திகர் நல்லவர் என்பது எனது கருத்து. உலகில் இழிந்த ஒன்று சமயப் போரே யாகும். உண்மைச் சமயம், போரிடுமாறு அறிவுறுத்தவில்லை. **சமயம் வேறு; சமயவாதம் வேறு.** சமய வாதத்தைச் சமயமாகக்கொண்டு சிலர் சமயத்தையே தாக்குகிறார். அது தவறு. இது நிற்க.

நல்லெண்ணத்துக்குக் கொழு கொம்பாக **அன்புக் கடவுளைக்** கொள்வது சிறந்த வழி. நெஞ்சம் மேலான பொருளை நினைந்து நினைந்து பண்படும்போது, அதன்பால் அம்மேலான பொருள்களின் இயல்கள் படிகின்றன. அவை படியப் படிய நல்லெண்ணங்களே பெருகும். இம்முறையின் இன்றியமையாமை, உள்ளத்தின் இயலை நன்கு ஆராய்ந் துணர்ந்த **வில்லியம் ஜேம்ஸ்** முதலிய பேரறிஞர்க்கும் விளங்கி யிருக்கிறது.

***'அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை***
***ஆனந்த மாய்க்கசிந் துருக***
***என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்***
***யானிதற் கிலனொர்கைம் மாறு***
***முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த***
***முத்தனே முடிவிலா முதலே***
***தென்பெருந் துறையாய் சிவபெரு மானே***
***சீருடைச் சிவபுரத் தரைசே'*** - மாணிக்கவாசகர்

***நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே***
***நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண் ணீரதனா லுடம்பு***
***நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான***
***நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று***
***வனைந்துவனைந் தேத்துதுநாம் வம்மின்உல கியலீர்***
***மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்டீர்***
***புனைந்துரையேன் பொய்புக லேன் சத்தியஞ்சொல் கின்றேன்***
***பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருணம் இதுவே'***
- இராமலிங்க சுவாமிகள்

இச் செம்மொழிகளை நோக்கி, உண்மையுணர்ந்து இளமை தொட்டே தியானப் பயிற்சி செய்தால், நல்லுடற் பேறும், வாழ்வில் நலனும் விளையும்.

தியானம் என்பது பொது. அதற்குரிய முறைகள் அவரவர் அறிவு ஆற்றல் இயல்பு முதலியவற்றிற் கேற்ற வண்ணம் தாமே அமையும். எல்லாங் கடந்து அறிவாய் அன்பாய் இன்பாய்

யாண்டும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளை அவரவர் விரும்புமாறு நினைக்கலாம்.

மக்கள் அனைவரும் ஒரு நெறிபற்றி நடப்பதில்லை. ஒவ் வொருவருக்கு ஒவ்வொன்றில் ஒவ்வொருவித விருப்பம் நிகழ்தல் இயல்பு. எல்லாரும் ஒருவித உணவு கொள்கிறாரில்லை; எல்லாரும் ஒருவிதக் கல்வி பயில்கிறாரில்லை; எல்லாரும் ஒரு வித உடையணிய விரும்புகிறாரில்லை. இப் பலவகையால் விளையும் பயன் மட்டும் ஒன்றே. அவ்வாறே தியானமுறைகள் அவரவர் இயல்புக்கேற்கப்ப பலபடினும், விளைவு மட்டும் ஒன்றே என்பது உன்னற்பாலது. விரிவஞ்சி இவ்வளவில் நின்று மேற்செல்கிறேன்.

**கல்வி**

உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்துவரல் வேண்டும். இல்லையேல் வாழ்வில் அறிவியற் கூறுகள் இடர்ப் பட நேரும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். அக்கல்விப் பயிற்சிக் குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இதுபற்றியே 'இளமையிற் கல்' என்னும் முதுமொழி பிறந்தது.

இந்நாளில் பெரிதும் ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை யாண்டும் நிலவி வருகிறது. ஏட்டுக் கல்வி மட்டுங் கல்வி யாகாது. தொழிற்கல்வி முதலியனவுங் கல்வியின் பாற் பட்டனவே.

கல்வித்துறைகள் பலதிறத்தன. அவற்றுள் ஒவ்வொன்று ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும், பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும்.

இக்காலத்தில் கல்லூரியில் படிப்போர் தொகை, நாளுக்கு நாள் பெருகுதல் கண்கூடு. கல்விப் பெருக்குப் போற்றற்குரியதே. ஆனால் பெரும்பான்மையோர் அக்கல்வியை எந்நோக்குடன் பயில்கிறார்? உத்தியோக நோக்குடன் என்று சொல்லவேண்டுவ தில்லை. அந்நோக்குடன் கல்வி பயின்றோர் நிலை எவ்வாறிருக் கிறது? அவர்தம் நிலை இரங்கத்தக்கதாயிருக்கிறது. வேலையின் பொருட்டு இளங் கொழுந்துகள் படுந் துன்பம் அளவிடற்பால தன்று. இவ்வேளையில், உத்தியோக நோக்குடன் கல்வி பயிலு தல் வேண்டா என்றும், அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ண மிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர்

செவிசாய்த்து நடப்பாராக; செவிசாய்த்து அறிவு விளக்கத்துக் கெனக் கல்வி பயின்று, அவ்வறிவை நாட்டுத் தொழிற்றுறை களைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக.

நமது நாட்டில் பலதிற ஆராய்ச்சிகள் நிகழ்ந்தவண்ண மிருக்கின்றன. அவற்றுள் ஒன்று, எம்மொழியிற் கல்வி பயில வேண்டுமென்பது. சீர்குலைந்த ஒரு நாட்டில் - கட்டில்லா ஒரு நாட்டில் - கலையறிவிழந்த ஒரு நாட்டில் - தலைகீழாராய்ச்சிகள் பல, நாளுக்குநாள் பெருகுதல் இயல்பு போலும்!

**தாய்மொழியில்** கல்வி பெறுவது இயற்கை. தாய் மொழிப் புலமை நிரம்பப்பெற்ற பின்னை வேறு பல மொழி களைப் பயிலலாம்; ஆராயலாம். முதல் முதல் தாய்மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். **'தாய்நாடு'** என்னும் பெயர், தாய்மொழியைக் கொண்டே பிறப்பது. அத்தாயை வஞ்சிப்பது பாவம் அன்றோ?

மேல் நாட்டினர் ஒவ்வொருவரும் தாய்மொழிப் பற் றுடையவராய் வாழ்தல் கண்கூடு. காலஞ்சென்ற அறிஞர் கிரிபத்தைப் பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அவர் அயர்லந்து தேசபக்தர்; அயிரிஷ் மொழியில் புலவர். அயிரிஷ் மொழியின் ஆக்கத்தால் அயர்லந்துக்கு நலன் விளையும் என்று உறுதிகொண்டு, அதை வாழ்விடை நடாத்தி, அவர் வெற்றியும் பெற்றார். வடஇந்தியரும், தாய்மொழிப் பற்றுடையவராகவே வாழ்கிறார். கவிமன்னராகிய **ரவீந்திரநாதர், கீதாஞ்சலி** என் னும் உலகம் போற்றும் ஒரு நூலை முதல் முதலில் எம்மொழி யில் யாத்தனர்? தந் தாய்மொழியாகிய வங்கத்திலன்றோ அச் சீரிய நூலை அவர் முதல்முதல் யாத்தனர்? பின்னரே அதனை ஆங்கிலத்தில் பெயர்த்தெழுதினர். கல்விக் கடல் என்று போற்றப் பெற்ற **பாலகங்காதர திலகரை** நீங்களறிவீர்கள். அவர் ஆங்கிலத்தில் புலமை வாய்ந்தவர்; அம்மொழியிலுள்ள பல கலைகளை ஆய்ந்தவர். அப்பெரியார் மூன்றாமுறை சிறை புகுந்தபோது, சிறைக்கோட்டத்தில் கீதா ரகசியம் என்னும் ஒரு சிறந்த நூலை இயற்றினர். அவர் அதை எம்மொழியில் எழுதி னர்? தந் தாய்மொழியாக உள்ள மகாராஷ்டிரத்திலன்றோ அவர் அதை எழுதினர்? **காந்தியடிகளை** நோக்குவோம். அவ ரும் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர். அவர் எழுதும் ஆங்கிலம் ஆங்கிலேயராலேயே போற்றப்படுகிறது. 'ஹிந்தி இந்திய நாட்டு மொழியாதல் வேண்டும்' என்று முயன்று வருவோருள் அவர் தலையாய ரென்பதும் உங்கட்குத் தெரியும். இக் காந்தியடிகள் தமது வரலாற்றை எம்மொழியில் எழுதினர்? ஆங்கிலத்தில்

எழுதினரா? அல்லது ஹிந்தியில் எழுதினரா? அவர் எற்றுக்குத் தமது வரலாற்றைத் தம் தாய்மொழியில் - கூர்ஜரத்தில் - எழுதிக் காட்டினர்? இப்பெரியார்களின் வாழ்வுஞ் செயலும் பிறவும் உலகுக்கு எடுத்துக்காட்டுகளாக நின்று துணை செய்வன. தாய் மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்று என்பதை அவர்கள் உள் ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்ந்தே தாய்மொழிக்கு ஆக்கந் தேடினார்கள். ஆங்கிலம் பயின்ற இக்காலத் தமிழன் ஒருவன், ஒரு துறையில் பெரியனாய்த் தன் வரலாற்றைத் தான் எழுதும் வாய்ப்பு, தனக்கு நேரு மேல், அவன் அதைத் தாய்மொழியாகிய தமிழில் எழுதப் புகுவனா அல்லது ஆங்கிலத்தில் எழுதப் புகு வனா என்று கேட்கிறேன். நீங்களே விடை இறுத்தல் வேண்டும். தமிழனுக்குத் தாய்மொழிப் பற்றுப் போதிய அளவில்லை என்பது உலகறிந்ததொன்று. தமிழனுக்குத் தாய்மொழியி னிடத்துத் தணியா வேட்கை என்று எழுகிறதோ அன்றே அவன் வாழ்வு மணம் பெறும்.

'கலைகள் எல்லாம் தமிழிலேயே போதிக்கத் தமிழில் போதிய கலைகளில்லையே; சிறப்பாக விஞ்ஞானக் கலைக ளில்லையே' என்னுங் கேள்வி பிறக்கிறது. இஃது அறிவு செறிந்த கேள்வியாகாது. இக்கேள்விக்கு அறிஞர் செவ்வனிறையும் அவ் வப்போது இறுத்திருக்கின்றனர். தமிழைக் குறைகூறும் ஆங்கிலம் பயின்றவரை நோக்கி, 'விஞ்ஞானக் கலைகள்எல்லாம் முதல் முதல் ஆங்கிலத்திலா முகிழ்த்தன? விஞ்ஞானக் கலைகளி லுள்ள குறியீடுகளெல்லாம் ஆங்கிலமா?' என்று வினவுகிறேன். விஞ்ஞானத் துறையில் சில புதுமைகள் பிரஞ்சுக்காரரால் காணப்பட்டன; சில ஜர்மானியரால் காணப்பட்டன; சில ஆங் கிலராலுங் காணப்பட்டன. அவரவர் தாம் தாம் கண்ட புதுமை களை முதல் முதல் தம் தம் தாய்மொழியில் வரைந்துவிடுகிறார். அவை பின்னே பல மொழிகளில் பெயர்த்தெழுதப்படுகின்றன. இம்முறையில் மேல்நாட்டில் விஞ்ஞானம் வளர்ந்து வருகிறது. அம் மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு ஏன் தாய்மொழியை வளர்த்தல் கூடாது?

குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றுங் கடன் வாங்கு வது தமிழுக்கு இழுக்காகாது. கலப்பில் வளர்ச்சி யுண்டென்பது இயற்கை நுட்பம். இக்காரணம் பற்றியே கலப்பு மணம் முதலி யன உலகுக்கு அறிவுறுத்தப்படுகின்றன. கலப்பென்று தமிழையே மறைக்க முயல்வது தமிழுக்கு ஆக்கந் தேடுவதாகாது. தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பைக் கொள்வது சிறப்பு. ஆகவே, 'தமிழ் மொழியில் அறிவுக்கலைகள் இல்லை'

என்னும் பழம்பாட்டை நிறுத்தி, 'அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந் தேடுவோம்' என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரரைக் கேட்டுக்கொள்கி றேன். (குறைபாடுகள் பலவுடைய) அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இத்துறையில் சிறிது நாட்டஞ் செலுத்தி வருவது உவகை யூட்டுகிறது. கலைகள் பலவும் தாய்மொழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங் காலமே, தமிழ்த்தாய் மீண்டும் அரியாசனம் ஏறுங் காலமாகும். பலதுறைக் கலைகள் தாய்மொழி வாயி லாகப் போதிக்கப்பட்டால் மாணாக்கர் பலர் விரைவில் எளிதில் அவ்வக் கலைகளில் வல்லவராவர். இப்பொழுது கலைகளைப் பயிலுதற்கு வேறு மொழிப் புலமையும் தேவையா யிருக்கிறது. அதனால் கலைகளின் அறிவு, தமிழ் மக்களிடைப் பரவாமற் போகிறது. மாணாக்கர் அறிவுக் கலைகளைப் பயில்வதில் பேரூக் கஞ் செலுத்துவாராக. அவற்றால் வாழ்வுக்கும் நாட்டுக்கும் பல வழியிலும் நலன் உண்டு.

தமிழ் மொழியில் **காவியக்** கலைகள் நிரம்பி இருக்கின்றன. தமிழர் தம் பண்டைச் செல்வங்களைக் காவியங்களிற் காண லாம். வித்துவான் பரீட்சை முதலியன இப்பொழுது தோன்றி யிருத்தலால், மாணாக்கர்க்குத் தமிழ்க் காவியங்களைப் பயிலும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தமிழ்க் காவியப் பயிற்சியில் சில புது முறைகள் கொள்ளப் பெறுதல் நலம். கதைக்கும், பதவுரைக் கும், இலக்கணக் குறிப்புக்கும் மட்டும் காவியங்களைப் பயில் வதால் காவியங்களின் நோக்கம் நிறைவேறாது. ஆங்கிலமும் தமிழும் பயின்ற சிலர் அடிமை யுணர்வின்றிக் காவியங்களை ஆராய்ந்து பல நுட்பங்களை இப்பொழுது வெளியிட்டுவருவது ஆறுதலளிக்கிறது. இடைக்காலத்தில் வீழ்ந்துபட்ட தமிழ்க் காவிய உணர்வுக்கு இந்நாளில் புத்துயிரளித்தது ஆங்கில உணர்வு என்பதை மறத்தலாகாது.

காவியங்களிலுள்ள கதைகள் மீது கருத்திருத்திச் சிலர் காவியங்களைக் குறை கூறுகின்றனர். காவியங்கள் கதைக்காக மட்டும் எழுதப்பட்டன அல்ல என்பதை அச் சகோதரர்க்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கதை ஒரு திருடனைப் பற்றியதாகவு மிருக்கலாம். அவன் வரலாற்றைக் காவியமாக எழுதும் வாய்ப்பு ஒரு சிறந்த புலவருக்குக் கிடைக்கலாம். அவர் அக்கதையை ஒரு சார்பாகக் கொண்டு, அக்காலத்து நிலைமையும் வாழ்வும் பிறவும் பொதுள, இயற்கை இன்பஞ் செறியத் திறம்படப் பாடுவர். திருடன் செயலைப் புலவர் எவ்வாறு வருணித்துள்ள னர் என்பதை நோக்கி இன்புற வேண்டுவது நமது கடமை.

காவியமெழுதிய புலவரைக் குறைகூறுவது அறியாமை. காவிய ஓவியம் எழுதவேண்டுவது அவர்தங் கடமை. புகைப்படங்களில் திருடன் படம் எடுப்பதில்லையோ? படக்காரனுக்குத் திருட னானால் என்ன? மற்றவனானால் என்ன? அவன் படம் நன்றா யிருக்கிறதா இல்லையா என்பதையே அறிஞர் நோக்குவர். திரு டன் கதை எழுதுவோருந் திருடுமாறு எவர்க்கும் அறிவுறுத்த மாட்டார். திருட்டின் இழிவு திருடன் கதை வாயிலாக வெளி வரும் முறையிலேயே கதை எழுதப்படும்.

ஒரு கல்லில் பொருள் பதிந்த ஓர் அழகிய ஓவியம் வரையப் பட்டிருக்கிறது. அறிஞர் பலர் அவ்வோவிய வனப்பையுஞ் சிறப்பையுஞ் கண்டு ஓவியமாகிறார். அவ்வேளையில் அவ்வழியே ஓவிய நுட்ப உணர்வில்லாத ஒருவன் போந்தான். ஓவியத்தை மகிழ்ச்சியுடன் நோக்கி, அதன் பெற்றியைப் பேசுவோரை அவன் கண்டு, ‘இக்கல்லை இவர்கள் இவ்வளவு போற்றிப் புகழ்கிறார் களே’ என்று எள்ளிப் போனான். அவன் நிலையும், காவியங் களைக் கதைக்காக மட்டும் பார்ப்பவன் நிலையும் ஒன்றே.

மனத்துக்கு இயற்கை இன்பமூட்டி ஆறுதலும் அமைதியும் அளிக்கவல்ல முறையில் பழம் பெருந் தமிழ்க் காவியங்கள் அமைந்திருக்கின்றன. பரபரப்பு மிகுந்த இக்கால உலகில் அத்தகைக் காவியங்கள் அமைதல் அரிது. இளமைக் காவியப் பயிற்சி பின்னே வாழ்வில் பெருந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

**ஓவியத்** துறையிலும் மாணாக்கர் பயிற்சி பெற முயல் வாராக. ஓவியத்துக்கும் காவியத்துக்கும் வேற்றுமை பெரிதும் இல்லை. இயற்கை நுட்பங்கள் ஓவியமாக வரையப்படுகின்றன. காவியங்களில் அவை எழுத்தால் எழுதப்படுகின்றன. இரண்டும் இயற்கைப் படங்களே யாகும். இவை நம்மையும் இயற்கையை யும் ஒன்றுபடுத்தப் பாலம்போலத் துணை செய்யும்.

நீங்கள் ஏடுகளைப் பயில்வதுடன் நில்லாது, ஓய்ந்த நேரங் களில் இயற்கை நிலையங்களிற் புகுந்து, இயற்கைக் கழகத்தில் நின்று, இயற்கைக் கல்வி பயில்வீர்களானால், இயற்கையோ டியைந்த வாழ்வு நடாத்த வல்லவர்களாவீர்கள்; காடு செறிந்த ஒரு மலைமீதிவர்ந்து, ஒரு மரத்தடியில் நின்று, மண்ணையும் விண்ணையும் நோக்குங்கள்; ஆண்டவன் இயற்கை ஓவியத்தைக் கண்டு கண்டு மகிழுங்கள்; மண் வழங்கும் பரந்த பசுமையிலும், வெண்மையிலும், நீலத்திலும் விண்வழங்கும் நீலத்திலும் தோய்ந்து திளையுங்கள்; காலையில் இள ஞாயிறு, கடலிலும்

வானிலும் செக்கர் உமிழ்ந்து எழுங் காட்சியை நெஞ்சில் எழுதுங்கள்; அருவி முழவும், குயில் குரலும், வண்டிசையும், மயில் ஆலலும், மலர் மணமும், தேனினிமையும், தென்றல் வீசலும் புலன்களுக்கு விருந்தாக, இயற்கை அன்னையைப் பாருங்கள்; ஆங்கே சூழ்ந்துள்ள செடி கொடி மரங்களையும் பறவைகளை யும் விலங்குகளையும் உற்று நோக்கி, 'சில செடிகள் பூமியிற் பரந்தும், சில செடிகள் எழுந்து நின்றும், சில கொடிகள் நீண்டு நீண்டு மடிந்தும், சில கொடிகள் சுருண்டு சுருண்டு படர்ந்தும் இருப்பதற்கும், சில மரங்கட்கு நீள்கிளையும், சில மரங்கட்கு வீழும், கிளிக்கு வளைந்த மூக்கும், யானைக்குத் துதிக்கையும், மானிற்குக் கொம்பும் அமைந்திருப்பதற்கும் என்ன காரணம்?" என்று உன்னுங்கள்; அந்தியில் ஞாயிறு அமருங் கோலத்தையும், பறவைகள் பறந்து செல்வதையும், கால்நடைகளின் மணி யோசையையுங் காணுங்கள்; கேளுங்கள்; நீலவானில் வெண் திங்கள் தோன்றித் தண்ணிலவு பொழிவதை நோக்குங்கள்; அந் நிலவு, பசுமைக்கானிலும் பைங்கூழிலும் வெண்மணலிலும் நீலக்கடலிலும் படிந்து வழங்கும் அழகுக் காட்சியில் மூழ்குங்கள்; மூழ்கி இன்புற்று, மலையினின்றும் இழிந்து வென்றி அடல் விடை போல் நடந்து வீடு சேருங்கள்; இவ்வாறு இயற்கைக் கழகத்தில் பயின்று பயின்று, சங்கப் புலவர், இளங்கோ, திருத் தக்க தேவர், திருஞானசம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதி முதலியோர் இயற்கைக் கோலத்தை எவ்வாறு எழுத்தோவியத்தில் இறக்கி யிருக்கிறார் என்று ஆராயுங்கள்; பழைய கோயில்களிலும் மன்றங்களிலும் நுழைந்து இயற்கைத் திருக்கோலத்தைச் சிற்பர் எவ்வாறு ஓவியங்களில் வடித் திருக்கிறாரென்பதையும் உணர ஓவியங்களை ஊன்றி நோக்குங் கள்; நந் தமிழ்க் காவியங்களும் ஓவியங்களும் இயற்கை அமிழ் தாய் உயிரையும் உடலையும் ஓம்புவதை உணர்வீர்கள்.

**இசைப் பயிற்சியும்** இன்றியமையாதது. இசை பாட இயற்கை சிலர்க்குத் துணைசெய்யும்; சிலர்க்குத் துணை செய்வ தில்லை. அத் துணை பெறாதார் இசை இன்பத்தையாதல் நுகரப் பயில்வாராக. இரண்டு மில்லா வாழ்வு கொலை வாழ் வாகும். பழைய தமிழர் இசைத் துறையின் நிலை கண்டவர் என்று ஈண்டு இறுமாந்து கூறுகிறேன். தமிழ் யாழையும் குழலை யும் என்னென்று சொல்வது? அந்த 'ழ' கரங்களை நினைக்கும் போதே அமிழ்தூறுகிறது. கொடிய காட்டு வேழங்களையும் பாணர்தம் யாழ் மயக்குறச் செய்யுமாம். அவ் யாழ் எங்கே? இறந்துபட்டது என்று சொல்ல விரைந்து நிற்கிறோம்.

பழந்தமிழர் நமக்கு வழங்கிய உயிர்ச் செல்வங்களை அழிக்கவோ பிற்காலத் தமிழராகிய நாம் பிறந்தோம்? போன கலைகள் போக, உள்ள கலைகளையாதல் காக்கும் எண்ணமாவது இக்காலத் தமிழரிடை எழுகிறதா? ஆவேசத்துக்கும், பரபரப்புக்கும், தீக் கிளர்ச்சிக்கும் இரையாகும் பாழ்நெஞ்சம் கலைகள்மீது செல் லுமா? தமிழ்த்தாயின் யாழுங் குழலும் சிறுமையுற்றுக் கிடக் கின்றன. ‘ஹார்மோனிய’ ஒலி கேட்குங் காது, யாழ் குழலிசை கேட்க விரும்புங்கொல்!

இசைப் புலவர் தொகை நாட்டிற் பெருகப் பெருக, நாடு பலவழியிலும் ஒழுங்கு பெறுதல் ஒருதலை. ஆகவே, அத்துறை மீதும் மாணாக்கர் கருத்துச் செலுத்துவாராக.

***நாடகக் கல்வி,*** வாழ்விற்கு வேண்டா என்று யான் கூறேன். இடைக்காலத்தில் நாடகக் கல்வியால் தீமை விளைந்த போது அதைச் சிலர் அழிக்க முயன்றதுண்டு. இப்போதைய நாடகம் நன்னிலையிலில்லை என்பதை ஈண்டு விளக்க வேண்டுவதில்லை. நாடகத்துக்கு நல்வழியில் புத்துயிர் வழங்க மேல்நாட்டு நாடகக் கல்வியின் கூட்டுறவும் வேண்டற்பாலது. நாடகத்தை நல்வழிப்படுத்தி மாணாக்கரை அதன்கண் தலைப் படுமாறு செய்யத் தமிழ்ப் பெரியோர் முயல்வாராக.

> ***‘மாசில் வீணையும் மாலை மதியமும்***
> ***வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்***
> ***மூசு வண்டறை பொய்கையும் போன்றதே***
> ***ஈசன் எந்தை இணையடி நீழலே’*** - அப்பர்

## தமிழர் யார்?

தமிழ்நாட்டில் இப்போது தமிழர் எவர் என்னும் போர் நிகழ்ந்து வருதல் உலகறிந்ததொன்று. இதைப்பற்றி ஒரு முடிவு காணவேண்டுவது அறிஞர் கடமை. அம்முடிவு காண்டற்கு இங்கே இன்று வாய்ப்பு நேர்ந்திருக்கிறது என்று கருதுகிறேன்.

ஈண்டுத் தமிழர் என்னும் பெயரால் ஒரு பெரும் மகா நாடும், அதன் சார்பில் வேறிரண்டு மகாநாடுகளுங் கூடியிருக் கின்றன. இம் மகாநாடுகளின் நோக்கம் என்னை? தமிழரின் முன்னேற்றத்தை நாடுவது என்று சுருங்கச் சொல்லலாம். தமிழர் முன்னேற்றம் இன்றியமையாதது. அம் முன்னேற்றம் தமிழரின் ஒருமைப்பாட்டைப் பொறுத்து நிற்றலை எவரும் மறத்தலாகாது. தமிழர் எவர் என்பதிலேயே கருத்து வேற்றுமை இருக்கும் பொழுது, தமிழர் எப்படி முன்னேற்றம் அடைதல் கூடும்? கருத்து வேற்றுமையால் தோன்றும் பிணக்கும் பிரிவும் பிளவும்

வாளா கிடக்குமோ? அவை தத்தங் கடன்களை ஆற்றிக்கொண்டே யிருக்கும்; ஆற்றிக்கொண்டிருத்தலையும் நாம் பார்த்து வரு கிறோம். எரியும், பகையும், பூசலும் தமிழ்நாட்டை அலைத்து அரித்துப் பாழ்படுத்தல் கண்கூடு. இக்குறைபாட்டை நீக்கித் தமிழர்க்குள் ஒற்றுமை நிலவச் செய்து, தமிழ்நாட்டை ஒரு சிறந்த நாடாகச் செய்ய அறிஞர் முற்படல் வேண்டும்.

தமிழர் தொன்மை வாய்ந்தவர் என்பதில் சிறிதும் ஐய மில்லை. அதுபற்றி எழுந்துள்ள ஆராய்ச்சிகள் பலப்பல. அப் பரந்த ஆராய்ச்சி ஈண்டைக்கு வேண்டுவதில்லை. தமிழரது தொன்மை, சரித்திர காலத்தையுங் கடந்து அதற்கு மேலும் மேலுந் துருவிச் சென்று நீண்டு போவது. அதை ஒரு கால எல்லைக்குள் கட்டுப்படுத்தல் இயலாது.

இமயம் நீரிடை மூழ்கிக் கிடந்தபோதும், இந்துமகா சமுத்திரம் நிலப்பரப்பாக இருந்தபோதும் தமிழ்மக்கள் வாழ்வு நடாத்தினார்கள் என்று சொல்லப்படுகிறது. இதற்கு நிலநூல், நீர் நூல், உயிர் நூல் முதலியவற்றில் வல்லார்தம் ஆராய்ச்சி முடிவுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

தமிழ்மொழியின் இயலே தமிழின் தொன்மைக்குப் பெருஞ் சான்றாக நிற்கிறது. உலகில் நிலவும் பல மொழிகளுள் நந் தமிழ்மொழி மெல்லோசையுடைய தென்பது வெளிப்படை. மெல்லோசை மொழி நேற்று இன்று தோன்றியிராது. மொழி யோசை, நாளுக்குநாள் வன்மையினின்றும் மென்மையிலேயே வளர்ந்து போகும் நீர்மையது. ஆதலின், மென்மைமொழி தொன்மை வாய்ந்ததாகவே இருத்தல் வேண்டும்.

உள்ள தமிழ் நூல்களை நோக்குவோம். அவற்றுள் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம். தொல்காப்பியக் காலத்தைப்பற்றிப் பலதிறக் கருத்துக்கள் வெளி வந்திருக்கின்றன. வேதம், இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் பாகுபாடு பெறுதற்கு முன்னரே, தொல்காப்பியம் யாக்கப்பட்டதென உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறியுள்ளனர். "...நான்கு கூறு மாய் மறைந்த பொருளும் உடைமையான் நான்மறை" யென்றார். அவை தைத்திரியமும் பௌடிகமுந் தலவகாரமுஞ் சாமவேதமு மாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமு மென் பாருமளர்; அது பொருந்தாது; இவர் இந்நூல் செய்த பின்னர் 'வேதவியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்...' என்று அவர் கூறி யிருத்தல் காண்க. தொல்காப்பியனார் காலம் இற்றைக்கு

எண்ணாயிரம் ஆண்டுக்கு முன்னர் என்றும் ,ஐயாயிரம் ஆண் டுக்கு முன்னர் என்றும், மூவாயிரம் ஆண்டுக்கு முன்னர் என்றும் ஆராய்ச்சியாளர் பலவாறு கூறுப. பிந்திய காலத்தையே நாம் கொள்வோம்.

தொல்காப்பியத்தின் மொழி நடையும், உள்ளுறையும் தமிழரின் தொன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் துணை செய்யும் என்று நம்புகிறேன். தொல்காப்பிய மொழி மிகவும் வளமுடையது; பண்பட்டது; விழுமிய கருத்துக்களை இழுமென் மொழியால் எளிதில் மலர்விக்கும் ஆற்றல் வாய்ந்தது. அவ்வளமும் பண்பும் ஆற்றலும் மொழி தோன்றிய நாளிலோ அல்லது சற்றுப் பின்னோ உருக்கொள்ளல் அரிது. தொல்காப் பியத்தில் ஒலி நுட்பம், ஒலி திணிந்து எழுத்தாதல், அளபெடை, உயர்திணை அஃறிணை, ஆகுபெயர் அன்மொழித்தொகை முதலியனவும், அகம் புறம் என்னும் வாழ்வுக் கூறுபாடு, அகத்துக் கும் புறத்துக்குமுள்ள தொடர்பு, அரசு, போர்முறை, காதல் நுட்பம், உள்நிகழ்ச்சி, மெய்ப்பாடு, உள்ளுறை இறைச்சி, கூர்தல் (உள்ளது சிறத்தல் - Evolution) முதலியனவும் சொல்லப்பட்டிருக் கின்றன. இந்நாகரிகத்துறைகள் யாவும் எத்துணை எத்துணை நூற்றாண்டுகட்கு முன்னர் அரும்பி மலர்ந்து காய்த்துக் கனிந்து தொல்காப்பியத்தில் இடம்பெற்றிருத்தல் வேண்டும் என்பதை உன்னுங்கள். தமிழ் மக்கள் காட்டு மிராண்டிகளா யிருந்து, கைக் குறி, கட்குறி, ஒலிக்குறி முதலியவாற்றான் கருத்துக்களை உணர்த்தி, பின்னே எழுத்து, சொல், பொருள் முதலியவற்றைக் கண்டு, மொழியை வளம்படுத்திச் செப்பஞ் செய்தற்கும், நாகரிகத் துறைகளைக் காண்டற்கும், அவற்றை வாழ்விடை நிலைபெறுத்தற்கும் தொல்காப்பியத்துக்கு முன்னர் எத்துணை எத்துணை ஆண்டுகளாகி யிருத்தல் வேண்டும்? அக்கால எல்லையை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. சுமார் இரண்டா யிரம் ஆண்டுகட்கு முன்னர் என்று ஒருவாறு ஊகஞ்செய்து கூறலாம். ஆகவே, தமிழரின் தொன்மைக்கு விரிவுரை வேண்டுவ தில்லை. இத்தொன்மை வழிவழி வந்தவர் தமிழராவர்.

அத்தூய தமிழர் மட்டும் இப்பொழுது தமிழ்நாட்டில் வாழ்கிறாரில்லை. அவருடன் வேறு பல மக்களும் குடிபுகுந்து நிலைத்துவிட்டார்கள். பழந் தூய தமிழர்வழி வந்த தமிழரும், இடையே புகுந்து நிலைத்த சிலருஞ் சேர்ந்த ஓரினமே இப் போதுள்ள தமிழினமாகும். இந்நாளில் தூய தமிழர் இன்னா ரென்றும், குடிபுகுந்து நிலைத்த தமிழர் இன்னாரென்றும் பிரித்துக் காட்டல் எவராலும் இயலாததொன்று. வெவ்வேறு

புலங்களிலிருந்து அவ்வப்போது குடி புகுந்தவருடன் அவரவருடைய வழக்க ஒழுக்கங்களும் குடி புகுந்தன. அவ்வழக்க ஒழுக்கங்களும் தூய தமிழ் மக்களிடைப் பரவலாயின. தூய தமிழராயிருந்தவருள்ளுஞ் சிலர் தாம் விரும்பியவாறு அவ்வப்போது மற்றவரது வழக்க ஒழுக்கங்களை ஏற்று, அவருடன் கலந்து அளவளாவி ஒன்றுபட்டனர்.

***கலப்பு என்பது இயற்கை.*** உலகில் எம்மொழியும் எந்நாடும் எவ்வினமும் தோன்றியவாறே கலப்பின்றித் தனிமைத் தூய்மையுடன் என்றும் ஒரு பெற்றியாய் நிலவுதல் அரிது. அவற்றில் கலப்பு உறுதல் இயல்பு. அதைத் தகைதல் எவராலும் இயலாததொன்று. ஒரு நாட்டில் மற்றொரு நாட்டார் புகுந்து, அந்நாட்டில் நிலைத்து, அந்நாட்டவரோடு கலந்து விடுவாராயின், அவரும் அந்நாட்டவராகக் கருதப்படுவர். இதற்கெனச் சில நாடுகளில் சில விதிகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, உலகில் எவ்வினமும் கலப்பற்றதா யில்லை என்பது ஈண்டுக் கருதற்பாலது. கலப்பால் வளர்ச்சியே உண்டு. அதனால் கேடு உண்டெனில் இயற்கை அதற்குத் துணை நில்லாது.

***தமிழர் யார்?*** தொன்றுதொட்டுத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரும், தமிழ்நாட்டில் குடியேறி நிலைத்து வாழ்வு பெற்றவருந் தமிழராவர் என்று கூறலாம். இவருள் சைவரிருக்கலாம்; வைணவரிருக்கலாம்; அருகரிருக்கலாம்; புத்தரிருக்கலாம்; கிறிஸ்தவரிருக்கலாம்; இஸ்லாமானவரிருக்கலாம்; ஆத்திகரிருக்கலாம்; நாத்திகரிருக்கலாம். இவரனைவரும் தமிழர் என்பதை மட்டும் மறத்தலாகாது.

ஈண்டுச் சங்கத்தார் காலநிலை நினைவிற்கு வருகிறது. அவர் அனைவரும் ஒரு கொள்கையுடையரல்லர். அவருள் சைவர், வைணவர், அருகர், புத்தர் முதலியோரிருந்தனர். அவரனைவருஞ் சகோதர நேயத்துடன் வாழ்ந்து போயினர். காரணமென்னை? அவர்தங் கருத்து, சமய வேற்றுமைமீதும் பிற வேற்றுமைகள்மீதுஞ் சென்றதில்லை. அவர் தம்மைத் தமிழர் - சகோதரர் - என்று எண்ணி, ஒருமையுளங்கொண்டு தமிழ்த் தாய்க்குச் சேவை செய்தனர்.

சேரன் செங்குட்டுவன், இளங்கோ அடிகள், சீத்தலைச் சாத்தனார் இவர் மூவரும் ஒரு சமயக் கொள்கையுடையவரா? இல்லை. ஒருவர் சைவர். மற்றொருவர் அருகர்; இன்னொருவர் புத்தர். இவர்க்குள் எத்தகைய ஆன்ம நேய ஒருமைப்பாடு நிலைத்திருந்தது! தமிழ் மாணாக்கர்களே! சிந்தியுங்கள். சேரன் செங்

குட்டுவனும் இளங்கோவும் ஒரு தாயின் வயிற்றிற் பிறந்த சேய்கள். ஆனால் அவர் வெவ்வேறு சமயக் கொள்கையுடையவராக வாழ்ந்தனர். அவரிடை, எரி - பகை - பூசல் எழுந்தனவா? ஆன்ம நேயமன்றோ ஊடுருவி யிருந்தது? உண்மைத் தமிழன்புக்கு முன் சிறுசிறு வேற்றுமைகளெல்லாம் ஞாயிறுமுற்பட்ட பனிப்படலம் போலாகும். அவரைப் போல் ஏன் இக்காலத் தமிழர் வாழ்தலாகாது?

வேறு புலங்களிலிருந்து தமிழ்நாடு புகுந்தவர் மிகச் சில ராகவே யிருப்பர். அவர் அவர் வழக்க ஒழுக்கங்கள் தமிழரிடைப் பலவாறு பரவியிருத்தல் வேண்டும். அதனால் தமிழ் நாட்டு மக்களிடைச் சமயக் கொள்கையிலும் பிறவற்றிலும் எத்துணை வேற்றுமைகள் காணப்பட்டாலும், அம்மக்களெல்லாருந் தம்மைத் தமிழர் என்று உணர்ந்து நடப்பது சாலும். அவ் வுணர்வை எழுப்புவது ஈண்டுக் கூடியுள்ள மகாநாடுகளின் சிறந்த நோக்கமா யிருத்தல் வேண்டும்.

பல வழியிலும் சிதறுண்டு கிடக்கும் தமிழ் இனத்தை ஒருமைப்படுத்தற்கு உறுகருவியாயிருப்பது தமிழ்மொழியே யாகும். சமயக் கொள்கையிலும் பிறவற்றிலும் மாறுபாடு கொண்டுள்ளவரும் மொழியில் ஒன்றுபடுவர். தமிழ்நாட்டை ஒருமையில் நிறுத்துதற்கு மொழி யன்றி வேறொன்று இப்போது இருக்கிறதா என்று எண்ணிப் பாருங்கள். சமயத்திலும் பிற வற்றிலும் சமரசக் கொள்கை பாராட்டும் அறிஞர் மிகச் சில ராகவே யிருப்பர். 'வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில் விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால் மாறுபடுங் கருத்தில்லை' (தாயுமானார்) என்னும் பொதுமையை மன்பதை செயலில் கடைப்பிடித்தொழுகினால், ஆன்மநேய ஒருமைப் பாடு எளிதில் கூடும். தமிழ் மக்களிடை அச்சமரசம் பரவும் வரை, பிணக்குக்கு இடமில்லாத ஒன்றைக் கொண்டே, அவர்களை ஒன்றுபடுத்தல் வேண்டும். அதற்கு மொழியினும் வேறு ஒன்று இந்நாளிலிருப்பதாகத் தெரியவில்லை.

இங்கிலாந்தில் எத்துணையோ வகுப்பார் எத்துணையோ சமயத்தார் குடியேறி ஆங்கிலராகிவிட்டனர். ஆண்டுள்ள யூதரை ஆங்கிலேயரல்லரென்றும், ஆங்கிலம் அவர் மொழி யன்று என் றும் எவரால் கூறுதல் கூடும்? அதற்கென ஆண்டோர் இயக்கம் தோன்றினால், அஃது எள்ளி நகையாடப் படுமன்றோ? 'இங்கி லாந்தைத் தாய்நாடாகக் கொண்டவன் எக்கொள்கையுடை யவனா யிருந்தாலென்ன' என்றே அறிஞர் கருதுவர்.

தமிழ்நாட்டில் ஆரியர் தமிழர் பிரிவு பெரிதும் பேசப்படுகிறது. ஆரியர் தமிழ்நாட்டில் குடிபுகுந்ததைச் சரித்திர உலகங் கூறிக்கொண்டிருக்கிறது. அதை வாழ்விடை ஏன் பாராட்டிப் பகைமை வளர்த்தல் வேண்டும்? ஆரியர் தமிழ் நாட்டிடைக் குடி புகுந்து பல்லாயிரம் ஆண்டுகளாகி விட்டன. இப்பொழுது, 'தூய ஆரியர் இன்னார்' - 'தூயதனித் தமிழர் இன்னார்' என்று எவரே பிரிக்கவல்லார்? ஒரு நூறாண்டு ஓரினத்தாரும் மற்றோரினத் தாரும் ஓரிடத்தில் வாழ நேரின், அவர்தம் தனிமையும் இவர்தந் தனிமையும் மறைந்து கலந்த இனம் உருக்கொண்டு எழும். இயற்கை நிலை இவ்வாறாகப் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் வாழ்ந்துவரும் ஆரியர்க்கும் தமிழர்க்கும் கலப்பு ஏற் பட்டிராதென்றும் கருதுவது மதியுடைமை யாகுங்கொல்!

பார்ப்பனர் ஆரியரென்றும், பார்ப்பனரல்லாதார் தமிழ ரென்றுஞ் சிலர் கருதுகிறார். பிற புலங்களிலிருந்து தமிழ்நாடு போந்தவர் சிலர் என்பதும், அவர்தம் வழக்க ஒழுக்கங்களைத் தமிழரும் ஏற்றனர் என்பதும் மேலே சொல்லப்பட்டன. மிகச் சில ஆரியர் தமிழ்நாட்டில் புகுந்திருக்கலாம். அவர் தம் வழக்க ஒழுக்கங்கள் தமிழர் பலரால் ஏற்கப்பட்டிருக்கலாம். தூய ஆரிய ராதல் தூய தமிழராதல் இப்பொழுது இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். இந்நாளைய தமிழருள் சிலர் கிறிஸ்து பெருமான் திருவடித் தொண்டராகிறார். இக்காரணத்தால் அவர் எபிரேயராகி விடுவரோ என்று கேட்கிறேன். ஆரிய வழக்க ஒழுக்கங்கள் பார்ப்பனரல்லாதாரிடமும் குலவிக்கொண்டிருத் தல் ஈண்டுக் கருதற்பாலது.

பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பூசலையொட்டி, வட மொழி தென்மொழிப் பிணக்கும் எழுந்து திருவிளையாடல் புரி கிறது. வடமொழி பார்ப்பனர் மொழி யென்றும், தென்மொழி பார்ப்பனரல்லாதார் மொழியென்றும் எவரோ புனைந்துவிட்ட னர். அது தமிழ்நாட்டை இடர்ப்படுத்துகிறது. வடமொழியைப் பார்ப்பனரும் பயிலலாம்; மற்றவரும் பயிலலாம். வடமொழி நூல்கள் பார்ப்பனராலும் எழுதப்பட்டிருக்கின்றன; மற்றவரா லும் எழுதப்பட்டிருக்கின்றன. வடமொழி பாரத நாட்டுக்குரிய பொது மொழி. உலகம் போற்றத்தக்க கலைகள் அம்மொழியில் அமைந்திருக்கின்றன. ஜைந நூல்கள் ஏராளமாக அம்மொழியில் எழுதப்பட்டிருத்தலும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. 'வடமொழி பார்ப்பனருக்கே உரியது" என்னுங் கூற்றை ஜைநர் ஏற்பதில்லை.

தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பனர் தமிழைப் பயிலாமலும், தமிழ்த் தாய்க்குச் சேவை செய்யாமலும் இருக்கிறாரில்லை. முன்

னாள் தொட்டு அவருந் தமிழ்த்தாயின் சேய்களாக நின்றே தமிழ்த் தொண்டாற்றி வருகிறார் . தமிழ் நாட்டில் பிரிவுகள் பெருகப் பெருகத் தமிழ்த் தாய்க்குச் சிறுமையும் பெருகும் என்பதை அறிஞர் கருதுவாராக.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (எல்லாம் ஊர்; எல்லா ரும் சுற்றத்தார்) எனவரூஉம் புறநானூற்றுப் பெருமொழியை நோக்குக. இவ்விழுமிய கொள்கையுடையார் தமிழர் என்பதை உணர்க. இவர் வழிவழி வந்த இக்காலத் தமிழர் சிறுமைப் பிரிவு களில் கருத்திருத்தல் அறமாகாது. 'பழந்தமிழர் பழந்தமிழர்' என்று பேசுவதால் என்ன பயன்? அவர்வழி நிற்க முயல்வது பெருந் தகைமையாகும்.

பார்ப்பனரிடத்தில் குறைபாடுகளில்லை என்று சொல் வதற்கில்லை. குறைபாடுகள் மற்றவரிடத்திலுமுண்டு. மன்பதை யில் குறைபாடுகள் உறுதல் இயல்பு. அவ்வப்போது அவை சீர் திருத்தஞ் செய்யப் பெறுதலும் இயல்பு. சீர்திருத்தக் காரரும் பிடிவாதக்காரரும் பார்ப்பனரிலுமிருக்கிறார்; மற்றவரிலும் இருக்கிறார். 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்பது போன்ற பழந்தமிழர் கொள்கை பரவப் பரவக் குறைபாடுகள் இரிந் தோடும். எரி பகையால் குறைபாடுகள் நீங்குதல் அரிது. சில வேளைகளில் அவற்றால் பிடிவாதமே பெருகும். இன்னும் இது குறித்து விரித்துக்கூற என் மனம் விரும்பவில்லை.

இந்நாளில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரையும், தமிழ் நாட்டில் குடிபுகுந்து நீண்ட காலமாக நிலைத்து வாழ்வோரையும் தமிழராக் கொள்ளவேண்டுமென் பது எனது கொள்கை. அவ்வாறு கொண்டு தமிழ்த்தாய்க்குத் தொண்டு பூண்டொழுகுமாறு இளமை மாணாக்கர்களாகிய உங்களை வேண்டுகிறேன். தமிழ்நாட்டில், 'அவர் வந்த கதையை யும் இவர் போன கதையையும்' சரித்திரத்தில் படியுங்கள்; ஆனால் அதை வாழ்விடை நுழைத்துப் பிரிவு பிளவு பிணக்கு களை உண்டாக்கித் தமிழ்மக்களின் ஒருமைப்பாட்டைக் குலைத்துத் தமிழ்த்தாயை இன்னும் புண்படுத்தாதேயுங்கள். நீங்கள் இளைஞர்கள். உங்களை நோக்கியே விண்ணப்பஞ்செய் கிறேன்.

அருமைத் தமிழ் மாணாக்கர்களே! உங்கள் நாட்டை நோக்குங்கள். அஃது எப்படியிருக்கிறது? அருமைத் தமிழ்நாடு சின்னாபின்னமாகச் சிதறுண்டு கிடக்கிறது. காரணம் என்னை? தலையாய காரணம் என்னை? தாய்மொழியைப் பேணாமை -

அதனை ஓம்பாமை - அதன்பால் பற்றுள்ளங் கொள்ளாமை. தமிழ்த்தாயின் நிலையை உன்ன உன்ன உள்ளங் குழைகிறது. உலகிலுள்ள எல்லாத் தாய்மாரினும் நந் தமிழ்த் தாயே மிக இழிந்த நிலையுற்றிருக்கிறாள். ஒருபோது முடியணிந்து, கோலேந்தி, கலையணிந்து அரியாசனம் வீற்றிருந்த நம் அன்னை - எல் லார்க்கும் மூத்த நம் பெரும் அன்னை - இப்போது எந்நிலையி லிருக்கிறாள்? அவள் முடியிழந்து, கோலிழந்து, கலையிழந்து, நலமெலாமிழந்து கிடக்கிறாள். அவள் உடற்கூறுகளெல்லாம் ஊறுபட்டுக் கிடக்கின்றன; அவள் முகமெல்லாம் குறுமறுக்கள் எழும்பி, அவள் எழிலைக் கெடுத்து வருகின்றன; அவளிருக்கத் துச்சிலுமில்லை. அவளைத் தூறும் புற்றும் மூடிக்கொள்ளுமோ என்றும் அஞ்சுகிறேன். அவளைப் பழையபடி அரச அவையில் கொலுவீற்றிருக்கச் செய்யும் பொறுப்பு எவருடையது? உங்க ளுடையது; உங்களுடையது என்று அறைகூவுகிறேன். தமிழ் நாட்டு மக்கள் அனைவரையும் தமிழராகப் பார்க்கும் நெஞ்சம் உங்கள்பால் அரும்பி மலர்வதாக. அம்மலர் பிலிற்றும் இன்பத் தேன் தாயின் நோய்களை யெல்லாம் போக்குவதாக.

**சீர்திருத்தம்**

உலகம் பலவிதம். ஒவ்வொரு விதமும் இயற்கைச் செந் நெறியில் இயங்குவது ஒழுங்கு. அவ்வியற்கை ஒழுங்கு நியதி எனப்படும். எது எது நியதியினின்றும் வழுக்கி வீழ்கிறதோ, அதை அதைச் செப்பஞ் செய்ய இயற்கை விழையும் ஒன்று சீர் திருத்த மென்பது. இச்சீர்திருத்த மில்லையேல் உலகம் வளர்ச்சியுறாது. இயற்கையின் நோக்கம் உலகை வளர்த்துக் கொண்டுபோவது. அவ்வளர்ச்சிக்குச் சீர்திருத்தம் இன்றியமை யாதது.

இக்கால உலகம் பல துறைகளில் கேடுற்றுக் கிடக்கிறது. இதற்குச் சிறந்த காரணம் ஆட்சிமுறைகளில் அடிக்கடி நேரும் மாறுதல்களாகும். இக்கால அரசியல் உலகம், பெரிதும் மேல் நாட்டையே குருமூர்த்தமாகக் கொண்டிருக்கிறது! எல்லா வற்றிற்கும் இந்நாளில் மேல்நாடு தேவையாயிருக்கிறது! மேல் நாட்டு அரசியல் முறைகட்கு இப்போது சோதனைக்காலம் நேர்ந்திருக்கிறது. சோதனை ஜெர்மெனியில் துவங்கப்பட்டிருக் கிறது. முடிவை உலகம் பேராவலோடு எதிர்நோக்கி நிற்கிறது. ஆட்சி முறைகளில் நிலைத்த அமைதி நிலவின், பல துறைகள் செம்மையுறும். அதுவரை ஆங்காங்கே சீர்திருத்தக் கூக்குரல் எழுந்துகொண்டேயிருக்கும்.

*அஃறிணை யுலகம் பெரிதுஞ் சீர்திருத்தத்தை விரும்புவ தில்லை. அவ்வுலகம் இயற்கை வழி இயங்கலால் அதற்குச் சீர் திருத்தம் தேவையில்லை. பகுத்தறிவுடைய உயர்திணை யுலகம் இயற்கைச் செந்நெறியினின்றும் அடிக்கடி வழுக்கி வீழும் இயல் பினதா யிருத்தலால், அதற்குச் சீர்திருத்தம் தேவையாகிறது.*

*பழைய தமிழர் பெரிதும் இயற்கையோடியைந்த இன்ப வாழ்வு நடாத்தினர். அதனால் இயற்கை வளர்ச்சிக்கு அவர்தம் வாழ்வு துணை நின்றது. பின்னே அவ்வாழ்வு குலைந்தமையான், இயற்கை வளர்ச்சி தடைபடலாயிற்று. இயற்கை வளர்ச்சி தடை படும் இடத்தில் பலதிறச் சிறுமைகள் உறுதல் இயல்பு.*

*பழந்தமிழ் நாட்டில் நிலப்பாகுபாடு இருந்ததே யன்றிப் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதிப்பாகுபாடு இருந்ததில்லை. மக்களுள் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதுவது இடைநாளில் குடி புகுந்த தொன்றேயாகும். இதற்கு, 'இவர் காரணர் அவர் கார ணர்' என்று சொல்வதால் என்ன பயன் விளையப் போகிறது? எவராலோ குறைபாடு நுழைந்து விட்டது. அக் குறைபாட்டைப் போக்க முயல்வது அறிவுடைமை. எவர் காரணரென்று போரிடு வது அறிவுடைமை யாகாது.*

*பிறப்புச் சாதியினின்றும்* ***பெண்ணடிமை, தீண்டாமை*** *முதலிய நச்சுக்குழவிகள் பிறந்தன. இச்சிறுமைகளைப் போக்க எழுந்த பேச்சுகளும் எழுத்துக்களும் மலையெனவுங் கடலென வுங் குவிந்தும் பரந்துங் கிடக்கின்றன. இவற்றைப்பற்றிப் பேசிப் பேசி என் நாவும் தழும்பேறிவிட்டது; எழுதி எழுதி என் கையும் மரத்துவிட்டது. இடைக்காலத்தில் தோன்றி, இந்நாளில் பெருந் துன்பம் விளைத்துவரும் நோய்களை எப்படிப் போக்குவது? இவற்றைப் போக்கப் பல மருந்துகள் சொல்லப்படுகின்றன. சிறந்த மருந்து,* ***கலப்பு மணமேயாம்.*** *இம் மணம் பரவப் பரவப் பெருகப் பெருக மக்களுக்குள் சகோதர நேயம் வளர்தற்கு இட முண்டாகும்.*

*கலப்பு மணத்துக்குப் பெண்ணுரிமை இன்றியமையாதது. பழந்தமிழர் காலத்தில் பெண்ணுரிமை இருந்தமையால் களவு மணம் நடைபெற்று வந்தது. காதல் மணம் கலப்பு வழியில் நடை பெறத் தொடங்கினால் சாதிப்பேய் தானே ஓடும். அப்பேய் ஓடி னால் பெண்ணடிமை ஏது? தீண்டாமை ஏது? எல்லாம் ஒழியும். இதற்குளவர் விரைந்து முனைந்து வருதல் வேண்டும்? இளைஞர் இளைஞர் என்று சொல்ல வேண்டுவதில்லை.*

***தீண்டாமைக் கொடுமை*** *எத்தகைத்து? தீண்டாமை கொண்ட நாடு பொலிவிழத்தல் திண்ணம். நமது நாடு பொலி விழந்திருத்தல் கண்கூடு. எங்கெங்கே தீண்டாமை! அந்தோ! பொது இடங்களிலும் நீர் நிலைகளிலும் கோயில்களிலுமா தீண்டாமை! சுடுகாட்டிலும் தீண்டாமை! என்ன கொடுமை! என்ன கொடுமை! இக்கொடுமையைப் பற்றிப் பேசிப் பேசி, எழுதி எழுதிப் பார்த்து, உடல் நலன் இழந்துள்ள இவ்வேளை யில்,*

***அன்றிலும் பேடும் அழகா யுலவிவரும்***
***வென்றிப் பரங்குன்ற வேலவனே! - நன்றுடைய***
***நின்பெயரால் தீண்டாமை நின்பெயரால் சாதிநெறி***
***வன்னெஞ்சர் செய்தனரே வம்பு.***

***தெய்வ மணங்கமழுஞ் செந்தமிழின் தேன்பாயுஞ்***
***செய்ய பரங்குன்றச் செல்வமே! - வையமதில்***
***தீண்டாமை எண்ணுநெஞ்சம் தீண்டுமோ நின்னடியை***
***தீண்டாமை மன்பதைக்கே தீட்டு.***

***ஆண்டவ நின்றன் அறிகுறி யாகிய ஆலயத்துள்***
***தீண்டல் தீண்டாமை சிறத்தலால் அன்பர்கள் செல்வதெங்கே***
***வேண்டல் வேண்டாமை கடந்தவர் வாழ்வும் வீரதமுஞ்சூழ்***
***பாண்டிய நாட்டுப் பழமுதிர் சோலைப் பரம்பரனே.***

*எனவரூஉம் பாக்களை யாத்து, ஆண்டவனை நோக்கி முறை யிடுகிறேன்; அழுகிறேன். ஆண்டவன் திருவருள் என்றாதல் நலஞ் செய்யும் என்னும் உறுதி எனக்குண்டு. நீங்களும் அவ் வுறுதிகொண்டு தீண்டாமை மனத்தைத் துறந்து வாழ்வு நடாத்துங்கள். தீண்டாமை தானே ஒழியும்.*

*கொலை களவு கள் காமம் பொய் முதலிய பாவங்கள் பரவுதற்குரிய வினைகள் பெருமிதமாக இக்கால உலகில் நிகழ்ந்து வருகின்றன. அப் பாவங்களின் வளர்ச்சிக்கு இடந்தருவது இயற்கை வளர்ச்சியைத் தகைவதாகும். ஆதலால், மாணாக்கர் சீலத்தை வாழ்வில் கடைப்பிடித்தொழுகுவாராக. இதற்குத் தியானம் வேண்டற்பாலது என்று மேலே சொல்லியிருக்கிறேன்.*

*காப்பிக்குடி, சுருட்டு பீடி சிகரெட் குடி முதலியன வாழ் விற்கு இன்றியமையாதனவல்ல. இளைஞர் உலகம் இவைகட்குப் பாழாகிறது. இப்பாழுக்கு இரையாகாதிருக்குமாறு மாணாக் கரை எச்சரிக்கை செய்கிறேன். இயற்கைக்கு மாறுபட்ட வினை களில் தலைப்படாது, இயற்கையோடியைந்த வினைகளில் தலைப்படுதல் நலம் என்று சுருங்கச் சொல்கிறேன்.*

*சகோதரிகளே! சகோதரர்களே! இன்னும் உங்கள் அரிய காலத்தைக் கொள்ளையிடுதற்கு என் மனம் எழவில்லை. இது காறும் பொறுமையுடன் என் புன்மொழிகளைச் செவி மடுத்த உங்கட்கு எனது நன்றியறிதலான வணக்கம் உரியதாக. வருங் கால உலகம் உங்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதற்கு முதலாவது உடலை ஒம்பிக் கல்வி பயின்று, விஞ்ஞானக் கலைகளில் ஊக்கஞ் செலுத்துங்கள்; நாட்டுக் காவியங்களுடன் உறவு கொண்டு அவற்றின் இயற்கை அமிழ்தை யுண்ணுங்கள்; உங்களை நன்முறையில் பண்படுத்தித் தமிழ்த் தாய்க்குச் சேவைபுரிய விரைந்து நில்லுங்கள்; தமிழ்த் தாய் உங்கள் முகத்தை நோக்கியவண்ணம் மிருக்கிறாள்; அவளைப் பற்றி யுள்ள பீடைகளெல்லாவற்றையும் தொலைக்க எழுங்கள்; எழுங்கள். இளம்பரிதிகளே! சாதி வேற்றுமை, பெண்ணடிமை, தீண்டாமை முதலிய கட்டுகள் இரிந்தோடத் தமிழ்க் கதிர் பரப்பி எழுங்கள்; எழுங்கள்.*

**‘எவ்வுயிர்க்கும் அன்பாயிரு’**

**திரு.வி.க.**

○○○

# தமிழ்க்கலை

**(1953)**

# 1. தமிழ்க் கலை

**(சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்ற முதல் ஆண்டு நிறைவு விழாவில் பேசியது.)**

*தமிழ்நாட்டில் சில காலமாகப் புத்துணர்ச்சி தோன்றி யுள்ளது. அவ்வுணர்ச்சி ஆக்கத்திற்குப் பயன்படுமாக! இத்தகைய பட்டிமன்றங்கள் பல இந் நாட்டில் காணப்படல் வேண்டும். இயற்கைக்கு மாறான கொள்கைகளை அழித்துவிடுங்கள். ஆனால், இயற்கை நெறிப்பட்ட கொள்கைகள் இன்று அழிக்கப் பட்டு வருதலைக் கண்டு வருந்துகிறேன். அது கூடாது. இத்துறை யில் சிறப்பாக மகளிர் முயற்சி செய்தல் வேண்டும்.*

*ஆடல், பாடல், நகைச்சுவை இவை பெரிய கலைகளாம். என் சொந்தக்கலை, 'பட்டினிப் பட்டாளத்தை' யொழிக்கும் கலை யாகும். அதுவே வாழ்க்கைக் கலை; உயர்ந்த கலை. என் வாழ்வு முழுதும் அதற்கே முயற்சி செய்து வருகிறேன். பட்டினிப்பட்டாளம் ஒழிந்தால்தான் நாட்டில் தமிழ் வளரும்; கலை செழிக்கும்.*

*பேச்சு ஒரு சிறந்த கலையாகும்; இளைஞர் திறம் படப் பேசப் பழக வேண்டும். முன்னர், பேசப்போவதை எழுதிக் கொண்டு பின் பேசவேண்டும். பிறகு குறிப்பெழுதிக் கொண்டு பேசலாம். பழகிய பின், ஒருமுறை நினைத்துப் பார்த்துக் கொண்டு பேசலாம். தமிழ் மொழியில் அமைந்த கலை இனியது; உயர்ந்தது!*

*கலையை மகளென, பெண்ணெனப் பேசும் பழக்கம் நம் நாட்டிற்கே சிறப்பானது. கலையெனில் பெண். சக்தி, உமா. கலைக்கு (சக்திக்கு) எல்லை யாது? உலக முழுவதும் அவள் எல்லை. அதனைத் தாண்டி, சூரிய மண்டிலம், பின் கோள்கள்; எல்லாங் கடந்த ஒளியுலகு; அதற்கப்பாலுள்ள விந்து; அதனையுந் தாண்டிய நாதவுலகு. அதுவே கலையின் எல்லை. கலைமகள் காணும் இந்தப் பருமையுலகு, காணாத நுண்மையுலகு, பருநுண்மை இரண்டுங் கடந்தவுலகு யாவற்றையுங் கடந்தவள். எல்லா இடமும், காலமும், தத்துவங்களும் கடந்தது கலை.*

அந்நிலை கண்டவர் எல்லாக் கலைகளையும், கல்லாமலே, எளிதில் அறிவர்.

கதிரவன், கோள்கள், பூமி இவையெல்லாம் ஆராயும் கலைகளாகும். எல்லாம் மூலக்கலையினின்றே தோன்று வனவாம்.

காவியம், ஓவியம், இசை, நாட்டியம், விஞ்ஞானம், தத்துவம் யாவும் கலைகளே. இன்று நாம் காணும் கலைகளை யெல்லாம் தமிழ்ப் பெரியோர் கண்டனர். 1,800 ஆண்டுகளாக அதற்கு இடையூறுகள் எழலாயின.

தமிழ்க் காவியக் கலை மிகச் சிறந்த தொன்றாகும். அது வாழ்விற்குத் துணைபோகுமா? என ஆராய்வது ஒரு நல்ல கலை யெனலாம்.

தமிழ்க்கலையெல்லாம் வீரம், காதல், இவையிரண்டும் இல்லாதது கலையன்று. இரண்டும் தேவை, இரண்டும் வேறு பட்டனவல்ல.

கிரீஸ் நாடு ஓவியச் சிறப்போங்கியது. அதனினும் உயர்ந்தது தமிழ் ஓவியக்கலை; ஒப்புயர்வற்றது. தென் காசி, புதுக்கோட்டை, மாமல்லபுரம், இங்குள்ள ஓவியங்கள் இணையற்றவை. அஜந்தா ஓவியங்களிலுங்கூட மேலானவை தமிழ்நாட்டு ஓவியங்கள். உலகிலேயே ஓவியச் சிறப்புக்கொண்ட தமிழ்நாடு, இன்று ஓவிய ஆராய்ச்சியில் குறைந்துள்ளமை கண்டு, மனம் வாடுகின்றேன்!

ஜப்பானில் தமிழர் ஓவியம் கலந்துள்ளது; ஓவியத்தின் தாயகம் தமிழகமெனலாம்.

இசையே தமிழ். தமிழ்க் கடவுள் இசைவடிவானவர். ‘ஏழிசை யாய் இசைப்பயனாய்’ என, ஆண்டவனை அடியார் போற்றினர். முன்னர் இந்திய மந்திரியாராயிருந்த **‘மார்லி’** என்பவர். நமது ஓவியத்தைப்பற்றி I.C.S. மாணவர்கட்கு ஒருமுறை கூறியுள்ளார்.

“ஓவியத்தில், இசையில் உயர்ந்த நாடு இந்தியா, நாகரிகம் செழித்த நாடு; உலகிற்சிறந்த நாடு. அத்தகைய கலைத்திறனை நாங்கள் எவ்வளவு முயன்றாலும் பெறவியலாது”என்பதே அவர் புகழ்ச்சி.

ஆம், இசைக்கு வெப்பநிலைப் பொருத்தம் வேண்டும். மிகுந்த வெப்பம் அல்லது குளிர்ச்சியுள்ள நாட்டில், இசை மேம்படல் அருமை. வெம்மையும் தண்மையுங் கலந்த நிலை

இசைக்கு மிகவும் ஏற்றமளிக்கும். நமது வங்காளக் குடாக்கடல் மண்ணில் இசையை வளர்க்குந்திறன் உண்டு என்பதனை ஆராாய்ந்துள்ளனர்.

ஆனால், அவ்விசை இங்கு எங்கேயுள்ளது? அகப்போரும் புறப்போர்களும் கலையை அழித்து வருகின்றன. போர், கலையை அழிக்கும்; நாட்டை அழிக்கும்; நாகரிகம் அழிவதைச் சொல்ல வேண்டுமா? தாகூர் இதுபற்றி நன்கு கூறியுள்ளார்.

தமிழர் சமயம், ஆடல் சமயம், பாடல் சமயம். இறைவனது நெறியைச் சம்பந்தர் கூறும்போது, "ஆடல் நெறியென்பேன்; பாடல் நெறியென்பேன்" என்கிறார். ஆனால் இடைக்கால ஏட்டு வேதாந்தி களுள் சிலர். கலையால், நாட்டியத்தால் சமயம் அழியும் என்றனர். கலையை வளர்ப்பதே உண்மையான சமய மென்பேன். பழந்தமிழர் வைத்தியம், சித்த வைத்தியம்நல்லமுறை யாகும். அது மருத்துவக் கலையுள் மேம்பட்டது. குட்டம், க்ஷயம், எலும்புருக்கி முதலிய நோய்கட்கு இன்றும் சில ஊசிகள் தவிர, நல்ல மருந்துகள் கண்டுபிடிக்கவில்லை. ஆனால், சித்த முறையில் நல்ல மருந்துகள் உண்டு. இன்றும் அந்நோயை எளிதில் போக்குவோர் பலர் உளர். அம்முறை ஆக்கம் பெற ஊக்குதல் கடனாகும்.

இன்று நம் நாடு வளர எக்கலை வேண்டும்? விஞ்ஞானக் கலை; விஞ்ஞானக் கலையென்பேன். இயற்கைத் தாயின் கருவின் உள்ளத்தில் விஞ்ஞான உண்மைகள் நிறைந்து கிடக்கின்றன. இன்றுவரை மனிதன் உள்ளதைத்தான் கண்டான்; இல்லாததைக் கண்டானில்லை. இயற்கையின் எல்லையை இன்னும் காண இயலவில்லை; அறிஞர் காலதேச வர்த்த மானத்திற்கேற்ப விஞ்ஞான உண்மைகளைக் காண்பர். இயற்கையும் காலத்திற் கேற்ப வெளிப்படும். முதலில் அகல்விளக்கு இருந்தது. எண்ணெய்க்கு ஆமணக்குத் தேவையாயிருந்தது. இயற்கை யன்னை ஆமணக்குச் செடியினைக் காண உதவினாள். பின் மாந்தர் பெருகினர்; மண்ணெண்ணெய் தேவையாயிற்று. பர்மா, ஈரான் முதலிய இடங்களில் மண் (இயற்கை) எண்ணெய் சுரந்தது. அதுவும் போதவில்லை. மாந்தர்மிகவும் பெருகினர். அன்னை அறிஞனுக்கு "மின்னலை"க் (Electricity) காண அருளினாள். மனிதன் மின் விளக்கைக் கண்டான். இதையுங் கடக்கவேண்டிய காலம் வரலாம்! என்னென்ன வருமோ!

இன்று 'அணு' ஆற்றல் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் எல்லாவற்றையுஞ் செய்யலாம். ஆனால் ஆக்கத்திற்கே அதனைப்

பயன்படுத்த வேண்டும். திருவிளையாடலில் 'எல்லாம் வல்ல சித்தரான படலம்' ஒன்றுள்ளது. முதலில் அதைக்கண்டு வியந்தேன். இப்படியும் இயலுமா என்றெண்ணினேன். இன்று அணு எல்லாக் காரியங்களையும் செய்யப் போவதைக் காண்கிறோம்.

'ஆர்க்டிக்குக் கடல் நாடு' முன் எப்படி இருந்தது? இன்று எப்படி விளங்குகிறது! எங்கும் பட்டணங்கள்! கடலோர மெல்லாம் பட்டணங்கள்! பனி உறையும் அந்த நாட்டில் இன்று கோதுமை செழித்து விளைகிறது! எப்படி வளர்கிறது? அங்கு விஞ்ஞான அறிவு வளர்கிறது. மக்கள் வளர்ச்சிக்கேற்ப, விஞ்ஞானமும் வளர்ந்து கொண்டே போகிறது. ரஷிய மனிதன் இரும்பு வேண்டுமென எண்ணினான். ஏதோ மணலையும் இன்னும் சில பொருள்களையுங் கலந்தான்; இரும்பு வந்தது. அந்த அறிவு இங்கும் ஓங்கவேண்டும். அப்போது ஏன் பாலாற்றில் என்றும் வெள்ளம் ஓடச் செய்யக் கூடாது? ரஷ்யாவில் அப்படிச் செய்திருக்கிறார்கள். நம் நாட்டில் 10கோடியாயிருந்தவர் 20 கோடியாயினர்; பின் 30, 40 கோடியா யுள்ளனர்; அடுத்த கணக்கில் 50 கோடியாகலாம். அதற்கேற்ப விஞ்ஞானத்தை வளர்த்துக்கொண்டே போக வேண்டும். நிலநூல் (Geology), உயிர் நூல் (Biology), தாவர நூல் (Botany) இவற்றை நன்றாக ஆராய்ந்து அறியவேண்டும். இவற்றையெல்லாம் தமிழாக்க வேண்டும். ஆக்க முடியுமா? எனச் சிலர் அஞ்சுகின்றனர். முடியும்; முடியும். தமிழிலும் ஆங்கிலத்திலும் தேர்ந்த புலவர்களை அத்தொண்டில் புகுத்துதல் வேண்டும். இங்குத் தலைமை வீற்றிருக்கும் **சேதுப் பிள்ளையவர்கள்** நல்ல தமிழ்த் தொண்டர்; அவர்கள் இத்தகைய தொண்டில் ஈடுபட வேண்டும். அத்தகைய காலம் மிக அணித்தேயுள்ளதென்பேன். நம் நாடு பழம்பெருமை யுடன், பிற நாடுகளோடும் உயர வேண்டுமானால், இன்றைய தமிழ்க் கலையில் விஞ்ஞானக் கலை நிறைய வேண்டும். விஞ்ஞானம் படித்தால் நாத்திகராய் விடுவராம்! மாணவர் கெட்டுவிடுவராம்! இப்படிச்சொல்வது பிழையாகும். எதில் விஞ்ஞானமில்லை? கம்பராமாயணத்தில் தாவரஇயல் (Botony) உண்டு.

ரஷியாவில் முன்னெல்லாம் கலையென்றால், அறை தான் கிட்டும். இன்று அங்கு யாவரும் விஞ்ஞானத்தை விரும்பிப் படிக் கின்றனர். அங்கு 'அழகுக் கலை' வளர்கின்றது.

இளைஞர்களின் - குழந்தைகளின் முகமே ஒரு கலை. அங்கு அழகு நடனஞ் செய்கின்றது. நமது நாட்டில் அதனைக் காண

முடிய வில்லையே! எலும்புந் தோலுமாயல்லவோ இளைஞர் காணப் படுகின்றனர்? அவர் முகத்தில் களையில்லை; கலையு மில்லையே!

பறவைகளின் ஒலியும், நீலக்கடலின் காட்சியும் நல்ல கலை யின்பந்தான். பசியிருக்குமிடத்தே, பட்டினிப் பட்டாளத்தைக் கலை எப்படிப் பற்றும்? இன்று நான் வரும்போது மூன்று பட்டினிப் பட்டாளங்கள் - நகராட்சி மன்றம், ரிக்ஷா, அரசாங்க அச்சகத் தொழிலாளர்கள் - ஊர்வலங்கள் போவதைக் கண்டேன். அவர்களிடம் இசையைப் பற்றியோ, கலையைப் பற்றியோ கூறிப் பயனென்ன? இசையைக் கேட்பதைவிட்டு, பட்டினி யெரிச்சலில் 'பளார்' என்று அறைதான் கிட்டும். ஆதலினால், எந்த நாட்டில் பட்டினிப்பட்டாளம் ஒழிக்கப் படுமோ, அங்குதான் உண்மைக்கலை ஓங்கும்.

'விவாதக் கலை' வேண்டும். இன்று ரஷியா 'Dialectic Materialism' பேசுகின்றது. இது 3,000 ஆண்டுகட்கு முன்னரே காணப்பட்டது. விவாதக் கலையின் மூலமே அது படிப்படியாய் வளர்ந்தது, இன்றைய நிலையுற்றது. வாதப்போர் என்பது, அறிவுப்போர். அதிலேயே உண்மை காண முடியும். விவாதஞ் செய்தல் ஓர் உண்மை யான கலை, நிலையான கலை!

நம் நாடு வாழ விவாதம் வேண்டும். அன்று நாடு நன்றாக வளரும். பேச்சில் அழகும், திறமையும், பண்பும் அமைய வேண்டும். இவ்வகையில் பெண்மக்கள் பெரிதும் பங்கு கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் நாடு நன்னிலையடையும்.

**தமிழ்க்கலை வாழ்க! தமிழ்நாடு உயர்க!**

# 2. மாணவரும் தமிழும்

**(15.10.51 அன்று பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவு)**

**தமிழ்த் தோழர்களே!**

இன்று இங்கே தமிழ்மன்றத் தொடக்கவிழாவுக்குத் தலைமை வகிக்கும்படி நீங்கள் கட்டளை இட்டிருக்கிறீர்கள். என் உடல் எந்த நிலையில் இருக்கின்றது என்பது உங்களுக்கு நன்கு தெரியும். **டாக்டர் மு. வரதராசனார்** அவர்கள் என்னைப் பற்றிச் சிறப்புரை பகர்ந்தார். யான் அச் சிறப்புரைகளுக்கு அருகன் அல்லேன். என்னுடைய கண்கள் படலத்தால் மறைக்கப்பட்டிருக்கின்றன. பச்சையப்பன் கல்லூரியின் தமிழ் மாணவ மணிகளை என்னுடைய அகக் கண்களால் பார்த்து மகிழ்கிறேன்! 'தலைவர் முன்னுரை' என்று நிகழ்ச்சி நிரலில் குறிக்கப் பட்டிருக்கின்றது. என் முன்னுரை ஒழுங்காகவோ, அல்லது தொடர்ச்சியாகவோ இராது.

இப்பொழுது என் உடல் நிலை ஒழுங்காகப் பேச இடந் தராமைக்கு வருந்துகிறேன். உங்கள் முன்னிலையில், முதுமை உடலுடன் காட்சியளிக்கிறேன். ஏதோ இளம் பிள்ளைகள் தமிழ் மன்றத்திலே பேச என்னை அழைத்திருக்கிறார்களே என்று பேச வந்துள்ளேன்.

மன்று, மன்றமானது. மன்று என்பது, மரத்தடிக்குப் பெயர். பழைய சரித்திரத்திலே மன்று என்ற பொருளை அதிகமாகக் காணலாம். மன்று என்று நான் குறிப்பிடுகின்ற மரத்தடியிலே, முன்னர், தமிழ்மன்றம் கூடியது. மரத்தடிகளிலே கூடியதுபோய், மேல் மாடிகளிலே கூட ஆரம்பித்தார்கள். இப்பொழுது மாடிகள் மேல் மாடிகள் ஏறிக்கொண்டு இருக்கின்றன. மேல் மாடிகள் இப்பொழுது பல காட்சியளிப்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். மேல் மாடிகள் பல உண்டாக்கிக் கொண்டே போகின்ற கட்டம் இருக்கின்றதே, அந்தக் கட்டத்தின் வளர்ச்சியைத் தடுக்க, இப்பொழுது விஞ்ஞான ஆராய்ச்சி சந்திர மண்டலம் சுக்கிர மண்டலம்வரை போய், சூரிய மண்டலமும்

போக முடியுமா முடியாதா என்று ஓர் ஆராய்ச்சி நடந்து கொண்டு வருகின்றது. முன்பு நடைபெற்ற மன்றங்களிலே அறிவானது ஓங்கி வளர ஆரம்பித்தது. முதல் முதலில், மரத்தடியிலே, தமிழ் மரத்தடியிலே - தமிழ் வளர ஆரம்பித்தது. பல மரங்கள் கூடியுள்ள இடத்திலே பச்சையப்பன் கல்லூரியை அமைத்திருக்கிறார்கள். பச்சையப்பன் கல்லூரி என்பதற்கு பசுமையான கல்லூரி என்பது பொருள்.

நான் நீண்டநேரம் பேச இயலாததற்குப் பெரிதும் வருந்துகிறேன். தமிழ் என்றால் இனிமை. தமிழ்ப்பிள்ளை களாகிய உங்கட்கு முக்கியமாக வேண்டுவன இனிய மனம், இனிய செயல், இனிய சொல், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில் இதை உங்கட்குச் சொல்லுகிறேன். இனிய மனம் எப்பொழுது அரும்பும், மலரும்? மனிதன் மற்ற உயிரையும் தன் உயிர்போல் பாவிக்கும் பொழுதுதான் இனிமை மனம் உண்டாகும். அறிவோடு, அருளோடு, யாருக்கும் தீங்கு செய்யாது இருக்க வேண்டும். உலகத்திலுள்ள உயிர்களுக்கு எக்காரணம் பற்றியும் தீங்கு செய்யாதிருக்க வேண்டும். தீங்கு செய்யாதிருக்கும் நிலைமை தமிழ்நாட்டிலே இன்னும் உண்டாக வில்லை.

'தமிழ் நாட்டிலே இன்று எங்கும் பொறாமை தலை விரித்தாடுகின்றது' என்பது பேராசிரியரால் சொல்லப்பட்டது. அனைவரையும் உலகத்திலே ஒருமைப்பாடாக எப்பொழுது பார்க்கப் போகிறோமோ? உலகத்திலே இப்பொழுது எத்தனை சாதிப் பூசல்கள், வகுப்புப் பூசல்கள் மலிந்து கிடக்கின்றன? இந்த நூற்றாண்டிலே கூட நாட்டிலே ஒருமைப்பாடு ஏற்படுமென்று எண்ண இயலவில்லை. உலகத்திலே போராட்டங்கள் நிரம்ப இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, சட்டங்கள் நிரம்ப இருக் கின்றன. எந்த நாட்டிலே சட்டங்கள் அதிகமாகின்றனவோ, அந்த நாட்டிலே மக்கள் மனம் பண்படாது. நான் சொல்வதிலிருந்து மக்களுடைய மனம் பண்படவில்லை என்று உங்களுக்கு நன்கு தெரியும். அருளும் அறமும் அரும்பவேண்டுமானால், முகிழ்க்க வேண்டுமானால், மக்களுடைய மனம் பண்படவேண்டும். சிறப்பாக மனிதரிடத்திலே தேவைக்கு அதிகமாகப் பொருள் சேர்க்கும் குணம் வளர்ந்து வருகின்றது. இது தவறு. மிகுபொருள் விரும்பாமை மக்களிடையே பரவவேண்டும்.

பழைய காலத்திலே தமிழர்கள் தேவைக்கு அதிகமாக எதையும் ஏற்படுத்திக் கொண்டதில்லை. இனிய மனம் உங்களுக்கு வாய்க்க வேண்டும். அதிகப் பொருளாசை இருத்தல் கூடாது.

ஆனால் இன்று நாட்டிலே நடப்பதென்ன? சண்டைகள் பீரங்கிகள் பெருகிக்கொண்டே யிருக்கின்றன. நான் பழைய ஆள். ஆனால் புதுமை கண்டு ஓடுகிறவன் அல்ல; அறிவியல் கலையிலே நாட்டம் கொண்டவனே.

மிகு பொருள் விரும்புதல் மனிதர்க்கு அமைதியை உண்டாக்குமா? உண்டாக்காது. பொருளாதாரம் கற்ற ஆசிரியர் களை, பெரிய கலைஞர்களை எல்லாம், 'மிகு பொருள் விரும்பல் என்றால் என்ன?' என்று கேட்டுப் பாருங்கள். இதனால் உலகத்திலே பெரிய போராட்டம் நிகழும். அந்தப் போராட்டத்திடை நாம் வாழ்கின்றோம். உற்பத்திகள் பெருகவேண்டும். மக்கள் கூட்டம் பெருகிக்கொண்டே வருகிறது. அதற்கேற்ப உற்பத்திகள் பெருகவேண்டும். உணவு, உடை, உறையுள் இன்றிப்பலர் அல்லலுறு கின்றனர். அமைதி வேண்டுமென்று கிராமத்திற்குச் சென்ற அன்பர் ஒருவர், "அமைதியோடு அருட்பா படிக்க வேண்டுமென்று கிராமத்திற்கு வந்தேன்; ஆனால் கிராமத்திலே கூடப் போராட்டம் நடந்து கொண்டேயிருக்கின்றது!" என்றார். முன்பிருந்த அமைதி கிராமங்களிலும் இல்லை. பாட்டாளிகள் துன்பத்தோடு வாழ்கின்ற கொடுமை நன்றாகத் தெரிகின்றது. இதற்கு அறிவு என்ன செய்ய வேண்டும்? - Physics, Chemistry, Geology and Zoology - படித்த மாணவர்களே, நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் வக்கீலாகவோ, அன்றி அக்கவுண்ட்டண்ட் ஜெனரல் ஆபீசில் ஒரு குமாஸ்தாகவோ, ஒரு போலீஸ் உத்தியோகத்திலிருந்து பிறகு டி.எஸ்.பி. ஆகி அதன் பின்னர்ப் போலீஸ் கமிஷனராகவோ எண்ணுகின்றீர்களா? நீங்கள் விஞ்ஞானத்தைக் கற்பதால் என்ன பயன்? நீங்கள் கற்கும் விஞ்ஞானம் மக்களுக்குப் பயன்படும் துறையிலே, நீங்கள் கல்வி அறிவினைப் பெறல்வேண்டும். காஸ்பியன் கடல், அதற்குப் பக்கத்திலே, (நிலநூற் படத்தைப் புரட்டிப் பாருங்கள்) கடற்கரைக்கருகே நரியும் ஓநாயும் ஓடிக் கொண்டிருந்தன. ரஷ்யா தேசத்திலே 'ஜீயாலஜிஷ்டு' ஒருவர் இதைப் பார்த்தார். இருபத்தைந்து பேர் முப்பது பேர் சேர்ந்துகொண்டு 'காஸ்பியன்' கடலில் நுழைந்தனர் கடலில் கொஞ்சம் உப்பிருந்தது. அந்த உப்பினை எடுத்து விட்டார்கள். பின்னர் அந்தத் தண்ணீரைப் பாய்ச்சிப் பழங்கள், கோதுமை முதலியவற்றை விளைக்க ஆரம்பித் தார்கள். விஞ்ஞானம் கற்றவர்கள் தங்கள் அறிவை இவ்வாறு பயன்படுத்த வேண்டும். பட்டிக்காட்டிலே வாழ்கின்றவர்கள், பெரும்பாலும் எலும்பும்

தோலுமாய்க் காட்சி அளிக்கி றார்கள். அவர்கள் புளியங் கொட்டையையும் கிழங்கையும் சாப்பிடு கிறார்கள். சிலர் அகப் பட்ட புல்லையும் தின்று வாழ்கிறார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? தலையாய காரணம் என்ன?

கிராமங்களுக்கு ஏற்றாற்போல நகரங்களிலே உற்பத்தி அதிகமில்லை. முன்பு பாலகங்காதர திலகர் பேசும் பொழுது, "நாளுக்கு நாள் கிராமங்கள் நகரங்களாக மாறிக் கொண்டே வருகின்றன" என்றார்.

செயற்கை மழையை வரவழைக்கக் கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. மழையை உண்டாக்கச் செயற்கை முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். தாதுப் பொருள்களை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். பல இடங்களில் பழச்சோலைகளை உண்டாக்க வேண்டும். கல்வி அறிவை மக்கள் நன்கு பயன்படுத்த வேண்டும்.

நான் இதுகாறும் ஆற்றிய சொற்பொழிவில் குற்றம் குறை இருக்கலாம். நான் மனிதன்; குறைபாடுடையவனே. குற்றம் குறை இருந்தால் மன்னிக்க. நீண்ட நேரம் பேச இயலாததால், இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

**உலகம் வாழ்க! உலகம் வாழ்க! உலகம் வாழ்க!**
**தமிழ் வாழ்க! தமிழ் வெல்க!**

# 3. வள்ளலாரும் சீர்திருத்தமும்

**(இராமலிங்க சுவாமிகள் சமாஜ சார்பில் நிகழ்ந்த வள்ளலார் பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரை – திருவொற்றியூர்.)**

**சகோதரிகளே! சகோதரர்களே!!**

*யான் இப்பொழுது பல அழைப்புகளை மறுத்து வருகிறேன். ஆனால், இந்த இராமலிங்க சுவாமிகள் சமாஜத்தார் அழைப்புக்கு மட்டும் இணங்கினேன். இச்சமாஜம் காலஞ்சென்ற தலைவர் கா.ரா. நமச்சிவாய முதலியாரின் உடன் பிறந்தார், திரு. கா.ரா. மாணிக்க முதலியார் தலைமையில் நடை பெறுவது. இத்தலைமை என்னை இணங்கச் செய்தது. திரு. சாமராஜ முதலியார் புதல்வர் இராமலிங்கம், திரு. கந்தசாமி முதலியார் புதல்வர் இராமலிங்கம் ஆகிய இரண்டு இராம லிங்கங்களின் இளமை என்னை இத்தொண்டாற்ற ஒருப்படச் செய்தது. இளமையில் எனக்குத் தனியாக் காதல் உண்டு. இராமலிங்க அடிகளின் நற்செய்தியை (Gospel-சுவிசேஷம்) பரப்பும் பொறுப்பு இளைஞரிடத்தில் இருக்கிறது என்பது எனது நம்பிக்கை. இரண்டு இராமலிங்கங்கள், இருபது இராமலிங்கங்களாய், இருநூறு இராமலிங்கங்களாய், இரண் டாயிரம் இராமலிங்கங்க ளாய்ப் பெருகின், வள்ளலாரது அருட்டிறம் நன்முறையில் வளர்வ தாகும்.*

*சில வாரங்கட்கு முன்னர், திரு. சுந்தரனார், என் தலைமை யில் ஓர் அரிய சொற்பொழிவு சென்னையில் நிகழ்த்தியது உங்களுக்குத் தெரியும். அக்கூட்டத்தை நடத்தும் பொறுப்பு எனக்கு வழங்கப் பட்டது. இதற்கும் மூல காரணமாய் நின்றது முன் இராமலிங்கத்தின் இளமையே. இவ்விளைஞர், முதன்முதல் என்னைக் கண்டபோது, 'காற்றாலே புவியாலே' என்னும் அருட்பாவுக்கு உரை கேட்டனர். 'இருள் சூழ்ந்த இக்காலத்தில், ஒரு மாணாக்கர், அதிலும் ஒரு கல்லூரி மாணாக்கர், ஆழ்ந்த பொருளுடைய ஒரு பாட்டுக்கு உரை கேட்கின்றாரே' என்று என் உள்ளம் இன்பக் கடலாடிற்று. பின்னர் உரையாட உரையாட, அவர் அருட்பா மயமாய் விளங்கியதைக் கண்டேன். அவர்தம்*

பேச்சு, அவர்தம் தந்தையாரைக் காண என்னை உந்தியது. தந்தையார் சாமராஜ் முதலியாரைக் கண்டு பேசித் தோழர் களாயினோம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் யான் பேசிய முறைக்கும் இப்போது பேசுகின்ற முறைக்கும் வேற்றுமை உண்டு. பழைய பேச்சு ஒலி பரப்பியை விழைந்ததில்லை; இப்போது விழைகிறது. மெலிந்த உடல், நலிந்த குரல்; முதுமைத் தோற்றம். என் செய்வேன்?

சில நாட்களுக்கு முன்னர், சென்னையில் ராஜாஜி மண்டபத்தில் ஒரு கூட்டம் கூடியது. அதில் சீர்திருத்தப் பெரியார் வீரேச லிங்கம் பந்துலுவின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்டது. அவ்விழாக் கூட்டத்தைத் திறந்து வைத்தவர் ஸர் சி. இராமலிங்க ரெட்டியார். அவர் தமது பேச்சில், உலகப் பெரியார் சிலரையும், வட விந்தியப் பெரியார் சிலரையும் குறிப்பிட்டனர். ஆனால், நம் வள்ளலாரைக் குறிப்பிடவில்லை. 'என்ன, இராமலிங்கம் இராமலிங்கத்தை மறந்தனர்?' என்று என் நெஞ்சம் நினைந்தது. தவறு திரு ரெட்டியார் மீது இல்லை; தமிழராகிய நம் மீதே உண்டு. தமிழராகிய நாம் இராமலிங்க அடிகளை அணித்தே உள்ள ஆந்திரத்திற்கும் அனுப்பினோமில்லை. குறை யாருடையது?

உலக வரலாற்றை நோக்கினால், பதினெட்டாம் நூற் றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத் திலும், பல பெரியோர்கள் தோற்றம் புலப்படும். அவருள் குறிக்கத் தக்கவர் **மேடம் பிளாவட்ஸ்கி, டால்ஸ்டாய், காரல் மார்க்ஸ், ராஜாராம் மோகன்ராய், தயானந்தர், இராம கிருஷ்ணர்** முதலியோர். இதே காலத்தில் வாழ்ந்தவர் நம் இராமலிங்க அடிகளாரும்.

இராமலிங்க வள்ளலார் அருளிச் செய்த திருவருட் பாவில், அவர் காலத்தில் வாழ்ந்த பெரியோர்களின் கருத்துக்கள் மலிந்து கிடக்கின்றன. வள்ளலார் அருட்பா அவ்வளவில் கட்டுப்பட்டு நிற்கவில்லை. பண்டைக்காலச் சான்றோர் உள்ளக் கிடக்கைகளும் அருட்பாவில் உண்டு.

> **வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட**
> **மரபினில் யானொருவ னன்றோ?**

என்பது வள்ளலார் திருவாக்கு. வள்ளலார் ஞானியார் என்பது மட்டுமின்றி, அவர் குரு-தீர்க்கதரிசி-நபி-சித்தர். 'தொல்காப்பியர் முதல் இராமலிங்கம் வரை' என்னும் தலைப்பு அமைத்து ஒரு

நூல் எழுத வேண்டும் என்ற வேட்கை என்னுள் எழுந்த காலம் உண்டு. இப்பொழுது அத்தொண்டுக்கு உரிய தகுதியை எனது உடல் நிலை தகைந்திருக்கிறது. மறுபிறப்பிலாதல் அத் தொண்டாற்றும் பேறு எனக்குக் கிடைக்க ஆண்டவன் அருள் புரிவானாக! இந்நாளில் தொண்டாற்றும் ஆற்றல் வாய்ந்தவர் ஒரு சிலர் தமிழ்நாட்டில் வசிக்கின்றனர். அவருள் ஒருவரைச் சிறப்பாக இங்கே குறிப் பிடுகின்றேன். அவர் என் கெழுதகை நண்பரும் உழுவன்பலரும் ஆன **ஆ. பால கிருஷ்ணப்பிள்ளை** என்பவர். அவர் ஆராய்ச்சியாளர் மட்டுமல்லர்; அன்பர். திருவருட்பாவின் உட்கிடக்கையை உணரும் அன்பும் ஆராய்ச்சியும் பெற்றவர்.

வள்ளலார் 'வாழையடி வாழையென' அருளியதை ஊன்றி ஆராய்தல் வேண்டும். அத் திருவாக்கிலே ஒரு வித மரபு தொன்று தொட்டு இடையீடின்றி வளர்ந்து வருதல் காணலாம். அம்மரபு எது? அது அஹிம்சா தர்ம மரபு. இதற்குக் கால் கொண்டவர் **விருஷப தேவர்**. அவரது காலம் தெரியவில்லை; அது சரித்திரக் காலம் கடந்தது. பதினாயிரம் ஆண்டுகட்கு முன்னரே அவர் முதன்முதல் உலகத்திற்கு அஹிம்சையை அறிவுறுத்தியவர். இவ் அஹிம்சை காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்றவாறு, பல பெரி யோர்களால் வளர்க்கப்பட்ட இந்நாளில், மக்கள் கூட்டத்தின் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் அவ்விழுமிய அறத்தை ஓம்பினர். அருட்பா என்னும் கனியினின்று வடியும் சாறு கொல்லாமை என்னும் பேரறமேயாகும்.

இக்கால உலகம் அரசியலைப் பெரிதும் குறிக்கொண்டு நிற்கிறது. அருட்பாவில் அரசியல் உண்டா? உண்டு என்றே அறுதியிட்டுக் கூறுவேன். சில திங்கட்கு முன்னர் இம்மேடை யிலேயே என்னால் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அது அருட்பாவிலுள்ள, 'மழவுக்கு மொருபிடி சோறளிப்பதன்றி' என்ற பாட்டை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்தது. அதில் மார்க்ஸீ யத்தைப் புகுத்தி விரிவுரையாற்றினேன்.

'மார்க்ஸீயத்திற்கும் நமது இராமலிங்கீயத்திற்கும் ஏதேனும் ஒற்றுமை உண்டா?' என்று சிலர் ஐயுறலாம். 'ஒற்றுமை உண்டு' என்பது யான் கண்ட உண்மை. மார்க்ஸீயம் இராம லிங்கீயத்திற்குள் அடங்கும். இராமலிங்கீயம் மார்க்ஸீயத்தைக் கடந்து, விஞ்சி நிற்கும். இதை விரித்துப் பேசின், உங்கள் அரிய காலத்தைக் கொள்ளை கொண்டவன் ஆவேன். மூன்று சொற் பொழிவுகள் நிகழ்தல் வேண்டும்; என் செய்வேன்! மன்னிக்க!

மார்க்ஸ், போலீஸ் அற்ற - சேனைகள் அற்ற - அரசற்ற ஓர் உலகைக் காணவே முயன்றார். வள்ளலாரும் அத்தகைய உலகைக் காணவே உருகி உருகி நின்றனர். அச்சீரிய உலகைப் படைக்கும் முறையில் இருவர்க்கும் வேற்றுமை உண்டு. வள்ளலார் அஹிம்சையை - அருளை - கொல்லாமையை அடிப்படையாகக் கொண்டு, அன்பு உலகைப் படைக்க ஆண்டவனை வேண்டினர். இது மார்க்ஸீயத்தில் இல்லை.

**கருணையிலா ஆட்சி கடுகி யொழிக,**
**அருணயந்த நன்மார்க்க ராள்க! – தெருணயந்த**
**நல்லோர் நினைத்த நலம் பெறுக! நன்று நினைத்து,**
**எல்லோரும் வாழ்க இசைந்து!**

இத்திருவாக்கை எண்ணுக; நினைக்க; உன்னுக; முன்னுக!

“கருணையிலா ஆட்சி கடுகி யொழிக” என்பதன் கருத்து என்னை? ‘அருளாட்சி மலர்தல் வேண்டும்’ என்பதன்றோ? அருளாட்சி என்பது யாது? கொலையற்ற ஒன்று என்பது சொல்லவும் வேண்டுமா? அதுவே, போலீஸ் - சேனை - அரச அங்கம் முதலியன இல்லா, ஒரு பெரு நல்லாட்சி - அற ஆட்சி!

அருளாட்சி வேண்டும். அந்த அருளாட்சியை ஒருவர் பெற்றார். அருளாட்சி உலகத்திலேயே பரவவேண்டும். அருளாட்சி வந்தே தீரும். இரண்டு வாரத்துக்கு முன் ஓர் அமெரிக்கப் பத்திரிகையைப் படித்தேன். அதிலே ஒரு புதிய ‘Bomb‘ கண்டு பிடித்திருப்பதைக் கண்டேன் எனக்கு அது பாசுபதாஸ்திரத்தை நினைவூட்டியது. பாசுபதாஸ்திரம் செலுத்தியவர் கைக்கே மீளுமென்பது புராணம்.

இந்தக் குண்டு (பாம்) வெம்மையற்ற ஓர் இடத்திலே வைக்கப்படும். அது ஏவப்பெறின் கூட்டம் கூட்டமாகச் செல்லும்; சூடுள்ள இடமெல்லாம் சென்று அழிக்கும்; தண்மை ஊட்டினா லன்றி ஒழியாது. அது வைக்கப்படுமிடம் தண்மை உள்ள இடம். அத்தகைய பாம்களில் ஒரு நூறு ஏவப்பெறின் உலகம் அழியும். மனிதனிடம் உள்ள சூட்டையும் அந்தப் பாம் பயன்படுத்திக் கொள்ளுமாயின் மனிதவர்க்கமே அழிவது ஒருதலை. இது நாகரிகமா, அல்லது அநாகரிகமா? அமைதிக்கும், ஒழுங்குக்கும் வழி கோலியவர் எத்துணைபேர்? மக்கள் மனத்தை மாற்றி அருள் நெறியில் செலுத்த, ஆண்டவர், அவ்வப்பொழுது அன்பினால் - கருணையினால் - அடியார்களை அனுப்பி வைக்கிறார். அவர்கள் ஆற்றிய போதனையும் சாதனையும் நாம் விட்டு விட்டோம். மீண்டும் கருணையில்லா ஆட்சிக்குக் கடிது

செல்லு வோம். முதல் வரியிலேயே அடிகளார் "ஒழிக" என்றார். அது அப்பாட்டின் - Destructive Element ஆகும். அடுத்த வரியில் ஆக்க வேலைக்குரிய Cunstructive aspect குறிப்பைக் காண்கிறோம்.

சரித்திர காலத்திற்கு முன்னர், மக்கள் ஆளப்பட்டதாகத் தெரியவில்லை; அரசாங்கமே இருந்ததில்லை. மக்களின் சிறப்பியல்பு சாந்தம். இன்று கோபத்தை மனிதன் அடக்கவேண்டும். நாகரிகம், கலை, அரசாங்கம் முதலியன மக்களின் மனநிலையைக் கெடுத்து விட்டன. மறியல் குணத்தை உடலாக, கூடாக வைத்துக் கொண்டு அருளால் அதனை உயிர்த்து, நம் நாட்டிற்கு வேண்டும் வகையை அமைத்துக் கொள்ளவேண்டும். அங்ஙனம் அமைத்துத் தந்தார் நம் வள்ளலார். 'அருட்பா - மருட்பா' வாதம் நிகழ்ந்த காலத்தில்; அருளைப் பற்றிய பாடிய பாடல்களெனவும் அருளைப் பெற விரும்பிய பாடல்கள் எனவும் வெவ்வேறு வகைகளில் பொருள் கண்டனர். அருளை இறைஞ்சிப் பாடப்பட்ட பாக்கள் என்பது பொருந்தும்.

தமிழ்மொழியின் தனிச்சிறப்பு, பாடல்களே. இக் குறிப்பைப் பாட்டியல் தமிழ் உணர்த்துகின்றது. படைப்பை யெல்லாம் பாடல்க ளாகப் பாடியவன் தமிழன். பாடியவரெல் லாம் வாழ்ந்தனரா? அவர் பாக்கள் வாழின், அவர் வாழ்கின் றனர். ஷெல்லி வாழ்கின்றான் (Shelly lives) பாட்டியற் சிறப்பைத் தேவாரத்திலே காணலாம்; திருவாசகத்திலே காணலாம்! தாயுமானாரிலும் காணலாம்.

தமிழர் இயல்பு பாட்டுப் பாடுவது. தமிழர், கவிதையில் திளைத்தனர். வள்ளலார், திருவொற்றியூரில் கண்ட காட்சியை அழகாக அமைக்கின்றார். அடியார் கூட்டத்தை வருணிக்கும் ஒரு வர்ணனை உய்த்து உணரற்பாலது. 'கவிதைபோல் சாந்தம்' என்று சொல்வது போதாதென்றெண்ணி, "தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தம்" என்றார்.

பாட்டால் பணி செய்வது தொண்டில் மிகச்சிறந்தது. சாந்தத் தின் தனிப்பெருமையைக் காந்தி அடிகளின் வாழ்க்கையி லிருந்து, ஒரு குறிப்பின் வாயிலாகக் காண்போம். அகிம்சா மூர்த்தி காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக வீற்றிருக்கிறார். மோதிலால் நேரு போன்ற தலைவர்கள் அங்குக் குழுமியிருந் தனர். கூட்டத்தின ரிடையே குழப்பம் நேரிட்டது. குழப்பம் சண்டையாக முற்றியது. அவரவர் கைக்குக் கிடைத்த நாற்காலியை எடுத்து, ஒருவர் மேல் ஒருவர் வீசலானார்கள்.

இக்காட்சியைக் காந்தியார் கண்டார். உடனே ராம பஜனை செய்யத் தொடங்கினார். கைபிடித்த நாற்காலிகள் விடுபட்டுப் பஜனை செய்யக் கூம்பின. எந்த விதத்தில் நிலைமை சமாளிக்கப் பட்டது. என்பதை நோக்கின், சாந்தத்தின் தனிச்சிறப்பும் - பாட்டின் பண்பும் விளங்கா நிற்கும்.

சீர்திருத்தம் நிரம்பவேண்டும். நான் மரணத்திற்கு அஞ்ச வில்லை!

**தந்தையார் போயினார் தாயாரும் போயினார்**
**தாமும் போவார்**
**கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்**
**கொண்டு போவார்**
**எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா**
**லேழை நெஞ்சே**
**அந்தணாரூர் தொழு துய்யலா மையல் கொண்**
**டஞ்சல் நெஞ்சே!**

அருணகிரியாரும் அந்தகனை வென்ற குறிப்பு திருப்புகழில் காணக்கிடக்கிறது. "மரணபயம் தவிர்க்க தவிர்க்க!" எனவும், "என் மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தோழி" எனவும் பாடி, மரணபயம் தவிர்தலுமாம் என்பதைப் பரக்கப் பேசினவர், நம் **இராமலிங்கர்** இதுவே வள்ளலாரின் சுவிசேஷம்.

எத்தகைய மாற்றமும் ஒரு புரட்சியால்தான் ஆகும். புரட்சி யெனின், சரித்திர மாணவர்களுக்கு இன்னோரன்ன இரத்தக் களரியே (Bloody Revolution) நினைவிற்கு வரும். இங்கு நான் கொள்ளும் பொருள், இரத்தக்களரி அன்று. மாற்றம் காண வேண்டுவனவற்றின் நடுவே நின்று, மெல்ல மாற்றம் காணுதலே புரட்சியெனக் கொள்ளலாம். இது அறப்புரட்சி. இரத்தக்களரி வாயிலாக மாற்றம் கொணர்வது மறப்புரட்சியாகும். அது வேண்டுவதில்லை! அத்தகைய அறப்புரட்சிக்கு அடிகோலி யவர், பல பாக்கள் - அம்முறையில் மாற்றம் வரவேண்டிப் பாடியவர், நம் வள்ளலார் ஆவர். நம்முடைய இராமலிங்கர் ஒரு பெரும் புரட்சிக்காரர்.

மறநெறி நின்றவரை - அறத்தாற்றில், அறவழியில் - அருள் நெறியில் - உய்த்தவர், இராமலிங்கர், அறப்புரட்சி - அருட்புரட்சி - அன்பால் - அறிவால் - கருணையால் அமைதல் வேண்டும்.

ஜாதிப்பித்தை, சமயப் பிணக்கை எவ்வாறு ஒழித்தல் வேண்டு மெனின், மதப்பித்தரிடை - சமயிகளிடைச்சென்று வள்ளலார் கூறியபடி புறச்சமயத் தலைவர் பெயர்களைக் கூறி,

எம்மதமும் சம்மதம் என்பதைப் புலப்படுத்தி, வேற்றுமை யிடையில் ஒற்று மைக்கு வழிகோல வேண்டும். வள்ளலார் இக்கருத்தினைக் கூறியது குறிப்பிடத்தக்கது.

***அருகர் புத்தி ராதி என்பேன் அயனென்பேன் நாரா***
***யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ னென்பேன்***
***பருகுசதா சிவ மென்பேன் சக்தி சிவமென்பேன்***
***பரமமென்பேன் பிரமமென்பேன் பரப்பிரம மென்பேன்.***

என்பது வள்ளலார் கூற்று.

அடுத்து, வள்ளலாரின் தொண்டு உள்ளத்தைக் காண்பேன்.

***எத்துணையும் பேதமுறா தெவ்வுயிருந்***
***தம்முயிர்போ லெண்ணி யுள்ளே***
***ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்***
***யாவரவ ருள்ளந்தான் சுத்த***
***சித்துருவாயெம் பெருமா னடம்புரியு***
***மிடமென நான் தெரிந்தேனந்த***
***வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடவென்***
***சிந்தைமிக விழைந்த தாலோ!***

இந்தப் பாட்டில் எல்லாம் உண்டு. வள்ளலார் ஒரு புத்துலகச் சிற்பி. ஏனையோரும் புத்துலகங்களைக் கண்டுள்ள னர். அவர்கள் கண்ட வகைக்கும், வள்ளலார் வகுத்த முறைக்கும் வேறுபாடு உண்டு. அத்தகைய வள்ளலார் கண்ட புதுமை உலகத்தைப் பத்து ஆண்டுகளில் தோற்றுவித்து விடலாம்.

இதுகாறும் உலகவனாய் நின்று பேசினேன்; இனித் தென்னாட்டானாய் நின்று பேசுகிறேன். ஆசியாவிற்கு - ஏன், உலகத்திற்கே - தமிழகம் வழிகாட்டியாய் நிற்கும் அந்நிலையில் இந்தியாவுக்கு வழிகாட்டி, தமிழ்நாடு.

திரு. C.R. ரெட்டி அவர்கள், இராமலிங்க ரெட்டி என்ற பெயர் பூண்டிருந்தாலும், இராமலிங்கரை அறியாத குறை நம் குறையே. உலகத்தாருக்கு இராமலிங்கரின் பெருமையை எடுத் துரைக்கவேண்டிய கடமை, இளைஞர்களாகிய உங்களுக்கு உரியது. இராமலிங்கர் கண்ட புத்துலகத்தை அருட்பாவில் காணலாம். இராமலிங்கரே அருட்பா; தமிழனது செந்நீர். தமிழனின்தமிழ்க் குருதி, தமிழ் ரத்தம் ஒவ்வொரு பாடலிலும் ஊடுருவி நிற்கின்றது. இத்துறையில் தமிழர் ஆற்ற வேண்டிய பணி மிகப் பெரிது. தோன்றியிருக்கும் சங்கங்கள் யாவும் இணைக்கப்படவேண்டும். இணைந்தாலன்றி, சக்தி பிறக்காது.

ஒன்றுபடுக - அருட்பா, ஜாதிமதமற்ற ஒரு நூல். அதைப் பரப்புதல் வேண்டும். இதைச் சங்கங்கள் சிறந்த குறிக்கோள் களாகக் கொள்ள வேண்டும். உழைப்பால் பண்டைய நிலை எய்துவோம். வள்ளலார் அருளாட்சி பெற்றேன் என்று கூறி, அவர் பெற்ற இன்பத்தை வையகம் பெறுதல் வேண்டும் எனும் பேரறிவினால், அதனை 'அறையப்பா முரசு' என்றார். தமிழர் எல்லாரும் ஒற்றுமை உள்ளவராய் இருக்க வேண்டும். பொறாமை யொழியின் தமிழர் ஒன்றுபடுதல் ஒருதலை - வள்ளலார் காட்டிய வழி நின்று உய்ய, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்போம்!

வள்ளலார் கண்ட **சத்திய ஞான சபையும், சத்திய தருமச் சாலையும்** அவர்கண்ட கனவைச் செயலில் கொண்டு வர முயன்றதின் சின்னங்களாகும்.

எல்லோரும் ஒன்றுபடுங்கள், நான் இதுகாறும் சொல்லிய வற்றில் கருத்து வேற்றுமை இருக்கலாம். கொள்ளத் தக்கன வற்றைக் கொண்டு, தள்ளத்தக்கன தள்ளுமின்!

# 4. வள்ளலார் திருவுள்ளம்

**(சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தில், வள்ளலார் 125ஆம் பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை.)**

**சகோதரிகளே! சகோதரர்களே!!**

யான், 'வள்ளலார் திருவுள்ளம்' என்று ஒரு நூலை எழுதி வெளியிட்டிருப்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே. மேலுலக இன்பத்திற்குப் பயன்படுவதா வாழ்க்கை? தற்கால உலக வாழ்க்கைக்குப் பயன்படுவது தான் உண்மையான வாழ்க்கையாகும். அரிசிப் பஞ்சம் இச் சமயம் தாண்டவமாடுகிறது! ஒரு பணக்காரர் தம் வீட்டில் ஆயிரம் அரிசி மூட்டைகளை பதுக்கி வைப்பது தான் முதலாளித்துவம். இதைக் **காரல்மார்க்ஸ்** வெறுத்தார். நாமும் வெறுக்கிறோம். நாடு என்பது எவ்வாறிருக்க வேண்டும்? இதற்கு ஆங்கில அறிஞரான மால்ட்டோ அவர்கள்,

> ***நோயாளிகளை அதிகமாகப் பெற்றது நாடாகாது.***
> ***சிறைகளை அதிகமாகக் கொண்டது நாடாகாது.***
> ***வைத்திய சாலைகளைப் பலவாக உடையது நாடாகாது.***
> ***பெண் உரிமையைக் குலைப்பது நாடாகாது.***
> ***ஏழை மக்களைத் துன்புறுத்துவது நாடாகாது.***

என்றெல்லாம் கூறுகிறார். தீய ஒழுக்கங்களால் நோய் வருகிறது. நோய் தீர்க்கும் மருந்தை நமது அருட்சுடர் வள்ளலார் மிக அழகாகக் கூறியுள்ளார். அவரை ஒரு பெரிய டாக்டர் என்றே சொல்லலாம்.

வள்ளலார் நாட்டிலே அருளாட்சி காண விரும்பினார். ஆகவே, 'கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக!' என்றார்; 'அருணயந்த நன்மார்க்கர் ஆள்க' என்று அடுத்தபடியே ஆள்வோரையும் கூறினார். அவர் எந்த மாதிரியான அரசைச் சொன்னார்? அரசற்ற அரசை, போலீஸ்காரன் இல்லாத அரசை, கள்ள மார்க்கெட்டுக் கலவாத அரசைச் சொன்னார். அவ்வாறு அவர் காண விரும்பிய அருளாட்சி வருமா? வரும். 'ஐந்தாண்டிலே வரும்' என்று சிலர் சொல்லுகின்றனர். பத்து ஆண்டிலே கட்டாயம் வரும் என்று நான் சொல்லுகிறேன்.

*பாரதியாரைப்* ***'புதுநெறி காட்டிய புலவன்'*** *என்று உலகம் இன்று போற்றுகிறது. அந்த பாரதியார் உயிருடனிருந்த போது பத்து ரூபாய்க்குப் பட்டபாடு எனக்குத் தெரியும். இப்பொழுது பத்து லட்சம் வேண்டுமானாலும் அவருக்குக் கிடைக்கலாம். ஆடம்பர மான வெளித் தோற்றத்தை அவர் விரும்பவில்லை - ஒருக்காலும் விரும்பவே மாட்டார். இப்போது பாரதியார் சொன்னதைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளலார் சொல்லி விட்டார். வள்ளலார் சொன்ன சிவம் எது?*

***கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே***
***காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்குங் கண்ணே!***
***வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே!***
***மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதியே!***
***நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில்நின்ற நடுவே!***
***நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே!***
***எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே!***
***என்னரசே! யான்புகலும் இசையுமணிந் தருளே!***

*என்றவாறு, எல்லார்க்கும் பொதுவான சிவமே வள்ளலார் கண்டசிவம். ஒரு சிலரைக் கண்டு, 'கோயிலின் உள்ளே வராதே! சாமி அருகே போகாதே!' என்று சில தீட்சிதர்கள் இன்றும் கூறுகிறார்கள். அவர்களே 'செட்டியாரா! ஐந்து ரூபாய் தட்சணையா! வாங்க! வாங்க!' என்று உபசரித்து அழைக்கும் இடத்திலா சிவம் இருக்கும்? ஒருக்காலும் இராது, இராது என்பதைநான் அறுதியிட்டுக் கூறுவேன்.*

*மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் சிவம் அல்லவா நம் சிவம்! கடவுள் இல்லை என்று சொல்பவரையும் மதிப்பவரன்றோ நம் சிவம். நாஸ்திகத்தைப் பரப்பும் ஆசிரியர் களை நீக்க வேண்டுமென்று புதுச் சட்டம் ஒன்று பிறந்திருக் கிறது. 'சட்டத்தால் தடுப்பது அறியாமை - அநாகரிகம்' என்பேன். சட்டம் என்றாலே எதையும் வெல்ல முடியாது. இன்று ஆஸ்திக ஆட்சி சட்டத்தால் தடுக்கிறது. நாளை நாஸ்திக ஆட்சி வந்தால், 'ஆஸ்திகம் கூடாது' என்று சட்டம் போடுகிறது. இது தவறு. கடவுள் இல்லை யென்றால் காட்ட வேண்டும். சயன்ஸ் மூலமாகக் காட்டலாமே! திருநீற்றில் இருக்கிற நன்மையை எடுத்துச் சொல்லலாமே! குங்குமத்தில் இருக்கிற குணத்தை எடுத்துச் சொல்லலாமே! நாட்டில் சட்டமே கூடாது என்பது என் கருத்து. ஏழையைக் கண்டு தீட்சிதர் வெறுக்கிறார். ஏழையை நடராஜாவிடம் நெருங்காதபடிச் செய்கிறார். பொதுவுடைமை யாகிய நடராஜா அப்படியில்லையே! அவர் எங்கும் உள்ளாரே!*

வள்ளலார் கண்டது தீட்சிதருடன் இருக்கும் நடராஜா அல்லர். அவர் கண்டது பொதுவுடைமை நடராஜா வன்றோ!

**மழவுக்கு மொருபிடிசோ றளிப்பதன்றி**
**இருபிடியூண் வழங்க லிங்கே**
**உழவுக்கு முதல் குறையு மெனவளர்த்தங்கு**
**அவற்றையெலா மோகோ பேயின்**
**விழவுக்கும் புலாலுண்ணும் விருந்துக்கும்**
**மருந்துக்கும் மெலிந்து மாண்டார்**
**இழவுக்கும் மிடர்கொடுங்கோ லிறைவரிக்குங்**
**கொடுத்திழப்பா ரென்னேயென்னே!**

இன்றைய நாட்டிலே, உணவுப் பஞ்சமும் உடைப் பஞ்சமும் தாண்டவமாடும் காலத்திலே, நம்மனோர் செய்கின்ற தடபுடல் உற்சவத்தைக் கண்டே நம் வள்ளலார் மேற்கண்ட பாடலைப் பாடினார் போலும்! இருபிடி யூண் வழங்கினால் உழவுக்கு முதல் குறையுமென்று வளர்த்த பொருளைக் கள்ள மார்க்கெட்டுக் காசை - பேயின் விழவுக்கு வீணாக்குகின்றனர். தங்க மயில் வாகனம், வெள்ளி ரிஷபம், புஷ்ப விமானம், பொய்க்கால் குதிரை, மேளக் கச்சேரி, நாட்டியக் கச்சேரி, வான வேடிக்கை முதலான வற்றிற்குப் பணத்தைப் பாழாக்குகின்றனர். இவை யெல்லாம் பேயின் விழாவல்லாமல் வேறென்ன? உயிர்க் கிரங்கும் கடவுள் உண்மையாக இவற்றையெல்லாம் கண்டு உளம் பூரிப்பாரா? அவ்வாறு அவரது உள்ளம் இவற்றைக்கண்டு குளிருமாயின், அது பேயல்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

இங்ஙனமே, புலாலுண்ணும் விருந்துக்கும் மாண்டார் இழவுக்கும், கொடுங்கோல் இறைவரிக்கும் பணம் செலவிடப் படுவதையும் கண்டு, உள்ளம் வெதும்புகின்றார் வள்ளலார்.

அறிவு விளங்க வேண்டிய காலத்தில் - அந்தக் காலத்தில் ஒருவர் தோன்றுகிறார். அவரைப் 'பெரியவர்' என்கிறோம்.

சன்மார்க்கம் விளங்க வேண்டிய காலத்தில் அருட்சுடர் வள்ளலார் அவர்கள் தோன்றி அதற்கு வழிகாட்டியுள்ளார்கள். ஆகவே, 'வள்ளற் பெருமானார் வாழ்க!' என்று, அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றுவோமாக!

# 5. உயிர்த்தொண்டு

**(சென்னை, தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் பாட சாலையில் ஆற்றிய சொற்பொழிவு)**

**மாணவ மணிகளே,**

*நீங்கள் வாழ்கின்ற காலம் இந்தக் காலமா? அந்தக் காலமா? எந்தக் காலம்? நீங்கள் வாழ்கின்ற காலம் நெருக்கடியான காலம், உடை கிடைப்பது, சோறு கிடைப்பது அரிதாயிருக்கிற காலம். மாணாக்கர்கள் சிலர், பரீட்சை இல்லாத காலம் வருமா? என்று கூட எண்ணலாம். பரீட்சை ஒழிந்தால் ஒரு பெரிய சனியன் ஒழிந்தது! என்று எண்ணும் மாணாக்கரும் இருக்கலாம்.*

*மாணவ மணிகளின் உடல் பெரிதும் எலும்பும் தோலு மாகவே இருக்கக் காண்கிறேன். மாணவர்களின் உடல் நன்றாக இருக்கவேண்டும்; எலும்பும் தோலுமாய் இருத்தல் கூடாது. அழகை விரும்பாத மாணாக்கர் உண்டோ? அழகை விரும்பா தார் யார்? 'தெய்வம்' என்றால் 'அழகு' எனலாம்.*

*அந்தக் காலம் போற்றற்கு உரியதா? இந்தக் காலம் போற்றற் குரியதா?*

*வயது முதிர்ந்த என்னைப் போன்றோர் நாட்டுப்புற அழகைத் தான் பாராட்டிப் பேசுவர். நாட்டுப் புறங்களிலே உள்ள சிறுவர்கள் அழகிய கட்டிடங்களிலே கல்வி பயில்வதில்லை. கிராமத்திலுள்ள சிறுவர்கள் கல்வி அறிவிலே சிறந்தவர்களாய் இல்லாதிருக்கலாம். ஆனால், உடலோம்பும் திறத்திலே அவர்கள் வல்லவர்கள். மாடு மேய்த்து, ஏர் உழுது, ஏற்றம் இறைத்து, அழகிய உடலைப் பெற்றிருக்கிறார்கள், நாட்டுப்புறத்து மக்கள். உடலோம்பும் திறத்தினை அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவற்றை அவர்கள் உங்களிடம் கற்றுக் கொள்ளவேண்டும். ஒரு கலாசாலைக்கு வந்து மாணவர் களின் உடலைப் பரிசோதிக்கும் டாக்டர், 100க்கு 75பேர் காசநோயால், எலும்புருக்கி நோயால் பீடிக்கப்பட்டிருக் கிறார்கள் என்றும் இவர்களின் நுரையீரல் சரியாயில்லை என்றும் அறிக்கையைத் தந்து செல்வார்.*

கிராமங்களிலே உள்ள சிறுவர்களைப் பற்றி டாக்டர்கள் அம் மாதிரியான அறிக்கையைத் தரமாட்டார்கள். யுனானி வைத்தியாரிடம் சென்றால், அல்வா தருவார். தமிழ் வைத்திய ரிடம் சென்றால் லேகியம் தருவார். டாக்டரிடம் சென்றால், டானிக்குத் தருவார்.

உடல் உரம் வேண்டிப் பெரும்பாலோர் டானிக்தான் சாப்பிடுகிறார்கள். இந்த டானிக்கு மூன்று வேளைகள் முறையாகச் சாப்பிட்டுவிட்டு, பாதம் பருப்பு, பால் இவற்றோடு, ஆறுவேளை ஓட்டலில் காபி, டீ சாப்பிட்டுவிட்டால், உடலில் பலமேறிவிடும் என்று பலர் எண்ணுகிறார்கள். இது தவறு.

இன்றுள்ள இந்துக்களின் உடம்பைக் காட்டிலும் மிகப் பழைய காலத்திலிருந்த இந்துக்களின் உடம்பு நல்ல நிலையில்தான் இருந்தது.

'வாழ்க்கை நிலையாமை'யை அறிவுறுத்தி 'விரத மிருங்கள், நோன்பிருங்கள், செத்துப் போங்கள்' என்று சொல்வதைக் கண்டித்து, அந்தக் காலத்து மக்கள் மட்டுமல்ல, இந்தக் காலத்துத் தமிழ்ப் பண்டிதர்கள்கூடப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அது தவறு, அந்தக் காலத்து மக்களல்ல இப்படி எழுதி வைத்தவர்கள். மத்தியில் வந்த கூட்டத்தார்தான் வாழ்க்கை நிலையாமையைப் பற்றி எழுதிவைத்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

'உங்கு' என்ற சொல் இப்பொழுது வழக்கில் இல்லை; 'உங்கு' என்றால் மத்தியில் என்று பொருள்.

உலகத்தில் உயர்ந்த பொருள் எது? சூரிய வெளிச்சம். ஐன்ஸ்டீன் என்ற பெரியார் "நாளுக்குநாள் சூரிய வெளிச்சத்தின் சக்தி அதிகமாகிக் கொண்டே போகிறது" என்று சொல்லு கிறார். பசிய மரங்களில் உள்ள இலைகளின் மேல் படர்ந்து, அது வாயிலாக நம்மீது படும் சூரிய வெளிச்சத்திற்கு அதிக சக்தி உண்டு. இம்முறையில் சூரிய வெளிச்சம் நம்மீது பட்டால், அழகொழுகும் **முருகனாய்** ஏன் இருக்க முடியாது?

டாக்டர் கூன் என்ற பெரியார், சூரிய வெளிச்சம் நம்மீது படுவதை நன்முறையில் பயன்படுத்திக் கொள்வதற்காகத் தலையில் பசுமையான நிறமுள்ள துணிகளைக் கட்டிக்கொள்ள வேண்டு மென்று சொல்லுகிறார். சூரிய வெளிச்சத்திலே உள்ள சக்தியை அறியாமல், இயற்கை வழியிலே நடவாமல், லேகியத்தையும் டானிக்கையும் சாப்பிடுவதால் பயன் என்ன? உடலுக்கு நல்ல காற்று ஏராளமாக வேண்டும். கொள்ளும்

படியான காற்றை ஒரு வேளை உள்ளே ஈர்த்து நுரையீரலிலே நிரப்பினால் கறுப்புத் தெரியாது; உடல் சிவந்த மேனியுடன் இருக்கும், ரோமம் கறுத்திடும்.

கிழவர்களுக்கு இருக்கும் வெள்ளை மயிரைக் கண்டுவிட்டு, சில இளைஞர்கள் கேலி செய்வது உண்டு. அதற்காகச் சிலர் கறுப்பு மையை அதன்மீது பூசிக்கொள்வதுண்டு. தவறிக் கைப்பட்டாலும், தண்ணீர் பட்டாலும், அந்த கறுமை மறைந்து வெண்மை தோன்றும். அதைக் கண்டோர் பின்னும் நகைப்பர். ஆதலின், மை போடுதல் கூடாது.

நான்கு மணிநேரம் வரை நீரிலேயே இருந்து, நல்ல பலன் களைப் பெற்றதாக ஓர் ஆங்கிலப் பெண்மணி சொல்லுகிறார். நீரிலும் ஓர் ஒளி உண்டு.

நல்ல காற்றிலே உலவி, நல்ல தண்ணீரை அருந்தி, சூரிய வெளிச்சம் நம் உடலிலே நன்கு படியும்படி வாழ்வோமானால், எந்த நோயுமே வராது.

தண்ணீல் அடிக்கடி மூழ்கி, நல்ல பயன்களைப் பெற்று, 101 வயது வரை இருந்த அம்மையாரைப் பார்த்து அவருடைய பேரன், '101 வயதிலே இளம் பெண்ணைப் போல் இருக்கிறாயே!' என்று கேலி செய்வானாம்.

நீங்கள் பெரியவர்களானால், 'எப்படி வாழ்வது? (How to live)' என்ற ஆங்கில நூலை அவசியம் படிக்க வேண்டும். நாகரிகத்துடன் நாம் அரிசிச் சோறு சாப்பிடுவதாகச் சொல்லப் படுகிறதே, அதில் நாகரிகமே இல்லை எனலாம். தவிட்டைப் போக்கி, வெண்ணிற அரிசியைச் (Polished Rice) சாப்பிடுகிறோம். தீட்டிய நல்ல வெள்ளைப் பச்சரிசியை உணவாக்கி, பூனை, நாயிடம் வைத்துப் பாருங்கள். மோப்பம் பிடித்துப் பார்த்து, அவை தொடவே தொடா. பூனையும்நாயும் தொடாத அரிசியைத்தான், இன்று நாம் உண்ணுகிறோம்.

இது போன்ற அரிசிகளைச் சாப்பிடுவதால்தான், குடல் வாதம் போன்ற நோய்கள் வருகின்றன. ஜப்பானிலே அரிசியைத் தீட்டுவதற் கென்றே சில சட்டங்கள் அமைத்திருக்கிறார்கள். நன்கு தீட்டப் படாத அரிசியில்தான் வைட்டமின் இருக்கிறது. கீரை தின்பதிலே நல்ல சத்துண்டு. கீரைகள் தின்பவனைப் பார்த்து, 'கீரை தின்னி' என்று கேலி செய்கிறார்கள். அது தவறு. இள மாணாக்கர்களாகிய நீங்கள், நல்ல கீரைகளை நாள்தோறும் புசிக்க வேண்டும்.

'செந்தயிர் கண்டம் கண்டமாக' என்று கம்பன் சொல்லுகிறான். இப்போது பலர் தயிர் சாப்பிட்டால் அஜீர்ணம் வருகிறதென்று சொல்லுகின்றார்கள். அது தவறான கருத்து. எலும்புகளுக்கு நல்ல பலனைத் தருவது தயிர் ஒன்றே. பழங்காலத்திலே, உடலோம்பல் மிகவும் சிறந்திருந்தது. அதை நீங்கள் கைக்கொள்ள வேண்டும்.

காலம் செல்லச் செல்ல இந்த ஜாதி, மதம், நிறம் போய்விடும். இதற்காக எவ்வளவோ சண்டைகள்! ஆசியாவிலும் ஐரோப்பாவிலும், இதற்காகச் சண்டை. இந்தக் காலத்திலே, உலகத்தோடு தொடர்பில்லாமல் ஒரு மனிதனும் வாழ முடியாது. ஒரு பொருளை எடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து பார்த்தால், உலகத்தொடர்பு இல்லாமல் இராது.

'என்ஜாதி, என் மதம்' என்ற வெறி ஒழிய வேண்டும். இவை ஒழியும் காலம் வந்து கொண்டேயிருக்கிறது. காலையில் எழுந்தவுடன் 'உலகம் வாழ்க!' என்று சொல்ல வேண்டும். 'உலகம் வாழ வேண்டும்' என எண்ணி வழிபட வேண்டும். "உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு" என்று திருமுருகாற்றுப்படை தொடங்குகிறது. 'உலகு உலகு' என்ற சீரை முதலில் வைத்துப் பாடுகின்ற பெருமை பழம் புலவர்களுக்கு உண்டு.

சில மக்களுடைய எண்ணம், கேவலம் இழிந்த நிலையிலே 'என் ஜாதி, என் மதம்' என்று இறுமாப்புடன் நினைக்கிறது.

இந்தக் காலத்திலே மக்களுடைய குறிக்கோள் எங்கே போகிறது? பதவி, பதவி, பதவி மேல்தான் போகிறது! கவுன்சிலராக வேண்டும், மேயராக வேண்டும். மந்திரியாக வேண்டும், பின்னர் கவர்னராக வேண்டும், ராஜாவாக வேண்டும் என்று பலர் எண்ணுகிறார்கள். தலைமை, பதவி இவைகளிலேதான் பலர் ஆசை வைக்கிறார்கள்.

'Scout Movement' என்ற சாரணர் இயக்கம் என்ன சொல்கிறது? (Service, Service) தொண்டு, தொண்டு - 'ஒருவருக்கொருவர் தொண்டு செய்யுங்கள்' என்று சொல்லுகிறது. இறைவனை மட்டுமல்ல, மக்களையும் தொண்டால் வழிபடுங்கள். எல்லோரும் தலைவராக வேண்டுமென்றால், சண்டைதான் தோன்றும், பிற்காலத்தை உண்டாக்கப் போகிற நீங்கள், தொண்டு செய்யுங்கள். மேயராக வேண்டும், மந்திரியாக வேண்டும் என்று ஆசை கொள்ளாதீர்கள். மேயராகவும், மந்திரியாகவும் வேண்டாவென்று நான் சொல்லவில்லை. நான் கண்டிப்பது பதவிப் பித்தை... அந்தப் பதவி ஆசையையே!

அதிகாரம் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டு, அதிகாரத்தைக் கொண்டு துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுவதும், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து கொண்டு. 'பெரும் பதவியில் இருக்கிறோம்!' என்ற ஆணவ அதிகாரத் தோரணையில், இறுமாப் புடன் கட்டளையிடுவதும் கூடா. அதிகாரத்திலும் பண்பும் பணிவும் இருக்க வேண்டும். இன்றேல், அதிகாரமும் நிலையாது; தொண்டு செய்யவும் இயலாது. நீங்கள் செய்யப் போகும் தொண்டால்தான் உலகம் பண்படைய வேண்டும்.

***அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்!***
***ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்!***
***எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே***
***எந்தைநின தருட்புகழை யியம்பியிடல் வேண்டும்!***
***செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்***
***திகழ்ந்தோங்க வருட்சோதி செலுத்தியிடல்வேண்டும்!***
***தப்பேது நான்செயினு நீ பொறுத்தல் வேண்டும்!***
***தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டவனே!***

என்று இராமலிங்கர் பாடியுள்ளார். நீங்கள் அதை நினைத்து, சாதிமதம் கடந்து, தொண்டு புரியவேண்டும்; உலகத்தோடு ஒத்துத் தொண்டு செய்ய வேண்டும்.

நீண்டநாள் உயிர் வாழவேண்டுமென்று கவிகள் கனவு கண்டார்கள். அந்தக் கனவை நனவாக்கி, நீங்களெல்லோரும் நீண்ட நாள் வாழவேண்டும்; நீண்ட நாள் உயிர்த்தொண்டு செய்யவேண்டு மென்று ஆசைப்படுகிறேன்.

# 6. வ.உ. சிதம்பரனார்

**(9.11.47 ஞாயிறன்று, சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக்கழக மகாநாட்டில், தோழர் வ.உ. சிதம்பரம் பிள்ளையர்களின் படத்தைத் திறந்து வைத்து, ஆற்றிய சொற்பொழிவு.)**

நான் **வ.உ. சிதம்பரம் பிள்ளை**யவர்கள் படத்தைத் திறப்பேன் என்றார் தலைவர். இத் தனிப்பேற்றினை வழங்கிய கழகத்தாருக்கும் உங்களுக்கும் என் நன்றி உரியதாகுக. நான் இங்கு எக் கட்சியின் சார்பிலும் வரவில்லை. நான் எக் கட்சியையும் சார்ந்தவனல்ல.

சிலர் நினைக்கிறார்கள். 'திரு.வி.க.வுக்கு ஒரு கட்சி கிடையாது; ஒரு கொள்கை கிடையாது; எங்கும் போவார்; எவர் படத்தையும் திறப்பார்' என்று. எனக்குக் கொள்கையுண்டு. என் கொள்கை என் கையில் இருக்கிறது; ஏழை மக்கள் கையில் இருக்கிறது. பாட்டாளி மக்கள் கையில் இருக்கிறது. நான் சாதி, மத, நிற, மொழி, நாடு முதலிய எல்லாப் பேதங்களையும் கடந்தவன். பொதுமக்களின் சுகவாழ்வு தான் எனது குறிக்கோள். ஒவ்வொரு மனிதனையும் சுயேச்சையுடன் வாழ, உயர்த்த, எக்கட்சி பாடுபட்டாலும், அங்கெல்லாம் நான் போவேன், வருவேன், பாடுபடுவேன்.

நான் காங்கிரசில் பெருந்தொண்டு செய்தவன்; நாட்டில் காங்கிரஸ் வீழ்ந்துபட்ட காலத்திலெல்லாம் தொண்டு செய்த வன். பின் ஏன் காங்கிரசைவிட்டு விலகினேன்? கொள்கையில் வேறு பாடா? முரண்பாடா? அல்ல, அல்ல அல்ல! காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு அடிமையாய் இருக்க விரும்பவில்லை யென்பதுதான் காரணம். காங்கிரசின் பாசிசக் கொள்கை களையும் பிற்போக்கான சுயநலப் போக்கையும் கண்டித்தே வெளியேறினேன்.

பரந்த நோக்குடன், காங்கிரசில் பாடுபட்டு உழைத்த என் நண்பர் **பெரியார் ராமசாமியும்** விலகினார். ஏன்? இதே காரணங்களால் தான். வ.உ. சிரம்பரனாரும் வெளியேறினார். ஏன்? உரிமை, உரிமை! உரிமை மறுக்கப்பட்டது; பிரிந்தோம். தனி

மனிதனின் உரிமையைக் காக்கவே நாங்கள் பிரிந்தோம். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் **பாசிசக்** கொடுமையை வெறுத்தே வெளியேறினோம்.

காங்கிரஸ் பதவி வேட்டையாடும் சுயநலவாதிகளின் பிடியிலே சிக்கிக் கொண்டுள்ளது. காங்கிரஸ் **பாசிசப்** போக்குடன் செல்கிறதா, இல்லையா? என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரையே கேட்கிறேன். இல்லையென்று திரு. காமராஜர் கூறுவாரா?

"சமதர்மம்தான் காங்கிரஸ் கொள்கை" என்று, வாய்தவறிக் காமராஜ் அவர்கள் கூறிவிட்டார்கள். 'அது அல்ல, அல்ல, அல்ல, அல்ல' என்று நான் கூறுகிறேன். வெகு சுலப மாகச் சொல்லி விட்டார் இப்படி. இவ்வளவு வயதான எனது அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறுகிறேன், காங்கிரஸ் சமதர்மத்தை நாட்டுவது எவ்வளவு கடினமென்று. காமராஜ் அவர்கள் அதை ஏற்று நடத்துவாரானால், அவருக்குப் பின், தொண்டனுக்குத் தொண்டனாகப் பணி செய்யத் தயார்.

சுயநலவாதிகளிடம் சிக்கிக் கொள்ளும் எக்கட்சியையும், அந்தப் பிற்போக்காளர்களிடமிருந்து மீட்க வேண்டும்; **வ.உ.சி.** இதே நோக்கத்துடன்தான் காங்கிரசில் போராடினார்.

வ.உ.சி. அவர்கள் சைவர். ஆனால், வடநாட்டுச் சைவத்தைப் பின்பற்றுகின்ற திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய மடத்தார் போற்றுகின்ற சைவமல்ல. சாதி, சமய வழக்குகள் தென்னாட்டுச் சைவத்தில் இல்லை. 'எவ்வுயிரிடத்தும் அன்பாயிரு; எல்லோரும் ஒரு குலம்' என்பதே வ. உ. சி. யின் கொள்கை. தென்னாட்டு மகாஜன சபை உண்மையாக வடநாட்டுக் காங்கிரசை எதிர்ப் பதற்காக ஏற்பட்டது. ஆனால், அது இன்றைக்கும் அக் கொள்கைக்கு முரண்பட்டிருக்கிறது.

வ.உ.சி.க்குக் காந்தீயத்தில் நம்பிக்கை இல்லை. அவர் கதர் கட்டமாட்டார். 'கதரில் நம்பிக்கையில்லை'யென்று பச்சை யாகச் சொல்லுவார்.

அவர் 'அறவாள்' வைத்திருப்பார். அதுதான் அறிவு நிறைந்த **திருக்குறள் வாள்**. திருக்குறளின் உண்மைகளை அறியாத துர்பாக்கியத்தால்தான் இத் திருநாடு தன் சிறப்பை இழந்தது.

வடநாட்டாரால் திணிக்கப்பட்ட போலித் தியாகம், தமிழர்களின் நாகரிகத்தையும் கலைப் பண்பையும் பாழ்படுத்தி விட்டது! ஒன்றின்மீது அளவற்ற பைத்தியம் பிடித்தலைவது

சகஜமாய் விட்டது. உதாரணமாக, நமது மாகாணத்தின் மந்திரிகளில் ஒருவர், தமிழர்களின் கலைப் பொக்கிஷமான குறளிலிருந்து, காதல், மணவாழ்க்கை ஆகிய பகுதிகளை எடுத்து விட வேண்டும் என்று கூடச் சொல்லும் அளவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. தமிழர்களின் பண்பு நம் மந்திரியாருக்குத் தெரியாதென்று தான் நினைக்கிறேன்!

வ.உ.சி.யின் தொண்டினைப் பற்றிப் பேசப் பேச, நம் நாட்டில் தன்னம்பிக்கையுண்டாகும். அப்போது நேருவின் கண்காணிப்புத் தேவையில்லை. பட்டேலின் உதவி வேண்டுவ தில்லை *(நீண்ட கைத் தட்டல்).*

தமிழ்நாடு தமிழருக்கானால், ஆந்திரநாடு பிரியும்; மலையாள நாடு பிரியும்; கன்னடநாடு பிரியும்; எல்லாம் தனித் தனியாகப் பிரியும். பிரிந்த சில மாதத்திற்குள் என்ன ஏற்படும்?

ஆந்திரர்கள் 'அச்ச தெலுங்கு காவல' (சுத்தத் தெலுங்கு வேண்டும்) என்பார்கள். மலையாளிகளுக்கு 'அச்ச மலையாளம் வேண்டும்' என்பார்கள் கன்னடியர்களும் அப்படியே. அப்பொழுது சுத்தத் தெலுங்கில் 100-க்கு 90 தமிழ்ச் சொற்களாய் இருக்கும். சுத்த மலையாளத்தில் 100-க்கு 95 தமிழாகும். அப்படியே கன்னடத்திலும் அமையும். அதுபோது மொழியால் எல்லோரும் ஓர் இனம் என்பதை உணர்வார்கள். இனத்தால் ஒன்றென்று அணைவார்கள்.

எனவே, இப்பொழுது தமிழ்நாடு, ஆந்திரநாடு, மலையாள நாடு - அதற்குப் பிறகு என்ன? நீங்களே சொல்லுங்கள்? *(என்று மக்களைப் பார்த்துக் கேட்டார். கூடியிருந்தோரில் பெரும் பகுதியினர், "திராவிடநாடு திராடருக்கே!" என்று பெரிய ஆரவாரம் செய்தனர்.)*

ஆம்! அடுத்து, திராவிட நாடு திராவிடருக்கே ஆகும். *(மக்கள் நெடுநேரம் கைதட்டல்)*

இப்பொழுது வடவேங்கடம் எல்லை. பிறகு இன்னும் விரியும். மராட்டியரும் கண்விழிப்பர். அவர்களும் மொழியால் திராவிடர், இனத்தால் திராவிடர் என்பதை உணர்வர். இப்பொழுதும் அவர்கள் இருப்பிடத்தைத் தட்சிணம் என்று தான் சொல்லிக் கொள்கின்றார்கள்.

அப்போது நமக்கு வடக்கு எல்லை வடவேங்கடம் அல்ல; விந்தியமலையாய் விளங்கும். இதுதான் முடிவு, 'தமிழ்நாடு தமிழருக்கே! திராவிட நாடு திராவிடருக்கே!' என்பது. *(நீண்ட கைத்தட்டல்)*

இதை அடைவதுதான் தமிழனுக்குப் பெருமை. வட நாட்டுப் பாசிசத்தைத் தமிழன் இன்று தாங்கி, திணற வேண்டி யிருக்கிறது. *(கைத்தட்டல்)* இதையே நான் கடலூர் மாநாட்டி லும் கூறினேன்.

சாதி, மத உயர்வு தாழ்வுகளை யொழித்த சமதர்மமே எனது கொள்கை.

வெள்ளையனுக்குத் துணையாய் இருந்துகொண்டு, வட நாட்டுப் பாசிசம் நம்மை ஆட்டிப் படைக்கின்றது. அதற்கு இடம் தாராதே! தாராதே! தாராதே! வடநாட்டுப் பாசிசத்தை யொழிப்பது தான், எந்தக் கழகமா யிருந்தாலும், அக்கழகத்தின் முதல் வேலையாக இருக்க வேண்டும்.

சென்னை மாகாண ஆட்சியை, ஆந்திர நாட்டுக்கு வேறு தமிழ் நாட்டுக்கு வேறாகப் பிரிக்கக் கவர்னர் ஜெனரல் முயல்வ தாகக் கூறப்படுகிறது. இதை நம்பவேண்டா என உங்களை எச்சரிக்கிறேன்! இந்த முயற்சிக்குக் காரணம் கவர்னர் ஜெனரல் அல்லவே அல்ல. காங்கிரசை ஆட்டிப் படைத்து நாட்டிலே சர்வாதிகார ஆட்சி செலுத்தும் வேறொருவரே இதற்குக் காரணம்.

உடனடியாகப் போரிட வேண்டுவது ஆந்திரர்களோடோ, அல்லது மற்ற நம் சகோதரர்களோடோ அல்லவே அல்ல. பாசிசப் படேலிசத்தை முறியடிப்பதே நம்மை முன்னோக்கி யுள்ள மாபெரும் பணியாகும். *(பெருங் கைத்தட்டல்)*

தமிழ்மக்கள் உரிமை உணர்வு கொண்டவர்கள். பாசிசம் எந்த வடிவிலே வந்தாலும் விரட்டத்தானே செய்வர்! எனவே, ஜனநாயகம் தழைக்க, சமதர்மம். நம் நாட்டு விடுதலைக்குப் பாடுபடுவதே நமது கடமையாகும்! ஓங்குக விடுதலை!

# 7. திறப்பு மொழி

**(சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில் 23-12-45இல் மூன்றாவது தமிழ் இசை மாநாட்டில் திரு.வி.க. நிகழ்த்திய திறப்பு மொழி.)**

**தோழர்களே,**

*சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு விழாவை முன்னிட்டு இந்நிலையத்தில் குழுமியுள்ள இவ் வரங்கத்தைத் திறக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இப் பொறுப்பை எனக்கு வழங்கிய வரவேற்புக் கூட்டத்தார்க்கும். மற்றவர்க்கும் எனது நன்றியறிதல் உரியதாக. யான், இசையில் வல்லவனல்லன்; இசைப் பள்ளியில் பயின்றவனுமல்லன்; இசை இன்பத்தை ஓரளவில் துய்க்கும் பேறுடையேன். ஆகலின், இசைப் புலவோர் என்மீது அருள் சுரப்பாராக.*

*இக்கால உலகம் எக்காட்சி வழங்குகிறது? இக்கால உலகம் வெவ்விய பரபரப்புக்கும் - தீய கிளர்ச்சிக்கும் இரத்தப் புரட்சிக்கும் இரையாகி வருதல் கண்கூடு. மன்பதையின் நாட்டம், இகலிலும் - பகையிலும் - போரிலும் - கொலையிலும் - கொலைக் கருவி யிலும் - சென்றுழலல் வெள்ளிடைமலை. இந்நிலை மாறுதல் வேண்டுமென்று முழங்காத அறிஞர் இல்லை.*

*மாறுதற்குரிய வழி என்னை? வழிகள் பலவாறு கூறப்படு கின்றன. ஈண்டு ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமென்று தோன்றுகிறது. அவ்வொன்று எது? அஃது இசை - இசை. இசை வழி இக்காலக் கோர உலகைச் சீர்செய்தல் கூடும்.*

*மனிதன் குரங்கினின்றுந் தோன்றியவன். அதனால் அவன் குரங்கியல்பினின்றும் இன்னும் முற்றும் விடுதலையடைந்தா னில்லை. விடுதலைக்கென்று மனிதப் பிறவியில் பகுத்தறிவு விளங்கியது. பகுத்தறிவால் மனிதன் தன்னைப் பண்படுத்தித் தெய்வநிலை எய்த உழைத்தல் வேண்டும்.*

*உழைப்பால் தெய்வநிலை எய்தியவர் சிலர் உளர். அவர் சான்றோர் எனப்படுவர். அச்சான்றோர் வாயிலாக இயற்கை அன்னை தன் கலைகளை விரித்தனள்.*

கலைகள் பல திறந்தன. அவைகளுள் விழுமியது இசைக் கலை. இக்கலை எல்லாக் கலைகளிலும் கலந்தும் தனித்தும் இயங்கும் பெற்றி வாய்ந்தது. இதனால் இது விழுமியதாகிறது. இசைக்கலை இயங்குமிடத்தில் பிற கலைகளின் மணம் ஒரோ வழியாதல் கமழாமற் பேகாது. இத்தகைய இசைக் கலையை மற்றக் கலைகளின் உயிர்நாடி என்று சொல்வது தவறாகாது.

மனிதன்பாலுள்ள குரங்கியல்பைச் செகுத்து, அவ்விடத் தில் தெய்வ இயல்பை அரும்பச் செய்யும் ஆற்றல் கலைகளின் உயிர் நாடியாகிய இசைக்கு உண்டு என்று அறுதியிட்டுக் கூறலாம். இதற்குக் கண்ணன் குழலிசையும், ஆனாயர் குழலிசை யும், பாணர் யாழிசையும் சான்று பகரும்.

ஓர் அழகிய பூம்பொழில்; அதில் சில குரங்குகள் புகுந்தன. குரங்குச் சேட்டைகள் வாளா கிடக்குமோ? அவைகள் பொழிலைச் சூறையாடத் தொடங்கின. அந்நிலையில் பொழிலின் ஒரு பாங்கர் ஒரு குயில் தனது இனிய குரலெடுத்துப் பாடியது. அப் பாடல் ஆண்டு உலவிய ஒரு மயிலைத் தன் கலாபம் விரித்து ஆடு மாறு உந்தியது. அப்பொழுது அப்பாங்கர் இரண்டு குரங்குகள் பாய்ந்து ஓடின. அவைகளின் ஓட்டம் திடீரெனத் தடைப் பட்டது. ஓட்டம் நடையாயிற்று; நடை மெலிந்தது, குரங்குகள் நின்றன; அசைவற நின்றன; கால்களை நீட்டிப் படுத்தன. அவை களின் புலன்கள் ஒன்றின; சேட்டைகள் ஒடுங்கின. குரங்குகள் ஆடல் பாடலில் திளைத்தன. மற்றக் குரங்குகளும் ஆண்டு போந்து அந்நிலை எய்தின. இக்காட்சி சீத்தலைச் சாத்தனார், திருஞான சம்பந்தர் முதலிய தமிழ் பாவாணர்க்கு விருந்தாயிற்று. அவ்விருந்தமுதம் இன்றும் அவர் தம் தமிழ்ப்பாக்களில் புத்தம் புதியதாய்த் தேங்கி நிற்கிறது. குரங்கின் குறும்புகளைத் தகர்த்து எறியும் ஆற்றல் வாய்ந்த இசைக் கலைக்கு, மனிதக் குரங்கின் குறும்புகளை நீறாக்கும் வல்லமை இராதோ?

இசைக்கலை மன்பதையில் இன்னும் நன்முறையில் படிந்து பரவவில்லை. அக்கலை ஒரோவழிப் படிந்து பரவியுள்ளது. அது செவ்வனே படிந்து பரவினால் மனிதனது குரங்கியல்பு மாயும்; அவன்பால் தெய்வச் சாந்த இயல்பு அரும்பும். இம்மாறுதல் நிகழ்த்த இயற்கை அன்னை வீறுகிறாள்; கலைகள் விரை கின்றன; அவ்வீறும் இவ்விரைவும் ஒன்றிச் செயலிற் பரிணமிக்க மக்களின் பகுத்தறிவுத் துணை தேவை.

பகுத்தறிவு கிளர்ந்து மதர்க்கும் நாள் சேய்மையிலில்லை. அணிமையிலிருக்கிறது. இதனை உலக நிகழ்ச்சி கொண்டு

ஊகித்துணரலாம். அணுகுண்டும், வெஞ்சுடர்க் கதிரும், இன்ன பிறவும் மனிதனைப் பல வழியிலும் அலைத்து அலைத்து, அவனது பகுத்தறிவை நல்வழியிற் பயன்படுத்துமாறு கடவியே தீரும். அணுகுண்டு முதலியன மனிதனது குரங்கியல்பைக் குலைத்து, அவன் மாட்டுத் தெய்வ இயல்பை அரும்பச் செய்யத் தோன்றின என்று அறைதல் மிகையாகாது.

இக்கால உலகைப் பண்படுத்தப் பலதிற முயற்சிகள் எழுகின்றன. அம் முயற்சிகளுள் இசைக்கலைக்கு ஆக்கந் தேடுவது தலையாயதா யிருத்தல்வேண்டும்.இல்லையேல் விளையத்தக்க பயன் விளையாது.

இசையின் முதன்மை எது? நாதம் என்று தத்துவர் கூறுவர். பலவகைத் தத்துவ உலகங்களெல்லாம் தோன்றுதற்கும், மீண்டும் அவை ஒடுங்குதற்கும் நிலைக்களனா யிருப்பது நாதம். நாதத்துக்கு மேல் விளங்குவது தூய அறிவாகிய பரம். அப் பரத்தின்வழி நாதம் இயங்கும். நாதம் பரத்துக்கு அணித்தே திகழ்தலால், அது நாதபிரமமென்றும், சப்த பிரமமென்றும் வழங்கப்படுகிறது.

நாத்தின் வண்ணம் என்னை? இசை. இதனால், இசையின் முதன்மை நாதம் என்று சான்றோர் அருளிச் சென்றனர். 'நாதம் இசை மூலம்' என்பதை யோகநூல்களிலுங் காணலாம்; முயன்றால் அனுபவத்திலும் உணரலாம்.

நாதத்துக்கு மொழியுண்டோ? இல்லை. நாதம் இசை வண்ணமாய் முழங்குகிறது. அம் முழக்கம் மொழி கடந்த ஒன்று. மொழியற்ற நாதம், மனிதனது கருவி காரணங்களை அரணாக் கொண்டு, தடித்துத் தடித்து, நாடுகளின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு பலப்பல மொழிகளாகிறது. இதைப் பற்றிய விரிவுரை ஈண்டைக்கு வேண்டுவதில்லை. நாத-இசை மொழியற்றது என்பதொன்றே ஈண்டு உன்னத்தக்கது.

நுண்மை, பருமை என்றொரு வழக்கு உண்டு. நுண்மை தனது உண்மையைத் தனித்து உணர்த்தும் பான்மையதன்று. அது தனது உண்மையைப் பருமை வழியே வெளிப்படுத்தும் இயல்புடையது. அழகு நுண்மை. இஃது ஒருவர் வாயிலாகவே தனது இருப்பைத் தெரிவிக்கும். இவ்வாறே அறிவு, அன்பு, அறம், நீதி முதலிய நுண்மைகளும் ஒவ்வொரு பருமை மூலம் தன்தன் இருப்பைப் புலப்படுத்தும், நுண்மை, பருமை என்பன உயிர் உடல் போன்றன.

இசை நுண்மை உயிர். இதன் விளக்கத்துக்கு ஒரு பருமை உடல் தேவையன்றோ? அப்பருமை உடலேமொழி என்பது. மொழி எனில் எம்மொழி? அவ்வந் நாட்டில் இயற்கையா யமைந்துள்ள தாய்மொழி என்க.

நாம் தமிழர். நாம் எம்மொழியில் இசையைப் பாடுதல் வேண்டும்? தமிழ் மொழியில் என்று சொல்லலும் வேண்டுமோ? தமிழனுக்குத் தமிழ்ப்பாட்டே சுவைக்கும். மற்ற மற்றவர்க்கு அவரவர் மொழிப்பாட்டே சுவைக்கும். இஃது இயற்கை. இசை யில் மொழிப்போரை நுழைப்பது அநாகரிகம். பகைமையைப் போக்க எழுந்த ஒரு கலையினிடைப் பகைமையைப் புகுத்துவது அறியாமை.

பழந்தமிழர் வாழ்க்கை இயற்கையோடியைந்தது. அவர் தம் வாழ்க்கை, இயற்கைத் தமிழ் - இனிமை - உடையதாயிற்று. இயற்கைத் தமிழ் - இனிமை - அவர்தம் மொழியாயிற்று. தமிழ் என்றால் என்ன? இனிமையன்றோ?

தமிழ் இனிமை; இசையும் இனிமை. இரண்டினிமையும் ஒன்றுபட்டால் எத்தகைய இன்பம் சுரக்கும்! தமிழிசையின் மாண்பு என்னே! என்னே! தமிழர் திருவே திரு.

தமிழிசை தொன்மை வாய்ந்தது; மிகத் தொன்மை வாய்ந்தது. அவ்விசை எந்நாளில் தோன்றியது - வளர்ந்தது - முதிர்ந்தது என்று அறுதியிட்டுக் கூறல் இயலவில்லை. அது சரித்திர காலத்தையுங் கடந்து நிற்பது. பல நாட்டவர் இசை நுட்பம் இன்னதென்று தெரியாது திரிந்தகாலத்தில், தமிழ் நாட்டவர் இசை நுட்பத்தைச் செவ்வனே தெளிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல படக் கிடக்கின்றன. தமிழர் கோயில் களும், மறைகளும், காவியங்களும், ஓவியங்களும், பிறவும் எடுத்துக்காட்டுகளாக இலங்குகின்றன. 'தமிழ்நாடே ஓர் இசை நிலையம்' என்று சுருங்கச் சொல்லலாம்.

தமிழ்நாடு கலைக்கூடமாய்ப் பொலிந்த காலமும் உண்டு. இது பண்டைப் பெருமை. தமிழ்நாடு இந்நாளில் உற்றுள்ள நிலையை விரித்துக் கூற நாவெழவில்லை. பிற்காலத் தமிழ்நாடு பல கலைகளை இழந்தது; இசைக் கலைகளில்பல கூறுகளை இழந்தது; பொல்லா விலங்குகளையும் வயப்படுத்த வல்ல யாழை இழந்தது. பலப்பல இழவுகளை நினைக்க நினைக்க அழுகை பெருகும். இங்கே அழுகை எற்றுக்கு? தமிழ்நாடு தனது பெரும் பெருஞ் செல்வங்களை இழந்துவிட்டது. இது பிற்காலத்தமிழ் மக்களின் கவலை ஈனத்தால் விளைந்தது. இந்நாவில் - இவ்வறிய

நாளில் - கலைகளின் உயிர்நாடியாகிய இசைக் கலைக்கு ஆக்கந் தேடத் தமிழிசை இயக்கம் காணப்பட்டது. இது கழிபேருவகை யூட்டுகிறது. தமிழிசை இயக்கங் கண்டு, அதன் ஆக்கத்துக் கென்று ஓயாது உழைத்து வரும் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார், தென்காசி சிதம்பரநாத முதலியார், ஸர்.ஆர்.கே. சண்முகஞ் செட்டியார், சக்கரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார் உள்ளிட்ட தமிழ்ப் பெருமக்களுக்குத் தமிழ்நாடு கடமைப்படுவதாக. தமிழிசை இயக்கம் காலத்துக் கேற்றது. அஃது ஓங்கி வளர்க.

தமிழிசை இயக்கம் தோன்றியதும் நாட்டிடைத் தமிழிசை வேட்கை முருகி எழுந்தது. எழுச்சி போற்றற்குரியதே. எழுந்த வேட்கை நேரியமுறையில் உருக்கொண்டு செயற்பட்டால் நலன் விளையும்.

தமிழ்நாட்டில் ஆங்காங்கே இசை மன்றங்கள் தோன்றி யுள்ளன. இன்னும் பல மன்றங்கள் தோன்றலாம். தொகைப் பெருக்கம் மட்டும் போதாது; தொண்டுப் பெருக்கமும் வேண்டும். மன்றங்கள் வெறும் விளம்பரக் கூடங்களாதல் கூடாது. அவை களில் ஆவேசம், வெறி, வகுப்புப் பிணக்கு, மொழிப் பூசல், கட்சிப் போர் முதலிய பேய்கள் நடம்புரிதலாகாது. பேய்க்கூத்தால் இசை ஆக்கம் பெறாது; வசையே ஆக்கம் பெறும்.

சில மன்றங்கள் திங்கட்கொருமுறை விழித்து இசை விருந்துண்டு தூங்கிவிடுகின்றன; சில ஆண்டுக்கொருமுறை விழித்து விழா நிகழ்த்தி உறங்கிவிடுகின்றன; சில கும்பகர்ண னுக்குத் துணை போகின்றன. சோம்பல் ஒழிக; சுறுசுறுப்பு எழுக.

ஒவ்வொரு மன்றமும் இசைப் பயிற்சிப் பள்ளியாதல் விழுப்பம். பிரசாரக் கழகமாதல் சிறப்பு; நூல் வெளியீட்டு நிலைய மாதல் நல்லது. மன்றச் சார்பில் பந்தாட்டம் முதலியன நடைபெறலாம்; கலை ஆராய்ச்சிகள் நிகழலாம்; புதுமைகாண வும் முயலலாம்.

நமது நாட்டிற் கலைகளை வளர்ப்பதற்கென்று காணப் பெற்ற நிலையங்கள் பலப்பல. அவைகளுள் சிறந்தது கோயில். கோயில் வெறுங் கட்டடமன்று. அது பல்கலைக் கூடம்; இசைக் கழகம்.

இப்பொழுது கோயில் எப்படிப் பெரிதுங் கொள்ளப் படுகிறது? மக்கள் மனோநிலை மாறியது. கலைக்கண்ணும் இசைச் செவியும் உலுத்தன. கண்ணையும், செவியையும் புதுக்கல் வேண்டும். அவைகளை மடங்கள் புதுக்குமா? பல்கலைக்

கழகங்கள் புதுக்குமா? அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் புதுக்குமா? தமிழிசை இயக்கம் புதுக்குவதாக.

கோயில்களில் ஆடல்பாடல் நிகழுமாறு பலமுறைகள் கலைஞானிகளால் கோலப்பட்டன. அம்முறைகளின் கதி என்ன வாயிற்று? அந்தோ! ஆடல் அழுகியது; பாடல் பாழாயிற்று. ஆடலும் பாடலும் வெறுங் களியாட்டல்ல. அவை செந்நெறி கூட்டவல்லன. இவ்வுட்கிடக்கையைப் பொதுவாகத் தமிழ் மறைகளிலும், சிறப்பாகத் திருஞான சம்பந்தர் தமிழ் மறையிலுங் காணலாம். திருஞான சம்பந்தரை முத்தமிழ்க் கண்கொண்டு நோக்குதல் வேண்டும்; வேறு கண்கொண்டு நோக்கினால் அவர்தம் உள்ளம் எளிதில் புலனாகாது.

திருஞானசம்பந்தர், இறைவனை, இயல்-இசை-நாடக மாக்கித் தமிழில் தந்த பெரியார். அவர் தமிழ்த்தோன்றல் - முத்தமிழ் விரகர். உள்ளத்தில் இறைமையும், வாயில் பண்ணும், கையில் தாளமும், காலில் நடமுங்கொண்ட ஓர் இசைக்கலை திருஞானசம்பம்பந்தம். அக்கலை அறிவுறுத்திய ஆடலும் பாடலுங் கொண்ட இசைநெறி செந்நெறிக்கு மாறுபட்ட தென்று சமயவாதிகள் நினைக்குங் காலமுந் தோன்றியுள்ளது! வெட்கம்! வெட்கம்!

பண்மயமான தெய்வத் திவ்வியப் பிரபந்தம் கோயில்களில் எம்முறையில் ஓதப்படுகிறது? கொலை - கொலை - இசைக் கொலை கோயில்களில் நடைபெறுகிறது! கலை நாடு கொலை நாடாகியது. இசைநாடு வசை நாடாகியது. கோயில் பழையபடி கலைக்கூடமாக- இசைக் கழகமாக - தமிழிசைச் சங்கத்தார் உழைப்பரென்று நாடு எதிர் பார்க்கிறது.

தமிழ்மறை ஓதுவோர் இசை பயில்வதும் நலம். தமிழிசைச் சங்கத்தார் வலிந்தேனும் அவர்க்கு இசை போதிக்க முந்துவது சிறப்பு.

இக்காலச் சங்கீத வித்துவான்களிற் பலர், ‘தமிழ்மறை ஏழிசைக்கு முற்றும் ஒத்துவாராது’ என்று ஒதுங்குகின்றனர் இவ்வொதுக்கம் இசையை ஒதுக்குவதாகும்.

தமிழ்மறை இசைக்களஞ்சியம். இவ்வுண்மை உழைப்பால் விளங்கும். காலஞ் சென்ற இசைஞாயிறு - காஞ்சி - சுப்பிர மணியம் பிள்ளை (நயினா பிள்ளை) உள்ளிட்ட இசைப் புலவோர் தமிழ் மறைகளை இசைபடப் பாடிக் காட்டியது எனது நினைவிலுறுகிறது. சங்கீத வித்துவான்களைத் தமிழ்மறை

மீது கருத்துச் செலுத்துமாறு அன்பால் அவர்களை முடுக்கி யேனும் தமிழிசைக் கழகத்தார் தொண்டாற்றுதல் அறம்.

இசை யாண்டுங் கலந்தும் தனித்தும் இயங்கும் இயல் புடையது என்று முன்னே குறிப்பிட்டேன். அதை ஈண்டு மீண்டும் நினைப்பூட்டுகிறேன். அரங்கில் பல்வியங்களுடன் - முகடுமுட்ட - வாய் திறந்து வீறிடுவது மட்டும் இசையாகாது. இசை விரிந்த பொருளுடையது.

இசை எங்கணும் பரந்து நிற்பது. இறை இசை; இயற்கை இசை; இயற்கைக் கூறுகள் இசை; காவிய ஓவியங்கள் இசை. எல்லாம் இசை; யாவும் இசை. எங்கணும் இசையின்பத்தைப் பருகுவோனே புலவன்; இசைப் புலவன். அவனே ஞானி; மெய்ஞ் ஞானி.

எங்கணும் இசையைப் பருகும் புலமை பெறுதற்குரிய வழி என்ன? துறை என்ன? பல வழிகளுண்டு; பலதுறைகளுண்டு. ஈண்டு ஒன்றைச் சிறப்பாகக் குறிக்க விரும்புகிறேன். அஃது ஓவியம்.

'ஊமை ஓவியமா எங்கணுமுள்ள இசையை உணர்த்தும்? நன்று! நன்று!' என்று எள்ளி நகையாடுவோரும் இருப்பர். அவ்வெள்ளலையும் நகையையும் மாற்ற வேண்டுவது தமிழிசைச் சங்கத்தின் கடமைகளுள் ஒன்று.

ஓவியம் ஊமையா? ஓவியத்தை ஊமை என்று கருதுவோர் கண்ணுள்ள குருடராவர்; காதுள்ள செவிடராவர்; நாவுள்ள ஊமைய ராவர். ஓவியம் ஊமையன்று. அது பேசாமற் பேசுவது. அப்பேச்சின் பொருளுணர்வோன் கலைஞனாவான்; இசைக் கலைஞனாவான்.

ஓவியம் ஒரு பெரும் ஆசிரியன். ஓவியப் பள்ளியிற் பயிலப் பயில நமது பேச்சு அடங்கும்; ஓவிய இசை கேட்கும். ஓவியம் நம்மை ஊமையாக்கும். விரிவஞ்சி இவ்வளவில் நின்று மேற்சொல்கிறேன்.

இசைப் புலமைக்கு ஓவிய உணர்வு இன்றியமையாதது. ஓவிய உணர்வு பெருகப் பெருக இசைப் புலமையும் உடன் பெருக்கிக் கொண்டே போகும். நாளடைவில் ஓவியம் இசையைப் பொழிதல் புலனாகும். ஓவிய இசை ஒழுக்கை என்னென்று புகல்வேன்! அருகரின் அருள் ஓவியத்தையும், புத்தரின் அற ஓவியத்தையும், கண்ணனின் குழல் ஓவியத்தையும், கிறிஸ்துவின் சிலுவை ஓவியத்தையும், தட்சணா மூர்த்தியின் மோன ஓவியத்தையும் நோக்குவோம்; உற்று நோக்குவாம்; முன்னு

வோம். என்னே இசைப் பொழிவு! இசைப் பெருக்கு! இசை அமுதம்!

ஓவிய உணர்வு பெற்ற இசைஞானியர்க்கும், அவ்வுணர்வு பெறாத இசைஞர்க்கும் வேற்றுமை உண்டு. அவ்வேற்றுமையை எப்படி உணர்வது? அடைவால் உணரலாம். முன்னவர் உடையின்றி நிர்வாணியாய் ஆடினும் பாடினும் மனிதர் உள்ளத்தில் தீய எண்ணம் எழாது; அமைதி இன்பமே நிலவும். பின்னவர் நல்லாடை புனைந்து ஒப்பனை செய்து ஆடினும் பாடினும் தீய எண்ணம் ஆர்க்கும். அமைதி தலைகாட்டவும் அஞ்சும். இசையின் நோக்கம் மனிதனிடத்தில் தெய்வச் சாந்த சீலத்தை முகிழ்விப்பதாயிருத்தல் வேண்டும்.

தமிழ்நாடு விருந்தோம்புவதில் பேர்பெற்றது. எவ்வகைத் துறைகளிலும் அது விருந்தோம்பியுள்ளது. தமிழ்நாடு கீர்த்தனை விருந்தையும் ஓம்பியது. கீர்த்தனையால் நாட்டுக்கு விளைந்த நலன் சிறிது; தீங்கோ பெரிது. இதனைத் தமிழிசைச் சங்கம் உணர்ந்திருக்கு மென்று நம்புகிறேன்.

கீர்த்தனை தமிழ்நாட்டில் கால் வைத்ததும், அதற்கு வரவேற்பு நல்கப்பட்டது. தமிழில் கீர்த்தனைகள் யாக்கப் பட்டன. அந்நாளில் பெரும் பெருஞ் சிங்க ஏறுகள் இருந்தன. முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர் முதலியோர் பெரும் பெருஞ் சிங்க ஏறுகளல்லவோ? அவர்களால் யாக்கப்பட்ட கீர்த்தனைகளில் பொருளும் இசை யும் செறியலாயின.

இந்நாளில் அரிகளின் தொகை சுருங்கியது; நரிகளின் தொகை பெருகியது. கலைஞரல்லாதாரும் கீர்த்தனைகளை எளிதில் எழுதுகின்றனர். அவைகள் ஏழிசையால் அணி செய்யப் படுகின்றன. அவ்வணியைத் தாங்கல் அவைகளால் இயல வில்லை. கலையற்ற கீர்த்தனைகளின் ஒலி, காதின் தோலில் சிறிதுநேரம் நின்று அரங்கம் கலைந்ததும் சிதறி விடுகிறது. இதுவோ இசைப்பாட்டின் முடிவு?

இசைப்பாட்டு இயற்கையில் எற்றுக்கு அமைந்தது? புலன் களின் புறத்தளவில் நின்று பொன்றுதற்கா அஃது அமைந்தது? இல்லை. புலன்களின் வழியே புகுந்து, கோளுக்குரிய புறமனத்தை வீழ்த்தி, குணத்துக்குரிய அகக் கண்ணைத் திறந்து, அமைதி இன்பத்தை நிலைபெறுத்துதற்கென்று இசைப் பாட்டு இயற்கை யில் அமைந்தது. இஃது இசைப்பாட்டின் உள்ளக் கிடக்கை. இதற்கு மாறுபட்டது இசைப் பாட்டாகாது.

கலையற்ற சிறுமைக் கீர்த்தனைகளால் இசைக்கே இழுக்கு நேர்ந்தது. இவ்விழுக்கைப் போக்க இசைப் புலவோர் தெய்வக் கலைஞரின் இசைப் பாக்களுடன் உறவு கொள்வாராக. அவர் உறவு கொள்ளத் தமிழிசை இயக்கத்தின் துணையுந் தேவை.

இசை வழியே தமிழ்ப்பாக்களைப் போதிப்பது மரபு. இம்மரபு இதுகாலை வீழ்ந்துபட்டு வருகிறது. மரபைக் காக்க வேண்டுவது தமிழ் ஆசிரியன்மார் கடமை. இக்காலத் தமிழ் ஆசிரியன்மார் சிலர் பாக்களைப் பாடி உரை கூற நாணுகின்றனர்; சிலர் தமக்கு இசை ஞானமில்லையே என்று வருந்துகின்றனர். நாணமும் வருத்தமும் மரபை அழிக்குமே! பின்னே கண்ணீர் உகுப்பதால் என்ன பயன்?

பிறவியில் இசையற்ற தொன்றில்லை என்பது அறிஞர் கொள்கை. அமைப்பில் சில வேற்றுமைகள் உறலாம். நல்லிசைப் புலமை சிலர்க்கு வாய்க்கும்; சிலர்க்கு வாய்ப்பதில்லை. எல்லார்க்கும் நாதசுரம் அமையுமா? சிலர்க்குக் காகசுரமும் அமையும். கழுதைக் குரலிலும் ஒருவித இசையுண்டு என்று புலவர்க்கு விளக்க வேண்டுவதில்லை. ஆகலின், எச்சுரத்தாலாதல் - எக்குரலாலாதல் - பாக்களைப் பாடிப் பொருள் கூறுமாறு தமிழ் ஆசிரியன்மாரை வேண்டுகிறேன்.

தமிழ்நாடு இதுபோழ்து வழங்கும் காட்சி இரக்கத்தக்கதா யிருக்கிறது. ஒரு சிறு நிலத்துள் எத்துணை வகுப்பு! எத்துணைப் பிளவு! எத்துணைப் பிணக்கு! தமிழ் நிலம் பழையபடி ஒருமைத் தமிழ் நாடாதல் வேண்டும். ஒருமையை கோலவல்லது இசை. இசையை - தமிழ் இசையை - ஓம்ப முனைந்துள்ள தமிழிசை இயக்கம், தமிழ் மக்களின் ஒருமைப் பாட்டுக்கும் உழைப்பதைத் தனக்குரிய முன்னணி வேலைகளுள் ஒன்றாகக் கொண்டிருக்கு மென்று நினைக்கிறேன்.

சென்னைத் தமிழிசைச் சங்கம் மூன்றாண்டுக் குழவி, அதை நன்முறையில் ஓம்பிய அனைவர்க்கும் எனது நன்றியைச் செலுத்து கிறேன்; அஃது ஓங்கி ஓங்கி வளர ஆண்டவனை வழுத்து கிறேன்.

மூன்றாண்டில் சென்னைத் தமிழிசைச் சங்கம் தன்னா லியன்ற பணிகளை ஆற்றியுள்ளது; நாட்டை விழிக்கச் செய்தது. இன்னும் பல பணிகளை ஆற்றச் சங்கம் விரைகிறது. பொது மக்கள் கூட்டுறவு தேவை. பொதுமக்கள் கூட்டுறவால் சங்கஞ் செயற்கருஞ் செயல் களை நிகழ்த்தல் கூடும். பொதுமக்கள் தமிழிசைச் சங்கத்தை வளர்க்க முந்துவார்களாக.

தோழர்களே! உங்கள் காலம் அரியது. இன்னும் பலகூற என் மனம் ஒருப்படவில்லை. இவ்வளவில் நிற்க எண்ணுகிறேன்.

எனது சிறுமையுரையை இதுகாறும் பொறுமையுடன் கேட்ட உங்கட்கும், சங்கத்தார்க்கும், மற்றவர்க்கும் எனது வணக்கம் உரியதாக. இச்சிறு மொழியுடன் 'ஏழிசையாய் இசைப்பயனா' யுள்ள இறைவன் திருவருளை முன்னிறுத்தி இவ்வரங்கத்தைத் திறக்கும் பணியாற்று கிறேன். பிழை பொறுக்க.

**தமிழ் வாழ்க! தமிழிசை வெல்க!**

*'பாடல் நெறிநின்றான் பைங்கொன்றைத் தண்தாரே*
*சூடல் நெறிநின்றான் சூலஞ்சேர் கையினான்*
*ஆடல் நெறிநின்றான் ஆமாத்தூ ரம்மான்றன்*
*வேட நெறிநில்லா வேடமும் வேடமே.*

*'பண்ணியல் பாடலறாத ஆவூர்ப் பசுபதி ஈச்சுரம் பாடு நாவே'*

*'தமிழின் நீர்மை பேசித் தாளம் வீணைபண்ணி நல்ல*
*முழவ மொந்தை மல்குபாடல் செய்கையிடம்.......'*

*'பண்ணின் மொழிசொல்ல விண்ணுந் தமதாமே'*

*'பண்ணிய நடத்தோ டிசைபாடு மடியார்கள்*
*நண்ணிய மனத்தின்வழி பாடுசெய்நள் ளாறே'*

*'கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்*
*பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி'*

*'பண்புனை பாடல் பயில்வார் பாவமிலாதவர் தாமே'*

*'பண்க ளார்தரப் பாடுவார் கேடிலர் பழியிலர் புகழாமே'*

*'பண்ணமர் வீணையினான் பரவிப்பணி தொண்டர்கள்தம்*
*எண்ணமர் சிந்தையினான்'*

*'நாளுமிகு பாடலொடு ஞானமிகு நல்லமலர் வல்லவகையால்*
*தோளினொடு கைகுளிர வேதொழும வர்க்கருள் செய்சோதி'*

*'கீதமொடு நீதிபல ஓதிமற வாதுபயில் நாதன் நகர் தான்'*

*'கலையினொலி மங்கையர்கள் பாடலொலி யாடல்கவி*
*னெய்தியழகார்*
*மலையின்நிகர் மாடமுயர் நீள்கொடிகள் வீசுமலி*
*மாகறலுளான்'*

*'பண்ணும்பத மேழும்பல வோசைத்தமி ழவையும்*
*உண்ணின்றதொர் சுவையும்முறு தாளத்தொலி பலவும்*
*மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்*
*விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே'*

- முத்தமிழ் விரகன்

❖❖❖❖

# திரு.வி.க. வாழ்க்கைச் சுவடுகள்

| | |
|---|---|
| *1883* | *பிறப்பு (ஆகஸ்டு 26)* |
| *1891* | *சென்னை இராயப்பேட்டையில் தொடக்கப் பள்ளியில் சேர்தல்* |
| *1894* | *வெஸ்லி பள்ளியில் சேர்தல். நோயால் கல்வி தடைப்படுதல். நான்கு ஆண்டுகள் பள்ளிக் கல்வி இல்லை.* |
| *1898 - 1904* | *மீண்டும் வெஸ்லி பள்ளியில் சேர்தல். ஆசிரியர் கதிரைவேற் பிள்ளை சார்பாக நீதிமன்றத்துக்குப் போனதால் இறுதித் தேர்வு எழுதும் வாய்ப்பை இழந்தார்.* |
| *1901-1906* | *யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளையிடம் தமிழ் இலக்கியம், சைவ சாத்திரங்கள் பயிலுதல்* |
| *1907* | *கதிரைவேலர் மறைவு.* |
| *1907-1908* | *ஸ்பென்சர் கம்பெனியில் பணி* |
| *1908* | *கதிரைவேலர் வரலாறு (முதல் நூல்) எழுதுதல்.* |
| *1908-1910* | *மயிலைப் பெரும்புலவர் தணிகாசல முதலியாரிடம் தமிழும் சைவ சாத்திரங்களும் பயிலுதல். பெரியபுராணத்தைக் குறிப்புரையுடன் சிற்றிதழ்களாக வெளியிடத் தொடங்குதல்.* |
| *1908* | *நீதிபதி சதாசிவ ஐயர் தொடர்பு* |
| *1910* | *அன்னி பெசண்ட் அம்மையாரைச் சந்தித்தல். (அம்மா என்றே திரு.வி.க. இவரைக் குறிப்பது வழக்கம்)* |
| *1910 - 1916* | *வெஸ்லி பள்ளியில் ஆசிரியப் பணி* |
| *1912(செப் 13)* | *திருமணம் - மனைவியார்: கமலாம்பிகை* |
| *1914* | *சுப்பராய காமத், எஸ்.சீனிவாச ஐயங்கார் தொடர்பு* |

| | |
|---|---|
| 1915 | பாலசுப்பிரமணிய பக்தஜன சபைத் தோற்றம். |
| 1916 - 1917 | வெஸ்லி கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவர். |
| 1917 | தொ.ச. தலைவர் பி.பி.வாடியா தொடர்பு: இத் தொடர்பே திரு.வி.க. தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபடக் காரணமாயிற்று. |
| 1917 | கல்லூரிப் பணியை விடுத்தல், திசம்பர் 7-ல் ‘தேசபக்தன்’ ஆசிரியர் ஆதல். |
| 1918 | (ஏப்ரல் 27) இந்தியாவிலேயே முதல் தொழிலாளர் சங்கம் (சென்னைத் தொழிலாளர் சங்கம்) தோன்று தல். திரு.வி.க. துணைத் தலைவர். செப்டெம்பர் முதல் நாள் மனைவியார் கமலாம்பிகை மறைவு |
| 1919 (மார்ச் 18) | காந்தியடிகளை முதன்முதலாகச் சந்தித்தல். |
| (அக் 11) | பெரியார் ஈ.வே.ரா.வின் நட்பைப் பெறுதல். |
| (டிச. 17) | லோகமான்ய பாலகங்காதர திலகரை வ.உ. சிதம்பர னாருடன் சென்று காணுதல். |
| 1920 | மத்தியத் தொழிலாளர் சங்கத் தோற்றம். சூலை இறுதியில் தேசபக்தன் நிலையத்தை விடுத்து நீங்குதல். அக்டோபர் 22இல் ‘நவசக்தி’ தொடங் குதல். |
| 1921 | சூலை மாதம் ஆளுநர் வில்லிங்டன் அழைத்துக் கடுமையாக எச்சரித்தல். நாடு கடத்தப்படுவார் என்ற நிலையில் சர்.தியாகராய செட்டியார் தலையிட்டால் அத்தண்டனை நிறுத்தப்படுதல். |
| 1925 | (நவம்பர் 21, 22) தமிழ்நாடு காங்கிரஸ் வரலாற்றில் தனிச்சிறப்புடைய மாநாடு காஞ்சீபுரத்தில். தலைவர் திரு.வி.க. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்மானத்தை ஏற்காமல் தள்ளியதால் பெரியார் ஈ.வே.ரா. மாநாட்டிலிருந்து வெளியேறுதல். இதன் விளைவாகத் தமிழக அரசியலில் பெருமாறுதலுக் கான திருப்பம் ஏற்பட்டது. |
| 1939 | காங்கிரஸ் ஆட்சியிலும் பக்கிங்ஹாம் ஆலை வேலைநிறுத்தம். |
| 1943 | அறுபதாண்டு நிறைவு மணிவிழா |

| | |
|---|---|
| *1944* | *'திரு.வி.க.வாழ்க்கைக் குறிப்புக்கள்' வெளிவருதல்* |
| *1947* | *சூன் 9 முதல் திசம்பர் 7 வரை காங்கிரஸ் ஆட்சியில் திரு.வி.க.வுக்கு வீட்டுச் சிறைவாசம்.* |
| *1949-50* | *ஒரு கண் பார்வை முதலில் மறைந்து, பின் இரு கண்களுமே பார்வை இழத்தல்.* |
| *1953* | *செப்டெம்பர் 17-ல் மறைவு.* |

*நன்றி :* ***சாகித்திய அக்காதெமி***

# காலவரிசைப்படி பொருள்வழிப் பிரிக்கப்பட்ட திரு.வி.க.வின் தமிழ்க்கொடை

## I. வாழ்க்கை வரலாறுகள்

| | | |
|---|---|---|
| 1. | நா. கதிரைவேற் பிள்ளை சரித்திரம் | 1908 |
| 2. | மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் | 1921 |
| 3. | பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை | 1927 |
| 4. | நாயன்மார் வரலாறு | 1937 |
| 5. | முடியா? காதலா? சீர்திருத்தமா? | 1938 |
| 6. | உள்ளொளி | 1942 |
| 7. | திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் 1 | 1944 |
| 8. | திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் 2 | |

## II. உரை நூல்கள்

| | | |
|---|---|---|
| 9. | பெரிய புராணம் – குறிப்புரையும் வசனமும் | 1907–10 |
| 10. | பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் விருத்தியுரையும் | 1923 |
| 11. | காரைக்கால் அம்மையார் திருமுறை – குறிப்புரை | 1932 |
| 12. | திருக்குறள் – விரிவுரை (பாயிரம்) | 1939 |
| 13. | திருக்குறள் – விரிவுரை (இல்லறவியல்) | 1941 |

## III. அரசியல் நூல்கள்

| | | |
|---|---|---|
| 14. | தேசபக்தாமிர்தம் | 1919 |
| 15. | என் கடன் பணிசெய்து கிடப்பதே | 1921 |
| 16. | தமிழ்நாட்டுச் செல்வம் | 1924 |
| 17. | இன்பவாழ்வு | 1925 |
| 18. | தமிழ்த்தென்றல் அல்லது தலைமைப்பொழிவு | 1928 |

19. சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து 1930
20. தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத்திரட்டு 1 1935
21. தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு 2 1935
22. இந்தியாவும் விடுதலையும் 1940
23. தமிழ்க்கலை 1953

## IV. சமய நூல்கள்

24. சைவ சமய சாரம் 1921
25. நாயன்மார் திறம் 1922
26. தமிழ்நாடும் நம்மாழ்வாரும் 1923
27. சைவத்தின் சமரசம் 1925
28. முருகன் அல்லது அழகு 1925
29. கடவுட் காட்சியும் தாயுமானாரும் 1928
30. இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் 1929
31. தமிழ்நூல்களில் பௌத்தம் 1929
32. சைவத் திறவு 1929
33. நினைப்பவர் மனம் 1930
34. இமயமலை அல்லது தியானம் 1931
35. சன்மார்க்க போதமும் திறவும் 1933
36. சமரச தீபம் 1934
37. சித்த மார்க்கம் 1935
38. ஆலமும் அமுதமும் 1944
39. பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி 1949

## V. பாடல்கள்

40. உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல் 1931
41. முருகன் அருள் வேட்டல் 1932
42. திருமால் அருள் வேட்டல் 1938
43. பொதுமை வேட்டல் 1942
44. கிறிஸ்துவின் அருள் வேட்டல் 1945
45. புதுமை வேட்டல் 1945
46. சிவனருள் வேட்டல் 1947
47. கிறிஸ்து மொழிக்குறள் 1948

| | | |
|---|---|---|
| 48. | இருளில் ஒளி | 1950 |
| 49. | இருமையும் ஒருமையும் | 1950 |
| 50. | அருகன் அருகே அல்லது விடுதலை வழி | 1951 |
| 51. | பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும் | 1951 |
| 52. | சித்தந் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல் | 1951 |
| 53. | முதுமை உளறல் | 1951 |
| 54. | வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் | 1953 |

**குறிப்புகள்**